தாய்மதம்

ஆசிரியர் :

பிரசங்கமணி

வித்வான் வெ. முனுசாமி

வெளியிடுவோர் :

வித்வான் வெ. முனுசாமி
15, ஜே. சி. ஓ. காலனி
விவேகாநந்தா நகர் II கிராஸ்
மாருதிசேவா நகர் பெங்களூர்-560 033

முதற்பதிப்பு 1987

© ஆசிரியருக்கே

விலை ரூ. 20-00

அச்சிட்டோர் :

முத்துக்குமரன் பிரஸ்,
13, குப்பையர் தெரு,
சென்னை-600 079.

காஞ்சி ஸ்ரீ தொண்டை மண்டலாதீனம்

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

ஆசியுரை

உலகில் வேறெந்த நாட்டிற்கும் இல்லாத பெரும் சிறப்பு இந்திய நாட்டிற்கு உண்டு என்றால், அதற்குக் காரணம், இந்நாடு ஆன்மிகத்துறையில் பெற்றுள்ள பெருஞ் சிறப்பே ஆகும். இறைவன், உயிர்—உயிர்க்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு முதலியவைகளைப் பற்றி இந்நாட்டுத் தத்துவ ஞானிகள் கண்டறிந்த அளவு மற்றைய நாட்டினர் காணவில்லை என்பது அறிஞர்கள் முடிவாகும்.

வேத மதத்திற்கு எதிராக வேறு மதங்கள் தோன்றின. வேதத்தின் உட்பொருளை உள்ளவாறு அறிந்துகொள்ளமுடியாத காரணத்தால் இவை தோன்றின. வேதப் பொருளை விளக்க எழுந்த நூலே 'பிரம சூத்திரம்' என்பது. இதனைச் செய்தவர் வேத வியாசர் என ஒரு சாரரும், வாதராயணர் என் பிறிதொரு சாரரும், இருவரும் ஒருவரே என மற்றுமொரு சாரரும் கூறுகின்றனர்.

இப் பிரம சூத்திரத்திற்கு முதன்முதலில் விரிவுரை கண்டவர் நீலகண்ட சிவாச்சாரியார். இவரது கொள்கை, சிவாத்துவைதமாகும்; இந்நூலுக்கே சங்கரர் கண்டுள்ள பேருரையின் அடிப்படையாக எழுந்தது கேவலாத்துவைதம்; இதே நூலுக்கு இராமாநுசர் கண்ட பேருரையின்படி அமைந்தது விசிஷ்டாத்துவைதமாகும்; மத்துவர் கண்ட பேருரைப்படி விளங்குவது துவைதம் என்பதாகும்.

தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவருவது சைவ சமயம்; மேனாட்டு அறிஞர்களும் ஏற்றுக்கொண்ட வகையில் இது உறுதிப்படுகின்றது. இதன் கொள்கைகளைச் சங்ககால நூல்களும் எடுத்துக் கூறுவதால், இந்நாட்டின் தொன்மைச் சமயமாகப் பேசப் பெறுவது சைவ சமயமே! தத்துவ ரீதியாக

இச் சமயத்தைப்பற்றித் தெளிவுறக் கூறுவது சிவஞானபோதம். இதனை அருளிச் செய்தவர் மெய்கண்ட தேவநாயனார். இவர் கண்ட கொள்கையே சுத்தாத்துவித சைவம் என்பது.

மேற்கண்ட அனைத்துத் தத்துவங்களையும் தன்னிடத்தே கொண்டு விளங்குவதுதான் இந்து மதம் ஆகும். மேலும், உலகிற் காணும் மற்ற மதங்களின் சிறப்புக் கொள்கைகளையும் தன்னகத்தே பெற்று மிளிர்வதும் இந்து சமயமே !

தாய் மதம் என்னும் பெயர் தாங்கி வரும் இந்நூல் மேற்கூறிய இந்துமதத்தின் வேறு பல சிறப்புக்களையும் விரிவாகக் கூறுகின்றது. மேலும், இந்நாளைய இந்துக்கள் விழிப்புணர்ச்சியுடன் இக்கருத்துக்களைச் சிந்தித்து இதன் ஆக்கத்திற்கு ஆவன செய்யவேண்டியவற்றையும் வலியுறுத்துகின்றது.

இதன் ஆசிரியர் வித்துவான் திரு. வெ, முனிசாமி அவர்களின் இச்செயல் இக்காலத்திற்குப் பெரிதும் வேண்டற்பாலது; இவரது தொண்டினை மிகவும் பாராட்டுகின்றோம். ஆசிரியர் அனைத்து நலங்களுடன் நீடினிது வாழவும், இதுபோன்ற நூல்கள் மேலும் பல இவரால் வெளிவரவும் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

7—10—1987

சிவம்.

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின்

சாற்றுக் கவி

நேரிசை வெண்பா

தெய்வத் திருவருளால் செந்தமிழைத் தேர்ந்தவர்
உய்வை உலகம் உறவேண்டி—மையலுறு
வாய்மதம் பேசுவோர் மாற முனிசாமி
தாய்மதநன் னூல்தந்தார் தான்.

அன்பன்
கிருபானந்தவாரி
16—9—87

[illegible]

சித்தாந்தச் செல்வர்
பேராசிரியர் டாக்டர் ப. இராமன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறை தலைவர்,
இராமகிருஷ்ணாமிஷன் விவேகானந்தா கல்லூரி,
அவர்களின்...

அணிந்துரை

இறைவன் அனாதி. அவனைப்போல் இந்து மதமும் அனாதி. மிகத் தொன்மையான தருமம் என்ற பொருளில் இதனை 'ஸநாதன தருமம்' என்பர். வேதத்தை அடிப்படை யாகக் கொண்டு விளங்குவதால் 'வைதிக தருமம்' என்பர். இப்பெயர்கள் இருப்பினும் இந்துமதம் என்ற பெயரே மிகத் தொன்மையாக வழக்கில் இருக்கின்றது. இஃது இந்தியா என்ற சொல்லினின்றும் பிறந்ததன்று. வேதங்களில் பழமையானது இருக்குவேதம். இவ்வேதத்தில் 'ஸப்த இந்து' என்ற தொடர் வந்துள்ளது. இத்தொடர் நமது நாட்டையும் நமது மக்களையும் ஒருங்கே குறிப்பிடுவதாகும். சமஸ்கிருத மொழியிலும், பிரா கிருதம், சில ஐரோப்பிய மொழிகளிலும் 'ஸ' என்ற எழுத்து 'ஹ' என ஒலிக்கப்படுகிறது; எழுதப்படுகின்றது. இம்முறையில் ஸப்த-சிந்து என்ற தொடர் ஹப்த-ஹிந்து என ஒலிக்கவும் எழுதவும்பட்டது. இவ்வாறு வேதகால் முதல் இந்து என்ற சொல் வழக்கில் உள்ளது என்றால் எழுதாக்கிளவி அல்லது சுருதி என வழங்கப்படும் வேதம்போல் படைப்புக் காலந் தொட்டுக் கேட்கப்பட்டு வந்துள்ள சொல்லே இந்து என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்து என்ற சொல் நமது மக்களையும் தருமத்தையும் அழகுறக் குறிப்பதாக அமைந்துள்ளது.

ஒன்று பரம்பொருள். ஆனால் அதனை வேறுவேறு பெயர் களால் அழைக்கின்றனர் என்பதுபோல் படைப்புக் காலத்தில் தோன்றியது இந்துமதம் ஒன்றே. ஆனால் அவரவர் மனப் பாங்கிற்கு ஏற்பப் பல்வேறு பெயரிட்டு வழங்கலாயினர். எல்லா மதங்களின் தாய்மதமாக இருப்பது இந்துமதம் எனில் மிகையாகாது. சுவாமி விவேகானந்தர் தமது சிகாகோ சொற் பொழிவில், உலக மகா சபையில், உலகமதங்களின் பிரதிநிதிகள் குழுமியிருந்த அப்பேரவையில், இந்து மதமே எல்லா மதங் களுக்கும் தாய்மதம் (Hinduism is the Mother of all Religions) என்று முழங்கினார். அப்பேரவையில் குழுமியிருந்த எந்த மதவாதியும் சுவாமிகளின் கருத்தை மறுத்துப் பேசவில்லை. சுவாமிகள் சுற்றுப்பயணம் செய்த கிருத்தவ நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு முதலிய எந்த நாட்டிலும்

எந்தக் கிருத்தவ மதத்தலைவரும் மறுப்புக் கூறவில்லை; சுவாமிகள் வாழ்ந்த காலந்தொட்டு இன்றுவரை எவரும் மறுத்த தில்லை. ஒப்பற்ற இந்து மதமே எல்லா மதங்களுக்கும் தாய்மதம் என்ற உண்மை ஆயிரம் சூரியனாக ஒளிவீசிக் கொண்டிருக் கின்றது.

பிற்காலத்தில் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் இந்து மதமே எல்லா மதங்களுக்கும் தாய்மதம் என்ற கருத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். "உலகத்தைப் போன்று பழமையானது இந்துமதம். எல்லா மதங்களுக்கும் தாய்மதம். இந்து மதத்தில் பிறந்த புத்தர் இந்துமதத்தில் சில மாற்றங்கள் செய்து புத்தமதம் என்ற புதிய மதத்தைத் தோற்றுவித்தார். இஃது அவர் காலத்தில் வாழ்ந்த மக்களின் உணர்வுக்கும் மாற்றத்திற்கும் ஏற்பச் செய்யப்பட்டது. புத்தமதம் இந்து மதத்தில் கிளைத்த ஒன்றே. புத்தமதக் கோட்பாடுகளில் சிற்சில மாற்றங்கள் செய்து சமணம் என்ற புதிய மதத்தை மகாவீரர் தோற்றுவித்தார். சௌராஷ்டிரம், கிருத்தவம் எல்லாம் இவ்வாறு இந்து மதத்தில் கிளைத்தனவே. இயேசு கிருத்து காஷ்மீரத்திலும், காசியிலும் அமர்ந்து தவம் செய்து இந்துமதக் கோட்பாட்டை உணர்ந்துகொண்டு பாலஸ்தீன மீனவர்கட்கு ஏற்பக் கிருத்தவம் என்ற ஒரு புதிய மதத்தைத் தோற்றுவித்தார். இந்த உண்மையும் கிருத்தவம் இந்து மதத்தினின்றும் கிளைத்தது என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றது." (Bliss Divine. 231)

தாய்மதம் இந்து மதத்தினையும் உலகிலுள்ள பிற மதங்களையும்–குறிப்பாக எட்டு மதங்களையும்–தக்க சான்றுகளுடன் விளக்கி இந்து மதமே அனைத்து மதங்களுக்கும் தாய்மதம் என்ற கருத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டுகிறார் கவிஞர் வெ. முனிசாமி அவர்கள். மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட உலக மதங்களின் காலம் சில ஆயிரம் ஆண்டுகளே; அவை மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டமையால் குறைபாடுகளுடையனவாக உள்ளன. ஆனால் மனிதனால் உண்டாக்கப்படாத இந்துமதமோ எக்குறையும் இல்லாமல் காலத்தை வென்று நிற்கின்றது என்பதற்குரிய சான்றுகள் பலவற்றையும் தருகின்றார். இறைவன், உயிர், உலகம் என்ற முப்பொருள்களையும் வேதங்களும் உபநிடதங்களும், புராணங்களும், பகவத் கீதையும், சாத்திரங்களும் தோத்திரங்களும், பேருரைகளும் விரிவாக வகுத்தும் தொகுத்தும் கூறும் மாட்சியை—அம்மாட்சி புலப்படத் தெள்ளிதின் விளக்குகின்றார். வேதங்களைப் பிரமாணமாகக் காட்டுவதோடு உலகத் தத்துவ மேதைகளுள்

ஒருவரான டாக்டர் இராதாகிருஷ்ணன், ஆசியஜோதி பண்டித ஜவஹர்லால்நேரு, ஆர். எஸ். எஸ். இயக்கத்தில் முன்னாள் தலைவர் அமரர் குருஜி மகாகவி பாரதி போன்ற பேரறிஞர் களின் பொன்னான கருத்துக்களை மேற்கோளாகக் காட்டி யுள்ளார். சைவ சித்தாந்த சாத்திரம் தோத்திரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், தாயுமானவர், பட்டினத்தார், வள்ள லார், சித்தர் பாடல்கள் ஆகிய அருளாளர் பாடல்களைத் தக்க சான்றுகளாக இந்துமதத்தின் பெருமையை விளக்க எடுத்துக் காட்டுகின்றார்.

இந்துமதம் மனித நிலையிலிருந்து இறைநிலை அடை வதற்கு எத்தனை விதமான முறைகள் வகுத்துள்ளதென்றும், இம்முறைகள் மக்களின் எல்லாத் தரத்தினரும் பின்பற்றுவதற்கு மிகவும் ஏற்புடையவை என்றும் இவைபோல் வேறு எந்த மதத் திலும் வழிமுறைகள் வகுக்கப்படவில்லை என்றும் மிக அருமை யாக விளக்கியுள்ளார்.

சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு நெறிகளையும் மிகத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளார். இவற்றுள் யோக முறையைச் சற்று விரிவாகத் தன் அனுபவத்தைச் சான்றாகக் காட்டி விளக்கியுள்ள பகுதி ஆன்மிக முன்னேற்றம் அடைய விரும்புவோர் ஒவ்வொருவரும் படித்துச் சிந்தித்துப் பின்பற்றவேண்டியதாகும். கவிஞர் வெ. முனிசாமி அவர்கள் இப்பகுதியில் தமது குருநாதரான இராமனந்தர் அவர்களிடம் தாம் பயின்ற அசலமார்க்கம் என்னும் யோகநெறியைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்துமதத்தின் தொன்மை, நன்மை, அருமை, பெருமை களை அழகுறக் கூறும் கவிஞர் அவர்களுக்கு இதனை அழிப்ப தற்கு முயலும் அரசியல்வாதிகள்மீதும், மதவாதிகள், பகுத்தறிவு வாதிகள் மீதும் கோபம் ஊழித் தீ என வெளிப்படுகின்றது. இவர் வீறுகொண்டு எழுவதுபோல் ஒவ்வொரு இந்துவின் உள்ளத் திலும் எழுச்சி தோன்றுமானால் நாம் மீண்டும் அகண்ட இந்துஸ்தானத்தைக் காணமுடியும். கடந்த நாற்பது ஆண்டு களாக நாட்டை ஆளும் காங்கிரஸ் கட்சி குடியரசுச் சட்டத்தில் கிருத்துவ மதத்தவரையும், இஸ்லாம் மதத்தவரையும் சிறுபான் மையினர் என அறிவித்து அவர்களுக்கு விதவிதமான சலுகைகள் அளித்துத் தனி ஆட்சி நடத்தி வருவதுபோல் தன்னிச்சையாக இயங்க வழிவகுத்துள்ள அவலத்தைத் தோல் உரித்துக்காட்டுகின்றார் கவிஞர். அப்பாவி இந்துக்களுக்குக்

'குடும்பக்கட்டுப்பாடு; கிருத்தவரிடமும் முகம்மதியரிடம் இது செல்லுபடியாகாது. இதன் விளைவாகச் சுதந்திரத்திற்குமுன் 3 கோடியாக இருந்த முகம்மதியர் இன்று 12 கோடியாகவும், 82 இலட்சமாக இருந்த கிருத்தவர்கள் 3 கோடியாகவும் பெருகி யுள்ளார்கள் என்று கவிஞர் புள்ளி விவரம் காட்டியுள்ளார். இவ்விரு மதத்தினரும் மதமாற்றம் செய்து பங்குபோட்டுக் கொள்வது அப்பாவி இந்துக்களைத்தான். அறியாமை, வறுமை, நோய் என்ற இழிந்த நிலையில் வாழ வழியின்றி வாடும் ஏழை எளிய மக்கள் எத்தனை கோடிப் பேர் எங்கெங்கு வாழ் கிறார்கள்.

அவர்களை எவ்வித ஆசைகளைக் காட்டி எளிதாக மதமாற்றம் செய்யலாம் என்று ஸ்விட்சர்லாந்திலிருந்துகொண்டு மில்லியன் கணக்கில் பணத்தைச் செலவு செய்துகொண்டு பாதிரிகள் ஆய்வு நடத்தி வருகின்றனர். தமிழ்நாட்டிலும் கேரள மாநிலத்திலும் இப்பணியில் பல பாதிரிகள் ஈடுபட்டுள் ளார்கள். இஸ்லாம் மதத்தைப் பரப்ப பெட்ரோல் டாலர் கோடிக் கணக்கில் இந்த நாட்டில் குவிந்துகொண்டிருக்கின்றது. இந்திய நாட்டின் சிறுசிறு கிராமங்களுக்குள்ளும் நுழைந்து தீண் டத்தகாத பிரிவினர் என்னும் நமது இந்து சகோதரர்களை ஒட்டு மொத்தமாக மத மாற்றி வருகின்றனர். நினைத்தால் நெஞ்சு பதைக்கின்றது. சொல்ல வாய் பதைக்கின்றது. இதனை எல்லாம் இந் நூலைப் படிப்போர் மனம் துடிக்கும்படி கவிஞர் எழுதியுள்ளார்.

மதச்சார்பற்ற நாடு என்று அறிவித்துவிட்டு இந்துவிற்கு ஒரு சட்டம், இஸ்லாமியருக்கும் கிருத்தவருக்கும் ஒரு சட்டம் இயற்றுவதேன் ? என்று கேட்கிறார் கவிஞர். இந்துக்களின் கோயில்களையும் மடங்களையும் அரசின் ஆட்சிக்குள் கொண்டு வரும்போது ஏன் பிற மதங்களையும் ஆட்சிக்குள் கொண்டுவரக் கூடாது ? என்று கவிஞர் கேள்விக்கணை தொடுக்கின்றார். நாட்டுப்பற்றும், நேர்மையும், தியாக உணர்வும், ஆளும் திறமையும் இல்லாமல் பணப்பற்றும், தீய குணங்களும் நிறைந்த சுயநலவாதிகளே இன்று தொண்டு என்ற வெறும் வார்த்தை யைச் சொல்லிக்கொண்டு மக்களைச் சூறையாடி வரும் அவல நிலையை அனுபவித்து வருகின்றோம். இவர்களிடம் உபதேசம் செய்வது செவிடன் காதில் ஊதிய சங்குதான். எப்பயனும் ஏற்படாது. இந்துக்கள் தமது பண்டைய பெருமையை உணர்ந்து, சாதி, மதம், மொழி, மாநிலம் என்ற சிறு சிறு வேறுபாடுகளை மறந்து 'நாம் எல்லோரும் இந்துக்கள். நமது

நாடு இந்து நாடு' என்று ஒன்றுபட்டு உயரவேண்டும் என்று கவிஞர் சிறந்த வழியைக் காட்டுகின்றார்.

தாய்மதம் எனும் இந்த நூல் சுருங்கக் கூறினால் ஒரு கலைக் களஞ்சியம். எத்தனையோ செய்திகளை இதனுள் அடக்கி யுள்ளார். பாமரரும் படித்த மேதைகளும் ஒருங்கே கற்றுப் பயனடையும்படியாக எளிய நடையிலும் ஆழ்ந்து விரிந்த கருத்துகளுடனும் நூலை இயற்றியுள்ளார். நமது இந்துமதத்தின் கோட்பாடுகள் அனைத்தையும் 18 அத்தியாயத்தில் கிருஷ்ண பரமாத்மா அருச்சுனனுக்கு உபதேசமாக விளக்கியுள்ளார். அதைப்போலவே கவிஞர் வெ. முனிசாமி அவர்கள் இந்து மதத்தின் பெருமையை இந்நூலுள் இந்துக்களுக்கு இனிமையாக விளக்கியுள்ளார்.

இந்து மதத்துக்குத் தீங்கு விளைய நேரும்போதெல்லாம் அந்தந்தக் காலத்திற்கேற்பக் கடவுளரும், முனிவரும், ஞானி களும், குருக்களும், அறிஞர்களும், அரசர்களும் தோன்றிக் காப்பாற்றி வந்துள்ளார்கள். அதுபோன்றே இருபதாம் நூற்றாண்டில் ஆர். எஸ். எஸ். இயக்கம், விஸ்வஹிந்து பரிஷத், இந்து சமயத்தை அழிவிலிருந்து காத்து வருகின்றன. அயல் நாடுகளிலும் இந்துமதப் பணியைச் செய்து வருகின்றன. இப்படிக் காலத்தின் தேவையாக இந்துமதத்தைக் காப்பாற்றப் பிறந்தவரே பெரியவர், அறிஞர், கவிஞர் வெ. முனிசாமி என்றால் மிகையாகாது. பெரியவரின் புனித இந்துமதப் பணி தொடரக் கந்தவேள் எந்த வேளையும் துணைபுரியுமாறு அவன் திருவடிக் கமலங்களைத் துதிக்கின்றேன்.

அன்பன்

11—10—1987 ப. இராமன்

ஆசிரியர் உரை

ஒருவன் கடற்கரையில் நின்றுகொண்டு கடலைப் பார்த்தால், அவன் கண்களுக்கு எட்டியமட்டும் அல்ல; அதற்கப்பாலும் கடல் பரந்திருக்கிறது. இவன் கண்ணுற்ற எல்லைக்குள் காணப்பெற்ற கப்பல்கள், சிறிய பெரிய ஓடங்கள், வீசும் அலைகள் முதலியவற்றை இவன் விளக்கலாம். ஆனால் அதன் ஆழத்தையும் அதன் முழுப் பரப்பளவையும் விளக்கமுடியாது. இந்து மதமும் ஒரு கடலுக்கு ஒப்பானது. இதனைக் கலைக் கடல் என்று கூறுவர். அளவிறந்த நெடுங்காலம் சித்தர், யோகர், அறிஞர், மறையன் முதலோர், கடுந்தவம் புரிந்த பெரியோர்கள் பலர் தோன்றிய மதம் இந்து மதம் அப்பெரியோர்கள் தம் அனுபவத்தில் கண்ட அரிய கருத்துக்களைத் திரட்டி வைத்துள்ள களஞ்சியமே இந்துமதம். அவ்வருள் மொழிகள் அனைத்தும் என்போன்ற சிற்றறிவினர்களால் ஒரு சிறுநூலில் அடக்கிவிடமுடியாது.

கல்வியில் சிறந்த கம்பர் பெருமான் இராம காதையைத் தாம் எழுத நேர்ந்த காரணத்தை வெகு அழகாக விளக்கி ~~யுள்ளார்.~~

"ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று ஒரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்றேன் மற்று இக்
காசுயில் கொற்றத்து இராமன் கதையரோ!

கருத்து:

பேரிரைச்சலோடு கூடிய பாற்கடலிலுள்ள பால் முழுவதையும் ஒரு பூனை நக்கிப் பருகிவிடமுடியாது. ஆயினும் அப் பூனைக்குப் பாலின் பேரிலுள்ள ஆசைப் பெருக்கால் கடலையே குடித்துவிடலாம் என்று கருதுவதைப் போல, குற்றமற்ற வெற்றி வீரனான இராமபிரான் பேரில் யான் வைத்துள்ள ஆசைப் பெருக்கானது அவன் சரித்திரத்தைப் பாடத் தூண்டிவிட்டது என்று கூறியுள்ளார். அதைப் போலவே யான் கல்வியறிவில் குறைந்தவனாக இருந்தும் தெய்வ நம்பிக்கையும் தேச பக்தியும் என்னைத் தாய்மதம் என்னும் இந்நூலை எழுதத் தூண்டிவிட்டது. ஆகவே தாய்மதத்தின் பெருமையை என்

சிற்றறிவுக்கு எட்டிய வரையில் யான் இச்சிறு நூலில் விளக்க முயன்றுள்ளேன். இந்துக்களாகிய நமக்கும், நமது மூதாதையருக்கும் எந்த நாடு பிறப்பிடமோ அந்த நாடு நமக்குத் தாய் நாடாகும். உதாரணமாக, சீனர், ஜப்பானியர், ஆப்பிரிக்கர், பர்மியர் என்று அவர்களின் மூதாதையர் தோன்றிய நாட்டின் பெயர்களை அம் மரபினர்களுக்குச் சூட்டிக் கூறுவதைப்போல, நமது மூதாதையர் தோன்றிய நாடு பாரதம். இம்மரபில் வந்த நாம் பாரதீயர். இந்நாட்டில் தோன்றின மதம் இந்துமதம். இது வெளிநாட்டிலிருந்து வந்த மதமல்ல. இது இந்த நாட்டின் சொந்த மதம். ஆகவே இந்நூலுக்குத் தாய்மதம் என்னும் தலைப்புத் தரப்பட்டது.

இந்துமதம் இந்துக்களாகிய நமக்குமட்டும் தாய்மதமல்ல. உலக மதங்கள் அனைத்திற்கும் இதைத் தாய்மதம் என்று கூறப்படுகிறது. ஆகவே தாய்மதம் என்னும் சொல்லைத் தாயாகிய மதம்; தாய் போன்ற மதம் : தாயின் மதம் என்னும் மூன்றுவகையாகப் பிரித்து, அதற்கு ஏற்ற சான்றுகளோடு விளக்கப்பட்டுள்ளது. பிற மதங்களைப் பழித்துக்கூறுதல் நமது நோக்கமல்ல. சில முக்கியமான மதங்களுடைய வரலாறுகளையும் இந்நூலில் சுருக்கமாக விளக்கப் பெற்றுள்ளது. கடந்த காலத்தில் உலகில் மதவெறியர்களால் விளைந்த தீமைகளும் இதில் விளக்கப்பட்டிருக்கிறது.

நம் பாரதநாடு சுதந்திரமடைந்த பிறகு நம் அரசு தன்னை மதசார்பற்ற ஆட்சி என்னும் பெயர் சூட்டிக்கொண்டது, நமது துரதிருஷ்டமாகும். இதனால் இந்து மதத்துக்கும் இந்துக்களுக்கும் பாரதத்துக்கும் உட்பகையும் புறப் பகையும் உருவாகிக் கொண்டிருப்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இந்தத் தீய சக்திகளை முறியடிக்கவேண்டுமானால் இந்துக்களாகிய நாம் உடனடியாக ஒருமைப்பாட்டை உருவாக்கவேண்டும். இன்றைய அரசியல் தலைவர்கள் கட்சிகள் என்னும் குழுக்களை அமைத்துக்கொண்டு பதவி வேட்டை ஆடிக்கொண்டிருக்கின்றனர். பிற மதத்தினர்கள் இந்துக்களைமட்டும் மதமாற்றம் செய்யும் பணிகளில் தீவிரமாக முயற்சித்து வருகின்றனர். இந்த சமயத்தில் மகான்களின் வழிவந்த போற்றுதற்குரிய மடாதிபதிகளும், வரலாற்றுப் புகழ்வாய்ந்த இந்துமத ஆலய நிர்வாகிகளும் தம்மைத் தீவிர அறப்பணிக்கு ஆயத்தப்படுத்திக்கொள்ளவேண்டுமென்னும் விண்ணப்பமும் இந்நூலில் அடங்கியுள்ளது. சாதியால், மொழியால், மதத்தால் பிரிவினைப் பூசல்களை உண்

டாக்குவோமாயின் நாட்டுக்கும் நமது பண்டைய கலாசாரத்துக்கும் பெருந்தீங்காக முடியும் என்பதையும் இதில் சூசகமாக விளக்கப்பட்டிருக்கிறது.

எக்காரணத்தைக் கொண்டும் இந்துக்களிடம் பிரிவினை எண்ணங்கள் தோன்றாமல் ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கவேண்டுமென்னும் அவாவினால் இந்நூலை எழுதியுள்ளேன். இந்நூலில் பிழைகள் காணப்பெறின் அவை என்னுடைய அறியாமையாகும். விழுமிய விஷயங்கள் இருக்குமாயின் அவைகள் ஆன்றோர்களின் அருளுரைகளாகும். ஆகவே,

“குற்றம் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்,”

—என்பதற்கிணங்க தெய்வ நம்பிக்கையும், மத நம்பிக்கையும், தேசப்பற்றும் உடையவர்கள் இதில் காணப்பெறும் வழு களைந்து இந்நூலை வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் மக்களிடம் பரவவேண்டுமென்னும் நன்னோக்கத்தால் பல அன்பர்கள் இதனைக் குறைந்த விலையில் வழங்கவேண்டுமென விரும்பினர். அதன்பொருட்டுப் பல அபிமானிகள் மனமுவந்து நிதியுதவியும் புரிந்துள்ளனர். அப்பேருதவியானது கைம்மாறு வேண்டாக்கடப்பாடாகும். இவர்கள் புரிந்த பேருதவியால்தான் இந்நூலை மலிவு விலைக்கு விநியோகிக்க முடிந்தது.

தமிழ் மாநிலத்தில் இந்நூலை விரிவாக அறிமுகப்படுத்தி வெளிவரச்செய்வதில் திருவண்ணாமலை மதிப்பிற்குரிய நண்பர் A. குருநாதன் அவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் என்றென்றும் பெரிதும் போற்றுகிறோம். மற்றும் பல பேரன்பர்களின் பேருதவியும் போற்றற்குரியனவாகும்.

குறைந்த நாட்களில் மிகவும் மலிவான செலவில் புத்தகத்தை அழகாக அச்சிட்டு ஒத்துழைத்த சென்னை முத்துக்குமரன் பிரஸ் அதிபருக்கும் என் நன்றி உரித்தாகும்.

அன்பன்

வெ. முனுசாமி

19—11—1987

பொருளடக்கம்

பொருள்	பக்க எண்
மனிதப் பிறப்பின் மாண்பு ...	1
பிறக்கும்போது பேதை ...	3
கற்றுக் கடைத்தேறப் பிறந்தோம் ...	4
விஞ்ஞானத்தின் விழிப்பு ...	8
ஆன்மாக்களின் ஆவல் ...	9
மதத்தால் விளைந்த மாண்புகள் ...	10
மதத்தோற்றத்தைப்பற்றிய கருத்துகள் ...	12
இயற்கையும் இறைவனும் ...	14
மற்றொரு சாரார் கூற்று ...	18
சடங்குகள் ...	22
மதங்களில் கற்பனைக் கதைகள் ...	27
உருவ வழிபாடு ...	32
உடைக்க முனைந்தவர்கள் படைக்க முனைகின்றனர் ...	35
சில மதவாதிகள் ...	39
மனிதத் தன்மைக்கு மாறுபட்ட கருத்துகள் ...	43
மறுபிறவி ...	45
ஐம்புல அறிவுக்கு அப்பாற்பட்ட பொருள்கள் ...	47
பல மதங்கள் ...	58
மற்றைய மதங்களையும் மதித்தல் ...	61
சீக்கிய மதம் ...	64

	பக்க எண்
இஸ்லாம் மதம்	... 68
கிறிஸ்தவ மதம்	... 74
புத்த மதம்	... 80
ஜைன மதம்	... 88
சாரதுஷ்டிர மதம்	... 92
கன்பூஷியஸ் மதம்	... 95
யூத மதம்	... 95
நூலின் பெயரும், சுவாமி விவேகானந்தரும்	... 105
அடிகளாரைப்பற்றி அமெரிக்க அறிஞர்கள்	... 110
தாயாகிய மதம்	... 113
கிறிஸ்தவ மதத்தின் வளர்ச்சி	... 144
இந்தியாவில் இஸ்லாமியர்	... 150
இந்திய அரசும் இந்துமதமும்	... 166
மதத்தில் இந்திய அரசு	... 190
அரசியலில் அடாதவை	... 192
இதுவா ஜனநாயகம் ?	... 194
ஜாதிகள்	... 201
மடங்கள்	... 218
ஆலயங்கள்	... 218
பொது மொழி	... 220
தாயின் மதம்	... 245
எனது குருநாதர்	... 283

ஓம்

எல்லாம் வல்ல இறைவன் துணை

தாய்மதம்

பெற்றதாய் தந்தை மற்றும்
　　பெருமைசால் குருவும் நாடும்
கற்றநல் லோர்கள் வாக்கும்
　　கடவுளின் நெறியும் பேணி
மற்றைய உயிர்கள் பாலும்
　　மன்னிய கருணை காட்டும்
பெற்றியே மனிதப் பண்பாய்
　　பேசுவர் மாசற் றோரே.

(வெ. மு.)

மனிதப் பிறவியின் மாண்பு

உலகத்தில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. இவற்றுள் மனித இனமும் ஒன்று. மனிதப் பிறவியின் மேன்மையைப் பற்றி பல பெரியோர்கள் நமக்கு அடியிற் கண்டவாறு நினைவூட்டுகின்றனர் :

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
　　யாதினும் அரிதரிதுகாண்;
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
　　ஏதுவருமோ அறிகிலேன்"

என்கிறார் தாயுமான அடிகளார். நமது மூதாட்டியான ஔவைப் பிராட்டியும் " அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் " என்று கூறியுள்ளார். சிவஞான சித்தியார்,

"மானிடத்து உதித்தல் கண்டிடில் கடலைக்
　　கையால் நீந்தினன் காரியம் காண்"

என்றார். இன்னும் பல ஆன்றோர்கள் மக்கட் பிறவி வாய்ப்பது அருமையினும் அருமை என்கின்றனர்.

இன்றைய நிலை

நமது முன்னோர்களில் மனிதப் பிறவி புனிதமானதென்று புகழாதவர்கள் இலர் என்றே கூறலாம். ஆனால் இன்றைய சூழ்நிலையில் மனிதப் பிறவியைப் புகழ்வதா ? இகழ்வதா ? என்பதே கேள்விக்குறியாகி விட்டது. காரணம் இன்று மனிதனால் உருவாகும் தீமைகள் உலகைப் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன.

அழிவுக்கு அடிகோலுகிறான்

அழுக்காறு, அகந்தை, அன்பின்மை, உட்பகை, தற்புகழ்ச்சி, சூது, வஞ்சகம், நம்பிக்கையின்மை என்னும் தீய குணங்களின் பெட்டகமாய் மாறிக்கொண்டிருக்கிறான். மனிதன் மனிதனையே அழிக்க முயன்றுள்ளான். மற்றைய உயிரினங்களையும் மாய்ப்பதில் மகிழ்ச்சியுறுகிறான். உலகத்தையே சுடுகாடாக்கும் பயங்கரப் போர்ப் படைகளைப் படைப்பதில் முனைந்திருக்கிறான். சாதிப்போர், இனப்போர், மதப்போர், கட்சிப்போர், மொழிப்போர், நாடுபிடிபோர் என்பவற்றை உருவாக்கிக் கொண்டு இனநாசம் செய்ய இறங்கியுள்ளான். அறத்தைச் செய்யவேண்டிய கரங்கள் கொலைக் கருவிகளைப் பிடித்த வண்ணம் திரிகின்றன. இவற்றை எல்லாம் கூர்ந்து நோக்கினால் மனிதனைவிடப் பெருந்தீங்கு விளைவிக்கும் உயிரினம் வேறு எதுவுமே இல்லை எனத் தோன்றுகிறது. துர்க்குணங்கள் அனைத்தும் பெரும்பாலும் படித்த மக்களிடத்திலேயே பரவலாகக் காணப்படுகின்றன. ஊழல்களுக்கு மனிதன் உறைவிடமாகிவிட்டான்.

இந்நிலையில், மனிதன் இன்று உலகத்தை அதம் செய்யத் தோன்றி இருக்கின்றானா அல்லது இதம் செய்யத் தோன்றியுள்ளானா என்னும் கேள்விக்குறி நம் எதிரில் நிற்கிறது. இன்றைய சூழ்நிலையைக் கூர்ந்து நோக்கினால் மனிதப் பிறவி மிகவும் கொடியது எனலாம். மாடாய்ப் பிறப்பது நலமாகும். மாடு ஆணாய் இருப்பின் பணி செய்யும்; பெண்ணாய் இருந்தால் பால் தரும். நாயாய்ப் பிறந்தால் காவல் புரியும், நன்றி மறக்காது. மரமாய்ப் பிறந்தால் நிழல் தரும்; காய்ந்தாலும் கதவு வாசக்கால்களாகவும் விறகாகவும் உதவும். இதைப் போலப் பல உயிர்களும் பல பொருள்களும் மனித இனத்துக்குப் பேருதவியாக இருக்கின்றன. இன்றைய மனிதன் பிறரின் உதவியைமட்டும் விரும்புகிறான். அதேபோலப் பிறருக்கு நாமும் உதவிபுரியவேண்டும் என்னும் நல்லெண்ணம் வரவர மனிதனை விட்டு நீங்கிக்கொண்டே இருக்கிறது. ஆகவே நமது முன்னோர்களுடைய கருத்துக்கு நாம் முரணாகச் சென்று கொண்டிருக்கிறோம். இதை ஆரம்பத்திலேயே நாம் திருத்திக் கொள்ளவில்லை என்றால் எதிர்காலத்தில் பேரழிவைத் தவிர்க்க முடியாதென்றே தோன்றுகிறது. இப்பேரழிவிற்குக் காரணமான மனிதனாகப் பிறப்பதைவிட இனி மற்றைய பிராணிகளாகப் பிறப்பது நலமல்லவா? இன்றைய மனிதன் உலக உயிர்களையும் அழிக்கும் நச்சுப் பூண்டைப்போலக் காட்சி

தருகிறான். மக்கள் உயிர்காக்கும் மருந்தாக வேண்டும்; உயிர் போக்கும் நச்சாகக் கூடாது. அப்போதுதான் மக்கட் பிறப்பின் மாண்பைப் பெருமையாகப் பேசமுடியும்.

பிறக்கும்போது பேதை

மனிதன் பிறக்கும்போது அறியாமையும், இயலாமையும் உடையவனாகவே தெரிகிறது. ஆட்டுக்கும் மாட்டுக்கும் இருக்கும் அறிவாற்றல்கூட மனிதனுக்குப் பிறக்கும்போது காண வில்லை ஓர் ஆடோ அல்லது மாடோ பிறந்த 24மணி நேரத்துக்குள் தன் தாயை உணர்ந்துகொண்டு அதன் மடியில் சுரக்கும் பாலைத் தானே அருந்துகிறது. மற்றும் தன் தாயைத் தொடர்ந்து தானும் உடன் செல்கிறது. முட்டையிலிருந்து வெளிப்பட்ட கோழியின் குஞ்சு ஒரே நாளில் தனக்கு வேண்டிய உணவு இன்னதென்று உணர்ந்து அதைத் தானே கொத்தித் தின்கிறது. மனிதன் குரங்கிலிருந்து தோன்றியதாக உயிரியலார் உரைக்கின்றனர். ஆனால் அந்தக் குரங்குக் குட்டிக்கு இருக்கின்ற ஆற்றல்கூட மனிதக் குழந்தைக்கு இருப்பதாகத் தோன்ற வில்லையே! குரங்குக் குட்டி பிறந்த உடனே தன் தாயை விடாமல் கெட்டியாகப் பற்றிக்கொள்கிறது. தன் தாய் கிளைக்குக் கிளை தாவினாலும் அக்குட்டி தன் தாயைப்பற்றிய 'பற்றி'லிருந்து விடுவதில்லை. இந்த ஆற்றலும் மனிதக் குழந்தைக்குக் கிடையாது.

அழுகையும் சிரிப்பும்

மனிதன் பிறக்கும்போது அறிவும் ஆற்றலும் அற்றவனாகவே தோன்றுகிறான். இவன் பிறந்தபிறகு குழந்தையாய் இருக்கும் போது இடத்தைவிட்டு நகரப் பல மாதங்கள் ஆகின்றன. நடக்கவும் பேசவும் ஆண்டுகள் கடக்கின்றன. இவற்றை எண்ணிப் பார்த்தால் மனிதன் பிறக்கும்போது மேதையற்ற பேதையாகவே தோன்றுகிறான். இவன் கருவிலிருந்து கற்றுக் கொண்டு வந்தது அழுகை ஒன்றுதான். மனிதக் குழந்தை அந்த அழுகையின் மூலமாகவே தனக்கு வேண்டிய அனைத்தையும் சாதித்துக் கொள்கின்றது.

சில நாட்களுக்குப்பிறகு அம் மழலையின் வாயில் சிரிப்பு மலர்கிறது. மனிதப் பிறவிக்கு உண்மையான தாய்மொழி அழுகையும் சிரிப்புந்தான். இவையே மக்கட் குலத்தின் பொது மொழியாகும். காக்கைக்குத் தாய்மொழி கரைதல், குயிலுக்கு தாய் மொழி கூவல். பாம்புக்கு சீறல், புலிக்கு உறுமல், நாய்க்கு குரைத்தல், குதிரைக்கு கனைத்தல் மனித இனத்துக்கு அழுகையும் சிரிப்பும் பொதுவான சிறப்பு மொழியாகும். எல்லா

நாட்டினரும், எல்லா மொழியினரும் புரிந்துகொள்ளுகின்ற பாஷையிது. மற்றைய பிராணிகளிடம் சிரிப்பும் அழுகையும் இருப்பதாகத் தெரியவில்லை.

கற்ற மொழிகள்

இன்று உலகத்தில் பல மொழிகளைப் பேசும் மக்கள் வாழ்கின்றனர். இம்மொழிகள் அனைத்தும் கற்றபின் வருபவை. இவைகள் நமக்கு இயல்பாக வந்த சொந்த மொழிகளல்ல. கற்றபின்பே வந்த மொழிகளாகும். உதாரணமாக, தெலுங்கு பேசக்கூடிய பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தையைத் தமிழ் பேசக் கூடியவர்கள் தமிழ்நாட்டில் வளர்த்தால் அக்குழந்தைக்குத் தெலுங்கு வராது ; தமிழ்தான் வரும். அதேபோலத் தமிழ் பேசும் பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தையைத் தெலுங்கு பேசுவோர் ஆந்திர நாட்டில் வளர்த்தால் அதற்குத் தமிழ்வராது; தெலுங்குதான் வரும். ஒரு சிலர் பல மொழிகளைப் பேச வல்லவர்களாக இருக்கின்றனர். இன்னும் சிலர் தமது பெற்றோர்கள் பேசுகின்ற மொழியையே பிழையறப் பேச முடிவதில்லை. அதற்கு என்ன காரணம் ? அவர்கள் ஒரு மொழியைக்கூட நன்றாகப் பேசப் பயிலவில்லை என்பதுதான் உண்மை. கற்றபின் வருகின்ற மொழிகளுக்குச் சிலர் தாய் மொழி என்னும் பெயர்சூட்டி அவற்றின்மூலம் பெருங் குழப்பங் களை விளைவிக்கின்றனர். குயிலின் முட்டை காக்கையினால் அடைகாக்கப் பெற்றால் குஞ்சு வெளிப்படுமாம். காக்கையினால் அடைகாக்கப்பட்டாலும் குயிலின் முட்டையிலிருந்து வெளிப் பட்ட குஞ்சுகூவுமேயொழியக் கரையாது. அதைப்போலத் தாய் மொழி என்பது இயல்பாக வரக்கூடியது. மனிதர்களுக்கு அழுகையும் சிரிப்பும் தவிர மற்றைய மொழிகள் அனைத்தும் கற்றபின் வந்த மொழிகளேயாகும். இவைகள் சொந்த மொழி களல்ல. எந்த மொழியைக் கற்றாலும் அந்த மொழி மக்களுக்குத் தடையின்றி வரும். வந்த மொழிகளைச் சொந்த மொழிகளாகப் பாவிப்பது உபசாரமேயன்றி உண்மையல்ல.

கற்றுக் கடைத்தேறப் பிறந்தோம்

பிறக்கும்போது மனிதன் பேதையாகக் காணப் பெறினும் வளரவளர மனிதனுடைய அறிவு வியக்கத்தக்க விதத்தில் வளர்ச்சி பெறுகிறது. உயிரினங்களில் சிலவற்றுக்கு ஐம்புல அறிவு முழுமையாக இல்லை. இவற்றுள் நிறைவு குறைவுகளும் உண்டு. ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐயறிவு என அதனதன் பிறவிக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. கேட்டல்,

வெப்ப தட்பங்களை அறிதல், உருவங்களைக் காணல், சுவைத்தல், முகர்தல் என்னும் இவ்வையறிவும் விலங்கினங்களுக்கும் மக்களுக்கும் பூரணமாக அமைந்துள்ளன.

" மாவும் மாக்களும் ஐயறிவினவே "

என்றார் தொல்காப்பியனார். இவையன்றி மனிதனுக்கு ஆறாவது அறிவு என்னும் பகுத்தறிவு ஒன்று கூர்மையாக உள்ளது. பொறிகளின்மூலம் உணர்வது ஐயறிவு. சிந்தனையின் மூலம் காண்பது பகுத்தறிவு. பகுத்தறிவின்மூலம் தெளிவது மெய்யறிவு.

நுண்ணறிவு

ஐப்புலன்களின்மூலம் அறியக்கூடியவற்றைக் காரண காரியங்களோடு ஆராய்வது நுண்ணறிவாகும். உதாரணமாக, ஓர் அரிய செயலைக் கண்ணுற்றால் அதைக் கண்டு களிப்பதோடு நிற்பதில்லை. அதன் காரணத்தையும் அறிய விரும்புகிறது. ஓர் அழகான மாளிகையைக் கண்டால் அதைக் கட்டினவனின் திறமையை நினைக்கிறது. ஒரு நூதனமான ஆபரணத்தைக் கண்டால் அதைச் செய்தவனின் நுண்ணறிவை நினைக்கிறது. ஒரு சிறந்த நூலை வாசிக்கும்போது அதை எழுதினவனின் உள்ளத்தை நோக்குகிறது. அத்துடன் அதைப்போலத் தானும் இயற்ற நினைக்கிறது. இவ்வாறு ஒரு காரியத்தைக் கண்ணுறும்போது அதன் காரணத்தையும் அறியவேண்டும் என்னும் ஆர்வம் மனிதனுக்குமட்டும் சிறப்பாக அமைந்திருக்கிறது. இவ்வுண்மை தெருக்களில் விளையாடும் சிறார்களிடத்திலும் காணலாம். தத்தம் குடும்பங்களில் பெரியவர்கள் செய்கின்ற செயல்களைச் சிறுபிள்ளைகள் கண்ணுறுகின்றன, அவற்றை யெல்லாம் பொம்மைகளை வைத்துப் பெரியோர்கள் செய்ததைப் – போலவே திருமணம் செய்தல், வீடு கட்டல் போன்ற விளையாட்டுகள் விளையாடுவதைக் காண்கின்றோம். இவ்வுண்மைகளைப் பிள்ளைத் தமிழென்னும் நூல்களில் சிற்றில் விளையாடல் சிறுபறை முழக்கல் சிறுதேருருட்டல் என்பன போன்ற நிகழ்ச்சிகளைப் புலவர்கள் பாடியுள்ளனர். இவையே மனிதப் பிறவிக்கு அமைந்துள்ள சிறப்பியல்புகள் எனலாம்.

சிந்தனையின் சிறப்பு

நன்மை, தீமை, நீதி, நேர்மை, பாவம், புண்ணியம், உண்மை, பொய்மை என்பவற்றைச் சிந்திக்கிற அறிவு மக்களுக்கு மிகத் தெளிவாக அமைந்திருக்கிறது. மற்றைய உயிரினங்களிடம் இத்தகைய நுண்ணறிவு காணப் பெறவில்லை மற்றைய உயிர்களுக்கு உண்ணல், உறங்கல், உறைவிடம் நாடல்,

இனம் பெருக்கல் என்பவற்றோடு நிற்கின்றன. சில கல்வியறிவற்ற மக்களிடமும் விலங்கறிவே மிகுதியாகக் காணப் பெறுகின்றன. காரணம், அவர்கள் வாழும் இடமும், அவர்களைச் சூழ்ந்திருக்கும் அமைப்புகளுமே அறிவின் ஏற்றத் தாழ்வுகளுக்கு மூலமாக அமைகின்றன. விலங்குகளோடு பழகுவோருக்கு விலங்கறிவு அதிகரிக்கிறது. நல்லோர்களோடு சேர்ந்தால் நல்லறிவு; திருடர்களோடு பழகினால் திருட்டுப்புத்தி- மனித அறிவு அவனவன் வாழ்கின்ற இடத்தையும் ஆங்கு நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளையும் பொருத்தே வளர்ச்சியும் தளர்ச்சியும் அடைகின்றது.

களங்கமற்ற உள்ளம்

மனித உள்ளம் பிறக்கும்போது தூய்மையான பளிங்குபோல இருக்கிறது. இதைக் குழந்தை மனம் என்று புகழ்வார்கள். சில சமயம் மிகவும் நல்லவர்களைக் கண்டால், அவருக்குக் அழுக்கற்ற குழந்தை மன மென்பார்கள். ஆகவே மனிதன் குழந்தையாக இருக்கும்போது அவனுடைய மனம் தூய்மையாக இருக்கிறது. ஒரு பளிங்குக் கல்லைச் சூழ்ந்துள்ள பொருள்களின் நிறங்கள் அக்கல்லில் தோன்றுவதைப்போல, மனிதன் எங்கு வாழ்கிறானோ அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள், மொழிகள், பழக்க வழக்கங்கள் அனைத்தும் அவனுள்ளத்தில் பதிந்து விடுகின்றன. இந்து மதம் இன்னதென்று தெரியாமல் போனாலும் இந்துக்களுக்குப் பிறந்தவன் தன்னை இந்து என்று நினைத்துக்கொள்கிறான். இஸ்லாம் மதம் இன்னதென்று தெரியாமற் போனாலும் முஸ்லிம்களுக்குப் பிறந்தவன் இளமையிலேயே தன்னை இஸ்லாமியன் என்று கருதுகிறான். இதே போலக் கிறிஸ்துவர்களுக்குப் பிறந்த சிறுவர்கள் தம்மைக் கிறிஸ்துவர்கள் என்றும் நினைத்துக் கொள்கின்றனர், பிறக்கும் போது எந்தக் குழந்தைக்கும் சாதியைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ, இனத்தைப் பற்றியோ ஒன்றுமே தெரியாது. சாதி, மொழி, மதம், தொழில் என்பன அனைத்தும் பெற்றோர்களும், பெரியோர்களும், மற்றோர்களும் கற்றுக்கொடுப்பதற்கு ஏற்ப அச்சிறுவர்களின் அறிவு அமைகின்றன.

வெண்மையான பஞ்சு பல நிறங்கள் ஊட்டப்பெற்றுப் பல வண்ண ஆடைகளாகக் காட்சி அளிப்பதைப்போலச் சாதி, மதம், குலம், கோத்திரம், இனம், நாடு, ஊர் என்பனவும் ஊட்டப் பெற்றதனால் இன்று மனித இனம் பல பிரிவுகளாகக் காட்சியளிக்க நேர்ந்துள்ளது.

> "யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நின்று
> பந்தமறும் பளிங்கனைய சித்து நீ"

என்றார் தாயுமான அடிகளார். தூய அறிவு மயமான ஆன்மா

சென்ற இடத்துக்கு ஏற்ற சேட்டைகளுக்கு உள்ளாகியுள்ளது. ஆனால் அது பெய்கின்ற மழையின் நீர் தூய்மையானதுதான். சில இடத்தின் மண்ணின் தன்மையை அடைந்துவிடுகிறது. சில இடத்தின் ஊற்று நீர் உப்பாகவும், சில இடத்தின் ஊற்று நீர் இனிப்பாகவும் இருப்பதற்குக் காரணம் அங்குள்ள மண்ணின் குணமாகும். அதேபோல் மனிதனும் தான் பிறந்த இடத்தில் வாழும் மக்களின் குண நலன்களையும் பெற்றுவிடுகிறான்.

மற்றைய உயிரினங்கள் வாழ்க்கை முறைகளைக் கருவிலேயே கற்பிக்கப்பட்டுப் பிறக்கின்றன. மனிதன் பிறந்தபிறகு கற்கிறான். ஆகவே நாம் நமது வாழ்க்கையைப்பற்றிய உண்மைகளை கற்கப் பிறந்துள்ளோம். பிற உயிர்கள் கற்றுப் பிறந்துள்ளன. மனிதன் எதைப் பயின்றாலும் அதில் அவன் முன்னேற்றமடைகிறான். இவனால் ஆகாத செயலே இல்லை எனக் கூறலாம். ஆண்டவன் மனிதனுக்கு அளித்திருக்கின்ற வாய்ப்பு இது. இவன் எதையும் கற்கக் கற்க அது இவன் கைவசமாகிறது. ஆகையால் நாம் எதைக் கற்கவேண்டுமோ அதைக் கற்கவேண்டும். இந்த வாய்ப்பு மற்றைய உயிர்கள் பால் கிடையாது.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவனார். ஆகவே நாம் எதைக் கற்க வேண்டுமோ அதனைப் பழுதறக் கற்றுப் பயனடையவேண்டும். இதுவே இப்பிறவி எடுத்ததின் நோக்கமாகும். இந்த நல்ல வாய்ப்பை நழுவவிட்டால் "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏதுவருமோ" என்று தாயுமானார் கூறியதுபோல மரணத்துக்குப்பின்னர் நிகழ்ப் போவதைப் புரிந்துகொள்ள முடியாததாகிவிடும்.

முன்னோர்களின் நன்முயற்சி

நமது மூதாதையர் இந்த உண்மையை முன்னமே புரிந்து கொண்டிருந்தனர். அதற்காக இளமையிலேயே சிறுவர்களுக்கு நல்லறிவைக் கற்பிக்கலாயினர். கற்பிக்கப்படுவதனால் 'கல்வி' என்னும் பெயர் எய்திற்று. பண்டைய காலத்தில் மன்னாதி மன்னர்களும் தமது மக்களைக் குருகுல ஆஸ்ரமங்களுக்கு அனுப்பிவைத்து; அச்சிறுவர்களுக்கு நல்லறிவைப் புகட்டினர். அக்காலத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு குருபுத்திரர்கள் என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு. அந்தக் கல்வி ஆரம்பம்

பள்ளியிலிருந்து சர்வகலா சாலை வரையிலும் வளர்ச்சி அடைந்தது. வனங்களில் தோன்றிய கல்வி வளம்பொருந்திய நகரங்கள் வரையிலும் பரவலாயிற்று.

பண்டைய கல்வி

முற்காலக் கல்வியின் அடிப்படை ஒழுக்கமும், ஆன்மீக முமாகும். அடுத்தது பௌதிக ஆராய்ச்சி. தற்போதைய கல்வியில் முதலில் பௌதிக ஆராய்ச்சி ஒழுக்கம் பெரும்பாலும் ஒதுக்கப்பட்டு வருகின்றது. அக்கால மாணவர்களிடம் அன்பு, அடக்கம், குருபக்தி என்பவற்றுக்கு முதலிடம் இக்கால மாணவர்களின் தன்மையை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அன்று அறநெறிகளை வளர்க்கப் படித்தனர். இன்று பதவிகளைப் பிடிக்கப் படிக்கின்றனர். அன்றைய மாணவர்கள் ஆசிரியர்களுக்கு அடங்கி நடந்தனர். இன்று ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அடங்கி நடக்கவேண்டும். அன்றைய ஆசிரியர்கள் தந்தையினும் மூத்தவயதுடையவர்களாக இருப்பர். இன்றைய ஆசிரியர்கள் ஏறத்தாழ மாணர்களின் வயதுடையவர் களாகவும் இருக்கக்கூடும். அக்காலத்தில் பெரும்பாலும் மெய்ஞ் ஞானத்துக்கு மதிப்பு. அன்றைய படிப்பாளிகள் அமைதிக்கு விழைந்தனர். இன்றைய படிப்பாளிகள் அதிகாரத்துக்கு விழைகின்றனர்.

விஞ்ஞானத்தின் விழிப்பு

உலக வாழ்க்கையின் வசதிகளை நாடி எழுந்த சிந்தனை களால் வளர்ச்சியுற்றது விஞ்ஞானமென்னும் பௌதிக ஞானம். இத்தூண்டுதலின் பெருமுயற்சியால் விளைந்துள்ள அற்புதங்கள் எண்ணற்றவையாகும். நுண்பொருளான அணுக்கள் முதற் கொண்டு பெருவெளியில் உலாவுகின்ற பருப்பொருள்கள் அனைத்தையும் ஆராய்ந்து அவற்றின் குணாகுணங்களைப் புரிந்துகொள்ள முயல்வது விஞ்ஞானமாகும். இந்த விஞ்ஞானத் தால் மனிதன் வியக்கத்தக்க பல விஷயங்களைக் கண்டு பிடித்துள்ளான்.

கடலைக் கடக்க நீராவி மரக்கலங்கள், விண்ணில் பறக்கும் விமானங்கள், மண்ணைக் குடையும் யந்திரங்கள், அண்டங் களை ஆராயும் அதிசயக் கருவிகள் முதலானவற்றை உருவாக்கி யுள்ளான். நீரில் நெருப்பைப் படைக்கிறான். அந் நெருப்பில் உலோகங்களையும் உருக்குகிறான். தண்ணீரில் விளக்கெரிக்கும் தத்துவம் கண்டுள்ளான். கதிரவனுக்கு எதிரியக்கம் தொடங்கு

வதைப்போல் இரவைப் பகலாக்கும் பெருமுயற்சியில் ஈடுபட்டுள்ளான். நாடு நகரங்கள் அனைத்தும் இவன் ஏற்றிவைத்த வண்ண விளக்குகள் விண்ணில் பொலியும் நட்சத்திரங்களைக் கண்டு புன்முறுவல் புரிவதைப்போல மின்னுகின்றன. மின்சாரத்தின்மூலம் எண்ணற்ற தொழிற்சாலைகளை இயக்குகின்றான். மண்ணும் விண்ணும் மறிகடலும் விஞ்ஞானிக்கு ஆடரங்குகளாக அமைந்துள்ளன. அணுக்களையும் பிளப்பேன்; அண்டகோளங்களையும் கடப்பேன்; ஆருயிர்கள் அனைத்தையும் மடிப்பேன் ஆயிரக்கணக்கான மைல்களுக்கும் அப்பாலுள்ளவர்களோடு இங்கிருந்தபடி பேசுவேன்; அவர்களின் திருவுருவங்களையும் இங்கு நமக்குக் காட்டுவேன் என்று ஆரவாரம் செய்கிறான். நெடுந்தூரத்தில் உலாவும் அணுக்களையும் ஆராய்ந்து அறியும் நுண்கருவிகளையும் கண்டுபிடித்துள்ளான். இவன் எண்ணுகின்ற தந்திரங்களும், இயக்குகின்ற யந்திரங்களும் எண்ணிலடங்கா! மதிமண்டலம் சென்று அங்கு தனது மணிக்கொடியை நாட்டிவைத்த மாவீரன் விஞ்ஞானி. இயற்கையினிடம் எத்தகைய வியத்தகு சக்திகளுண்டோ அத்தனையும் தன்னாலும் செய்யமுடியும் என்று எண்ணமிடுகிறான். இவ்வளவு நுண்ணறிவு இருந்தும் இவனுடைய குறைபாடுகள் இன்னும் நிறைவு பெறவில்லை.

ஆன்மாக்களின் ஆவல்

பல்லாயிரங் கோடி அண்டங்களையும், எண்ணிலடங்காத உயிரினங்களையும் உதவியுள்ள பரம்பொருள் ஒவ்வோர் உயிரின் உள்ளத்திலும், சில ஆசைகளைத் தூண்டிவிட்டிருக்கிறது. ஒன்று இறவாமை, மற்றொன்று இன்பம். இதற்கு எதிர்மறையான மரணத்தையும் துன்பத்தையும் எல்லா உயிரினங்களும் வெறுக்கின்றன. உலகில் உதித்துள்ள ஒவ்வோர் உயிருக்கும் இவை பொதுக்குணமாகும். மனித இனமும் இன்பத்தையும் இறவாமையையும் தேடித்தான் அலைகின்றது. இதற்காக மனிதன் ஆடாத ஆட்டமில்லை. தேடாத இடமுமில்லை. விஞ்ஞான மென்னும் வீதியில் விரைவாக ஓடிக்கொண்டிருக்கிறான். ஆடிக்காற்றில் அலைகின்ற துரும்பைப்போல ஆனந்தத்தைக் கோரி ஆசைக்காற்றில் சிக்கித் தவிக்கிறான். உறங்குகின்ற நேரம் போகக் கனவிலும் நனவிலும் சாகாமைக்கும் இன்பத்துக்கும் சலிக்காது உழைக்கிறான்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் இவ்வைம் பொறிகளின் மூலமாக அவற்றை அடைவதற்கு விழைகிறான் இவ்வைந்தின்மூலம் இன்பம் மட்டும் வாய்ப்பதில்லை. இவற்றில்

துன்பமும் சம்பவிக்கின்றன. உதாரணமாகக் கண்களால் அழகைக் காணும்போது மனம் களிப்புறுகின்றது. அதே கண்களுக்கு விகாரமும் தோன்றுகிறது. அப்போது அவற்றைக் காண வெறுப்புத் தோன்றுகிறது. அருமையான இன்னிசையைக் கேட்கும்போது செவிகளுக்கு இதமாக இருக்கிறது. கடுஞ் சொற்களைக் கேட்க நேர்ந்தால் மனம் வேதனைப்படுகிறது. அதைப் போலவே நாவிற்கு இனிப்புத் தேவை; கைப்புத் தேவையில்லை. மூக்கிற்கு நறுமணம் தேவை; துர்நாற்றம் தேவையில்லை. ஆகவே பொறிகளின்வாயிலாக அழியாத இன்பத்தை மட்டுமே அடையமுடியாது. ஐம்புலன்கள் இன்ப துன்பங்கள் இரண்டையும் கலந்தே தரும். மற்றும் இன்பத்திலேயே துன்பம் துன்பத்திலேயே இன்பம் என்னும் இரண்டையும் தரக்கூடியது புலன்கள். நாவானது இனிப்பை விரும்புகிறது. ஆனால் அதிகம் சாப்பிடமுடியாது. அதிகமானால் தெவிட்டும்; செவிகள் இன்னிசையைக் கேட்கவிரும்பினாலும் ஒரே ராகத்தை நீண்ட நேரம் கேட்டால் சலிப்படையும். ஒவ்வொரு பொறியும் இத்தகையதே. இந்தப் பொறி புலன்களும் நிரந்தரமாக நிலைத்திருப்பனவல்ல. ஆக்கை தளரும்போது புலன்களும் தமது ஆற்றலை இழந்துவிடும். நாம் பெற்றுள்ள ஆக்கையும் இதில் அமைந்துள்ள பொறிகளும் நித்தியமானவையல்ல. அநித்தியமானவை. ஆனால் நாம் விரும்புவது நிலைத்த இன்பம்; நித்திய வாழ்க்கை.

மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் இவ்வுலகில் காணப்படும் எப்பொருள்களாய் இருப்பினும் அவற்றின்மூலம் அழியாத இன்பத்தை அடையவே முடியாது. சுருக்கமாகச் சொன்னால் ஐம்பொறிகள் மூலம் கிடைக்கும் வசதிகள் எத்தகையதாக இருப்பினும் அவையனைத்தும் சிற்றின்பத்தைச் சார்ந்தவை. விஞ்ஞானத்தின் மூலம் புலன்களுக்கு ஏற்ற வகையில் ஆயிரக்கணக்கான வசதிகள் செய்தாலும் அவற்றால் அழியாத இன்பத்தைப் பெற்றுத்தர இயலாது.

இறவாத நிலையையும் அழியாத இன்பத்தையும் இன்னதென்று அறிவுறுத்தத் தோன்றியது எதுவோ அதுவே மதம். இந்த மதம் ஆராய்வது மெய்ஞானத்தை! மெய்ஞானமென்பதை விஞ்ஞானத்துக்கும் மேலானதெனலாம்.

மதத்தால் விளைந்த மாண்புகள்

ஆதிகாலத்தில் மனித இனம் தமது வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக்கொள்ள மக்கள் வகுத்துக்கொண்ட கட்டுப்

பாடான கொள்கையைச் சமயம் என்றும், செந்நெறி என்றும் திருநெறி என்றும், மதம் என்றும் பெயர். தர்மம் என்பதும், இதுவே.

மனிதன் விலங்கின் நிலையிலிருந்து விலகித் தனக்கென வாழ வழிவகுத்துக்கொண்ட நன்னாளே மதம் தோன்றின பொன்னாளாகும்.

"எங்கெல்லாம் புனித உணர்வு தோன்றுகிறதோ அங்கெல்லாம் சமயம் வேருன்றி இருப்பதாகக் கொள்ளலாம்." (கலைக் களஞ்சியம் தொகுதி 4. பக் 452).

சுவாமி விவேகானந்தர்; ஞானதீபம் தமிழாக்கம் பக்கம் 11-ல் கூறுவதாவது...

"குறைந்த மூடக்கொள்கையுடைய மதம் முதற்கொண்டு, நிறைந்த ஞானக் கொள்கைகள் அமைந்த மதங்கள் வரையிலும் இன்புத்தை அடைவதற்காக வழி கோலுகின்றன;" என்கிறார். ஆகவே மனித இனத்துக்குப் புனித உணர்வைப் போதிக்கத் தோன்றியது மதம். விலங்கினங்களைப்போல முறையற்ற வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்த மக்களுக்கு ஒழுக்க நெறிகளை உணர்த்த உதித்தது மதம். தாய், தந்தை, தமையன். தமக்கை, தம்பி, தங்கை, தனையன் என்னும் உறவு முறைகளை ஒழுங்குபடுத்தியது மதம். யார் யாரிடத்து எந்தெந்த வகையில் நடந்துகொள்ளவேண்டுமோ அந்த ஒழுக்க விதிகளை விதித்துத் தந்தது மதம். நீதி, நேர்மை, கடமை, கட்டுப்பாடு, கண்ணியம், தூய்மை, அன்புடைமை, பிறர்பொருள் நயவாமை, அருளுடைமை என்னும் இன்னுரைகளை இயற்றித் தந்தது மதம்.

தன்னுயிர்போல மன்னுயி ரென்றது மதம். ஆண்டவன் செயலை அறிமுகம் செய்தது மதம். புலனடக்கத்தின் நலனைப் புகன்றது மதம். அகத்தின் இருளை அகற்ற முயன்றது மதம். அரசியல் நெறிகளை முறையுற வகுத்தது மதம். இல்லற நெறிக்கு ஏற்றன சொன்னது மதம். துறவற நெறியின் தூய்மையை உரைத்தது மதம். மக்கட் பேற்றை ஒக்க உரைத்தது மதம். பன்னெடுங் காலங்களாகப் பலகோடி மக்களுக்கு நன்னெறி புகட்டி வந்தது மதம். அன்பென்னும் அடித்தளம் அமைத்து, அறிவென்னும் சுவரெழுப்பி, ஒழுக்கமென்னும் கூரை வேய்ந்து மனித சமூகத்துக்கு அமைதி என்னும் இருப்பிடத்தை அமைக்க அரும்பாடு பட்டது மதம். இதன்

மடியில் நாடகம். சிற்பம், ஓவியம், இன்னிசை என்னும் அற்புதக் கலைகளும் வளர்ச்சியடைந்தன.

" மனிதன் மனிதத் தன்மை உள்ளவனாக இருக்கும் வரையில் மதம் இருந்து வந்தே தீரும்;'' என்று மாபெருந் தத்துவ ஞானியருள் ஒருவரான பாரத ரத்னா, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் மதத்தில் கிழக்கும் மேற்கும் என்னும் நூலில் கூறியுள்ளார். (தமிழாக்கம் : பக்கம் 17) அநுபூதி மான்களான அருளாளர்களால் உருவாக்கிய மதத்தின் பெருமையை நம்மால் அளந்துரைக்க முடியாது. விஞ்ஞானமும் உலக மக்களுக்கு வேண்டிய வசதிகளை வாரி வழங்கியுள்ளது. அது இன்னும் பல வசதிகளை வழங்கக்கூடும். மற்றும் விஞ்ஞானம் உலக நாசத்துக்கு உடந்தையாகப் பல பயங்கரமான கொலைக் கருவிகளையும் குவித்துக்கொண்டு வருகிறது. எதிர் காலத்தில் இவற்றின்மூலம் பேரழிவுகளும் ஏற்படக்கூடும். ஆனால் மெய்ஞ்ஞானம் தன்னுயிர்போல மன்னுயிரைப் பாவிக்கு மாறு மக்களை வற்புறுத்துகிறது. விஞ்ஞானம் உலக இன்ப மென்னும் சிற்றின்பத்துக்குப் பேருதவிகளைப் புரிந்திருக்கிறது. மெய்ஞ்ஞானம் வீட்டின்பத்துக்கு வழிவகுத்துள்ளது. விஞ்ஞானம் சடப் பொருள் ஆராய்ச்சி. மெய்ஞ்ஞானம் ஆன்ம ஆராய்ச்சி. இவை இரண்டும் இகபர சுகங்களுக்கு உறுதுணையாக இருக் கின்றன. மக்கள் விஞ்ஞான மெய்ஞ்ஞானங்கள் என்னும் இரண்டையும் வரவேற்கவேண்டியவர்களே. இம்மைக்குச் சிற்றின்பம், மறுமைக்குப் பேரின்பம். ஆகவே விஞ்ஞான மெய்ஞ் ஞானங்களைப் பெருக்கி, அஞ்ஞானத்தை மக்கள் அகற்ற வேண்டும்.

மதத் தோற்றத்தைப் பற்றிய சிலர் கருத்துக்கள்

ஆதிகாலத்தில் மக்கள் மலைச்சாரல்களிலும் காடுகளிலும் வாழ்ந்துவந்தனர். அவர்களைச் சூறைக் காற்று, பெரு மழை, பெருவெள்ளம், கோடை கால வெப்பம், கொள்ளை நோய்கள் முதலாயின துன்புறுத்திவந்தன. அவற்றால் பேரழிவுகள் நிகழ் வதுண்டு, ஏதோ சில தேவதைகளின் சீற்றத்தால் இவ்வாறான தீங்குகள் உண்டாவதாகக் கருதினார்கள், அத் தேவதைகளை வணங்கி வழிபட்டால் அத்தகைய கொடுமைகளிலிருந்து மீள முடியுமென்றும் எண்ணினர். அதன் பயனால் இயற்கை நிகழ்ச் சிகள் அனைத்தும் தெய்வச் செயல்களாகக் கருதப்பெற்றன. ஆகவே காற்றை வாயுபகவான் என்றும், நெருப்பைத் தீக்கடவு ளென்றும், நீரைக் கங்கா பவானி என்றும், மழையை வருண பகவான் என்றும், கொள்ளை நோய்களை மாரியம்மை, பிளேக்

அம்மை என்றும், மண்ணை பூதேவி என்றும் பெயர்கள் சூட்டப் பெற்றன. மற்றும் இத்தேவதைகளை வணங்கி வழிபாடு நடத்தினால் இந்தக் கொடுமைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று கருதினார்கள். அத் தேவதைகளுக்கு விக்கிரகங்கள் உருவாக்கப்பட்டன. ஆலயங்களை நிறுவினர். அவற்றை வணங்குவதற்கு ஏற்ற மந்திரங்கள், பூசை செய்யும் முறைகள் முதலானவற்றை வகுத்தனர். பிற்காலத்தில் இச் செயல்கள் மதம் என்னும் பெயர் பெற்றுவிட்டது.

ஆதிகால மக்கள் மலைச்சாரல்களிலும் வனங்களிலும் வாழ்ந்து வந்தனர் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. ஆயினும் அச்சமே ஆண்டவனையும், ஆலயங்களையும் தோற்றுவித்தன என்பதை ஏற்றுக்கொள்ள இயலாது. மறுப்பு.

மதத் தோற்றத்துக்கு அச்சம் அடிப்படையன்று

மறுப்பு நமக்கு அபாயகரமான தொல்லைகளும், துன்பமும் நெருங்குவதை உணர்ந்த உயிர்கள் எவையாய் இருப்பினும் அவற்றுக்கு அச்சம் ஏற்படுவது இயல்பாகும். இது உயிரினங்கள் அனைத்துக்கும் பொதுக் குணம். மனிதனைவிட உலகத்தில் பயந்த உயிரினங்கள் பலவுண்டு, பயமே தெய்வங்களைக் கற்பனை செய்து அவற்றுக்கு ஆலயங்களைக் கட்டி வழிபாடுகளை உண்டாக்கியது உண்மையானால் மற்றைய பயந்த உயிரினங்களும், இத்தகைய பணிகளில் இறங்கி இருக்க வேண்டும். அவற்றினிடம் இவ்வாறு வழிபாட்டு முறைகளோ ஆலயப் படைப்புகளோ காணப்படவில்லை. உயிரியல் ஆய்வாளர்களும் இதுவரையிலும் இத்தகைய நிகழ்ச்சிகளைக் கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை.

உயிர்கள் ஒரு பயங்கரமான இயக்கம் தம்மை நெருங்குவதாகத் தெரிந்தால் அதிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓட முயலுமேயன்றி, 'இது ஒரு தெய்வம். இதை வணங்கினால் நம் அல்லலை அகற்றும்,' என்ற எண்ணம் திடீரெனத் தோன்றாது. கோழைத்தனத்துக்கும் தெய்வ சிந்தனைக்கும் தொடர்பே கிடையாது.

கோழைத்தனம் ஆண்டவனின் வழிபாட்டை ஆரம்பித்து வைத்து மதத்தை உருவாக்கியதாகக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. குருடன் ஓவியத்தை எழுதினான்; செவிடன் இன்னிசை பயின்றான், ஊமை சொற்பொழிவாற்றினான்

என்றால் எப்படிப் பொருந்தாதோ அதுபோல ஆபத்து ஆண்டவனைக் கற்பித்தது. மதத்தைத் தோற்றுவித்தது என்பதும் பொருந்தாது.

மனித அறிவு ஒரு வியக்கத்தக்க காரியத்தைக் காணும் போது அதன் காரணத்தையும் எண்ணவல்லது என்பதை முன்னமே கூறியுள்ளேன். மதம் ஆண்டவனுடைய திருவருளினால் ஆன்றோர்களின் சிந்தனா சக்தியில் உருவாயுள்ளது. உலக இயக்கத்தின் நியதிகளை நினைத்து அதன் நெகிழ்ச்சியில் தெய்வ நம்பிக்கை தோன்யுள்ளது. ஓர் உயிர் தனக்கு ஆபத்து என்று தெரிந்துகொண்டுவிட்டால் அதிலிருந்து விடுபட அங்குமிங்கும் ஓடும். ஆபத்து நெருகியேவிடுமாயின் தன்னால் முடிந்தவரையிலும் எதிர்த்துப் பார்க்கும். அந்த எதிர்ப்புக்கும் தைரியம் துணைபுரிய வேண்டும். அதன் ஒத்துழைப்பு இல்லாவிட்டால், கூக்குரலிட்டு அலறும். கோழைத்தனம் இதைத்தான் செய்யமுடியும். இந்நிலை பிற உயிர்களுக்குமட்டுமல்ல; மனிதர்களுக்கும் அதே கதிதான். கடவுள் நம்பிக்கை கோழைத்தனத்தால் உண்டாகவில்லை. சிறந்த சிந்தனையாளர்களின் உள்ளத்தில் உதித்தது.

ஒரு சிலர் உலக நிகழ்ச்சிகள் அனைத்தும் தானாகவே இயங்குகின்றன என்று கருதுகின்றனர். இந்த இயக்கத்தை இயக்குகின்ற மேலான பரம்பொருள் என்பதொன்று கிடையாது என்று கருதக்கூடிய இயற்கைவாதிகளின் கருத்து இது. தெய்வ நம்பிக்கை அற்றவர்கள் இப்படித்தான் கருதமுடியும். இதை உலகாயதக் கொள்கை என்பர். இவர்கள் உலக நிகழ்ச்சிகள் அனைத்தையும் தலைவனின்றித் தானாக நிகழ்வதாகக் கருதுகின்றனர்.

இயற்கையும் இறைவனும்

இயற்கை என்றாலும் சுவபாவம் என்றாலும் பொருள் ஒன்றே. சிந்தனையின்றி உலகம் தனக்குத்தானே பலகோடி ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இதை இயக்குகின்ற இறைபொருள் என ஒன்று கிடையாது என்பது இயற்கைவாதிகளுடைய கணிப்பு. இது உண்மையானால், இயற்கை என்பது அறிவற்ற சடம் என்னும் பொருள்படுகிறது. என்றால், இயற்கை ஒரு யந்திரத்துக்கு ஒப்பாகும் என்று கொள்ள வேண்டும்.

தர்க்கரீதியாக ஆராயப் புகின் யந்திரம் உணர்ச்சி அற்ற சடம். யந்திரத்தை யாரேனும் இயக்கி வைத்தாலொழியத் தானாக இயங்காது. யந்திரத்தை இயக்குவிக்கக்கூடிய

பொருள் ஒன்று வேண்டும். நாம் இயக்குவிக்கும் பொருளைப் பரம்பொருளென்றும், இயங்குகின்றதனை இயற்கை சக்தி என்றும் கூறுகிறோம். இயற்கை என்பது காரியம்; இறைவன் என்பது காரணம்; காரியம் அன்னை. காரணம் தந்தை. அதனால்தான் பெரும்பாலும் வள்ளுவர் முதலான பெரியோர்கள் பரம்பொருளை ஆண்பாலில் வைத்து பகவான் என்றும், இறைவன் என்றும் கூறியுள்ளனர்; காரியத்தை இயற்கையன்னை என்பதும் இன்றும் உலக வழக்காக இருக்கிறது.

காரியமாகிய இயற்கையின் செயல்கள் ஐம்புலன்களுக்குப் புலனாகின்றன. காரணம் புலன்களுக்குப் புலனாவதில்லை. உதாரணமாக, நமது உடம்பு காரியம்; இது புலன்களுக்குப் புலனாகின்றது. இவ்வுடம்பை இயக்குகின்ற காரணமான ஆன்மா இல்லை என்றால் ஆக்கை செயல்படாது. ஆன்மா ஆக்கையிலும் ஐம்புலன்களிலும் கலந்து இவ்வுடம்பை இயக்குகிறது. இதைப்போலவே இறைபொருளும் ஐம்பெரும் பூதங்களில் கலந்து உலகங்களை இயக்குகிறது. நம்முடைய ஆன்மா (நாம்) இந்த உடம்பில் எந்த இடத்தில் மையமாகத் தங்கி உருப்புக்களை இயக்குகிறோம் என்பது நமக்கே புலனாகவில்லை. ஆயினும், நாம் இவ்வுடம்பினுள் இருக்கிறோம் என்பதை மறுக்க முடியாது. இதைப்போலவே இயற்கை என்னும் காரியத்தை இயக்குகின்ற காரணப்பொருள் நம் புலன்களுக்குத் தோன்றாமையால் அப்பரம்பொருளை இல்லை என்பது அறிவுடைமையாகாது. இது நான் இல்லை; இருப்பது உடம்புதான் என்பதற்கு ஒப்பாகும். உயிரில்லையானால் உடம்பு இயங்காது. ஆண்டவனில்லையானால் அகிலமும் இயங்காது. இவ்வுடம்பை இயக்குகின்ற சிற்றுணர்வை ஜீவாத்மா என்கிறோம். இவ்வுலகங்களை இயக்குகின்ற பேரறிவைப் பரமாத்மா என்கின்றனர்.

கதிர், மதி, உடுக்கள், காற்று, இரவு, பகல், ருதுக்கள் உலகம் என்பன யாவுமே நெறி கடவாமல், நியதி பிறழாமல், கணமும் காலம் தவறாமல் பலகோடி ஆண்டுகளாக இயங்கி வருகின்றன. இவ்வியக்கங்களை நன்கு சிந்தித்த பெரியோர்கள் இயக்குவிக்கும் ஒரு பரம்பொருள் இருந்தாகவேண்டும். மற்றும் பலவாறான செயல்கள் நடைபெறுவதனால் ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு பெயர் சூட்டியுள்ளனர். ஓட்டுவோன் இல்லையானால் வண்டி ஓடாது; ஆட்டுவோனில்லையானால் பொம்மை ஆடாது. நெய்வோன் இல்லையானால் ஆடை கிடையாது, செய்வோன் இல்லையானால் உருவங்களும் அமையாது. உலக இயக்கங்கள் அனைத்தும்

இயற்கை என்று கருதுவதாயின் இதில் சுகம்-துக்கம், நன்மை-தீமை, விருப்பு-வெறுப்பு, மனைவி, மக்கள், காதல், மோதல், நீதி, நேர்மை, பெரியோர்கள், சிறியோர்கள், ஆண்-பெண், பசி, தாகம், நோய் என்பவைகள் அனைத்தும் உண்டாவது இயற்கைக்கா ? என்ற கேள்வி எழுகிறது.

இயற்கை இவற்றை எல்லாம் அறியமுடியுமா ? அறியக் கூடிய அறிவிருந்தால் இதை அறிவுப் பொருள் என்னாமல் இயற்கை என்பது பொருந்துமா ? ஆணுக்குப் பெண்ணின் மீதும், பெண்ணுக்கு ஆணின் மீதும் காதல் உண்டாவதேன் ? மக்களைப் பெற்று அம் மக்களை வளர்க்கவேண்டும் என்ற அன்பு உண்டாவது இயற்கைக்கா ? இயற்கை நாம் இப்படித் தான் வாழவேண்டுமென்னும் திட்டங்கள் தீட்டுமா ? இன்று உலகத்தில் பல அதிசயிக்கத்தக்க விஞ்ஞான முன்னேற்றங்களைக் கண்டுபிடித்திருப்பது இயற்கைதானா ? இந்த இயற்கை நீண்ட காலங்களாக இவற்றையேன் கண்டுபிடிக்கவில்லை ? துக்கத்தை வெறுப்பதும் சுகத்தை விரும்புவதும் இயற்கையா ? இயற் கைக்குப் பலவகையான ஆசைகளுண்டா ? என்பனபோன்ற பல கேள்விகள் இயற்கைவாதிகளை நோக்கி அணியணியாக அணிவகுத்துவரும்.

பிணத்துக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம் என்ன? பிணத்தைக் கொண்டுபோய்ப் புதைப்பதும் சுடுவதும் எது ? உண்ணல் உறங்கல், உறைவிடம் நாடல், உல்லாசம் தேடல் முதலானவை அனைத்தும் இயற்கைக்குத் தேவைதானா ? நம்மை யாரேனும் இழிவாகப் பேசினால் சினம் கொள்கிறோம். புகழ்ந்து கூறினால் மகிழ்ச்சி அடைகிறோம். சினம் கொள்வதும், சந்தோஷப் படுவதும் நாமா ? அல்லது இயற்கையா ? யோசித்துப் பாருங்கள் ! நமக்கு அறிவிருக்கும்போது இயற்கைக்கும் அறிவு இருக்குமல்லவா ? நம்மை யாரேனும் வணங்கினால் நாம் புரிந்துகொள்வதைப்போல இயற்கையும் புரிந்துகொள்ளுமா, புரிந்துகொள்ளாதா ? இவற்றுக்கு பதிலென்ன ?

செய்யுள்

அறிவிலாப் பொருளா இந்த
அவனியைப் படைத்திருக்கும் ?
அறிவிலாப் பொருளா நம(து)
ஆக்கையைப் படைத்திருக்கும் ?
அறிவிலாப் பொருட்கா இந்த
அகிலத்தை நடத்தும் ஆற்றல் ?
அறிவிலாப் பொருளென் றோதும்
அறிவுனக் கெவ்வா றாச்சு ?

யந்திரந் தனக்கு நன்மை
　　தீமையென் பவைதோன்றாது;
உந்திய சகடந் தன்னில்
　　உருளுசக் கரங்களொப்பாம்
சிந்தனை யின்றிச் செல்லும்
　　சடமொப்ப தியற்கை யென்றால்
முந்தைய கேள்வி கட்கு
　　முழுவிடை பகருவாயோ ? (வெ. மு.)

இத்தகைய கேள்விகளுக்கு சடசித்தாந்திகள் தக்க விடைகளைத் தருவார்களானால் அவர்களைப் பாராட்டுவதுடன் அவர்களின் கருத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டியதே !

இறைவனுடைய அருஞ்செயல்களை நன்கு சிந்தித்த சிந்தனைச் சிற்பியான சுவாமி தாயுமானார் பாடியுள்ள செய்யுளைப் பாருங்கள் :

"நேரேதான் இரவுபகல் கோடா வண்ணம்
　　நித்தம்வர உங்களை இந்நிலைக்கே வைத்தார்
ஆரே அங்கவர்பெருமை என்னே ? என்பேன் ;
　　அடிக்கின்ற காற்றேநீ யாராலே தான்
பேராதே சுழல்கின்றாய் என்பேன் வந்து
　　பெய்கின்ற முகில்காள் எம்பெருமான் நும்போல்
தாராளமாய்க் கருணை பொழியச் செய்யும்
　　சாதகமென்னே சுருதி சாற்று மென்பேன் ;

உரையிரந்து பெருமைபெற்று திரைக்கை நீட்டி
　　ஒலிக்கின்ற கடலே இவ்வுலகம் சூழ
கரையுமின்றி உன்னை வைத்தார் யாரேயென்பேன்
　　கானகத்துப் பைங்கிளிகாள் கமலம் மேவும்
வரிசிறைவண் டினங்காள் ஓதிமங்காள் தூது
　　மார்க்கமன்றோ நீங்கள் இதுவரையி லேனும்
பெரியபரி பூரணமாம் பொருளைக் கண்டு
　　பேசியதுண்டோ ஒருகால் பேசு மென்பேன்."

முகில்—மேகம். திரை—அலை. ஓதிமம்—அன்னப்பறவை

—இச் செய்யுட்கள் சிந்திக்கத்தக்கனவாகும். காரியங்களைக் கண்டு காரணத்தை உணர முற்படுவதுதான் அறிவுடைமை என்பர்.

மற்றொரு சாரார் கூற்று

"மதத் தோற்றத்துக்கு மூலகாரணம் மூடநம்பிக்கை"; இதற்கு இவர்கள் எடுத்துக்காட்டும் சான்றுகளாவன:

1. பயனற்ற சடங்குகள் உள்ளன.

2. நம்பத்தகாத பொய்க் கதைகள் மலிந்துள்ளன.

3. மண்ணாலும் கல்லாலும் உலோகங்களாலும் பொம்மைகளைச் செய்து, தாம் செய்த பொம்மைகள் தம்மைக் காப்பாற்றுமென்று கருதி, அவற்றை வணங்கி வழிபடுகின்றனர்.

4. பாவம், புண்ணியம், மோட்சம், நரகம், மறு பிறப்பு என்பவை நேரே நிரூபித்துக் காட்டமுடியாத மயக்க உரைகள்.

5. கடவுள் ஐம்புல அறிவுக்கு அப்பாற்பட்டவர் என்று கூறுகின்றனர். ஐம்புல அறிவுக்கு எட்டாத பொருளே கிடையாது. ஆகவே கடவுள் இல்லவே இல்லை. கடவுளைக் கற்பித்தவன் முட்டாள். பிரச்சாரம் செய்பவன் அயோக்கியன். வணங்குபவன் காட்டுமிராண்டி."

—என்று தரங்கெட்ட மொழிகளால் ஆன்றோர்களைத் தாறுமாறாகத் தாக்கிப்பேசும் மேதாவிகளும் உண்டு. இவர்களின் எடுத்துக்காட்டுகளையும் ஒவ்வொன்றாக நாம் பரிசீலிக்க வேண்டியதே!

மதத் தோற்றத்தைப்பற்றிக் கூறியுள்ள இரு திறத்தாரும் தெய்வ நம்பிக்கை அற்றவர்கள் என்பது இவர்கள் விளக்கியுள்ள விளக்கங்களே நமக்கு நன்றாக விளக்குகிறது.

உலகத்தில் தெய்வப் பற்று அற்ற மதங்களும் இருக்கின்றன. அவற்றை நாத்திக மதங்கள் என்பர். புத்தம், ஜைனம், கன்பியூஷஸ் என்னும் மதங்களைக் கூறலாம். இம் மதங்களிடம் பாவம்—புண்ணியம், இறப்பு—பிறப்பு என்பவற்றினிடம் நம்பிக்கை உண்டு. இவை ஒழுக்கத்தையும் ஜீவகாருண்யத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. இவை கடவுளுக்குப் பதிலாகக் குருவைக் கடவுளுக்குச் சமமாக மதிக்கின்றன. புத்தபிரானும் மகா வீரரும் ஒழுக்கத்தையும் ஜீவகாருண்யத்தையும் நடைமுறையில் பின்பற்றிய உத்தமர்களாவர். கடவுள் நம்பிக்கை அற்றவர்களாய் இருந்தாலும் கடமைகளைச் செய்வோரைக் கடவுள் புறக்கணிக்கமாட்டார். நாத்திகர்களாக இருப்பினும் நல்லவர்கள் நல்லவர்களே. ஆத்திகர்களாக இருப்பினும் அவர்கள் தீங்கிழைப்பார்களாயின் அவர்கள் தீயவர்களே.

ஆத்திக மதத்துக்குள் சில போலி பக்தர்களாலும், அறியாமையாலும் சில தீமைகள் நுழைந்திருந்தன. கடவுளின் பெயரால் யாகாதிகளில் அக்காலத்தில் உயிர்ப்பலிகளும் நிகழ்ந்துள்ளன. அத்தீமைகளைத் தவிர்ப்பதற்காக ஆண்டவன் அருளாலேயே புத்த பிரானாதியர் அவதரித்தனர் என்று இந்துமத நூல்களான விசார சாகரம் முதனானவை கூறுகின்றன. புத்தபிரானை நாராயண அம்சம் என்பர் (விசாரசாகரம் 7-வது தரங்கம் 494) இம் மதங்கள் தெய்வ நம்பிக்கை அற்றவைகளைப் போலக் காணப்படினும் முக்திக்கு முதற்படியான ஒழுக்கத்தையும், ஜீவ காருண்யத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. இம் மதங்கள் தத்தமக்கெனக் கொள்கைகளை வகுத்துக்கொண்டுள்ளன. மதமே மூட நம்பிக்கை என்பவர்கள் எந்த மதத்தையும் ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்பதாகும். மதநம்பிக்கையும், தெய்வ நம்பிக்கையும் அற்ற இவர்கள் "வெந்ததைத் தின்று விட்டு வாயில் வந்ததைப் பிதற்றக் கூடியவர்கள்," என்கிறார்களே அவர்களைப் போன்றவர்கள் இந்த வாய்வீரர்கள். இவர்கள் ஒருவகையில் விலங்கினங்களைவிடக் கடையர்களாவர்; காரணம், விலங்கினங்களுக்குக்கூடச் சில கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. இதைத்தான் தின்னவேண்டும்; இப்படித்தான் வாழவேண்டும் என்னும் ஒழுங்குமுறைகள் உண்டு. மாடு பசித்தாலும் மாமிசம் தின்னாது; புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. நாய் தண்ணீரை நக்கித்தான் குடிக்கும்; உறிஞ்சிக் குடிக்காது. எலி வளையில் வாழும்; பறவை கூண்டில் வாழும் என்பதைப் போல ஒவ்வொன்றும் தத்தம் இனத்துக்கு ஏற்பக் கட்டுப்பாடுகளை அமைத்துக் கொண்டுள்ளன. அதேபோல மனித இனத்துக்கு ஏற்ற இன்றியமையாக் கட்டுப்பாடுகள்தாம் மதம்; இந்த மதக் கட்டுப்பாட்டுக்கு மதிப்பளிக்காத மேதாவிகளைக் கூறவேண்டுமானால் "தான் தோன்றித் தலைவர்கள்' எனலாம். எனினும் இந்தத் தான் தோன்றித் தலைவர்களின் எடுத்துக்காட்டுக்களும் சிந்திக்க வேண்டியனவே.

1. "மதம், மூட நம்பிக்கையால் தோற்றிற்று."

இவ்வாறு கூறக்கூடியவர்கள் தம்மை மிகப்பெரிய மேதாவிகளாகக் கருதிக்கொண்டவர்களாகத் தோன்றுகிறது. இல்லையானால் மதத்தைத் தோற்றுவித்த சான்றோர்களை மூடர்களுடைய பட்டியலில் சேர்த்திருக்கமுடியாது. இந்தத் துணிவு மதத்தை உருவாக்கிய பெரியோர்களின் அறிவைவிட அதிகமான மேதாவிலாசமுடையவர்களுக்கு வரக்கூடும். அல்லது மனதில் செருக்கேறி மதி குழம்பிய மதியீனர்களுக்கு வரக்கூடு

கண்களில் படலமேறியவர்களுக்கு எதிரில் நிற்பவர்கள் இன்னாரென்று தெரியாது. அதைப்போல அகந்தை ஏறியவர்களுக்கும் ஆன்றோர்களின் பெருமை புரியாது.

அன்பும், பண்பும் அமைந்த பெரியோர்களுடைய வாயில் அடாத சொற்கள் வெளிப்படாது. மதமென்பது உலகத்தில் நேற்று முந்தியநாள் தோன்றினதல்ல. பல்லாயிரமாண்டுகளாகப் பல கோடி மக்கள் பின்பற்றி வந்தது. பிற்கால மதங்களும் பல இருக்கின்றன. அவற்றைப் பின்பற்றக்கூடிய மக்களும் பல கோடியினர் உள்ளனர்! மூடநம்பிக்கையால் மதம் தோன்றியது உண்மையாயின் மதத்தைப் பின்பற்றக்கூடிய பல கோடி மக்களும் மூட நம்பிக்கையை உடையவர்களே. இதில் ஐயமில்லை. ஆனால் இவர்களை எல்லாம் மூடர்கள் என்று கருதக்கூடிய மேதாவிகள் உலக மக்களுக்குச் செய்திருக்கின்ற நன்மை என்ன? இவர்கள் மக்களுக்கு அருளிச்செய்துள்ள அருளுரைகள் யாவை? அவற்றை உலக மக்கள் ஏன் இன்னும் பின்பற்றவில்லை. அறிவற்றவர்களை அறிவுடையவர்கள் ஆக்கும் திறமை இவர்களின் மேதைக்குப் போதவில்லையா? அத் திறமை இல்லை என்றால் இவர்களும் குறைமதியாளர்களே அல்லவா? இந்தக் குறைமதியாளர்கள் முன்னோர்களை முட்டாள்கள் என்றும், அயோக்கியர்கள் என்றும் காட்டுமிராண்டிகளென்றும் கூறுவது பொருந்துமா? இந்த மேதாவிகள் மனித குலத்துக்கு வகுத்திருக்கின்ற வழியாது? இவர்களின் வரலாறு என்ன? மதநம்பிக்கை அற்ற இவர்கள் மக்களினமா? அல்லது விலங்கினமா? என்பன போன்ற கேள்விகள் இவர்களைப் பற்றித் தோன்றத்தான் செய்கின்றது. மனித சமுதாயத்தின் நன்மைக்காக வகுத்துள்ள மதத்தை மூடநம்பிக்கை என்பதனால் இவ்வையப்பாடுகள் தோன்றுகின்றன.

இன்று உலகில் ஒவ்வொரு நாட்டுக்கும் அந்தந்த நாட்டில் வாழும் மக்களுக்கும் வரலாறுகள் உண்டு. அவ்வரலாறுகளில் சிற்சில பாரம்பரியக் கொள்கைகளும் உண்டு. ஆட்சிமுறைகள் கூட ஏதேனும் ஒரு கொள்கையைத் தனக்கென வகுத்துக் கொண்டுதான் நடைபெறுசின்றன. ஒருசில கொள்கைகள் இன்னும் மதம் என்னும் பெயரைச் சூட்டிக்கொள்ளவில்லை. ஆயினும் தருமம் என்னும் பெயரைப் பெற்றுள்ளன. தருமம் என்றாலும், கொள்கை என்றாலும் மதம் என்றாலும் பொருள் ஒன்றே. உதாரணமாக, இந்து தருமம், இஸ்லாமிய தருமம், கிறிஸ்துவ தருமம், மசதருமம், மனித் தருமம் என்னும் சொற்கள் என்பதைக் கொள்கை குறிக்கின்றன.

கொள்ளுதல் என்னும் சொல்லின் அடிப்படையில் தோன்றியது கொள்கை. மனித இனம் செம்மையான வாழ்க்கையை வாழ வகுத்துக்கொண்ட நியதிக்குக் கொள்கை என்கிறோம். இது மக்களினத்துக்கு என்று நல்லறிவு தோன்றிற்றோ அன்றே கொள்கை தோன்றிற்று. இதையே மூட நம்பிக்கை என்றால், கொள்கையற்ற வாழ்க்கைக்குப் பெயரென்ன? அது மனித வாழ்க்கையா அல்லது மிருக வாழ்க்கையா?

ஒவ்வொரு மதத்துக்கும் அன்பு, ஒழுக்கம், பரோபகாரம், கட்டுப்பாடு என்பவை அடிப்படையாகும். ஆதிகாலத்தில் ஒரே இடத்தில் குழுமி வாழ்ந்த மக்கள் கடற்கோளினாலும், பஞ்சத்தாலும், பூசல்களினாலும் தனித்தனிக் குழுக்களாகப் பிரிய நேர்ந்தது. இவர்கள் வாழ்க்கையின் வசதியை நாடிச்சென்ற இடங்களின் சூழ்நிலைக்கு ஏற்ப பழைய கொள்கைகளில் சிற்சில மாற்றங்கள் செய்துகொண்டனர். ஆதியில் ஒன்றாய் இருந்த கொள்கை தற்போது பல கொள்கைகளாகத் தோன்றுகின்றன. மனிதனாகப் பிறந்தவன் யாதேனும் ஒரு கொள்கையைப் பின்பற்றவேண்டும். இந்த மத நம்பிக்கை அற்றவர்கள் இதுவரையிலும் தமக்கு என ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ளவில்லை. உலகிலுள்ள பல கொள்கைகளில் ஏதேனும் ஒன்றை ஏற்றுக்கொள்ளவுமில்லை. சில சமயங்களில் எங்கள் திருமறை திருக்குறள் என்று கூறுகின்றனர். அம்மறையிலும் சில குறைபாடுகள் உண்டென்றும் பிதற்றுகின்றனர். "தான் கெட்டதல்லாமல் வனத்தைக் கெடுத்ததாம் குரங்கு" என்பதைப் போல பிறருடைய கொள்கையைக் குறைகூறிப் பிழைப்பதே சிலருடைய பிழைப்பாகத் தெரிகிறது. பருந்து உயரப் பறந்தாலும் அதன் பார்வை குப்பைத் தொட்டியிலிருக்குமாம். பன்றி பட்டணத்தில் வாழ்ந்தாலும் அது சாக்கடையில் புரளக் கருதுமாம். அதைப்போல சில மனிதர்கள் சாரத்தைவிட்டு சக்கையைப் பிடிப்பவர்களாய் இருக்கின்றனர் இவர்கள்தாம் மதம் மூட நம்பிக்கையால் தோன்றிற்று என்று கருதுவார்கள்.

இவர்கள் எந்த போக்கையும் ஏற்றுக்கொள்ளாதவர்கள். தமக்கு என சொந்தப் போக்கையும் வகுத்துக் கொள்ளாதவர்கள். இவர்களைப் போக்கு + இலிகள் — போக்கிலிகள் என்றும் கூறலாம். இச் சொல் பிற்காலத்தில் போக்கிரிகள் என மாறிற்று. இவர்களுக்கு குருநானக், முகமது நபிகள், இயேசுநாதர், புத்தர், மகாவீரர், ஜொராஷ்டிரர், இந்து மதத்தில் தோன்றிய எண்ணற்ற இருடிகள் போன்ற பெரியோர்களையும் மட்டமாகக் கருதும் கெட்டிக்காரர்கள் என்னும் பட்டம் வழங்கலாம் போலும்!

சடங்குகள்

"மதத்தில் பயனற்ற சடங்குகள், இருக்கின்றன. ஆகவே மதம் மூட நம்பிக்கையால் தோன்றிற்று" என்பது ஓர் எடுத்துக் காட்டாகும்.

சடங்குகளில் பயனுள்ளது எது? பயனற்றது எது என்பதனைப் பிரித்துப் பார்க்க முடியாது. சடங்குகள் எல்லா நாட்டவர்களும், எல்லா இனத்தவர்களும், எல்லா மதத்தினரும், ஏதோ ஒருவகையில் பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றி வருகின்றனர். அரசியல் முறைகளிலும் சடங்குகள் உண்டு. சடங்குகளைப் பின்பற்றாத சமுதாயமே கிடையாது. சடங்குகளில் நாட்டுக்கு நாடு, மதத்துக்குமதம், இனத்துக்கு இனம் சிற்சில மாற்றங்களும் உண்டு. கிறிஸ்துவர்கள் திருமண காலத்தில் ஒருவகையான சடங்கினைக் கையாண்டால், இந்துக்கள் இன்னொரு வகையிலும், முஸ்லிம்கள் மற்றொரு வகையிலும், புத்தர்கள் வேறொரு வகையிலும் தங்கள் சடங்குகளை நிறைவேற்றுகின்றனர். இவை மணச் சடங்கிலிருந்து பிணச்சடங்குகள் வரையிலும் மாறுபாடுகள் காணப்படுகின்றன. இவற்றுள் எந்த வகுப்பினர் செய்வது முறையான சடங்கென்று நிச்சயிக்கமுடியாது. அவரவர்களுடைய கருத்துக்கு ஏற்றவாறு மதங்களை வகுத்துக் கொண்டுள்ளதைப்போல சடங்குகளையும் வகுத்துக்கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு சிறப்பான கட்டங்களை நினைவூட்டிக் கொள்ளவே சடங்குகளை உருவாக்கியுள்ளனர். மனித வாழ்க்கையைப் பல கட்டங்களாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு கட்டத்துக்கும் ஒவ்வொரு வகையான சடங்குகளைப் பயன் படுத்துகின்றனர். நன்மையைக் கருத்திற்கொண்டு அவ்வப் போது மனிதப் பண்பை நினைவூட்டிக் கொள்ளச் சடங்குகள் கையாளப்படுகின்றன.

இந்துக்களின் திருமணச் சடங்கு

1. மணப்பந்தல்: இதனைப் பந்தக்கால் நடுதல் என்று கூறுவார்கள். மணமக்களை உட்காரவைப்பதற்கும், உற்றார் உறவினரை ஒன்றுகூட்டுவதற்கும் வனைகின்ற பந்தலைப் பந்தக்கால் நடுவது (பந்தற்கால்) என்பர். பசும் தழைகளாலும், மலர்களாலும் இதனை அலங்கரிப்பர். இது மணமக்கள் செழுமையான வாழ்க்கையோடு வாழவேண்டும் என்னும் கருத்தை நினைவூட்டுவதாகும். இன்று இந்தச் சடங்கில் பெரும்பாலும் சிலமாற்றங்கள் புகுந்துவிட்டன. காரணம்

இடவசதி இன்மை. மற்றும் திருமண மண்டபங்கள் பெருகி யுள்ளமை. இவற்றால் சூழ்நிலைக்கு ஏற்பச் சில மாற்றங்களும் அடைந்துள்ளன.

2. நலங்கிடுதல்: இதுநாள்வரையிலும் குடும்ப பாரம் தோன்றாமல் வளர்ந்துவந்தீர்கள். இனி இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு இந்த அழகான உடம்பு நலங்க வேண்டியுள்ளது. ஆயினும் நறுமணம் வீசும் சந்தனக் கட்டையைப்போல இந்த ஆக்கையை நல்வாழ்க்கைக்குப் பயன்படுத்துங்கள் என்று மணமான பெண்கள் மணப்பெண்ணுக்கும் பிள்ளைக்கும் மனமாற நறுமணப் பொடியைக் கைகளுக்கும் திருமுகத்துக்கும் தடவுகின்றனர்.

3. திருமணப் பந்தலில் எதிரில் பச்சைமூங்கிலில் மாவிலையையும் அரச இலையையும் கட்டி நிறுத்துகின்றனர். இதனையே அரசாணைக்கால் என்பர். (அரச + ஆணைக்கால்—அரசாணைக்கால்) மன்னனுடைய செங்கோல். இது மன்னனுக்கு பதிலாக அவனுடைய செங்கோல் மணமக்கள் எதிரில் காட்சி யளிக்கிறது. இத் திருமணத்துக்கு அரசும் சம்மதமாக ஆணை யிட்டுள்ளது என்னும் கருத்து அரச ஆணைக்கால் என்பதில் தொனிக்கிறது. மற்றும் அதில் மாவிலையும் அரச இலையும் கட்டுவது மா+அரச+ஆணைக்கால். பேரரசனுடைய செங்கோல் என்பது இதன் பொருளாகும். பாலகம்பம் என்று தெலுங்கில் கூறுவர். பாலிக்கும் கம்பம் (செங்கோல்) —பால கம்பம். மற்றும் பலவிளக்கு பல கண்களையுடைய இந்திரன்; குடவிளக்கு—அக்கினி பகவான்; நீர்க்குடம்-புண்ணிய தீர்த்தங்கள், தோழி மாப்பிள்ளை வாயு பகவான் (அக்காலத்தில் தோழி மாப்பிள்ளை கையில் விசிறி கொடுத்திருப்பார்கள். (இது வாயு பகவானை நினைவூட்டும்) தற்போது விசிறி தோழன் பிடிப்பது காணோம். திருமணத்தை நடத்திவைக்கும் கர்த்தா வடக்குத் திசையிலிருந்துகொண்டு திருமண அலுவல்களைக் கவனிப்பான்; இவன் குபேரன். திருமணப் பெண்ணின் தலையில் சூட்டியுள்ள குளிர்ந்த மலர்கள் வருண தேவன். புரோகிதர் தருமராஜா. தெற்குதிசையில் உட்கார்ந்து திருமணச் சடங்குகளை நடத்துவார். மணப்பெண்ணின் தோழி நிருதி தேவன். வடகிழக்கில் வைத்திருக்கும் அம்மியும் குழவியும். இதில் குழவி ஈசானமூர்த்தி, அம்மி அகலிகை; கலசம் சக்தி (தாய் தெய்வம்) அக் கலசத்தை அரிசியைப் பரப்பி அதில் ஒன்பது வீடுகளைப்போன்று கட்டங்களைக் கீறி அதன் மையத்தில் வைப்பார்கள்.

அந்த ஒன்பது கட்டங்கள் நவக்கிரகஸ்தானங்கள். மங்கல சூத்திரம் மணமகனுடைய ஒளிபொருந்திய ஆன்மா. அத் தாலியைக் கோத்திருக்கும் பச்சை நூல்கள் ஆன்ம தத்துவங்கள்; அவன் போடும் மூன்று முடிகள் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் என்னும் முத்தொழிலைப் புரியும் திருமூர்த்திகளை நினைவுகூறல், முடிந்தபிறகு அதன்பேரில் வைக்கும் குங்குமம் மகா சக்தி. அருந்ததியைக் காட்டல் கற்பின் மேன்மையை நினைவூட்டல்; அம்மி மிதித்தல் கற்பினின்றும் பிறழ்வாயானால் அகலிகையைப் போன்று சாபத்துக்குள்ளாவாய் என்று எச்சரித்தல். மணமகன் மணப்பெண்ணைக் கையில் பற்றிச் செல்லல்—இனி என் மனைவியைக் கைவிடாமல் காப்பாற்றுவேன் என்று உற்றா ருறவினர் முன்னிலையில் நிருபித்தல்,மணப்பெண் மணமகனைப் பின்தொடர்தல் 'நான் கணவனுடைய நல்வாழ்க்கைக்கு உறு துணையாக நடந்துக்கொள்வேன்' என்பன போன்ற நற்கருத் துக்களை ஒவ்வொரு சடங்கிற்கும் கற்பித்துக் கொண்டுள்ளனர்.

இந்துக்கள் பெண்களுக்குக் கட்டுகின்ற மங்கல சூத்திரத்தின் வடிவம் புலிபபல்லைப்போல இருக்கும். சிலர் பொட்டுத்தாலி என்று வட்டமாக இருப்பதைக் கட்டுகின்றனர். தமிழ்மக்கள் பெரும்பாலும் புலிப்பல்லைப் போன்ற தாலியைத்தான் கட்டு கின்றனர்.

பண்டைய நாட்களில் ஒரு பெண்ணை மணந்துகொள்ள வேண்டுமானால் அப்பெண்ணைப் பாதுகாக்கக்கூடிய திறமை மணமகனுக்கு இருக்கவேண்டும். அதற்காக அக் காலத்தில் ஒரு நிபந்தனையை வைத்திருந்தார்களாம். அந்த நிபந்தனையாவது: ஒரு கொடிய விலங்கான புலியையும் வெல்லக்கூடிய திறமை தனக்கு இருக்கிற தென்பதனை மணமகன் பலர் முன்னிலையில் நிருபிக்கவேண்டும். அதற்காக அவன் ஒரு புலியைக் கொன்று அப்புலியின் பல்லையே அப் பெண்ணின் கழுத்தில் தாலியாகப் புனைவானாம். ஒரு காலத்தில் நம்முடைய முன்னோர்கள் மலைச் சாரல்களிலும் வனங்களிலும் வாழ்ந்துவந்தனர் என்னும் உண்மையைப் புலிப் பல்லின் தாலி உணர்த்துகின்றது. இதை மகாபாரதத்தில் அருச்சுனன் தவநிலைச் சருக்கத்தில் வில்லியார் நமக்கு ஒரு சான்று கூறுகிறார்.

அருச்சுனனுடைய தவத்தைச் சோதித்து அவனுக்கு அநுக்கிரகம் செய்யச் சிவபெருமான் ஒரு வேடன் வடிவத்தில் புறப்படுகிறார். அப்போது பார்வதி தேவியாரும் வேடிச்சியைப் போலப் பின்தொடருகிறாள். அந்தக் காட்சி,

"வரையரசன் திருமடந்தை வனமுலைமேல்
மணிக்குன்றின் வடமும் செங்கை
நிரைவளையும் புலிப்பல்லால் நிறந்திகழ்
மங்கலப் பூணும் நீலமேனி
விரையகிலின் நறுஞ் சாந்தும்
விரிதழையின் பூந்துகிலும் வேடமாதர்
நிரைநிரையே தனைச்சூழ நின்றவடி
வழகினுக்கோர் நிகர்வே றுண்டோ!"

—இச் செய்யுள் பண்டைய மக்கள் மணமகளுக்குப் புலிப் பல்லைத் தாலியாகப் புனைந்தனர் என்னும் விஷயத்தை நினை வூட்டுகிறது.

பிற்காலத்தில் காடுகள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு நாடு களாக மாறின. மற்றும் ஒவ்வோர் ஆணுக்கும் திருமணமாக வேண்டுமானால் புலிகள் அகப்படுவதும் சிரமமாகிவிட்டன; அதற்குப் பதிலாகப் புலிப்பல்லைப்போல பொன்னால் செய்து மணமகன் பெண்ணின் கழுத்தில் கட்டிவந்தான். பொன்னின் விலையும் கூடுதலாகிவிட்டபடியால் அதன் உள்ளே அரக்கு ஊற்றப்பட்டது. பிறகு அத்தாலியில் தாம் வழிபடும் தெய்வச் சின்னங்களையும் பொறிக்கலாயினர். இன்றைக்கும் அந்த மாங்கல்யத்தின் தோற்றம் புலிப்பல்லைப் போலவே காணப் படுகிறது. இவ்வாறு பண்டைய நாட்களில் பிரிந்து வாழ்ந்த ஒவ்வொரு குழுவினரும் தத்தம் கருத்துக்கு ஏற்பச் சடங்குகளை அமைத்துக்கொண்டுள்ளனர்.

சமீப காலமாகத் தமிழ்நாட்டில் சீர்திருத்தத் திருமணம் என்ற ஒன்றை நடத்தி வருகின்றனர். இத் திருமணத்தில் புரோகி தருக்குப் பதிலாகக் கட்சித் தலைவர்கள் நடத்திவைக்கின்றனர் இவர்களுடைய சடங்குமுறையாவன ;

பலர் முன்னிலையில் இன்னாருடைய மகளை இன்னா னாகிய நான் இல்வாழ்க்கைத் துணைவியாக மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன் என்று மணமகன் ஏற்கனவே எழுதி வைத்துக்கொண்டிருந்த சீட்டைப் படிக்கவேண்டும். அதே போலப் பெண்ணும் மணமகனை மணக்கச் சம்மதித்துள்ளதைப் படிக்கவேண்டும் பிறகு மணமக்கள் அவற்றில் கையொப்பமிட்ட பிறகு மாலை மாற்றும் சடங்குகள் நிகழ்கின்றன. ஒவ்வொரு மதத்தினரும் திருமணச் சடங்குகளை ஒவ்வொரு விதமாக செய்கின்றனர். அவற்றை எல்லாம் விரிவாக எழுத இச் சிறு நூல் இடந்தராது.

சடங்குகள் மதத்தில் மட்டுமல்ல அரசியலிலும் உண்டு உதாரணமாக, ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி இந்தியா சுதந்திரம் பெற்ற நாள் என்பது நாடறிந்த விஷயம். அந்த நன்னாளில் கொடியேற்றி அதற்கு வணக்கத்தைச் செலுத்துவதும் ஒரு வகையான சடங்கேயாகும். அந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளை நினைவுகூர்கிறோம் அந்த உத்தமர்களால் உருவாக்கப் பெற்ற இக்கொடியின் நிழலில் தற்போது 70 கோடிக்கும் அதிகமான மக்கள் வாழ்கிறோம் என்று தேச பக்தர்கள் வெற்றி முழக்கமிடுவதுண்டு. அந்த ஜெய கோஷம் நாட்டுப் பற்றுடையவனுக்கு மகிழ்ச்சியையும்உற்சாகத் தையும் உண்டாக்கும்.

இதே கொடியேற்று விழா நாட்டுப் பற்றற்று அந்நியர் களுக்குக் கைக்கூலியாக இருந்து அவர்கள் வீசிய எச்சிற்காசில் இச்சையை வைத்த தேசத் துரோகிக்கு கொண்டாட்டமாகவா இருக்கும்? அப்போது பாடியதேசிய கீதம் இவன் இறந்ததைப் போலவும், இவன் சுற்றத்தார் இவன் மாண்டதற்காக அழு வதைப்போலவும் தோன்றும். அக் கொடியேற்றுகிற சடங்கு அந்தத் துரோகியைச் சுடுகாட்டில் கொண்டுபோய் கொளுத்து வதைப்போலவும் தோன்றக்கூடும். காரணம், சுதந்திரம் வராமல் இருந்திருந்தால் இன்னும் கொஞ்சம் மறைமுகமாக வருவாய் வந்திருக்குமே. அந்த வருவாய்க்கு இச்சுதந்திரம் மண்ணைப் போட்டுவிட்டதே என்று நொந்த மனத்தோடு சுதந்திர நன்னாள் அவனுக்குமட்டும் துக்க நாளாகத் தோன்றும். அத்துடன் அக்கொடியைப்பற்றித் தேசபக்தன் புகழ்ந்த புகழ் உரைகளை மறுத்து இழிவாகவும் பேசக் கூடும். இந்த கம்பத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் துண்டுத் துணி ஒரு மனிதனுக்குக் கூட நிழல் தர்முடியாது. இதன் நிழலில் 70 கோடி மக்கள் வாழ்கின்றனர் என்பது வடிகட்டின பச்சைப் பொய்யல்லவா? இந்தத் துணிக்கு வணக்கம் செலுத்து கிறார்களே, இவர்கள் செலுத்திய வணக்கத்தை அந்தத் துணி புரிந்து கொள்ளுமா? இத்தகைய செயல்கள் முழுமையான மடமையல்லவா? இவர்களுக்குப் பகுத்தறிவிருந்தால் இந்தப் பயனற்ற சடங்குகளைச் செய்வார்களா? என்று மகா மேதையைப் போன்று விளக்கம் கூறக்கூடும்.

ஆனால் இவன் கூறிய விளக்கங்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நயவஞ்சகர்களுக்குப் பொருத்தமாகத் தோன்றலாம். நன்றியுள்ள தேசபக்தனுக்குக் கொடியேற்று விழாவில் நிகழ்த்திய சடங்குகள் உற்சாகத்தை உண்டாக்கும். ஆகவே சடங்குகள்

பயனுள்ளவை என்பதும், பயனற்றவை என்பதும் அவரவர்களின் மனப்பாங்கைப் பொருத்திருக்கிறது.

பொதுவாக அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்
பதவி, ஆளுநர் பதவி போன்ற பதவிகளை ஏற்கும்போது
எடுத்துக்கொள்ளும் உறுதி மொழிகளும், முடிசூட்டு விழாக்
களும், அதில் நிகழ்த்தும் நிகழ்ச்சி முறைகளும் சடங்குகளைச்
சார்ந்தவையே ஆகும். இந்துக்கள் ஒருவரைச் சந்திக்கும்போது
இரு கைகூப்பி வணங்குகின்றனர். ஆயகிலேயர்கள் கை
குலுக்குகின்றனர். சிலர் ஒருவரை ஒருவர் தழுவிக் கொள்
கின்றனர். இவைகள் அனைத்துமே அந்தந்த மக்கள்
மரபு வழியாகப் பின்பற்றிவரும் சடங்கு முறைகளேயாகும்.
இவற்றில் யார் செய்வது சரியான சடங்கு முறையென்று
வாதிட்டு வெற்றிகாணமுடியாது. புது மனை புகும்போதும்
சடங்கு, கோயில் குடமுழுக்கு விழாச் சடங்கு, பிரேதச் சடங்கு,
இறுதிச் சடங்கு என்பவை போன்ற அனேகச் சடங்குகள்
உண்டு. இச்சடங்குகளைப் பின்பற்றாத மனித சமூகமே
கிடையாது.

சடங்குகள் பொதுவாக நன்மையைக்கோரி நன்றியறிதலை நினைவூட்டிக் கொள்ளவும், கட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு நிகழ்த்தப்படுகின்றன ஆனால் சடங்குகளைச் செய்துவிட்டால் அதில் ஏதோ ஒரு பெரிய மகத்துவம் விளைந்துவிடப் போவதாக மக்களை மயக்கி, அச் சடங்குகளின்மூலம் ஏய்த்துப் பிழைப்பதே தொழிலாகக் கொண்டுள்ள சில சுரண்டல் பேர்வழிகளும் உண்டு. இவர்களால் சடங்குகளின் தூய கருத்துக்களுக்குக் களங்கம் தோன்றுகின்றது.

சடங்கு முறைகளை கால சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டு, மனத் தூய்மையாகவும், கண்ணியமாகவும், ஏழை எளியவர்களும் பின்பற்றக்கூடிய தெளிவான முறைகளை வகுத்துக்கொள்ளலாம். உலகத்தில் மக்கள் சமுதாயம் இருக்கின்ற வரையிலும் சடங்குகளும் இருக்கும். சடங்குகள் மடமையின் அடிப்படையில் தோன்றவில்லை. கடமையின் அடிப்படையில் தோன்றியவையே. சடங்குகளிலும் பல நல்ல தத்துவக் கருத்துக்கள் உள்ளன.

கற்பனைக் கதைகள்

மதங்களில் கற்பனைக் கதைகள் உண்டு ; இல்லை என்று வாதிட முடியாது. ஆனால் பொய்யான கற்பனைக் கதைகள் மதங்களில் ஏன் புகுந்துள்ளன என்பதை யோசிக்க வேண்டியதே. இதற்குத் தக்க பதிலை எதிர்பார்ப்பது நியாயமேயாகும்.

தற்காலத்திலும் வெளிவரும் வார, பட்ச, மாத வெளியீடுகளிலும் கணக்கற்ற கற்பனைக் கதைகள் வந்தவண்ணமுள்ளன. அந்த வெளியீடுகளும் பகிரங்கமாக ஒப்புக் கொள்கின்றன, "இதில் வரும் சம்பவங்கள் பெயர்கள் அனைத்தும் கற்பனையே!" என்று! இப்பொய்க்கதைகளை எழுத்தாளர்கள் ஏன் எழுதுகின்றனர்? மற்றும் பதிப்பாசிரியர்கள் இவற்றை ஏன் பதிப்பிக்கின்றனர். வாசகர்களுக்கு இவைகள் பொய்க் கதைகள் என்று நன்கு தெரிந்திருந்தும் அவற்றுக்குப் பணம் கொடுத்து வாங்கி ஏன் படிக்கின்றனர் என்னும் கேள்விகள் எழுகின்றன.

படித்த அறிவாளிகளான எழுத்தாளர்கள் பொய்க்கதைகளை எழுதலாமா? இவர்களையும் பரிசீலிக்கவல்லவர்களான பதிப்பாசிரியர்கள் பொய்க்கதைகளை வெளியிடலாமா? இப் பொய்க்கதைகளைப் படிப்பதற்கு பணங்கொடுத்து வாங்குகிற வாசகர்கள் பைத்தியங்களா? ஒரு வாரத்துக்கு 18 இலட்சம் ரூபாய்க்கு வார வெளியீடுகள்மட்டும் (தமிழ்வார ஏடுகள்) விலையாகிறதாம். 1—8—1885-ல் வெளிவந்த துக்ளக் என்னும் வெளியீடு கூறுகிறது. மற்றும் பட்ச, மாத வெளியீடுகளையும் கணக்கெடுத்தால் இப் பொய்க் கதைகளைப் படிக்க மாதந்தோறும் கோடிக்கணக்கில் பணம் விரயம் ஆவதாகத் தோன்றுகிறது. இதற்குக் காரணம் என்ன? தமிழில்மட்டும் இந்த கதியானால் மற்ற மொழிகளையும் அதில் வரும் கற்பனைகளையும் சிந்திப்போமானால் உலகமே கற்பனைக் கதைகளை மோதிக்கின்றது என்னும் உண்மை புலனாகும்.

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் நம் நாட்டில் விஷ்ணு சர்மா என்னும் ஒரு புலவர் இருந்தார். பொய்க் கதைகளை வரைவதில் அவர் பெயர்போனவர். அவர் பஞ்சதந்திரக் கதைகள் என்னும் ஒரு நூலை எழுதியுள்ளார், அதில் உள்ள கதைகள் அனைத்தும் பொய்யான—நம்பத்தகாத கதைகளும்கூட. இந்நூலை உலகத்தில் பல நாட்டினர்களும் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துக் கொண்டுள்ளனர் உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்த்துள்ள நூல் கிறுஸ்துவ வேதமான பைபிள் என்கின்றனர். கிறிஸ்துவ திருச்சபையானது பல மொழிகளில் தமது சொந்த செலவில் மொழிபெயர்த்து கிறிஸ்துவ மதத்தை உலகத்தில் பரப்புவதற்காகப் பெரும்பாடு படுகிறது. ஆகவே உலகில் பல மொழிகளில் மொழிபெயர்த்துள்ள நூல்களில் பைபிள் முன்னணியில் நிற்கிறதாம். இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கின்ற நூல் உலகத்தில் விஷ்ணுசர்மா

அவர்கள் எழுதியுள்ள பஞ்சதந்திரக் கதையாகும். (ஆதாரம்: கலைக்களஞ்சியம் தொகுதி 6. பக்கம் 642)

பஞ்ச தந்திரக் கதையைப் பரப்ப யாரும் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. அப்படி இருந்தும் இக்கதை பல நாடுகளிலும் பல மொழிகளிலும் பரவியிருக்கிறது. இக்கதைகளின் தன்மையைக் கேள்வியுற்ற ஒவ்வொரு நாட்டவரும் அவர்களாகவே தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துக் கொண்டுள்ளனர். பஞ்ச தந்திரக் கதைகளில் உள்ள பேருண்மைகள் என்ன என்றால் இதில் இருக்கும் ஒவ்வொரு கதையும் பொய்யால் புனைந்திருக்கிறது. உதாரணமாக. இக்கதையில் இடம்பெறும் கதா நாயகர்கள் நான்கு கால்களில் நடப்பன, மற்றும் பறப்பன, நீந்துவன, நகர்வன போன்ற பல உயிரினங்கள் உண்டு.

ஓநாயும் ஆட்டுக்குட்டியும் உரையாடின. சிங்கத்தைச் சிறு முயல் ஏமாற்றியது; நண்டும் கொக்கும் நட்பு கொண்டன. நரி காக்கையிடம் பேசியது. எலிக்குப் பூனை இதோபதேசம் செய்தது என்பனபோன்ற பல கதைகளுள்ளன. இத்தகைய கதைகள் நடைபெறமுடியாத பொய்க் கதைகளே என்பதை விளக்கவேண்டியதில்லை. அப்படி இருந்தும் இக்கதைகளை உலகம் வரவேற்பது ஏனென்னும் கேள்வி எழுகின்றது. கதைகள் அனைத்தும் பொய்யாக இருப்பினும் ஒவ்வொரு கதையிலும் சிறந்த நற்கருத்துக்கள் பொதிந்துள்ளன. ஆகவே உலகமே அக்கதைகளை கைநீட்டி வரவேற்கின்றது.

" பொய்மையும் வாய்மை யிடத்து பொறைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் "

என்கிறார் வள்ளுவனார். குற்றமற்ற நன்மையைச் செய்ய பயன்படும் சொற்கள் பொய்யாக இருந்தாலும் அவை மெய்ம்மைக்குச் சமமாகும் என்று கூறுவதனால் நாம் ஒரு நூலை வாசிக்கும்போது இது பொய்யா அல்லது மெய்யா என்று ஆராய்வதைவிட இது மக்கட் சமூகத்துக்கு நன்மையைக் கருதி எழுதியதா ? அல்லது தீமையைப் புரிய எழுதியதா என்று சிந்திப்பது அறிவுடைமையாகும். நல்லறிவுள்ளவர்கள் ஒரு கதையைப் படிக்கும்போதே அதன் நோக்கத்தைப் புரிந்து கொண்டு வாசிப்பார்கள். அவர்கள் இவை பொய்யா மெய்யா என்று புலம்பமாட்டார்கள்; கால நிர்ணயம், வரலாறு என்பவற்றில் பொய் கலக்கக்கூடாது. சரித்திர சம்பந்தமானவைகளில் பொய்யைக் கலந்துவிட்டால் பண்டையில் நடந்த உண்மைகளை உணரமுடியாமை எய்திவிடும். இவ்வுண்மைகள் எழுத்தாளர்களுக்கும் நன்கு தெரியும்.

மக்களின் அறிவைப் பெருக்க, தீங்கை அகற்ற, அன்பை வளர்க்க நீதிநெறிகளை அறிவுறுத்த, ஒழுக்கத்தை உணர்த்த கற்பனைக் கதைகள் கலந்திருந்தால் அதில் குற்றமில்லை. எத்தகைய கதைகளானாலும் சரி அவற்றுள் கற்பனைகள் கலந்தே இருக்கும். இவற்றை இலக்கணத்தில் உயர்வு நவிற்சி என்றும் கூறுவர். 'அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்தானாம்'—அதைப்போல் மதத்தின் பேரில் தனக்கிருக்கும் வெறுப்பை உணர்த்த இத்தகைய வெற்றுரைகளைச் சிலர் வீசுகின்றனர். அன்பும், பண்பும் நிறைந்த திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்கள் பாடியுள்ள கவிதையைப் பாருங்கள்.

"வெறுங்கதை புராண மன்று
விழுப்பொருள் மிகவும் உண்டு
நறுங்கவி மெய்விஞ் ஞானம்
நற்றொழில் நாடு செல்வம்
அறம்குணம் காதல் வீரம்
அருளிறை இயற்கை வாழ்க்கைத்
திறங்களின் காட்சிக் கூடம்
தெய்வீக நிலயம் நன்றே.

என்கிறார். ஆகவே கொள்ளைக்காரனுக்கு நீதிபதி நல்லவராகத் தோன்றமாட்டார். காமவெறியனுக்கு கற்புநெறி பயனற்றதாகவே தோன்றும். மத நம்பிக்கையும், கடவுள் நம்பிக்கையும் இல்லாதவனுக்கு புராணங்களும், கட்டுப்பாடுகளும் மூடக் கொள்கையாகத் தோன்றக்கூடும். உள்ளத் தூய்மை உடையவர்களுக்கு மதங்களும் புராணங்களும் வழிகாட்டிகளாகத் தோன்றும்; நல்லோர்களுக்குப் புராணங்கள் எழுதப்பட்டது ஏன் என்பது நன்கு தெரியும்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமாயின் இந்து மதத்தில் பல புராணங்கள் உண்டு. ஒரு வகையில் இவற்றைக் கற்பனைக் களஞ்சியங்கள் எனலாம். பன்னெடுங் காலங்களாகத் தொடர்ந்து வரும் இந்துமதத்தில் கற்பனைகள் கலந்திருப்பதில் வியப்பில்லை. சமீப காலத்தில் தோன்றிய மதங்களிலேயே கற்பனைகள் மலிந்திருக்கும்போது பண்டைய மதத்தில் கற்பனைக் கதைகள் இருக்கத்தான் செய்யும். கற்பனைகள் இல்லை என்று சொல்லமுடியாது.

பொய்யும் மெய்யும் :

தருக்கநூலாசிரியர்கள் பொய் எது மெய்யெது என்பதற்கு ஒரு சிறந்த விளக்கம் தருகின்றனர். முன்னும் இல்லாதது

பின்னும் இல்லாதது. இடைக்காலத்தில் தோன்றி மறையக் கூடியது எதுவாய் இருப்பினும் அதனை மாயை என்றும் பொய்த்தோற்றமென்றும் கூறுகின்றனர். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமாயின் பிறப்பை உடையது அனைத்துக்கும் இறப் புண்டு. பிறப்பும் இறப்பும் உடையது எதுவோ அது கால எல்லைக்கு உட்பட்டது. கால எல்லைக்கு உட்பட்டவைகள் எப் பொருளாய் இருந்தாலும் அது நித்தியப் பொருளல்ல. அநித்தியப் பொருளாகும்; எது எது அநித்தியப் பொருளோ அவைகளனைத் தும் பொய்ப்பொருளே. "இந்த கண்ணோட்டத்தில் பார்க்கும் போது நமக்கு தற்போது வாய்த்திருக்கும் உடம்பு 100 ஆண்டு களுக்கு முன்பு இல்லை. இன்னும் நூறு ஆண்டுகள் இந்த உடம்பு உயிரோடு இருக்காது. புதைத்தால் மண்ணாய்விடும். எரித்தால் சாம்பலாய்விடும். ஆக, நம்முடைய ஆக்கை இடைக்காலத்தில் தோன்றினதால் இது நிலைக்காது; இதற்கு அழிவுண்டு. இந்த தோரணையில் பார்க்கும்போது இந்த உடம்பும் நம்பத்தகாத பொய்யுடம்பே யாகும்.

மதத்தில் நம்பத்தகாத பொய்க்கதைகள் உள்ளன என்று அதை வெறுக்கக்கூடியவர்கள் நம்பத்தகாத பொய்யுடம்பாகிய தங்கள் உடம்பையும் வெறுக்கவேண்டும். எந்த நேரத்தில் உயிர் உடம்பை விட்டு நீங்குமென்பதை நிச்சயிக்கமுடிவதில்லை. பொய்கதைகள் உள்ளன என்று மதத்தை நம்பாதவர்கள் பொய் யுடம்பை மட்டும் நம்பி இதை போஷிக்கலாமா? ஏன் இதை வெறுப்பதில்லை. வேளா வேளைக்குச் சுவையான உணவு சொகுசான படுக்கை, பாதுகாப்பான உறைவிடம் முதலான வற்றை நாடுவது ஏன்? ஊருக்கு உபதேசிக்கும் அறிவுரை தனக்கில்லையா? ஆகவே மதத்தில் இருக்கும் பொய்க்கதை களைப் புரிந்துகொண்டு அவற்றை வெறுக்கக் கூடியவர்கள் உடம்பின் தகுதியையும் புரிந்துகொண்டு இதையும் வெறுத் திருக்கவேண்டும். இதற்குக் கோழிகளையும் ஆடுகளையும் கொன்று குடலை நிரப்பாமல் பட்டினி போட்டிருந்தால் இவர்களைப் பாராட்டவேண்டியதே. அவ்வாறின்றி தனக்கு வேண்டாத, மனைவியின் கைபட்டாலும்குற்றம் கால் பட்டாலும் குற்றம்' என்பார்கள்—அதுபோல அதுபொய் இது பொய் என்று வாயளவில் தம்பட்டமடித்துவிட்டு மதம் மூடநம்பிக்கை உடையவர்களால் உருவானதாகக் கருதுவது மதங்கள் கூறும் நன்னெறியின்படி நடக்கமுடியாத ஒழுக்க ஈனர்களின் உரையென்றே கருத இடந்தருகிறது.

இருட்டு வெளிச்சத்தையும், துன்பம் இன்பத்தையும் தினை வூட்டி அவற்றின் மேன்மையை உணர்த்துகிறது. அதைப்போல நாம் பொய்யாகிய உடம்பை வைத்துக்கொண்டே மெய்யாகிய

பரம்பொருளைக் காண முயல வேண்டும். அறிவாளிகள் மதத்தில் பொய்க் கதைகள் இருக்கிறதென்று கூறிப் புலம்ப மாட்டார்கள்.

உருவ வழிபாடு

"மண்ணாலும், மரத்தாலும், கல்லாலும், உலோகங்களாலும் பொம்மைகளைச் செய்து தாம் செய்த பொம்மைகளே தம்மைக் காப்பாற்றுமென்று கருதி அவற்றை வணங்குவது மடமை யாதம்" இது மற்றோர் எடுத்துக்காட்டு" என்றால் மனிதனால் செய்யப்பட்ட பொம்மையை மனிதனே தன்னைக் காப்பாற்று மென்று கருதி வணங்குவது மடமை என்பது இவர்களின் கண்டுபிடிப்பாகும்.

ஒலியும் மொழியும்

மக்கள் ஆதிகாலத்தில் சைகைகளுடன் ஒலியையும் துணையாகக் கொண்டு தத்தம் கருத்துக்களைப் பிறருக்கு அறிவிக்க முயன்றனர். அவ்வொலி குழந்தைகளின் வாயில் பிறக்கும் மழலை மொழிகளைப் போலவும் பல்வேறு பறவைகள் விலங்குகள்மூலம் உண்டாகும் குரலொலிகளைப் போலவும் தெளிவில்லாமல் இருந்தன. காலாந்தரத்தில் அறிவு வளர்வளர அவ்வொலிகளை மொழிகளாக மாற்றிக்கொண்டனர். ஆகவே பொருளற்ற ஒலிகளே மொழிகளுக்கு மூலமாகும். இன்று உலக மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றனர். நம் இந்தியாவிலேயே நூற்றுக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் சில மொழியினர் எழுத்துக்களையும் உருவாக்கிக் கொண் டுள்ளனர். இவற்றுள்ளும் இரண்டொரு மொழிகள் இலக்கிய வளம் பெற்றுள்ளன. இன்னும் சில மொழிகள் இலக்கியத் துறையில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. ஆயினும் எல்லா மொழிகளுக்கும் ஒலியே அடிப்படையாகும்.

ஒலிக்குப் பொருளில்லை

எந்த ஒலிக்கும் பொருள் கிடையாது. பொருள்களுக்கு மனிதன் ஒலியைக் கற்பித்துள்ளான். உதாரணமாக, தமிழில் "கல்" என்று கூறும் பொருளை தெலுங்கு பேசுவோர் "ராய்" என்று கூறுகின்றனர். உருது பேசுவோர் "பத்தர்" என் கின்றனர். இங்கு நாம் சிந்திக்கவேண்டியது: கல் என்றாலும், ராய் என்றாலும், பத்தர் என்றாலும், பொருள் ஒன்றே. ஒரே பொருளுக்குப் பல மொழியினர் பல ஒலிகளைக் கற்பித் துள்ளனர்.

மற்றொருவகை நாம் மை என்னும் ஒலிக்கு அஞ்சனம், கருப்பு, அழுக்கு என்னும் பொருள் கொள்கிறோம். இதே மை என்னும் ஒலிக்கு ஆங்கிலத்தில் (மை+நேம்) என்னுடைய பெயர் என்று பொருள் கொள்ளப்படுகிறது. உருது பேசுவோர் (மை—போலியா) மை என்பதற்கு நான் சொன்னேன் என்று பொருள் கொள்ளுகின்றனர். இவற்றுள் எந்த மொழியினர் கூறுகின்ற பொருள் சரியானதென்று ஆராயப் புகுந்தால் அந்தந்த மொழியினர் கூறுவது அவரவர்களுக்கு சரியான பொருள். பொதுவாகப் பார்ப்போமாயின் எந்த ஒலிக்கும் பொருளில்லை. ஒலிகளுக்குப் பொருள்கள் கற்பிக்கப் பெற்றுள்ளன. நாம் கல் என்று கூறினால் உருது பேசுவோனுக்கு நாளை என்னும் பொருள்படுகிறது. நாம் ஒரு பொருளுக்குப் பயன்படுத்தும் ஒலியை மற்றவர்கள் வேறொரு அர்த்தத்திலும் பயன்படுத்துகின்றனர். ஆகவே மனிதன் பொருளில்லாத ஒலிகளுக்குப் பொருள்களைக் கற்பித்து மொழிகளாக்கிக்கொண்டு அம் மொழிகளின்மூலம் பிறர் கருத்துக்களைத் தானும் தன்னுடைய கருத்துக்களைப் பிறரும் பிரித்துக்கொள்ள வழிவகுத்துள்ளான்.

ஆதியில் மக்கள் தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து வாழ நேர்ந்தது. அவ்வாறு பிரிந்து சென்ற குழுவினர் குடியமைத்துக் கொண்ட இடங்களில் செடி, கொடி, மரம், உயிரினங்களுக்கும் ஒலிக் குறிப்புகளினாலேயே பெயர்களைச் சூட்டிக்கொண்டனர். தமிழில் நாய் என்றால் அதையே தெலுங்கில் குக்கா என்றும், உருதுவில் குத்தா என்றும், ஆங்கிலத்தில் டாக் (dog) என்றும் பெயர்களை வைத்துக்கொண்டனர். இவர்கள்தான் மொழி களுக்கு மூலபுருஷர்கள்.

மொழியும் எழுத்தும்

ஒலிகளை மொழிகளாக்கியவனும் மனிதன். இம் மொழி களுக்கு எழுத்துக்களைக் கற்பித்தவனும் மனிதனாகும். மொழி களில் பயன்படும் ஒலிகளைக் கோடுகளை வரைந்து அவற்றின் மூலம் ஒலிகள் நினைவூட்டப்பெற்றன. இக் கோடுகளே (கீறல்கள்) எழுத்துக்கள் என்னும் பெயர்பெற்றன. எழுதப் பட்டதனால் எழுத்து என்னும் பெயர் எய்திற்று. இவை ஆரம்பத்தில் சித்திர எழுத்துக்களாக இருந்து, நாளடைவில் பல மாற்றங்களைப் பெற்று தற்போது இந்த நிலைக்கு முன்னேறி யுள்ளது. இந்த எழுத்துக்களைக் கற்றவர்கள் கல்வியாளர்கள் என ஆயிற்று. எழுதுவதால் எழுத்து ; கற்பதனால் கல்வி என்னும் பெயர்கள் எய்தின.

எல்லா மொழியினரும் ஒலிகளுக்கு எழுத்துக்களை ஒரே விதமான கோடுகளை வரைவதில்லை. உதாரணமாக, தமிழில் முதலில் அகரமென்னும் உயிரெழுத்தை "அ" இவ்வாறு வரைகிறோம். இதே ஒலிக்கு கன்னடத்தில் "ಅ" இவ்வாறும், இந்தியில் "अ" இவ்வாறும் கோடுகள் மாற்றம் பெற்றுள்ளன. ஆனால் இந்த மூன்று விதமான எழுத்துக்களுக்கும் பயன் படுத்தும் ஒலிமட்டும் ஒன்றே. இவற்றுள் அகரமென்னும் ஒலியைக் குறிக்க எந்த மொழியினர் எழுதியுள்ள கீறல் சரியானது? என்னும் கேள்வி எழுமானால் அந்தந்த மொழி யினர் அகர ஒலிக்குத் தத்தமது எண்ணத்துக்குத் தோன்றினவாறு கீறிக்கொண்டனர், இக் கீறல்கள் ஒலியை நினைவூட்டிக் கொள்ளச் செய்த பெருமுயற்சியாகும்.

நமது முன்னோர்கள் இத்தகைய பெருமுயற்சிகளை மேற் கொண்டில்லையானால் இன்று மொழிகள் என்பதோ அவற்றைக் கற்கவேண்டிய கல்வி என்பதோ உருவாகி இருக்காது. அழுகையும், சிரிப்பும், அலறலும், கூக்குரலுமாக மிருகங்களோடு மிருகங்களாய் இருந்திருப்போம்.

ஒரு பொருளை நினைவூட்ட ஒலியைக் கற்பித்தவனும் மனிதன். அவ்வொலிகளின்மூலம் மொழிகளை உருவாக்கின வனும் மனிதன். அம்மொழிகளைக் கோடுகளின்மூலம் நினை வூட்டி எழுத்தாக்கினவனும் மனிதன். இவ்வெழுத்துக்களால் கல்வி நிலயங்களை நிறுவிய பிறகு நூல்நிலையங்களை உரு வாக்கினவனும் மனிதன்.

கோடுகளுக்கு ஒலிகளைக் கற்பித்து, அவ்வொலிகளை மொழிகளுக்கு வகைப்படுத்தி எழுத்துக்களாக்கி இவ் வெழுத்துக் களின்மூலம் நம்மை அறிவாளிகளாக்க அரும்பாடுபட்ட பெரியோர்கள் யாரோ, அவர்கள்தாம் பொம்மைகளை உருவாக்கி, தெய்வ பக்தியையும் புகட்டியுள்ளனர்.

பொருளற்ற ஒலிகளுக்கு பொருளைக் கற்பித்து மொழி களை உருவாக்கினர். ஒலியற்ற கோடுகளுக்கு ஒலியைக் கற்பித்து நமக்கு அறிவை வளர்த்தனர். கோடுகளான எழுத்துக் களுக்கு ஒலியைக் கற்பிக்கவில்லையானால் நூல் நிலையங்கள் ஏது? ஒருவன் ஒரு நூலை வாசிக்கும்போது எழுத்துக்களின் உதவியால்தான் வாசிக்கிறான். ஆனால் அவன் மனம் எழுத்துக்களிலேயே லயிப்பதில்லை. எழுதினவனுடைய உள்ளத்தை நாடுகிறது. அதேபோல மனிதனால் செய்த மர

பொம்மையைக் கும்பிட்டாலும் அப்பொம்மைக்குக் கற்பித்துள்ள கடவுளையே சிந்திக்கிறது. கல்லால் செய்த பொம்மையைக் கும்பிட்டாலும் பக்தனுடைய மனம் அந்தக் கடவுளை நாடிப் போகிறது. கோடுகளுக்கு ஒலிகளைக் கற்பித்துள்ளதைப்போல நமது முன்னோர்கள் பொம்மைகளுக்கு தெய்வங்களைக் கற்பித்துள்ளனர். எவ்வாறு கல்லாதவனுக்கு எழுத்துக்களெல்லாம் கோடுகளாகத் தோன்றுமோ அதன்படியே ஆலய வழிபாட்டின் முறையறியாதவனுக்கும் விக்ரகங்களெல்லாம் பொம்மைகளாகவேதான் தோன்றும் எழுத்தறிவற்றவனுக்கு ஒப்பாவான் ஆலய வழிபாட்டின் முறையறியாதவனும்.

உருவ வழிபாட்டை பொம்மை வணக்கம் என்று பரிகாசம் செய்யக்கூடியவர்கள் இனிமேல் எந்த மொழியையும் பேசவும் கூடாது, எந்த நூலையும் படிக்கவும்கூடாது? காரணம் ஒலிகளில் பொருளில்லை. எழுத்துக்களில் ஒலியில்லை. உருவ வழிபாட்டை பொம்மைகள் என்று கூறும் அறிவாளிகளுக்கு எழுத்துக்களையும் ஒலியற்ற கோடுகள்தானென்று புரிந்து கொண்டு தானும் இனி எந்த நூல்களையும் வாசிக்கக்கூடாது. தமது மக்களுக்கும் சந்ததிக்கும் எழுத்து வாசனை அறவே இல்லாமல் செய்துவிடவேண்டும். அப்போதுதான் இவர்களைப் பழுத்த பகுத்தறிவுவாதிகளாகக் கருதமுடியும்.

உடைக்க முனைந்தவர்கள் படைக்க முனைந்துள்ளனர்

தமிழ்நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்பு அருமையானதோர் இயக்கம் ஆரம்பமாயிற்று. இவர்கள் மேற்கொண்ட திருப்பணிகள் பல. அவற்றுள் சிலவற்றைமட்டும் வாசகர்களுக்கு நினைவூட்டுவது நலமென்று கருதுகிறேன். இவர்கள் தம்மைத் தாமே பகுத்தறிவாளிகள் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டனர்.

போலிப் புரோகிதர்கள் சாதிப் பிரிவினைகளை உண்டாக்கித் தீண்டாமை நோயை உருவாக்கியதைப்போல இவர்கள் இனப் பிரிவினையைச் செய்ய எத்தனித்தனர். ஆரியம் வேறு— திராவிடம் வேறு என்று ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கலந்திருக்கும் இனத்தைக் களைந்தெடுக்க முயன்றனர் நாங்கள் இந்துக்களல்ல திராவிடர்கள் என்று சந்து பொந்துகளிளெல்லாம் சலசலப்புச் செய்தனர். அம்மா இந்து, அப்பன் இந்து ; பாட்டன் பாட்டி பூட்டன் பூட்டி முதலானவர்களும் இந்து ; அவர்கள் இவர்களுக்குச் சூட்டியுள்ள

பெயர்களும் இந்துக்கள் வணங்கும் கடவுள் பெயர்கள். அப்படி இருந்தும் நாங்கள் இந்துக்கள் அல்லர் என்று நாகூசாமல் கூறிக் கொண்டனர். சிலர் தங்களுக்குத் தம் தாய்தந்தையர் இட்ட பெயர்களையும் மாற்றிக் கொண்டனர். நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகசீலர்களை நையாண்டித்தனமாகப் பரிகாசித் தனர். இந்திய நாட்டைத் துண்டாட வேண்டுமென்று தொண்டைகிழியக் கூக்குரலிட்டனர். தார் சட்டிகளை எடுத்துக்கொண்டு எழுத்துக்களை அழிக்கும் அரும்பணியில்! ஈடுபட்டனர். பேரிலக்கியங்களைத் தீயிட்டுக் கொளுத்தும் பெரும்பணியிலும் தலையிட்டனர். இந்துமதத்தை அழிக்க வேண்டுமென்று இழிவான சொற்களால் பொதுமேடைகளில் வசைமாரி பொழிந்தனர். சமயச் சின்னங்கள் அணிந்துள்ள வர்களைக் கண்டு கிண்டல் செய்தனர். தெய்வச் சிலைகளை யும் உடைக்கவேண்டுமென்று திருவுளம்] பற்றினர். இந்தச் சிலை உடைப்புத் திருப்பணி நாடகத்தைமட்டும் இங்கு சிறிது விரிவாக விளக்கவேண்டியுள்ளது. அந்த சிலை உடைப்புப் பணியில் தலையிட்டவர்கள்தாம் உருவவழிபாட்டை பொம்மை வணக்கம் என்று கூறிய பெரியோர்கள். இவர்களின் நோக்க மெல்லாம் இந்துமதத்தை இல்லாமல் செய்யவேண்டுமென்பதே, அதுவரையிலும் தூங்க மாட்டோம் என்று துள்ளினார்கள். வாங்கினால் திராவிட நாடு இல்லையானால் சுடுகாடு என்று தொடை தட்டினார்கள். இந்துமத நம்பிக்கையற்ற மாமேதை கள் முதலில் பிள்ளையாருடைப்பை ஆரம்பிக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்; பகுத்தறிவுப் பாசறையில் இந்த தீர்மானம் ஏக மனதாக நிறைவேறிற்று.

இந்துக்கள் எந்தப் பணியைத் தொடங்குவதாய் இருந்தாலும் முதலில் பிள்ளையாரை வணங்கியபின் தொடங்குகின்றனர். நாமும் முதலில் பிள்ளையார் சிலைகளைத் தெருக்களில் போட்டு உடைத்துத் தொடங்கவேண்டும். பிறகு மற்றைய ஆலயங்களி லுள்ள சிலைகளை எல்லாம் உடைத்து நடைபாதைகளுக்கு சல்லிக்கற்களாகப் பயன்படுத்த வேண்டுமென்னும் கனவு கண்டனர். இனி இந்துமதம் இந்திய நாட்டில் இருக்கப் போவ தில்லையென எக்காளமிட்டனர். இவர்களுக்குப் பக்கபலமாக பொதுஉடைமை என்று கூக்குரலிட்ட புண்ணிய மூர்த்திகளும் மற்றும் இந்து மதத்தை ஒழித்து தத்தமது மதத்தை இங்கு பரப்ப வேண்டும் என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கும் பிற மத அன்பர்களும் ஆனந்தக் கடலில் மிதந்தனர், பகுத்தறிவுப் பட்டாளம் மகான் கஜினிமாமூதின் திருப்பணியை மேற் கொண்டு சிற்சில இடங்களில் தம்பணியைத் தொடங்கத் தலைப்

பட்டனர். ஆயினும் இவர்களின் துள்ளல்களைப் பிள்ளையார் கிள்ளி எறிந்து விட்டார்.

இவர்கள் உடைப்புப்பணியை தொடங்கியதுதான் தாமதம். அடுத்த நாளே படைப்புப் பணிகள் ஆரம்பமாயின. கேட்பாரற்றுக் கிடந்த ஆலயங்களுக்கெல்லாம் அடித்ததுயோகம். ஒவ்வொரு விநாயகர் கோவிலும் புதுப்பிக்கப் பெற்றன. விசேஷ பூசைகள் ஆரம்பமாயின. பகுத்தறிவு வாதிகளின் கருப்புச் சாயம் வெளுத்துவிட்டது. அதன்பிறகு இவர்களின் மற்றைய திட்டங்களும் நாளுக்குநாள் வெற்றிகரமாகப் பின்னடைந்தன. நாட்டின் விடுதலைக்கு இடையூறாகப் போடப்பட்ட திராவிட நாடென்னும் நாடகமேடை சரிந்துவிட்டது. வந்தவர்கள் வெளியேற ஆரம்பித்தனர். பக்கபலம் பறந்தது. வந்து கொண்டிருந்த வருவாய் குறைந்தது. சிலை உடைப்புப்பணியும் அதன் பிறகு தலையெடுக்க முடியவில்லை.

உருவ வழிபாட்டை பொம்மை வணக்கம் என்று உடைப்புத் தொழிலில் ஈடுபட்ட பகுத்தறிவுப் படை பிறகு பொம்மைகளைப் படைக்கும் தொழிலைத் தொடங்கிவிட்டது. எந்தப் பெரியார் சிலைவணக்கம் மூடக் கொள்கை என்று கூறிச் சிலைகளை உடைக்க ஆணையிட்டாரோ அந்தப் பெரியாருக்கே சிலைகளைப் படைக்க ஆரம்பித்து விட்டனர். தற்போது இவர்களால் படைக்கப்பட்டுள்ள சிலைகள் தமிழ்நாட்டில் பெருந்தெருக்களிலும் நாற்சந்தி முச்சந்தி கூடும் இடங்களிலும், பூங்காக்களிலும் மக்கள் அதிகமாக நடமாடும் தெருவோரங்களிலும் காட்சி அளிக்கின்றன. அப் பெரியாரும் தம்முடைய அருமந்த சிஷ்யர்களுக்குச் சிலைவடிவத்தில் பூரண அநுக்கிரகத்தைச் செய்துகொண்டு வருகிறார். மற்றும் தமது பக்தர்களின் இல்லந்தோறும் புகைப்படங்களின் வடிவமாகவும் தோன்றி புன்னகை பூத்தருளுகிறார்.

தற்போது அவருடைய ஒப்பற்ற சிஷ்யர்களுக்கும் ஆங்காங்கு சிலைகள் நிறுவப்பெற்று வருகின்றன. இந்த சிஷ்யர்களும் அசகாய சூரர்கள். தாம் இதுவரை புரிந்ததும் இன்று புரிந்துக் கொண்டிருப்பதும் தவறு என்று தமது மனமாறத் தெரிந்திருந்தாலும் அவற்றை மற்றவர்களுக்குத் தெரியவிடாமல் கோணல் நியாயங்களைக் கூறுவதில் வில்லாதி வில்லர்கள் என்று கூறத்தகும். இவர்களுடைய பிகுவிலிருந்து தவறிப்போய் உண்மையை ஒப்புக்கொண்டு திருந்தி அப்பாவியாகிவிட்டவர் திரு கவிஞர் கண்ணதாசன் அவர்கள் என்று கூறலாம். முன்னம்

நன்றாக இருந்த பகுத்தறிவுப் படை தற்போது முக்கியமான மூன்று துண்டங்களாகியுள்ளன. இவற்றுள் ஒரு துண்டு தெய்வ நம்பிக்கைக்குத் திரும்பிவிட்ட தென்று கருத இடமுண்டு. மற்ற இரு துண்டுகள் இன்னும் பிகுவை விடாமல் ஊசலாடிக்கொண் டுள்ளன. ஆரியத்தை அடியோடு அகற்றவேண்டுமென்று ஆர்பாட்டங்களைத் தூண்டிய அப்பெரியாரையும் நாம் குறை வாக நினைத்து மதிப்பிடமுடியாது. காந்திஜி மதுவருந்தி மக்கள் கெடக்கூடாதென்று கூறினால், இவர் அதற்கு எதிர் மறையாக நாளெல்லாம் வேர்வை சிந்த உழைத்தவன் மாலையில் மதுவருந்தினால் உழைப்பாளியின் உடம்பு ஆரோக் கியமாக இருக்கும் என்று மறுப்புக்கூறவல்ல மாமேதையாகும்.

சில சமயங்களில் "நான் பச்சைத் தமிழனைத்தான் ஏற்றுக் கொள்வேன்" என்று அறிக்கை விடுவோர்; அதே வாயில் பண்டைய பெருமை வாய்ந்த தமிழ் மொழியைக் காட்டு மிராண்டி மொழி என்று கடிந்து பேசுவார். இவரைத் தவிர தமிழைப்பற்றி வேறு யாரேனும் இவ்வாறு கூறியிருந்தால், இவருடைய சிஷ்யர்கள் ஒவ்வொருவரும் திருவிக்ரம அவதாரம் எடுத்திருப்பார்கள். அத்துடன் நின்றிருக்காது. 'காச் மூச்' சென்று கணைமாரி சொரிந்திருப்பார்கள். ஆனால் அது பெரியார் திருவாயிலிருந்து வந்ததனால் பேச்சு மூச்சில்லாமல் அடங்கிவிட்டனர். காரணம், தமிழ் காண்டுமிராண்டி மொழி எனத் தந்தையின் திருவாய் மலர்ந்தமையால் எல்லா மைந்தனும் வாய் திறக்காமல் மகிழ்ச்சியுற்றனர். அவருடைய மடியில் வளர்ந்த மைந்தர்கள் "தந்தையே! தமிழைப்பற்றித் தாங்கள் இவ்வாறு கூறியது தவறு," என்று கூறியிருந்தால் உடனே உன் நடையைக் கட்டு; என் கட்சிக்கு அறிவாளி தேவை யில்லை என்று அப்போதே துண்டித்துவிட்டிருப்பார். அதை நன்குணர்ந்து பருந்தின்கீழ் நிழலைப்போன்று ஐயா அவர் களுக்கு அறிவை அடகு வைத்துச்சென்ற அருமந்த மைந்தர் களுக்கும் ஆங்காங்கு சிலை எடுத்துச் சிறப்பிப்பது பாராட்டுக் குரிய ஒன்றாகும். ஆனால் போக்குவரத்து ஊர்திகளுக்கு இடைஞ்சலில்லாமல் தெருவெல்லாம் சிலைகளை நிறுத்தினாலும் வரவேற்கவேண்டியதே. காரணம் சிலை உடைப்புப் பணியில் ஈடுபட்டவர்கள் தற்போது சிலை படைப்புப்பணியில் ஈடுபட்டு, பிறந்த நாள், மறைந்த நாள், பதவிகளை ஏற்கும் நாள், நீக்கும் நாள், இடைஞ்சல்கள் எய்தும் நாட்களில் இச்சிலைகளுக்குப் பெரியபெரிய மலர்மாலைகளைச் சாற்றி வணங்கி வழிபடும் காட்சி கண்கொள்ளாக் காட்சி எனலாம். ஆகவே முன்பு

'பொம்மை வணக்கம்' என்று உருவ வழிபாட்டை இகழ்ந்தவர்கள் இன்று தம்மைத் திருத்திக்கொண்டதற்காக நாமும் மகிழ்ச்சி அடைய வேண்டியதே.

ஒரு வேதனை

தமிழ் நாட்டில் மத நம்பிக்கையற்ற பேர்வழிகள் சிலை உடைப்பு என்னும் பிணியை விதைத்த பிறகுதான் பெரும்பாலும் சிலைகள் கடத்தல் பணி நாட்டில் அதிகரித்துள்ளன. இந்த நோயைப் போக்க சிலைகளை எல்லாம் ஒரே இடத்தில் குவித்து வைத்துக் காவலர்கள்மூலம் பாதுகாக்கப்போவதாக வதந்தி. இது வேதனைக்குரிய செயலாகும். புனிதமான தெய்வ நம்பிக்கையைப் புறக்கணித்தவர்கள் புரிந்த புல்லிய பிரசாரங்களால் விளைந்த விளைவுகளிவை. எழுத்துக்கள் ஒலியற்ற கோடுகளென்று படிப்பதை நிறுத்திவிட்டால் எவ்வளவு தீங்கோ அதை விடப் பெருந்தீங்கு ஆலய வழிபாட்டிற்கு இடையூறுகள் நேருவதும், இழிவு செய்யப்படுவதும். இன்று தெய்வங்களாக மதித்து வணங்கி வரும் விக்ரகங்களை ஒரேயிடத்தில் குவித்துவைத்து அந்த இடத்தில் காவலாளிகள் வைக்கப்படுவரானால் அவற்றைக் கண்ணுறுவோர்களுக்கு பக்தியா வரும்? எழுத்தறிவில்லாதவனிடம் ஒரு புத்தகத்தைக் காண்பித்தால் அவனுக்கு அப்புத்தகத்திலுள்ள எழுத்துக்கள் அனைத்தும் வெறும் கீறல்களாகத் தோன்றும். அதைப்போல சிலைகளை அடைக்கப்பட்டுள்ள இடத்தையும் அவற்றுக்குக் காவலாளிகளையும் கண்டால் பொம்மைகளாகத்தான் தோன்றும். அவை தெய்வத் திருவுருவங்களாகத் தோன்றாது. இத் தீமைகளுக்கு மூலகாரணம் எந்த புண்ணியவான்கள் என்பதைச் சிந்திக்க வாசகர்களுக்கே விட்டு விடுகிறேன்.

சில மதவாதிகள்

கடவுள் உண்டு என்னும் நம்பிக்கை கொண்டுள்ள சில மதவாதிகள் இழிவான சொற்களால் உருவ வழிபாட்டினைத் தாக்கிப் பிரச்சாரம் செய்கின்றனர், உருவ வழிபாடு ஆண்டவனுக்குக் கோபத்தை விளைவிக்கின்றதாம். ஆகவே விக்ரக வழிபாட்டினர் நரகத்துக்குத்தான் போவார்களாம். ஆகவே விக்ரக வழிபாட்டினர் பாவிகள். இவர்களை விட்டு விலகி ஓடுங்கள் என்னும் அளவுக்குச் சிலர் தூற்றுகின்றனர்.

இவர்கள் விக்ரங்களை நிறுவாமல் இறைவனை வழிபடுவதைப்பற்றி நமக்கு எந்தவித்மான எதிர்ப்பும் கிடையாது. இறைவனை உருவமாகவும் அருவமாகவும் உருவருவமாகவும்

பாவித்து வணங்கி வழிபடலாம் என்பது இந்து தருமத்தின் அடிப்படைக் கொள்கையாகும். ஆகவே எந்த மதத்தினர் இறைவனை எந்த வகையாக பாவித்து வணங்கினாலும் இறைவன் ஏற்றுக்கொள்வார் என்பது இந்துக்களுக்கு—குறிப்பாக உருவ வழிபாட்டினருக்கு—நம்பிக்கை உண்டு. இறைவனை இப்படித்தான் வணங்கவேண்டுமென்னும் கட்டாயம் கிடையாது. அவை அவரவர்களுடைய மனப் பக்குவத்தைப் பொருத்ததாகும். அவற்றை நாம் குறைகூற முடியாது; குறை கூறவும் கூடாது. இது ஒவ்வொரு மதத்தினரும் உணர்ந்து கடைபிடிக்கவேண்டிய முறையாகும். மனிதனுக்கு முக்கியமாக இருக்கவேண்டியது ஆண்டவனிடத்தில் பக்தி, ஆருயிர்களிடத்தில் இரக்கம்—இவ்விரண்டும் இருந்தால் மனிதனாகப் பிறந்ததின் பெரும் பயனை எய்த முடியும். பக்தியிலும் பல நிலைகளுண்டு; அந்தந்த நிலைகளுக்கு ஏற்றவாறு அந்தந்த பக்தர்கள் பயன் பெறுவர். பரம்பொருளானது மண், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் என்னும் எல்லா இடங்களிலும நிறைந்துள்ளதாக தெய்வ நம்பிக்கையுள்ள மதங்கள் அனைத்தும் ஒப்புக்கொள்கின்றன. அத்தகைய பூரணப் பொருளானது கல்லிலும் மண்ணிலும்கூட இருக்குமென்பதை மறுக்கமுடியாது. அப் பரம்பொருள் இல்லாத இடத்தில் வணங்கினால் ஒருகால் அது அப் பரமனுக்குச் செல்லாமல் போகக்கூடுமென்று சொல்லலாம். கடவுள் இல்லாத இடம் இருக்குமாயின் கடவுளை அகண்ட பரிபூரணன் என்று சொல்லமுடியாது. கடவுள் கண்டமாகிவிடுவார். கடவுள் கண்டமல்ல அகண்டம். அந்தப் பரமன், உருவ வழிபாட்டினர்மீது சினங் கொள்ளக் காரணமே இல்லை.

இறைவனுக்கு உருவங்களின்பேரில் வெறுப்பு இருக்குமானால், பேருருவங்களான பல கோடி அண்டங்களைப் படைத்திருக்கமாட்டார். மற்றும் பலப்பல உருவங்களோடும் அமைந்த உயிரினங்களையும் உண்டாக்கி இருக்கமாட்டார். உருவ வழிபாட்டை இறைவன் வெறுக்கிறார் என்கின்றவர்களுக்கும் உடம்பாகிய உருவத்தை அளித்துள்ளார். இவர்களின் உடம்பாகிய உருவத்தை கண்டு யாரேனும் வணங்கும்போது இவர்கள் நம்மைத்தான் வணங்குகின்றனர் என உணர்ந்து மகிழ்ச்சியடைகின்றனர். இவ்வாறிருக்கையில் இவர்களைவிட இறைவன் முட்டாளாக இருந்தால்தான் உருவ வழிபாடு செய்பவர்களின் பேரில் கோபித்துக்கொள்வார். இறைவன் முட்டாளல்ல. அவன் கருணாகரன். அவனுக்கு நன்றாகத் தெரியும் இவர்கள் நம்மைத்தான் வணங்குகின்றனரென்று.

நம் தாய், தந்தை, ஆசிரியர்கள், மற்றும் பெரியோர்கள் அனைவரும் உருவத்தோடுதான் காட்சி அளிக்கின்றனர். நாமும் அப்பெரியோர்களின் உருவங்களைக் கண்டுதான் அவர்களுக்கு வணக்கம் செலுத்துகிறோம். அவர்களும் நமது உருவத்தைக் கண்டுதான் ஆசிபுரிகின்றனர். இந்தச் செயல்கள் உருவ வணக்கமல்ல என்று கூறமுடிமா? நாமும் பல நண்பர்களோடு உரையாடுகிறோம். நமக்கு அந்த நண்பர்களுடைய உடம்பு தெரிகிறதா? அல்லது அவர்களுடைய உயிர் தெரிகிறதா? எதைப் பார்த்து நண்பர்களோடு பேசுகிறோம்? அன்பின் பெருக்கால் ஒருவரை ஒருவர் தழுவிக்கொள்வது உடம்பையா? உயிரையா? இப்படி நமது வாழ்க்கையே உருவத்தோடு கலந்திருக்கும்போது ஆண்டவன் விஷயத்தில்மட்டும் உருவழிபாடு கூடாதென்பதும், அவர் உருவழிபாட்டினர்மீது கோபித்துக் கொள்வாரென்பதும் பிதற்றல்தானே? படிப்புக்கு கோடுகளாகிய எழுத்துக்கள் எப்படி உதவியாக இருக்கின்றனவோ அதேபோல, பக்திக்கு உருவ வழிபாடும் உதவியாக இருக்கிறது. எழுத்துக்கள் வெறும் கீறல்களான கோடுகள்தாம்; அவற்றின் மூலமாகக் கல்வி வளர்கிறது. விக்ரகங்கள் பொம்மைகள்தாம்; அவற்றின் வாயிலாக பக்தி வளர்கிறது.

ஆன்றோர்கள் ஆண்டவனை வணங்கி வழிபட நமக்கு அறிவித்திருக்கின்ற வழிகள் இரண்டு. ஒன்று திருவுருவங்கள்; மற்றொன்று திரு நாமங்கள். அந்த பகவானுக்கு பல்லாயிரக் கணக்கானப் பெயர்களைச் சூட்டி வணங்கலாம். பலவாறான உருவங்களை அமைத்தும் வணங்கலாம். பகவானுக்கு இதுதான் உண்மையான பெயரென்றும் இதுதான் அவனுடைய உருவமென்றும் நாம் அறுதியிட்டுச் சொல்லமுடியாது.

"ஒருநாமம் ஓருருவம் ஒன்று மில்லாப் புண்ணி
 யற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேனம்
 கொட்டாமோ"

என்று கூறியுள்ளார் மணிவாசகப் பெருமானார். கல்வியறிவைப் பெறுவதற்கு எழுத்துக்களைப் பயில்வது முதற்படி. அதைப் போலவே தெய்வ பக்திக்கும் உருவ வழிபாடு முதற்படியாகும். எழுத்துக்களைப் புறக்கணிப்பதற்குச் சமமாகும் உருவ வழிபாட்டைப் புறக்கணிப்பது 7000 ஆண்டுகளின் வரலாற்றையுடைய எகிப்து நாட்டிலும் உருவவழிபாட்டின் முறைகள் இருந்துள்ளன. (கலைக் களஞ்சியம், தொகுதி 2; பக்கம் 48) கிறிஸ்துவ மதத்துக்கும் இஸ்லாம் மதத்துக்கும் தாய் மதமான யூத மதத்திலும்

ஆலய வழிபாடுகள் இருந்திருக்கின்றன. மக்கா என்னும் இடத்தில் இருக்கும் கஃபா என்னும் ஆலயத்தில் 360 விக்ரகங்கள் இருந்தனவாம். அவற்றை முகமது நபிகளார் அப்புறப்படுத்தி னாராம். மற்றும் அரப்பா-முகஞ்சதாரோ என்னும் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் கண்டுபிடித்த மிகப் பழைய நாகரிக மக்களும் உருவ வழிபாட்டை உடையவர்களாக இருந்தனரென்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. ஆகவே பண்டைய காலத்துப் பெரியோர்கள் வகுத்த வழிகளிவை. இதில் அவரவர்களுக்கு எந்த வழி ஏற்றதாகத் தெரிகிறதோ அதனை அவர்கள் பின்பற்ற லாம். ஆனால் பிறருடைய கொள்கைகளை இழிவாகக் கூறுவது முறையல்ல.

உருவங்களையும், பெயர்களையும் இறைவனுக்கு நமது முன்னோர்கள் கற்பித்தவைகளே. கடவுளுக்கு மட்டுமல்ல நமது பெற்றோர்கள் நமக்குச் சூட்டியுள்ள பெயர்கள்கூடக் கற்பனைப் பெயர்கள்தாம். இன்று எத்தனையோ ராமசாமி, எத்தனையோ இஸ்மாயில்கள், எத்தனையோ அந்தோணிகள். இவைகள் யாருடைய பெயர்கள் ? இப்பெயர்கள் யாருக்குச் சொந்தம் ? இன்னும் இதே பெயர்களை எத்தனை பேருக்கு இடப்போகிறார்களோ அது நமக்குத் தெரியாது. ஆயினும் உன் பெயர் என்ன என்று என்னைக் கேட்டால் நான் முனிசாமி என்கிறேன். என்னுடைய பெயரை உடையவர்கள் முன்னும் இருந்தனர். எண்ணற்றவர்கள் இன்றும் இருக்கின்றனர். நமது பெற்றோர்கள் நமக்கு இட்டுள்ள பெயரை நாம் ஏற்றுக் கொள்வதைப்போல ஆண்டவனும் அடியார்கள் வைத்த பெயரை ஏற்றுக்கொள்வான்.

சில மதத்தினர் இறைவனுக்குப் பெயரைமட்டும் சூட்டி அப் பெயரால் தியானிக்கின்றனர். சில மதத்தினர் பெயர் களோடு உருவத்தையும் அமைத்து வணங்கி வழிபடுகின்றனர். இவை அவரவர்களின் மனப்பாங்கைப் பொருத்தாகும்.

“ அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறவலர்
அவரவர் விதிவழி அடையநின் றாரே.

(நம்மாழ்வார் திருவாய்மொழி)

நாம் பிற மதத்தினர் வழிபாட்டு முறைகளை இழிவாகப் பேசி தூஷிப்பதோ, நம்முடைய கொள்கையைப் பிறர் தூஷிப் பதோ அடாத செயல்களாகும்.

மனிதத் தன்மைக்கு மாறுபட்ட கருத்து

"பாவம், புண்ணியம், மோட்சம், நரகம், மறுபிறப்பு என்பவை நேரே நிரூபித்துக்காட்டமுடியாத மயக்க உரைகள். முரடர்களை திசைமாற்ற பலவீனர்கள் இவ்வாறு எழுதி வைத்தனர். இவற்றை உண்மையென நம்புவதும் மடமையாகும்."

சிலர் மனிதப் பிறப்பைப் பெற்றிருந்தும் விலங்கின வாழ்க்கையை விரும்புகின்றனர். காரணம் மதங்கள் மக்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. அக் கட்டுப்பாடுகளை மீறுவது பாவமென்றும், ஏற்று நடப்பது புண்ணியமென்றும், பாவம் செய்பவர்கள் துன்பப்படுவார்கள் என்றும், புண்ணியம் செய்பவர்கள் பேரின்பப் பெருநிலையைப் பெறுவர்கள் என்றும், மதங்கள் மக்களுக்கு எச்சரிக்கை செய்கின்றன. அவரவர்கள் செய்த வினைக்கு ஏற்ப பிறவிகளும் சம்பவிக்குமென்று சில மதங்கள் நினைவுறுத்துகின்றன.

விலங்கினங்களுக்குப் பாவம், புண்ணியம், மோட்சம், நரகம், மறுபிறப்பு என்னும் எண்ணங்கள் கிடையாது. ஆகவே அவைகள் முறை-திரையற்று நடந்துகொள்ளும். அவைகள் தாயோடும், தமக்கையோடும், தங்கையோடும் பொலியும். அவற்றுக்குக் காம இச்சை ஏற்பட்டால் கட்டுப்பாடின்றி புணர்ந்து இன்புறும் போக்கை அவற்றினிடம் காணலாம். இதே போன்ற காமவெறியர்கள் மனித வடிவத்தில் தோன்றினாலும் மிருகத் தன்மையை உடையவர்களாக இருப்பார்கள். அவர்களிடத்தில் பாவம், புண்ணியம், மோட்சம், நரகம் என்னும் சொற்கள் நாராசத்தை (இருப்புச்சலாகை) காய்ச்சிக் காதில் விடுவதுபோல் சுடும். காரணம், இத்தகைய கட்டுப்பாட்டைக் கூறும் சொற்கள் இவர்களுடைய இச்சைக்கு முட்டுக்கட்டைகள் போல் தோன்றுகின்றன. ஆகவே இத்தகைய சொற்களை அவர்களால் ஏற்றுக்கொண்டு ஜீரணிக்க முடிவதில்லை. ஒருவன் 60 வயதைத் தாண்டிவிட்டாலும் அவன் 20 வயது கன்னியின் பேரில் இச்சை வைக்கக்கூடியவனாக இருந்தால் அவனிடத்தில் பாவ புண்ணிய மோட்ச நரகங்களைச் சொல்லப் போனால் அவை செல்லுபடியாகாது. அவற்றை இவர்கள் கண்ணெதிரில் கொண்டு வந்து நிறுத்தவேண்டும். அப்போது தான் அவைகள் உள்ளதாக இவர்கள் நம்புவார்கள்.

முரடர்கள் என்று கூறக்கூடியவர்கள் யாரென்றால் கட்டுப்பாடின்றி நடக்கக்கூடியவர்கள்தாம்; அந்த முரடர்கள்தான்

பாவபுண்ணிய மோட்ச நரகங்களைக் குழப்ப உரைகளென்று கருதுவார்கள். நீதிமான்களின் உள்ளத்தில் இத்தகைய நினைப்பே வரமுடியாது. நன்மை தீமைகளை நினைத்து அவற்றுக்கு ஏற்ப நன்னெறிகளைக் கடைபிடிப்பது மனிதப் பண்பு. இவற்றைப் புறக்கணிப்பது மிருகப்பண்பு. மனிதப் பண்பு இருக்கக்கூடியவர்களின் உள்ளத்தில் மக்களுக்கு நன்மையை போதித்த நல்லோர்களைப் பலவீனர்கள் என்று எண்ணமுடியாது.

பாவம் என்பது பிற உயிர்களுக்குத் துன்பம் இழைப்பது. புண்ணியம் என்பது எல்லா உயிரினங்களுக்கும் நன்மையை விளைவிப்பது! மோட்சம் என்பது பற்றற்ற பேரின்ப நிலை. நரகம் என்பது பற்றின் காரணமாகத் துன்புறுதல். மறுபிறப்பு என்பது,

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

(திருக்குறள்)

என்றார் தெய்வப் புலவர். தூக்கமும் விழிப்பும் நமக்கு உண்டாவதைப்போலவே இறப்பும் பிறப்பும் தோன்றுகின்றன என்று உதாரணத்தோடு விளக்கியுள்ளார். மத நம்பிக்கையே அற்றவர்களுக்கு இவற்றை விளக்குவதென்றால் எளிய காரியமல்ல.

சில உண்மைகளை நேரடியாக விளக்கமுடியும். சில உண்மைகளை நேரடியாக விளக்கமுடியாது. அவற்றை யூகையினால்தான் விளக்கமுடியும். உதாரணமாக, விதையின் உள்ளே மரம் இருக்கிறது. இல்லை என்று வாதிக்கமுடியாது. காரணம் விதையினால்தான் மரம் உண்டாகிறது. ஆனால் விதையைக் கொண்டுவந்து அதை நசுக்கிப் பார்த்தால் அதனுள் அடங்கி இருக்கும் மரம் தோன்றுமா என்றால் தோன்றாது. மரம் தோன்றாமையால் இல்லை எனவும் முடியாது. விதைக்குள் இதோ இருக்கிறது பார் மரம் என்று பிரத்தியட்சமாக நிரூபிக்கவும் முடியாது. விதையின் உருமாறியபின் அதுவே மரமாகின்றது. விதை மாறியபின் மரம் தோன்றுவதைப் போல இவ்வுடம்பு மாறியபின் பாவ, புண்ணிய, மோட்ச நரகங்களின் உண்மை விளங்கும்; அவற்றை அநுமானப் பிரமாணத்தால் உணரவேண்டும். பாலிலே நெய் இருக்கிறது என்றவுடன் கையைவிட்டு அதில் நெய்யை எடுக்கமுடியாது.

பாலைக் காய்ச்சிப் பிறகு தயிராக்கிக் கடைந்து வெண்ணெய் எடுத்து அதை உருக்கியபின்புதான் நெய் தோன்றும். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் நன்மை, தீமை, பாவம், புண்ணியம் என்பனவற்றை மதித்து நடப்பது மனிதப் பண்பு. இவற்றை அசட்டைத்தனமாக அவமதிப்பது மிருகப்பண்பாகும்.

மறுபிறவி

ஆன்மாக்களுக்கு மறுபிறவி உண்டா இல்லையா என்னும் விஷயம் சிந்திக்கவேண்டிய ஒன்றாகும். சில அறிஞர்களுக்கும் கூட மறுபிறவி என்னும் விஷயத்தில் ஐயப்பாடுகள் உண்டு. கடவுள் நம்பிக்கையுள்ள மதத்தினர்கள்கூட மறுபிறவி கிடையாது எனக் கருதுகின்றனர். ஆகவே நாமும் நன்கு சிந்தித்தபிறகு ஒரு முடிவுக்கு வருவது நலமாகும்.

நாம் இந்த உலகத்தில் மனிதனாகப் பிறக்கவேண்டும் என்று விரும்பிப் பிறக்கவில்லை. நாம் இம்மண்ணுலகத்தில் பிறக்கப் போவது நமக்கு பிறப்பதற்கு முன்பே தெரிந்திருந்தால் இன்னும் மிக்க செல்வாக்கு நிறைந்த குடும்பத்தைப் பார்த்துப் பிறந்திருப்போம். நம் உடம்பிற்கு இவ்வுறுப்புக்கள் எப்படி உண்டாயின ? இவற்றை உண்டாக்கியவர் யார் என்பது தெரிந்திருந்தால் இன்னும் மிக்க அழகான கவற்சியுள்ள உருவத்தைப் பெற்றுக் கொண்டு வந்திருப்போம். இந்த ஆக்கையில் கர்மேந்திரிய, ஞானேந்திரியங்களென்னும் தொழிற் கருவிகளும், உணர் கருவிகளும் எப்படி—யாரால் உருவாயின என்பது நமது பெற்றோர்களுக்கே தெரியாது. ஆணும் பெண்ணும் ஒருவரோடு ஒருவர் கலந்து இன்புற்றனர் ; அத்துடன் முடிந்தது அவர்களின் பணி. அதற்குப்பின் கரு உருவானது முதல் அவ்வுரு வெளிப்படுகிற வரையிலும் ஏதோ ஒரு இயக்க சக்தி பின்னணியிலிருந்து இப்பிண்டத்தை இயக்கி வெளிப் படுத்துகிறது. ஆகவே பிறப்பது நம் வசத்திலில்லை. மற்றும் இறப்பதும் நம் கையிலில்லை. நமக்கென்னமோ இறக்கக் கூடாதென்னும் ஆசை உண்டு. அதற்காகப் பலவகையான மருந்துகளையும் செயல் முறைகளையும் பின்பற்றியும் இன்னும் வெற்றிகாண முடியவில்லை. இவற்றை நன்கு சிந்தித்துப் பார்த்தால் பிறப்பதும் இறப்பதும் நம் வசத்திலில்லை. எந்த பரம்பொருள் நம்மைப் பிறக்கவும் இறக்கவும் செய்ய வல்லதோ அது மறுபடியும் நம்மை இறந்தபிறகு பிறக்கவைக்குமாயின் அதை நம்மால் தவிர்க்க முடியாது. அது விரும்பினால் நமக்கு எண்ணற்ற பிறவிகளைக் கொடுக்கலாம் ; ஆகவே மறுபிறவி கிடையாதென்று நம்மால் கூறமுடியாது.

சில உயிர்கள் நம் கண்முன்பே மறுபிறப்பை அடைவதையும் காணலாம். உதாரணமாக, பட்டு நூலை உண்டாக்கும் புழுக்கள் முதலில் சின்னஞ்சிறு முட்டைகளாக இருக்கின்றன. பிறகு அவை நீண்ட புழுக்களாகிவிடுகின்றன. அதே புழுக்கள் வண்டுகளாகவும் மாறுகின்றன. முட்டை, புழு, வண்டு என்னும் முப்பிறவியை ஒரே உயிர் எடுப்பதையும் பார்க்கிறோம். அந்த உயிர்களை பல பிறவிகளாக மாற்றுகின்ற சக்திக்கு நம்மையும் பல பிறவிகளுக்கு மாற்றமுடியும்.

கடவுள் நம்பிக்கை உள்ள சில மதத்தினர்களும் மறுபிறவி கிடையாது என்று கூறுகின்றனர். தீயவர்களை இறைவன் நரகத்தில் தள்ளுவார் என்றும், நல்லவர்களை சொர்க்கத்தில் வைப்பாரென்றும் கூறுகின்றனர். அப்படியாயின் நரகத்தில் தள்ளுகின்ற உடம்பு எது ? சொர்க்கத்தில் வைக்கின்ற உடம்பு எது என்னும் கேள்வி எழுகின்றது. சொர்க்கத்தில் வைக்கின்ற உடம்பு நரை, திரை, மூப்பு, சாக்காடு அற்ற உடம்பாம். நரகத்தில் இம்சிக்கும் உடம்பு விகார உடம்பென்று கூறுகின்றனர். அவ்வாறாயின் இவ்வுடம்பிலிருந்து உயிர்பிரிந்த பின்பு நரகத்துக்கும் சொர்கத்துக்கும் ஏற்ற உடம்புகளை இறைவன் படைக்கிறார் என்னும் பொருள்படுகிறது அவ்வுடம்பு. உடம்பு தற்போதுள்ள உடம்பல்ல. இது புதைக்கப்பட்டு மண்ணாய் விடுவதனால், மோக்ஷ நரகங்களுக்குச் செல்லும் உடம்புகள் வேறானவையே. இறைவன் இதே உடம்புகளை உலகத்தின் இறுதி நாளில் எழுப்பி மோட்ச நரகங்களுக்கு அனுப்புவாராயின் அதிலும் சில ஐயப்பாடுகள் உள்ளன. ஒரு சில பாவிகள் இளமையில் அழகாக இருக்கும்போது இறந்திருப்பார்கள். ஒரு சில நல்லோர்கள் நடக்கவும் முடியாத முதுமையில் மாண்டிருப்பார்கள். இறைவன் இவர்களை ஒட்டுமொத்தமாக எழுப்பி அனுப்பும்போது அந்த விருத்தாப்பியரை அதே உருவத்தில் அனுப்புவது பொருந்துமா என்னும் சங்கை எழத்தான் செய்கிறது. இறுதி நாளில் இறைவன் ஆன்மாக்களை எப்படி எழுப்பினாலும் அது மறுபிறவியே ஆகும்.

இறைவன் அவ்வப்போது மக்களுக்கு நல்லறிவு போதிக்க தன்னுடைய தூதர்களை மண்ணுலகத்தில் பிறக்க வைக்கிறார் என்றும் சிலர் கூறுகின்றனர், தன்னுடைய அன்புக்குரிய தூதர்களுக்கே மறுபிறவி உண்டென்றால் நமக்கு மட்டும் மறுபிறவி இல்லை என்பது பொருந்தாது. இவற்றை எல்லாம் சிந்திக்கும் போது ஆன்மாக்களுக்கு மறுபிறவி உண்டு என்பதுதான் பொருந்தும். இப்பிறவிகள் அவரவர்கள் செய்யும் வினைக்கு

ஈடாக அளிக்கப்பட்டுள்ளதனால்தான் பிறவிகளில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன.

ஐம்புல அறிவுக்கு அப்பாற்பட்ட பொருள்கள்

"ஐம்புல அறிவுக்கு அப்பாற்பட்டவன் ஆண்டவன் என்று சிலர் கூறுகின்றனர். ஐம்புல அறிவுக்கு எட்டாத பொருளே கிடையாது. ஆகவே கடவுள் இல்லவே இல்லை. கடவுள் இருப்பதாகக் கற்பித்தவன் முட்டாள். உண்டு என்று பிரசாரம் செய்பவன் அயோக்கியன் ; வணங்குபவன் காட்டுமிராண்டி', இவ்வாறு ஈ. வெ. இராமசாமி நாய்க்கர் என்னும் பெரியார் கடவுள் உண்டு என்னும் நம்பிக்கையுள்ள மதத்தினர்களைத் தரங்கெட்ட வாக்கியங்களால் தாறுமாறாகத் தாக்கிக் கூறியுள்ளார்.

உலகப் பேரறிஞர்கள் போற்றத்தக்க திருக்குறளாசிரியர் திருவள்ளுவனார் கடவுள் உண்டு என்பதனை முதற்குறளிலேயே உதாரணத்தோடு விளக்கியுள்ளார்.

" அகரமுதல எழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

எழுத்துக்களுக்கு அகர ஒலியான எழுத்து முதலாக இருப்பதைப் போல உலகங்களுக்கெல்லாம் பகவான் முதலாக இருக்கிறான் என்று கூறியுள்ளார். இந்தத் திருவள்ளுவப் பெரியார் இறைவன் இவ்வாறு இருக்கிறான் என்று விளக்கி யுள்ளார். மற்றும் இதே அதிகாரத்தில் இறைவன் என்னும் சொல்லை இரண்டு குறளிலும், பிறகு வாலறிவன், மலர் மிசை ஏகினான் வேண்டுதல் வேண்டாமை இலான், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத் தான் என்னும் சொற்களைப் பயன்படுத்தி யுள்ளார். குறிப்பறிதல் என்னும் அதிகாரத்தில்,

" ஐயப்படாது அகத்தது உணர் வானை
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்"

என்று தெய்வம் என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். மற்றும் இரவச்சம் என்னும் அதிகாரத்தில் உலகியற்றியான் (உலகைப் படைத்தவன்) என்றும், புணர்ச்சி மகிழ்தல் என்னும் அதிகாரத்தில் தாமரைக் கண்ணான் என்று கூறியுள்ளார். பால் குறிப்பிடாமல் தெய்வம் என்னும் சொல்லை ஒரு குறளில் பயன் படுத்தியுள்ளார். மற்றைய குறள்களில் இறைவனை ஆண்பால் ஒருமையிலேயே கூறியுள்ளார்.

திருவள்ளுவனாருக்கும் முற்பட்ட இலக்கண நூலாசிரியரான ஒல்காப் புகழ் தொல்காப்பியனார்

"சேயோன் மேய வரை உலகமும்
மாயோன் மேய காடுறை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"

என்று நான்கு நிலத்துக்குரிய அதிதேவதைகளின் பெயர்களையும், மற்றும்

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."

கொடிநிலை—சூரியன்
கந்தழி—நெருப்பு
வள்ளி—சந்திரன்
} இவை மறைமொழிகள்.

இம் மூன்று குற்றமற்ற ஒளிமயமான சுடர்களையும் கடவுளுக்குச் சமமாக பாவித்து வணங்குவது மரபு என்னும் கருத்தைக் "கண்ணிய வருமே" என்னும் சொல்லால் விளக்கியுள்ளார். கடவுள் என்னும் சொல்லையும் வெளிப்படையாகப் பயன் படுத்தியுள்ளார். இந்த இரு மாமேதைகளும் பண்டைய தமிழ் நாட்டின் பண்பாடுகளைச் சொல்லோவியங்களால் படம் பிடித்துக் காட்டும் பாங்காளர்கள்; திருவள்ளுவப் பெருமானாரை உலகப் பேரறிஞர்கள் நீதியின் நிலையம் என்று கருதுகின்றனர். தொல்காப்பியனார் எழுதியுள்ள இலக்கணத்தைப் புரிந்து கொண்டவன் புலவனாகிறான். படித்தவன் பாவலனும் நாவலனுமாகிறான். இத்தகைய பண்டித சிகாமணிகளை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கோடிக்கணக்கான புலவர்களை உருவாக்கிய பெருமானார் ஒல்காப் புகழ் தொல்காப்பியனார் இவர் கல்வியின் கடல். யான் கூறுவது வெற்றுரையல்ல கற்றறிந்த நல்லோர்கள் ஒப்பத்தகுந்த உண்மையாகும். தொல்காப்பியத்தைத் தொடாதவன் தமிழில் புலவனாக முடியாது. திருக்குறளைத் தெரியாதவன் தமிழனல்லன் என்னும் தன்மை வாய்ந்தவை. இவற்றை உருவாக்கிய ஈடு இணையற்ற பெரியோர்கள் நம்பியது தெய்வ நம்பிக்கை.

இன்று தமிழ்நாட்டில் பெரும்பாலும் படித்த மக்கள் திருவள்ளுவனாருக்கும், தொல்காப்பியனாருக்கும் அளிக்கும் பெருமை என்ன? இத்தகைய பெரியோர்களுக்கு அயோக்கியர்கள் என்னும் பட்டமும், காட்டுமிராண்டிகள் என்னும் பட்டமும் வழங்கியருளிய ஈ. வெ. ரா அவர்களுக்கு அளிக்கின்ற மதிப்பு என்ன என்பதை ஆராயத் தமிழ்நாட்டில் படித்த பட்டதாரிகளுக்கே விட்டுவிட்டு விஷயத்துக்கு வருகிறேன். இப்பெரியாரை சிலர் தமிழ்நாட்டுக்கே தந்தை என்று தழுவிக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது! இது அவரவர்களின் தகுதியைப் பொருத்ததாகும்.

ஐம்புல உணர்வுக்கும் எட்டாப் பொருள்கள் உண்டு :

ஐம்புலன்கள் என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் மூலம் உணரும் உணர்ச்சிகளாகும். உடம்பு வெப்ப, தட்ப, நோய் என்பவற்றை உணரும். வாய் சுவையையும், கண் உருவத்தையும், காது ஒலியையும், மூக்கு மணத்தையும் உணரும். ஆனால் இக் கருவிகளால் அறிவை அறியமுடியாது. அறிவு என்பது இவ்வைந்தையும் பார்ப்பது. ஐம்பொறிகள் ஒன்றின் தொழிலை மற்றொன்று செய்யமுடியாது. உதாரணமாக, கண்களால் பார்க்கத்தான் முடியும், கேட்க முடியாது. காதுகளால் கேட்கத்தான் முடியும்; மணத்தை நுகரமுடியாது. இதைப் போலவே ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு தொழிலைத்தான் செய்யும். அடுத்தவற்றை அறியும் ஆற்றல் புலன்களுக்குக் கிடையாது.

"வாசம் மூக்கறியு மன்றி
வாய், செவி விழிமெய் தேரா;
பேசவாய் அறியு மன்றி
பின்னையோர் புலன் தேராது;
நேசமார் தொண்டர் ஞான
நேத்திரம் கொண்டு காணும்
ஈசனை முகத்தின் கண்ணால்
இகத்தில் யார் காணவல்லார்?"

என்கிறார் மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள். ஆகவே இவ் ஐம்புலன்களால் அறிவை அறிய முடியாது.

இன்று நாட்டில் கணக்கில்லாமல் கட்சிகள் உருவாகிக் கொண்டு வருகின்றன. இந்தக் கட்சித் தலைவர்கள் ஒருவரை ஒருவர் குறை கூறுவதில் சளைப்பதில்லை. ஒவ்வொருவரும் தம்மைமட்டும் சிறந்த அறிவாளிகளாக அரற்றிக் கொள்

கின்றனர். மற்றவர்களை அறிவீனர்களாகக் கருதி அவர்களை சாடுகின்றனர். இப்படிப்பட்டவர்களின் அறிவு ஐம்புலன் களுக்குத் தோன்றுவதாக இருந்தால் இன்னாருக்கு இவ்வளவு அறிவு இருக்கிறதென்று பண்டங்களைத் துலாக்கோலில் வைத்து நிறுத்தித் தெரிந்துகொள்வதைப்போலத் தெரிந்துகொள்ள லாமே. ஏன் முடியவில்லை? அறிவை ஐம்புலன்களால் காண முடியாது; அதை எடையில் வைக்கவும் முடியாது.

சில காமுகர்கள் அப்பாவிப் பெண்களிடம் ஆசை வார்த்தைகளை அள்ளிவீசி, 'உன்னை நான் திருமணம் செய்து கொள்கிறேன். உனக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து தருகிறேன். கண்டிப்பாகக் கைவிட்டமாட்டேன்' என்று பல உறுதி மொழிகளை உதிர்த்து அந்த அபலைப் பெண்களின் வாழ்க்கையை பாழாக்கிவிட்ட கதைகள் பலவுண்டு.

சில காரிகையர்கள் கணவனிடத்தில் மிகவும் உத்தமியைப் போல நடித்துக்கொண்டு கள்ளக் காதல்கள் புரிந்த கதைகளும் உண்டு.

சிலர் மோசக்காரர்களின் சொல்லை நம்பி உண்மையான நண்பனைப் பகைத்துக் கொண்டவர்களும் உண்டு.

இன்று பதவிமோகம் பிடித்த ஓட்டுப்பிச்சைக்காரர்கள் தான் நிற்கும் தொகுதியிலுள்ள மக்களிடத்தில் "நீங்கள் உங்கள் வாக்குரிமைகளை எனக்குத் தந்து என்னைத் தேர்ந்தெடுப்பீர் களானால் இந்த வட்டாரத்தில் உள்ள மக்களுக்கு நற்பணிகள் பலவற்றைச் செய்கிறேன்" என்று புளுகிவிட்டு பதவியைப் பிடித்த பிறகு அந்தத் திசையையே திரும்பிப் பார்க்காத அரசியல் சூதாடிகளும் நாட்டில் மலிந்துள்ளனர். இவர்களுடைய கள்ள உள்ளங்கள் புலன்களுக்குத் தோன்றுவதாக இருந்தால் இவர்கள் மக்களை ஏமாற்றமுடியுமா? ஒருக்காலும் ஏமாற்றமுடியாது. ஆகவே உள்ளத்தையும், அறிவையும் ஐம்புலன்களால் அறிய முடியாது. அறிவுக்கு ஐம்புலன்கள் தோன்றும். ஆனால் ஐம்புலன்களுக்கு அறிவு தோன்றாது. அறிவை அறிவைக் கொண்டே ஆராய வேண்டும். வேறு எந்தப் புலனும் அறிவை இப்படித்தான் இருக்கிறதென்று நிச்சயிக்கமுடியாது. ஆகவே ஐம்புலன்களுக்கு எட்டாப் பொருளே இல்லை என்பது ஆராய்ச்சியற்ற புல்லிய சொல்லாகும்.

ஒவ்வோர் உடம்பிலும் ஜீவிக்கின்ற பொருளை ஜீவாத்மா என்கிறோம். இதனை உயிர் என்றும் ஆன்மா என்றும் ஆவி என்றும் கூறுவதுண்டு. ஆகவே ஆன்மா என்னக்கூடிய நாம்

இந்த உடம்பு முழுவதுமாக இருக்கிறோமா? நாம் உடம்புதானா? அல்லது உடம்பைவிட வேறா? உடம்பே நாமாக இருந்தால் பிணம் என்பது எதனை? உயிர் என்பது எதனை? உடம்பை விட்டு உயிர் ஏன் நீங்கியது? நீங்கிய உயிர் எங்கு போயிற்று? அது சென்ற இடத்தை இந்த ஐம்புலனால் கூறமுடியுமா? அது புரியாமைக்குக் காரணம் என்ன? இதுபோன்ற கேள்விகள் பல உள்ளன.

நம்முடைய ஆக்கையில் ஆடுகின்ற மூச்சு ஏன் உள்ளும் புறமுமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இது ஏன் நமக்குக் கட்டுப் படுவதில்லை? நாம் உறங்கினாலும் மூச்சு உறங்காமல் ஆடிக் கொண்டிருப்பதேன்? இதனை ஆட்டுவது யார்? ஆட்டக்கூடிய பொருளை இன்ன பொருளென்று நாம் அப்பொருளைப் பார்த்த துண்டா? நமக்கு சாகக்கூடாது என்னும் எண்ணம் ஏன் தோன்றிற்று? மரணத்தை வேண்டாம் என்பது நாமா அல்லது இயற்கையா? இயற்கைதான் என்றால், அதற்கு ஏன் இந்த எண்ணம் உதித்தது? எண்ணம் உதித்தும் அந்த எண்ணம் ஈடேறாமல் மரணம் உண்டாவதேன்? சாவும் பிறப்பும் சாமியின் கையில் இருக்கும்போதே நமது அட்டகாசங்களுக்கு அளவே யில்லை. ஒருக்கால் இவை நம் வசம் இருந்திருப்பின் புராணக் கதைகளில் கூறும் இரணியனும், சூரபதுமனும் நம்மிடத்தில் வந்து பிச்சை எடுக்கவேண்டும். அவர்களைவிட மச்சமான அட்டகாசங்களைச் செய்திருப்போம். நம் உயிர் கடவுள் வசத்தில் இருக்கும்போதே கடவுளைக் கற்பித்தவன் முட்டாள் என்றும், பிரசாரம் செய்பவன் அயோக்கியன் என்றும், வணங்கு பவன் காட்டுமிராண்டி என்றும் நல்லோர்களை நா கூசாமல் ஏசுகின்றனர் இவர்கள் கடவுளை ஏசவில்லை; கடவுளை நம்பி வணங்கி வழிபடுவோரை ஏசியுள்ளனர். இவர்களுக்கு இறைவனை வணங்க விருப்பமில்லை என்றால் பொறுப்போடு சும்மா இருந்திருக்கலாம். இதை விடுத்து வணங்கக் கூடியவர் களை வம்புக்கு இழுத்துள்ளார்கள்.

கடவுள் நம்பிக்கை உள்ளவர்களை வீணாக வம்புக்கு இழுக்கும் கொம்பர்களுக்குத் தக்க பதில்களும் உள்ளன. காலில் தைத்த முள்ளை வாழைப்பழத்தால் வழித்தால் வெளியில் வராது. அந்த முள்ளை வேறொரு முள்ளைக்கொண்டுதான் எடுக்கவேண்டும் என்று சில பெரியோர்கள் கூறுகின்றனர். முள்ளை எடுக்காமல் விட்டுவிட்டால் நடக்கமுடியாமல் செய்வ துடன் அது காலுக்கே ஊனமாகும். ஆகவே முள்ளை முள்கொண்டே களையவேண்டும் என்பதைப்போல

சிலருடைய அடாத சொற்களை சில சுடு சொற்களால் களைய வேண்டியுள்ளன. உள்ளத் தூய்மையுள்ள திருவள்ளுவப் பெருமானாரும் இவ்வாறான சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்;

“ உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையாய் வைக்கப் படும்.”

“ உயர்ந்த சான்றோர்கள் பலராலும் ‘உண்டு’ என்று கூறும் ஒரு பொருளை ‘ இல்லை ’ என்று கூறுவோன் மனிதனல்ல, அவன் மக்களை மருட்டுகின்றபேய் ” என்று கூறுகிறார்.

அறிவில் சிறந்த ஆன்றோர்களான ஆழ்வார்களும் நாயன் மார்களும் பாடிப் பரவசத்தால் பக்தியைப் பெருக்கிய பெரியோர்களைப் பழித்துப் பேசுவதும் ஆயிரமாயிரமாண்டு களாகக் கோடி கோடியான மக்கள் கொண்டாடிவந்த தெய்வக் கொள்கையைத் தான் பின்பற்றாவிடினும், பின்பற்றுவோரைக் கொச்சை மொழிகளால் வசைபாடினோருக்கு பதில்தர வந்துள்ள பாக்களையும் சிறிது பாருங்கள்.

மூச்சு விடாமலே தாயின் வயிற்றிலே
முழுத்துக் குள்ளே இருந்தவனே !
சீச்சீ. கடவுளை இல்லையென்பாய் இதை
சிந்தித்துப் பாரடா செக்குமாடே !

உண்ட உணவினை சீரணிக்கச் செய்ய
ஒத்த உறுப்புகள் அத்தனையும்
மண்டைக் கிறுக்கா படைத்தவ னாரிதை
மட்டும் விளக்கி உரைத்திடடா ?

உடலில் அமைந்த உறுப்புகள் யாவையும்
உண்டாக்கித் தந்த தியற்கை என்றால்
அடைய இவற்றை படைக்கும் அறிவு
அந்த இயற்கைக் கிருக்குதடா.

அறிவை உடைய தியற்கை என்றால்
அதை ஆண்டவன் என்பதில் என்ன பிழை ?
அறிவு நமக்கும் அளித்த பொருளினை
அன்பால் வணங்கு அகந்தைவிடு.

விருத்தப்பா

இயற்கையென் றோது தற்கு
இலக்கணம் யாது கூறாய் ?
இயங்கிடும் பொருளா அன்றி
இயக்குவித் திடுவ தேயோ ?

இயக்குவித் திடுவ தற்கு
இறைபொருள் என்பதொக்கும்
இயங்குதல் என்பா யாயின்
யந்திரம் போன்ற தாகும்.

இயற்கையே யாவும் என்றால்
யாரையார் பழிப்ப தோது ?
இயற்கைக்கு மனைவி மக்கள்
என்றிடும் உணர்வும் உண்டா ?
இயற்கைக்கு இன்ப துன்பம்
என்றிடும் இரண்டும் உண்டா ?
இயற்கையே யாவும் என்று
இயற்கைக்கா போதிக் கின்றாய் ?

பகுத்தறி வுடையோ மென்று
பகர்வது யாரை ? மற்றும்
பகுத்தறி வில்லா ரென்று
பகர்வது யாரை ? நீவீர் ?
பகுத்தறி வென்ப தெந்தப்
பகுதியைச் சார்ந்த வர்க்கு ?
பகுத்தறி வென்ப துங்கள்
பகுதிக்கு மட்டும் தானா ?

இயற்கையை விடநீ வேறாய்
இருந்திவை மொழிகின் றாயா ?
இயற்கைநீ யாயிருந்து
இயம்புகின் றாயா இச்சொல் ?
இயற்கைநீ யாகில் யாமும்
இயற்கையே அன்றோ ? அந்த
இயற்கைக்கு வேறாயில் நாம் யார் ?
யார் ? அந்த இயற்கை யாது ?

காரிகை யார்போல் மோகம்
காந்தம்போல் ஈர்க்கும் ஆற்றல்
சீருற இயற்கைக் குண்டா ?
சேய்களைப் பெற்ற பின்னர்
பாரினில் அவற்றின் பேரில்
பரிவுமுண்டாய் போஷிக்கும்
நேரிய கருணை என்னும்
நெகிழ்ச்சியும் இயற்கைக் குண்டா ?

மக்கள்மேல் பாசம் காட்டும்
மதியதற் கெவ்வா றச்சு ?
துக்கமும் சுகமும் உண்டா?
துயர்வரின் துடைக்க வேண்டி
தக்கதோர் உதவி நாடும்
தரமுண்டா ? ஆபத்தென்றால்
அக்கணம் அலறு கின்ற
அச்சமும் இயற்கைக் குண்டா !

பற்றிரள் உணவை மெல்ல
பதித்து நன்குனது வாயில்
சொற்றிறம் படைத்த நாவும்
தொழில்பட இடையில் வைத்து
அற்புத மாய்பற் கட்கு
அகப்படா வண்ணம் பேசும்
பெற்றியைத் தந்த தேவைப்
பேசுவாய் இல்லை என்றே !

காரணம் இறைவ னாகும்;
காரியம் இயற்கை யாகும் ;
காரண மின்றி எந்தக்
காரியமும் தோன் றாது ;
காரியந் தன்னைக் கண்டு
காரணம் உணர்தல் வேண்டும்
ஆரணங் களை ஆய்வார்க்கு
அரும்பொருள் விளங்கும் உண்மை.

விஞ்ஞானம் தன்னில் வல்ல
வித்தகர் திகைக்கின் றார்கள்
எஞ்ஞானம் கொண்டு தெய்வத்
தியக்கத்தை உரைப்ப தென்று
அஞ்ஞானி களுக்கு எட்டா
அமலனை அகத்துள் ஆய்ந்து
மெஞ்ஞான முடையோர் கண்ட
மெய்ப்பொருள் ஒன்றுண் டப்பா !

இறைபொருள் உண்டென் போரை
இயம்பினால் முட்டா ளென்று
இறைபொரு ளில்லை என்போர்
இரட்டை முட்டாள்க ளன்றோ ?

இறைபொருள் இல்லை என்போர்
இயற்கையின் இயக்கங் காணார்
இறைபொருள் இயக்கம் இன்றேல்
இயற்கையும் இறந்து போகும். (வெ.மு.)

கடவுளை இல்லை என்பதும் அப்பரம்பொருளை வழி படுவோரைக் காட்டுமிராண்டிகளென்பதும் அகந்தையாலும் அலட்சிய புத்தியாலும் அறியாமையாலும் உரைப்பதாகும். திரு. மாயூரம் வேதநாயகம் பிள்ளை யவர்கள் பாடியுள்ள செய்யுள்களையும் அடியிற் பாருங்கள் :

மண்டப மாதிகண்டோர்
மயனுளன் என்பர் போலும்
குண்டலம் முதற்கண்டோர் பொற்
கொல்லனுண் டென்பர் போலும்
ஒண்துகில் கண்டோர் நெய்தோன்
ஒருவனுண் டென்றல் போலும்
அண்டமோ டகண்டம் செய்தோன்
உளன்என அறிவாய் நெஞ்சே !

கதிரவற் கொளியின் றென்னக்
கண்ணிலான் கழறல் போலும்
செவிடர்பே ராழி ஓசை
மாறிய தென்னல் போலும்
எதிருறு பொருளைக் காணா(து)
இடருறு பித்தர் போலும்
மதியிலார் தேவின் றென்ன
மருளொடும் இயம்பு வாரே.

அத்தன்தாய் முன்னோர் தம்மை
அறிகிலான் இலரென் பானோ ?
சத்தம், இன்சுவை கந்தத்தை
தரிசியான் இலையென் பானோ?!
நித்தனை கண்ணில் காணா
நீர்மையால் இலன் என்றோதும்
பித்தரில் பித்தர் பாரில்
பேசிட உளரோ அம்மா !

தேவனே இலனேல் மோட்சம்
தீநர கில்லை ; வேதம்
பாவ புண்ணியங்கள் இல்லை ;
பாரினிலென்போன் இல்லில்

மேவலர் தீயிட்டு அன்னான்
விபமெலாம் சிதைத்து பின்னும்
சீவனை வதைசெய் தாலென்
செய்குவன்? சிதடன் தானே.

விபம்—செல்வம். சிதடன்—அறிவிலி.

(நீதிநூல் வேதநாயகம் பிள்ளை)

ஐம்புலக் காட்சிக்கு அப்பாற்பட்ட பொருள் இல்லை என்று கருதுவது அறியாமையாகும்.

அன்பு, அறிவு, ஆன்மா, ஆண்டவன் என்பவற்றை ஐம்புலன்களினால் அறியமுடியாது. அறிவால்தான் அறிய வேண்டும்;

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு." (திருக்குறள்)

பயமின்றே—பயனில்லை.

இக்குறளின் கருத்து. சுவை, ஒளி, ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புல அறிவு நமக்கு இருந்தாலும் அவை பயனற்றதே யாகும். ஒவ்வொருவருக்கும் மெய்யுணர்வு இருக்கவேண்டும் என்று கூறுகிறது.

அன்பு: பெற்றோர்களுக்குப் பிள்ளைகளிடத்தில் இருக்கும் அன்பை அப்பிள்ளைகள் அறியமுடியாமையால் பெற்றோர் களையே தூற்றுகின்றவர்களையும் பார்க்கின்றோம். காரணம், அப்புதல்வர்களின் புலன்களுக்குப் பெற்றோர்களுக்கு இருக்கும் அன்பு தெரிவதில்லை.

அறிவு: கட்சித் தலைவர்களுக்குள் ஒருவர் அறிவை மற்றவர் புலன்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே வேற்றுமைகளும் போராட்டங்களும் தோன்றுகின்றன.

ஆன்மா: நமது உடம்பில் ஆன்மா எந்த இடத்தை மையமாகக் கொண்டிருக்கிறதென்று நமக்கே புரியவில்லை.

பிரமாணங்கள்—3

நாம் சில பொருள்களை நேரில் பார்த்துப் புரிந்துகொள்ள லாம். இதனைப் பிரத்யட்சப் பிரமாணம் என்பார்கள். சில வற்றை சிந்தித்துப் புரிந்து கொள்ளவேண்டும். இதனை அநு மானப் பிரமாணம் என்பார்கள். சிலவற்றைக் கேட்டுத் தெரிந்து

கொள்ளவேண்டும். இதென்ன ஆகமப் பிரமாணமென்றும் உரை என்றும் கூறுவர். இவற்றுள்ளும் ஐயம், திரிபு, மயக்கம் என்னும் மூவகையான குற்றங்கள் நேரக்கூடும். இம்மூன்று குற்றங்களும் இல்லாத வகையில் உணர்வதே மெய்யுணர்வாகும்.

1. **பிரத்யட்சப் பிரமாணம்:** ஐம்புலன்களின் உதவியால் முகர்ந்து, சுவைத்து, பார்த்து, ஆக்கையால் தழுவி, கேட்டு இன்னது என்று புரிந்துகொள்ளல். இவை மூக்கால் மணத்தை, நாவால் சுவையை, கண்ணால் உருவங்களை, ஆக்கையால் வெப்ப தட்பங்களை, காதால் ஒலிகளை அறிதல்.

அநுமானப் பிரமாணம்: பயிர்கள் வாடி இருந்தால் இவற்றுக்கு நீர்பாய்ச்சவில்லை என்றும், புகையைக் கண்ணுற்றால் அந்த இடத்தில் நெருப்பு இருக்கலாம் என்றும் சிந்தித்து உணர்தல்.

ஆகமப் பிரமாணம்: பண்டைய வரலாறுகளை எழுதி வைத்துள்ள நூல்களின் வாயிலாகவும், பிறர்மூலம் சொல்லக் கேட்டும் தெரிந்து கொள்ளல்.

முக்குற்றம்: ஐயம், திரிபு, மயக்கம்.

1. **ஐயம்:** ஒருவர் அணிந்துள்ள ஆபரணங்களைக்கண்டு இவை தங்கநகைகளா அல்லது பித்தளையாக இருக்குமோ என்று சந்தேகத்தோடு பார்த்தல்.

2. **திரிபு:** பொன்னாபரணங்களை பித்தளை என்றும் பித்தளை நகைகளை பொன் நகைகள் என்றும் நம்பிவிடுதல்.

3. **மயக்கம்:** ஆபரணங்கள் கண்களுக்குத் தோன்றினாலும் இவை பித்தளையா? அல்லது பொன்னா என்னும் சிந்தனையின்றிக் காணல்.

இந்த முக்குற்றங்களும் இல்லாமல் உள்ளதை உள்ளவாறு எப்பொருளை எந்த வகையில் உணரவேண்டுமோ அப்பொருளை அந்த முறையில் உணர்தல் மெய்யறிவாகும். ஒலியை மூக்கால் கேட்க முடியாது. காதுகளால் கேட்க வேண்டும். உருவத்தைக் காதுகளால் பார்க்க முடியாது கண்களால் பார்க்கவேண்டும். ஒரு பழைய மாளிகையைக் கண்டு அதைக் கட்டினவனைத் தெரிந்துகொள்ள முடியாது. பிறர் மூலமாகவோ, அல்லது வரலாறுகளின் வாயிலாகவோ உணர வேண்டும். எதை எதனால் புரிந்துகொள்ளமுடியுமோ அதை அதன் வாயிலாகப் புரிந்துகொள்ளவேண்டும். ஐம்புல அறிவாலேயே அனைத்தையும் அறிய முடியும் என்று கருதுவது

அறியாமையாகும். தெய்வ நம்பிக்கை உள்ளவர்களை முட்டாள்கள் என்றும், அயோக்கியர்கள் என்றும் காட்டு மிராண்டிகள் என்றும் கூறுவது அகந்தையாகும்.

பல மதங்கள்

உலகில் இன்று பல மதங்கள் உள்ளன. இவைகளுக்குள் கொள்கைகளில் சிற்சில மாறுபாடுகள் உள்ளன. அதன் பயனால் மதங்கள் பலவாகக் கூற நேர்ந்துள்ளது. ஒவ்வொரு மதத் தலைவரும் மனித சமூகத்துக்கு நன்மைகளைத்தான் போதித்துள்ளனர். எனினும் நாட்டுக்கு நாடு சில பாரம்பரியப் பண்புகள் உண்டு. அப் பண்புகளின் நடைமுறைகள் நாட்டின் வாழ்க்கை நிலைகளுக்கு ஏற்ப சில மாற்றங்கள் உண்டாவது இயல்பாகும்.

மக்களினம் உலகில் பல நாடுகளில் பல இனங்களைப் போலத் தோன்றினாலும் ஆதியில் அனைவருக்கும் அப்பன் ஒருவனே. ஒரு மரத்தில் பல விதைகள் தோன்றி அவற்றால் பல மரங்கள் உண்டாவதைப்போல நாம் ஒரே இனம். ஆனால் பல இனங்களைப்போலக் காட்சி அளிக்கின்றோம். எப்படி மக்களினம் ஆதியில் ஒன்றோ அதேபோல ஆதியில் கொள்கையும் ஒன்றேயாகும். இனம் வெவ்வேறாகக் காணப்படுவதைப் போல மதங்களும் வெவ்வேறாகத் தோன்றுகின்றன.

ஆதியில் ஒரே இடத்தில் குழுமி வாழ்ந்துகொண்டிருந்த மக்கள், பஞ்சத்தாலும், பகை உணர்ச்சிகளாலும், கொள்ளை நோய்களாலும், கடற்கோள்களினாலும் இடம் பெயர நேர்ந்த போது தனித்தனி குழுக்களாகப் பிரிந்து வாழலாயினர். சென்ற இடத்து சூழ்நிலைகளுக்கு ஏற்ப அக்கால மக்கள் பழைய கொள்கைகளிலும் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர். இவைகள் விசேஷ காலங்களில் அந்தந்த குழுக்கள் நடத்துகின்ற சடங்கு முறைகளில் தோன்றுகின்றன. இச்சடங்குமுறைகள் பழமையான கொள்கைகளில் சில குறைந்தும், சில இனத்தார் செய்வதில் நிறைந்தும் காணப்படும்.

கருத்து மாற்றம்

நல்லதற்காகத் தொடங்கும் ஒவ்வொரு இயக்கமும் ஆரம்பத்தில் நேர்மையாகவும் கட்டுப்பாடாகவும் நடக்கும். அப்படி நடைபெறும்போது அந்த இயக்கத்துக்குப் புகழும், செல்வாக்கும் நாளுக்குநாள் பெருகும். இது நம் கடமை என்பதை மறந்துப் புகழுக்கும், செல்வாக்கிற்கும் ஆசைப்படக்

கூடியவர்கள் உபாயமாக இந்த நல்ல இயக்கங்களில் ஊடுருவி விடுகின்றனர். இவர்களால் நாளடைவில் நன்மைக்குத் தோன்றின இயக்கம் சிறுகச்சிறுக மாற்றங்களைப் பெற்று பிறகு ஆடம்பரங்களும் அதிகாரங்களுமாக மாறிவிடுகின்றன.

ஆரம்பக் கொள்கை தடம்புரளும்போது எதிர்ப்புணர்ச்சிகள் உருவாகின்றன. இவற்றுள் மிதப்போக்கு, தீவிரப்போக்கு என்பவைகளும் உருவாகின்றன. எதிர்ப்புணர்ச்சி அதிகரிக்கும் போது ஒன்றாய் இருந்த குடும்பம் இரண்டாகப் பிரிந்து விடுவதைப்போல் இயக்கத்திலும் பிளவு ஏற்பட்டு சிற்சில மாற்றங்களோடு இரண்டு கொள்கைகளாகப் பிரிந்து போகின்றன. உதாரணமாக, இந்த நாட்டு மக்களின் நன்மைக் காகத் தோன்றினது காங்கிரஸ் என்னும் இயக்கம். இந்தக் காங்கிரசிலேயே மிதவாதிகளின் குழு, தீவிரவாதிகளின் குழு என இரண்டாயிற்று. பிறகு பார்வர்டு பிளாக் என ஒன்று உண்டானது. ஆயினும் இவைகளுக்கு நோக்கம் ஒன்றே; செல்லுகின்ற நெறிமுறைகளில்தான் வேறுபாடு.

இந்த நாட்டின் விடுதலைக்காக அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் காங்கிரஸ் இயக்கமானது கட்டுப்பாட்டோடு இலட்சக்கணக்கான மக்களை ஒன்றுதிரட்டியது. இந்த இயக்கத்தில் சேர்ந்த மக்கள் உடல், பொருள், ஆவி, மனைவி, மக்கள், பட்டம், பதவி என்பவற்றையும் பொருட்படுத்தாமல் சுதந்திரம் என்னும் வேள்வித்தீயில் குதித்தனர். இதில் பலர் தூக்குமேடை ஏறினர். குண்டடிப்பட்டு மாண்டனர், தடியடியில் மண்டை உடைந்து செத்தனர், செக்கிழுத்தனர். சிறைவாசம் செய்தனர்; நாடு கடத்தப்பட்டனர்; பதவி, பட்டங்களைத் துறந்தனர்; உண்ணாவிரதமும் இருந்தனர்; நாடுவிட்டு நாடு சென்று படைதிரட்டினர்; போரிட்டனர்; அன்றைய காங்கிரஸ்காரர்கள் தியாகிகளாகத் திகழ்ந்தனர். அன்று அவர்கள் அமைச்சர் பதவிகளையோ ஆளுநர் பதவிகளையோ இம்மியும் எதிர்பார்க்கவில்லை. அந்த வீரத் தியாகிகளின் உழைப்பால் நாடு விடுதலை அடைந்தது.

விடுதலைக்குப்பின் ...

அன்று தியாகிகளால் உருவான காங்கிரஸ் இன்று பல துண்டுகளாகத் தோன்றுகிறது. காமராஜ் காங்கிரஸ், அர்ஸ் காங்கிரஸ், சரண்சிங் காங்கிரஸ், ஜகஜீவன்ராம் காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் என்னும் பல பெயர்களைச் சூட்டிக் கொண்டது. இவற்றுள் பல வலியிழந்து செத்தும் விட்டன. சில சாகுந் தருவாயிலுள்ளன. சிலர் இதிலிருந்து வெளியேறி

சுதந்திரா கட்சி என்றும், ஜனதா என்றும் புதுப் பெயரையும் புனைந்துக்கொண்டனர். இதேபோல திராவிடர் கழகம் என்பதும் மூன்று துண்டுகளாகிவிட்டன. அவற்றுக்குள்ளேயே அடிதடிகள் வேறு. பொது உடமைக் கட்சி என்னும் கம்யூனிசக் கட்சியிலும் வலம், இடம், தீவிரம் என்னும் முப்பிரிவுகள் உண்டு.

அன்று காங்கிரஸ் கட்சியில் தியாகிகள் பெருகி இருந்தனர். இன்று பதவி மோகிகள் பெருகியுள்ளனர். அன்று நாட்டுக்காக உழைத்தனர். இன்று தன் சொந்த வீட்டுக்காக உழைக்கின்றனர். இப்படித்தான் மதங்களும் ஒன்றாய் இருந்தன பலவாய்ப் பிரிந்துள்ளன. யூத மதத்திலிருந்து பிரிந்தவைகளே கிறிஸ்தவ மதமும்! இஸ்லாம் மதமும். இந்து மதத்திலிருந்து பிரிந்தவை ஜைனம், புத்தம், சௌராஷ்டிரம், சீக்கியம் என்பவை பிரசித்தமாகும்.

ஆத்திக மதத்திலிருந்து தோன்றியவைகளே நாத்திக மதங்களும், போலி ஆத்திகர்களாலும் ஒழுக்கமற்ற போதகர்களாலும் ஏற்பட்ட வெறுப்புணர்ச்சி நாத்திக மதத்தைத் தோற்றுவித்தன. நாத்திக மதங்களே எனினும் அவைகளும் மனித குலத்தின் நன்மைக்கே தோன்றின என்பதை நாம் மறுக்கமுடியாது. காரணம் புத்த ஜைன மதங்களுக்கு ஒழுக்கமும் ஜீவகாருண்யமும் அடிப்படையாகும்.

ஆண்டவன் முத்திரை

பிற்காலத்தில் தோன்றிய புதிய மதங்களை மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக அம்மதங்களுக்குச் சிலரால் கடவுள் முத்திரை இடலாயின.

"எங்கள் மதம் ஒன்றுதான் கடவுளின் கட்டளைப்படி தோன்றி இருக்கிறது. இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் இறைவன் எங்கள் மதத் தலைவருக்கு அருளிச் செய்தவை. அவற்றைத் திரட்டி எழுதப்பட்டதுதான் எங்களின் தூய்மையான வேதம்". என்று கூறுகின்றனர். மற்றும் கடவுள் நம்பிக்கை அற்ற மதத்தினர் கூறுவனயாதென்றால்,

"எங்கள் ஆதி குருநாதர் உலக நன்மைக்காக அல்லும் பகலும் அயராது சிந்தித்தார். உண்மையை உணருவதற்காக உணவு உறக்கம் முதலானவற்றையும் துறந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அப்போது அவருக்கு உண்மை ஞானம் உதயமாயிற்று. அந்த உண்மைகளை மக்களின் பேரில் வைத்தக் கருணை

யினால் நாடு நகரங்களுக்கெல்லாம் சென்று போதித்து வந்தார். இந்த நெறிதான் மனித சமூகத்துக்கு உண்மையான நெறி; மற்றைய நெறிகளனைத்தும் உண்மையை உணராமல் உளறுகின்றன; என்று கூறுவர்.

பிற்காலத்தில் தோன்றின மதங்கள் எவையாய் இருந்தாலும் அவற்றுள் முற்கால மதத்தின் நிழல் படிந்தே இருக்கும். யூதமதத்தின் நிழல் கிறிஸ்துவ இஸ்லாம் மதத்தில் படிந்துள்ளன. அதைப்போலவே இந்துமதத்தின் நிழல் புத்த ஜைன மதங்களில் நிறைய உண்டு. ஆதாரம்: தத்துவமேதை, பாரதரத்னா, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் எழுதிய மதத்தில் கிழக்கும் மேற்கும் பக்கம் 49-ல். (தமிழாக்கம்.)

ஒவ்வொரு மதத்தையும் இவ்வாறு ஆராய்ந்துக்கொண்டே சென்றால், இம் மதங்கள் அனைத்தும் ஒரு பண்டைய மதத்தின் கூறுகளே என்பது புலனாகும். அத்தகைய பண்டைய மதம் எதுவோ அதுதான் உலக மதங்கள் அனைத்துக்கும் தாய்மதம் ஆகும். அந்தத் தாய்மதமே மனித குலத்துக்கு ஆதியில் அறிவை ஆரம்பித்து வைத்த மதமாகும்.

மற்றைய மதங்களையும் மதித்தல் :

வாய்மை, தூய்மை, சகிப்புத்தன்மை, கருணை என்பன ஒவ்வொரு மதத்தையும் உருவாக்கின பெரியோர்களுக்குப் பொதுக் குணங்கள் என்று கருதலாம். அப் பெரியோர்கள் நல்லவர்களாக இருந்தமையால்தான் அக்கால மக்கள் அவர்களுடைய போதனைகளை ஏற்றுக்கொண்டனர். ஆயினும் இவர்களின் போதனைகளில் சிற்சில மாறுபாடுகளும் உண்டு. அவை அந்த பிரதேசங்களில் வாழ்ந்துவந்த பாரம்பரியத்தையும் நடைமுறைகளையும் பொருத்திருக்கின்றன. அம்மாறுபாடுகளே ஆதியில் ஒன்றாக இருந்த மதம் பலவாகப் பரிணமித்ததற்குக் காரணம் எனலாம்.

மாறுபாடுகள் மட்டும் நீக்கப்படுமானால் எல்லா மதங்களும் நல்லவைகளே. பழைய மதங்களுக்குள் சுயநலமும், போலி வேஷங்களும் ஊடுருவும் காலங்களில் எதிர்ப்புகள் உருவாகின்றன. இவை பலம் பெற்றபோது புதிய கொள்கைகள் தோன்றுகின்றன என்பதை முன்னமே கூறியுள்ளேன். இவ்வாறு பிரிந்தவை ஒன்றையொன்று தாக்கிக் கொள்வதை நிறுத்திக் கொண்டு சகிப்புத்தன்மையைக் கடைபிடிக்குமானால் மதப் போராட்டங்கள் தோன்றி இருக்காது.

ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் மதமே சிறந்த மதமென்று கூறிக்கொள்ளுவதோடு நில்லாமல் மற்றைய மதங்களையும் தாக்கிப் பேசத் தலைப்படுகின்றனர். இந்தத் தீமை மதபோதகர்களால் உருவாகின்றன. ஒரு சிறந்த மதம் இன்னதென்பதைப் புரிந்துக்கொள்ளமுடியாத நிலையில் சில மதவெறியர்கள் மக்களை திசைமாற்றி விடுகின்றனர். சில மதங்கள் அரசியல் உள்நோக்கத்தினால் மதத்தின் போர்வையில் பணத்தை வாரி இறைத்து பல வழிகளில் படை திரட்டுகின்றனர்.

அதன்மூலம் நாடுபிடிப்பது அவர்களின் உள்நோக்கமாகும் இவைகள் பணபலம், படைபலம், அதிகார பலம், பிரசாரபலம், சந்தர்ப்பம் வாய்த்தபோது பலாத்காரத்தையும் பயன்படுத்துகின்றன. இத்தகைய தீயநோக்கம் கொண்ட மதங்கள் எதுவாய் இருப்பினும் அவற்றால் மக்களினத்துக்கு நன்மையைவிட தீமைகளே அதிகரிக்கும். சில நிறைகுணமுடைய மதங்கள் பலாத்கார மதமாற்றத்தில் நுழையாது. வந்தவர்களுக்கு வழி காட்டி, எந்த மதத்தின் பேரிலும் பகையை வளர்க்காமல் உண்மை நெறிகளை மக்களுக்குத் தெளிவாக உணர்த்தும்.

இத்தகைய மதம் மக்களின் எண்ணிக்கையில் குறைந்திருந்தாலும் அது நிறைந்த பண்புடைய சிறந்த மதமெனலாம், இந்த உண்மைகளை அந்தந்த மத வளர்ச்சியின் வரலாறுகளை விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து பார்த்தால் நன்கு புலனாகும். அப்போதுதான் நாம் பின்பற்றும் மதத்தினுடைய குறைவு நிறைவுகளையும் புரிந்துகொள்ள பேருதவியாக இருக்கும்.

(EAST AND WEST IN RELIGION) மதத்தில் கிழக்கும் மேற்கும் என்னும் நூலில் உலகத் தத்துவஞானியருள் ஒருவரான பாரதரத்னா. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் எழுதியிருப்பது தமிழாக்கம் பக்கம்–52ல்:

"நம்முடைய மதத்தை வேறொரு மதத்தினோடு அல்லது வேறு பல மதங்களினோடு தொடர்புபடுத்திப் பார்த்தாலன்றி நமது மதத்தை நாம் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது. அறிவுக்கண் கொண்டும் பண்புடனும் நாம் மற்றைய மதங்களை ஆராய்ந்தால் தான் அம் மதங்களின் வழிவழியாக வந்த பண்பாடுகளையும் நமது பண்பாடுகளையும் உரிய முறையில் அறிய முடியும். நாம் போற்றுதற்குரிய அறிவையும் பெறமுடியும் இத்தகைய பண்பட்ட கருத்து எதுவும் போற்றுதற்குரியதாகும்." என்று கூறியுள்ளார். உலகிலுள்ள பல மதங்களுக்குள் எது நிறைவுடைய மதம் எது சில குறைபாடுகளை உடையதாக

இருக்கிறது என்பதனை அறியவேண்டுமாயின் இத்தகைய ஆராய்ச்சி நமக்கு மட்டுமல்ல மனிதசமூகத்துக்கே இன்றியமையாத நெறிமுறை எனலாம். இதுபோன்ற சுதந்திர உணர்ச்சிகளுக்கு இடந்தராத மதம் எதுவாய் இருந்தாலும், அதனிடம் குறைபாடுகள் இருக்கக் கூடும். அந்த அச்சத்தால்தான் சில மத போதகர்கள் மற்ற மதங்களைப் பற்றி நினைப்பதும் பாவம் என்று அப்பாவி மக்களை பயமுறுத்துகின்றனர். இத்தகைய மத போதகர்கள் யாராக இருப்பினும் அவர்கள் மனிதகுலத்துக்கு இதம் செய்யக் கூடியவர்களல்ல. மனிதகுலத்தை அதம் செய்யக் கூடியவர்களென்றுதான் கருத நேருகிறது. இதுபோன்ற மத போதகர்களும் உலகத்தில் உண்டு. எடுத்துக்காட்டாக மேற் கூறிய நூலிலேயே 87–ஆம் பக்கத்தில் எழுதியுள்ளது :

கிறிஸ்துவ மத போதகரான செல்ஸஸ் என்பவர் விடுத்துள்ள அறிக்கையாவது.

“படித்தவர்கள் எவரும் இதில் புகாதிருப்பார்களாக! ஞானம் படைத்தவர்கள் எவரும் இதில் புகாதிருப்பார்களாக! சாதுர்யம் வாய்ந்தவர்கள் எவரும் இதில் புகாதிருப்பார்களாக! காரணம் அக்குணங்கள் யாவற்றையும் யாம் தீமையாகவே கருதுகிறோம். ஆனால் எவன் ஒருவன் அஞ்ஞானியாக இருக்கிறானோ, எவன் ஒருவன் மிகவும் எளியவனாக இருக்கிறானோ, எவன் ஒருவன் படிக்காதவனாக இருக்கிறானோ, எவன் ஒருவன் சூக்கும புத்தி இல்லாதவனாக இருக்கிறானோ, அத்தகையவன் வந்து சேரட்டும்; அவனுக்கு நல்வரவு கூறுகின்றோம்”. என்பது செல்ஸஸ் என்னும் கிறிஸ்துவ மதபோதகரின் வரவேற்புரையாகும்.

இத்தகைய அழைப்பு விடுத்துள்ளவரின் உட்கருத்து எதுவாக இருக்கும்? ஒரு நாட்டை அல்லது மதத்தை சிறந்த முறையில் நிர்வகிக்க வேண்டுமாயின் அதற்கு சிறந்த அறிவாளிகள் தேவையா? அல்லது முழு மடையர்கள் தேவையா என்னும் கேள்வி எழுகிறது. மடையர்களாக இருந்தால் தம் இஷ்டத்துக்கு ஆடு, மாடுகளைப்போல அம் மடையர்களைப் பயன்படுத்தலாம். தம்முடைய கருத்துக்கு மாறுபட்டவர்களை அடக்குவதற்கு இவர்களை வேட்டை நாய்களை ஏவுவதைப்போல ஏவலாம். அறிவாளிகள் இத்தகைய பலாத்கார செயல்களுக்கு ஒத்துவர மாட்டார்கள். அடுத்த நாடுகளை அடக்கி ஆளவேண்டுமென்னும் கருத்துடைய அரசியல்வாதிகளுக்கும், அடுத்த கட்சிகளை அழிக்கவேண்டுமென்னும் தாந்

தோன்றித் தலைவர்களுக்கும், வேறு மதங்கள் உலகத்தில் இருக்கக்கூடாது என்று கருதும் அரசியல் தலைவர்களுக்கும், மக்களுக்கு உண்மையாகத் தொண்டு செய்ய வேண்டுமென்று எண்ணும் தொண்டு மனப்பான்மை கொண்ட தலைவர்களுக்கும், அறிவாளிகளும் திறமைசாலிகளும் தேவை என்பது வெளிப்படையாகும். மதம் பகைவர்களை உருவாக்கத் தோன்றவில்லை. அறநெறிகளை பின்பற்றும் மக்களைப் படைக்கத் தோன்றிற்று. இதில் அறிவாளிகள், அருளாளர்கள், சன்மார்க்க சீலர்கள், தியாகிகள், பாவலர்கள், நாவலர்கள் பெருகி மனிதப் பண்பை வளர்க்கப் பாடுபடவேண்டும். மதத்தில் வேட்டை நாய்கள் வேண்டியதில்லை. நாடுபிடிக்கும் நாட்டம் உடையவர்களும், அடக்கியாள ஆசைப்படும் வேஷக்காரர்களும் மதத்துக்குள் ஊடுருவி விட்டால் மனிதகுலம் மண்ணோடு மண்ணாய்கிடும் இன்று மனிதகுலத்துக்கு தேவை சன்மார்க்கமா? அல்லது சர்வநாசமா? என்பதை மதவாதிகளும் அரசியல்வாதிகளும் நன்கு சிந்திக்கவேண்டும்.

சில மதங்கள் தோன்றின நாளிலிருந்து போராட்டங்களையே தனது வரலாற்றில் பொறித்துக்கொண்டு வந்துள்ளன. சில மதங்கள் அறநெறிகளைப் பிரச்சாரம் செய்தும் வளர்ந்துள்ளன. சில மதங்கள் வெளித்தோற்றத்துக்கு நன்மைகளைச் செய்வதைப்போல் நடித்து படைகளைத் திரட்டி நாட்டுப் பற்றையே நாசம் செய்கின்றன. இந்தியநாடு மதவெறியினால் துண்டாடப்பட்டது உலகறிந்த ஒன்றாகும். ஆகவே நாம் ஒவ்வொரு மதத்தினுடைய உள்நோக்கங்களையும் நன்கு புரிந்துக் கொண்டால்தான் நம்மையும், நமது நாட்டையும் நன்கு செப்பனிட்டுக் கொள்ளமுடியும். ஒவ்வொரு மதத்தின் நல்ல கருத்துக்களையும், அவற்றின் பெயரால் உள்ளுக்குள் நடைபெறுகின்ற மோசடிகளையும் இன்று நாம் புரிந்துகொள்ளவேண்டியது நமது கடமையாகும். ஆகவே இனி சில முக்கிய மதங்களின் வரலாறுகளையும் ஒவ்வொன்றுக கவனிக்கலாம்.

சீக்கியமதம்

குரு நானக் என்பவரால் சீக்கியமதம் உருவாயிற்று. லாகூருக்கு அருகிலுள்ள தன்வந்தி என்னும் இடத்தில் தோன்றினார். காலம் கி.பி. 1469–ல் இவர் இளமையிலேயே தெய்வபக்தி மிகுந்தவராக இருந்தார். இவர் இந்து குடும்பத்தில் பிறந்தவர் இந்து சாதுக்களிடத்தும் முஸ்லீம் சாதுக்களிடத்தும் அன்புள்ளவர். இறுதிநாள் வரையிலும் இல்லறத்தில் வாழ்ந்தவர்.

நண்பர் :

இவருக்கு மாதானா என்னும் ஒரு முஸ்லிம் நண்பர் இருந்தார். அவர் சிறந்த இசைவாணர். நானக் அவர்கள் தாம் கருதிய கருத்துக்களைப் பாடல்களாக வகுக்க வல்ல கவிஞராவார். இவர் யாத்த பாடல்களை நண்பர் மாதானா இசை கூட்டி இனிமை யாக வாசிப்பார். தீஞ்சுவைப் பாலில் கன்னல் கலந்ததைப் போல இவர்கள் நட்பு மிகவும் ஒத்து இருந்தது.

சமயப்பூசல் :

இவர் வாழ்ந்த காலத்தில் ஆங்காங்கு மதப்பூசல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. அற்ப விஷயங்களிலும் அடிக்கடி மதப்பூசல் நிகழ்வதனைக் கண்டு மிக்க வேதனையடைவார். இப்பூசல்கள் நாளுக்குநாள் பெருகிக்கொண்டிருந்தன. இந்த அறியாமையைப் போக்கவேண்டுமென்று அவ்வப்போது சிந்தித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் இவர் நீராடிக்கொண் டிருந்த சமயத்தில் இறைவனுடைய திருவருட்டுணையால் நாமே மக்களுக்கு நன்னெறிகளை போதிக்கவேண்டும் என்னும் எண்ணம் உதயமாயிற்று. அந்த எண்ணத்தை இறைவனுடைய கட்டளையாகவே கருதினார். அன்றுமுதல் தன்னை அத் திருப் பணிக்கு அர்ப்பணித்துக்கொண்டார்.

எங்கெங்கு குழப்பங்கள் நிகழ்கின்றனவோ, அங்கெல்லாம் சென்று மக்களுக்கு நன்னெறிகளை போதித்து வந்தார். பெரும் பாலான இந்துக்கள் இவருடைய அறிவுரைகளைக் கேட்டு இவரைத் தமக்கு ஒரு வழிகாட்டியாகவே ஏற்றுக்கொண்டனர்.

சமயத்தொண்டின் சாரம்

இவர் மக்களுக்குப் போதித்த முக்கிய போதனைகளாவன:

“சாதி, மதம், இனம் என்னும் வேறுபாடுகள் பயனற்றவை. மதம் என்னும் பெயரில் நாம் சொல்லளவில் நிற்பதில் பயனில்லை. அவற்றை நாம் செயலளவிலும் நடந்து காட்ட வேண்டும். எல்லா மக்களையும் சமமாக நோக்குவதே மதத்தின் அடையாளமாகும். தியானம் செய்வதுமட்டும் சமயமாகாது. தூய்மையான வாழ்க்கையைப் பின்பற்றுவதுதான் சமயநெறி எம்மதத்தாருக்கும் எவ்வினத்தாருக்கும் ஆண்டவன் ஒருவனே. அவனை வாயாரப் பாடி மனமாற சிந்திக்கவேண்டும். இவற்றின் மூலம்தான் இறைவன் திருவருளைப் பெறமுடியும். இராமனும் அவனே; ரஹீமும் அவனே! இருவரும் வேறல்லர். அந்த ஒருவனுக்கே நாம் பல பெயர்களை இட்டு வணங்கி வழிபடு

கிறோம். இந்த உலகம் முழுமுதற் கடவுளால் உண்டானது. நம்மைக் கெடுப்பதும் எடுப்பதும் நம் வினைகளே. மக்கள் இந்த உண்மைகளை உணராமல் உழல்கின்றனர். மனிதப் பிறவியின் பயன் இறைவனைச் சிந்திப்பதும் வந்திப்பதும்தான். நாம் அனைவரும் அவனைத்தான் அடையவேண்டும். இவ்வுண்மைகளை நாம் மறந்து வாழ்வதில் பயனில்லை,'' என்னும் அறிவுரைகளைத் தான் வாழ்நாள் முழுவதும் மக்களுக்கு போதித்து வந்தார்: இவ்வாறு தமது 69–ம் ஆண்டுவரையிலும் போதித்து கி. பி. 1538–ல் தமது ஊனுடலை நீத்தார். இவர் இறுதி நாட்களிலும் இல்லறத்திலேயே இருந்தார்.

இவருக்குப்பிறகு அங்கது (ANGD) என்பவர் குரு பட்டத்தைப் பெற்றார். இவர் குருநானக் கொள்கைகளை ஆங்காங்கு பிரசாரம் செய்துகொண்டு வந்தார். இவர் குருமுகி என்னும் லிபியைத் தோற்றுவித்தார் என்று கூறுகின்றனர்.

மூன்றாவதாக அமர்தாஸ் என்பவர் குருவாக வந்தார். இவருக்குப் பிறகு இவருடைய மருமகன் இராமதாஸ் என்பவர் நான்காவது குரு பட்டத்தைப் பெற்றார். இவரிடம் அக்பர் பாதுஷா மிகவும் பக்தி உடையவராக இருந்தார். இவர் காலத்தில் அக்பர் பாதுஷா அமிர்தசரஸ் என்னுமிடத்தில் ஒரு நிலத்தை அன்பளிப்பாக அளித்தார். அந்த இடத்தில் சீக்கியர்களின் புகழ்பெற்ற பொற்கோயில் கட்டப்பெற்றது.

ஐந்தாவது குருவாக அர்ஜுன்சிங் என்பவர் பட்டமேற்றார். இவர் இந்து மதப் பெரியோர்களான ஜெயதேவ், நாமதேவ் மற்றும் கபீர்தாஸ் முதலானவர்களின் அருட்பாடல்களில் சிலவற்றைத் திரட்டி, அத்துடன் குருநானக் பாடிய பாக்களையும் சேர்த்து அவற்றுக்கு ஆதி கிரந்தம் என்னும் பெயர் சூட்டினார். இதுவே சீக்கிய மதத்தின் வேதநூலாகும். இந்நூல் 1581–ல் இருந்து 1606 வரையிலும் ஆன இடைக் காலத்தில் நிறைவுபெற்றது.

இவர் காலத்தில் ஜகாங்கீருக்கு எதிராக அவருடைய மகன் குஸ்ரூ செய்த கிளர்ச்சியில் அர்ஜுன் சிங் குஸ்ருவை ஆதரித்தார். இதை அறிந்த ஜகாங்கீர் அர்ஜுன் சிங்கைக் கொலை செய்துவிட்டார். இதன் காரணமாக சீக்கியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பகை மேகம் சூழ ஆரம்பித்தது.

ஆறாவதாக ஹர்கோவிந்தசிங் குருவாக வந்தார், இவர் ஜகாங்கீர் விதித்த அபராதத் தொகையைக் கட்ட மறுத்தா

அதனால் ஜகாங்கீரின் குவாலியர் கோட்டையில் 12 ஆண்டுகள் சிறையிடப்பட்டார். விடுதலை ஆனபிறகு முகலாயர்கள் பேரில் படையெடுத்துத் தோல்வியுற்றார். அதன் பயனால் இமய்மலைச் சாரலிலுள்ள கிராத்பூர் என்னும் இடத்துக்கு ஓடி விட்டார்.

ஏழாவது குருவாக ஹர் கோவிந்த சிங்கின் பேரன் ஹர்ராய் என்பவர் வந்தார். இவருக்குப் பிறகு எட்டாவதாக ஹர் கிஷின் (கிருஷ்ணன் என்பதின் திரிபு) என்பவர் குருவானார். இவருக்கு நேர் வாரிசு இல்லாமையால் ஒன்பதாவது குருவாக பகதூர்சிங் என்பவரை குருவாக நியமித்தனர். இவர் ஔரங்கசீபின் கொள்கையை எதிர்த்தார். ஔரங்கசீபு இவரை டெல்லிக்குக் கொண்டு சென்றார். இஸ்லாம் மதத்தைத் தழுவுமாறு இவருக்கு ஆணையிட்டான். மதம் மாற மறுத்ததனால் பகதூர் சிங்கைத் தூக்கேற்றிவிட்டான்.

பத்தாவது குருவாக பகதூர்சிங்கின் புதல்வர் குருகோவிந்த் சிங் பட்டத்துக்கு வந்தார். இவர் முகலாய சமூகத்தைப் பழி வாங்கி சீக்கிய சமூகத்தை ஒன்றுதிரட்டினார். இவரே சீக்கிய மதத்தின் இறுதி குருவாவார்.

இவர் சீக்கிய மக்களுக்கு கல்ஸா என்னும் ஐந்து நிபந்தனைகளை விதித்தார். கல்ஸா என்பதை பஞ்சக்கரம் என்றும் கூறுவர். இவை ககர வர்க்கத்தைச் சேர்ந்த ஐந்து சொற்களாகும்.

1. கங்கம் (சீப்பு)—தூய்மையைக் குறிப்பது.

2. கரம் (இரும்புக் காப்பு)—நேர்மையைக் குறிப்பது.

3. கச்சம் (இடுப்பில் கட்டும் சல்லடம்) – புலனடக்கத்தைக் குறிப்பது.

4. கிரிபான் (உடைவாள்)—ஆன்மசக்தியைக் குறிப்பது.

5. கேஸம் (நீண்ட தலைமயிர்)—தியாகத்தின் அறிகுறி.

முஸ்லிம்கள் மொட்டையும், தாடியும், குல்லாவும் தமக்குச் சின்னமாகக் கொண்டுள்ளதைப்போல சீக்கியர்கள் கல்ஸா என்னும் பெயரால் இச்சின்னங்களை விதித்துக்கொண்டனர். இவர் சீக்கியர்களின் படைதிரட்டி முகலாயர்களின்மீது வீரப் போர் புரிந்தார். இறுதியில் கோதாவரி நதிக்கரையில் நந்தர் என்னும் இடத்தில் ஒரு ஆப்கானியன் இவரைக் கொலை செய்து விட்டான்.

இவருக்குப் பின் மரபு வழி குருமார்கள் நியமிப்பது நிறுத்தப்பட்டது. இதற்குப் பதிலாக பிரபந்தக் குழு என்னும் ஒரு அமைப்பு உருவாயிற்று. அக் குழுவின் மூலம் சீக்கிய மதம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

சீக்கிய மதமென்பது இந்து மதத்துக்குப் புறம்பானதல்ல. ‘உண்மையான சீக்கியன் வேதத்திலும் கீதையிலும் நம்பிக்கை கொண்டவன். இராமனையும் கிருஷ்ணனையும் வழிபடுபவன் என்பது குரு கோவிந்தசிங்கின் வாக்காகும். (ஆதாரம்! ஞான கங்கை—தமிழாக்கம் பக்கம் 159. குருஜி கோல்வால்கர்) சீக்கிய குருமார்களின் பெயர்களும் இவற்றுக்குச் சான்றாக உள்ளன. இந்த இயக்கம் முகலாயர்களின் பூசல்களினாலேயே உதித்தது. இன்று சீக்கியர்களில் சிலர் அந்நிய மதத்தினரின் தூண்டுதலினால் இந்து மதமாகிய தாய் மதத்துக்கே எதிராகப் பணிசெய்கின்றனர். இந்த வேற்றுமை உணர்ச்சி நாட்டுக்கு நல்லதல்ல; சீக்கிய சமூகத்துக்கும் நல்லதல்ல.

இஸ்லாம் மதம்

இஸ்லாம் என்னும் அரபுச் சொல்லுக்கு சாந்தி என்பது பொருளாம். சலாம் என்னும் சொல்லின் பகுதியில் தோன்றினது; இம் மதத்தை இறைவன் தமது தூதர்கள்மூலம் போதித்து வந்தாராம். அப் பாரம்பரியத் தூதர்களை நபிமார்கள் என்று கூறுகின்றனர். இவர்களில் இறுதியாக வந்தவர் முகமது நபிகளாவார். ஆகவே இவரை நபிகளின் நாயகம் என்றும் கூறுகின்றனர். இந்நபிமார்களுள் முதல் நபியை ஆதாம் நபிகளார் என்றும், இறுதியில் வந்தவரை முகமது நபிகளார் என்றும் கூறுகின்றனர்.

தற்போது சவூதி அரேபியாவிலுள்ள ஹெட்ஜாஸ் என்னும் கடற்கரை மாகாணமாகிய மக்கா என்னும் நகரத்தில் குறைஷிவர் மரபில் முகமது நபிகளார் (கி. பி. 20—4—571ல்) தோன்றினார். தந்தையின் பெயர் அப்துல்லா. தாயின் பெயர் ஆமீனா. இவர் கருவில் இருக்கும்போதே தந்தை அப்துல்லா காலமாகிவிட்டார். இவருக்கு ஆறாவது ஆண்டில் தாயாரும் உயிர் நீத்தார். இளமையிலேயே இவர் பெற்றோர்களை இழக்க நேர்ந்தது. அத்தருணத்தில் இவருடைய பாட்டனார் அப்துல் முத்லி என்பவர் இவரை வளர்த்துவந்தார், இவருடைய 8வது வயதில் பாட்டனாரும் மரணமடைந்தார். பிறகு தமது தந்தையின் தமையனார் அப்துல் காலிப் என்பவர் இவரை ஆதரித்துவந்தார்.

பெற்றோர்களை இழந்த இவருக்குப் பள்ளி சென்று கல்வி பயிலும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இளமையில் இவர் ஆடு மாடுகளையும், ஒட்டகங்களையும் மேய்த்துக்கொண்டிருந்தார். ஆயினும் இவர் சிறு வயது முதற்கொண்டே நற்குண நற்செய்கைகளை உடையவராக இருந்தார். சில ஆண்டுகளுக்குப் பிறகு தமது பெரிய தந்தை புரிந்து கொண்டிருந்த வாணிபத் தொழிலை மேற்கொண்டார். பெரிய தந்தையாரின் உதவியால் அத்தொழிலில் நன்கு தேர்ச்சி பெற்றவரானார்.

திருமணம்

இவரிடம் வியாபாரத் திறமையும் உண்மைப் பொறுப்பும் நேர்மையுள்ளமும் பொருந்தியுள்ளதைக் கண்ட கதீஜா என்னும் ஒரு செல்வ சீமாட்டியார் (விதவை) இவரை விரும்பித் திருமணம் செய்துகொண்டார். அப்போது இவருடைய வயது 25. அவ்வம்மையாருக்கு வயது 40. திருமணம் ஆனபிறகு வியாபாரம் செய்வதை நிறுத்திவிட்டுத் தன்னுடைய மனைவியின் சொத்துக்களைப் பராமரித்துக் கொண்டு வந்தார். அதில் வரும் வருவாயை அறநெறிகளுக்கும் சமூக சேவைக்கும் பயன்படுத்திக் கொண்டு வந்தார். முகமது நபிகளார் இல்லறத்தில் ஈடுபட்டிருந்தும் இறைவனிடத்தில் மிகவும் பக்தி உடையவராக இருந்தார்.

வாழ்க்கையில் திருப்பம்

இவர் வாழ்ந்த காலத்தில் தம்மைச் சூழ்ந்த மக்களிடத்தில் அறியாமைகளையும், தீய செயல்களையும் கண்டு மிகவும் மனம் வருந்துவார். இவருடைய 40–வது வயதில் ரமலான் மாதம் ஹீரா என்னும் மலைக் குகையின் உள்ளே 27 நாட்கள் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். இருபத்து ஏழாம் நாள் நள்ளிரவு ஜீப்ரேல் (GABRIEL) என்னும் பிரதான தேவதூதர் இவருக்கு தரிசனம் தந்து இவரைத் தழுவிக்கொண்டார். இவரை இறைவன் திருத்தூதராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை ஜீப்ரேல் என்னும் பிரதான தேவ தூதர் இவருக்கு அறிவித்தார். "இனி இறைவன் திருநாமத்தை ஓதுவீராக," என்றபோது, "எனக்குப் படிக்கத் தெரியாது," என்று கூற அந்த தேவ தூதர் "உமக்கு இறைவன் திருவருள் உண்டாகுக" என்று கூறி, ஆசி புரிந்து மற்றும் தொழுகை முறை, நோன்பு முறை, தானம் என்னும் மத தருமங்கள் அனைத்தையும் போதித்து இவரைத் தழுவியபடியே மறைந்துவிட்டார். அன்றுமுதல் இவருக்கு நபிகளார் என்னும் பட்டம் எய்திற்று.

சமயத் தொண்டு

தேவதூதர் மூலம் நபிகளார் என்னும் பட்டம் பெற்ற பிறகு வீட்டுக்கு வந்தார். தேவதூதர் தமக்குக் காட்சி தந்ததும், நோன்பாதி விரதங்களை போதித்ததும் தமது மனைவி கதீஜா பிராட்டிக்குமட்டும் தெரிவித்தார். அவ்வம்மையார் இவற்றை எல்லாம் கேட்டுப் பெருமகிழ்ச்சியடைந்தார். ஆனால் இந்த விஷயத்தை மற்றவர்கள் யாருக்கும் வெளிப்படுத்தவில்லை. மறுபடியும் தேவ தூதர் இவருக்குக் காட்சி தந்து, "நீ இறைவனுடைய கட்டளையின்படி இஸ்லாம் மதத்தை மக்களுக்குப் போதிக்கவேண்டு"மென்று எச்சரிக்கை செய்தபிறகு மதப் பிரசாரத்தைத் தொடங்கினார்.

இவருடைய கொள்கையை ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டவர்கள் நால்வர் என்கின்றனர். 1. கதீஜா பிராட்டியார். 2. நண்பராக இருந்த அபூபக்கர். 3. உமர் உதுமான். 4. அலி என்பவர்களாகும். முகமது நபிகளார் மதப்பிரசாரத்தை மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நடத்திவந்தார். இவருடைய பிரச்சாரத்தை இவருடைய இனத்தவர்களே எதிர்க்கத் தொடங்கினர். மூன்று ஆண்டுகள் செய்த பிரசாரத்தின் பெரு முயற்சியால் இவருடைய கொள்கையை 40 பேர்கள்மட்டும் ஏற்றுக்கொண்டனர். ஆயினும் அந்த நாற்பது பேரையும் குறைஷியர்கள் சும்மாவிடவில்லை. அவர்களையும் சித்திரவதை செய்தார்களாம். எனினும் முகமது நபிகளார் தம்முடைய பிரசாரத்தை நிறுத்தவில்லை. எதற்கும் அஞ்சாது தம்முடைய கொள்கையை மக்களுக்குப் போதித்துக்கொண்டே இருந்தார். இந்த சூழ்நிலையில் கதீஜா அம்மையாரும் காலமாகிவிட்டார். ஆயினும் இவருக்கு இறைவனிடம் இருந்து திருவாக்கியங்கள் வந்துகொண்டே இருந்தனவாம். அதனால் இவர் எதற்கும் சளைக்காமல் பிரசாரம் செய்து வந்தார்.

ஆசைவார்த்தைகள்

இதைக் கண்ட குறைஷியர்கள் முகமது நபிகளுக்கு இந்த மதப் பிரசாரத்தை நிறுத்தினால் பொன்னும், பொருளும், பதவிகளும் வழங்குவதாக ஆசை வார்த்தைகளைக் கூறினர். அதற்கு இவர் "என் கையில் சூரிய சந்திரர்களைக் கொண்டு வந்து நிறுத்தினாலும் என் பிரசாரத்தை நிறுத்தமாட்டேன்," என்று நிராகரித்துவிட்டார். இவர் எதையும் விரும்பாமல், எதற்கும் அஞ்சாமல் பேசியதைக் கேட்ட ஒரு முரடன் இவரை மிகவும் மூர்க்கத்தனமாகத் தாக்கினான். இவர் அதற்கும்

அஞ்சவில்லை. பிறகு இவரைக் கொலைசெய்வதற்காக ஒரு வாலிபனை ஏவினார்கள். அவன் நபிகளாரை நெருங்கியதும் மனம் மாறிவிட்டான். அத்துடன் நிற்காமல் அவனும் நபிகளாரின் கொள்கையைப் பின்பற்றக்கூடியவனாக மாறி விட்டான். எனினும் இவருடைய கொள்கைக்கு குறைஷியர் களுடைய எதிர்ப்பு அதிகரித்துவிட்டது. இந்த எதிர்ப்பை சமாளிப்பதற்காக மக்காவைவிட்டு வெளியேறி தாயீடு என்னும் இடத்துக்குச் சென்றார். அங்குள்ள மக்களும் இவரைத் துரத்தி விட்டனர். மறுபடியும் மக்காவுக்கே மீண்டு வந்தார்.

இஜ்ரத் சகாப்தம்

இந்த சந்தர்ப்பத்தில் ஆண்டவனிடம் இருந்து ஒரு கட்டளை வந்ததாம். அக்கட்டளையாவது : "நீ நபிப்பட்டம் பெற்று 13 வது ஆண்டு தொடங்கும் வரையில் மக்காவைவிட்டு வெளியேறுக"! என்பதாகும்.

நபிகளார் இக் கட்டளையின்படி மக்காவை விட்டு வெளியேற ஆயத்தமாயினார். தமது உயிர்த் தோழரும், சிஷ்யருமான அபூபக்கருடன் நபிகளார் வெளியேறப் போகிறார் என்னும் விஷயம் எதிரிகளுக்கு எட்டிவிட்டது. எதிரிகள் உடனே இவரைக் கொலைசெய்யத் திட்டமிட்டனர். இந்த இவருடைய வீட்டையும் முற்றுகை இட்டுவிட்டனர். இந்த ஆபத்தான வேளையில் தமது பெரிய தந்தையின் புதல்வரான அலி என்பவரைத் தமது படுக்கையில் படுக்கவைத்து அவரைத் துணியால் போர்த்திவிட்டு ஒருவருக்கும் தெரியாமல் வெகு தந்திரமாக அபூபக்கரும் நபிகளாரும் வீட்டைவிட்டு வெளியேறி விட்டனர்.

ஊருக்கு சற்று தூரத்தில் இருந்த குகையில் மூன்று நாட்கள் வரையிலும் பதுங்கி இருந்தனர். நான்காம் நாள் தக்க சமயம் பார்த்து வெளியேறி மக்காவுக்கு 300 கல் தொலைவில் இருக்கும் யதுரிப் என்னும் இடத்திற்குப் பிரயாணமாயினர். இந்த நாள் கி. பி. செப்டம்பர் 622 என்பர். இந்த நாளில் இருந்துதான் இஜ்ரீ சகாப்தம் தொடங்குகிறது. இவர்கள் யதுரிப் நகரத்தை நோக்கிச் செல்லுவதைக் கேள்வியுற்ற மக்கா வாசியான சுராக்கா என்பவன் இவர்களைப் பிடிக்க வெகு வேகமாகக் குதிரையின்மீது துரத்திக்கொண்டு வந்தானாம். குதிரை அவனை மூன்று முறை கீழே தள்ளிவிட்டதாம். இதை உணர்ந்த சுராக்கா நபிகளாரை மதித்து இவர்களுக்கு எந்தவிதத்

தீங்கையும் புரியாமல் மக்காவுக்கே திரும்பிவிட்டான். நபிகளாரும், அபூபக்கரும் யதுரிப் நகரத்தைச் சேர்ந்தனர். அந் நகரவாசிகளான மக்களும் இவர்களை அன்போடு வரவேற்றனராம்.

யதுரிப்பில் பிரசாரப் பணி

யதுரிப் நகரத்தில் நபிகளார் தமது பிரசாரப் பணியைத் தீவிரமாகத் தொடங்கினார். ஓராண்டு நிறைவதற்குள் அங்கு இவருடைய கொள்கை அதிகமாயிற்று. இதை உணர்ந்த குறைஷியர்கள் யதுரிப்பின்மீது படையெடுத்தனர். இவ்வாறு படையெடுப்புகள் சுமார் 5 ஆண்டுகள் அவ்வப்போது நடைபெற்றன. இறுதியில் நபிகளார் 10,000 பேரைப் படை திரட்டிக்கொண்டு மக்காவின் பேரில் போர் தொடுத்தார்; மக்காவையும் கைப்பற்றினார். அங்கு இருந்த எதிரிகளைக் கண்ணியத்தோடு மன்னித்தார்.

மக்காவைக் கைப்பற்றியபிறகு அங்கு கா∴பா என்னும் ஆலயத்தில் இருந்த 360 விக்ரகங்களை அப்புறப்படுத்தினாராம். இவருடைய பெருந்தன்மையை உணர்ந்த குறைஷியர்களும் முஸ்லிம்களாக மாறினராம். பிறகு முகமது நபிகளார் மக்காவை விட்டு யதுரிப் நகருக்கே சென்று எளிய வாழ்க்கையை நடத்திவந்தார். பிறகு இஜ்ரி 10 ஆம் ஆண்டு 1½ இலட்சம் முஸ்லிம் மக்களுடன் இறுதி யாத்திரையாக மக்கா வந்தார். மறுபடியும் யதிரிப் நகருக்குச் சென்றுவிட்டார். சில வாரங்கள் நோய்வாய்ப்பட்டிருந்து, இறுதி காலத்தில் முகமதுநபிகள் மக்களைப் பார்த்து "நான் யாருக்கேனும் கடன் திருப்பித் தரவேண்டியது இருக்கிறதா?" என்று கேட்க, மக்கள் இல்லை என்று சொன்ன பதிலைக் கேட்டு வீடு சென்றார். தமது இரண்டாவது மனைவியான ஆயிஷா பிராட்டியின் மடியின் மீது தலையைச் சாய்த்து "இறைவன் எனது நெருங்கிய மேலான நண்பன்," என்று உச்சரித்துக்கொண்டே (கி. பி. 8–6–632–ல்) திங்கட் கிழமை இஜ்ரி 22 ரபிஉல்அவ்வல் முதல் தேதி மாலையில் தம் ஊனுடலை நீத்தார்.

இவர் இறுதி நாளில் வாழ்ந்த யதுரிப் என்னும் நகரத்துக்கு பிற்காலத்தில் மதீனா என்னும் பெயர் உண்டாயிற்று. (முகம+தீனா) என்னும் சொல்லின் திரிபு மதீனா என்பதாகும். முகமதுநபிகள் இங்கு வாழ்ந்தமையால் இப்பெயர் அதற்கு உண்டானது.

குர்ஆன் வேதம்

நபிகளார் தியானம் செய்யும்போது அவருக்கு திடீரென மணியோசை கேட்குமாம். உடனே நபிகள் கீழே சாய்ந்து சமாதியில் ஆழ்ந்திருப்பார். அப்போது தேவ தூதர் 'இதனைப் படி' என்று கூற அதைப் படித்தபின் அந்த விஷயத்தைத் தமது சிஷ்யர்களிடம் கூறுவாராம். அச் சிஷ்யர்கள் அவற்றை எல்லாம் தொகுத்துத் திரட்டிய சொற்களே குர்ஆன் என்னும் வேதம். இந்த வேதம் நபிகளுக்கு 40 ஆவது வயதில் தரிசனம் தந்த நாள்முதல் அவருடைய 63 வது வயதுவரையிலும் இறைவனால் அவ்வப்போது போதிக்கப்பட்ட உரைகளின் தொகுப்பே ஆகும்; இதுவே குர்ஆன் எனப்படுவது.

இதில் 114 சூராக்கள் (அத்தியாயங்கள்); 6236 சொற்றொடர்கள்; 77934 சொற்கள் இருப்பதாகக் கலைக் களஞ்சியம் கூறுகிறது. இது அரபு மொழியில் இருப்பினும், இதனுடைய மொழிபெயர்ப்பு சுமார் 40 பிறமொழிகளில் இருக்கிறதாம். தமிழிலும் இதன் மொழிபெயர்ப்பு இருக்கிறது.

இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவர்கள் முக்கியமாகக் கடைபிடிக்கவேண்டிய நிபந்தனைகள் ஐந்து :

1. அல்லாவைத் தவிர்த்து மெய்யாக வணக்கத்துக்கு உரிய பாத்திரவான் யாரும் இல்லையென்று அறுதியிட்டுக் கூறுகிறேன். அவன் ஒப்பற்ற தனித்தலைவன். அவனுக்கு இணையாக யாருமில்லை.

2. மெய்யாக முகமது நபியவர்கள் (சல்) அவருடைய திருத்தூதரும் அடியாரும் ஆவாரென்று அறுதியிட்டுக் கூறுகிறேன் என்று வாயால் சொல்லவேண்டும். இவ்வாறு நாவால் கூறியதை மனத்தாலும் உண்மைப்படுத்தவேண்டும். இவ்விரண்டுமல்லாமல் ஷரீயத்தில் சொல்லப்பட்ட சட்டதிட்டங்கள்படி நடக்கவேண்டும்.

3. தினமும் 5 வேளை இறைவனைத் தொழவேண்டும் ஒவ்வோர் ஆண்டிலும் ரம்லான் மாதத்தில் 30 நாட்கள் நோன்பு நோற்கவேண்டும்.

4. தமது வருவாயில் 2½ சதம் ஏழை மக்களுக்கு உதவ வேண்டும்.

5. ஒவ்வொரு முஸ்லிமும் உயிருள்ளபோதே ஒரு தடவையேனும் மக்காவுக்குச் சென்று கஃபா என்னும் ஆலயத்தை தரிசிக்கவேண்டும்.

1. இஸ்லாம் என்றால் சாந்தி என்பதாகும்.
2. பாத்தியா—பிதுர்களைப் பிரார்த்தித்தல்
3. ஈமான்—மதத்தின் முக்கியக் கொள்கைகள்
4. தீன்—அநுஷ்டானங்கள்
5. ஜிப்ரேல்—பிரதான தேவதூதர் என்பன பொருளாகும்.
6. முகமது நபிகளுக்குப் புதல்வர்கள் இல்லை. ஒரு புதல்வி மட்டுமே உண்டு. பெயர் : பாத்திமா ; இவருடைய மருமகன் இவருடைய பெரிய தந்தையின் புதல்வர் அலி என்பவராகும்.
7. கலிபாக்கள், அபூபக்கர், அலி, உமர் உதுமான் என்னும் நால்வர். (எல்லாத் துறைகளிலும் சமூகத் தலைவர்கள்).
8. இவர்களுக்குள்ளும் 4 உட்பிரிவுகள் உண்டு எனக் கூறுகின்றனர். ஹனபி, ஷாபி, மாலிகி, ஹன்பளி என்பர்.

கிறிஸ்தவ மதம்

கிறிஸ்தவ மதமென்பது இயேசுநாதரால் தோன்றியது. இவர் பாலஸ்தீனத்தின் தென்பகுதியில் பெத்லகேம் என்னும் ஊரில் தோன்றினார். அதன் வடபகுதியில் உள்ள நாசரேத் என்னும் ஊரில் வளர்ந்தார். இவர் யூத மதத்தைத் சார்ந்தவர். தந்தை பெயர் யோஸேப் ; தாயின் பெயர் மேரியம்மையார். தோன்றிய காலம் நாடறிந்த விஷயம் 1987 ஆண்டுகளாயின.

யூதர்கள் தங்களை அடிமையிலிருந்து மீட்பதற்கு மேஸியா (அபிஷேகம் செய்யப்பட்டவர்) வரப்போகிறார் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர். காரணம் யூத மதத்தில் இருந்த தீர்க்கதரிசிகளின் வாக்கியமிது. ஆகவே யூதர்கள் மேஸியாவின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இவர் தோன்றிய காலத்தின் சூழ்நிலை இவ்வாறிருந்தது. இவருடைய இளமை வயதின் வரலாற்றைப்பற்றி சரியாகத் தெரியவில்லை.

சில ஐயப்பாடுகள்

இயேசுநாதரின் பால்ய வயதின் நிகழ்ச்சிகள் தெளிவாக விளங்காமையினால் இவருடைய சரித்திரத்தில் பல ஏஷியங்கள்

கூறப்படுகின்றன. இவரைப்பற்றிய செய்தி இவருடைய 28-வது வயதில்தான் தெளிவாக வெளிப்படுகிறது.

இயேசுநாதர் சிறுவயதில் இந்தியாவுக்கு வந்து ஒட்டகங்களின்பேரில் சரக்கேற்றிச் செல்லும் வர்த்தகர்களுடன் சுமார் 6 ஆண்டுகள் இந்தியாவில் தங்கி இருக்கிறார். இவர் புத்ததேவருடைய அன்பு நெறிகளை உணர்ந்து சென்றார். இயேசுநாதருடைய போதனைகள் பெரும்பாலும் புத்த தேவருடைய போதனைகளை ஒத்து இருப்பதைக் காணலாம். உதாரணமாக, ''தன்னை நேசிப்பதைப்போல உங்கள் அயலானையும் நேசியுங்கள். அன்பை அன்பால் பெறுங்கள். விரோதத்தை அன்பு கொண்டு வென்றுவிடுங்கள். பகையைப் போக்குவது பகைமையால் அல்ல: அன்பினால், உங்கள் விரோதிகளையும் நேசியுங்கள். ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தைத் திருப்பிக் காட்டுங்கள்'', என்னும் போதனைகள் புத்தபிரானின் போதனைகளை ஒத்தே இருக்கின்றன. இத்தகைய நன்மொழிகளை ஜீரணிக்கமாட்டாமல் யூதர்கள் இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்து கொன்று விட்டனர் என்பது சிலர் கருத்து. *

பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருஜி அவர்கள் எழுதியுள்ள உலக சரித்திரத்தின் தமிழாக்கம் பக்கம் 143-ல்

''சிலர் இயேசுநாதர் இந்தியாவுக்குக்கூட வந்ததாக நம்புகின்றனர். எதையும் நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. இயேசுவின் வாழ்க்கையை நன்கு ஆராய்ச்சி செய்தவர்களில் பெரும்பாலோர் இந்தியாவுக்கோ மத்திய ஆசியாவுக்கோ அவர் போகவில்லை என்று நம்புகின்றனர். ஆனால் அவர் அங்கு சென்று இருப்பது சாத்தியமல்ல என்று கூறமுடியாது. அந்நாளில் இந்தியாவில் புகழ்பெற்ற கலாசாலைக்கு தூர தேசத்திலிருந்து கல்வியை நாடிய பல மாணவர்கள் வந்துள்ளனர். இயேசுநாதரும் கல்வியை நாடி அங்கு சென்றிருக்கக்கூடும். இயேசுவினுடைய போதனைகள் புத்ததேவருடைய போதனைகளை ஒத்தேயிருப்பதால் அவர் புத்தமதத்தின் உண்மைகளை நன்கு உணர்ந்திருக்கிறார். புத்தமதம் அந்தக் காலத்தில் இந்தியாமட்டிலுமின்றி பிறநாடுகளிலும் பரவி இருந்தது. இயேசுநாதர் இந்தியாவுக்கு வராமலேயே அதைப்பற்றி அறிந்திருக்கவும் கூடும்'' என்று எழுதியுள்ளார்.

---

* ஆதாரம் ஆனந்தபோதினி 1923. ஜூலை மாத வெளியீடு பக்கம் 26. சுவாமி அபேதானந்தர் எழுதியுள்ளது.

இயேசுநாதர் இளமையில் பாலஸ்தீனத்தில் இருந்ததைப்பற்றி இவருடைய வாழ்க்கை வரலாற்றில் எவ்விதக்குறிப்பும் காணப்படவில்லை அவ்வாறு காணப்படாமையால் இயேசுபிரான் சில ஆண்டுகள் வெளிநாடுகளில் வசித்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. இயேசுபிரானுடைய போதனைகள் புத்த பிரானுடைய போதனைகளைப்போல இருந்தாலும்' இவர் அழுத்தமான கடவுள் நம்பிக்கை உடையவராகவும் இருக்கிறார்; இதையும் நாம் சிந்திக்கவேண்டும். அக் காலத்தில் இந்தியா பக்தியிலும், ஒழுக்கத்திலும் பெயர்பெற்ற நாடாகும். பக்தியும் ஒழுக்கமும் இயேசுபிரானிடம் பதிந்துள்ளன.

இயேசுநாதருக்கு 28 வது வயது நிறைந்தபோது பாலஸ்தீனத்தில் யோவான் என்னும் ஞானஸ்தானகர் ஒருவர் இருந்தார். மக்கள் அவரை தீர்க்கதரிசி என்று கருதிவந்தனர். இவர் "நீண்டகாலமாக மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் கடவுள் ராஜ்யம் நெருங்கி வந்துக்கொண்டிருக்கிறது," என்று மக்களுக்குக்குப் பிரசாரம் செய்துக்கொண்டு வந்தார் அவருடைய போதனைகளைக் கேட்டவர்களில் இயேசுநாதரும் ஒருவர். ஆயினும் இவர் தமது பணியைத் தனது 30 வது வயதில் தான் தொடங்கினார்.

முதலில் கலிலேயா என்னும் மாகாணத்தில் இவருடைய போதனைகள் ஆரம்பமாயின. மக்களுக்கு சுமார் இரண்டு ஆண்டுகள் நல்லுபதேசங்களைப் புரிந்துவந்தார். இவருடைய போதனைகள் மக்களிடையே பெரும்மாற்றத்தை உண்டாக்கின' இவருடைய கொள்கையைப் பரப்பப் பன்னிரண்டு சீடர்கள் (அப்போஸ்தலர்கள்) சேர்ந்தனர். இவர்களின்மூலமாக இயேசுநாதர் மக்களுக்குக் கடவுள் ராஜ்ஜியத்தைப் பற்றிக் கூறிவருமாறு பல திசைகளுக்கு அனுப்பி வைத்தார். இவர்களின் பிரசாரத்தைக் கேட்ட நாட்டுமக்கள் பெருமகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். மக்கள் இயேசுநாதரையே அரசராக்கவும் முயன்றனர். இத்தகைய கலகம் விளையக்கூடும் என்பதை உணர்ந்த இயேசுநாதர் யூதநாட்டுக்கு அப்பால் பிலீப் என்னும் சிற்றரசன் ஆண்டு கொண்டிருந்த செரியநாட்டுக்குச் சென்றார். இவருடைய சீடர்கள் இவரையேமேசியா என்று ஏற்றுக்கொண்டனர். அதன் பேரில் இயேசுநாதர் தன்னை மேசியாவாக அறிமுகம் செய்யத் துணிந்தார். பிறகு பாலஸ்தீனத்தின் தலைநகரான ஜெருஸலேமுக்குச் செல்ல ஆயத்தமானார். தமது 32-வது வயதில் எழுபது சீடர்களை ஜெருஸலேமுக்கு முன்கூட்டியே தமது வருகையை அங்குள்ள மக்களுக்கு அறிவிக்குமாறு அனுப்பிவைத்தார்.

பிறகு இவர் ஞானோபதேசச் சுற்றுலா செய்துகொண்டே 33-வது வயதில் ஜெருஸலேமின் தலைநகரை அடைந்தார். அங்கிருந்த தேவாலயத்தை வசப்படுத்திக்கொண்டார். அவ்விடத்தில் வாழ்ந்த மக்களுக்கு ஞானோபதேசம் போதித்து வந்தார்; இதனுல் குழப்பங்கள் உதயமாயின.

இவர் செய்துவரும் பிரசாரத்தால் அதிகாரிகளும், யூத குருமார்களும் திகைப்படைந்தனர். அவர்களுக்கு இவரை என்ன செய்வதென்றே விளங்கவில்லை. அவர்களால் இவரை வெளிப்படையாக எதிர்க்கவும் முடியவில்லை. சிறை செய்தாலும் கலகம் மூளும் என்ற அச்சம் அதிகரித்தது. பிறகு யூதகுருமார்களும் அதிகாரிகளும் ஒன்றுகூடி இவரை எப்படியேனும் ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர்.

சூழ்ச்சி ஆரம்பமாயிற்று

யூத மதத்தின் பிரதான ஆசிரியன் ஒருவன் பலரோடு இயேசுநாதரிடம் வந்தான். இவரைப் பார்த்து "நீ தோத்திரிக்கப்பெற்ற தேவனுடைய குமாரர் கிறிஸ்துவென்பது உண்மைதானா?" என்று கேட்க அதற்கு "நான் அவர்தான்" என்று பதிலளித்தார் (மார்க் 14. 62) அந்த நேரத்தில் அவரைச் சிலர் தலையில் குட்டினர்; சிலர் துப்பினர். சிலர் ஞான திருஷ்டியால் நன்றாகப் பார்த்துச் சொல் என்று அவருடைய முகத்தைத் துணியால் மூடினர்; வேலைக்காரனும் இவரைக் கன்னத்தில் அறைந்தான். பிறகு இவரைப் பிடித்துக் கொண்டு சென்று அரச நீதிமன்றத்தில் நிறுத்தினர்.

நீதிமன்றத்தில் இயேசுநாதரைப் பார்த்து 'நீ யூதர்களின் ராஜாவா?" என்ற கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு இயேசுநாதர் "நீங்கள் சொல்கிறபடிதான்" என்னும் பதிலைத் தந்தார். அதன்பேரில் யூத நீதிமன்றம் 'இவன் தன்னை மேஸியா என்று உரிமை கொண்டாடுகிறான்; ஆகவே இவன் தெய்வ நிந்தகன்' என்ற குற்றத்தைச் சுமத்திற்று. அரச நீதிமறத்தில் "இவன் யூதர்களின் ராஜா நான் என்பதனால் தேசத் துரோகி என்னும் குற்றத்தைச் சாட்டிற்று. இக் குற்றங்களுக்காக இவனைச் சிலுவையில் அறைய வேண்டு'மென்ற தண்டனையையும் உருவாக்கினர்.

தண்டனை யளித்தல்

இயேசுநாதருக்கு சிவப்பான அங்கியை உடுத்தினர். முள்ளினால் செய்த கிரீடத்தைத் தலையில் வைத்து அழுத்தினர்.

யூதர்களுக்கு ராஜாவே வாழ்க! என்று பரிகாசம் செய்தனர். முகத்தில் துப்பினர். சிலுவை மரத்தில் அணைத்து கைகளிலும் கால்களிலும் ஆணிகள் அறைந்தனர். அந்தக் கொடுமை அத்துடன் நிற்கவில்லை. "நீ கிறிஸ்து என்பது உண்மையானால் உன்னையும், எங்களையும் ரட்சித்துக் கொள்," என்று அதிகாரிகள் இகழ்ந்து பேசினார்கள். தேவனால் 'தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்து என்பது உண்மையானால், தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ளட்டும். இப்போது சிலுவையிலிருந்து கீழே இறங்கி வரட்டும்; அப்போது இவனை விசுவாசிப்போம்' என்று பலர் பலவாறு கூறி எள்ளி நகையாடினர். அதிகாரிகளும் மதவாதிகளும் இவருக்கு இழைத்த இழிசெயல்களை இத்துடன் நிறுத்திக் கொண்டு விஷயத்துக்கு வருவோம்.

இயேசுநாதர் தமக்குச் செய்த கொடுமைகளைப் பற்றி வருந்தி ஒரு தீய சொல்லையும் பயன்படுத்தவில்லை. "பிதாவே! தாங்கள் செய்வது இன்னதென்று தெரியாதிருக்கிறார்கள். இவர்களை மன்னியுங்கள்!" என்று இறைவனிடம் முறையிட்டாராம். பிறகு மௌனமாகிவிட்டார்.

இவரைச் சிலுவையில் ஏற்றிய நேரம் "ஏறக்குறைய ஆறாம் மணி நேரமாய் இருந்தது," என்று லூக்கா 24-14 பைபிளில் கூறியுள்ளார். சிலுவையில் அறைந்த ஆறாம் மணி முதல் ஒன்பதாம் மணி வரையில் அமைதியாக இருந்து (சுமார் 3 மணி நேரம்) பிறகு உரத்த குரலில், "ஏலீ! ஏலீ! லமா சபக்தானி" என்று கூறினாராம். இதன் பொருள். "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்பது ஆகும். மறுபடியும் மகா சத்தத்தோடு கூவி ஆவியை நீத்தார்; என்றும் மறித்தபின் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்றும் கூறப்படுகிறது. மறித்தெழுந்த விஷயத்தில் பல ஆராய்ச்சியாளர்கள் பலவாறாகக் கருதுகின்றனர்.

மௌல்வி முகமதலி அவர்கள் எழுதியுள்ள 'இயேசுவின் இரகசியம்' என்னும் நூலை விருப்பமுள்ளவர் பார்க்கவும். நமக்கு இந்த விஷயத்தில் சர்ச்சைகள் தேவையில்லை.

சிலுவையில் அறைதல் என்பது † இம் மாதிரியாக மரக் கட்டையால் செய்து, அதில் இரண்டு கைகளையும் விரித்து வைத்து குற்றவாளிகளின் உள்ளங் கைகளில் இரும்பு ஆணிகளை அறைந்து விடுவார்கள். கால்களையும் நிற்கின்ற நெடுமரத்தில் சேர்த்து ஆணியை அறைந்து விடுவார்கள். இவ்வாறு சிலுவை

யில் அறையப்பட்ட நபர் இரண்டு மூன்று தினங்கள் வரையிலும் பசி, தாகம், துன்பம் என்பவற்றால் அவதியுற்று இறந்துபோவார். அதன்பிறகு அப்பிரேதத்தைக் கொண்டு போய் இடுகாட்டில் புதைத்துவிடுவார்கள். இது அக்கால யூதர்கள் குற்றவாளிகளுக்கு அளிக்கும் கடுமையான தண்டனையாகும்.

அறநெறிகளுக்குப் புறம்பாக வாழக்கூடிய மக்கள் எங்கு அதிகரிக்கின்றனரோ, அங்கெல்லாம் இத்தகைய கொடுமைகள் நிகழ்வது இயல்பாக அமைந்து விடுகின்றன.

முகமது நபிகள் இஸ்லாம் மதத்தை நிறுவுவதற்காகச் சுமார் இருபத்தி மூன்று ஆண்டுகள் அயராது உழைத்தார். அவருக்கு ஏற்பட்ட தொல்லைகளும் ஆபத்துக்களும் கொஞ்சநஞ்சமல்ல. நாட்டைவிட்டே பல ஆண்டுகள் வெளியேற நேர்ந்தது. அவர் நாட்டில் வாழ்ந்த காலங்களை 'நித்திய கண்டங்கள்' என்றே கருதலாம், வெளிநாட்டிலிருந்து படை திரட்டிக்கொண்டு வந்து போரிட்டு இஸ்லாம் மதத்தை நிறுவ வேண்டியதாயிற்று. காரணம் சில பிரதேசங்களில் வாழும் மக்களிடம் முரட்டு சுபாவங்களும், பிடிவாத குணங்களும் இயல்பாகவே காணப்படுகின்றன. ஒருவகையில் இத்தகைய குணங்கள் சில நாடுகளில் பாரம்பரியப் போக்காகவும் காணப்படுகிறது. "பன்றியோடு சேர்ந்தால் கன்றும் மலம் தின்னும்" என்பது ஒரு முதுமொழியாகும். அதைப் போல சில கொடிய சமுதாயங்களோடு தொடர்புகொண்டவர்களுக்கும் அத்தீய குணங்கள் பதிந்துவிடுகின்றன என்பதும் நாம் கண்கூடாகக் கண்டுவருகிறோம். இதனால் தான் 'சேரிடம் அறிந்து சேர்" என்றும் நமது முன்னோர்கள் நம்மை எச்சரித்தனர்.

இயேசுநாதரின் குறிக்கோள் கடவுள் ராஜ்யத்தைப் பற்றியதாகும். முரட்டு சுபாவமுடைய யூதர்களால் இவருடைய முயற்சி ஈடேறவில்லை. கடவுள் ராஜ்ஜியத்தை நிறுவதற்குப் பதிலாகக் கல்லறையை அடைந்துவிட்டார். தம்முடைய 30-வது ஆண்டில் பிரசாரத்தைத் தொடங்கினார். 33-வது ஆண்டில், ஆதாவது மூன்றே ஆண்டுகளில் கொடுமைக்கு ஆளாகி உயிர் நீத்தார். "விரோதத்தை அன்பின்மூலம் வெல்லுங்கள்," என்று அருளுரை வழங்கினார். ஆனால் அவராலேயே வெல்லமுடியவில்லை; அவர் கொல்லப்பட்டார். இன்னும் கடவுள் ராஜ்யம் வந்தபாடில்லை. நாளுக்குநாள் உலகத்தை நரக ராஜ்ஜியமாக்குவதில் சில கொடியவர்கள் ஈடுபட்டுள்ளனர். உலகம்

அமைதியை அடைய இன்னும் எத்தனை காலங்களாகும் என்பது நமக்குத் தோன்றவில்லை.

புத்தமதம்

காசிக்கு வடக்கேயுள்ள கபிலவஸ்து என்னும் பிரதேசத்தை சுத்தோதனன் என்னும் குறுநில மன்னன் ஆண்டுவந்தான். இது பண்டைய புகழ் வாய்ந்த கோசல நாட்டின் ஒரு பகுதியாகும். கபில முனிவர் என்னும் ஒரு யோகீஸ்வரர் தவம் செய்த இடமாத லால் இப் பிரதேசத்துக்கு கபிலவஸ்து என்னும் பெயர் எய்திற்று

சுத்தோதன மன்னன் இட்சுவாகு பரம்பரையைச் சேர்ந்தவன் என்பர். குலம் சாக்யகுலம் குடும்பம் கௌதம குடும்பம். இந்த மரபில் வந்த சுத்தோதன மன்னனுக்கு கலியுகாதி 2538-ல் வைகாசித் திங்கள் 13-ம் நாள் விசாக நட்சத்திரம் நிறைமதி நாளன்று (கி. மு. 563) புத்தபிரான் அவதரித்தார்.

"இருது இளவேனில் எரிகதிர் இடபத்து
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்"

(மணிமேகலை 15 காதை 23, 26)

தாயின் பெயர் மாயா தேவியார். இவர் பிறந்த உடன் சோதிடர்கள் நாளும் கோளும் ஆராய்ந்து இக்குழந்தை சக்ர வர்த்தி ஆகும்; அல்லது உலகம் போற்றத்தக்க ஞானியாகும் என்று கூறினர். அசிதர் என்னும் ஓர் முனிவர் அரசவைக்கு வந்தார். சுத்தோதன மன்னர் அம்முனிவரை வரவேற்று ஆசனமளித்து அமரச்செய்து இக்குழந்தையைக் கொண்டுவந்து அவருடைய பாதங்களின் அருகில் வைத்து ஆசிபுரியுமாறு வேண்டினர். முனிவர் அக் குழந்தையைக் கைகளிலேந்தி அதன் அங்க அடையாளங்களைக் கண்டு வியப்புற்றார். குழந்தையின் பாதங்களில் பதுமரேகைகளைக் கண்டு அப் பாதங்களைத் தமது கண்களில் ஒத்திக்கொண்டார். "இக்குழந்தைக்கு ஆசி புரியும் தகுதி எனக்கில்லை; இது மனித குலத்துக்கே ஆசி புரிய உதித்திருக்கிறது. மானிடம் என்னும் மரத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை இதுபோன்ற மலர் மலரும். இக் குழந்தையால் உன் குலம் பெருமையடையும்," என்று மன்னனையும் குழந்தையையும் புகழ்ந்துவிட்டுச் சென்றார்.

தாயை இழந்த குழந்தை

புத்தபிரானை ஈன்ற மாயாதேவியார் இவர் பிறந்த 7-ம் நாள் உயிர்நீத்தார். மன்னருடைய இரண்டாவது மனைவியார் மஹா பிரஜாவதி என்னும் அம்மையார் இவரை மிகவும் அன்பாக

வளர்த்து வந்தார். இக்குழந்தைக்கு சித்தார்த்தர் என்ற பெயர் சூட்டப் பெற்றது. இதுவே இவர் இயற்பெயர். புத்தர் என்னும் பெயர் இவர் ஞானம் பெற்ற பிறகு வந்ததாகும்.

திருமணம்

தன் பிள்ளை துறவியாகக்கூடும் என்று சோதிடர்களும், அசீதர முனிவரும் கூறியிருந்தமையால் சித்தார்த்தருக்கு யாதொரு துன்பமும் புலனாகாதவண்ணம் வளர்க்கப்பெற்றார். இவருடைய இளமைப் பருவம் எந்தவிதமான கவலையும் தோன்றாத நிலையில் கழிந்துவந்தது. இவருக்கு 19-வது வயதில் சுத்தோதனமன்னன் தனது மைத்துனரின் மகளும் முறைப் பெண்ணுமான யசோதரை என்னும் கன்னியை மணம் முடித்து வைத்தார். இளவரசுப் பட்டமும் சூட்டப்பெற்றது. சித்தார்த்தருக்கு இராகுலன் என்னும் ஓர் ஆண் மகவும் பிறந்தது. இதுநாள் வரையிலும் சித்தார்த்தர் யாதொரு துன்பமும் தோன்றாதவண்ணம் உலகத்தை இன்ப மயமானதாகக் கருதி வந்தார்.

துன்பத்தின் தோற்றங்கள்

ஒருநாள் இவர் வெளியில் உலாவச் செல்லும்போது மிகவும் வயோதிகர் ஒருவரைக் கண்ணுற்றார். அம்முதியவர் நடக்கவும் முடியாமல் கோலை ஊன்றிக்கொண்டு தள்ளாடியவண்ணம் எதிரில் வந்து கொண்டிருந்தார். அந்த பரிதாபக் காட்சியைக் கண்டு பக்கத்தில் இருந்தவரிடம், 'இவரேன் இவ்வாறு தள்ளாடுகிறார் ?' என்று கேட்டார். அதற்கு அவர் இது முதுமைப் பருவமாகும். வயோதிகக் காலத்தில் உடல் தளர்ச்சியுற்று இந்த நிலையை அடைவது இயல்பாகும் என்று கூறினார். அந்த வாக்கியத்தைக் கேட்டதும் இவருடைய மனம் மிகவும் குழப்பமடைந்தது. நமக்கும் முதுமையில் இந்த நிலை வரக் கூடும் என்று நினைத்தது.

மற்றொரு நாள் கோரமான ஒரு நோயாளியைக் கண்ணுற்றார். மக்களுக்குத் துன்புறுத்தக்கூடிய நோய்களும் வருகின்றன என்பதை உணர்ந்தபோது முன்னினும் பன்மடங்கு வருந்திற்று மனம். இன்னொருநாள் இவர் மாளிகையின்மீது உலாவிக் கொண்டிருக்கையில் தெருவில் சிலர் ஒரு பிணத்தைத் தூக்கிக்கொண்டு செல்வதைக் கண்டார். அருகிலிருந்தவரைப் பார்த்து, 'ஏன் இவரை இவ்வாறு சுமந்துக்கொண்டு செல்

கின்றனர் ?' என்று கேட்டார். 'இவர் இறந்துவிட்டார்; பிரேதத்தை இடுகாட்டில் கொண்டுபோய் புதைத்து விடுவார்கள்' என்று அருகில் இருந்தவர் விபரமாக விளக்கினார். இதை உணர்ந்த சித்தார்த்தருடைய உள்ளம் திடுக்கிட்டது. பிறந்தவர்கள் யாராக இருப்பினும் அவர்களுக்கு மரணம் தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்த நாளிலிருந்து இவருடைய மனம் நெகிழ்ந்தது அரச போகத்திலிருந்த பற்று நாளுக்குநாள் அகல ஆரம்பித்தது.

நரை, திரை, மூப்பு, சாக்காடு இந்நான்கையும் போக்க வழியுண்டா ? அதைக் கண்டுபிடிக்கவேண்டும் என்னும் எண்ணம் தீவிரமாயிற்று. பல பண்டிதர்களை வரவழைத்து அவர்களிடம் தன் கருத்தை வெளியிட்டார். அப்பண்டிதர்கள் தந்த பதில்கள் இவருடைய மனதை நிறைவுபடுத்தவில்லை. இந்த உண்மையை நாமே அறியவேண்டும் என்னும் எண்ணம் மேலோங்கிற்று.

துறவு பூணல்

வனங்களிலும் மலைக் குகைகளிலும் தவம் செய்துகொண்டிருக்கும் முனிவர்களை அணுகிக் கேட்டால்தான் இதனை உணரமுடியும் என்று தீர்மானித்தார். அவர்களுடைய அநுக்கிரகத்தைப் பெறுவதற்குத் துறவே சிறந்த வழி என்று கருதி, தமது 29வது வயதில் உலக ஆசையை வெறுத்து அரச போகத்தையும் உதறித் துறவை மேற்கொண்டார். பல முனிவர்களை அணுகினார். குறிப்பாக உருத்திரகன் என்னும் முனிவரையும், பிறகு சுவேத கிரி என்னும் இடத்தில் தவம் செய்துகொண்டிருந்த ஆராள்ராம முனிவர் என்பவரையும் அணுகி அவர்களிடம் தமது எண்ணத்தை விண்ணப்பித்தார். அவர்கள் கூறியவண்ணம் விரதங்களையும் மேற்கொண்டார். பல நூல்களையும் ஆராய்ந்தார். இந்த விரதாதிகளால் உடல் மிகவும் மெலிந்து இளைத்துப்போயிற்று. இத் தீவிரமான விரதங்களை மேற்கொண்டதின் பயனால் உடல் மரணத்தருவாயை நெருங்கிவிட்டது. அத் தருணத்தில் அருகில் இருந்த ஊரில் வாழ்ந்து வந்த பலன் என்னும் ஆயனுடைய மகள் ஸுஜாதை என்னும் உத்தமி இவருக்குப் பாலன்னமூட்டி இவருடைய உடலைத் தேற்றினாள். பிறகு நைரஞ்சிதை நதிக்கரையில் ஒரு அரசமரத்தின் அடியில் உணவு உறக்கமின்றி 7 வாரங்கள் சிலைபோல ஐம்புலன்களையும் அடக்கி தியானத்தில் இருந்தபோது இவருடைய உடல் மிகவும் தளர்ச்சி அடைந்ததென்று சிலர் கூறுகின்றனர். அந்த உத்தமியின் உதவியால் இவர் உடல் தேறியதோடன்றி இவருடைய உள்ளமும் உண்மையை உணர்ந்துவிட்டது. நிர்வாண

நிலை என்னும் சமாதி நிலையை அடைந்ததின் பயனால் ஆத்துமா இன்னதென்பதை உணர்ந்தார். உண்மை ஞானம் உதயமாயிற்று. "நான் எதை அறியவேண்டுமோ அதை அறிந்துகொண்டேன்" என்று மகிழ்ச்சி அடைந்தார். தன் உடல்நிலை தேறிய பிறகு அவ்விடத்தைவிட்டு காசியின் அருகில் இருந்த மான்வனம் (DEER PARK) என்னும் இடத்துக்குச் சென்றார். அங்கு தவம் செய்துகொண்டிருந்த முனிவர்களுக்கு, தாம் கண்ட உண்மைகளை விளக்கினார். அந்த நேரத்தில் பிம்பசாரன் என்னும் மன்னன் ஒரு பெரு வேள்வியைத் தொடங்கியிருந்தான். அவ்வேள்வியில் உயிர்களைப் பலியிடப்போவதாகக் கேள்வியுற்றார். உடனே அவ்வேள்விச் சாலையை நாடிச் சென்றார். அம்மன்னனைச் சந்தித்து அவனுக்கு ஜீவகாருண்யத்தின் மேன்மையைக்கூறி உயிர்ப்பலியைத் தடுத்தார்.

பிறகு நாடு நகரங்களுக்கெல்லாம் சென்று ஒழுக்க நெறிகளையும், ஜீவகாருண்யத்தின் மேன்மையையும் வீட்டின்பத்தைப்பற்றிய தத்துவங்களையும் போதித்து வந்தார். இவருக்குப் மன்னர்கள் பலர் சிஷ்யர்கள் ஆயினர். இவருடைய நற்போதனைகளையும் மக்கள் பெரிதும் வரவேற்றனர். இவருக்கு முக்கியமான சிஷ்யர்கள் பதின்மர்கள் இருந்தனர். 1. சுபுத்தி. 2. பூரணன். 3. காத்தியாயனன். 4. உபாலி. 5. ராகுலன். 6. மௌத்கல்யன். 7. காசீபன். 8. அநிருத்ரன் 9. சாரிபுத்தன். 10. ஆனந்தன் என்பவர்களாவர்.

இவர் தமக்கு 80வது வயது நிறைகின்றவரையிலும் ஆங்காங்கு சென்று மக்களுக்கு நன்னெறிகளை போதித்து வந்தார்

இறுதிக் காலம்

தன் சிஷ்யர்களுடன் குசினாகரம் என்னும் ஊருக்குச் செல்லும் வழியில் இரண்யவதி என்னும் நதிக்கரையில் ஆச்சா மரங்கள் நெருங்கி இருந்த ஒரு சோலையில் தங்கினார். தற்போது கோரக்பூர் என்னும் ஜில்லாவில் காச்சா (ஆச்சா) என்னும் இடத்தில் தன் சிஷ்யர்களைப் பார்த்து "இதுவரையிலும் யான் உங்களுக்குக் கூறியவற்றுள் ஐயப்பாடு இருக்குமானால் தடையின்றிக் கேளுங்கள்," என்று சிஷ்யர்களிடம் கேட்டார். அதற்கு ஒருவரும் பதில் கூறவில்லை. பிறகு "நீங்கள் இதுவரையிலும் என்னையும் யான் கூறியவற்றையும் நேசித்ததைப்போல நீங்கள் ஒருவரை ஒருவர் நேசித்து ஒழுகுங்கள்," என்று கூறினார்.

இவ்வாறு புத்தபிரான் கூறியபோது சிஷ்யர்களுக்கு இவர் தம்மைவிட்டுப் பிரியப்போகிறார் என்கின்ற விஷயம் புரிந்து விட்டது. அப்போது இவருடைய பிரிவாற்றாமைக்கு சிஷ்யர்கள் ஆழ்ந்த துக்கத்தினால் கண்கலங்கினர். புத்த பிரான் தமது சிஷ்யர்களைப் பார்த்து அப்போது அவர் களுக்குக் கூறிய அருளுரைகள் :

" அன்பர்களே ! பிறப்புக்குக் காரணம் எதுவோ அதுவே இறப்புக்கும் காரணமாகும். இந்த உண்மையை நீங்கள் மறக்கக் கூடாது. இதை திடமாக உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். நாம் நம்முடைய வினைகளிலிருந்து தப்பவே முடியாது. ஒருவன் தன்னைத் தானே உருவாக்கிக்கொள்கிறான். என்னுடைய கருமம் என்னுடைய உடமையாகும். என் கருமமே என்னுடைய புகலிடம். நாம் நரகம் அடைவதும் சொர்க்கம் அடைவதும் நம்மையே பொருத்திருக்கிறது," என்று அவர்களுக்குச் சில ஆறுதல்கள் கூறினார். புத்தபிரான் கூறிய இவ் உறுதி மொழிகள் அவர்களுக்குமட்டுமல்ல. உலக மக்கள் அனை வருக்குமே பொருந்தும் என்றும் கருதலாம்.

தன் அன்புக்குரிய ஆனந்தனைப் பார்த்து "ஆனந்தா ! அந்த இரண்டு மரங்களுக்கும் இடையில் எனக்கு ஒரு படுக் கையைத் தயார் செய்," என்று கூறினார், அந்த உத்தம சிஷ்யனான ஆனந்தனும் புத்தபிரான் கூறியவண்ணம் தயார் செய்தார். புத்தபிரான் அவ்விடத்தை அடைந்து தலையை வடக்கே வைத்து வலக்கையைத் தலையணையாக ஆக்கிக் கொண்டு மேற்கு திசையை நோக்கி ஒருக்கணித்து கால்மேல் கால் கிடத்தி அமைதியாகப் படுத்தார். அப்போது புத்தபிரானு டைய பிரிவைத் தாங்காத ஆனந்தன் கண்கலங்கி நின்றான். புத்தபிரான் மறுபடியும் ஆனந்தனைப் பார்த்து "ஆனந்தா ! துயரப்படாதே !" என்று ஆறுதல் கூறி மற்றைய சிஷ்யர்களைப் பார்த்து "நான் அறிந்தவற்றை எல்லாம் அறிந்து கொண்டவன் ஆனந்தன் ; என்னால் அறியவேண்டியவற்றை இனிமேல் இவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று கூறிய பின் 'எல்லாப் பற்றையும் அற்ற பெருநிலை' என்னும் பரி நிருவாண நிலையை அடைந்தார். அன்று வைகாசித் திங்கள் விசாக நட்சத்திரம் நிறைமதி நாளாகும்.

புத்தபிரான் தோன்றியதும் வைகாசித் திங்கள் விசாக நட்சத் திரம் நிறை மதி நன்நாள், ஞானம் பெற்றதும் வைகாசி விசாகம் நிறை மதி நன்னாள். பரிநிருவாணமடைந்ததும் அதே வைகாசி

விசாகம் நிறைமதி என்பர். ஆகவே வைகாசி மாதத்தில் வரும் பௌர்ணமி நன்னாளை புத்தர்கள் புனித நாளாகக் கருதி விசேஷமாகக் கொண்டாடுகின்றனர்.

புத்தபிரான் கூறிய தத்துவங்களில் சில முக்கியமானவை

1. துக்கம் தோன்றுவதற்குக் காரணம்
2. துக்கத்தைப் போக்கும் நெறிமுறைகள்
3. துக்க நிவர்த்தியின் நிலை

இவற்றை விரிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளார்.

திரிசீலம்

1. பாவம் செய்யாதிரு
2. நன்மையைக் கடைபிடி
3. இதயத்தை சுத்திசெய்

பஞ்ச சீலம்

1. கொல்லாமை. 2. கள்ளாமை. 8. கள்ளுண்ணாமை. 4. பொய்யாமை. 5, விபசாரம் செய்யாமை என்பனவாகும்.

துக்கத்தைப் போக்கும் நெறிகள் 8

1. நற்காட்சி	5. நல்வாழ்க்கை
2. நல்லூற்றம்	6. நன்முயற்சி
3 நற்செய்கை	7. நற்கடமை
4. நல்வாய்மை	8. நற்சங்கம்

என்பனவாகும்.

1. துக்கம் தோன்றுவதற்குக் காரணம் அறியாமை ;
2. இறப்பு—பிறப்புககுக் காரணம் வினை
3 ஆசை அற்றால் ஆனந்தம் பெருகும்

என்பவற்றை புத்தபிரான் உபதேசித்து வந்தார்.

புத்த மதத்தினர் மூல மந்திரம் போல தியானத்துக்குப் பயன் படுத்தும் தொடர் மொழிகள் மூன்று.

1. புத்தம் சரணங்கச்சாமி—குரு பக்தியை நினைவூட்டல்.
2. தன்மம் சரணங்கச்சாமி—அறநெறிகளை நினைவூட்டல்
3. சங்கம் சரணங்கச்சாமி—நல்லோர்களின் நேயம் கோரல்

என்பன புத்தமதத்தினர் பயன்படுத்தும் நன்மொழிகளாகும்.

புத்தபிரானுக்குப் பிறகு இது நான்கு பிரிவுகளாகப் பிரிந்து விட்டது. 1. மாத்திய மீகர். 2. யோகசாரர். 3. சௌராந் திகர். 4. வைபாஷிகர் என நான்கு பிரிவுகளாகிவிட்டன.

கடவுளின் பெயரால் பல உயிர்களைப் பலியிடுவதைவிட ஓர் உயிரைக் காப்பாற்றுவது நல்லது என்று புத்த பெருமான் கூறினார். பிற்காலத்தில் புத்தபிரானின் வழிவந்த போதகர்கள் கடவுள் நம்பிக்கையையே எதிர்க்க ஆரம்பித்தனர். ஆனால் அந்த எதிர்ப்புகளினால் இந்து மதம் தெய்வ நம்பிக்கையை விட்டுவிடவில்லை. எனினும் புத்தபிரானுடைய அகிம்சா முறையை ஏற்றுக்கொண்டது.

பண்டைய நாட்களில் அந்தணர்கள் செய்யும் வேள்விகளில் கடவுளின் பெயரால் உயிர்ப் பலிகளும் நடந்துள்ளன. புத்த பிரானுடைய போதனைகளுக்குப்பிறகு அந்தணர்கள் வேள்வி களில் உயிர்ப் பலி இடுவதை அறவே நீக்கிவிட்டனர். மற்றும் புலால் உண்பதையும் மது (சோமபானம்) அருந்துவதையும் விட்டுவிட்டனர்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்."

என்று வள்ளுவப் பெருமான் போற்றத்தக்க நிலைக்கு மாறி விட்டனர். இந்து மதத்தில் அந்தணர்கள் திருந்தியதைப்போல், புத்தருடைய சிஷ்யர்களும் கடவுள் கொள்கையை எதிர்க்காமல் புத்தபிரானைப்போலவே ஒழுக்க நெறிகளையும் ஜீவகாருண் யத்தையும் போதித்திருந்தால் புத்தமதம் என ஒன்று தனியாக இருந்திருக்காது. இன்னும் இவருக்குமுன் இந்துமதத்தில் தோன்றின பல ஞானியருள் இவரையும் ஒருவராகத்தான் இந்து மதப்பெரியோர்கள் கருதிதுகின்றனர். அதனால்தான் புத்தபிரா னுக்கு எதிர்ப்புகளைத் தோற்றுவித்து இவரை அச்சுறுத்த வில்லை. மற்றும் இந்துமதம் சகிப்புத் தன்மையோடு பரந்த நோக்கமுமுடையது. சுதந்திரமான சிந்தனைக்கு விட்டுக் கொடுக்கும் தன்மை வாய்ந்தது. எந்த நல்ல கொள்கையாக இருந்தாலும் நாளடைவில் அதில் சில மாசுகள் படிவது இயல் பாகும். இந்துமதம் மிகமிகப் பழைமையானது. அதில் படிந்து விட்ட மாசை அகற்றத் தோன்றியவர் புத்தபிரான். அவர் கூறிய நற்கருத்துக்களை அக் கால அந்தணர்களில் பெரும்பாலோர் ஏற்றுக் கொண்டனர், அதன் பயனால் வேள்விகளின் உயிர்ப்பலி இடுவதை விலக்கிவிட்டனர். மற்றும் அந்தணர்கள் புலாலுண் பதை ஒழித்ததுடன் சோமபானமென்னும் மதுவருந்துவதையும் நீக்கிவிட்டனர்.

புத்தபெருமான் ஓர் இந்து. இவர் தம்முடைய மதத்தில் காணப்படும் சில தீமைகளை அகற்ற ஒளிவுமறைவில்லாமல் நாடு நகரங்களுக்கெல்லாம் சென்று தமது 35வது ஆண்டிலிருந்து சுமார் 45 ஆண்டுகள் இடைவிடாது பிரசாரம் செய்துவந்தார்.

இயேசுநாதர் ஒரு யூதர். இவர் தம்முடைய யூத மதத்தில் காணப்படும் சில தீமைகளை அகற்றவும் மக்களுக்கு போதிக்கவும் தமது 30வது வயதில் தொடங்கினார். அவரை யூதர்கள் 3 ஆண்டுகள் நிறைவதற்குள் கொன்றுவிட்டனர்.

முகமது நபிகளார் குறைஷியர் இனத்தைச் சேர்ந்தவர். அந்த இனமக்களிடம் இருந்த சில தீமைகளை அகற்றத் தமது நாற்பதாவது வயதில் தொடங்கினார். அவருடைய இனத்தைச் சேர்ந்த குறைஷியர்களே முகமது நபிகளாருக்கு இழைத்த இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல. கொலை மிரட்டல் செய்ததோடு, படையெடுத்துச் சென்று கொல்லவும் முயன்றனர்.

இந்திய நாட்டுப் பண்பாட்டிற்கும், இதர நாடுகளின் பண்பாட்டிற்கும், உள்ள தாரதம்யங்களை நாம் இங்கு சிந்திக்க வேண்டும். மற்றும் புத்தபிரானைப்பற்றிச் சில பேரறிஞர்கள் கூறும் கருத்தையும் சிறிது கவனிக்கவேண்டும் !

ரைஸ் டேவிட் (Rhys Davids) 1908–ல் பௌத்தசங்கம் வெளியிட்டுள்ள புத்த சரித்திரம் பக்கம் 57,58–ல், புத்தரைப்பற்றிக் கூறியிருப்பவை :

"கௌதம புத்தர் இந்துவாகவே பிறந்தார். இந்துவாகவே வளர்ந்தார். இந்துவாகவே இறந்தார். கௌதம புத்தருடைய தத்துவ சாத்திரத்திலும் மானச சாத்திரத்திலும் இந்துக்களுடைய வழியாக வந்துள்ள தரிசனங்களுள் யாதேனும் ஒன்றில் இல்லாதது ஒன்றுமில்லை. அவர் வகுத்துள்ள அறநெறிகளனைத்தும் இந்துக்களுடைய் நூல்களிலிருந்து எடுத்துக் காட்டப்பட்டவைகளே. புத்தரிடத்தில் விசேஷ ஆர்வத்துடன் காணக்கூடியவை லோகோபகாரம். ஜீவகாருண்யம்....தமக்கு முன்னம் இருந்த அப் புராதன மதத்தின் உட்பொருள்களைச் சரியான முறையிலும் தெளிவாகவும் விளக்கிக் காட்டியவர்கள் எல்லாருள்ளும் தாமே சிறந்தவர் என்று தம்மைப்பற்றி எண்ணிக் கொள்ள புத்தருக்கு உரிமையுண்டு. இவர் இந்துக்களுள் மிக உயர்ந்தவரும் அறிவுடையவரும் சிறந்தவருமாக இருந்தார்," என்று எழுதியுள்ளார்.

கிழக்கிந்திய பரிசுத்த நூல்கள் (Sacred Books of the East) என்னும் நூல்களின் வரிசையில் மேக்ஸ் முல்லர் வெளியிட்டுள்ள 15ஆம் நூலின் நூன்முகம் பக்கம் 52ல்,

"என் புத்திக்கு ஏற்ற உபநிடதங்கள் புத்தமதத்துக்கு மூலம். புத்தமதம் பல்லாற்றானும் உபநிதங்களின் கொள்கையை எந்த முடிவுவரைக் கொண்டுசெல்லமுடியுமோ அந்த முடிவுவரை கொண்டு சென்று உள்ளது. அது பின்னும் அவ்வுபநிடதங்களின் கொள்கையையே தன் நூதனமான கோட்பாட்டுக்கு ஆதரமாக வைத்திருக்கிறது. கொள்கையைப்பற்றிச் சொல்லப் புகுங்கால் வேதாந்தத்தால் நாடப்படுவதும் யாவற்றுக்கும் மேலான முடிவானதுமாகிய ஆத்தும தத்துவ ஞானமானது பௌத்தர்களுடைய நல்ல ஞானமேயாகும். ஆசாரத்தைப்பற்றிப் பேசுங்கால் இந்து சந்யாசியே புத்தபிக்ஷுவாம்" என்று எழுதியுள்ளார்.

சுவாமி விவேகானந்தர், சர்வமத 'சமரச மகாசபை' நேஷனல் பிரஸ், பெங்களூர் 1933ல் வெளியீடு பக்கம் 68ல்

"எவ்வித சுயநலமும் கருதாது கர்மயோகத்தைப் பூர்த்தியாக அப்பியாசித்தவர்களில் புத்த பிரானுக்கு ஒப்பாக உலக சரித்திரத்தில் இதற்கு முன்னும் பின்னும் தோன்றவேயில்லை. இதுவரையிலும் ஆத்ம சக்தியை வெளிப்படுத்தி விளக்கியவர்களில் அவரைப்போல ஒருவருமிலர். உலகில் நீதிநெறிமார்க்க சீர்திருத்தத்தை முதலில் கொண்டுவந்த மகாபுருஷர் புத்த பிரான்," என்று விளக்கியுள்ளார்.

புத்த மதத்தோடு தெய்வபக்தி என்ற ஒன்றைமட்டும் சேர்த்துவிட்டால் இந்துமதம் வேறு புத்த மதம் வேறல்ல; இரண்டும் ஒன்றே, புத்த மதத்தில் கடவுள் பக்திக்குப் பதிலாக குருபக்தி சிறப்பாக அமைந்துள்ளது.

ஜைன மதம்

ஜினர் என்னும் சொல் ஜைனம் என வந்துள்ளது. ஜினர் என்றால் ஜெயித்தவர் (இந்திரியங்களை வென்றவர்) என்பதாகும். இம் மதத்தை ஆருகதமென்றும், சமணமென்றும் கூறுவர். இதன் ஆதி புருஷர் இரிஷபதேவர் என்கின்றனர்.

மகாவீரர் பிறப்பு

மகத நாட்டில் பாடலிபுரத்துக்கு அருகில் அமைந்த குண்டலபுரம் என்னும் நகரில், (தற்போது பீகார் என்னும் பகுதி) மகாவீரர் கலியுகாதி 2502–ல் (கி. மு. 599) தோன்றினார்.

தந்தையின் பெயர் சித்தார்த்தர். இவர் ஒரு குறுநில மன்னர். தாயின் பெயர் திரிசலை. இவருடைய இளமைத் திருநாமம் வர்த்தமானர்.

இளமை

இவர் அரச குடும்பத்தில் பிறந்திருந்தும் இளமையிலிருந்தே உலகப் பற்றற்றவராகவே விளங்கினார் எதனிடத்தும் விருப்பு வெறுப்பு இல்லாமல் சமநோக்கு உள்ளவராகவே வாழ்ந்து வந்தார். இவருடைய 28ஆம் ஆண்டில் இவருடைய பெற்றோர்களும் பரகதி அடைந்தனர். பிறகு தமது செல்வத்தை எல்லாம் ஏழை எளியவர்களுக்கு தானம் செய்து விட்டு தமது 30வது வயதில் துறவியாகிவிட்டார். 12 ஆண்டுகள் கடுந்தவத்தை மேற்கொண்டார். இந்திரியங்களை வெற்றி கண்டார். இவர் புலனாதிகளை வென்றமையால் இவருக்கு மகாவீரர் என்னும் பெயர் எய்திற்று.

இவர் கருணையே உருவானவர். தம்மால் ஒரு சிற்றுயிருக்கும் துன்பம் நிகழக்கூடாதென்னும் அளவுக்கு இரக்க குணம் படைத்தவர். இவருடைய கொள்கையை அக்காலத்து மன்னர்களும் பெரிதும் வரவேற்றனர். இவர் மகா சாந்தமூர்த்தியாவார். இல்லறம் துறவறமென்னும் இரு நெறிகளுக்கும் ஏற்ற ஒழுக்க முறைகளை மக்களுக்கு வகுத்திருக்கிறார்.

உலகத் தோற்றத்துக்கு மூலகாரணம் அணுக்கள். காற்று, நெருப்பு. நீர், நிலம் என்பவற்றுக்குப் பிறப்பிடம் ஆகாயம். உயிர்களின் வினைகளுக்கு ஏற்றவாறு உடல்கள் அமைகின்றன உடல்கள் தூலம், சூக்குமம் என இருவகைப்படும். வினை அற்றால், ஆன்மா விடுதலை அடையும். அப்போது ஆன்மா தூய்மையாகிறது. இந்த நிலையை அடையவேண்டுமானால் ஆசைகள் அறவேண்டும். ஆசைகள் இருக்கின்ற வரையிலும் பிறவிகள் உண்டு. எந்த உயிரினத்துக்கும் நாம் துன்பம் இழைக்கக்கூடாது. நல்லொழுக்கத்துக்கு ஜீவ காருண்யமே முதற்படி. மனோ விகாரங்களால் ஆன்மாவுக்கு வினைகள் விளைகின்றன. பேராசை, வெறுப்பு, மயக்கம் மற்றும் அறியாமை என்பவற்றால் இவ்வினைகள் விளைகின்றன. அறியாமை அகன்றால் பிறவிப்பிணி அறும். தவம், தியானம். குருபக்தி, அகிம்சை, ஒழுக்கம் என்பவற்றை மக்கள் கடைபிடிக்க வேண்டும். என்பன போன்ற அறிவுரைகளை மகாவீரர் போதித்து வந்தார்.

இறுதி நாள்

மகாவீரர் தமது 72வது வயதில் பாடலிபுரத்தைச் சார்ந்த பாவாபுரி எனனும் இடத்தில் கி. மு. 527–ல் பரிநிர்வாண மென்னும் கேவல நிலையை அடைந்தார். மகாவீரருக்குப் பிறகு ஜைனமதம் இரண்டாகப் பிரிந்துவிட்டது. ஒன்று திகம்பர ஜைனம். ஆடை அணியாத நிர்வாணத் துறவிகள் இருப்பது. மற்றொன்று சுவேதாம்பர ஜைனம். (வெள்ளாடை அணியும் துறவிகள் குழு) இந்த இரு கொள்கையினருக்கும் நிராசையும் ஜீவ காருண்யமும் முக்கியமாகக் கடைபிடிக்க வேண்டிய தருமங்களாகும்.

மகாவீரர் இருந்த காலத்திலேயே ஜைனமதம் வட இந்தியாவில் பரவிற்று. சந்திரகுப்தரின் குருவான பத்திரபாகு என்பவர் இருந்த காலத்தில் ஜைனமதம் கருநாடக தேசம் வரையிலும் பரவியது. சிரவண பௌகூளா என்னும் இடத்தில் ஜைன மதத்தின் சிறப்புமிக்க உருவச் சிலை அமைக்கப் பெற்றுள்ளது. அதன்பிறகு இம்மதம் தமிழ்நாட்டிலும் பரவிற்று. பாண்டிய நாட்டு மன்னனையும் ஜைனமதம் தன்னில் ஈர்த்துக் கொண்டது. ஜைன குருமார்கள் ஜைன மதத்தை மிகவும் தீவிர மாகப் பரப்பி வந்தனர். ஜைனம் தமிழ்நாட்டில் நுழைவதற்கு முன்னமே சைவம் இங்கு வேரூன்றி இருந்தது. ஜைனமதம் சைவ மதத்தை அழிக்கவே முயன்றது. முக்கியமாக ஆத்திகக் கொள்கையை ஜைனர்கள் அறவே வெறுத்தனர். இந்த வெறுப் புணர்சியானது ஜைன மதத்தின் ஜீவகாருண்யக் கொள்கைக்கே முரணாகப் போய்விட்டது. அப்பரடிகளைப் போன்ற சைவப் பெரியோர்கள் ஜைன குருமார்களால் கடுமையாக துன்புறுத்தப் பட்டனர்.

கேட்ட முட்டு கண்ட முட்டு

திருநீறு என்னும் சொல் காதில் விழுந்தால் கேட்டமுட்டு (அச்சொல்லைக் கேட்டதும் ஒரு தீமை) கண்டமுட்டு, திருநீறு அணிந்தவர்களைப் பார்த்துவிட்டால் அதுவும் ஒரு தீட்டு. இத் தீட்டைக் கழிப்பதற்கு உண்ணா நோன்பு இருந்து அருக தேவர் ஆலயத்தை வலம் வந்தனர். இத்தகைய நிபந்தனை களை விதித்துக்கொண்டிருந்தனர். மதநெறியை வெறியாக அக்கால ஜைன குருமார்கள் உருவாக்கிவிட்டனர்.

மதுரையில் சுந்தர பாண்டியன் மன்னனாக இருந்த காலத்தில் சைவ மதத்துக்கும், ஜைன மதத்துக்கும் மன்னனின் முன்னிலையிலேயே நிபந்தனையின் பேரில் ஒரு கடுமையான

வாதம் நிகழ்ந்தது. வாக்வாதம், அனல்வாதம், புனல் வாதம் என்பவற்றில் தோல்வியுற்றவர்கள் மதம் மாறவேண்டும். மாற மனமில்லாதவர்கள் கழுவேறவேண்டும் என்பது நிபந்தனை. அந்த நிபந்தனையின்பேரில் நடந்த வாதங்களில் சைவர்கள் வெற்றிபெற்றனர். தோல்வியுற்ற சில தீவிரவாதிகள் கழுவேறினர், மற்றவர்கள் சைவர்களாக மாறினர். இந்த நிகழ்ச்சிக்குப்பிறகு ஜைன மதத்தின் தீவிரப் போக்குத் தணிந்து விட்டது.

இன்று ஜைன மதத்துக்கும் இந்து மதத்துக்கும் எத்தகைய பூசலும் கிடையாது. தீபாவளித் திருநாளை இந்துக்களும் ஜைனர்களும் பகைமையற்று கலந்து கொண்டாடுகின்றனர். கி.பி. 8 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இந்து மதமும் ஜைனமதமும் ஒன்றோடொன்று நெருங்கிவிட்டன. இதற்குச் சான்றாக இராமபிரானின் சரித்திரத்தை ஜைனர்களும் எழுதியுள்ளனர். அதற்கு ஜைன இராமாயணம் என்று பெயர், கண்ண பிரானுடைய வரலாற்றை ஜீனசேனர் என்பவர் எழுதியுள்ளார் என்கின்றனர்; இதற்கு ஹரிவம்சம் என்று பெயர். இதை ஜைன பாரதம் என்றும் கூறுகின்றனர்.

ஆலயங்கள்

கருநாடக ராஜ்யத்தில் கோமடேஸ்வரர் என்னும் உருவச் சிலை உலக அதிசயங்களைச் சார்ந்தவற்றுள் ஒன்றாகும். மற்றும் காஞ்சீபுரம், கரந்தை, திருநறுங்கொண்டை, தீபங்குடி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி முதலான இடங்களில் ஜைன ஆலயங்களும் உருவச்சிலைகளும் உள்ளன. முகலாய மன்னர்களில் சிலர் இந்துக்களின் ஆலயங்களை அழித்ததைப் போல இந்துக்கள் ஜைன ஆலயங்களை அழிக்க முயலவில்லை. இதுதான் இந்து மதத்துக்கும் பிற மதங்களுக்குமுள்ள வித்தியாசம். மகாவீரரும் ஓர் இந்துவே ! மதங்களில் அவ்வப் போது படியும் சில தீமைகளைப் போக்குவதற்காக பரம் பொருளின் திருவருட்டுணையால் தோன்றக்கூடியவர்கள் பெரியோர்கள். அம்மகான்களின் அரிய குணங்களை நன்கு புரிந்துகொள்ளாதவர்களால்தான் மதப்பூசல்கள் விளைகின்றன.

தமிழ்ப்பணி

ஜைன மதப் பெரியோர்கள் தமிழுக்கு அரிய பணிகளையும் புரிந்துள்ளனர். யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலவிருத்தி, திவாகர நிகண்டு, சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு, நாலடியார், நன்னூல், அறநெறிச்சாரம், பழமொழி, ஏலாதி,

சீவக சிந்தாமணி, சிறுபஞ்ச மூலம், நீலகேசி, வளையாபதி, யசோதர காவியம் முதலான நூல்கள் ஜைன மதப் பெரியோர் கள் தமிழுக்குத் தந்த அருங்கொடைகளாகும். பிறமொழிகளிலும் ஜைன நூல்கள் எழுதப்பெற்றுள்ளன. தத்துவார்த்த சூத்திரம், கந்த அஸ்தி சர்வார்த்தசித்தி என்னும் நூல்கள் சமஸ்கிருதத் திலும் உண்டு. ஜைன புராணங்களும் உண்டு ; ஜைன, புத்த, சீக்கிய மதங்கள் தனித்தனியாகப் பேசப்படினும் இவை களனைத்தும் இந்து மதத்திலிருந்து பிரிந்து சென்றவைகளே.

சாரதுஷ்டிரமதம்

தற்போது ஈரான் என்று கூறப்படும் பாரசீக நாட்டில் ஆஜர் பைஜான் (AZER BAIJAN) என்னும் இடத்தில் சாரதுஷ்டிரர் என்னும் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவருடைய காலம் கி. மு 7–ஆம் நூற்றாண்டின் மத்திய காலம் என்கின்றனர்.

(பார்க்க கலைக் களஞ்சியம்)

இளமைப் பருவம்

இவர் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். இளமையில் ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தரர். இவர் காலத்தில் பெரும்பாலும் மக்கள் ஒழுக்க ஈனர்களாகவும், அறநெறிகளை அலட்சியம் செய்யக்கூடியவர்களாகவும் இருந்தனர். அம் மக்களைத் தீய நெறிகளிலிருந்து திருத்துவதற்குப் பல நாட்கள் சிந்தனை செய்துகொண்டிருந்தார். இவர் தமக்குத் தோன்றும் நற்கருத்துக்களை அவ்வப்போது மக்களுக்குப் போதித்துக் கொண்டு வந்தார். ஆரம்பத்தில் மக்கள் இவருடைய அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் இவர் அவற்றுக்கெல்லாம் சளைக்காது மக்களுக்கு நன்நெறிகளைப் பிரசாரம் செய்துகொண்டே வந்தார்.

மன்னரின் மகிழ்ச்சி

இவர் காலத்தில் பாரசீகத்தை ஆண்டுகொண்டிருந்த விஷ்டாஸ்பா (VISHTASPA) என்னும் மன்னர் இவருடைய அறநெறி பிரசாரத்தைக் கேள்வியுற்று மிக்க மகிழ்ச்சி அடைந் தார். இவருடைய போதனைகள் நாடு பூராவும் பரவவேண்டும் என்னும் எண்ணம் மன்னருக்கு உண்டாயிற்று. நாட்டிலிருந்த பல பண்டிதர்களையும் ஒன்றுகூட்டினார். அவர்களின் முன்னிலையில் சாரதுஷ்டிரரின் கொள்கையை அந்நாட்டுக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு சாரதுஷ்டிர மதம் என்னும் பெயருண்டாயிற்று. இம்மதம் பாரசீகத்தில் சுமார் கி. பி. 7ஆம் நூற்றாண்டு வரையிலும் பாரசீக நாட்டு மதமாக இருந்தது. இந்த சாரதுஷ்டிரர் 77 ஆண்டுகள் வாழ்ந்

தார். பாரசீகத்தின் பேரில் துரானியர்கள் படையெடுத்தபோது ஒரு துரானியன் இவர் தொழுகையில் இருந்தபோது இவரைக் கொன்றுவிட்டான். பிறகு அரேபியர் பாரசீகத்தின்பேரில் படையெடுத்தனர். நாடு முகலாயர்களின் கைவசமாயிறறு. அப்போது முகலாயர்கள் இஸ்லாம் மதத்தை மக்களிடம் பலாத்காரமாகத் திணித்தனர். மதம் மாற விரும்பாத பாரசிகர்கள் பலர் இந்தியாவில் தஞ்சம்புகுந்தனர். இன்றும் நமது நாட்டில் பாரசீக மதத்தினர் வாழ்ந்து வருகின்றனர்.

மதக் கொள்கை

உலகத்தில் தொழில் புரியும் சக்திகள் இரண்டு; ஒன்று பரம்பொருள். அது ஒளிமயமானது. மற்றொன்று இருள். அது எதையும் மறைக்கக் கூடியது. பரம்பொருள் நன்மைகள் அனைத்துக்கும் இருப்பிடம். இருள் தீமைகள் அனைத்துக்கும் இருப்பிடம். இவ்விரு சக்திகளுக்கும் இடையே எப்பொழுதும் போராட்டம் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. இயற்கையும் இதன் நிகழ்ச்சிகளும் போராட்டத்தின் இயக்கமே யாகும். மனிதனுடைய ஆன்மா கடவுளுடைய படைப்பாகும். இதற்கு நன்மையோடு சேரவும் தீமையோடு சேரவும் சுதந்திரம் உண்டு. நன்மையோடு சேர்ந்தால் நித்திய வாழ்க்கையைப் பெறலாம். தீமையோடு சேர்ந்தால் துன்பத்தை அடையும். இறுதியில் வெற்றி பெறுவது நன்மையென்ற சக்தியே. கடவுள் தீமையைப் புரிபவர்களுக்கு முடிவில் தோல்வியை அளிக்கிறார். அருளாளர்கள் கடவுளோடு ஒத்து வாழ்ந்தவர்களும் உண்டு. அவரோடு போராடியவர்களும் உண்டு. இரவு-பகல், வெற்றி-தோல்வி, பஞ்சம்-செழிப்பு. நன்மை தீமை என்னும் இரு சக்திகளும் என்றும் போராட்டம் நடத்திக்கொண்டே இருக்கின்றன.

இறைவன் தூய்மையானவர். தீமையை அழிப்பவர். இதற்கு அடையாளமாக சாரதுஷ்டிர மதத்தினர் நெருப்பை வணங்குகின்றனர். கடவுள் நெருப்பைப்போல தீமைகளை எரித்து அறிவொளியை அளிக்கிறார். சாரதுஷ்டிர மதமும் இந்து மதத்தின் பிரிவென்று தத்துவமேதை, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறியுள்ளார். (மதத்தில் கிழக்கும் மேற்கும்; தமிழாக்கம் பக்கம் 49.)

கன்பூஷியஸ்மதம்

சீன தேசத்தில் தற்போது ஷான்டங் என்று கூறும் மாகாணத்தில் லூ என்னும் இராஜ்யத்தில் கி. மு. 551க்கும் 479க்கும்

இடைக்காலத்தில் குங்பூஷே என்னும் ஒரு பெரியார் இருந்தார். இவர் பிறந்த காலக் கணக்குத் துல்லியமாகத் தெரியவில்லை. ஓர் ஏழை குடும்பத்தில் பிறந்தவர். இவர் பிறந்த மூன்றாம் ஆண்டு இவருடைய தந்தை மாண்டுவிட்டார். தாயின் பாதுகாப்பில் வளர்ந்தார்.

திருமணம்

இவருக்கு 19ஆம் ஆண்டில் திருமணம் நடந்தது. இவருக்கு ஒரு ஆணும் இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தன. இவர் வாழ்நாள் முழுவதும் இல்லறவாசியாக இருந்தார். ஒரு பண்டகசாலையில் பணிபுரிந்து வந்தார். இவருக்கு தமது 22-வது வயதிலிருந்தே மக்களுக்கு நல்லறிவு புகட்டவேண்டும் என்னும் ஆர்வம் இருந்தது. அதற்காக ஒரு பயிற்சிக் கூடத்தை நிறுவினார். அதன்மூலம் மக்களுக்கு அறநெறிகளை போதித்து வந்தார்.

உத்தியோக உயர்வு

இவருடைய நன்னடத்தையும் அறிவாற்றலையும் அறிந்த அரசாங்கம் இவரின் 52-வது வயதில் தலைமை நீதிபதி பதவியை அளித்தது. இவர் நேர்மைக்கும் ஒழுக்கத்துக்கும் சான்றாக விளங்கினார். ஆகவே அதி விரைவில் இவருக்குக் குற்றத்துறையைக் கவனிக்கும் அமைச்சர் பதவி அளிக்கப்பெற்றது.

அழுக்காறு

இவருடைய முன்னேற்றத்தையும் பெரும் புகழையும் கண்ணுற்ற சிலருக்கு அழுக்காறு தோன்றிற்று. இதை உணர்ந்த குங்பூஷே அவர்கள் தாமாகவே அமைச்சர் பதவியை விட்டு விலகிவிட்டார். பதவி விலகியபிறகு நாடு நகரெங்கிலும் சென்று அறநெறிப் பிரசாரம் செய்துகொண்டு வந்தார். இவரின் அறிவுரைகள் மக்களின் மனதைக் கவர்ந்தன. புகழ் நாடெங்கும் பரவிற்று. இவற்றையெல்லாம் அறிந்த மன்னர் மறுபடியும் அமைச்சர் பொருப்பை ஏற்குமாறு அழைப்பு விடுத்தார். ஆனால் இவர் பதவியை விரும்பவில்லை. தான் இலக்கியத் துறையிலும் அறநெறிப் பிரசாரத்திலும் விருப்பங்கொண்டுள்ளதாக மன்னருக்குத் தெரிவித்துவிட்டார். பிறகு தனது வாழ்நாள் முழுவதும் இவர் விரும்பியவாறு அறநெறிப் பணிகளில் ஈடுபட்டுவந்தார். மக்கள் இவரைக் கடவுளுக்கு ஒப்பாகக் கருதினர். ஆயினும் தன்னை நான் சாதாரண மனிதனென்றே கூறிக்கொண்டு வந்தார்.

இவருடைய போதனைகள்

ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைக் குறைவறச் செய்ய வேண்டும். ஆட்சிப் பொருப்பில் உள்ளவர்கள் நேர்மையாளர் களாகவும் அன்புடையவர்களாகவும், அறநெறிகளை வழுவாத வர்களாகவும் இருக்கவேண்டும், நாட்டில் நல்ல குடிமக்கள் தோன்றுவதற்கும், கெட்ட குடிமக்கள் தோன்றுவதற்கும் ஆட்சியை நடத்துபவர்களே மூலகாரணமாகும். உனக்கு ஒருவர் செய்த செயலை நீ விரும்பவில்லையானால், அதனை நீயும் பிறருக்குச் செய்யாதே. இந்த எண்ணம் அரசனுக்கும் குடிமக்களுக்கும் பொதுக் குணமாகும். கணவனும் மனை வியும் பின்பற்றவேண்டிய நெறிமுறைகளையும், பெற்றோர் களுக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கவேண்டிய ஒழுக்க நெறி களையும் விரிவாக எழுதியுள்ளார் எனக் கூறப்படுகின்றது, சீன இலக்கியங்களில் இவருடைய அறிவுரைகள் ஆயிரக்கணக்கில் இருப்பதாகக் கூறுவர். இவருடைய மறைவுக்குப்பின் ஆங்காங்கே இவரின் நினைவுச் சின்னங்கள் அமைக்கப் பெற் றனவாம். இவர் கூறியுள்ள அற உரைகளின் தொகுப்பை கன்பூஷியஸ் மதம் என்று கூறுவர். புத்த மதம் சீனநாட்டில் பரவும்போது கன்பூஷியஸ் மதம் இதை எதிர்க்கவில்லை; ஏற்றுக்கொண்டது. இவ்வாறு ஒவ்வொரு மதமும் ஒத்துப் போகுமானால் மதப் போராட்டங்களுக்கே இடமிருக்காது.

இன்று நமது நாட்டில் பதவிப் பொருப்பில் இருப்பவர்கள் குங்பூஷேவின் அறவுரைகளை மனத்திற்கொண்டு ஆட்சி நடத்துவார்களானால் நாட்டில் ஊழல்கள் நடைபெறுவதற்கு இடமிருக்காது. அரசியல் பொருப்பேற்று நடத்தக்கூடியவர்கள் ஆசிரியர்களுக்கும் மேலானவர்களாகும். இவர்களே தீயநெறி களைப் பின்பற்றுவார்களானால் இவர்களின் ஆணைகளைப் பின்பற்றவேண்டிய குடிமக்களும் குற்றவாளிகளாக மாறி நாட் டைக் குட்டிச் சுவராக்கிவிடுவார்கள் காவலன் எச்சரிக்கை யாக இருந்தால் பொருள்கள் களவுபோகாது. மேய்ப்பவன் தூங்கிவிட்டால் மாடுகள் ஒழுங்காக வந்து வீடுசேராது, நாட்டின் நன்மைக்கும் தீமைக்கும் நாடாள்பவர்களே பொருப் பாளிகளாவர். மக்கள்பேரில் பழியைச் சுமத்துவது மடமை யாகும்.

யூதமமம்

தற்போது ஈராக் என்று கூறுகின்ற பகுதியைப் பண்டையில் மெசபடேமியா என்று கூறிவந்தனர். அங்கு எபிரேயர்கள் என்னும் ஓர் இனம் வாழ்ந்து வந்தது. அந்த சந்ததியில் சுமார் 3000 ஆண்டுகளுக்குமுன்னர் நாடோடி மக்களின் தலைவராக.

ஆபிரகாம் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அர் (UR) என்னும் பகுதியில் வாழ்ந்து வந்தார். பிறகு இறைவனுடைய கட்டளையின்பேரில் கானான் என்னும் இடத்துக்குக் குடியேறினார். இவருக்குப் புத்திரப் பேறு இல்லாமல் இருந்தது. இவருடைய மனைவி சாரள் என்னும் மாதின் சம்மதத்தின்பேரில் இவர்களின் பணிப்பெண்ணான ஆகார் என்னும் நங்கையை மனைவியாக ஏற்றுக்கொண்டார். ஆகாருக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அப்பிள்ளைக்கு இஸ்மவேல் என்னும் பெயரிட்டனர். இந்த இஸ்மவேல் என்பவரை இஸ்லாமியர்கள் இஸ்மாயில் நபி என்று கூறுகின்றனர்.

இளைய மனைவிக்குப் பிள்ளைப் பேறு உண்டானபிறகு மூத்த மனைவியான சாரளுக்கும் ஒரு பிள்ளை பிறந்தது. அக்குழந்தைக்கு ஈசாக்கு என்னும் பெயர் சூட்டினர். இந்த ஈசாக்கு என்னும் சிறுவனை ஆகாரின் மகன் இஸ்மவேல் இழிவாகப் பரிகாசம் செய்ததை அறிந்த சாராள் சினங்கொண்டவளாய்ப் பணிப்பெண்ணான ஆகாரையும், அவள் புதல்வனாகிய இஸ்மவேலையும் ஆபிரகாமின்மூலம் வீட்டைவிட்டு வெளியேற்றிவிட்டாள். ஆபிரகாமிடமிருந்து வெளியேற்றப்பட்ட இஸ்மவேலின் மரபில் வந்தவர்தான் முகமது நபிகளார் என்பர். ஆபிரகாமை முகலாயர்கள் ஹிப்ராஹிம் நபிகள் என்று கூறுகின்றனர். ஆபிரகாமின் மூத்த மனைவியின் புதல்வர் ஈசாக்கு. அவர் புதல்வர் யாக்கோப் (JACOB) என்பர். இந்த யாக்கோப்பின் மனைவியின் பெயர் லேயாள் என்பதாகும். இவ்வம்மையாரின் திருவயிற்றில் நான்கு புதல்வர்கள் தோன்றினர். 1. ரூபன். 2. சிமியோன். 3. லேவி. 4. யூதா என்பவர்களாகும். இந்த யூதாவின் வழிவந்தவர்களை யூதர்கள் என்று கூறுவர். இந்த யூதர்கள் பின்பற்றிய கொள்கை எதுவோ அதுவே யூத மதம் எனப்படுகிறது, இந்த யூதா என்பவர் ஆபிரகாமின் பேரனுடைய புதல்வர். ஆகவே இவருடைய காலமும் ஏறத்தாழ 2900 என்று கருதலாம். இயேசுநாதரின் பிறப்பைப்பற்றியும் நபிகளாரின் பிறப்பைப்பற்றியும் காலக் கணக்குகள் கச்சிதமாக விளங்குவதைப்போல ஆபிரகாமின் காலத்தையோ, யூதாவின் காலத்தையோ நிச்சயித்துக் கூற முடியவில்லை. காரணம் இவர்தோற்றம்பற்றிய ஏற்ற ஆண்டுகளின் சகாப்த கணக்கு முறையாக பஞ்சாங்க மூலமாகக் காணப்படவில்லை. ஆகவே சில ஆராய்ச்சியாளர்கள் ஒரு தோராயமாக விளக்கியுள்ளனர். நாமும் விதியின்றி இவற்றைத்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த யூத மதம் இதற்கு முன் கூறின ஏழு மதங்களுக்கும் முற்பட்டதாகும். இம்மதத்தை காலப்போக்கிற்கு ஏற்ப நான்கு கட்டங்களாகக் கூறுகின்றனர்.

1. குலக் கருத்தா கொள்கை
2. மோசே காலக் கொள்கை
3. அரசு காலக் கொள்கை
4. தீர்கதிசிகள் காலக் கொள்கை

என்பனவாகும். யூதமதம் காலத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சிற்சில மாற்றங்களை அடைந்துகொண்டு வந்திருக்கிறது. இந்த மதம் இஸ்லாம் மதத்துக்கும் கிறிஸ்துவமதத்துக்கும் தாய்மதமாகும். இந்த யூதமதம் காலகட்டத்தால் அடைந்த நன்மை தீமைகளையும் ஒரு சிறிது இனி ஆராய்வோம் :

1. குலக்கருத்தாக் கொள்கை

ஒரு குலத்தின் தலைவன் அக்குல மக்களை முறையோடு எப்படி நடத்திச்செல்வானோ அதேபோல இந்த யூத மதக் கொள்கையை இறைவனே நடத்திக்கொண்டுவந்தாராம். இவர்களுக்கு யாதொரு இன்னல் நேரினும் இறைவனே நேரடியாக வந்து அந்த இன்னலைத் தீர்த்துவைப்பாராம். அவ்வப்போது இவர்களுக்கு நன்னெறிகளையும் போதித்து வந்தார் என்பர். மற்றும் ஆப்பிரகாமுக்கு இறைவன் முன்னமே 'உன்னுடைய சந்ததியைக் காப்பாற்றுகிறேன்' என்று வாக்களித்திருந்தார் என்றும், அதன்படியே இறைவன் யூதர்களின் சந்ததியை அக்குலத்தலைவன் போல முன்னின்று காப்பாற்றிக் கொண்டு வந்த காலகட்டத்தைக் குலக் கருத்தாக் காலக் கொள்கை என்பர்.

2. மோசே காலக் கொள்கை

இது யூத மதத்தின் இரண்டாவது கட்டம். எகிப்து நாட்டை அரசாண்டு கொண்டிருந்த பாரோ என்னும் மன்னன் கானான் என்னும் இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களின் பேரில் படையெடுத்து வந்து யூதர்களையெல்லாம் சிறைபிடித்து எகிப்து நாட்டிற்குக் கொண்டுபோய்விட்டான். யூதர்கள் எகிப்து நாட்டின் அடிமைகளாகிவிட்டனர். அம்மன்னன் யூதர்களை மிகவும் கொடுமைப்படுத்தினான். யூதர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் ஆண்களாக இருப்பின் அவற்றை உடனே கொன்றுவிடவேண்டும் என்பது மன்னனுடைய ஆணை. யூதர்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளை அவ்வாறே கொலைசெய்து வந்தனர். அம்மன்னன் யூதர்கள் ஒரு சிறிய தவறு செய்துவிட்டாலும் அவர்களை மிகவும் கடுமையாகவும் தண்டித்து வந்தான்.

மோசேயின் தோற்றம்

இந்த ஆபத்தான காலத்தில் ஆம்ராம் என்பவருக்கும் ஜாகபெத் என்னும் மாதுக்கும் ஒரு அழகான ஆண்குழந்தை பிறந்தது. பெற்றோர்களுக்கு அக்குழந்தையைக் கொல்ல மனம் இடந்தரவில்லை. அரசனுடைய கட்டளையை மீறவும் முடிய வில்லை. மீறினால் இவர்களுடைய உயிருக்கே ஆபத்தாகும். இக்குழந்தையை எப்படிக் காப்பாற்றலாம் என்று யோசித்தனர்; ஒன்றும் விளங்கவில்லை. முடிவில் இக்குழந்தையை மிகவும் பக்குவமாக ஒரு பெட்டியில் வைத்து யாருக்கும் தெரியாமல் கொண்டுபோய் நைல் நதியில் விட்டுவிட்டனர். ∴பாரோ மன்னனுடைய மகள் அந்த ஆற்றங்கரையில் உலா வந்தாள். ஒரு பேழை ஆற்றில் மிதந்து செல்லுவதைக் கண்டாள்; பணி யாட்களின் மூலம் அப்பெட்டியைக் கைப்பற்றினாள். அதில் ஒரு அழகிய ஆண் குழந்தை இருப்பதைக் கண்டு அக்குழந்தை யின்பேரில் இவளுக்கு இரக்கம் தோன்றிற்று. அக்குழந்தைக்கு மோசே (கண்டெடுக்கப்பட்டது என்பது பொருள்) என்று பெயர் சூட்டித் தானே வளர்த்து வந்தாள்.

இளமையிலேயே இரக்க குணம்

மோசே இளமையிலிருந்தே அடிமைகளாக இருக்கும் யூதர்கள்பேரில் மிகவும் இரக்கமுடையவராக இருந்தார். மறை முகமாக யூதர்களுக்குத் தம்மாலான உதவிகளையும் செய்து கொண்டு வந்தார். ஒருநாள் எகிப்தியன் ஒருவன் ஒரு யூதனைப் பலவகையாகச் சித்திரவதைச் செய்வதைக் கண்ணுற் றார். இவருடைய உள்ளம் அக்கொடுமைகளைக் கண்டபின் தாங்கமுடியவில்லை. உடனே அந்த எகிப்தியன்பேரில் பாய்ந்து அவனைக் கொன்றுவிட்டார். இதை அரசன் அறிந் தால் தனக்கு ஆபத்தென்பதையும் உணர்ந்தார். உடனே ஒரு வரும் அறியாமல் மிடியன் (Midian) என்னும் இடத்துக்குப் போய்விட்டார்; அங்கிருந்த ஒரு நல்லாசிரியரிடம் தஞ்சம் புகுந் தார். அவரிடம் தன்னுடைய நிலைமைகள் யாவையும் தெளி வாக விளக்கினார். அவ்வாசிரியரும் இவருடைய நற்குணங் களை உணர்ந்து இவருக்கு ஆதரவளித்ததுடன் தன்னுடைய புதல்வியையும் இவருக்குத் திருமணம் செய்துவைத்தார்,

இறைவன் கட்டளை

இறைவன் ஆபிரகாமிற்கு வாக்களித்திருந்ததைப்போல தேவ தூதர்மூலம் மோசேவுக்கு ஒரு கட்டளை வந்தது. "நீ யூதர் களையெல்லாம் ஒன்று திரட்டிக்கொண்டு கானான் பிரதேசத்

துக்குச் செல்க !'' என்பதே அக் கட்டளை. அதன்படியே மோசே யூதர்களை ஏற்றவகையில் அணுகி அவர்களை எல்லாம் ஒன்று திரட்டிக்கொண்டு கானானை நோக்கிப்பிரயாணமானார். பாரோ மன்னன் தூதர்களின்மூலம் உணர்ந்து ஒரு பெரும் படையுடன் இவர்களைப் பிடிப்பதற்குத் துரத்திக்கொண்டுவந்தான். அப்படைகள் வழியில் செங்கடலின் அலைகளால் அழிந்து போயின. இறைவன் திருவருட்டுணையால் மோசே யூதர்களுடன் கானான் பிரதேசத்துக்கு வந்துசேர்ந்தார்.

பத்து கட்டளைகள்

இறைவன் ஆரோன் என்பவரின்மூலம் மோசேவுக்குப் பத்து கட்டளைகளை அனுப்பிவைத்தார். அத்துடன் 'சுன்னத்'தின் சடங்கு முறைகள், பலி இடுதற்குரிய தெய்வ வணக்கம் முதலானவற்றையும் விளக்கப்பட்டிருந்தது. அந்தப் பத்துக் கட்டளைகளாவன :

பத்து கட்டளைகள்

1. கொலை செய்யாதிருப்பாயாக !
2. விபசாரம் செய்யாதிருப்பாயாக !
3. உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக !
4. களவு செய்யாதிருப்பாயாக !
5. அபாண்டமான சொற்களை ஏற்றுக்கொள்ளாதிருப்பாயாக !
6. நியாயாதிபதிகளைத் தூற்றாதிருப்பாயாக !
7. பிறருடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக !
8. உனது குலத்தோர்களை சபிக்காதிருப்பாயாக !
9. பிறருடைய மனைவியையும், பிறருடைய வேலைக்காரனையும், அவனுடைய மனைவியையும், அவர்களின் பொருள்களையும் இச்சியாதிருப்பாயாக !
10. பிறருக்கு விரோதமாக பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக !

என்பவை இறைவன் மோசேவுக்கு ஆரோனன்மூலமாக அனுப்பிவைத்த பத்து கட்டளைகள் என்பர். இவையே யூதமதத்துக்கு அடிப்படைக் கொள்கைகள் என்று கருதலாம்.

மோசேவின் பெரு முயற்சியால் யூதமக்கள் எகிப்திலிருந்து மறுபடியும் தமது கானான் பிரதேசத்துக்குக் குடியேறினர். அந்த நன்னாளை யூதர்கள் 'பஸ்கா' என்னும் பண்டிகையாக ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடுகின்றனர்.

3. அரசு காலக் கொள்கை

மோசேவுக்குப் பிறகு யூதர்களிடத்திலிருந்த கட்டுப்பாடு நாளடைவில் குறைந்துவிட்டது. இதைச் சரிசெய்வதற்காக சில அறிஞர்கள் ஒன்றுகூடினர். தீய வழிகளில் செல்வோரைத் தண்டிக்க நியாயாதிபதிகளையும் நன்நெறிகளை போதிக்க ஆசிரியர்களையும் நியமித்தனர். சில நாட்கள் வரையிலும் இக் கட்டுபபாடுகள் நடந்தேறி, இதுவும் பிறகு நிலைதளர்ந்து விட்டது. மக்களின் அமைதியான வாழ்க்கை சீர்குலைந்தது.

அண்டைய நாடுகளின் படையெடுப்புகளும் அவ்வப்போது தொடர ஆரம்பித்தன. போர் மூளுங்காலங்களில் ஆசிரியர்களும் நீதிபதிகளும் படைகளை நடத்துவார்கள். மற்றைய காலங்களில் நாட்டை நீதிவிசாரணை மன்றம்போல் நடத்தி வந்தனர், ஆயினும் அவ்வப்போது படை எடுப்புக்கள் நிகழ்ந்துகொண்டேயிருந்தன. இப்படை எடுப்புகளைப்பற்றித் தனியாக கவனிக்க வேண்டுமென்னும் ஒரு சூழ்நிலை உருவாயிற்று. மக்கள் இதற்காக ஒரு மன்னனைத் தேர்ந்தெடுப்பது நன்மை எனக் கருதினர்.

முதல் முறையாக சவுல் என்பவனை மக்கள் மன்னனாகத் தேர்ந்தெடுத்தனர். ஆயினும் அவன் நீண்டநாள் நிலைக்க வில்லை. அவன்பேரில் மக்களுக்கு நம்பிக்கை குறைந்து விட்டது. அதனால் அவனை நீக்கிவிட்டு சாமுவேல் என்பவனை அரசனாக்கினர். ஆயினும் அண்டைய நாட்டுப் படையெடுப்புகள் ஓய்வில்லை. சாமுவேலுக்குப் பின்னும் தொல்லைகள் நேர்ந்துகொண்டே இருந்தன. அதனால் மக்களிடம் ஒரு குழப்பமான எண்ணமே தோன்றிவிட்டது "நமக்கு இன்னல்கள் நேரும்போதெல்லாம் இறைவன் வந்து நமது இனத்துக்குத் துணைபுரிந்துகொண்டிருந்தார். இப்போதெல்லாம் ஏன் வருவதில்லை என்னும் ஏக்கம் அதிகரித்தது." இதன் காரணமாக ஒரு புரளியும் உருவாயிற்று. "இறைவன் ஒரு கூடாரத்தில் பெட்டிக்குள் அடைபட்டுக்கிடக்கிறார். அவருக்கு நாம் ஒரு சிறந்த ஆலயமும் நிறுவவேண்டும்" என்பது அந்த புரளி. நாம் ஆலயத்தை நிறுவி அவருக்கு பலி முதலானவைகள் கொடுத்தால் நம் கஷ்டங்களை எல்லாம் இறைவன் போக்குவார் என்னும்எண்ணத்தால் ஆலயத்தை நிறுவி நரபலி முதலியனவும் இடலாயினர். இந்த சூழ்நிலை சாலமோன் காலத்தில் உண்டாயிற்று. ஆயினும் நாடு பாபிலோனியருக்கும் அசிரீயர்களுக்கும் இரையாகிவிட்டது. யூதர்களின் நிலை மறுபடியும் சீர் குலைந்து, கட்டுப்பாடற்று ஒழுக்க மின்மை முதலியன தலைவிரித்தாடின.

4. தீர்க்கதரிசிகளின் காலக் கொள்கை

யூத மக்கள் சஞ்சலச் சலதியில் சங்கடப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில் தீர்க்கதரிசிகள் என்று சிலர் தோன்றினர். (எதிர்கால நிகழ்ச்சிகளை அறிவிக்கக்கூடியவர்கள்) இவர்கள், மக்களுக்கு ஆங்காங்கு சென்று ஆறுதல்களைக் கூறிக்கொண்டு வந்தனர். கூடிய விரைவில் இறைவனால் அபிஷேகம் செய்யப்பட்ட மேசியா வரப்போகிறார்; அவர் வந்தவுடன் உலகம் கடவுள் ராஜ்யமாக மாறப்போகிறது. அதுவரையிலும் பொறுமையோடு அமைதியைக் கடைபிடியுங்கள்' என்று கூறிக்கொண்டு வந்தனர். அக்குழுவினுடைய பணி, ஆண்டவன் பக்தியை நினைவூட்டுதல், மோசேவுக்கு கடவுள் தெரிவித்த பத்துக் கட்டளைகளைப் பிரசாரம் செய்தல், அவற்றைக் கடைபிடிப்போர்களைப் பாராட்டுதல், மீறியவர்களைக் கண்டித்தல் என்பவற்றை இந்த தீர்க்கதரிசிகளின் குழு செய்துகொண்டு வந்தது; மற்றும் கடவுள் ஒரு ஜாதியாருக்குமட்டுமே சொந்தமல்ல. அவர் எல்லா மக்களுக்கும் சொந்தமானவர் என்னும் கருத்து யூதர்களுக்கு அக்காலத்தில்தான் உதயமாயிற்று.

இக்குழுவில் 12 போதகர்கள் இருந்தனர். இவர்களுக்குள் எஸ்ரா என்பவரும் நெக்கேமியா என்பவரும் சிறந்த அறிவாளிகளாம். நெக்கேமியாவின் காலத்தில் யூத மதத்தினுடைய வேதநூல் உருவாயிற்றாம். இந்தக் குழுவும் நாளடைவில் சிதைவுற்றது. பிறகு தீர்க்கதரிசிகளுக்குப் பதிலாக வேத பாரகர்களும், போதகர்களுக்குப் பதிலாக ஆலோசகர்களும், ஆலயங்களுக்குப் பதிலாக தொழுகைக் கூடங்களும் உண்டாக்கினர்.

யூத மதத்தில் தீர்க்கதரிசிகள் காலத்தில் மேசியா வருகையைப் பற்றிக்கூறி இருந்தமையால் இயேசுநாதரை சிலர் மேசியா என்றும் கருதினர். ஒருசிலர் இவரை மேசியா என்று நம்பவில்லை. நம்பினவர்கள் போற்றினார்கள்; நம்பாதவர்கள் அவரைக் கூற்றின்வாய் வைத்தனர். இன்னும் மக்கள் கடவுள் ராஜ்ஜியத்தைக் கண்டபாடில்லை.

இதுவரை கூறிவந்த எண் மதங்களும் வரலாற்றுக் காலத்துக்கு உட்பட்டவை. இம்மதங்கள் ஒவ்வொன்றும் தனி மனிதர்களால் தோற்றுவித்தவைகளாகும். அப்பெரியோர்கள் தோன்றின காலங்களையே அந்தந்த மதங்கள் தோன்றின காலங்கள் என்பது பொருந்தும். ஒரு சில மதத்தினர் ' இதற்கு முன்னும் எங்கள் மதம் இருந்தது; அந்தப் பழைய மதத்தைத்

தூய்மைப்படுத்த இறுதியாக வந்தவர் இன்னார்' என்று கூறிக் கொள்கின்றனர். அவ்வாறு கூறுவது நமக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. உதாரணமாக, இஸ்லாம் மதத்துக்கும் கிறிஸ்தவமதத்துக்கும் முந்தையது யூதமதம். இந்த இரு மதவாதிகளும் எங்கள் மதம் யூதமதம் என்றுதான் கூறமுடியும். காரணம் இவ்விரு மதங்களும் யூதமதத்துக்கு முற்பட்டவையல்ல; யூத மதத்தை விட்டு அப்பாற்பட்டதும் அல்ல. கிறிஸ்தவமதமும். இஸ்லாம் மதமும் யூதமதம் என்னும் அடிமரத்தின் கிளைகள்; அடிமரத்திற்குமுன்னமே கிளைகள் தோன்றுவதில்லை. ஆகவே தங்கள் மதம் பண்டையில் இருந்தது என்று கூறுவது பொருந்தாது. அது ஒரு தனித் தலைவனைமட்டும் மிகவுயர்த்திப் பேச முடியாது. அப்படிப் பேசுவதானால் அவர்களுக்கு முன்னால் உண்டாக்கிய பெரியோர்களை ஒருவகையில் தாழ்த்திக் கூறுவதாக அமையும். ஒரு சில மதத்தினர்மட்டும் இவ்வாறு கூறுகின்றனர். இது உண்மையானால் அது சமுதாய மதமாகும். அந்தச் சமுதாய மதம் ஒருறுதி கட்டத்தில் நிற்காது. முற்காலத்தவர்களுக்கு இருந்த உரிமையைப்போலப் பிற்காலத்தவர்களையும் முறையாகக் கூட்டிக் கொண்டேவரும். அந்த மதம் இடைக்காலத்தில் இறுதி கட்டத்தை அடைந்துவிட்டது என்று சொல்லமுடியாது. இதைப்பற்றிய பெரிய வாதங்கள் நமக்குத் தேவையுமில்லை.

இதுவரையிலும் சீக்கிய மதத்தை நிறுவிய குருநானக் முதற் கொண்டு ஆபிரகாமின் மரபில் வந்த யூதாவின் பேரில் கூறப்படும் யூதம்தம் முதலான 8 மதங்களைப்பற்றியும் இவற்றைத் தோற்றுவித்தப் பெரியோர்கள் பிறந்த காலங்களைப் பற்றியும் ஒருவாறு ஆராய்ந்தோம். இந்த எண்மரும் அந்தந்த மதத்துக்கு ஈடு இணையற்ற தலைவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பொதுவாக இப்பெரியோர்கள் அனைவருமே தியாக சீலர்கள். தன்னலங் கருதாத உத்தமர்கள். தம்தம் உள்ளத்தில் உதித்த நற்கருத்துக்களை ஒளிவு மறைவின்றி வெளியிட்டவர்கள். அக்காலத்தில் தோன்றிய எதிர்ப்புகளுக்கும் அஞ்சாதவர்கள். * ஆயினும் இப்பெரியோர்கள் அனைவரும் தோன்றி 3000 ஆண்டுகளைத் தாண்டவில்லை. உதாரணமாக,

		தோற்றம்
1.	சீக்கியமதம்—குருநானக்	கி.பி. 1468— 518
2.	இஸ்லாம்-முகமது நபிகள்	கி. பி. 571—1416
3.	கிறுஸ்தவம்—இயேசுநாதர்	1987

		தோற்றம்
4.	புத்தமதம்	கி.மு. 563—2550
5.	ஜைனம்	கி.மு. 599—2586
6.	சாரதுஷ்டிரம் சாரதுஷ்டிரர் கி.மு. 7 ஆம் நூற்றாண்டின் மத்தியகாலம் சுமார்	650—2550
7.	கன்பூஷியஸ்—குங்பூஷே—சுமார்	கி. மு. 514—2501

8. யூதமதம்தோராயமாக 2900 ஆண்டுகள் ஆயின எனலாம்.

* மேலே குறிப்பிட்டுள்ள பெரியோர்களின் தோற்ற காலங்களில் ஐயப்பாடுள்ளவர்கள், கலைக் களஞ்சியத்தைக் கண்டு தெளியலாம். இவைகளை கலைக்களஞ்சியத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதியுள்ளேன்.

மூவாயிரமாண்டுகளுக்கு முன்னம் மேற்கூறிய மதங்களை இப்பெயர்களால் அழைக்கப்படவில்லை. ஆகவே பண்டைய நாட்களில் இவைகளில்லை. இம்மதங்கள் அனைத்தும் 3000 ஆண்டுகளுக்குப் பிற்பட்டவை எனக் கருதலாம். ஆயினும் இவைகள் தோன்றுவதற்கு முன்னும் உலகத்தில் மக்கள் வாழ்ந்துள்ளனர். அவர்கள் அக்காலத்தில் எந்தக் கொள்கையைப் பின்பற்றிவந்தனரோ அக்கொள்கையை இவற்றுக்கெல்லாம் தாய்க் கொள்கை என்று கொள்ளலாம். தாய்க்கொள்கை என்றாலும் தாய்மதம் என்றாலும் இரண்டும் ஒன்றே.

உலகத் தோற்றம்

சில மதவாதிகள் அடியில் கண்டவாறு கருதுகின்றனர் :

"இவ்வுலகத்தை ஆண்டவர் 6 நாட்களில் படைத்தாராம். அப் படைப்புப் பணியை இறைவன் கி. மு. 4004 ஆம் ஆண்டு பகல் 9 மணிக்குத் தொடங்கினாராம். கடைசி நாளில் ஆதாம் என்னும் மனிதனைப் படைத்து, அம்மனிதனுடைய விலா எலும்பில் எவாள் என்னும் பெண்ணையும் படைத்தாராம். இன்று உலகில் உள்ள மனித இனத்துக்கெல்லாம் ஆதாம்—ஏவாள் என்னும் இருவரும் மனித இனத்துக்கு ஆதித்தாயும் தந்தையும் என்கின்றனர். இது உண்மையாயின் மனிதன் தோன்றி இற்றைக்கு 4004—5991 ஆண்டுகள் ஆகின்றன. (ஆதாரம் : டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் மதத்தில் கிழக்கும் மேற்கும் ; தமிழாக்கம், பக்கம் 108-ல் பார்க்க) (இவ்வாறு கூறியுள்ளவர் : பிஷப் அருளாளர் லைட்புட் என்பவர்)

மேற்கூறியுள்ள கருத்திற்குச் சான்றாக ஏறக்குறைய பொருந்துவதுபோன்ற ஒரு பாரம்பரியக் கணக்கும் பைபிளில் இருக்கிறது. அதையும் இங்கு வாசகர்களுக்கு நினைவூட்டுவது நலமெனத் தோன்றுகிறது.

ஆதி மனிதர் ஆதாம் இவரைக் கடவுள் உருவாக்கினார். இந்த ஆதாமின் புதல்வர் சேத்து. சேத்துவினுடைய புதல்வர் ஏனோஸ். இவருடைய புதல்வர் கேனான் என்னும் முறையில் மரபுவழி எண்ணிக்கொண்டு வந்தால் இயேசுநாதர் ஆதாமுக்கு 80வது பேரப்பிள்ளை என்னும் கணக்கில் வருகிறார். இயேநாதர் தோன்றி இன்றைக்கு 1987 ஆண்டுகள் ஆகின்றன. இயேசு பிரானின் முன்னோர்களான 80 பேருக்கும் சராசரி 50 ஆண்டுகள் உலகில் வாழ்ந்ததாகத் தோராயமாக யூகிப்போமானால் 4000 ஆண்டுகள் வருகின்றன. இவர் தோன்றி 1987 ஆண்டுகள் ஆன்றன. ஆக இரண்டையும் கூட்டினால் 5987 ஆண்டுகள் ஆகின்றது. இத்துடன் பிஷப் லைட்புட் அவர்களின் அறிவிப்புப்படி நாலாயிரத்து நான்கு என்பதற்கு ஏற்ப 4 ஆண்டுகளையும் சேர்த்தால் உலகம் தோன்றி இன்றைக்கு 5991 ஆண்டுகள் ஆகின்றன. 6000 நிறைவுபெற இன்னும் ஒன்பது ஆண்டுகள்தாம் இருக்கின்றன. இன்னும் மீதமுள்ள 9 ஆண்டுகள் கழிந்தால் இந்த உலகமே அழிந்துவிடப்போகிறது என்றும் சில மதத்தினர் கருதுகின்றனர். ஆயினும் இவைகளனைத்தும் ஒரு ஊகமே தவிர இவற்றை நிச்சயிக்கமுடியவில்லை. காரணம், புதைபொருள் ஆராய்ச்சியாளர்களும், அணுப் பிரமாணவாதிகளும், சரித்திர நிபுணர்களும் விஞ்ஞானிகளும் இக்கூற்றை ஒப்புக்கொள்ளுவதாகத் தெரியவில்லை. ஒருக்கால் இவர்கள் ஒப்புக்கொண்டாலும் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் உலகத்தில் வாழ்ந்து வந்தனர். அப்பண்டைய மக்கள் ஏதோ ஒரு கொள்கையைப் பின்பற்றி இருக்கவேண்டும். அக்கொள்கைதான் இன்று பலவாகப் பிரிந்து காணப்படும் கொள்கைகள் அனைத்துக்கும் தாய்க்கொள்கை; அதுவே தாய்மதம். அந்தத் தாய்மதம் எது? அதைத் தோற்றுவித்தவர் யார்? அது எப்போது தோன்றிற்று? இதன் காலக்கணக்கு என்ன? என்பவற்றைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறும் ஆதாரங்களையும் அடிப்படையாகக் கொண்டு நம் சிற்றறிவுக்கு எட்டியவரையில் சிந்தித்துப் பார்க்கலாம்:

---

* பைபிள் புதிய ஏற்பாடு லூக்கா. அ 23-ல் இருந்து 38வரையிலும் பார்க்க.

நூலின் பெயரும் சுவாமி விவேகானந்தரும்

சுவாமி விவேகானந்தரின் சொல்லையே ஆதாரமாகக் கொண்டு இந்நூலுக்கு நான் தாய்மதம் என்னும் பெயரைச் சூட்டினேன். அவர் இந்து மதத்தை தாய் என்று கூறினார். கூறிய இடம் தன்னுடைய சொந்த மதத்தினர் குழுமியிருந்த இடத்திலோ எதிர்த்துக் கேட்போர் இருக்கமாட்டார்கள் என்னும் தைரியத்தாலோ தற்பெருமையாகக் கூறிக்கொள்ளவில்லை. தனது சொந்தநாட்டிலும் இச் சொல்லை வெளியிடவில்லை. பல நாட்டு மக்கள், பல மதங்களை ஆராய்ந்தறிந்த நிபுணர்கள், பல மதப் பிரதிநிதிகள் நிறைந்த பெருங் கூட்டத்தில் இந்து மதத்தைத் தாய் மதம் என்று முழங்கினார்.

இந்துமதம் தாய்மதம் என்னும் தகுதிக்கு ஏற்றது தானா? அத் தகுதிகள் யாவை? ஒவ்வொரு தரத்தினனும் தத்தம் மதத்தைச் சிறந்ததென்றும், உயர்ந்ததென்றும் அதன்பேரில் தாம் வைத்துக்கொண்டுள்ள அபிமானத்தால் கூறிக்கொள்வது இயல்பு. விவேகானந்த அடிகளாரும் மற்ற மதத்தினர் களில் சிலர் தம் மதத்தை தாமே மெச்சிக்கொள்ளுவதைப் போலக்கூறினாரா? அல்லது உண்மையைக் கூறினாரா? என்பதையும் சிந்திக்கவே இந்நூலுக்குத் தாய் மதம் என்னும் பெயர் சூட்டப் பெற்றுள்ளது.

சுவாமி விவேகானந்தர்

இத்தாலிய நாட்டுக் குடிமகனான கொலம்பஸ் என்னும் மாலுமி கடல்மார்க்கமாக இந்தியாவைக் காணவேண்டுமென்று நாவாயின்மூலம் பிரயாணப்பட்டான். சுமார் இரண்டுமாத காலம் விடாமுயற்சியுடன் சென்றதின் பயனால் கி. பி. 1492 அக்டோபர் மாதம் 12-ம் நாள் இந்தியாவுக்குப் பதிலாக அமெரிக்கா கண்டத்தைக் கண்டுபிடித்தான். அந்த நன்னாளை நினைவுகூரும் வகையில் அமெரிக்க மக்கள் நூறாண்டுக்கு ஒரு முறை சிறப்பாகக் கொண்டாடுவார்கள். அப்போது உலக சந்தைகூடும். அச்சந்தையில் புதுமையாகக் கண்டுபிடிக்கப் பட்ட நூதனக் கருவிகள் முதற்கொண்டு, விஞ்ஞானம், கலை ஞானம், தத்துவம், சித்திரவேலைப்பாடுகள், ஓவியம், மருத்துவத்துறையின் முன்னேற்றம் போன்றவற்றை அவ்வுலக சந்தையில் காட்சிப் பொருள்களாகவும், விற்பனைக்கும் வரும் அந்த விழாவில் மதங்களுக்குள் எது சிறந்த மதம் என்பதையும் அறிய சில அமெரிக்க அறிவாளிகளின் எண்ணத்தில் உதித்தது. பெரும்பாலும் கிறிஸ்துவமதம்தான் உலகத்தில் ஈடு இணையற்ற

மதம் என்பது அம் மதத்தினரின் உள்ளக்கிடக்கை. ஆயினும் அதனைப் பல மதப் பிரதிநிதிகளின் முன்னிலையில் நிருபிக்கப்பட்டால் மேலும் மத வளர்ச்சிக்குப் பக்கபலமாக இருக்கும் என்னும் உள்நோக்கமும் கொண்டனர்.

இவ்விழாவில் கலந்துகொள்ளவேண்டுமென்று 59 நாடுகளுக்கு 10 ஆயிரம் அழைப்புகள் அனுப்பப்பெற்றதாம். இவ் விழா நடத்துவதற்கு ஒதுக்கப்பட்ட செலவுத்தொகை 88கோடி என்கின்றனர். எல்லாத் துறை நிபுணர்களுக்கும் அழைப்புகள் சென்றன. அதேபோல எல்லாவிதத் தலைமை பீடங்களுக்கும் அவரவர்களின் மதத்தின் சிறப்பியல்புகளை விளக்கவல்ல பிரதிநிதிகளை சொற்பொழிவிற்கு அனுப்பிவைக்குமாறு விண்ணப்பமடல்களும் விரைந்தன. இந்து மதத்தின் தலைமைப்பீடம் எது என்பது அமெரிக்கர்களுக்கு விளங்காமையால் இதற்கு அழைப்பை அனுப்ப முடியவில்லை. இந்தியாவிலிருந்த மற்றைய பிரிவுகளுக்கு அழைப்புகள் வந்தன. ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், பிரம்ம ஞான சபை முதலானவற்றுக்குக்கூட தத்தம் கொள்கைகளை விளக்க பிரதிநிதிகளை அனுப்புமாறு அழைப்புகள் வந்தன. இன்றும் இந்துமதம் அதே நிலையில் தான் இருக்கிறது. இந்துமத வளர்ச்சிக்கென்று பொதுவாக ஒரு தனி கண்காணிப்பு நிலயத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ளாமையால் பூசையில்லாத ஆலயம்போலப் பொலிவிழந்து நிற்கிறது. இந்துமதத்துக்கும் தலையாய நிலையமொன்று அவசியமாகும். இதைப்பற்றி பிறகு விரிவாகச் சிந்திக்கலாம்.

சர்வமத சமரச உலக மகாசபையில் தத்தம் மதத்தின் மேன்மைகளை விளக்குவதற்கு பலநாடுகளிலிருந்தும் பல பிரதிநிதிகள் ஆயத்தமாயினர். இலங்கையிலிருந்து புத்தமதப் பிரதிநிதியாக தருமபாலரும், பிரம்மசமாஜத்தின் சார்பில் மஜூம்தார் அவர்களும், பிரம்மஞான சபையின் சார்பில் அன்னிபெசன்ட் அம்மையாரும், ஆரிய சமாஜத்தின் சார்பில் வீரசந்த்ர காந்தியும், கிரீஸிலிருந்து கிறிஸ்துவ சபைகுருமார்களும் ஆப்பிரிக்க மெதோடிஸ்ட் (African Methodist Church) குருமார்களும், ஜப்பான் தேசத்து புத்த குருக்களும், சீன தேசத்து கன்பூஷியஸ் மதத்தவர்களும், சாரதுஷ்டிர மதத்தினரும் அந்த சர்வமத சமரச உலக மகா சபைக்குச் செல்லலாயினர்.

சுவாமி விவேகானந்தர் இந்தியா முழுவதும் இந்துமதப் பிரச்சாரச் சுற்றுலா செய்துகொண்டு சென்னைக்கு வந்தார். இந்துமதத்தைப் பற்றி இவருடன் கலந்துபேசிய பல பெரும் புலவர்களுக்கு விவேகானந்த அடிகளாரை இந்துமதத்தின்

சார்பில் உரையாற்ற அமெரிக்காவிற்கு அனுப்பவேண்டும் என்று கருதினர். காரணம் ஆங்கிலப் புலமையும் அனுபவமும், அறிவாற்றலும் நூலாராய்ச்சியும் அமைந்திருப்பதை அறிந்தனர். சென்னையிலிருந்த சில மூதறிஞர்கள் தங்களுடைய கருத்தை சுவாமிகளுக்கு விண்ணப்பிக்க சுவாமிகளும் இசைந்தார். உடனே போக்குவரவு செலவுக்கான யாவற்றையும் ஆயத்தம் செய்து சுவாமிகளை முன்கூட்டியே அனுப்பி வைத்தனர். ஆயினும் இவர் அமெரிக்கா செல்வதற்கு முன்பே அப்பேரவையில் பேசக்கூடியவர்களின் பெயர்களையும் நிறைவுசெய்துவிட்டு இருந்தனர். ஆகவே இவருக்கு இந்து மதத்தைப்பற்றிப் பேச வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஹார்வர்டு சர்வ கலாசாலைப் பண்டிதராக இருந்த ஜெ. டபிள்யு ரைட் (J. W. Wrigit) என்பவரின் பேருதவியாலும், மிஸஸ். ஜார்ஜ் ஹேல் (Mrs. George Hale) என்னும் உத்தமியின் பெருமுயற்சியாலும் அந்த மகா சபையில் பேச வாய்ப்புக் கிடைத்தது. அம் மாநாட்டில் பேசவந்த பிரதிநிதிகளின் பட்டியலில் 31–வது எண்ணில் இவருடைய பெயர் பொறிக்கப்பெற்றது.

அந்த மகாசபை சிகாகோ நகரத்தில் 1893, செப்டம்பர் 11ஆம் நாள் இன்னிசை முழங்க ஆரம்பமாயிற்று. ரோமன் கத்தோலிக்க பரமாசாரியராய் இருந்த கார்டினல் கிப்சன் என்பவரின் கடவுள் வணக்கத்துக்குப்பின் சபையின் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. அப்பேரவையில் பல சமய ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், தத்துவப் பேராசிரியர்கள், பத்திரிகையாசிரியர்கள், பல மத குருமார்கள் முதலான பெரியோர்களின் குழு நிறைந்திருந்தது. ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் மதப் பெருமைகளைச் சிறப்பாக விளக்கிக் கூறியபின், இறுதியில் சுவாமி விவேகானந்தருக்கு பேச வாய்ப்பு அளிக்கப்பட்டது.

சொற்பொழிவின் முன்னுரை

அருள் ஞானக் கடல்போன்ற இராமகிருஷ்ண பரம அம்சரை உள்ளத்தில் உன்னி மேடை ஏறினார். பேசுகின்ற பிரதிநிதிகளின் அறிவாற்றலை அளந்தறியும் அளவுகோல்போல சபைத் தலைவர் அமர்ந்திருந்தார். எதிரிலும் இரு மருங்கிலும் இருந்தவர்கள் எண்ணற்றக் கலைக்கடல்களைப்போலக் காட்சியளித்தனர். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முனிவர்களின் அமுத மொழிகள் அடிகளாரின் மலர் வாயினின்று ஆங்கில மொழியின் வடிவத்தைப் பெற்றுத் தங்குதடையின்றி வெளிவரத் தயாராயின. அந்த சந்தர்ப்பத்தில் விவேகானந்த

அடிகள் முன்னுரையில் மொழிந்தருளிய சில பொன்னுரைகளை மட்டும் வாசகர்களுக்கு இங்கு நினைவூட்ட விழைகிறேன்.

"சகோதரிகளே! சகோதரர்களே! என்று கூறிய அந்த விநாடியே கைதட்டலும் மகிழ்ச்சி யாரவாரமும் அடங்கப் பல நிமிடங்கள் சென்றனவாம். காரணம் இவருக்கு முன்பு பேசிய சொற்பொழிவின் தொடக்கத்தில் சீமாட்டிகளே! சீமான்களே! என்று கூறியபின்னரே விஷயத்துக்கு வருவார்கள். இவ்வாறு கூறுவது அந்த மே நாட்டின் மரபாகும். இவர் அந்த நெறி முறையை மாற்றி அனைவரையும் உடன்பிறந்தவர்கள் என்னும் பொருள் தொனிக்குமாறு 'சகோதரிகளே! சகோதரர்களே!' என்னும் விளி அக் கூட்டத்தில் உள்ளவர்கள் அனைவரின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டுவிட்டது. இவருடைய வாயினின்று வெளிப்பட்ட மணி மொழி மனிதர்கள் அனைவரும் திருமூலர் கூறியுள்ளதைப்போல ஒன்றே குலம் என்னும் உணர்ச்சியைத் தூண்டிவிட்டது. அதனால் அவர்கள் சில நிமிடங்கள் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தனர். ஆந்த ஆரவாரம் சிறிது தணிந்தபின் கூறியவை:

1. "உலகிலுள்ள துறவொழுக்க நிலையங்களில் மிகப் பழமை வாய்ந்த ஒரு நிலையத்தின் பெயரால் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்!

2. உலகிலுள்ள மதங்களுக்கெல்லாம் தாய்மதத்தின் சார்பில் நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்!

3. பிறருடைய கொள்கைகளை வெறுத்து ஒதுக்காத பண்புடைமையையும், அக் கொள்கைகளில் உள்ள நல்லவற்றை ஏற்றுக் கொள்கின்ற பொதுநோக்கும் கொண்ட சமயத்துக்கு நான் உரியவன் என்று பெருமை அடைகிறேன்.

4. ரோமருடைய கொடுஞ் செயல்களினால் தமது பரிசுத்த ஆலயம் சின்னாபின்னப்பட்ட ஆண்டில் தென்னிந்தியாவுக்கு வந்து அடைக்கலம் புகுந்த யூதர்களுக்கு அன்போடு ஆதர வளித்தநாட்டினன் நான் என்று உங்களிடம் பெருமையோடு கூறுகிறேன்.

5. மகத்துவம் பொருந்திய சாரதுஷ்டிர இனத்தில் எஞ்சி இருந்தோருக்குப் புகலிடம் அளித்து இன்றும் பாதுகாத்து வருகின்ற ஒரு மதத்துக்கு யான் உரியவன் என்று பெருமைப் படுகிறேன்

6. எல்லா மதங்களையும் அன்பினோடு நோக்குகின்ற பண்புடைமையில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு.

7. மதபேதம் மூடநம்பிக்கை பிடிவாதம் என்பவற்றால் உண்டாகும் கொடியவீராவேசமும் இந்த அழகிய பூமியை வெகுநாளாக ஆக்ரமித்துக் கொண்டு வந்துள்ளன. அவை தம் கொடுந் தொழில்களால் உலகத்தைச் சீர்குலைத்து, மக்களினத்தை உதிரவெள்ளத்தில் தோய்த்து நாகரிக வாழ்க்கையை அழித்து, மனித இனத்தைத் திகைக்கவைத்துவிட்டன. இத்தகைய கொடிய பிசாசுகள் தோன்றாதிருந்தால் நாம் இப்போது இருப்பதைவிட எவ்வளவோ மேலான நிலையில் இருந்திருப்போம்,'' என்று அடிகளார் முதல்நாள் சொற்பொழிவின் முன்னுரையில் கூறிய பொன்னுரைகளாகும். இவற்றுள் இந்துமதம் தாய்மதம் என்று கூறிய இன்னுரையை இந்நூலின் பெயராகச் சூட்டப்பட்டது.

சுவாமிகள் தாம் கொண்டுள்ள துறவொழுக்க மரபின் பாரம்பரியத்தை விளக்கும்போது இந்து மதம் மிகப் பழமை வாய்ந்தது என்பதையும் நினைவூட்டினார்.

இந்து மதம் மிகப் பழங் காலத்திலேயே இல்லறம் துறவறம் என்னும் இரு நெறிகளையும் மிகத் துல்லியமாக வகுத்திருக்கிறது. இவற்றுள்ளும் துறவொழுக்கங்களைக் கடைபிடிக்கும் முனிவர்களின் பெருமை ஏட்டில் எழுதி அடக்கமுடியாததாகும்.

> '' துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
> இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.''

என்று சுமார் 2000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே திருவள்ளுவனார் கூறியுள்ளார்

நாடு நகரங்களில் அனுபவிக்கும் ஆடம்பர வாழ்க்கைகளைத் துச்சமென்று கருதி, காடுமலைபோன்ற இடங்களில் கடுந்தவம் மேற்கொண்டு உண்மையை உலகத்துக்கு உணர்த்திய உத்தமர்களின் பெருமையை உணர்த்த முடியாமல் தெய்வப் புலவரே திகைத்து உலகத்தில் நமக்கு முன் பிறந்து இறந்தவர்களின் எண்ணிக்கையை எப்படி எவராலும் கூற முடியாதோ, அதேபோலத் துறவிகளின் பெருமையையும் கூற முடியாது என்று விளக்கியுள்ளார்.

மனிதப் பிறவி இத்தகையதென்றும், மக்கள் இந்த நெறியில் தான் நடக்கவேண்டுமென்றும் பண்டைய நாளில் வழிவகுத்துத் தந்தவர்கள் பாரத முனிவர்களே. மனித குலத்துக்கு அறிவு

பெருக மூலமாக இவர்கள் இருந்தமையால் முன் + இவர்கள்— முனிவர்கள் எனக் கூறப் பெறுகிறது. கன்னியாகுமரியிலிருந்து இமயம் வரையிலும் உள்ள காடுகளும் மலைச்சாரல்களும் முனிவர்களின் தபோ வனங்களாகும்.

இர்ராமபிரான் காடு சென்றபோது சித்திரகூட மலையிலும் தண்டகாரண்யமென்னும் வனத்திலும் சுமார் 12 ஆயிரம் முனிவர்கள் இருந்தரென இராமாயணம் கூறுகிறது. பரத்துவாசர், சுதீக்ஷ்ணர், சரபங்கர், அத்திரி, அகத்தியர், சபரி போன்ற பெருந் துறவிகளையும், பாண்டவர்கள் காடு சென்ற போது பல இருடிகளையும் கண்டதாக பாரதம் கூறுகிறது. மன்னாதி மன்னர்களும் இறுதி நாட்களில் துறவிகளான வரலாறுகள் பரதகண்டத்தில் பல உண்டு. பாகீரதன், பரதன், இரகுசக்ரவர்த்தி, கௌசிகன், பாண்டு, மகாவீரர், புத்தர் முதலானவர்களும் மன்னர்களேயாவர்.

சுவாமி விவேகானந்தரும் சுமார் 100 ஆண்டுகளுக்குமுன் பி. ஏ. பட்டதாரி. இவர் விரும்பி இருந்தால் சிறந்த உத்தியோகங்களில் அமர்ந்திருக்கலாம். உயர் பதவியைப் பெற்று உலக சுகபோகங்களில் ஈடுபட்டிருக்கலாம். அவற்றை எல்லாம் துறந்து சமயத் தொண்டிற்காக சந்யாசம் மேற் கொண்டார். ஆகவே துறவொழுக்கத்தின் பெருமை துறவி களுக்குத்தான் தெரியும். அதை விளக்கியபிறகு உலக மதங் களுக்கெல்லாம் இந்துமதம் தாய்மதம் என்னும் உண்மையை வெளியிட்டார்.

இந்துமதம், தாய்மதம்; என்று கூறிய இடம் இந்தியா அல்ல. மற்றும் பலமதப் பிரதிநிதிகள் நிறைந்திருந்த உலக மகா சபை. இவர் கூறியது தவறாக இருந்திருந்தால், உலக மகாசபை இவரைப் பார்த்து உருமியிருக்கும்; கேள்விக் கணைகளென்னும் சொன்மாறியில் இவரைத் திக்குமுக்காடச் செய்திருக்கும். கல்விக் கடல்போன்ற அப் பெருங் கூட்டம் ஆனந்த ஆரவாரத்தையா செய்திருக்கும்? சரித்திர ஞானமும் சமய ஞானமும் உணர்ந்த பெரியோர்களும் அப் பேரவையில் நிறைந்திருந்தனர். ஆகவே அடிகளாருடைய அருளுரைகள் அவர்களுடைய உள்ளங்களைக் கொள்ளை கொண்டுவிட்டன.

அடிகளாரைப்பற்றி அமெரிக்க அறிஞர்கள்

1. நியூயார்க் தூதன் (Newyork Herald) என்னும் பத்திரிகை ஆசிரியர்,

"சர்வமத மகாசபையில் கூடிய எல்லோரையும்விட சுவாமி விவேகானந்தரே சிறந்தவர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அவர் பேசியதைக் கேட்டபிறகு அப்படிப்பட்ட கல்வித் தேர்ச்சியுள்ள இந்து தேசத்தவர்களிடம், நம் பாதிரிமார்களை அனுப்பியது எவ்வளவு முட்டாள்தனம் என்று நாம் உணருகிறோம்."

சர்வமத மகாசபையின் விஞ்ஞான சாகையினது அக்ராசனாதிபதி திரு. மர்வின் மஸ்நெல் என்பவர் அடிகளாரைப்பற்றி எழுதியுள்ளவை :

"சிகாகோ பட்டணத்தில்கூடிய சர்வமத மகாசபையானது அனேக காரணங்களால் ஒரு பெரிய நிகழ்ச்சியின் அறிகுறி என விளங்குகிறது. இதனால் விளைந்த முக்கியமான பிரயோசனங்களில் ஒன்று என்னவென்றால், அது கிறிஸ்துவ பிரபஞ்சத்துக்கு ஒரு அரிய பெரிய விஷயத்தைத் தெரிவித்தது. அது என்னவெனில் கிறிஸ்துவ மதத்தைவிட, அதிக கௌரவத்துக்குரிய வேறு மதங்கள் இருக்கின்றன என்றும், அவை ஆழ்ந்த தத்துவ ஆராய்ச்சியிலும், ஆன்மீக மேன்மையிலும் சுதந்திர சிந்தனா சக்தியிலும் கிறிஸ்துவ மதத்துக்கு மேல் நிற்பதுடன், அறநெறிகளிலும் ஆத்ம லாபத்தை அடைவிக்கும் திறத்திலும் அணுவளவேனும் தாழ்ந்தவை அல்ல என்பதையும் எடுத்துக்காட்டியது.

இம் மகாசபையில் பங்கேற்ற மதங்கள் இந்து மதம், ஜைன மதம், ஜொராஷ்டிர மதம், புத்தமதம், யூதமதம், சீன தேசத்து கன்பூஷியஸ் மதம், ஜப்பான் தேசத்து ஷிந்தோமதம், இஸ்லாம் மதம், கிறிஸ்துவமதம் என்பவைகளாகும்.

அமெரிக்க நாட்டினரின் உள்ளங்களில் இந்து மதத்தைப் போல அழமாக எந்த மதமும் ஊன்றிப் பதியவில்லை. இந்து மதத்தைப்பற்றிப் பிரசங்கித்த விவேகானந்த சுவாமிகள் மிக முக்கியமானவராகும். இவர் இந்து மதத்துக்குச் சரியான பிரதிநிதியுமாவார். இவர் அனைவராலும் அதிக செல்வாக்கு உள்ளவர் என்பதில் இம்மியும் சந்தேகமில்லை.

இவர் சர்வமத மகாசபையின் மண்டபத்திலும், என்னுடைய தலைமையில் நடந்த விஞ்ஞான சாகைச் சபைகளிலும் அடிக்கடி பேசினார். அவ் வெல்லாச் சமயங்களிலும், கிறிஸ்துவர்களும் அந்நிய மத்தவர்களும் எல்லாரையும்விட அவரையே அதிக உற்சாகத்துடன் உபசரித்துக் கொண்டாடினர். இவர் திருவாயினின்று பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையும் கேட்க மக்கள் மிகவும் ஆவல் கொண்டிருந்தார்கள். மிகப் பிடிவாதமும்

கடுமையுமான கிறிஸ்துவர்களும்கூட இவரை உண்மையில் மனிதருக்குள்ளே இராஜகுமாரர் என்று கூறினார்கள்.

அமெரிக்க நாடானது ஆன்மீகப் பசிப்பிணியால் வருந்துகிறது. இவ் செல்வத்தில் மேம்பாடு அடைந்திருப்பினும்... அத்தியாத்ம விஷயத்தில் ஐரோப்பா கண்டம் இந்தியாவுக்கு எப்பொழுதும் கடன்பட்டிருக்கிறது. கிறிஸ்துவ வேதங்களிலே உள்ள உத்தம சித்தாந்தங்களிலே இந்துமதத்தின் மூலமாய் வராதவை வெகு சொற்பம் என்றே சொல்லாம். ஆகவே, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அதிகக் கல்வி தேர்ச்சி பெற்ற ஆடவரும் பெண்டிரும் ஞானஒளிக்கு முக்கிய மூலகாரணமாகிய இந்துமதத்தையே அனுகூலமான சமயம் வாய்க்கும் போதெல்லாம் சாதாரணமாக நாடுகின்றனர். இந்நாட்டில் இதுவரையிலும் இவரைப்போல் சுத்தமாக இந்துமதத்தை உதாரணங்களோடு அமெரிக்க மக்களுக்குப் பிரசிங்கத்தவர்கள் எவரும் இலர். ஆகவே சுவாமிகள் இந்த நாட்டைவிட்டுத் தன் ஜன்மதேசம் போனபின் அமெரிக்கர்கள் பிரிவுக்காக மிகவும் வருந்துவார்களென்பது திண்ணம்... இவரைப்போன்ற மற்ற மகான்கள் இந்நாட்டுக்கு விஜயம் செய்து எம்மை அநுக்கிரக்கும் நாள் எந்நாளென்னும் பேராவலுடன் இருக்கிறோம்.

கிறிஸ்துவ மதத்தில் அழுத்தமான பற்றுள்ள ஒரு சிலர் மாத்திரம் சுவாமிகளுக்கு உண்டான வெற்றியைக் கண்டு சகியாது அவரைக் கண்டிக்க எழுந்தனர். ஆனால் அவர்களின் பொறாமையும் பகைமையும்கூட காஷாயதாரியான யதீந்திரரிடம் நிலைகொண்டிருந்த சாந்தமும், சீலமும், சித்த சுத்தியும், கல்வியின் சிறப்பும் பெருந்தன்மையும் மனோகரமான மதுர மொழிகளாலும் வெல்லப்பட்டு வலிகுன்றிப் போயின.

இப்பேர்ப்பட்ட மாட்சிமை தாங்கிய மகானை அனுப்பியதற்காக இந்தியாவிற்கு அமெரிக்க மக்கள் மிக்க வணக்கத்தைச் செலுத்துவதுடன்... எங்கும் பிரகாசமாய் ஒளிரும் பரப்பிரம்மத்தின் சொரூப ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்னும் பலரை அனுப்புமாறு பலகாலும் பிரார்த்திக்கின்றோம்.''

இங்ஙனம்

மர்வின். ம. ஸ்னெல்

அக்ராசனாதிபதி

சுவாமி விவேகானந்தரையும், அமெரிக்க கண்டத்தாரையும் கௌரவிக்க இந்தியத் தலைநகரில் கூடிய மகாசபையாருக்கு சர்வமத மகாசபையின் தலைவர் ஜான் ஹென்றி பாரோஸ் என்பவர் எழுதி அனுப்பிய மடல்:

"சுவாமி விவேகானந்தர் சிகாகோ சர்வமத மகா சபையோர்மீது ஒரு அற்புதமான அதிகார சக்தி செலுத்தியதும் மேலும், அனைவர் உள்ளத்தையும் கவரத்தக்க வாக்கு சாதுர்யமும் வடிவழகும் வாய்ந்தவர். மத ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்னும் ஆவலையும் அக்கறையையும் எல்லோருடைய உள்ளங்களிலும் எழுப்பியுள்ளார். இந்நாட்டுக்கு இவர் வந்ததின் பயனாக எங்கள் முக்கியமான சர்வ கலாசாலைகளிலே மத ஆராய்ச்சி செய்வதற்கான சொற்பொழிவுக் கூடங்களும் ஆசிரியர்களும் ஏற்படுத்தியுள்ளனர். உங்களது புராதனமான பரிசுத்த சாஸ்திரங்களினின்று நாங்கள் பெறவேண்டிய அம்சங்கள் அதிகமாக உள்ளன; வெகு சமீபகாலத்தில் உங்கள் அற்புதமான நாட்டை வந்துபார்க்க ஆசைகொண்டிருக்கும் தங்கள் நன்றியறிதலுள்ள விதேயன்.

ஜான் ஹென்றி பரரோஸ்

இதுபோன்று இன்னும் பல பத்திரிகை ஆசிரியர்களும், சங்கத்தார்களும் பல பாராட்டுரைகள் எழுதியுள்ளனர். (விவேகானந்தரும், சிகாகோ சர்வமத மஹாசபையும், வெளியீடு 1933 நேஷனல் அச்சகம்! பெங்களூர்.)

தாயாகிய மதம்

தாய்மதம் என்னும் சொல்லை மூன்று வகையாகப் பொருள் படுத்தலாம்:

1. தாயாகிய மதம்: உலக மதங்கள் அனைத்துக்கும் முன்தோன்றிய மூலமதம்.

2. தாய்போன்ற மதம்: எத்த மதத்தையும் எதிர்க்காமல், மற்ற மதங்களுக்தும் மதிப்புத்தருவது,

3. தாயின் மதம்: இங்கு வந்த மதமல்ல; இந்த நாட்டு சொந்தமதம் என்றால் நம் தாய்நாட்டிலேயே தோன்றியமதம்.

இவ்வாறு தாய்மதம் என்னும் சொல்லை மூன்றுவகையாகப் பொருள்படுத்தக்கூடும். இம் முப்பொருளுக்குள் ஏதேனும் ஒன்றுக்காயினும் பொருத்தமாக வந்தாலும் அம்மதத்தைத்

தாய்மதம் என்பது தகும். இம்மூன்றும் பொருந்தி இருக்கின்ற மதம் ஒன்று இருக்குமானால் அம்மதத்தை மனிதகுலத்துக்கே தாய்மதம் என்பதில் தவறில்லை.

இன்று உலகிலுள்ள மதங்களுக்குள் மூன்று மதங்களைப் பழைய மதங்களாகக் கூறுகின்றனர். அவை இந்துமதம், யூதமதம், பாரசீகமதம் என்பனவாகும். இம்மூன்றினுள்ளும் இந்துமதம் முந்தியது. உதாரணமாக, பாரசீக மதத்தைத் தோற்றுவித்த பெரியாராகிய ஜொராஷ்டிரர் 2536 ஆண்டுகளுக்கு முன் தோன்றவில்லை. யூதா என்பவர் 3000 ஆண்டுகளுக்கு முன்னம் பிறக்கவில்லை. மற்றும் இம்மதங்கள் ஒவ்வொரு தலைவரைத் தலைமையாகக் கொண்டுள்ளன. இந்துமதம் எந்த தனிப்பட்ட தலைவருக்கும் உரிமைதரவில்லை. இது நாட்டின் பெயரால் கூறப்படுகிறது. நாடு இந்தியா; மதம் இந்து மதம். இந்த நாட்டில் மக்கள் எத்தனை காலங்களாக வாழ்ந்து வருகின்றனரோ அன்று முதல் இன்றுவரையிலும் இருப்பது இந்துமதம்.

இந்துமதம் தோன்றிய காலவரையறையைக் கண்டுபிடிக்க முடியாது. அதனால்தான் இதற்கு நாட்டின் பெயரே சூட்டப் பட்டுள்ளது. இந்திய நாட்டில் வாழ்ந்த பண்டைய மக்களின் வரலாறு எதுவோ அதுவே இந்துமதத்தின் வரலாறு. இந்தியாவில் மக்கள் வரலாற்றுக்கெட்டாத காலந்தொட்டு வாழ்ந்துவருகின்றனர். ஆகவே இந்துமதமும் வரலாற்றுக் கெட்டாத காலந்தொட்டு வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கிறது. இதன் தோற்றத்தை எவராலும் துருவிக் கூறமுடியாது. இதை ஆதியில் படைத்தவன் ஆண்டவன் என்றே கூறவேண்டும். இதன் மூல பிதா இன்னாரென்று கூற முடியாமையால் வேதத்தை அபௌரஷம் (புருஷனால் உண்டானதல்ல); இறைவன் திருவருளால் தோன்றினதென்று கருதலாம் என்றனர்.

இது பல மகான்களின் அருளுரைகளைத் திரட்டிவைத்துக் கொண்டுள்ளது. அம் மகான்கள் அனைவருக்கும் இம்மதத்தில் உரிமையுண்டு. இவர்களில் ஏற்றத்தாழ்வுகளைக் கூறமுடியாது. இந்துமதத்துக்கு இறுதி மகான் இவர்தான் என்று அணைகட்ட முடியாது. அணைகட்டியதுமில்லை. இது தனி மனிதனுடைய சர்வாதிகார மதமல்ல. இது சமுதாயமதம். இது முடியாட்சி யைப் போன்ற மதமல்ல. முடியாட்சிக்கு ஓர் அரசன் உண்டு. அவன் அந்நாட்டுத் தலைவன்; அவன் போட்டதுதான் சட்டம்; அவன் சொன்னதுதான் கட்டளை. இந்துமதம் அத்தகைய

மதமல்ல. இது குடியாட்சிக்கு ஒப்பானது. மக்கள் அனை வருக்கும் குடியாட்சியில் உரிமையுண்டு. தகுதி வாய்ந்தவன் பதவி வகிக்கலாம். பாரத தர்மமானது பன்னெடுங்காலங்களாக இடையறாது வந்துகொண்டிருக்கிறது. இதனை உருவாக்கியவர் ஒரு மகானல்லர் பல மகான்கள். இவ்வுண்மையை சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் நடந்த சர்வமத சமரச மகா சபையில் செப். 19, 1893 நாள் சொற்பொழிவின்போது இந்து மதத்தைப்பற்றி ஒரு விளக்கம் கூறினார் :

"வேதம் என்பதற்கு ஒரு புத்தகம் என்பது பொருளல்ல. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மக்களால் காணப்பெற்ற ஆத்மீக முடிவுகளை ஒன்றுசேர்த்து வைக்கப்பட்ட களஞ்சியமே வேதம். இவ்வேத விதிகளைக் கண்டுபிடித்தவர்களுக்கு ரிஷிகள் என்று பெயர்," என்று விளக்கினார்.

ஆகவே, இந்துமதம் ஒரு சமுதாயமதம் ; இது மக்கள் மதம். இந்திய மக்களுக்குத் தாய்நாடு இந்தியா ; இந்தத் தாய்நாட்டில் தோன்றிய மதத்தைத் தாயின் மதம் என்று கூறலாம். இந்தியத் தாயின் வரலாற்றைப்பற்றி மகாகவி பாரதியார்,

> "தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடும்
> சூழ்கலை வாணர்களும்—இவள்
>
> என்று பிறந்தவள் என்றுண ராத
> இயல்பினளா மெங்கள் தாய்,"

என்று பாடியுள்ளார். ஆகவே இதன் பண்டைய காலத்தைப் பண்டிதர்களாலும் கண்டுபிடிக்கமுடியவில்லை. இந்துமதம் பல காலவெள்ளங்களையும் கடந்து வந்துள்ளது. இந்து மதத்தில் தோன்றிய ஈடு இணையற்ற மகாத்மாக்கள் எண்ணிலடங் காதவர்கள் எனலாம். சனகர், சனந்தனர், சனத்குமாரர், சனாதனர், ஜன்னுவர், சாந்தீபர், அசிதர், அகத்தியர், அங்கீரதர், அட்டவக்ரர், அத்திரி, தத்தாத்ரேயர், ததீசி, வியாசர், வசிட்டர், விசுவாமித்திரர், பராசரர், பரத்துவாசர், பதஞ்சலி, பாணினி, வான்மீகர், பிருங்கி, போதாயனர், கண்வர், கபிலர், கணாதர், கார்கி, காஸ்யபர், கௌதமர், புசுண்டர், போகர், புலஸ்தியர், வாமதேவர், வள்ளுவர், நக்கீரர், அல்லமர், ஜெயதேவர், இராமானந்தர், சித்தர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சங்கரர், இராமானுஜர், மத்துவர், நீலகண்டர், சுகப்பிரம்மர், வீரப்பிரம்மர், இராகவேந்திரர், பசவண்ணர், பனத்ரர், ஔவைப்பிராட்டி, சபரி, அக்கமா

தேவி, மீராபாய், சக்குபாய், தாயுமானார், அருணகிரிநாதர், இராமலிங்கர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியடிகள் வரையிலும் இந்துமதத்தின் சொந்தக்காரர்கள் பலரிருந்தனர்.

இன்னும் மற்ற பெரியோர்களின் பெயர்களை எல்லாம் எழுதவேண்டுமானால் அது ஓர் அகராதியாக முடியும்; விரிவு அஞ்சி இத்துடன் விடுகிறேன். இந் நாட்டில் உதித்த சித்தர்கள், பக்தர்கள், நீதிமான்கள் என்பவர்கள் பலராகும். இந்துமதம் முந்தையோர்களைமட்டும் ஏற்றுக்கொண்டு பிற்காலத்தவர்களைப் புறக்கணிப்பதில்லை. பிற மதத்தவர்களும் இதில் வந்து இணங்கிக்கொள்ளலாம்; அவர்களையும் இது புறக்கணிக்காது. "பிறருடைய கொள்கைகளை வெறுத்து ஒதுக்காத பண்புடைமையும் அக்கொள்கைகளில் உள்ள நல்லவற்றை ஏற்றுக்கொள்கின்ற பொதுநோக்கும் கொண்டது. இந்துமதம் பற்றி விவேகானந்தர் கூறியதுபோல நீண்ட காலங்களாக இம் மண்ணில் பிறந்த எண்ணற்ற மகான்களின் அருளுரைகள் அனைத்தையும் தன்னில் காந்தம்போல் ஈர்த்துக்கொண்டிருக்கிறது. இதில் சொல்லாத நீதியும், இல்லாத ஆன்மீகமும் பிற மதங்களில் காண்பதரிதாகும். இது பல்லாயிரமாண்டுகளாக அவ்வப்போது திருத்தப்பெற்றும் வந்துள்ளது. இந்துமதம் ஒரு ஆலமரத்துக்கொப்பானது. ஆலமரத்துக்கு அடிமரத்தில் தோன்றிய வேர் மட்டும் ஆதாரமல்ல. பிற்காலத்தில் அதன். கிளைகளில் ஊன்றும் விழுதுகளும் வேர்களாக மாறும். இந்து மதத்தில் தோன்றிய மகான்களும் விழுதுகளுக்கொப்பானவர்களே. வருங்காலப் பெரியோர்களுக்கும் இதில் உரிமையுண்டு. நாட்டின் நலனைச் சீர்தூக்கி மக்களாட்சி சட்டத்தில் சிற்சில மாற்றங்களைச் செய்வதைப்போல இந்துமதம் மக்களின் நன்மையைக் கருதி சில மாற்றங்களைச் செய்யவும் உரிமை தந்திருக்கிறது. உதாரணமாக, மனுஸ்மிருதி, அத்தியாயம் 1. சுலோகம் 85-ல்.

"கிருதயுக தருமம் வேறாகவும், திரேதாயுக தருமம் வேறாகவும், கலியுக தருமம் வேறாகவும் யுகங்களின் நிலைகளுக்குத்தக்கபடி மக்களுக்கு ஏற்பட்டுள்ளன."

—என்று கூறுவதே இதற்குப் போதுமான சான்றாகும். மற்றும் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலான தொல்காப்பியம், நன்னூல் என்னும் இலக்கணத்திலும் இதற்கு இடமுண்டு.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்று கூறப்பெற்றுள்ளது. இந்த தொல்காப்பியம் இந்து மதத்தைத் தவிர மற்றைய மதங்கள் அனைத்துக்கும் முற்பட்டதாகும். இன்றைய பண்டிதர்களை உருவாக்கி இருப்பதும் அப்பண்டைய இலக்கணமாகும். இன்றும் தொல்காப்பியத்தைப் படிக்காதவர் புலவர் பட்டத்தைப் பெறமுடியாது. புலவர்களைப் புதுப்பிக்கும் புனித நூலும் இதற்குச் சான்றாக இருக்கிறது. இந்துமதம் அடம்பிடித்த மதமல்ல. அனைத்து மதங்களையும், மக்களையும் காலங்களையும் அனுசரித்து நடந்துகொண்டு வந்திருக்கிறது.

ஆராய்ச்சியாளர்களுக்கு எட்டியவரையிலும் கிட்டியவை:-

"சிந்துநதிப் பள்ளத்தாக்கில் காணப்பட்ட சில சாசனங்களின் குறிப்புகளைக் காணும்போது மொகஞ்சதாரோ முதலிய நாகரிகங்களின் காலம் கி.மு. 5610 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று கூறுவர்.

மனிதன் பூமியில் தோன்றி ஆயுதங்களின் பயனை அறிவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கக்கூடும். உலோகங்களின் பயனை அறிந்து ஆயுதங்கள் செய்யப் பழகிய காலத்துக்கு அவன் வரச் சுமார் 20 ஆயிரம் அல்லது ஒரு லட்சம் ஆண்டுகள் சென்றிருக்கவேண்டும். இவ்வாறு மக்கள் நூலார் கூறுகின்றனர். சிந்துவெளி நாகரிக காலம் கற்காலத்தின் அந்தமும் உலோக காலத்தின் தொடக்கமும் எனத் தோன்றுகிறது. ஆகவே மக்கள் அங்கு குறைந்தது 20 ஆயிரம் ஆண்டுகளாவது வாழ்ந்திருந்தார்களாதல் வேண்டும்." –இவ்வாறு திரு. ந. சி. கந்தய்யாப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார், 'தமிழர் சரித்திரம்,' என்னும் நூலில், (திரு. ஹெரஸ் பாதிரியார் அவர்களின் எடுத்துக்காட்டு ; பக்கம் 21.)

நமது பாரதப்பிரதமராய் இருந்த மாண்புமிகு ஜவஹர்லால் நேருஜி அவர்கள் எழுதியுள்ள உலக சரித்திரநூல் தமிழாக்கம் பக்கம் 324-ல் முகஞ்சதாரோ நாகரிகம் பற்றி . . .

"ஒரு விஷயம் தெளிவாகவும், திட்டமாகவும் தெரிகிறது. முகஞ்சதாரோவிலும் அரப்பாவிலும் இதுவரையிலும் கண்டெடுக்கப்பட்ட நாகரிகமானது ஆரம்ப நிலையில் உள்ளதொன்றல்ல. இந்த பூமியில் ஏற்கெனவே அது பல காலங்களாக வளம்பெற்று வந்திருக்கிறது. பல ஆயிரமாண்டுகளாக இடைவிடாது செய்யப்பட்டுவந்த மனித முயற்சியின் பயனே அது...... நமது சிந்துநதிப் பள்ளத்தாக்கின் நாகரிகம் 5000 ஆண்டுகளுக்கு

முற்பட்ட காலத்துக்கு மட்டும் செல்லவில்லை. அதற்கும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட காலத்தின் கரையில் நிற்கிறோம். அவ்வாறு நின்று பார்க்கும்போது, மனிதன் முதன் முதலில் நிலைத்து வாழத்தொடங்கிய அற்புதமான காலத்தின் பனிப்படலம் நம்மைக் கௌவிக்கொள்கின்றது.

சில முக்கியமான விஷயங்களைமட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சை நூற்று ஆடையாக நெய்து உடுத்திக் கொள்ளும் வழக்கம் முகஞ்சதாரோ மக்களிடம் இருந்துள்ளது. அது அக்காலத்தில் இந்தியாவில்மட்டுமே காணப்படுகிறது. இதற்கு 2000 அல்லது 3000 ஆண்டுகளுக்குப் பின்பே மேலை நாடுகளுக்கும் இவ்வழக்கம் பரவியுள்ளது. மேலும் முகஞ்ச தாரோவில் காணப்படும் விசாலமான வீதிகளும் நன்கு அமைக்கப்பட்ட நீராடும் இடங்களும் சரித்திர காலத்துக்கு முற்பட்ட எகிப்திலாவது, மெசபடோமியாவிலாவது அல்லது மேற்கு ஆசியாவிலாவது எந்த இடத்திலும் காண்பது அரிதாக இருக்கிறது...... கலை, மதம் போன்ற துறைகளில் அவர்கள் தங்களுக்கு உரிய தனிச் சிறப்பை உடையவர்களாக விளங்கு கின்றனர். சிந்துவெளி மக்களின் மதத்தில் பிறநாடுகளில் காண்பதைப்போன்ற சில அம்சங்களைக் காண்கிறோம். இவ்வுண்மை சரித்திர காலங்களுக்கு முற்பட்ட மதங்களின் பொதுத் தன்மைகளாகும். ஆனால் மொத்தமாகப் பார்க்கும் போது இவர்களுடைய மதம், தனி இந்து மதத்தைப் பெரும் பாலும் ஒத்தே இருக்கிறது,'' என்று எழுதியுள்ளார்.

மக்கள் தோன்றிய பகுதி

ஆதிகாலத்தில் மனிதகுலத்தின் பிறப்பிடம் குமரிக் கண்டம் என்பது பல ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். லெமூரியக் கண்டம் என்பதும் குமரிகண்டப் பகுதியேயாகும்.

சர் ஜான் லப்பக் (Sir Johan Lubbock) P. 36 ல் கூறுபவை...

'' மக்கள் தோன்றின இடம் குமரிக்கண்டமாகும். மக்கள் தோன்றியபிறகு குமரிக் கண்டத்தில் மும்முறை கடற்கோள்கள் ஏற்பட்டுள்ளன. முதற் கடற்கோளில் குமரிக்கண்டம் சிதைந்து பல புதிய கண்டங்கள் தோன்றின. அவற்றுள் உயிர்தப்பிப் பிழைத்தவர்கள் அந்தந்தக் கண்டங்களின் பழங்குடி மக்களா யினர். அவர்களுக்கும் பிற கண்டங்களில் வாழும் மக்களுக்கும் தொடர்பற்றுப் போயிற்று. அக்காலத்தில் பிரிந்த மக்களைத் தான் ஆப்பிரிக்கப் பழங்குடி மக்கள் அமெரிக்கப் பழங்குடி

மக்கள், ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் என்று கூறுகிறோம். அதன்பிறகு ஏற்பட்ட கடற்கோளில் குமரிகண்டத்தில் 700 காவத நிலப்பரப்பைக் கடல் கொண்டுவிட்டது. இரண்டாவது கடற்கோளாகும். இந்தியாவின் தென்திசையில் வாழ்ந்த மக்கள் இந்தியப் பகுதிக்கு வந்து இந்தியா முழுவதும் பரவிவிட்டனர். இவர்கள் சிந்து நதிக்கரையில் ஒரு சிறந்த நாகரிகத்தை நிறுவினர். இவர்களுடைய சந்ததி ஈரான், ஈராக் பாபிலோன் (மெசபொடேமியா) வரையிலும் பரவிற்று. அங்கிருந்து எகிப்துவரையிலும் சென்று தமது நாகரிகத்தை நிறுவினர். பிறகு கிரீஸ், கிரீட், கிரேக்க நாகரிகங்களை உண்டாக்கினர். இக் கடற்கோளால் குமரிக்கண்டம் சிதைவுற்றது. நீரில் மூழ்க நேர்ந்தது குமரிகண்டத்தில் அழியாமல் எஞ்சி இருக்கும் பகுதிகள் இந்தியா, சுமத்ரா, ஜாவா, மொரீஷஸ், ஈழம், மடகாஸ்கர் என்பனவாகும். அப்போது தென்மதுரை கடலுக்குள் ஆழ்ந்துவிட்டது. அங்கு இருந்த பாண்டிய மன்னன் தனது இராஜதானியைத் தற்போது மதுரை என்று கூறப்படும் இடத்துக்கு மாற்றிக்கொண்டான். மதுரையில் வாழ்ந்த மக்களே இங்கு வந்து கூடிவாழ நேர்ந்ததால் இதற்கும் மதுரை என்னும் பெயரே உண்டாயிற்று. இங்கு அவர்கள் வந்து கூடினமையால் இந்த மதுரைக்குக் கூடல் என்னும் பெயரும் உண்டாயிற்று. குமரிகண்டத்தில்தான் (தென்மதுரையில்) பண்டைய மனித இனம் வாழ்ந்தது. ஆகவே அவர்களுக்குப் பண்டையர் என்று கூறுவர். அது நாளடைவில் முதல் நீண்டு பாண்டியர் என்றும், அம்மக்களை ஆண்ட மன்னனுக்குப் பாண்டியன் என்னும் பெயரும் எய்திற்று.'' —இக்கருத்தை பிளிண்டர்ஸ் (Flinders Peter H. H· of the World, P. 77) என்பவரும் ஏற்றுக்கொண்டு உள்ளார்.

மற்றும் மூன்றாவது முறையான கடற்கோள்:

திருச்செந்தூருக்கு அருகிலிருந்த சில ஊர்கள்மட்டும் நீருக்குள் மூழ்கிவிட்டன. இக் கடற்கோள் அவ்வளவு பெரியதல்ல என்று எழுதியுள்ளனர். இக் கருத்தினை ஆதரிக்கின்ற ஆராய்ச்சியாளர்கள் பலராவர். முக்கியமாக ''இந்து சமுத்திரத்தினூடே இந்தியா, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, சீனா முதலிய நாடுகளைத் தொடுத்துக்கொண்டிருந்த பூகண்டத்தை பற்றிய உண்மையை திரு. குருக்ஸ் (Crooks) திரு. கீன் (Keane) திரு. மாரீஸ் (Morris) போன்ற ஆய்வாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

பார்க்க: தமிழர் சரித்திரம். திரு. ந. சி. கந்தையாப்பிள்ளை,

இலக்கியச் சான்றுகள்

குமரிக்கண்டம் என்பது தற்போது ஆஸ்திரேலியா முதல் தென்னாப்பிரிக்காவரையிலும் இந்தியாவின் தெற்கில் பரவி யிருக்கும் இந்துமகா சமுத்திரமென்னும் நீர்ப்பகுதியாகும். இது ஒரு காலத்தில் நிலப்பகுதியாக இருந்ததாம். இதற்குக் குமரிக் கண்டம் என்பது பெயராகும். இதற்குக் கடற்கோள் ஏற்பட்ட தற்குச் சான்றுகள் தமிழ் இலக்கியங்களிலும் உள்ளன.

கலித்தொகை, முல்லைக்கலி. செய்யுள் 104-ல்.

மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வவ்வலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்பட
புலியொடு வில்நீக்கி புகழ்பொறித்த கிளர்கெண்டை
வல்லினான் வணக்கிய * வடாச்சீர் தென்னர்.*

"பிண்ட உரை : நிறைந்த அலைகளோடு கூடியகடலானது மெதுவாக நகர்ந்து வந்து (ஊர்ந்து—நகர்ந்து) தென்மதுரையைக் கவர்ந்துகொண்டாலும் அதற்காகச் சிறிதும் வருந்தாமல் வில் கொடியினரான சேரரையும், புலிக்கொடியினரான சோழரையும் வென்று கொண்ட சீர்மை வாய்ந்த பாண்டியன்," என்று பொருளாகும்.

சிலப்பதிகாரம் மதுரைக்காண்டம் காடுகாண் காதையில்,

" பஃறுளி ஆற்றுடன் பன்மலை யடுக்கத்து
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசை கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி

என்னும் வரிகளாலும் இந்தியாவின் தென்பகுதி கடற்கோளால் மூழ்கியுள்ளதென்னும் உண்மை புலனாகின்றது.

மக்கள் பெருக்கம்

உலகம் ஐந்து கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பா என்பனவாகும். இவற்றுள் அதிகமான மக்கள் தொகை இருக்கிற கண்டம் ஆசியா கண்டமாகும். மற்றைய நான்கு கண்டங்களிலுள்ள மக்களின் தொகையை ஒன்றுகூட்டினால் எவ்வளவு மக்கள் தொகை வருமோ அந்தத் தொகைக்கு நிகராக

* தென் திசையாண்ட பாண்டிய மன்னர்கள்.

மக்கள் ஆசியாவில் வாழ்கின்றனர். ஆசியாவுக்குள்ளும் குறிப்பாக இந்தியாவிலும், சீனாவிலும்மட்டும் பெருந் திரளான மக்கள் வாழ்கின்றனர். இவ்விரண்டினுள்ளும் இந்தியாவில் நிலப்பரப்பின் கணக்குப்படி பார்த்தால் சீனாவைவிட மக்களின் நெருக்கம் இங்கு அதிகம்.

1. சீனாவின் நிலப்பரப்பு—35,69,045 சதுர மைல்கள் ; மக்கள் தொகை சுமார் 105 கோடி எனலாம்.

2. இந்தியாவின் நிலப்பரப்பு—12,20,099 சதுர மைல்கள் ; மக்கள் தொகை தோராயமாக 75 கோடி இருக்கும் என்கின்றனர்.

இந்திய நிலப்பரப்பில் வாழும் மக்களின் கணக்குப்படி பார்த்தால் சீனாவில் குறைந்தது 200 கோடிக்குமேல் இருக்க வேண்டும். அந்நாட்டு மக்கட் தொகை நூற்றுப்பத்து கோடிக்கு உள்ளாகவே உள்ளனர். ஆகவே இந்தியாவில் மக்கள் நெருக்கம் அதிகமாகும். காரணம், ஆசியா கண்டமானது குமரிக் கண்டத்தின் வடபகுதியின் விளிம்பு, அதிலும் இந்தியா குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியாகும். வரைபடத்திலேயே இந்தியா இந்துமாக் கடலில் தீபம்போல ஊடுருவித் தோன்று கிறது. ஆகவே இதனை 'இந்திய தீபகற்பம்' என்று கூறுகிறோம். மக்கள் தொகையும் இந்தியாவில் அதிகம். இவற்றை எல்லாம் கூர்ந்து கவனித்தால் சர். ஜான் லப்பக் என்பவர் கருத்துவதை நாம் புறக்கணிக்கமுடியாது. ஆகவே இந்தியாவில் மக்கள் வரலாற்றுக்கு எட்டாத காலந்தொட்டு வாழ்ந்துவருகின்றனர். மற்றும் தமிழில் ஒரு முதுமொழியுண்டு. அது, "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த குடிமகன் தமிழன் " என்பதாகும்.

கல்லை ஆயுதங்களாகப் பயன்படுத்திய காலந்தொட்டு மக்கள் இந்தியாவில் வாழ்ந்துவருகின்றனர். இந்தப் பழங்குடி மக்களின் மதந்தான் இந்துமதம். இந்து மதத்துக்கும் முந்திய மதம் இந்தவுலகத்தில் தோன்றவேயில்லை. சில மதங்கள் தனித்தனி மகான்களின் போதனைகளைத் திரட்டி ஒரு புத்தக மாக்கிக் கொண்டுள்ளன. இத்தகைய மதங்களும் பல உண்டு. ஆனால் இந்துமதம் பலருடைய போதனைகளைத் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ளது. இந்துமதம் ஒரு தனிமனிதன் உருவாக்கிய சட்ட புத்தகமல்ல. இது அடவாதிகளுடைய மதமுமல்ல. அறிவாளிகள் ஒழுக்கசீலர்கள் எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும். இன்று உலகத்தில் பல கண்டங்களில் வாழும் மக்கள் தனித்தனி இனங்களைப்போலக் காட்சியளித்தாலும்

ஒருகாலத்தில் மக்கள் இனம் அனைத்தும் ஒரே இனம்தான். இதைத் திருமூலர் திருமந்திரத்தில் மிகவும் தெளிவாக "ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும், நன்றே நினைமின்," என்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே விளக்கியுள்ளார். இன்றைய உயிரியல் ஆய்வாளர்களும் இதனை ஒப்புக்கொள்கின்றனர்.

மனு

மக்களினம் அனைத்திற்கும் ஆதி பிதா யாரோ? அவரை இந்துமதம் மனு என்று கூறுகிறது. மனுவின் மரபில் வந்தவர்கள் அனைவரும் மனிதர்களாவர். மனு + ஜன் — மனுஜன். இச்சொல் மனுஷன், மனிதன், மான் (man) மொழியின் தன்மைக்கு ஏற்றவாறு சிறு மாற்றத்தைப் பெற்றுள்ளது. 'ஜ' என்பது ஓரெழுத்து ஒரு மொழியாகும். இதற்கு (தோன்றிய) என்பது பொருளாகும். ஜன்மம் என்ற சொல்லிலுள்ள ஜ பிறத்தல் என்ற பொருள் தருகிறது. மனுஜன் என்றால் மனுவின் வழியில் பிறந்தவர்கள் என்பது பொருளாகும். மனுஜன் என்பது தமிழில் மனிதன் என மாறியுள்ளது. ஆங்கிலத்தில் மான் என மொட்டையாக நிற்கிறது. உலகில் எந்த நாட்டில் பிறந்தவனாய் இருந்தாலும் அவன் மனுவின் பரம்பரையைச் சேர்ந்தவனே. மக்கள் என்னும் சொல் மனுக்கள் என்னும் சொல்லின் (மக்கள்) இடைக்குறையாகும். மனுவினுடைய பரம்பரையில் பிறந்தவர்கள் என்பதாகும்.

இதுதான் உண்மையான வரலாறு. ஒரு சிலர் மனதை உடையவன் மனிதன் என்னும் பொருள் கூறுகின்றனர். இவ்வாறு கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. மனம் மனிதனுக்கு மட்டுமல்ல. நாய், நரி, எலி, பூனை முதலான உயிரினங்களிடத்திலும் உள்ளது. ஒரு நாய்க்கு நாம் வைத்துள்ள பெயரிட்டுக் கூப்பிட்டால் உடனே நம்மைத்தான் அழைக்கிறார்களென்று உணர்ந்து அருகில் வருகிறது. புதியவர்கள் யாரேனும் வந்தால் அதை உணர்ந்து குரைக்கிறது. பழகியவர்கள் வந்தால் தனது வாலையாட்டி தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது. இதுபோன்ற சான்றுகள் பல உயிரினங்களிடத்தும் மனம் இருப்பதைக் காட்டுகிறது. ஆகவே மனம் உள்ளவன் மனிதன் என்பது பொருந்தாது. மற்றும் எல்லா மொழியினரும் மனதை மனமென்னும் ஒலியில் பயன்படுத்துவது இல்லை. ஒரு சிலர் தம்மை மனுவின் வழிவந்தவர் என்று ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. ஆயினும் தன்னை மனிதன் அல்லன் என்று மறுக்கவும் முடிவதில்லை. அதனால் மனிதன்

என்றால் மனதை உடையவன் என்னும் பொருந்தாப் பொருளைப் புகுத்திக்கொண்டு அற்பத்தனமான ஆறுதலை அடைகின்றனர். காரணம், சில மதத்தினர் ஆதிமனிதருக்கு மனு என்னும் பெயர் சொல்லவில்லை. இடையில் மனுவின் குலமென்று சொல்லிக் கொண்டாலும் முதல்வரின் பெயர் அதுவல்ல. ஆகவே அத்தகையோர்களுக்கு மனிதன் என்றால் மனதை உடையவன் என்னும் புதுப்பொருள் ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

மனுதருமமென்னும் நூலின்பேரில் வெறுப்புடைய சில அறிவாளிகளும் உண்டு. அவர்களுக்கு மனு என்றாலும் வெறுப்பு; மனு தர்மம் என்றாலும் வெறுப்பு. இவர்கள் பெற்ற வனை ஒதுக்கிவிட்டு மற்றவனை அப்பா என அழைக்க ஆசைப்படும் அறிவாளிகளாகும். இந்த அறிவாளிகளுக்கும் மனதை உடையவன் மனிதன் என்று பொருள் கூறுவதுதான் பொருந்தும்.

மனுதருமமென்னும் நூலில் தற்காலத்துக்கு ஒவ்வாத ஒரு சில விஷயங்கள் இருக்கக்கூடும். அதனுள் சில இடைச் செருகலும் இருக்கக்கூடும். அதற்காக மனுவின் பரம்பரை நாம் அல்ல என்று திருத்திக் கூறுவது ஏற்றதல்ல. அருணகிரிநாதர் மனிதன் யார் என்பதை

“ இத்தாரணிக்குள் மனுவித்தாய் முளைத்தழுது
கேவிக் கிடந்து மடிமீதிற் றவழ்ந்து ”

என்று வெளிப்படையாக விளக்கியிருக்கிறார். ஆகவே மனு தோன்றின இடம் குமரிக்கண்டம்; அம்மனுவின் பெயரால் தோன்றியுள்ள தருமசாத்திரம் இந்துமதத்தில் இருக்கிறது. மனுவே மக்கள் சமுதாயத்தின் உண்மையான மூதாதை. நாம் மனுவின் வழிவந்தவராதலால் மனிதர்கள் எனப்படுகிறோம். இதை மறுப்பவர்கள் மனிதப் பரம்பரையாக இருக்முடியாது.

ஒரு சிலர்

இந்துமதம் என ஒன்று கிடையாது என்று கூறுகின்றனர். அவ்வாறாயின் இதுநாள்வரையிலும் இந்நாட்டை இந்தியா என்றும், இதில் தோன்றிய பண்பாட்டை இந்துமதம் என்றும் கூறிவந்தது ஏன்? இந் நாட்டுக்கும் இக் கொள்கைக்கும் இந்தியா என்றும், இந்துமதம் என்றும் பெயர்கள் எப்படி வந்தன? யாரால் வந்தன? என்னும் கேள்வி எழுகின்றது.

சிந்துநதியை பாரசீகர்களும், கிரேக்கர்களும் சிந்து என்பதற்குப் பதிலாக ஹிந்து என்று கூறிவந்தனர். இந் நதியின் பெயர் இதைச் சார்ந்த நிலப்பரப்புக்கும். இப்பகுதியில் வாழும் மக்கள் பின்பற்றும் கொள்கைக்கும் உண்டாயிற்று. நாட்டை இந்தியா என்றும் மதத்தை இந்துமதம் என்றும் கூறலாயினர். கிரேக்கர்களும், பாரசீகர்களும் இந்நாட்டுக்கு இந்தியா என்றும், இந்துமதம் என்றும் பெயர் வைத்தபிறகுதான் நாடும், மதமும் தோன்றவில்லை. இவர்களால் இப்பெயர் வைப்பதற்கு முன்னரும் நாடும் இருந்தது; மதமும் இருந்தது; அப்போது இந் நாட்டின் பெயர் பரதகண்டம். மதத்தின் பெயர் பாரத தருமம்.

பரத கண்டம்

பரதகண்டம் என்னும் பெயருக்குக் காரணம் ஒருகாலத்தில் இந்நிலப்பகுதியை பரதச் சக்ரவர்த்தி என்னும் பேரரசர் ஆண்டு வந்தார். அப்போது இந்நாடு இன்னும் விரிவடைந்திருந்தது. பர்மா, சுமத்ரா, இந்தோனேஷ்யா முதலானவைகளும் இத்துடன் சேர்ந்திருந்தது. ஆகவே இந்நிலப் பகுதிக்கு பரதகண்டம் என்னும் பெயர் எய்திற்று. இப் பரத மன்னர், கலைப் பிரியரும், நீதிமானும் தர்மாத்மாவும் முடிவில் முனிவராகவும் ஆனவர். இன்றும் அபினயங்களோடு ஆடுகின்ற நாட்டியக் கலைக்கு பரதநாட்டியம் என்று கூறுகின்றோம். இந்த பரதச் சக்ரவர்த்தி பாண்டவர்களுக்குப் பத்தாவது தலைமுறைப் பாட்டனென்பர். 1. பாண்டவர்களின் பாட்டன் பீஷ்மர், இவருடைய தந்தை சந்தனு, 2. இவருடைய தந்தை பிரதீபன், 3. இவரின் தந்தை குரு, 4. குருவினுடைய தந்தை அரசமீளி 5. இவருடைய தந்தை நிகும்பன், 6. நிகும்பனுக்குத் தந்தை அஸ்தி, 7. இந்த அஸ்தி என்னும் மன்னன் அரசாண்டு கொண்டிருந்தபோது தமது தலைநகரம் பெருவெள்ளத்தால் மூழ்கிவிட்டதாம். அப்போது அஸ்தி என்னும் அரசன் தக்க தொரு பாதுகாப்பான இடத்தில் தனது பெயரால் ஒரு சிறந்த ராஜதானியை நிறுவினான். அந்தப் புதியநகரம் அஸ்தி என்னும் பெயர் எய்திற்று.

அஸ்தி மன்னன் அரசாண்ட காலத்தில் பெருவெள்ளத்தால் மூழ்கிப்போன நகரந்தான் ஒருக்கால் சிந்துநதி தீரத்தில் காணப் பெறும் பண்டைய நாகரிகமாக இருக்குமோ என யோசிக்க இடமுண்டு. எனினும் அதை நிச்சயிக்க நம்மால் முடியாது. அஸ்தி மன்னனுக்கு முன்னோர்கள் ஆண்டுகொண்டிருந்த பழைய நகரம் எங்கு இருந்தது என்பதின் விபரம் நமக்குச்

சரியாகக் கிடைக்கவில்லை. ஆகவே அந்த விபரீத ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்திக்கொண்டு விஷயத்துக்குப் போகலாம். அஸ்தி மன்னனின் தந்தை சுகேந்திரன், 8. சுகேந்திரனுடைய தந்தை பௌமன், 9. இவன் தந்தை பரதன் 10. ஆகவே பரதச் சக்ரவர்த்தி பாண்டவர்களின் பத்தாவது பாட்டனாகிறார். பாண்டவர்கள் வாழ்ந்த காலம் துவாபர யுகத்தின் இறுதியும் கலியுகத்தின் ஆரம்பமுமாகும். இயேசு நாதரின் காலக் கணக்கு எப்படிப்பிறழாமல் வருகிறதோ அதைப் போலவே கலியுகத் தோற்றத்தின் காலக்கணக்கு முறையாக பிறழாமல் பஞ்சாங்கங்களின்மூலம் பன்நெடுங் காலங்களாகத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. கலியுகம் தோன்றி இன்றைக்கு 5089 ஆண்டுகள் ஆகின்றன. அன்று வாழ்ந்த பாண்டவர்களின் 10-வது தலைமுறைப் பாட்டனின் காலம் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பிருந்திருக்கக் கூடுமென்று தோன்றுகிறது. ஏறக்குறைய ஐயாயிரத்து அறுநூறு ஆண்டு களுக்கு முன்பு பரதகண்டமென்று கூறுகின்ற நிலப்பரப்பை அப் பரதச் சக்ரவர்த்தி ஆண்டிருக்கிறார். ஒரு சோழ அரச னுக்கு மனுநீதிச் சோழன் என்னும் பெயருண்டு. காரணம், தன்னுடைய ஆட்சிக்காலத்தில் நீதிபிறழாமல் அவன் ஆட்சி புரிந்து வந்தான்.

தன்னுடைய மைந்தன் தேரேறி ஆலயத்துக்குச் செல்லும் போது ஒரு பசுவின் கன்று அத் தேர்ச்சக்கரத்தில் சிக்கிக் கொண்டு இறந்துவிட்டது. அந்தக் குற்றத்துக்காகத் தனது மைந்தனென்பதையும் சிந்திக்காமல் மைந்தனுக்கே தண்டனை விதித்த மாமன்னரவர். ஆகவே அம்மன்னருக்கு மனுநீதிச் சக்ரவர்த்தி என்ற பெயர் ஏற்பட்டது. அதைப்போல பரதச் சக்ரவர்த்தி பண்டைய தருமங்களை தன் உயிர்போலப் பாவித்து தன் ஆட்சிக்கு உட்பட்ட மக்களை ஆண்டுவந்த மையால் மனுவின் நீதி சோழ மன்னருக்கு உண்டானதுபோல, தருமத்தின் பெயர் பரதச் சக்ரவர்த்திக்கும் ஏற்பட்டது. அதனால் பாரத தர்மம் எனக்கூறலாயினர். இவ்வாறு கூறுவது அவர்கள் கடைபிடித்த கொள்கையினால் அளிக்கப்பட்ட கௌரவப் பெயர்களாகும். இவர்கள் தோன்றுவதற்குமுன்னமே நீதி சாத்திரமும் இருந்தது, புராதன தருமமும் இருந்தது. சிந்து நதியின் காரணமாக இந்து தருமம் என்னும் சொல் பாரசீகர் களாலும், கிரேக்கர்களாலும் எய்திற்று. பாரத தருமம் என்னும் பெயர் பரதச் சக்ரவர்தியின் நன்னடத்தையால் மக்களால் அளிக்கப்பட்டது.

பரதச் சக்ரவர்த்தி சுமார் 5500 ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்று கருதலாம். அதற்கு முன்னும் இந்துதருமம் இருந்திருந்தால் அதனை மக்கள் எவ்வாறு கூறினர் என்னும் கேள்வி எழுவது இயல்பாகும்.

பரதச் சக்ரவர்த்தி தோன்றுவதற்கு முன்னம் இந்த தருமத்துக்கு வைதீக தருமம் என்னும் பெயர் இருந்தது. வேத+தருமம் என்னும் பதங்கள் வைதீக தருமம் என ஆயிற்று. இப் பெயர் இதற்கு உண்டாவதற்குக் காரணம் ஒருவரின் போதனைகளைமட்டும் திரட்டிக்கொண்டு அதை எங்கள் வேதம் என்று சில மதத்தினர் கூறுவதைப்போல இந்துக்கள் பல பெரியோர்களின் போதனைகளைத் திரட்டி அவற்றுக்கு வேதம் என்று பெயரிட்டனர். அன்றுமுதல் இதற்கு வைதீக தருமம் என்னும் பெயர் எய்திற்று. இந்தக் காலத்தில்தான் எழுத்துக்கள் உருவாகி, நூல் வடிவங்கள் பெறலாயின. இதன் காலம் சுமார் பத்தாயிரம் ஆண்டுகள் இருக்கக்கூடும் எனக் கருதலாம். உதாரணமாக, ஹரப்பா, மொகஞ்சதாரோவில் புதைபொருள்ஆய்வாளர்களால் கண்டுபிடித்த எழுத்துக்களும் ஒரு சான்றாகும். அந்த நாகரிகத்தை ஐயாயிரமாண்டுகளுக்கு முற்பட்டதென்பதனால் அவர்கள் அதற்குமுன் எத்தனை காலங்களாக எழுத்துக்களைப் பயன்படுத்தி வந்தனர் என்பதை நம்மால் நிச்சயிக்கமுடியவில்லை.

என்று ஆன்றோர்கள் எழுத்துக்களை உருவாக்கி அவற்றின் மூலம் தங்கள் கருத்துக்களை செய்யுள் வடிவங்களாகவும், கீதங்களாகவும் அமைத்து நூல்களை இயற்றினார்களோ, அன்றே இந்து தருமம் வேத தருமம் என்னும் பெயர் பெற்றது. இதைப் பற்றிப் பேரறிஞர் திரு. எஸ். டாங்கே அவர்கள் பண்டைய கால இந்தியா என்னும் நூலில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார். பார்க்க : தமிழாக்கம் பக்கம் 52–ல்.

"வேத மந்திரங்களையும் அவற்றுக்கு உரிய திட்டவட்டமான உச்சரிப்புகளையும் செயலாதி முறைகளையும் வாய்மொழி மூலமே இந்துக்கள் பல்லாயிரமாண்டுகள் காப்பாற்றிக்கொண்டு வந்துள்ளனர். இவ்வாறு குறைந்தபட்சம் 4000 ஆண்டுகளாவது நடைபெற்றிருக்கிறது. இறுதியில் அந்த மந்திரங்கள் எழுத்துக்களில் எழுதப்பட்டன," என்று எழுதியுள்ளார். இவ்வாறு நமது அறிவுக்கு எட்டிய வரையிலும் ஆராய்ந்துகொண்டே போனால் குறைந்தது 10,000 ஆண்டுகளையும் கடந்து செல்லும். அதற்கு முன்னும் இந்து தருமம் இருந்தது. இந்து தருமப்

பெரியோர்கள் எழுத்துக்களை உருவாக்கி அவற்றில் எழுதப் பெற்று வேதம் என்று அதற்குப் பெயரிட்டு, அவ்வேதத்தில் கூறுவனவற்றை வைதீக தருமம் என்பதற்கு முன்பு இதே தருமத்தைச் சனாதன தருமம் எனக் கூறிவந்தனர். சனாதன தருமமென்றால் புராதனமான பண்பாடு என்பது பொருளாகும்.

வேதமென்னும் பெயர் வருவதற்கு முன்பு இதற்கு சுருதி என்று பெயர். சுரோத்திரம் என்றால் செவி என்பது பொருள். செவிவழி வாழையடி வாழையாக உபதேசமுறையில் இந்த தருமம் நெடுங்காலங்கள் காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது. ஆதிகாலத்தில் சுரோத்திரத்தின் மூலமாக—நெடுங்காலங்களாக உபதேசக் கிரமத்தில் வந்தமையால் சுருதி என்னும் பெயர் வேதத்துக்கு வரலாயிற்று. இதனைத் தமிழில் செவியறிவுறுத்தல் என்றும், சுருதி என்பதற்கு எழுதாக் கிளவி என்றும் கூறுவர். பழமறை என்பதும் இதுவே. ஆகவே இந்தப் புராதனமான இந்துமதத்தின் வரலாற்றுக் காலத்தை வரையறுத்துக் கூற வல்லவர்கள் உலகத்தில் இல்லை என்பதை மகாகவி பாரதியார் “ கலைவாணர்களும் இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்,” என்று பாடினார்.

காலக் கணக்கு

இந்துக்களிடமுள்ள காலக் கணக்கைப்போலப் பிறமதங்களிடமோ, நாடுகளிடமோ இருப்பதாகத் தோன்றவில்லை. சாதாரணமாக வரலாற்று ஆசிரியர்களும், பிற எழுத்தாளர்களும் காலத்தைக் குறிக்கவேண்டுமானால் கி. பி., கி. மு. என்று இயேசுநாதரின் காலத்தைத்தான் மையமாக வைத்துக்கொண்டு வரலாறுகளை வரைகின்றனர். ஏசுவுக்கு முற்பட்ட மோசேவின் காலத்தையோ, யூதாவின் காலத்தையோ, ஆபிரகாமின் காலத்தையோ பஞ்சாங்கங்களில் முறையாக வரக் காணோம். இயேசுநாதரிலிருந்துதான் காலத்தின் கணக்கு சுத்தமாக வருகிறது ; முறையாகவும் இருக்கிறது. ஆனால் கி பி. என்று கூறும் கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட காலத்தை சுத்தமாக நிச்சயிக்க முடியும்.

கி. மு. என்னும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட ஆண்டுகளின் கணக்குத் தோராயமாகக் கூறுவதே ஒழிய உறுதிப்படுத்த முடியாது. என்னுடைய வயதை எனக்கு முன்னோர்களான பெற்றோர்கள் கச்சிதமாகப் பிழையின்றி எழுதமுடியும். ஆனால் எனக்கு முன்னால் தோன்றிய என் பெற்றோர்களின் வயதைக் கூறும்படி என்னைக் கேட்டால் அவர்களின் முதுமையை

யூகித்துத் தோராயமாக சுமார் இத்தனை ஆண்டுகள் இருக்கலாம் என்று சொல்லலாமேயொழியக் கச்சிதமாகச் சொல்ல முடியாது. ஒரு பெரிய மரத்தை நட்டவுடன் அதை நட்ட தேதியையும், ஒரு பழைய கட்டிடத்தைக் கண்டவுடன் அதைக் கட்டத் தொடங்கிய தேதியையும் எப்படித் துல்லியமாகக் கூற முடியாதோ, அதைப்போலவே கிறிஸ்துவுக்கு முற்பட்ட வரலாறுகள் என்பதனை நினைக்க வேண்டியுள்ளது. ஆகவே இயேசுநாதருக்கு முற்பட்ட காலக் கணக்கை முறையாக எழுதிக்கொண்டுவரும் நாடு, அல்லது மதம் இந்தியாவை விட்டால் உலகத்தில் எதுவுமே இருப்பதாகத் தோன்றவில்லை.

ஆங்கில நாட்டுக் கணக்கின்படி 60 நிமிடங்கள் கொண்டது ஒரு மணி. 24 மணிகள் கொண்டது ஒரு நாள். இருபத்தி நாலு மணிகளை நிமிடங்களாக மாற்றினால் $60 \times 24 = 1440$ நிமிடங்கள் கொண்டது ஒருநாள். என்றால் ஒரு நாளின் காலத்தை 1440 பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து வாரம் மாதம் ஆண்டு வளருகின்றன.

இந்தியநாட்டின் காலக் கணக்குகள் பலவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கணம், இலவம், காஷ்டை, கலை, விநாடி, நாழிகை, ஓரை, முகூர்த்தம், ஜாமம் என்பன ஒரு நாளின் கால அளவைக்கு உட்பட்ட சிறு காலங்களாகும். இவற்றின் அடிப்படையில்தான் சோதிட சாத்திரம் பலா பலன்களைக் கூறுகிறது. குறிப்பாக, இக் காலக் கணக்கை சோதிட வல்லுநர்கள்மூலம் தெரிந்து கொள்வது நலம். நமக்குத் தற்போது அதைப்பற்றி ஆராய்ச்சி தேவையில்லையாயினும் நமது முன்னோர்கள் வகுத்துள்ள சிலவற்றை மேற்போக்காகத் தெரிந்துகொள்வது நலமாகும்.

60 விநாடிகள் கொண்டது ஒரு நாழிகை. 60 நாழிகை கொண்டது ஒரு நாள். இந்தக் கணக்குப்படி பார்த்தால் 60×60; ஒரு நாளை இந்திய நாட்டு முன்னோர்கள் 3600 பாகங்களாகப் பிரித்திருக்கின்றனர். இதன் அடிப்படையில் வாரம், பட்சம், மாதம், என்பது தெரிந்த விஷயம். ஆண்டு 60 கொண்டது சிறு யுகம். 7200×60 சிறுயுகங்கள் சேர்ந்தது ஒரு கலியுகம். இதன் ஆண்டுகள் 432000 ஆகும். இரண்டு கலியுக கால அளவைக் கொண்டது 864000. துவாபரயுகம்; 3 கலியுக கால அளவைக் கொண்டது, 1296000 திரேதாயுகம்; 4 கலியுக கால அளவைக் கொண்டது, 1728000 கிரேதாயுகமாகும். இந்த நான்கு யுகங்களையும் ஒன்றுசேர்த்த ஆண்டுகளின் கணக்கு கலியுகத்துக்கு அமைத்துள்ள ஆண்டுகளின் பக்கத்தில் ஒரு

பூஜ்யத்தை வைத்தால் 4330000 ஆண்டுகள் தொகை வரும். இதனை ஒரு சதுர்யுகம் என்று கூறப்படும். மகாயுகம் என்பதும் இதுவே. இந்த மகாயுகங்கள் 71 கொண்டது ஒரு மனுவந்திரம் என்பதாகும். இதற்கு உண்டான ஆண்டுகளின் தொகை 306720000 ஆகும். இவ்வுலகம் தோன்றி இத்தகைய 6 மனுவந்தரங்கள் கழிந்து 7-வது மனுவந்ரத்தில் கிருத, திரேதா, துவாபர மென்னும் மூன்றும் செல்லாகி நாலாவது யுகமான கலியுகத்தில் 5089 ஆண்டுகள் கழிந்துள்ளன. இன்னும் இந்த கலியுகம் கழிய 4,26,911 ஆண்டுகள் செல்லாகவேண்டும்.

விபரம்

60 விநாடிகள் கொண்டது 1 நாழிகை
60 நாழிகை கொண்டது 1 நாள்
வாரம் மாதம் தெரிந்த விஷயம்
60 நாட்கள் கொண்டது 1 ருது
60 ஆண்டுகள் கொண்டது சிறு யுகம்
7200 சிறுயுகம் கொண்டது 1 கலியுகம்

கலியுகத்துக்கு ஆண்டுகள்	432000
துவாபர யுகத்துக்கு	864000
திரேதாவுக்கு	1296000
கிருதவுக்கு	1728000

இந்த நான்கு யுகங்களின் ஆண்டுகளையும் கூட்டி மகா யுகமென்றும் சதுர்யுகமென்றும் கூறுவர். இந்த மகாயுகத்தின் ஆண்டுகள் 30670000 ஆகும். இன்றைக்கு இவ்வுலகம் தோன்றி 6 மனுவந்திரங்கள் கழிந்து 7-வது மனுவந்திரத்தில் கிருத திரேதா, துவாபர, என்னும் மூன்றும் செல்லாகி நாலாவது யுகமான கலியுகம் தொடங்கி 5089 ஆண்டுகள் ஆயின. இந்தக் கணக்கின்படி இந்த உலகம் தோன்றி இற்றைக்கு 18442 13089 ஆண்டுகள் கழிந்தன என்பது இந்திய நாட்டு தீர்க்கதரிசி களுடைய கணக்காகும். இன்னும் இந்தக் கலியுக முடிவடைய 426911 ஆண்டுகள் இருக்கின்றன.

இதற்குள்ளாக உலகம் முழுகிவிடாது. ஒருசிலர் இன்னும் 13 ஆண்டுகள்தாம் உலகம் இருக்கும்; கி. பி. 2000-ல் உலகம் மூழ்கப்போகிறதென்று சிலர் கூறிக் கொள்கின்றனர். உலகம் எக்காரணத்தைக் கொண்டும் மூழ்காது. மூழ்குவதற்கு ஏற்ற அறிகுறிகள் இம்மியும் தென்படவில்லை. உதாரணமாக சூரிய

சந்திரர்களின் கதி மாறுதலோ, இவற்றின் தோற்ற காலத்தில் ஏற்றத் தாழ்வுகளோ சிறிதேனும் காணப்படுமானால் அவர்களின் கூற்றை நம்பமுடியும். ஆனால் இம்மியளவும் காலம் பிறழாமல் அதனதன் பணி கச்சிதமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. உலகம் தோன்றி சுமார் ஆறாயிரம் ஆண்டுகள் தான் ஆயின என்று கனவு கனட தீர்க்கதரிசிகளுக்கு ஒப்பானவர்களே இன்னும் பதிமூன்று ஆண்டுகளில் பாருலகே மூழ்கி விடும் என்பவர்களும்.

நமது மூதாதையின் பெயர்

இன்றுள்ள மனித குலத்தின் மூதாதையின் பெயர் வைவஸ்வதமனு என்பவராகும். முகலாயர்கள் இந்த நாட்டின் மீதி படையெடுத்தபோது மதவெறி பிடித்த அடவாதிகளான சிலர் இந்துக்களின் ஆலயங்களை இடித்ததோடு சிறந்த நூல் நிலையங்களையும் தீக்கிரையாக்கிவிட்டனர், ஆனாலும் சில முக்கியமானவற்றை மனப்பாடம் செய்துகொண்டனர். சில அரிய நூல்களை அவர்களின் கொடுஞ்செயலுக்கு அகப்படாமல் பாதுகாத்தும் வைத்தனர். என்றாலும் பல நூல்கள் அழிக்கப் பட்டுவிட்டன. அந்த சமயத்தில் மனப்பாடம் செய்தவற்றில் முக்கியமானது சங்கல்பமென்பதும் ஒன்று. இதனை இந்துக்கள் விசேஷ பூசா காலங்களில் மறப்பதில்லை அந்த சங்கல்பத்தில் காலமும், நமது மூதாதையின் பெயரும் நாடும் வருவதை இன்றும் கேட்கலாம்.

"வைவஸ்வதமன்வந்ரே, கலியுகே, பிரதமபாதே, ஜம்புத் வீபே, பாரதவர்ஷே, பரத கண்டே என்று கூறியபின் ஆண்டு, மாதம், பட்சம், நாள், நட்சத்திரம், லக்னம் முதலானவற்றை முறையாகக் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். இந்தப் பழக்கம் இன்று நேற்று வந்ததல்ல. இது பன்னெடுங் காலங்களாகப் பின் பற்றிவரும் பிறழாத முறையாகும். இன்றும் கலியுகாதி வருடத்தைப் பஞ்சாங்கத்தில் பிறழாமல் பதிப்பித்துக்கொண்டு வருவதைக் காண்கிறோம்.

கலியுகாதி	—	5089
விக்ரம சகாப்தம்	—	2044—05
திருவள்ளுவராண்டு	—	2018—09
ஆங்கிலம்	—	1987
ஹிஜரி		1407—08
பசலி		1396—07
கொல்லமாண்டு		1162—03

இவ்வாறு ஆதாரபூர்வமாக வருகின்ற காலக் கணக்குகளைத் தவிர மற்றையவற்றை யூகையினால் கூறுபவைகளேயாகும்.

இதுவரையிலும் இந்துமதத்தைப் பற்றி ஆராய்ந்ததில் நமக்குப் புலனாவது சுவாமி விவேகானந்தர் சிகாகோ நகரத்தில் கூடிய சர்வமத சமரச உலக மகா சபையில் இந்துமதம் உலக மதங்களுக்கெல்லாம் தாய் மதம் என்று கூறியது முற்றிலும் பொருத்தமென்பது தெளிவு. இதுவரையிலும் கூறிய எடுத்துக் காட்டுகளே இந்துமதம் பண்டைய மதமென்பதற்கு போதுமான சான்றுகளாகும்.

புதிய மதங்கள் என்பவை சில பெரியோர்கள், காலத்தையும் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு தத்தம் மனத்துக்கு ஏற்ற சில பழைய கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, தன் கருத்துக்கு பிடித்தமல்லாதவற்றை விலக்கிவிட்டு, தம் மனத்துக்கு நலம் எனத் தோன்றிய சில புதிய கருத்துக்களையும் சேர்த்து எழுதிக் கொண்ட நூல்களே பிற்காலத்தில் தோன்றிய மதங்கள். எந்த மதமும் நூதனமாகப் புதிய கருத்துக்களையே உருவாக்கி விடவில்லை.

உலகத்தில் நன்கு கற்ற பெரியோர்கள் மறைந்துகொண்டும், கற்கவேண்டிய குழந்தைகள் பிறந்துக்கொண்டும் இருக்கின்றன. கல்லாதவர்கள் நாட்டில் பெருகும்போது பொல்லாத தீயசக்திகள் அதிகமாகின்றன. அத் தீயவற்றை எதிர்த்துப் போராடியவர்கள் மதத் தலைவர்களாவர்.

கடவுள் மக்களுக்கு ஒரே மதத்தலைவரை வழிகாட்ட அனுப்பியுள்ளார் என்று கூறுகின்றனர். அவர் யார் என்று கேள்வி எழும்போது ஒவ்வொரு மனிதாபிமானியும் எங்கள் மதத் தலைவர், எங்கள் மதத் தலைவர் என்று தத்தம் மதத் தலைவரைப் பற்றி உயர்த்திப் பேசிக் கொள்கின்றனர். இறைவன் இயேசுநாதரை மட்டும் விரும்பியிருந்தால் முகமது நபிகளார் தோன்றியிருக்கமாட்டார். முகம்மது நபிகளாரை மட்டும் விரும்பியிருந்தால் மற்றைய மதத் தலைவர்கள் வந்தே இருக்கமுடியாது. பல மதங்கள் உலகத்தில் தோன்றியே இருக்காது. ஆண்டவன் ஒன்றிலேயே நிறுத்திவிட்டிருப்பார். இந்த வண்ணம் இந்து மதம் பெரியோர்களிடத்தில் கிடையாது. ஆண்டவன் அவ்வப்போது பலரை அனுப்பிக்கொண்டிருப்பதினால்தான் பல மதங்கள் உருவாகியுள்ளன என்பதையும் கருதிப்பார்ப்பதுதான் அறிவுடைமையாகும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

—திருக்குறள்

என்று திருவள்ளுவனார் மனிதகுலத்துக்கு ஒரு பொது நெறியை போதித்துள்ளார் அதன்படி உலகில் உள்ள மதங்கள் எதுவாய் இருப்பினும் அதில் கூறப்படும் உண்மைகளை உணர்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டும். இதுதான் மனிதப் பண்பு. இப்பண்புக்கு ஏற்ற பாங்கில் அறிவுரைகளை வழங்கும் பாங்குடைய மதம் எதுவாய் இருப்பினும் அது தாய்போன்ற மதமாகும்.

இந்தப் பொது நோக்கமில்லாமல் "எங்களுடைய மதத்தில் கூறுகின்றபடி நடக்கமுடியாதவனாய் இருந்தாலும், பிறந்த நாள்முதல் துஷ்டனாகவும் பாபியாகவும் இருந்தாலும் எங்கள் மதத்தில் கூறப்படும் மதங்களை வாயினால் உச்சரித்தாலும் போதும். அவனுக்கு மோட்சமுண்டு. தன் ஆயுளை அறவழியிலேயே கழித்த உத்தமனாய் இருந்தாலும் எங்கள் வேதத்தையும், இதை அருளிச் செய்த மதத் தலைவனையும் நம்பாதவன் நரகத்துக்கேசெல்வான்" என்று கூறும் வேதமொன்று இருக்குமாயின் அது வேதமல்ல. பிற மதங்களின் பேரில் அம்மதம் வைத்துள்ள குரோதம்.

"எங்கள் மதம் ஒன்றுமட்டும்தான் ஆண்டவனால் அனுப்பி வைத்தத் தூதரின்மூலம் கூறப்பெற்ற உண்மையான மதம். மற்றைய மதங்களெல்லாம் அற்ப புத்தியை உடைய மனிதர்களால் உருவானவை. அவற்றை நம்பக்கூடாது. அவர்கள் கூறுவதைக் காதால் கேட்பதும் பாவமாகும். அவர்கள் வணங்குவது கடவுளை அல்ல. சாத்தானை வணங்குகின்றனர். சாத்தானை வணங்கும் மதத்தினர் நரகமடைவார்கள். ஆகவே அந்தப் பேய்மதங்களை விட்டொழித்து எங்கள் மதத்தில் வந்து சேருங்கள் ; உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். உங்களுக்கு மோட்சமுண்டு, என்று கூறுகின்ற மதத்தாலும் அதற்கேற்ற, போதகர்களாளலும் மக்களுக்கு நன்மையைவிட தீங்குகள் அதிகமாக விளைகின்றன. மதப் போராட்டங்கள் விளைவதற்கு இவைகளே மூலகாரணமாகும். இந்தப் போக்குள்ள மதங்களாலும், போதகர்களாலும் உலகில் பண்பு வளரவில்லை. பகைகள் வளர்ந்துள்ளன. இத்தகைய மதத்தினர் மனித குலத்துக்கு இதம் செய்யவில்லை. இக்குலத்தை அதம் செய்து இருக்கின்றனர். நாட்டுக்கு நாடு பேராசையினால் பகையை

வளர்த்து போராட்டங்களால் நாசத்தை உண்டாக்குவதைப் போல மதத்துக்கு மதம் பகையை மூட்டி மனித குலத்தின் அறிவையும் அதம் செய்கின்றனர். இவை யதேச்சிகார மதங்களாகும். மற்ற மதங்களை சிறிதேனும் மதித்து அவற்றுக்கு ஏற்ற இணக்கத்தைக் காட்டாத மதங்களை மதங்களென்று கருத முடியாது.

பிற மதங்களைத் தூற்றுவதற்காகப் பெரியோர்கள் எந்த மதத்தையும் தோற்றுவிக்கவில்லை. மக்களைத் தேற்றுவதற்காக உண்டாக்கினர். இதைச் சில மத போதகர்கள் தவறான நெறியில் திசைதிருப்பிவிட்டனர். இவர்களால் விளைந்த கொடுமைகள் உலகத்தில் கொஞ்ச நஞ்சமல்ல. மக்களை உதிர வெள்ளத்தில் புரட்டிவிட்டனர். இவைகளை ஒருவகையில் பலாத்கார மதங்கள் என்றும் கூறலாம்.

மதம் தாய்போன்றதென்றால் அதனிடத்தில் கருணை, சகிப்புத்தன்மை, பொதுநோக்கு, பெருந்தன்மை, நேர்மை, அறிவாண்மை, இருக்கும். தஞ்சம் புகுந்தாரைத் தாங்கும் தயவுடைமை, சுதந்திர சிந்தனைகளுக்கும் உரிமை உடைமை, முரட்டு சுவபாவமின்மை, அடமின்மை, அமைதியை நாடிச் செல்லும் அறவழிகளை போதிக்கவேண்டும். இத்தகைய மதம் எதுவாய் இருப்பினும் அதைத் தாய் போன்ற மதமென்று கூறத் தடையில்லை.

இந்த உலகில் தற்போது ஏறத்தாழ 500 கோடி மக்கள் வாழ்வதாகக் கருதுகின்றனர். இம் மக்கள் நூற்றுக்கணக்கான நாடுகளில் ஆயிரக்கணக்கான மொழிகளைப் பேசக்கூடியவர்களாக இருக்கின்றனர். இவர்கள் நாகரிகமுள்ள நகரங்களிலும், மலைப் பிரதேசங்களிலும் வாழ்கின்றனர். இவர்களில் கல்வி அறிவுள்ளவர்களும் கல்வியறிவற்றவர்களும், எழுத்து வாசனையே இல்லாதவர்களும் உண்டு. இந்த மனித சமூகம் அனைத்துக்கும் ஒரு குறிப்பிட்ட சமீப காலத்தில் இறைவன் ஒருவரை மட்டும் தோற்றுவித்தார் என்பதும், அவர்மட்டும் தான் மனித குலத்துக்கெல்லாம் ஒப்பற்ற வழிகாட்டி என்று பிதற்றுவதும் அறியாமையின் உச்சகட்டமாகும்.

ஒரு நாட்டில் வாழும் மக்களுக்கு எழுத்தறிவை போதிக்க எண்ணற்ற ஆசிரியர்கள் தேவைப்படுகிறது. ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை வைத்திருந்தும் கோடிக் கணக்கான கல்லாதப் பிள்ளைகளைக் கண்கூடாகக் காண்கிறோம். ஒரு மொழியைப் பேசும் சமூகத்தின் நிலையே இதுவானால், பல

நாடுகளில் பலமொழிகளைப் பேசும் மனித சமூகத்தின் நிலையை விளக்கவா வேண்டும்? இவர்கள் அனைவருக்கும் இறைவன் ஒரே ஒரு தலைவனைமட்டுமா அனுப்பி வைத்திருப்பார்? 1500 ஆண்டுகளுக்கோ, அல்லது 2000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த உலகத்தில் பிறந்து இறந்த மக்கள் அனைவரும் நரகத்துக்கா சென்றிருப்பார்கள்? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் இறைவனால் கட்டப்பட்ட மோட்ச சாம்ராஜ்யம் என்பது காலியாகவா இருந்தது? இவர்கள் உலகத்தில் தோன்றின பிறகுதான் இறைவன் மோட்ச சாம்ராஜ்யத்தின் கபாடத்தைத் திறந்தாரா? என்னும் சங்கைகள் உண்மையை உணர முயற்சிப்பவர்களுக்கு எழவே செய்யும். மதவெறி ஏறியவர்களுக்கு மதநெறியர்கள் கற்கப் பிறந்த சிறார்களுடைய உள்ளங்களையும், கல்வியறிவற்ற அப்பாவி மக்களின் உள்ளங்களையும் நஞ்சாக்கி விடுகின்றனர். உண்மையை சிந்திக்கப் பிடிவாதக்கார போதகர்கள் இடந்தருவதில்லை. தம்முடைய தவறான கொள்கை எங்கு தரைமட்டமாகிவிடுமோ என்னும் அச்சம். இவர்கள் கூறும் அறிவுரைகளின் இலட்சணம் "இன்னதைச் செய்! இப்படிச் செய்! ஏன் என்று கேட்காதே. அந்த உரிமை உனக்குக் கிடையாது."

இது இந்த மதத்தை உருவாக்கிய தலைவருடைய கட்டளை. அக்கட்டளை, அவருக்கு ஆண்டவன் நேரடியாகத் தெரிவித்தது. அல்லது தூதர்களின்மூலம் தெரிவித்தது என்று நிபந்தனைகள் எந்த மதத்தில் அதிகமாகக் காணப்படுகிறதோ அந்த மதத்தைத் தோற்றுவித்தத் தலைவரின் உள்ளத்திலும் சிறிய பலவீனம் இருக்கக்கூடும். இவர்கள்தான் வண்டியில் பூட்டி இருக்கின்ற பக்கப்பார்வை தோன்றாத வண்ணம் கண்களை தோல் பட்டியால் மூடி குதிரையைத் தன் இஷ்டப்படி ஓட்டுவதைப்போல சில மதவாதிகள் மற்றைய மதங்களின் பால் மனம் செல்லவொட்டாமல் தம் மதத்தில் சிக்கிக் கொண்டவர்களுக்கு பிறமத நூல்களைப் படிப்பதும், அம் மதத்தில் அந்நூல்களைத் தொடுவதும் பாவம், நரகம் என்னும் பட்டிகளைக் கட்டி நடத்துகின்றனர். இப்படிப்பட்ட கடுமையான நிபந்தனைகளை விதித்துக்கொண்டுள்ள மதங்கள் இருக்குமானால் அவற்றை தாய்போன்ற கருணையுள்ள மதமாகக் கருத முடியாது.

பரந்த நோக்கமுள்ள மதத்துக்கு அச்சம் இருக்கக் காரணமில்லை. உதாரணமாக புத்தபிரானும், மகாவீரரும், குரு நானக்கும் இந்திய நாட்டில் தோன்றிய இந்துக்கள். இந்து

மதத்தில் அவர்களுக்குச் சில குறைபாடுகள் தோன்றின. அவற்றை அவர்கள் ஒளிவுமறைவின்றி நாடு நகரமெல்லாம் பறைசாற்றி வந்தனர். இந்து மதத்து அபிமானிகள் அவர்களைக் கொல்லக் கொலைக்கருவிகளைத் தூக்கவுமில்லை. இவர்களும் ஒளிந்து நெளிந்து ஊரைவிட்டு வெளியேறவுமில்லை. மிரட்டல்களுக்கும் உருட்டல்களுக்கும் இவர்கள் ஆளாகவில்லை. அச்சமற்றுத் தமது கருத்துக்களை மக்கள்முன் வைத்தனர். அவற்றை ஏற்றுக்கொண்டவர்களும் உண்டு. ஏற்காதவர்களும் உண்டு. ஏற்றுக்கொண்டவர்களைக்கூட இந்துக்கள் தடிகளாலும் தாம்புகளாலும் தண்டிக்க முயலவில்லை. வெற்றி-தோல்விகளை இந்துக்கள் தர்க்கத்தின்மூலம் தீர்மானிக்க முயல்வார்களே ஒழிய அடி தடிகளால் வெற்றியைக்காண முயன்ற வரலாறு கிடையாது. இதுதான் இந்துக்களிடத்தில் நீண்டகாலமாகக் காணப்படும் பண்பாடு; அதன்னியில், "நான்பிடித்த முயலுக்கு மூன்றேகால்," என்னும் வரட்டு வாதத்தை யார்மீதும் திணித்ததுமில்லை; திணிக்கப்போவதுமில்லை.

இந்து மதத்தில் தோன்றின பெரியோர்களின் அருளுரைகளில் காணப்படும் பெருந்தன்மையும், சமநோக்கும் பிற மத போதகர்களின் திருவாயிலிருந்து வெளிப்படுமானால் மக்கள் சமூகம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டை அடைவது நெடுந்தூரத்திலில்லை. அதற்குச் சான்றாக சில பெரியோர்களுடைய அருளுரைகளை அடியிற் காணுங்கள்.

1. இருக் வேதம். 9–ல் " ஏகம் ஸத்;
   விப்ரா பஹுதா வதந்தி "

" மெய்ப் பொருள் ஒன்று; அதற்குச் சான்றோர்கள் பல பெயர்களை இட்டுள்ளனர்."

2. சிவஞானசித்தி யார்

" யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்."

3. நம்மாழ்வார் திருவாய் மொழி (பிரபந்தம்)

" அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவரவர் இறையர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடையநின் றாரே."

4. தேவாரம். திருநாவுக்கரசர் திருவாக்கு

"விரிவிலா அறிவினோர்கள்
வேறொரு சமயம் செய்து
எரிவினால் சொன்னா ரேனும்
எம்பிராற் கேற்ற தாகும்."

5. தாயுமான சுவாமிகள் பாடல்,

"வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கில்
விளங்குபரம் பொருளேநின் விளையாட்டால்
மாறுபடு கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா !"

6. பகவத்கீதை அத்தியாயம் 4. சுலோகம் 21. கண்ண பிரான் கருணை மொழி...

"யார்யார் என்னை எப்படி வழிபடுகின்றனரோ
அவர்களுக்கு நான் அப்படியே அருள் புரிகிறேன்".

7. கம்பராமாயணம் ; ஆற்றுப்படலம்

"கல்லிடை பிறந்து போந்து
கடலிடை கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும்
இயம்பரும் பொருளீ தென்ன
தொல்லையில் ஒன்றே யாகி
துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெரும் சமயம் சொல்லும்
பொருளும்போல் பரந்த தன்றே."

8. திருவருட்பா ஆறாம் திருமுறை

"சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்கு
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்
பிற்சமயத் தோர்பெயரும் அவர் பெயரே கண்டாய்
பித்தரென்றே பெயர் படைத்தார்க்கு அப்பெயர்
[ஒவ்வாதோ ?

9. சுவாமீவிபுலானந்தர் ஞானதீபம்கூறுவது ;

எண்ணுமிரு நிலத்தெழுந்த பல நதியும்
இறுதியில்வந் தெளிநீர் வேலை
நண்ணுகின்ற இயல்பதுபோல் பலவேறு
தகைமையதாய் ஞானம் நாடும்

மண்ணகத்தோர் செல்லும் நெறி
செம்மையதாய்க் கோடணையாய் மருவுமேனும்
புண்ணியனே நினையடையும் மார்க்கமவை
அனைத்துமெனப் புகல்வன் யானே.

10. மகாகவிசுப்ரமண்ய பாரதியார் சொல்லுவார் :

பூமியிலே கண்டமைந்த மதங்கள் கோடி
புத்தமதம் சமணமதம் பாரசீக மார்க்கம்
சாமியென இயேசுமதம் போற்றும் மார்க்கம்
சனாதனமாம் இந்துமதம் இஸ்லாம் யூதம்
நாமமுயர் சீனத்துத் தாவுமார்க்கம்
நல்லகண் பூஷ்யன்மதம் முதலாய்ப் பார்மேல்
யாமறிந்த மதங்கள்பல உளவாமன்றே
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங்கொன்றே.

11. காந்தியடிகளார் அருளுவார் :

" ஈஸ்வர அல்லா தேரே நாம்
சப்கோ சந்மதி தேபகவான் ",

இவ்வாறு கூறியுள்ள அனைவரும் இந்து மதப் பெரியோர்கள். இவர்களின் திருவாக்கியங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் அறிவாளிகள் " இந்துமதம் உலக மதங்கள் அனைத்துக்கும் தாயாகிய மதம் மட்டும் அல்ல தாய் போன்ற மதமும் ஆகுமென்பதை தடையின்றி கூறமுடியும். ஆகவே இந்துமதம் எந்த மதத்தையும் இழிவாகக் கருதி அதனை அழிக்க ஆத்திரம் கொண்டதில்லை. இந்து மதத்தில் இல்லாத ஒரு புதிய விஷயத்தை எந்த மதமும் கண்டுபிடித்து விடவில்லை. இந்த உண்மையை சர்வ மத சமரச உலக மகாசபையில் தலைமை தாங்கிய பெரியோர்களே ஏற்றுக்கொண்டனர் என்பதை முன்னமே நினைவூட்டியுள்ளேன். இந்து மதத்தில் உருவ வழிபாடு, அருவ வழிபாடு, உருவருவ வழிபாடு என மூன்று வகையான வழிபாடுகளும் அவற்றுக்கு ஏற்ற வழிமுறைகளும் கூறப் பெற்றுள்ளன. இவற்றைச் சிறிது விரிவாக தாயின் மதம் என்னும் தலைப்பில் விளக்குகிறேன்.

கடவுள் ஒரு சாதிக்கோ ஒரு மதத்துக்கோ ஓர் இனத்துக்கோ மட்டும் சொந்தமானவரல்லர். அப்பரம்பொருள் உலக உயிர்கள் அனைத்துக்கும் பொதுவாகும். உலகில் தோன்றின மகான்களும் மக்கள் சமூகத்துக்கும் பொதுவானவர்களே. உள்ளத் தூய்மையுள்ள பெரியோர்கள் தத்தமக்குத் தோன்றின

நற்கருத்துக்களை மக்கள் சமூகத்தின்முன் வைத்துள்ளனர், அவற்றுள் யாருக்கு எது தேவையோ, எது சாத்தியமோ அதை அவர்கள் பின்பற்றலாம்! ஒரு மளிகைக் கடைக்குச் செல்லுவதாக வைத்துக் கொள்வோம். அதில் நமக்கு வேண்டிய பொருள்களை தாம் வாங்கிக் கொள்ளலாம், ஆனால் பிறர் வாங்கும் பொருள்களையும் அவற்றை வாங்கக்கூடியவர்களையும் இழிவாகப் பேசுவதும், கருதுவதும் பேதமையிலும் பேதமையாகும். தான் வாங்கியிருக்கும் பொருளின் மேன்மையைப் பற்றியும் அதனால் நீ அடைந்துள்ள நலன்களைப்பற்றியும் விரிவாக விளக்குவதை யாரும் குறைகூற முடியாது. அந்த உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால் மற்றவர்கள் வாங்கியிருக்கும் பொருள்களையும், வாங்கியவர்களையும் பழிக்கவோ பகைக்கவோ யாருக்கும் உரிமையில்லை.

மதங்களுக்குள் சிற்சில மாற்றங்கள் இருப்பது உண்மை. ஒன்றாய் இருந்த ஆதிமதம் இன்று பலவாய்க் காணப்படுவதற்கு சிறு சிறு மாற்றங்களே காரணமாகும். அவை, பெரும்பாலும் மதத்தை உருவாக்கியவர்களின் நுண்ணறிவு, சூழ்நிலை, வாழ்ந்த காலம், அப்பிரதேச மக்களின் நீண்ட கால பழக்கவழக்கங்கள் என்பவற்றைப் பொருத்ததாகும். சில மதத்தினர் இந்தச் சிறு மாற்றங்களைப் பெரிதுபடுத்தி அதன் மூலம் போராட்டங்களை உருவாக்குகின்றனர். இந்த மத வெறியர்களால் ஏற்பட்ட கொடுமையே இந்தியா துண்டாடப்பட்டு, பாக்கிஸ்தான் என்னும் பெயரை ஏற்படுத்திவிட்டது. மதத்தின் பெயரால் பிரிந்தநாள் முதல் இதுவரையிலும் அதன் பகையுணர்ச்சி தீர்ந்தபாடில்லை.

எந்த மதம் பிற மதத்தை அழிக்க முயல்கிறதோ அது தனக்குத்தானே அழிவைத் தேடிக்கொள்கிறது. சிறந்த அன்பு நெறியை வளர்க்கத் தோன்றிய மதங்கள் அதற்குப் புறம்பாக அபிமான வெறியைத் தூண்டி பல கொடுமைகளைப் புரிந்துள்ளன. வெறியால் வளர்க்கப்படும் மதம் தற்போது வளர்வதைப்போலக் காட்சி அளிக்கக்கூடும். ஆனால் ஒரு நாள் எதிர்ப்பு என்னும் எரியால் பொசுங்கிப்போகும்; மனிதனை மனிதன் அழிக்க முயல்வது தீங்கு. மதத்தை மதம் அழிக்க முயல்வது பெருந்தீங்காகும். இந்த உண்மையை ஒவ்வொரு மத போதகர்களும் நன்கு உணருகிற வரையிலும் மனித சமூகத்துக்கு நற்கதி கிடையாது. மதத்தோடு மதம் இணங்கி வாழ நினைப்பதை மறந்து பிணங்கி வாழ நினைக்கின்றனர். இந்த பிணக்குகள் நாடுகளையும் காடுகளாக்கக்கூடும்.

இந்து மதத்தில் தோன்றியுள்ள பெரியோர்கள் பிற மதங்களின் விஷயத்தில் விளக்கியுள்ள சமநோக்கிற்கு ஏற்ப மற்றைய மத போதகர்களின் உள்ளத்திலும் அவை உருவாகின்ற வரையில் மனித சமூகத்தில் இரத்தக்கறை மறையாது. சுத்தமாக வாழ்வதற்குக் கட்டப்பட்ட மனையைத் தூய்மையாக வைத்துக் கொள்வதை விட்டு, அதில் குப்பையும் கூளமும் கொட்டுவதைப் போல மதத்துக்குள்ளே கொடுமைகளைக் குவிக்கின்றனர். இந்தக் கொடுமைகளைப் பார்த்துக்கொண்டு நீண்ட நாளைக்கு இறைவனும் வாளா இருக்கப் போவதில்லை. இந்து மதம் இத்தகைய கொடுமைகளை எந்த மதத்தின் பேரிலும் எப்போதும் திணித்ததில்லை. பிறரால் திணிக்கப்பட்டு அதைத் தாங்க முடியாமல் தாய் நாட்டையும் விட்டுவிட்டு தஞ்சம் புகுந்த அகதிகளையும் ஆதரித்திருக்கின்ற வரலாற்றைப் படைத்தது இந்து மதம்.

ரோமானியர்கள் யூதமதத்தினர்களை நாட்டைவிட்டு துரத்தியபோதும், முகலாயர்கள் பாரசீக மதத்தினரைத் துரத்திய போதும் மதம் மாற மனமில்லாத மக்கள் தமது தாயகத்தை விட்டுவிட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர், அவர்களை இந்து மதத்தினர் அலரடிக்கவில்லை ஆதரித்தனர். அவர்களை வாட்டி வதைக்கவில்லை. அன்றைக்கும் அம்மக்களுக்கும் வாழ் வளித்துள்ளனர். இதைத்தான் விவேகானந்த அடிகளார் சர்வ மத சமரச மகா சபையில் விளக்கினார்.

இந்து]முஸ்லிம் பிரச்சினை என்னும் நூலில் அண்ணல் காந்தியடிகள் இந்து மதத்தைப்பற்றி கூறியுள்ள கருத்தாவது. தமிழாக்கம் பக்கம் 115–ல்,

" ஓய்வு ஒழிச்சலின்றி உண்மையைத் தேடும் முயற்சியே இந்து மதம். நாம் களைப்படைந்துவிட்டதின் காரணமாக இன்று அது உயிர் இழக்கும் தருவாயில் இருக்கிறது செயலற்று வளர்ச்சிக்கு இணங்காது நிற்கிறது. இதன் களைப்புத் தெளிந்த மாத்திரத்தில் இதற்கு முன் என்றும் கண்டிராத ஒளியுடன் இந்து மதம் தோற்றமளிக்கப் போகிறது. இந்து மதந்தான் எல்லா மதங்களிலும் அதிக தாராளமான சகிப்புத்தன்மை உடையது. இதன் சித்தாந்தம் சகலத்தையும் தன்னுள் கொண்டுள்ளது. தீண்டாமை இந்து மதத்தின் இடையில் தோன்றிய களங்கம். தீண்டாமை இந்து மதத்தின் ஒரு பகுதியாக இருந்திருந்தால், நான் இந்து என்று சொல்லிக்கொள்ள நிச்சயமாக மறுத்திருப்பேன். " என்று எழுதியுள்ளார்.

பிற மத போதகர்களிடத்தும் சம நோக்கும் சகிப்புத் தன்மையும் இருப்பது உண்மையானால் அவர்களுடைய திருவாய்களிலும் இந்து மதப் பெரியோர்கள் கூறியுள்ளது போன்ற பொது நோக்கான நன்மொழிகள் புறப்பட்டிருக்கும். குருநானக் அவர்கள் “ இராமனும் அவரே, ரஹீமும் அவரே ” என்று கூறியுள்ளார். குருநானக்கும் ஒரு தூய்மையான இந்து வாகும். அவர் காலத்திலும் முகலாயர்களின் மதப் பூசல்கள் குழப்பத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தன. காந்தியடிகளும் “ ஈஸ்வர அல்லா தேரே நாம் ” என்றார், இந்த இரு மகான் களுடைய வாக்கும் முகலாயர்களுக்கும் நல்லறிவு தோன்ற வேண்டும் என்ற கருத்தைத்தான் குறிப்பாக நினைவூட்டு கின்றன. இந்த இரு பெரியோர்களும் இஸ்லாமியர் வணங்கும் தெய்வப் பெய்ரையே பயன்படுத்தியுள்ளதை வாசகர்களும் சிந்திக்க வேண்டும். இந்து மதம் மற்றைய மதங்களையும் பகைமையின்றி அரவணைத்துக்கொள்ள வல்லது. காந்தி யடிகள் கூறியதைப்போல இது சகல சித்தாந்தத்தையும் தன்னுள் கொண்டிருப்பதனால் இதைத் தாய்போன்ற தன்மை யுடைய மதமென்பதும் மிக்கப் பொருத்தமாகும்.

அணிந்துகொள்ளும் தூய்மையான ஆடைகளில் அழுக்குப் படிவதைப் போலவும், நற்பலனைக் கோரி விதைத்த பயிர்களின் இடையில் வேண்டப்படாத களைகள் முளைப்பதைப்போலவும் நன்மையைச் செய்யத் தோன்றிய மதங்களில் தீமைகளும் விளைந்துள்ளன.

அன்பு, அடக்கம், ஒழுக்கம், வாய்மை, தூய்மை, தியாகம் என்னும் நற்குணங்கள் நிறைந்த நல்லோர்கள் மதத்தை உருவாக்கியவர்கள். அவர்களுடைய மறைவுக்குப் பின் அப் பொறுப்பேற்று நடத்தக்கூடியவர்கள் மதத்தை உருவாக்கிய பெரியோர்களுக்கு இருந்த சகல குணங்களும் பொருந்தி யிருப்பது அரிதாகும். சிலர் தீவிரவாதிகளாகவும். சிலர் திறமை யற்றவர்களாகவும், சிலர் ஆடம்பரக்காரர்களாகவும், சிலர் அறிவாற்றல் குறைந்தவர்களாகவும், சிலர் சுயநலமிகளாகவும், சிலர் ஒழுக்க ஈனர்களாகவும் உள்ளவர்கள் காலாந்தரத்தில் பக்குவமாக ஊடுருவி விடுகின்றனர். அதன் பயனால் உண்ட நல்ல உணவு மலமாக மாறி துர்நாற்றம் வீசுவதுபோல, கொண்ட நல்ல கொள்கை கொடூரமான கொலைக் கருவிகளையும் பயன் படுத்திவிடுகின்றன.

மக்களின் நன்மைக்காகவே மதமும் அரசியலும் உண் டானது. இதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. மதம் நன்மை தீமைகளையும், இன்ப துன்பங்களையும் அறநெறி

களையும் அறிவிக்கத் தோன்றியது. அரசியல் மதம் விளக்கியதின் அடிப்படையில் அநீதியை அகற்றி, நீதியை நிலை நாட்டி ஒழுக்கத்தையும் அறநெறிகளையும் காப்பாற்ற அமைக்கப் பெற்றது, இன்னும் ஒருவகையில் சொன்னால் மதம் பயிர். அரசியல் அப்பயிரைக் காப்பாற்றும் வேலியாகும். மற்றொரு வகையாகக் கூறப்புகின் மதம் உயிர். அரசியல் உடம்பு என்றும் கூறலாம். வேலி இல்லாத பயிருக்கு ஆபத்து அதிகம். பயிரில்லாத வேலி பயனற்றது. உடல் ஊனமுற்றால் உயிருக்குச் சங்கடம். உயிர் இல்லையானால் உடல் பிணந்தான். அரசியலும் மதமும் உயிரும் உடலும்போன்றதாகும். அரசியலையும், மதத்தையும் நமது முன்னோர்கள் இகபர சுகங்களுக்கு ஏற்ற வகையில் அமைத்துள்ளனர். ஒரு சிலர் அரசியல் வேறு மதம் வேறு என்று கருதுகின்றனர். உடம்பு வேறு உயிர் வேறு என்ற போதிலும் ஒன்றுக்கொன்று தொடர்புண்டு; அதைப்போலவே அரசியல் வேறு மதம் வேறு என்று கருதினாலும் ஒன்றுக்கொன்று தொடர்புண்டு. தருமத்தை விளக்குவது மதம். அதைக் காப்பாற்றுவது அரசியல்.

அரசியலில் பதவிச் செருக்கு, நாடு பிடிக்கும் பேராசை, ஆடம்பரப் பேக்கு, நீதியை மதிக்காத அலட்சிய புத்தி, திறமையின்மை, யதேச்சாதிகாரம் என்பவற்றால் கோரமான கொடுமைகள் நிகழ்ந்துள்ளன. இவற்றால் பிண மலைகள் குவிந்து உதிரநதிகள் ஓடின. அதேபோல மதங்களிலும்கூடப் பெருந் தீங்குகள் நிகழ்ந்துள்ளன. இவற்றுக்கு மூலகாரணம் தாம் பின்பற்றும் கொள்கைளில் கூறப்படும் அறிவுரைகளுக்குப் புறம்பாக நடத்தல். அறியாமை, தங்களுடைய மதமே மிக உயர்ந்ததென்றும் தாங்கள் மட்டும் மோட்ச வீடுகளுக்குப் போகப் போவதாகவும் மற்ற மதத்தினர்கள் நரகம் போகப் போகின்றனர் என்றும் பிற மதத்தினரை இழிவாகக் கூறிப் பிரசாரம் செய்தல், அவற்றை அழிக்க முயலல். பிற மதத்தினர் கொண்டாடும் விசேஷ விழாக் காலங்களில் அவற்றுக்கு இடையூறான செயல்களில் ஈடுபடல்போன்ற தீச்செயல்களால் பெருந்தீங்குகள் நிகழ்ந்துள்ளன.

பாரதப் பிரதமராய் இருந்த நேருஜி அவர்கள் உலக சரித்திரம் என்னும் நூலில் கீழ் உள்ளவாறு எழுதியுள்ளார். சிலுவைப் போர் என்னும் தலைப்பில் அவர் எழுதியுள்ளவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கே குறித்துள்ளேன். தமிழாக்கம், பக்கம் 3-4, 341 வரை.

"பாலஸ்தீனப் பகுதியில் புகழ்பெற்ற நகரம் எருசலேம் என்பதாகும். யூதர்கள் இயேசுநாதரை சிலுவையில் அறைந்த இடமிது. இந்த இடத்தை படை எடுப்பின்மூலம் முகலாயர்கள் கைப்பற்றிக் கொண்டனர். முஸ்லிம்கள் மக்காவை எவ்வளவு புண்ணிய பூமியாகக் கருதுகின்றனரோ, அவ்வளவு உயர்ந்த புண்ணிய பூமியாக கிறிஸ்துவர்கள் எருஸலேமைக் கருது கின்றனர். முஸ்லிம்கள் ஹஜ்யாத்திரை ஆண்டுதோறும் போவதைப்போல் கிறிஸ்துவர்தள் எருஸலேம் யாத்திரைப் போய்வருவது இயல்பு. யாத்திரைக்குப் போய்வருபவர்களுக்கு அங்கிருந்த முகலாயர்கள் கிறிஸ்துவர்களுக்கு பலவகையான தொல்லைகள் தருவதும் அவர்களை அவமானப்படுத்துவதும் நாளுக்குநாள் அதிகரித்துவிட்டது. இந்த அவமானத்தைத் தாங்கமுடியாத கிறிஸ்வர்கள் முஸ்லிம்கள் செய்யும் கொடுமை களை நாடெங்கிலும் பரவச் செய்தனர். இக்கொடுமைகளைக் கேள்வியுற்ற கிறிஸ்துவ உலகம் சீறி எழுந்தது. ரோமாபுரியின் உதவியை கி. பி. 1095-ல் நாடிற்று. அச்சமயத்தில் ரோமர் கிரேக்கர் என்னும் பிரிவினையற்று ஒரு பெரிய சபை கூடிற்று. எருஸிலேமை மீட்பது என்னும் தீர்மானம் நிறைவேறிற்று.

செந்நிறத் துணியில் சிலுவை அடையாளங்களைப் பொறித்துக்கொண்டு 1096-ல் போர்ப்படை புறப்பட்டது. அந்தப்போர் 1099 வரை மூன்று ஆண்டுகள் வெகு மூர்க்கமாகப் போராடியும் புண்ணிய பூமியை மீட்க முடியவில்லை. புறமுது கிட்டுவிட்டது. மறுபடியும் 1147-ல் போர் தொடங்கிற்று. மன்னர்களும் கலந்துகொண்டனர். பிரஞ்சு அரசர் பிலிப்ஸ், ஜெர்மன் அரசர் பிரெடரிக், ஆங்கில அரசர் ரிச்சர்டு முதலானவர்களும் கூடிப் பெரும்படையோடு புறப்பட்டனர். ஜெர்மன் அரசர் செல்லும் வழியிலேயே உயிர்நீத்தார். மற்ற வர்கள் கடும்போர் புரிந்து வெற்றிதோல்வியின்றிப் பின்னடைந் தனர். இதைப்போல 9 முறைகள் படையெடுப்புகள் நடந்தன. சைப்ரஸ் நாட்டை ஆண்ட பீட்டர் என்பவர் இப்போரில் உயிர் நீத்தார். இவை 1096-ல் இருந்து 1365 வரை அவ்வப்போது நடந்தன. இப்போரை நேரில் கண்ட பிரஞ்சுக்காரன் எழுதி யுள்ளதாக நேருஜி எழுதியுள்ளது. (பக்கம் 337) "கடைசியாக அச்சிலுவைப் படைவீரர்கள் ஓர் நார்மனியன் தலைமையில் பெரும்படை சென்று எருஸலேமைக் கைப்பற்றியது. அதைக் கைப்பற்றுவதற்கு ஒரு வாரம் அங்கு பயங்கரமான கொலைகள் நடந்தன. ஒரே ரத்தக் களரிதான்; மசூதியின் முன்மண்டபத்தில் முழங்காலளவு உதிரம் பாய்ந்தோடிற்று. அது குதிரையின்

கடிவாளங்களையும் எட்டிற்று.'' என்று எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாவம் செய்யாதிரு, நன்மையைக் கடைப்பிடி இதயத்தை சுத்திசெய். பிற உயிர்களைக் கொல்லாதே. பொய்ம்மை மொழிகளைச் சொல்லாதே. என்று புத்தபெருமான் உபதேசித்துள்ளார் அதைக் கடைபிடிப்பதாகக் கூறிக்கொள்ளும் புத்த மதத்தினரான சிங்களவர் இன்று கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு முதலான கொடுமைகளை உலகறியச் செய்துவருகின்றனர். இவர்கள் செய்யும் கொடுமைகளுக்குக் காரணம் புத்த பிரானென்றா கூறமுடியும்? மதத்தின் போர்வையிலும் சில தீங்குகள் நிகழ்ந்துள்ளன.

கி. பி. 1155-ல் இத்தாலிய நாட்டில் ஆர்நால்டு என்பவர் ஒருவர் இருந்தாராம். அவர் மதகுருக்களின் ஆடம்பர வாழ்க்கைகளையும், ஊழல்களையும் கண்டித்து வந்தாராம். அதற்காக கிறிஸ்துவ மதஸ்தாபன சபை அவரைத் தூக்கேற்றி, பிறகு அந்த உடலைத் தீயிட்டுக் கொளுத்தி. கொளுத்திய சாம்பலும் இந்த மண்ணில் இருக்கக்கூடாதென்று டைபர் நதியில் ஓடும் நீரில் வீசிவிட்டார்களாம்.

கி. பி. 1233-ல் மத விசாரணைச் சபை ஒன்று அங்கு நிறுவப்பெற்றது. (நே. உ. ப. 402) அந்தச் சபை நீதி விசாரணை சபைபோலப் பணி செய்ய ஆரம்பித்தது. எங்கெல்லாம் மத நம்பிக்கை குறைந்து வருகின்றதோ அவ்விடங்களை ஆராய்ந்து கண்டறிதல். அதற்குக் காரணமாக இருக்கின்றவர்களுக்குக் கொடுக்கும் தண்டனை—உயிரோடு எரிமரத்தில் கட்டித் தீயிட்டு எரித்துவிடுவதுபோன்று இந்த விசாரணைச் சபையினர் அபலைகளான பெண்களையும் சூன்னியக்காரிகள் என்று குற்றம் சாட்டி எரிமரங்களில் கட்டிக் கொளுத்திவிட்டனர்.

1415-ல் தற்போது ஜெக்கோஸ்லாவாகியா எனும் இடத்தில் ஜான் அஸ் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சர்வகலா சாலையின் தலைவர். அவர் தமது கொள்கைகளுக்காக மதத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். ஆனால் அந்த நகர மக்களிடம் மிகவும் செல்வாக்குப் பெற்றவர். ஆகவே போப் ஆண்டவரால் அவரை ஒன்றும் செய்யமுடியவில்லை. அவரை உயிரோடு விட்டுவைக்கவும் மனமில்லை. மிகத் தந்திரமாக சுவிட்ஜர்லாந்து கான்ஸ்டன் என்னும் இடத்துக்கு ஓர் அழைப்பு விடப்பட்டது. வழியில் அவருக்கு யாதொரு தீங்கும்

நேராதென்று சக்ரவர்த்தியால் உறுதி கூறப்பட்டது. இந்த அழைப்புக்கு இணங்கி ஜான் அஸ் அங்கே சென்றார். அங்கு ஒரு மத விசாரணை சபையைக் கூட்டி இவரை அந்த சபைக்கு அழைத்துச் செல்லப்பட்டது. அச்சபையினர் இவரைத் தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு வற்புறுத்தினர். ஆனால் என்னுடைய குற்றத்தை என்னுடைய அறிவுக்கு பொருந்துமாறு விளக்கினால் ஒழிய நான் ஒப்புக்கொள்ள முடியாதென்று மறுத்துவிட்டார். இவருக்குச் சபையின் கட்டுப்பாட்டை மீறினார் என்னும் குற்றம் சாட்டி இவரை எரிமரத்தில் கட்டி உயிரோடு நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டனர். (ஆதாரம் நேருஜி எழுதிய உலக சரித்திரம்)

ரோமாபுரியை ஆண்ட நீரோ என்னும் மன்னன் ஒருவன் இருந்தானாம். அவனுக்கு கிறிஸ்துவ மதமென்றால் அறவே பிடிக்காது. ஆகவே கிறித்துவ மதத்தைப் பின்பற்றுவோர்களைப் பிடித்துக்கொண்டுவந்து தனது கொலு மண்டபத் தூண்களில் பிணித்து விடுவானாம். பிறகு அவர்களின் தலைகளில் எண்ணெய் தோய்த்த துணிகளைச் சுற்றுவானாம். சுற்றியபிறகு அத் தலைகளுக்குத் தீ வைப்பான். அத் தீ பந்தங்களைப்போல எரிகின்றபோது அந்த வெளிச்சத்தில் நண்பர்களோடு விருந்துண்டு களிப்பானாம்.

கிறித்துவ மதத்தின் முயற்சி

கிறிஸ்துவமதம் தோன்றிய இடம் ஆசியா. இம்மதம் ஐரோப்பா முழுவதும் பரவி இருக்கிறது. ஐரோப்பாவின் அளவில் மட்டும் நிற்கவில்லை. ஆஸ்திரேலியா, அமெரிக்கா என இரு கண்டங்களையும் விழுங்கி ஆப்பிரிக்கா ஆசியாவிலும் இதன் வாடை வீசிக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்த்துவ மதத்தினர் எந்த நாட்டைக் கைப்பற்றினாலும், கைப்பற்றிய நாட்டின் பழைய கொள்கைகளை, நயம், பயம், ஆசை வார்த்தை, சிறு சிறு உதவிகள், பிரசாரம் போன்ற பலவகைத் தந்திரங்களால் நசுக்கி, தம் மதத்தைப் பரப்புவதில் கைதேர்ந்தவர்கள். அதற்காகவே பாதிரிமார்களின் பட்டாளமும் பெண் பிரசாரகர்களும் இலட்சக்கணக்கில் தயாரிக்கப்பட்டு உள்ளனர். இதற்கெனப் பயிற்சிப் பள்ளிகளும் ஆயிரக்கணக்கில் அமைக்கப்பெற்றுள்ளன. ஆண்டுதோறும் பலகோடிப் பணம் மத வளர்ச்சிக்காகச் செலவிடப்படுகின்றது.

இந்தியாவில் மட்டும் கிறிஸ்துவமத வளர்ச்சிக்காக வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்தைப் பெறுகின்ற அமைப்புகள் 5000 உண்டென்கின்றனர். ஆதாரம்: 1982-ல்

உள் விவகாரத்துறையின் அறிக்கை; பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது.)

1976, 77-ல் மத வளர்ச்சிக்காக இந்தியாவிலிருக்கும் சேவை நிறுவனங்களுக்கு வந்த தொகை ரூ. 182 கோடியே 35 இலட்சம்

1979, 80-ல் பெறப்பட்ட தொகை 170கோடியே 8 லட்சம் ரூபாய்.

வெளிநாடுகள் அனுப்பும் தொகை 1976, 77-ல் உள்நாட்டு விவகார இலாக்கா (Home Ministry) அளித்த தகவல்படி— அடியிற்காண்க:

		ரூபாய்			
1.	மேற்கு ஜெர்மனி	44	கோடியே	87	இலட்சம்
2.	அமெரிக்கா	28	,,	55	,,
3.	இங்கிலாந்து	10	,,	38	,,
4.	இத்தாலி	15	,,	5	,,
5.	ஹாலந்து	5	,,	70	,,
6.	சுவிட்சர்லாந்து	6	,,	9	,,
7.	ஆஸ்திரேலியா	2	,,	66	,,
8.	பெல்ஜியம்	2	,,	77	,,

(ஆதாரம்: விஜயபாரதம் 30—1—198)

இவ்வாறு பணத்தை வாரியிறைத்து கிறிஸ்துவர்கள்மதம் வளர்க்கின்றனர். கிறிஸ்துவமதம் செய்துவருகின்ற சேவை மனிதாபினமென்று சிந்திக்க முடியவில்லை. இது மதாபிமான மாகும். மற்றும் இது மதத்தின் பெயரால் நடக்கின்ற அரசியல் சூழ்ச்சி என்றே தோன்றுகிறது.

நீதிபதி அவர்களின் அறிக்கை

1954-ல் மத்தியப் பிரதேச அரசு கேட்டுக்கொண்டதற் கிணங்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியான ஜஸ்டீஸ் நியோகி வர்கள் கிறிஸ்துவர்களைப்பற்றி ஓர் அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையின் ஒரு பகுதி:

"கிறிஸ்துவப் பாதிரிமார்களின் மனிதாபிமான நடவடிக் கைகள் எல்லாம் மதமாற்ற வேலைகளை நடத்திச் செல்லுவதற் காகப் புனையும் வெளிவேஷப் பூச்சேயாகும். அப்பாவி (இந்துக் களை) மக்களை பலத்தாலும், பணத்தாலும் மதம் மாற்றி வருகின் றார்கள். தமது ஜனத்தொகையை அதிகரித்துக்கொண்டு

பரந்த பாரத நாட்டிலிருந்து பிரிந்து கிறிஸ்துவ ராஜ்யம் அமைப்பதே இவர்கள் நோக்கமாகும். பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிடுவதின் நோக்கம் மேற்கூறியதுதான்......மத மாற்றமானது ஒருவருக்கு நமது சகோதர இந்தியனிடமுள்ள பாசத்தையும் பிடிப்பையும் இழக்கச் சொல்லுகிறது. மற்றும் செய்கிறது.. முடிவாக அவன் தேசப்பற்றையே இழக்கிறான் நாகாலாந்து, அஸ்ஸாம் பிரதேச (வனவாசி) மலைநாட்டு மக்களின் தேச விரோதச் செயல்களே இதற்குச் சான்றாகும்,'' இது நியோகி அவர்கள் சமர்ப்பித்த கமிஷன் அறிக்கை.

ஜனாதிபதி அவர்களுக்கு பாதிரியார் பதில் :

காலம் சென்ற ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் ஒருமுறை அஸ்ஸாமுக்குச் சென்றிருந்தார். மலைப் பாங்கான அப்பகுதிகளில் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் நிறுவி யிருந்த மருத்துவ மனைகளையும், பள்ளிக்கூடங்களையும் பார்வையிட்டார். தமது பாராட்டுதலையும் அவர்களுக்கு மனப் பூர்வமாகத் தெரிவித்தார். ஆனால் இறுதியில் அவர்களுக்கு அறிவுரை கூறுகையில் "நீங்கள் உண்மையிலேயே மிக நல்ல காரியங்களைச் செய்கிறீர்கள். இந்த விஷயத்தில் சந்தேகமில்லை. ஆனால் மதமாற்றச் செயல்களுக்கு இவற்றைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள்,'' என்று பிரசாத் அவர்கள் கூறினார். அடுத்துப் பேசிய பாதிரியார் "வெறும் மனிதாபிமானக் காரணங்களால் தூண்டப்பட்டு நாங்கள் இவற்றை எல்லாம் செய்வதானால் நாங்கள் எதற்காக இவ்வளவு தூரம் வரவேண்டும்? எதற்காக இவ்வளவு பணத்தைச் செல வழிக்கவேண்டும்? ஒரே காரணத்துக்காகத்தான் நாங்கள் இங்கு இருக்கிறோம். அதாவது எங்கள் இயேசு கிறிஸ்துவைப் பின் பற்றுகிறவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதே எங்கள் நோக்கம்,'' என்று பச்சையாகக் கூறினாராம். (ஆதாரம்) ஞானகங்கை, தமிழாக்கம், பக்கம் 274. குருஜீ, கோல்வல் கர்.)

இயேசுநாதரின் பெயரை வைத்துக்கொண்டு மனிதாபி மானப் பணிகளைப்போலப் பல நாடுகளையும், பல கண்டங்களில் வாழ்ந்துகொண்டிருந்த பழங்குடி மக்களையும் தலையெடுக்க வொட்டாமல் தரைமட்டமாக்கிவிட்டனர். அமெரிக்கா கண்டத்தையும், ஆஸ்திரேலியாவையும் இதற்குச் சான்று கூறலாம். அந்த இரு கண்டங்களும் இன்று வெள்ளையர்களுடைய இடங்களாகவே மாறிவிட்டன. ஆப்பிரிக்கக் கண்டமும் ஆட்டங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. அக் கண்டங்களில் வாழ்ந்து கொண்டிருந்த பழங்குடிமக்களின் பரிதாப நிலையை

எண்ணிப்பார்க்கும் நெஞ்சங்கள் இளகாமல் இருக்கமுடியாது: அன்பு நெறியைப் பரப்புவதாகக் கூறிக்கொண்டு இவர்கள் நடத்திய மகா யுத்தங்களின் பெருமைகளை (!) வர்ணிக்க முடியாது. மண்டையோடுகள் மலைகளாகக் குவிக்கப்பெற்றன. உடம்பில் ஊறிய செந்நீரை மண்ணில் தண்ணீராக ஊறவைத்தனர். இன்றும் அகிலத்தை அழிக்கவல்ல அணு ஆயுதங்களை அடுக்கி வைத்துக் கொண்டுள்ளனர். இவர்கள் கிறிஸ்துவின் போதனைகளை போதிக்கவில்லை. சேதிக்கின்றனர். மதத்தை போதிப்பதாகவும், மக்களுக்கு சேவை செய்வதாகவும் செப்புவது செப்படிவித்தையாகும். மதமென்னும் மூடுக்குள்ளே இது சர்வதேச இயக்கமாக இயங்கிவருகிறது. இவர்கள் செய்வது மேலுக்கு சேவை. உள்ளுக்கு இவர்களுக்குப் பல நாடுகள் தேவை.

இயேசுநாதர் அன்பால் நேசிக்கவேண்டுமென்று போதித்தார். ஒரு கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு என்று கூறினார். இவர்கள் அடிப்பவனுக்குக் கன்னத்தைக் காட்டவில்லை. அப்பாவி மக்களின் மென்னியைப் பிடிக்கிறார்கள்.

பல கண்டங்களையும் பதம் பார்த்த இவர்கள் 'பரத கண்டத்'தைக்கூட இலேசாக விடவில்லை. ஆங்கில ஆட்சி இந்தியாவில் வேரூன்றிய உடனே படிப்பறிவில்லாத ஏழை மக்களின்பேரில் பாதிரிமார்களும் பெண் பிரசாரகர்களும் அலையலையாகப் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவினர். இவர்கள் இந்திய நாட்டில் காலடி வைப்பதற்கு முன்னரே, முகலாயர்களுடைய மூர்க்கத்தனமான ஆட்சியாலும், சாதி வெறியர்களாலும் ஒதுக்கப்பட்டிருந்த அப்பாவி மக்களை அணியணியாக மதம் மாற்ற ஆரம்பித்தனர்.

இந்துக்கள் என்றால் தேங்காயை உடைத்து கற்பூரத்தைக் கொளுத்திக் கல்லுக்குக் காட்டும் அஞ்ஞானிகள், என்று அர்த்தமற்ற பட்டத்தைப் பாவித்தருளினர். மக்களே! நீங்களனைவரும் மெய்ஞ்ஞானிகளாகி விடுங்கள் என்று பெருங் கருணையினால் ஞானத்தில் குளிப்பாட்டிவிட்டனர். (ஞானஸ்னானம்) கிறிஸ்து பிரான் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று கூறினாரோ அப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது கட்டாயமல்ல. நீங்கள் இயேசுபிரானை இரட்சகர் என்று நம்பினால் அதுவே போதும். நீங்கள் ரட்சிக்கப் படுவீர்கள். இல்லாவிட்டால் உங்களுக்கு ரட்சிப்பே கிடையாது. உலகத்தில் ஆண்டவரால் அனுப்பப்பட்ட இரட்சகர் அவர் ஒருவரே. அவர் மட்டும்தான் ரட்சகர் என்று நம்பிய அந்த

கணத்திலேயே நீங்கள் மலைமலையாகச் செய்திருந்த பாபங்களெல்லாம் சூரியனைக் கண்ட இருள்போல் பறந்தோடிவிடும். பாபங்களிலிருந்து மன்னிக்கப்படுவீர்கள். அவரை நம்பாதவர்கள் நல்லவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு நரகமே கிட்டும் என்பதை ஆண்டவர் ஆணையாகக் கூறுகிறோம்; என்று படிப்பற்ற பேதை மக்களை மயக்கி மத மாற்றங்களை விறுவிறுப்பாகச் செய்யலாயினர். மற்றும் ஆசை வார்த்தைகளும், அற்ப உதவிகளும் அம் மக்களைக் கவர்ந்துவிட்டன.

கென்னடி என்னும் ஒரு ஆங்கிலப் பாதிரியார் வெளியிட்டு உள்ள அறிக்கை. ஆ தா ர ம்: வீரசவர்க்கார். பக்கம் 45. கீழ்க்காண்க:

"நமக்கு எவ்வித கஷ்டம் நேர்ந்தாலும் எவ்வித துரதிர்ஷ்டம் நேர்ந்தாலும் இந்தியாவில் நமது சாம்ராஜ்யம் இருந்துவரும் வரையில், அங்கு நமது முக்கியக் கடமை கிறிஸ்துவ மதத்தைப் பரப்புவதுதான். இதை நாம் மறந்துவிடக்கூடாது கன்னியாகுமரியிலிருந்து இமாசலம் வரையில் இந்துஸ்தானம் முழுவதும், இந்து, இஸ்லாம் மதங்களைக் கண்டித்து எல்லோரையும் கிறிஸ்துவ மதத்தைத் தழுவச் செய்யவேண்டும். அதுவரையிலும் நம் முயற்சிகளை இடைவிடாது செய்துவரவேண்டும். இதற்காக நாம் எல்லாவிதமான முறைகளையும் கையாளவேண்டும். நமக்குள்ள சக்தி முழுவதையும் பயன்படுத்த வேண்டும். இந்தியாவைக் கிழக்குத் திசையிலே கிறிஸ்துவ மதத்தின் ஒரு பிரம்மாண்டமான கோட்டையாக்கிவிடவேண்டும். அதுவரையிலும் நமது முயற்சி சிறிதும் தளரக்கூடாது. நாம் விடா முயற்சியுடன் இருந்துவருவோமானால் இறுதியில் கடவுள் நமக்கு வெற்றியைக் கொடுத்தே தீருவார்," என்னும் அறிக்கையை அருளிச் செய்திருக்கின்றார்.

வீரசவர்க்கார் 44-வது பக்கம்: "கிறிஸ்துவப் பாதிரிமார்களும் கிழக்கிந்தியக் கம்பெனி நிருவாகிகளும்"

"பரந்த இந்துஸ்தானச் சாம்ராஜ்யத்தை கடவுளே நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார். இந்தியாவின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைவரையிலும் கிறிஸ்துவக் கொடி பறக்க வேண்டும். இது கடவுளுடைய கட்டளையாகும். இந்தக் கட்டளையை நிறைவேற்ற ஒவ்வொரு ஆங்கிலேயனும் தன் முழு சக்தியை உபயோகிக்கவேண்டும். இந்தியாவை கிறிஸ்துவ

நாடாகச் செய்யும் விஷயத்தில் அனுவளவும் தயக்கமோ தாமதமோ கூடாது." —இது கிழக்கிந்தியக் கம்பெனி நிருவாகிகளின் அறிக்கை!

இதற்கு ஏற்றவாறே ஆங்கில ஆட்சியும் அச்சகங்கள் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு உரைநடைப் புத்தகங்களை உலாவவிட்டது. இவர்கள் வருவதற்குமுன்பு எழுத்தறிவு பெற்றவுடனே செய்யுள் நடையிலுள்ள ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், விவேக சிந்தாமணி, சதகங்கள், நிகண்டு, திருப்புகழ், தேவார, பிரபந்த புராண இதிகாசங்கள் கற்பிக்கப்பட்டு வந்தன. இவர்கள் வந்தபிறகு நாய், நரி, எலி, பூனை போன்ற புல்லிய கதைகளை உரைநடை புத்தங்களில் புகுத்தி, பள்ளிப் படிப்பிலும் திசை மாற்றினர். சிறுவர்களுள்ளத்தில் இந்து மதத்தின் இணையற்ற நற்பண்புகள் சிறுகச்சிறுக மறையலாயின. கைக்கூலிகள் மூலமாக இந்துமதத்துக்கு எதிர்ப்பு நூல்களை எழுதத் தலைப்பட்டனர். அந்த நாளில் இந்துமத விஷயங்களில் சிறந்த மேதைகளாக இருந்த பேரறிஞர்கள் ஏற்ற பதில்களையும், அவர்களிடத்தில் இருக்கும் அறியாமைகளையும் அலசிவிட ஆரம்பித்தனர். இந்த அரும்பணிகளில் ஈடுபட்டவர்களில் ஒப்புயர்வற்ற சுவாமி தயானந்தரும் ஒருவர் என்று கூறலாம். எனினும் பாடப் புத்தகங்களில் விக்டோரியா மகாராணியாரின் கருணை, எட்வர்டு சக்ரவர்த்தியாரின் எளிமை, ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பெருமானின் அருமை, ரோம சாம்ராஜ்யத்தின் பெருமை, ஓனாய் கதை, முயலின் கதை, கரடிகதை, குரங்குக் கதைகள் தயாரிக்கப்பெற்றன.

இந்துமத நூல்களில் இருக்கும் விஷயங்கள்தாம் என்ன? என்பதை அறியச் சில ஆங்கிலேயப் புலவர்களும் நுழைந்தனர். ஷோபனஹர், போப்பையர், மேக்ஸ்மூலர், கால்டுவெல் போன்ற மேதாவிகள் மொழி, மதம், வரலாறு என்பவற்றில் ஆராய நுழைந்தனர். இதன் அளக்கமுடியாத வரலாற்றை அறிந்து அதிசயித்தனர். கல்வியறிவற்ற ஏழை மக்களைத்தவிர விஷயமறிநத இந்துக்களை மதவிஷயத்தில் நம்மால் இம்மியும் அசைக்கமுடியாது என்னும் இடத்துக்கு ஆங்கில ஆட்சி வந்தாயிற்று எனலாம். நுண்ணறிவுடைய விக்டோரியா மகாராணியார் கூர்ந்து கவனித்து "இந்திய மக்களின் மத விஷயத்தில் ஆங்கில ஆட்சி தலையிடாது," என்னும் அறிக்கை வெளியானது. அதன்பிறகு கிறிஸ்துவ உலகம் இந்திய மக்கள் சிலரை பக்குவமாக மண், பெண், பொன், பதவி என்னும் கூலி

கொடுத்துத் தன்னில் ஈர்த்துக்கொண்டது. இவர்கள்மூலம் பழையபடி தம்மை உயர்சாதிகள் என்று கூறிக்கொண்டவர்களால் ஊருக்கும் புறம்பாக ஒதுக்கப்பட்ட மக்களை மதமாற்றம் செய்ய சுறுசுறுப்பாக இறங்கிவிட்டனர்.

சாதிக் கொடுமையினாலும் தாழ்மையினாலும் ஏழ்மையினாலும் கல்வியறிவற்றிருந்த மக்கள் பலரும் ஊருக்கும்புறப்பாக ஒதுக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பேருக்கு இந்துக்கள் ஆனால் இந்துமதத்தின் பெருமையை இம்மியும் அறியாத அப்பாவி மக்கள். அத்தகைய நிலைமையிலிருந்த ஆறுமுகம் அந்தோணி ஆனான். திருவேங்கடன் தேவசகாயனானான். சுப்ரமண்யம் ஜோசப் ஆனான். இந்த நிலையில் பெற்றோர்கள் வைத்த பெயர்களையே மாற்றிவிட்டனர். தாய் தந்தையர் இட்ட பெயரையே மாற்றிய மதத்தவர்கள் தாய்நாட்டின் பெயரிலுள்ள பற்றை மாற்றுவது ஒரு பெரிய காரியமல்ல. இதைத்தான் நீதிபதி திரு நியோகி அவர்கள் அரசாங்கத்துக்கு அளித்த அறிக்கையில் "மத மாற்றச் செயல்களானது தமது சகோதர இந்தியனிடமுள்ள பாசத்தையும், பிடிப்பையும் விடச் செய்வதுடன் முடிவாக அவன் தேசப்பற்றையே இழக்கிறான்," என்று விளக்கினார். ஆயினும் ஆங்கில ஆட்சி முகலாய அரசர்களின் கொடுமையைவிடக் கடுமையில் சிறிது குறைந்ததென்றே கூறவேண்டும்.

கொள்ளைக்கூட்டத்தினரான முகலாய அரசர்களின் பிடியில் மக்களும் மதமும் அல்லல்பட்டுக்கொண்டிருந்த காலத்தில் ஆங்கிலேயர்களும் இந்தியாவில் அடியெடுத்து வைத்தனர். இவர்களுடைய ஆட்சி சுமார் 150–ல் இருந்து 200 ஆண்டுகளுக்கு உட்பட்டதெனலாம். ஆனால் முகலாயர்களுடைய தொல்லை சுமார் ஆயிரமாண்டுகளாகும். இவர்களால் பட்ட இன்னல்களையும் சிறிது இந்திய மக்கள் எண்ணிப் பார்க்கவேண்டியதே.

இந்தியாவில் இஸ்லாமியர்கள்

இந்துக்கள் எந்த மதத்தின் பேரிலும் படை யெடுத்துச்சென்று அம்மதங்களை அழிக்க முயன்றதில்லை; தளர்ந்து வந்த மதத்தினர்களையும் தாங்கிக் கொண்டுள்ளனர். இறைவனை உருவம், அருவம், உருவருவம் என்னும் மூன்று துறைகளிலும் வணங்கி வழிபட அறிந்தவர்கள் இந்துக்கள். இந்துக்கள் எந்த மதத்தினரையும் பகைத்துக்கொள்ள எண்ணியதுமில்லை;

எண்ணப்போவதுமில்லை. எந்தக் கொள்கை தமக்குச் சிறந்த கொள்கையாகத் தோன்றுகிறதோ அந்தக் கொள்கையை அவர்கள் பின்பற்றலாம். அந்த உரிமை ஒவ்வொரு மனிதனுக்கு முண்டு. இந்த உண்மையை ஆயிரக்கணக்கான ஆண்டு களாகப் பின்பற்றிவரக்கூடியவர்கள் இந்துக்கள். இதனைத் தாய்போன்ற மதமென்னும் தலைப்பில் பல பெரியோர்களின் அருளுரைகளாலும் பார்த்தோம். இந்து மதத்தின் வரலாறு இத்தகையது. பிற மதத்தினரைப் புண்படச்செய்வதோ பிற மதக் கொள்கைகளை இழிவுபடுத்திப் பேசுவதோ, அவர்கள் வழிபடும் வழிபாட்டிடங்களைச் சிதைத்துச் சின்னா பின்னப்படுத்துவதோ இந்துக்களுடைய வரலாற்றில் காண முடியாது.

மதத்தில் உள்ள அரிய உட்பொருள்களை விளக்குவதற்கு சபைகளைக்கூட்டி நிபந்தனைகளையும் விதித்துக்கொண்டு நேருக்குநேர் தர்க்கரீதியாக வாதாடிய கலைவாணர்கள் உண்டு. இவர்கள் திக் விசயங்கள் செய்ததும் உண்டு. ஆனால் மூர்க்கத் தனமாக மதம் மாற்றுவதோ பணபலத்தால், அதிகார கெடுபிடி களால், பல சதித் திட்டங்களினால் மதமாற்றங்களில் என்றுமே இந்துக்கள் ஈடுபட்டதில்லை. ஆனால் இந்த நாட்டின்மீது படை எடுத்தவர்கள் இந்துக்களுக்கும் இந்து மதத்துக்கும் புரிந்த அட்டூழியங்கள் பலவாகும். அதிலும் முகலாயர்களை இதில் முன்னோடிகளென்றே கூறவேண்டும்.

கஜினி மாமூது

ஆப்கானிஸ்தான் மன்னனாக கஜினிமுகமது கி.பி. 998-ல் பட்டமேற்றான். தான் மன்னனானபிறகு இந்தியாவின் பேரில் 17 முறை படையெடுத்தான். அவற்றுள் சோமநாதபுரத்துப் படையெழுச்சி மிகவும் கொடுமையானதென்று நமது பாரதப் பிரதமராய் இருந்த நேருஜி விளக்கியுள்ளார்.

" கஜினி வடமதுரை என்னும் (கண்ணபிரான் பிறந்த ஜன்மபூமி) சோமநாதபுரம் வரையிலும் சென்றான். தானேஸ் வரத்திலிருந்து அவன் அளவற்ற திரவியங்களுடன் இரண்டு இலட்சம் பேரையும் சிறைபிடித்துக் கொண்டுபோனான். அவனுக்கு மற்ற எல்லா இடங்களைக் காட்டிலும் சோமநாதர் கோயிலில்தான் அதிக தனம் கிடைத்தது. சோமநாதர் கோயிலில் பலநூறு ஆண்டுகளாகப் பக்தர்களால் அளிக்கப்பட்ட செல்வம் குவிந்து கிடந்தது. கஜனி அங்கு சென்றபோது 50 ஆயிரம் பேரைக் கொலைசெய்து கோயிலை இடித்துப் பாழாக்கி

னான்; அங்கிருந்த பொருள்களை சூறையாடினான்.'' (ஆதாரம் உலக சரித்திரம் பக்கம் 269 தமிழாக்கம்).

267ஆம் பக்கத்தில் கஜினி இந்தியாவின்பேரில் படை எடுப்பதற்கு முன்பு இந்தியர்களுக்கும் அராபியர்களுக்கும் இருந்த தொடர்பை விளக்கியுள்ளார். அதையும் வாசகர்கள் சிந்திக்க வேண்டும்.

"அராபியர்கள் இந்தியாவின் மேற்குக்கரையில் தங்கினர். பல மசூதிகளையும் கட்டினார்கள். அரேபிய யாத்ரிகர்களும் வியாபாரிகளும், இந்தியாவின் பல பாகங்களுக்கும் சென்றனர். வடக்கே தக்ஷசீலத்திலிருந்த சர்வகலாசாலையில் கல்வி பயில்வதற்கு அராபிய மாணவர்கள் வந்தார்கள். அங்கு மருத்துவ முறைகள் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டது. ஹாரூன்—ரஷீத் (முகலாய மன்னன்) என்பவன் ஆண்ட காலத்தில் இந்தியாவில் வந்து கல்வி கற்றுத் தேர்ந்தவர்களுக்கு பக்தாத் நகரில் பெரு மதிப்பு இருந்து வந்தது. வைத்திய சாலைகள் நிறுவவும், வைத்திய கலா சாலைகள ஸ்தாபிக்கவும் இந்திய ஆயுர்வேதப் பண்டிதர்கள் பக்தாதுக்குச் சென்றார்கள். வடமொழியிலுள்ள பல கணித நூல்களும் வான நூல்களும் அரபு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன."

என்று நேருஜி அவர்கள் எழுதியுள்ளனர். இவ்வாறு அராபியர்களுக்கு கலை ஞானங்களை வாரி வழங்கியுள்ளது இந்தியா. இத்தகைய நாட்டின்பேரில் கஜினிமாமூது துவேஷ புத்தியினால் நெருப்பைக் கக்கிக்கொண்டு கொலைக் கருவியைக் கையில் பிடித்துக்கொண்டு வந்தான். இந்தியர் வழிபடும் ஆலயங்களை இடித்து, விக்ரகங்களைச் சிதைத்து சோமநாதபுரத்திலும் தானேஸ்வரத்திலும் கொள்ளையடித்த பொருள்களை ஆயிரக் கணக்கான ஒட்டகங்களின்பேரில் கொண்டு சென்றான் என்கின்றனர். உலகில் நாட்டுக்கு நாடு போர் மூளுவது சகஜம். ஒரே இன மன்னர்கள் மொழியினர்கூடப் போராடியுள்ளனர்; ஆனால் மக்கள் வழிபடும் ஆலயங்களை இடித்ததில்லை. இது மதத்துவேஷம் என்பதில் ஐயமில்லை.

கண்ணபிரான் பிறந்த இடத்தில் கட்டப்பட்ட சோமநாதராலயத்தை மறுபடியும் இராஜ சிம்மனும், குமாரபாலனும் புதுப்பித்தனர்.

அடுத்தபடியாக 1300-ல் அலாவுதீன் கில்ஜி என்னும் முகலாயன் அதே சோமநாதராலயத்தை அடிதளத்தோடு சேர்த்து இடித்தான். பிறகு 14ஆம் நூற்றாண்டில் மகிபாலன்

என்னும் மன்னன் அதே இடத்தில் ஆலயத்தைக் கட்டி லிங்கப் பிரதிஷ்டை செய்தான். 15ஆம் நூற்றாண்டில் மறுபடியும் அதை முகலாயர்கள் இடித்தனர். அதற்குப் பிறகும் கோயில் கட்டப் பட்டது. அதன் பிறகு ஔரங்கசீப் அக்கோயில் முழுவதையும் இடித்துத் தரைமட்டமாக்கவேண்டுமென்று கட்டளையிட்டான். அந்தக் கைங்கர்யமும் நிறைவேறிற்று. 18ஆம் நூற்றாண்டில் இந்தூர் ராணி அகல்யாபாய் இக்கோயிலை மறுபடியும் நிரந்தர மாகப் புதுப்பித்தாள். இவ்வாறு சோமநாதர் கோயிலைமட்டும் 6 தடவை அழிக்கும் பணியை முகலாய மன்னர்களே அயராது செய்தனர்.

கடைசியாக வல்லபாய் பட்டேலின் முயற்சியும் குஜராத் மக்களின் உணர்ச்சியும் தூண்டப்பெற்று கோயிலை அழகாகப் புதுப்பித்தனர். 1951ல் மே மாதம் 11ஆம்நாள் பஞ்சமி யன்று ராஷ்டிரபதி இராஜேந்திரபிரசாத் அவர்களின் முன்னிலையிலும் இறுதியாக கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

இல்தூத்மிஷ்

குத்புதீனுக்குப் பிறகு இல்தூத்மிஷ் என்பவன் 1210ல் பட்டத் துக்கு வந்தபின் 1234ல் உஜ்ஜைனியின் பேரில் படைஎடுத்தான் அந்த சமயத்தில் அங்கிருந்த புகழ்பெற்ற காளிகோயிலை அவன் இடித்துத் தரைமட்டமாக்கினான். டெல்லியிலுள்ள குதுப்மினார் இவன் கட்டியது. இதைக் கட்ட இந்திய ஆலயங்களின் பொருள்கள் தாம் பயன்படுத்தப்பட்டதாம் (ஆதாரம்: உலக சரித்திரம் — நேருஜி எழுதியது; பக்கம் 369)

இல்தூத்மிஷ் என்பவனுக்குப் பிறகு பால்பன் என்பவன் 1266–ல் பட்டம் எய்தினான். இவன் ஆண்ட காலத்தில் ஆட்சி நேர்மையாக இருந்தது என்கின்றனர். இவனுக்குப் பிறகு பட்டமேற்றவர்களில் 1296–ல் வந்த அலாவுதீன் கில்ஜி என்பவன் இஸ்லாம் மதத்தில் சேராதவர்களுக்கு ஜிஸ்யா என்னும் தலை வரி விதித்தான். இந்துக்களைத் தலையெடுக்க முடியாமல் எல்லா வகையிலும் உரிமையற்றவர்களாக ஆக்கிவிட்டான். (கலைக் களஞ்சியம் 1; பக்கம் 629) மறுபடியும் 1297ல் சோம நாதர் கோயிலை அழிக்கும் கைங்கர்யத்தில் இவனும் ஒருவனானான்.

அலாவுதீனுக்குப் படைத்தலைவனாக இருந்த மாலிக்காபூர் என்பவன் 1307–ல் தேவகிரியைச் சூறையாடினான். 1309 வாரங்கல் நாட்டைக் கொள்ளையடித்தான். பிறகு 1311–ல் மைசூரைக் கொள்ளை அடித்தான். 1311–ல் மதுரையைக் கொள்ளையடித்துப் பெரும் பொருளோடு டெல்லி திரும்பி னானாம். (கலைகளஞ்சியம்; பக்கம் 630)

பிரோஸ் துக்ளக் 1331–ல் ஆட்சிக்கு வந்தான். இவனுடைய ஆட்சிக் காலத்திலும் இந்துக்கள் துன்புறுத்தப்பட்டார்கள், இந்துக்களின் ஆலயங்கள் இடிக்கப்பட்டன. தலை வரியும் கடுமையாயிற்று. பலாத்கார மதமாற்றம் செய்யப்பட்டது. மசூதிகள் அதிகரித்தன.

சிக்கந்தர் லோடி 1489–ல் பட்டம் எய்தினான். இவன் காலத்திலும் இந்துக்களின் ஆலயங்கள் இடிக்கப்பட்டன. இந்துக்களின்மீது கொடுங்கோலாட்சி செலுத்தினான்.

முகலாயர்களின் ஆட்சி இந்தியாவில் காலூறியபின் அக்பர் பாதுஷா காலத்தில் 1556–ல் இருந்து 1605 வரையில் இந்துக்கள் சிறிது ஆறுதல் அடைந்தனர். ஆயினும் இது நீண்ட நாட்கள் நிலைக்கவில்லை. 1659-ல் ஔரங்கசீப்பின் ஆட்சி தொடங்கிற்று. மறுபடியும் இந்துக்களுக்கு இன்னல்கள் தொடங்கின. இந்திய ஆலயங்கள் இடிக்கும் பணி தொடர்ந்தது. இந்தியர்களின் உரிமைகள் பறிக்கலாயின. கோயில்களை இடித்த இடத்தில் மசூதிகள் கிளம்பின. தலைவரியும் புத்துயிர் பெற்று எழுந்தது. சீக்கிய மதத்தின் 9வது குருவான பகத்தூர்சிங் தூக்கேற்றப்பட்டார். இத்தகைய அட்டூழியங்களைக் கண்டு சிவாஜி சீறி எழுந்தார்.

இஸ்லாம் மதம் ஒரு சிறந்த மதம் எனக்கருதி அதன்பேரில் விருப்பங் கொண்டு தாமாகவே மதம் மாறியவர்கள் ஒருக்கால் முகமது நபிகளார் இருந்த காலத்தில் சிலர் இருக்கலாம். அவருக்குப் பிறகு இஸ்லாம் மதத்தின் வளர்ச்சியைக் கூர்ந்து கவனித்தால் இது போராட்டத்தையும், பலாத்காரத்தையும் அடிப்படையாகக் கொண்டு வளர்க்கப் பெற்றதாகவே தோன்றுகிறது.

1947-ல் இந்தியா துண்டாடப்பட்டதும் மதவெறியால்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இன்றைக்கும் ஒரு மசூதியும் அதைச் சுற்றிப் பல முஸ்லிம் குடும்பங்கள் இருக்குமானால் அந்தப் பகுதியை ஒரு குட்டிப் பாக்கிஸ்தானைப் போலக் கருதக்கூடிய மனோபாவம் முஸ்லிம்களுக்கு உண்டாகின்றது. மக்கள் அதிகமாக நடமாடும் பெருந் தெருக்களின் பகுதிகளில் மசூதிகளைக் கட்டிவிடுகின்றனர். அந்த வழியில் இந்துக்களின் விழாக் காலங்களில்கூட மேளவாத்தியங்கள் வாசித்துக்கொண்டு போனால் எரிந்து விழுகின்றனர். கோடிக் கணக்கான பணச்செலவு செய்து அரும்பாடுபட்டு இந்துக்கள் கட்டிய ஆலயங்களை இவர்கள் இடித்துத் தரைமட்டமாக்கலாம்;

அது பாவமில்லை. சாதாரணமாக சுவருக்கு வெள்ளையடித்து விட்டு அதைத் தொழுகைக்கூடம் என்னும் பெயர் சூட்டி இறை வழிபாடு செய்கின்றனர். இவர்கள் அவ்வாறு செய்வதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அந்தப் பக்கத்தில் இந்துக்கள் மேளவாத்தியங்கள்கூட வாசிக்கக்கூடாதென்னும் விஷயந் தான் யோசிக்க வேண்டியுள்ளது.

இவர்கள் தொழுகைக் கூடங்கள் இருக்கும் தெருவிலும் ஊர்வலம் போவது தகாதென்றால், கண்ணபிரான் அவதரித்த வடமதுரையில் கலையழகு நிறைந்த சோமநாதர் ஆலையத்தை இடித்தது தகுமா? கஜினி மாமூதிலிருந்து ஔரங்கசீப்வரை யிலும் செய்த அட்டூழியங்கள் மதப் பற்றா? வெறியா? என்னும் கேள்வி மூலம் கேட்கத்தோன்றுகிறது. இதை யாரோ ஒரு அரசன் கொடுங்கோலனாக இருந்தான்; அதை நாம் பெரிது படுத்தக்கூடாது என்று கூறமுடியாது. மற்றும் இந்தியர்கள் அராபியர்களுக்குப் பரம்பரைப் பகைவர்களல்லர். இவர்களின் நாட்டின் பேரில் படை எடுத்துச் சென்று இவர்கள் கட்டி இருந்த மசூதிகளை இடித்ததில்லை: தர்க்காக்களைத் தரைமட்ட மாக்கவில்லை.

ஒருவகையில் முகலாயர்களும் வெள்ளையர்களைப்போல இந்தியாவுக்கு வெளி நாட்டினர்களே. அவர்கள் வெளியேறி யதைப்போல முகலாயர்களும் இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டியவர்களே. இந்துக்கள் இவர்களையும் வெளியேற்றி இருக்கலாம்; முடியாது என்று முரண்டுசெய்தாலும் விரட்டியடிக்க முடிந்திருக்கும். சூரிய அஸ்தமனமில்லாத பெருநிலப்பகுதிகளை தன்வயப்படுத்திக்கொண்டிருந்த ஆங்கில ஆட்சியையே ஆட்டிவைத்த இந்தியர்களுக்கு இது அந்த சூழ்நிலையில் பெரிய காரியமல்ல. ஆயினும் மனிதாபிமானத்தின் அடிப்படையில் சகோதரர்களாக வாழலாம் என்று இந்நாட்டில் பன்நெடுங்காலங் களாக ஊறியுள்ள பண்பாடும் காந்திமகானுடைய கருணையும் நாட்டைத் துண்டாடி பாக்கிஸ்தான் ஆக்கிவிட்டது. பிரிந்த பிறகும் பாகிஸ்தானில் உள்ள முகலாயர்களின் தொல்லை நீடித்துக்கொண்டே இருக்கிறது. 1947–ல் பிரிந்தபோது பாக்கிஸ்தான் பகுதியில் தங்க தேர்ந்த சுமார் 1½ கோடி இந்துக் களை பாகிஸ்தான் ஆட்சி. கொலை, கொள்ளை, நாட்டை விட்டு வெளியேற்றல், பலாத்கார மதமாற்றம் என்பவற்றால் சிதைத்துவிட்டது. பாகிஸ்தானில் தற்போது இந்துக்கள் ஒரு சிறு தொகையினர்தாம் உள்ளனர். அன்று இந்தியாவில் தங்கிய சுமார் 3½ கோடி முஸ்லிம்கள் இன்று 12 கோடியாகப் பெருகி யுள்ளனர்.

பாகிஸ்தானில் தங்க நேர்ந்த இந்துக்களுக்கு முஸ்லிம் ஆட்சி புரிந்துள்ள கொடுமைகளை இந்திய ஆட்சி முஸ்லிம்களுக்குச் செய்திருந்தால் முஸ்லிம்களின் தொகை பெருகியா இருக்கும்? இப்போது பாக்கிஸ்தானில் இந்துக்களின் தொகை என்ன? இந்தியாவில் முஸ்லிம்களின் தொகை என்ன? பாக்கிஸ்தானிலுள்ள முஸ்லிம் ஆட்சி இந்துக்களுக்கு வழங்கியுள்ள பதவிகள் யாவை? இங்குள்ள முஸ்லிம்கள் அனுபவிக்காத பதவிகள் எவை? இவற்றை எல்லாம் நன்கு சீர்தூக்கிப் பார்த்தால்தான் இந்துக்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் இன்னதென நன்கு விளங்கும்.

இன்றைக்கும் பொறுப்புவாய்ந்த சில பணிகளிலிருக்கும் இஸ்லாம் மதத்தினருக்கு இந்திய ஆட்சியினிடத்தோ, இந்துக்களிடத்தோ நல்லெண்ணம் இருப்பதாகத் தோன்றவில்லை. உதாரணமாக, குடியரசு நன்னாளை திரு சையத் ஷாகாபுதீன் அவர்கள் துக்கநாளென்று கூறி இருக்க கூடாது. அதுவும் பாகிஸ்தான் படைகள் இந்திய எல்லை ஓரத்தில் குவிக்கப்பட்டிருந்தபோது! இந்தியாவில் பிறந்து, இந்தியாவில் வளர்ந்து, இந்தியாவின் உப்பைத் தின்ற உத்தம இஸ்லாமியனின் நாட்டுப் பற்றாயிது? யோசித்துப் பாருங்கள்!

17—1—1987 தேதியன்று "ஜனசந்தா" என்ற பத்திரிகை நிருபருக்கு அப்துல் புகாரி என்பவர் அளித்த பேட்டியில் "நாடு முழுமைக்கும் இன்னும் சுதந்திரம் கிடைக்காத காரணத்தால் எங்களுடைய குடியரசுநாள், மற்றும் சுதந்திரநாள் பற்றித் தனியாகத் தீர்மானிப்போம்," என்று கூறியுள்ளார்.

"பஞ்ச ஜன்ய" என்னும் டெல்லி வார ஏட்டுக்கு அளித்த பேட்டியில்,

"நாட்டைவிட இஸ்லாம் உயர்ந்தது. மற்றவையெல்லாம் அடுத்தபடிதான். 1947-ல் நாங்கள் விடுதலை அடைந்ததாகக் கருதவில்லை."

பீகார், உ. பி., டெல்லி, அஸாம், வங்காளம் ஆகிய மாநிலங்களில் முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வாழுகிறார்கள். இவர்களே தங்களுக்கெனத் தனித்தாயகம் கோரும் நாள் வரலாம்," என்றும் குறிப்பிட்டுள்ளார், (1-5-1987 விஜய பாரதம்).

முஸ்லிம் நாடுகளில் வாழும் சிறுபான்மையினரின் அவல நிலையைப்பற்றிக் கேள்வி கேட்டதற்கு "அதுகுறித்துத் தமக்கு

த்ராய்மதம்

எதுவும் தெரியாது," என்பது பதில்! மற்றும் "வருகிற 20, 25 ஆண்டுகளில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினர் ஆகிவிடுவார்கள். அன்று இந்த நாடும் முஸ்லிம் நாடு என்று ஆகும்," என்று கூறியுள்ளார். இவர் கூறியுள்ளதை இந்திய ஆட்சியும், இந்துக்களும் சிந்திக்கவேண்டும்.

1986 ஜனவரி 13ம் தேதி ஆஸ்திரேலிய வானொலிக்கு ஜனதா கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திரு. சையத் சகாபுதீன் அவர்கள் அளித்த பேட்டியில்,

"நாகர்களையும். சீக்கியர்களையும் கட்டுப்படுத்த இயலாமல் இந்திய ராணுவம் உள்ளது. எனவே முஸ்லிம் இளைஞர்கள் இந்துக்களுக்கு எதிராகத் தெருவில் இறங்கி நடவடிக்கைகளில் ஈடுபட்டால் இந்திய ராணுவத்தால் அவர்களை சந்திக்க இயலாது," என்று கூறியுள்ளார். ஆதாரம்: (1-5-1987, விஜய பாரதம்.)

மார்ச் 7-ம் தேதி 1987 பெங்களூரில் மூன்றாவது இஸ்லாமிய மாநாடு கூடிற்று; இதற்கு வெளிநாடுகளிலிருந்து ஆயிரக் கணக்கில் முஸ்லிம்கள் வந்து கலந்துகொண்டனர். மத்திய அரசாங்க மந்திரியார், திரு, Z. அன்சாரி அவர்கள் தாம் பேசிய தலைமை உரையில் சில விஷயங்களை விளக்கியுள்ளார், அவ்வுரைகளை இந்திய அரசும் இந்திய மக்களும் சிந்திக்க வேண்டும்.

திரு. Z. அன்சாரி அவர்கள் சுற்றுச் சூழல், மற்றும் வனத் துறையைக் கவனிக்கும் மத்திய மந்திரியாவார் மதச் சார்பற்ற ஆட்சியில் அங்கம் வகிக்க உறுதிமொழி எடுத்துக்கொண்டு பொறுப்பேற்றுள்ளவர். மதச்சார்புள்ள இஸ்லாமிய 3-வது மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்தியுள்ளார். இவர் இந்தியாவில் வாழும் முஸ்லிம் மக்கள் அனைவரின் உள்ளக் கிடக்கையைத் தாமே முழுமையாக ஏற்றுப் பேசியுள்ளார். இவருக்கு இந்நாட்டின்பேரில் இம்மியளவேனும் நல்லெண்ணம் இருக்குமானால், கீழ்க்காணும் விாக்கியங்கள் இவர் வாயில் வந்திருக்குமோ?

1. மத்திய அரசு உத்தேசித்துள்ள அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டத்தை மக்கள் ஏற்றுக்கொள்வார்களென நம்புவது தவறு.

கேள்வி: மத்திய அரசு உத்தேசித்துள்ளதையே எதிர்க்கக் கூடியவர் மத்திய அரசில் உறுதிமொழி எடுத்துக் கொண்டு பொறுப்பு வாய்ந்த அமைச்சர் பதவியில் இருக்கலாமா?

பதவியை ஏற்கும்போது எடுத்துக்கொள்ளும் உறுதிமொழி என்பது என்ன? இவர் மதச்சார்பற்ற ஆட்சியின் மந்திரியா அல்லது மதச்சார்புள்ள ஆட்சியின் அமைச்சரா? மதச்சார்பற்ற ஆட்சியின் அமைச்சராக இருக்கும் இவர் சாதி, மதம், இனம் என்பவற்றை நோக்காமல் நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு பொதுச் சட்டத்தை இயற்றினால் அதைத் தவறு என்று கூறுவது பொருந்துமா? மதச்சார்பற்ற ஆட்சியின் மந்திரி மதச்சார்புள்ள மாநாட்டிற்குத் தலைமை தாங்கலாமா? இது எப்படிப் பொருந்தும்? என்பதை அவரே சிந்திக்கவேண்டும்.

2. "இஸ்லாம் மதத்தின் ஷரீயத் சட்டத்துக்கு எதிரான எந்த ஒரு சட்டத்தையும் முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்."

கேள்வி; இவர் மாநாட்டுக்குமட்டும் தலைமை தாங்கிப் பேசவில்லை. முஸ்லிம் சமுதாயத்துக்கே தலைமை தாங்கிப் பேசியிருக்கிறார். இவர் ஷரீயத்தை வைத்துக்கொண்டு எச்சரிக்கை விடுவதைப்போல கிறிஸ்துவர்கள் பைபிளையும் இந்துக்கள் கீதையையும் வைத்துக்கொண்டு எச்சரிக்கை விட்டால் நாட்டின் நிலை என்ன ஆகும்? இந்தியா சுதந்திரம் பெற்றது இந்துக்களுக்கா அல்லது இவர்களுக்கா? இங்கு இவர் பேசிய வாய்வீச்சைப்போல ஒரு இந்து பாக்கிஸ்தானிலோ அல்லது சவூதி அரேபியா போன்ற முஸ்லிம் நாடுகளிலோ தன் மதத்தைப்பற்றிப் பேசினால் அவனுக்குப் பக்கபலமாக இவர் வாதாடுவாரா? இந்திய ஆட்சி இந்திய நாட்டுக்கு ஏற்ற சட்டத்தை இயற்றினால் அதற்கு முட்டுக்கட்டைப் போட இவர் யார்? இவர் இந்நாட்டுக் குடிமகன் என்பதற்கு என்ன அடையாளம்? நாட்டின் பொது சட்டமென்பது மனித இனத்துக்கா? அல்லது மதத்துக்கா? ஷரீயத் என்பது மனித இனத்தின் பொது தர்மமா? அல்லது தனி தர்மமா? பொது தர்மமென்றால் ஷரீயத் பொது சட்டத்துக்கு எப்படி மாறுபட்டிருக்கமுடியும்? முஸ்லிம்களுக்குமட்டும் பொது சட்டம் தீங்கிழைக்குமானால் மற்றை மதங்களுக்குமட்டும் தீங்கிழைக்காதா? மற்றைய மதத்தவர்கள் வரவேற்கும்போது இவர் பொது சட்டத்தை எதிர்பதற்கு என்ன காரணம்?

இவர் கருத்துக்கு இது இந்தியாவாகத் தோன்றுகிறதா? அல்லது அராபியாவாகத் தோன்றுகிறதா? தீமை நுழைந்திருப்பது மதத்திலா? மனத்திலா? ஷரீயத் சட்டத்துக்கு பொது சட்டம் எதிரானது என்னும் சந்தேகம் தோன்றுவதற்கு என்ன காரணம்? இது ஒரு புதிராக இருக்கிறது.

3. "தேசிய ஒருமைப்பாடு நீடிக்கவேண்டுமானால் பொதுவான சிவில் சட்டம் அவசியம் என்று சில வெறி சக்திகள் பிரசாரம் செய்கின்றன," என்பது இவருடைய மூன்றாவது திருவாய் மொழி!

கேள்வி: நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு ஜாதி, மதம், இனம் என்னும் பாகுபாடில்லாமல் மனிதாபிமானத்தோடு ஒரு பொது சட்டம் இயற்றப்படுமானால் அந்த சட்டத்தை அன்போடு வரவேற்று ஆதரிப்பதைவிட்டு அச்சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கருதக்கூடியவர்களை வெறியர்கள் என்றால் இவர் யார்? பல மொழி, பல இனம், பல மதத்தினரும் கலந்து வாழும் நாட்டில் நிறுவவேண்டிய சட்டம் எது? மதசார்பற்ற ஆட்சி என்பதின் பொருள் என்ன? இந்த நாட்டில் வாழக்கூடிய மக்கள் அனைவரும் பேதங்களைப் பாராட்டாமல் சகல உரிமையோடும் சமமாக வாழலாம் என்று கருதுவோர்கள் வெறியர்கள் என்றால், இவருடைய நெறி எது? இவர் கூறுகின்ற ஷரீயத்தில் பொதுமையைப்பற்றி போதிக்கவில்லை என்றால் அந்த சட்டம் இந்த நாட்டுக்குத் தேவைதானா? முதல் வாக்கியத்தில் "மத்திய அரசு பொது சட்டத்தை உத்தேசித்துள்ளது," என்று கூறியுள்ளார். அப்படியானால் மத்திய அரசில் பதவி வகிக்கும் இவர் ஒருவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் வெறியர்களா? பாராளுமன்றத்தில் பலரால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் உருப்படி இல்லாத பைத்தியங்களா? இவர் ஒருவருக்குமட்டும் வெறியேறி இருக்கிறது. மற்றைய அமைச்சர்கள் முதற்கொண்டு அனைவருக்கும் வெறியேறி இருப்பதாகக் கருதுவது சரிதானா என்பதையும் இவரே யோசிக்கட்டும்.

4. "ஒரே மாதிரி சிவில் சட்டம் வேண்டுமென்று கூறுவோர் முதலில் அரிஜனங்கள் மற்றும் இதரமதத்தினருடன் ஒரே இலையில் சாப்பிடத் தயாரா? (அமோகமான கைதட்டல்களும் ஆரவாரமும்) என்று சவால் விட்டிருக்கிறார்!

கேள்வி: இவர் விட்ட சவாலுக்கும் அங்கெழுந்த கரவொலிக்கும் என்ன பொருள்? இன்னும் இவர்கள் இந்துக்களை ஜாதி வெறியர்கள் என்றும், அறிவற்றவர்களென்றும் கருதுகின்றனர். இல்லை என்றால் அன்சாரி அவர்கள் சவாலையும் விட்டிருக்கமாட்டார். சபையில் இருந்தவர்கள் கைகளையும் தட்டி இருக்கமாட்டார்கள். மத்திய மந்திரியார் இவ்வளவு மட்டரகமாக இந்துக்களை வம்புக்கிழுப்பது வேதனைக்குரிய விஷயமாகும்.

பொது சட்டமென்பது அரிஜனங்களுக்கும் இதர மதத்தினருக்கும் சேர்த்துத்தான் செய்யப்பட்டது. சட்டம் செய்வது எதற்கு? அனைவரும் பொதுவாக நடந்துகொள்ள வேண்டுமென்று ஆணையிடுவது. இந்த ஆணையை மீறுபவர்களுக்கு தண்டனை அளிக்கத்தானே சட்டம்? சட்டம் தீட்டுவதற்கு முன்பே இவர் யாரை சவாலுக்குக் கூப்பிடுகிறார் என்பது புலனாகாமலில்லை. இது இந்திய சமூகத்தை இழிவாகக் கருதிப் பேசியிருக்கும் துடுக்குத்தன்மான சொல்லாகும். அவலை நினைத்துக்கொண்டு எவனோ ஒருவன் வெறும் உரலை இடித்தானாம். அதைப்போல அன்சாரியவர்கள் எதையோ நினைத்துக்கொண்டு யாரையோ சவாலுக்கு இழுக்கிறார்.

முதலில் இந்துக்களும் இதரர்களும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவதற்கு ஏற்ற பெரிய இலையைத் தைத்துத் தயார் செய்யவேண்டும். செய்துவிட்டு சாப்பாட்டிற்கு அழைத்தால் அப்போதுதான் உண்மை விளங்கும். இந்திய ஆட்சியும் இந்துக்களும்தான் பொது சட்டம் வேண்டுமென்று கூறுகின்றனர். அதை எதிர்க்கக்கூடிய உங்களிடத்தில்தான் பொதுமையான மனிதத்தன்மை உருவாகவில்லை. முதலில் உங்களையும், உங்கள் வாயையும் திருத்திக்கொள்ளுங்கள். இது இந்தியா. அரேபியா அல்ல. இது நீங்கள் வெள்ளையர்களைப்போல வந்த இடம் சொந்த இடமல்ல. இந்தியர்களையே சவாலுக்குக் கூப்பிடுவது வக்காலத்து வாங்குவதற்கொப்பாகும் என்பதை நினைவூட்ட வேண்டியுள்ளது. மற்றும் பாகிஸ்தானிலோ அல்ல இஸ்லாம் கொள்கையைப் பின்பற்றும் அரசுகளான சவூதி அரேபியா முதலான நாடுகளிலோ வாழ விரும்பும் இந்துக்களிருந்தால் அவர்களைப் பார்த்துக் கூறவேண்டிய வாக்கியம் இது. "இஸ்லாமியர்களாகிய நாங்கள் பேதமின்றி ஒரே கப்பரையில் சாப்பிடக்கூடியவர்கள். அதேபோல நீங்களும் கலந்து சாப்பிடுவதாக இருந்தால் இந்த நாட்டில் இருங்கள். அப்படி சாப்பிட விருப்பமில்லாதவர்கள் எங்கள் நாட்டைவிட்டு ஓடிவிடுங்கள்," என்று கூறி இருந்தால் ஒருவகையில் பொருந்தக் கூடும். இவர் இருப்பது எங்கே? யாருக்கு சவால் விடுகிறார்? இவற்றைச் சிறிதும் சிந்திக்காமல் இவருடைய வாய் விஷமொழிகளைச் சிந்தி இருக்கிறது. கண்ணியத்தோடு கூற வேண்டுமானால் இதற்கு அவர் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

5, "இஸ்லாமிய நெறிகள் அனைத்தும் மதசார்பின்மை கொண்டவை. எனவே மதசார்பில்லாமல் எப்படி நடந்து

கொள்ளவேண்டுமென்பதை இதர மதத்தினர் எமக்குச் சொல்லித்தர வேண்டியதில்லை.'' இது ஐந்தாவது அருளுரையாகும்.

கேள்வி : இஸ்லாம் நெறிகள் அனைத்தும் மதசார்பின்மை கொண்டவை என்றால், இஸ்லாம் நெறி எந்த மதத்தின் தொடர்பும் அறவே இல்லாத தனி மதமா? அல்லது மதமென்னும் கொள்கை அற்றதா? ஷரீயத் என்பது என்ன? இதர மதத்தினர்கள் இவருக்கு எதனைக் கற்பிக்க முயன்றார்கள்? மதசார்பற்ற ஆட்சியில் செய்யக்கூடிய சட்டம் பொதுவாக இருக்குமா? அல்லது மதசட்டமாக இருக்குமா? மக்களுக்குத் தீங்குண்டாகும் சட்டத்தை ஒரு பேரவை ஆமோதிக்குமா? மக்கள் மன்றமென்பது என்ன? மக்கள் மன்றம் சமூகத்துக்குத் தீங்கிழைக்கும் என்பது இவர்களுடைய அடிப்படைக் கருத்தைப் போலத் தெரிகிறது. இவர்களுக்கு யாரும் சொல்லித்தர செல்லவில்லை. இவர்களே சொல்லிக்கொள்ளுகிறார்.

6. "ஆயிரமாண்டுகளுக்கு மேலாகக் கூடிவாழ்ந்த பின்னரும் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒருவர் மதத்தை மற்றவர் மதிக்கத் தவறுவது வெட்கப்படக்கூடிய ஒன்றாகும்.'' இது ஆறாவதாகக்கூறிய அறிவுரையாகும்.

விடை : இஸ்லாமியர்கள் இந்துக்களுக்கு 1000 ஆண்டுகளுக்கு மேலாகக் காட்டியுள்ள அந்நியோன்னியமான அன்பை வாயால் வர்ணிக்க முடியாது. அவற்றைப் பொன்னெழுத்துக்களால்தான் பொறிக்கவேண்டும். ஆறாவது வாக்கியத்தில் இந்துக்களையே பச்சையாகக் குறிப்பிட்டு உபதேசம் செய்துஉள்ளார். "ஆயிரமாண்டுகளுக்கு மேலாகக் கூடிவாழ்ந்த பின்னரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒருவர் மதத்தை மற்றவர் மதிக்கத் தவறுவது வெட்கப்பட வேண்டிய ஒன்று'' என்பது இவருடைய உபதேசம். இந்தியர்கள் வரலாறு அறியாதவர்கள் அல்லர். இந்துமதம் நேற்று முந்தியநாள் தோன்றியதல்ல. இது காலாதீதமானது. இடங்கொடுத்தவர்களின் மடம்பிடிக்க இந்துமதம் முயன்றதில்லை. மதத்தின் பேரால் நாடு பிடிக்கும் நாட்டம் இந்துக்களுக்குக் கிடையாது. பாரத நாடு பழம்பெரும் நாடு. இது பாலைவனமல்ல. நந்தாவனம். இந்த நந்தாவனத்தை நந்தவைத்தவர்கள் இங்கு வந்தவர்கள்தாம். அன்ஸாரி அவர்கள் இவற்றை மறந்து பேசுகிறாரா? அல்லது மறைத்துப்

பேசுகிறாரா என்பதுதான் புரியவில்லை. சுமார் ஆயிரமாண்டு களாக இஸ்லாமியர்கள் இந்தியாவில் புகுந்து இந்துக்களுக்கும், இந்திய ஆலயங்களுக்கும் இழைத்த தீங்குகள் கொஞ்சமல்ல. இதற்கு அடையாளங்களாகப் பல ஆலயங்கள் இன்னும் சான்று களாக உள்ளன.

கண்ணபிரான் பிறந்த வடமதுரை (சோமநாதர் ஆலயம்) அயோத்தியில் இராமஜன்மபூமி, வாரணாசியில் (காசி) விஸ்வ நாதர் ஆலயம், உஜ்ஜைனியில் காளிகோயில், மற்றும் இராமேஸ்வரம், மதுரை, அளேபீடு முதலான புண்ணியத் தலங்களின் வரலாறுகள் இவர்கள் இந்தியர்களோடு வாழ்ந்த அந்யோந்நியத்தை அறிமுகப்படுத்துகின்றன. கஜனிமுகம்மதி லிருந்து ஔரங்கசீப் வரையிலும் திரு. அன்சாரி அவர்களின் மரபினர் புரிந்த அரிய செயல்களை ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனாலும் வர்ணிக்கமுடியாது. இஸ்லாமியர்கள் இந்துக் களின் ஆலயங்களை இடித்துக்கொண்டே வருவது. இந்துக்கள் மறுபடியும் அவற்றைப் படைத்துக்கொண்டே இருப்பது. ஆயிரமாண்டுகளுக்கு மேலாக இஸ்லாமியர்களும், இந்துக்களும் ஒருவரை ஒருவர் மறக்கமுடியாமல் மதித்து நடந்துகொண்டு வந்த மாண்புகள் இவை. இந்த வரலாற்றுப் பெருமையை இஸ்லாமிய மாநாட்டில் அன்ஸாரி அவர்கள் ஆனந்தப் பெருக்கினால் அளந்துவிட்டிருக்கிறார்!

கடந்த காலத்தைப்பற்றிக் கருதிப் பயனில்லை. அவற்றை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்துவிடலாம். இனியேனும் இந்து முஸ்லிம் என்னும் பேதமின்றி சகோதரர்களைப்போல வாழலாம். இதைப் பொதுவாக மனிதாபிமானத்தின்பேரில் கூறுகின்றேன் என்று ஓராயிரந்தடவை அண்ணல் காந்தியடிகள் மதவெறி பிடித்த ஜின்னாசாகேப் அவர்களின் காலில் விழாத குறையாய்—கைகளை எடுத்துக் கும்பிட்டார். மற்றும் தான் இராமனை தியானம் செய்கின்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் குர்ஆன், பைபிள் என்னுள் நூல்களின் பகுதிகளிலும் சிலவற்றை களங்கமற வாசிக்கவும் வழிவகுத்தார். மதங்களுக்குள் ஒருமைப்பாட்டை உண்டாக்க நடைமுறையில் கடைபிடித்துக் காட்ட முயன்ற மகான் காந்தியடிகள். இவரைப்போல ஒருவர் மதத்தை மற்றவர்களும் மதித்து நடக்கவேண்டுமென்று நடை முறையில் கடைபிடித்துக் காட்டிய கலீபாக்களையோ அல்லது மௌல்விகளையோ அன்சாரி அவர்கள் சான்று காட்டமுடியுமா? என்னும் ஒரு கேள்வி அவர் எதிரே நிற்கிறது. இந்துக்களைத் தவிர உலகத்தில் பிற மத நூல்களையும் பிரார்த்தனைக் கூட்டத்

திலும் சேர்த்துக்கொள்ளும் பெருந்தன்மை உடையவர்கள் உண்டா? யார் அந்தக் கலீபா? யார் அந்த மௌல்வி? அவர் பெயரென்ன? ஒருமைப்பாட்டுக்கு அயராது பாடுபட்ட அண்ணல் காந்தியடிகளின் வேண்டுகோளை அலட்சியப் படுத்திய ஜின்னாசாகேப் அவர்களால் இந்தியநாடு மதத்தின் பெயரால் துண்டிக்கப்பட்டது.

துரியோதனன் பேரவையில் பாஞ்சாலியை துச்சாதனன் படுத்திய கொடுமையைக் கண்ட தம்பிமார்கள் கொதித்து எழுந்தபோது குணக்குன்றாகிய தருமரின் மறைமொழிகள் தம்பியரின் கோபத்தைத் தணியச் செய்ததைப்போல அகிம்சா மூர்த்தியான காந்தியடிகளின் கருணைக்கு இந்திய மக்கள் கட்டுப்பட நேர்ந்தது. இல்லை என்றால் இந்தியாவில் பச்சைக் கொடி பறந்திருக்கமுடியுமா? இதை உணராத பாகிஸ்தான் சில சீக்கியர்களைச் சீண்டிவிட்டுக் கொண்டிருப்பதுடன் போருக்குப் போராயுதங்களையும் குவித்துக் கொண்டு பதம் பார்க்கிறது. முகலாயர்கள் நமக்குப் புரிந்துள்ள முழு நன்மைகளைச் சொல்லிமுடியாது. கிறிஸ்துவர்களைவிட இஸ்லாமியர்கள் புரிந்துள்ள ஈடு இணையற்ற செயல்களை மகாகவி சுப்ரமண்ய பாரதியார் கண்ணீரினால் ஒரு கவிதையை எழுதியுள்ளார். இது பிரிட்டீஷ் வேல்ஸ் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது அவரை இந்திய அன்னை அன்போடு வரவேற்பதைப் போன்று வரையப்பட்ட கவிதை :

"செல்வகேள் என்னரும் சேய்கள் நின்னுடை
முன்னோர் ஆட்சி தொடங்குறும் முன்னர்
நெஞ்செல்லாம் புண்ணாய் நின்றனன் ஆஹா!
ஆயிரம் வருடம் அன்பிலா அந்நியர்
ஆட்சியில் விளைந்த அல்லல்கள் எண்ணில
மற்றுமுன் நாட்டினர் வந்தன் பின்னர்
அகத்தினில் சில புண் ஆறுதல் எய்தின
ஆயினும் என்னை ஆயிரம் கோடி
தொல்லைகள் இன்னும் தொலைந்தன இல்லை
நல்குரவாதி நவமாம் தொல்லைகள்
ஆயிரம் என்னை அடைந்துள நும்மால்,"

இந்தக் கவிதையில் நாம் காணப்பெறுவது ஆங்கிலேயர்கள் புரிந்த தீமைகளைவிட முகலாயர்கள் புரிந்த கொடுமை அதிகம் என்பதைத் தெற்றென நன்கு விளக்குகிறது.

கிறிஸ்துவர்கள் தமது மதத்தை வளர்க்க மிகத் தந்திரமாக கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், பண உதவி, வேலை வாய்ப்பு, பிரசாரம் என்பவற்றைப் பயன்படுத்துகின்றனர். முகலாயர்கள் சமயம் பார்த்து கொலை, கொள்ளை, தீவைத்தல்; பயமுறுத்தல், கத்தி போன்ற வன்முறைச் செயற்பாடுகளைத் திடீரெனத் தொடங்குகின்றனர். மதத்தை கத்தியைக் காட்டி வளர்ப்பதா ? கருணையைக் காட்டி வளர்ப்பதா ? என்பதனை திரு அன்ஸாரி அவர்களைப் போன்றவர்களும் சிந்திக்க வேண்டும்.

முகலாயர்களும் ஆங்கிலேயர்களும் இந்தியாவின்பேரில் படை எடுப்பதற்குமுன் இந்நாட்டின் நிலை எப்படி இருந்தது ? இவர்கள் காலடி வைத்தபிறகு இதன் நிலை என்ன ஆயிற்று என்பதற்கு ஒரு உதாரணம்.

கி. பி. 629ல் சீனதேசத்து யுவான்சுவாங் என்னும் யாத்ரிகர் புத்தபிரான் அவதரித்த புண்ணிய பூமியைக் காணவந்தார். வரும்போது துருக்கி, டர்பன், பாரசீகம் முதலான நாடுகளையும் பார்த்துக்கொண்டு இந்தியாவுக்கு வந்தார், அப்போது பாடலி புரத்துக்கு அருகில் நாளந்தா என்னும் இடத்தில் சர்வகலா சாலை இருந்தது. அதில் இலக்கியம், சிற்பம், ஜோதிடம், ஆயுர்வேதம், தருக்கம், மீமாம்சை (வேதாகம புராணங்களில் உள்ள உண்மைகளை ஆராய்தல்) என்பவற்றைக் கற்பித்து வந்தனர். அவற்றை எல்லாம் பார்த்தபிறகு இந்தியா முழுவதும் யாத்திரை செய்துவிட்டு சீன தேசத்துக்குச் சென்றார். அங்கு சென்றபின் இந்தியாவைப்பற்றி அவர் எழுதியுள்ள குறிப்புகளாவன :

" சாதாரண ஜனங்கள் இயற்கையாகவே கவலையற்று வாழ்கின்றனர். அவர்கள் நேர்மையாகவும் யோக்கியர்களாகவும் நடந்துகொள்கின்றனர். பண விஷயத்தில் அவர்களிடத்தில் மோசமென்பதே இல்லை. நியாயம் வழங்குவதில் மிகவும் கவனித்துச் செய்கின்றனர். ஏமாற்றுவதோ வஞ்சிப்பதோ கிடையாது. சொன்ன சொல்லும் தவறுவதில்லை. அவர்களுடைய அரசியல், நடுநிலைமையும் நீதியும், அறமும் பிறழாததாக இருக்கிறது. அவர்கள் பிறருடன் பழகுவதில் நயமும் இனிமையும் உடையவர்களாக இருக்கின்றனர்; குற்றம் செய்வோரின் தொகை மிகவும் குறைவு. அரசாங்கம் காருண்ய முடையதாக இருக்கின்றமையால் நிருவாகம் விரிவாக இல்லை. மக்கள் செலுத்தும் வரி மிகவும் குறைவு. ஜனங்களை பலவந்தப் படுத்தி வேலை வாங்கும் வழக்கம் அங்கில்லை. எல்லோரும்

தங்களுடைய கடமைகளை ஒருவிதத் தயக்கமுமின்றி செய்து கொண்டு வாழ்கின்றனர். அரசனுக்குச் சொந்தமான நிலத்தில் பயிரிடுவோர் ஆறில் ஒரு பங்கை இயற்கையாகச் செலுத்துகின்றனர்.''—இவ்வாறு சீன நாட்டு யாத்திரிகர் எழுதியுள்ளார் (உலக சரித்திரம்-ஜவஹர்லால் நேரு, பக்கம் 436).

இது ஒன்றே போதிய சான்றாகும். புத்த மதமும் இந்து மதமும் சீனா, பர்மா, சிலோன், ஜப்பான், கொரியா போன்ற பல நாடுகளில் பண்டையில் பரவியுள்ளன. இன்றும் பல நாடுகள் இந்துமத தத்துவ - சாத்திரங்களைக் கற்க ஆசைப் படுகின்றன. இது அன்பு நெறியால் பரவியதேயன்றி அடக்கு முறையாலோ பசப்பு மொழிகளாலோ மதத்தைப் பரப்பவில்லை; மதத்தின் பெயரால் படை எடுக்கவில்லை. இதைப்பற்றி முன்னமும் நினைவூட்டியுள்ளேன். உண்மை இப்படியிருக்க சில பொறுப்பு வாய்ந்த பதவிகள் வகிக்கும்-முஸ்லிம்களும் செல்வாக்கு உள்ள முஸ்லிம் தலைவர்களும் மறுபடியும் ஜனாப் ஜின்னா சாகிப்பைப்போலவே குட்டையைக் குழப்ப முனைந்துள்ளனர். அந்தப் பகல் கனவு இனி பலிக்காது. முஸ்லிம்களுக்கு இந்தியாவில் எந்த விதமான கொடுமைகளையும் செய்யவில்லை. இந்துக்களும் முஸ்லிம்களை இம்சிக்கவேண்டுமென்று கருதவில்லை; இந்திய அரசு முஸ்லிம்களுக்கு எல்லாப் பதவிகளிலும் உரிமை அளித்துள்ளது. இன்றும் முஸ்லிம்கள் ஆளுநர், அமைச்சர், சட்டசபை உறுப்பினர்கள், லோகசபை உறுப்பினர் முதலான எல்லா இடங்களிலும் இருக்கின்றனர். இந்திய அரசு முஸ்லிம்களுக்கு அளித்திருக்கின்ற உரிமைகளைப்போல, ஆசியாவில் உள்ள முஸ்லிம் அரசுகளுக்குள் எந்த அரசு இவ்வளவு உரிமைகளை இந்திய மக்களுக்கு அளித்துள்ளது என்பதை அமைச்சர் அன்ஸாரி அவர்கள் நெஞ்சை சிறிது தொட்டுப்பார்க்க வேண்டும். எங்கே இருந்து கொண்டு யாரைச் சவாலுக்கு அழைக்கின்றோம் என்பதை சிந்தித்துப் பார்க்காமல் விஷம் கக்கக்கூடாது, நாவடக்கமில்லாமல் நஞ்சு கக்கினால் கொஞ்சநஞ்சமுள்ள நம்பிக்கையும் குலைந்துவிடும். இது வரையிலும் எல்லா மதத்தையும் இந்துக்கள் மதித்தே நடந்து வந்துள்ளனர். வரலாற்றை உணர்ந்த வல்லுநர்கள் யாருமே இதை மறுக்கமுடியாது.

டெல்லி பாஞ்ச ஜன்னிய வார ஏட்டின் நிருபர் "முஸ்லிம் நாடுகளில் வாழும் சிறுபான்மையினரின் அவல நிலையைப்பற்றி கேட்ட கேள்விக்கு திரு ஸைசயத் ஷகாபுதீன் அவர்கள் "அது குறித்து தமக்கு ஏதுவும் தெரியாது,'' என்று விடையளித்துள்

ளார். அந்த நாட்டில் தோன்றிய மதம் தெரிகிறது. ஆனால் அங்கு சிறுபான்மையினர்களை அவர்கள் நடத்தும் விதம் தெரிய வில்லையாம்! ஏன் தெரியவில்லை? அடுத்த கண்டங்களில் நடக்கின்ற விஷயங்கள் அரைமணி நேரத்துக்குள் அகில உலகத் துக்கே தெரிவிக்கக்கூடிய கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ள இந்த நாளில் ஆசியாவில் நடப்பது தமக்குத் தெரியாதென்று புளுகுகிறார்! கைப் புண்ணுக்குக் கண்ணாடித் தேவையில்லை என்பது ஒரு முதுமொழி. அதைப்போல உலகறிந்த உண் மையை ஒப்புக்கொள்ளமுடியாமல் தெரியாது என்ற புதிரில் புகுந்துகொண்டார் பாவம்! சில முஸ்லிம் தலைவர்கள் தற்போது ஆங்காங்கு சில விஷவிதைகளை விதைத்துக் கொண்டு வருகின்றனர். அவற்றை எல்லாம் இங்கு நான் விரிவாக விளக்கவேண்டியதில்லை. அவ்வப்போது நாட்டில் நடைபெறுகின்ற நன்மை தீமைகள் அனைத்தும் நாளேடுகள் மூலமாகவும் வார இதழ்களிலும் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றைக் கண்டும் கேட்டும் இந்திய அரசும் இந்திய மக்களும் மெத்தனமாக இருந்தால் வெகு விரைவில் தீங்கு நேர்ந்துவிடும் என்பதை இந்திய மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் உணர்ந்து அத்தீங்கு விளையாத வண்ணம் ஏற்ற வழிவகைகளை வகுக்க வேண்டும். அப்போதுதான் பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியும்.

இந்திய அரசும் இந்து மதமும்

ஒவ்வொரு நாட்டிற்கும் அதனதன் பாரம்பரியப் பண்புகள் உண்டு. அந்தந்த நாட்டைப் பரிபாலிக்கக் கூடியவர்கள் அதனதன் நற்பண்புகளைப் பாதுகாக்க வேண்டும் இது ஆட்சி நடத்தக்கூடியவர்களின் கடமையாகும். அதனால்தான் மன்னர் களுக்குக் காவலர்கள் என்னும் பெயர் உண்டாயிற்று. அறம் என்னும் பயிருக்கு வேலியைப் போன்றது அரசு.

நமது இந்திய அரசு தற்போது பயிரில்லா வேலியைப் போலாகிவிட்டது. காரணம் இந்திய அரசு தன்னை மதச்சார் பற்ற அரசென்று கூறுகிறது. மதம், தருமம், அறம், கொள்கை என்று மனிதப் பண்பாட்டைப் பலர் பலவாறாகக் கூறுகின்றனர். கிறிஸ்துவக் கொள்கை, கிறிஸ்துவ தருமம், கிறிஸ்தவ மதம் என்பதைப்போலவே இந்தியக் கொள்கை, இந்து தருமம், இந்து மதம் என்று ஒரே கருத்தில் கூறுகிறோம் இந்தியா தற்போது இந்து தருமத்தைக் காப்பாற்ற வேண்டியது தனது கடமை என்பதை மறந்து, மதசார்பற்ற ஆட்சி என்று கூறுகிறது. இதனால் இந்து தருமத்தை இந்திய ஆட்சியே புறக்கணித்து விட்டது.

அரசாங்கத்தின் ஆதரவை இழந்த கொள்கை வளர்ச்சி பெறுவது எளிதல்ல. அந்தக் கொள்கை எவ்வளவு சிறப்புடையதாய் இருந்தாலும் வளர்ச்சி அடையாது. சிறப்பற்ற சிறுகொள்கையாக இருந்தாலும் அதற்குப் படைபலம், பணபலம், பக்கபலம், அரசாங்க பலம் இருக்குமானால் அக்கொள்கை வெகுவிரைவில் மக்களை வலித்து தம் கொள்கைக்குள் வசப்படுத்திக் கொள்ளும். பூனைக் குட்டியாய் இருந்தாலும் பக்கபலமிருந்தால் அதைப் புலிக்குட்டி என்று புகழாரம் சூட்ட கைக் கூலிகள் நிறையக் கிடைப்பார்கள். அந்தக் கூலிப்படைகளை வைத்துக்கொண்டு தத்தம் காரியங்களை கனகச்சிதமாக நடத்த முடிகின்றது. பக்க பலமில்லையானால் நல்ல இயக்கமாக இருந்தாலும் அந்த இயக்கம் நலிந்துவிடுகிறது, அதைப்போலவே இன்று இந்து மதமும் இந்திய சமூகமும் ஆட்சியாளர்களின் ஆதரவு இன்மையினால் அழிவுப் பாதையில் போய்க்கொண்டிருக்கிறது. இஸ்லாம் மதத்துக்கு ஆதரவாக இன்று உலகத்தில் சுமார் 30 நாடுகளுக்கும்மேல் இருக்கின்றன. கிறிஸ்துவ மதத்துக்கு ஆதரவாகப் பல கண்டங்களும் நாடுகளும் வரிந்துகட்டிக்கொண்டு நிற்கின்றன. புத்த மதத்துக்குக்கூட ஜப்பான், கொரியா, திபேத், சிலோன் முதலான நாடுகளும் உண்டு. இன்று இந்து மதம் என்பதற்கு ஒரு நாடு இருக்கிறதென்றால் நேப்பாளம் என்னும் ஒரு சின்னஞ் சிறு நாடு. இந்தியாவில் தோன்றிச் சீரும் சிறப்புமாக வழிவழியாக வந்துகொண்டிருந்த இந்து மதத்தை இந்திய ஆட்சியே கைவிட்டு ஒதுங்கி நிற்கிறது. பெற்ற தாயே பிள்ளைகளைப் புறக்கணித்தால் அந்தத் தாயின் நிலை எப்படி இருக்குமோ அப்படிப்பட்ட நிலை இன்று இந்து மதத்துக்கும் இந்திய சமூகத்துக்கும் எய்தியுள்ளது.

2,000 ஆண்டுகளுக்கு உட்பட்ட கிறிஸ்துவ மதத்தின் ஜனத்தொகை இன்று உலகத்தில் சுமார் 200 கோடிக்கும் அதிகமாகப் பெருகியுள்ளது. 1500 ஆண்டுகள் இன்னும் நிறைவு பெறாத நபிகளாரின் கொள்கையைப் பின்பற்றக்கூடிய முகலாயர்கள் இன்று 100 கோடியைத் தாண்டியுள்ளனர். வரலாற்றுக்கெட்டாத காலந்தொட்டு புகழ்பெற்ற முனிவர்களால் உருவாகிய இந்து மதம் 60 கோடிக்கும் உள்ளாக அடங்கிக் கிடக்கிறது; இந்துமதம் இந்த இழிநிலையில் உள்ளதற்குக் காரணம் என்ன ? சுமார் ஆயிரம் ஆண்டுகளாக இந்துக்களுக்கும், இந்து மதத்துக்கும் எய்திய இன்னல்களை ஏட்டில் எழுதமுடியாது. அந்நிய நாட்டினரின் படை எடுப்புகளாலும், அவர்களின் பலாத்கார மதத் திணிப்புகளாலும், இந்து மதத்தை அழிப்பதற்காக வந்தவர்கள் கையாண்ட தந்திரங்களாலும், மதத்தின் பெயரால்

அவர்கள் நடத்திய கொலை, கொள்ளை, கோயில்களை இடித்தல் என்னும் இடிபாடுகளுக்குள் அகப்பட்டு இந்துக்களுக்கும் இந்து மதத்துக்கும் நேர்ந்த கொடுமைகள் பலவாகும்

இந்து மதம் சாதாரண மதமாக இருந்திருந்தால் இந்திய நாட்டுக்குள் வந்த இருமதங்களின் இடிபாட்டுக்குள் என்றோ இருக்கிற இடந்தெரியாமல் மறைந்துபோய் இருக்கும். இது தனி மனிதன் உருவாக்கிய மதமல்ல. தாய்நாட்டின் சமுதாய மதம் இதில் இல்லாத ஆன்மிகமோ, சொல்லாத நீதியோ உலகத்தில் எங்குமே இல்லை என்று கூறமுடியும் அந்த அடிநிலைக் கொள்கைதான் இந்து மதத்தை இதுநாள் வரையிலும் அடியோடு அழியவிடாமல் பாதுகாத்து வந்தது. ஆனால் இன்று இந்து மதத்துக்கும் இந்துக்களுக்கும் பேராபத்து நெருங்கிக்கொண்டிருக்கிறது. இது மற்றவர்களாலல்ல. நம்மால்தான். இது பெற்ற தாயைப் பிள்ளைகளே கொல்லத் துணிவதற்கு ஒப்பாகும். இன்று இந்திய ஆட்சியே இந்து தருமத்தையும் இந்து சமூகத்தையும் அழிக்கும் அவல நிலையை உருவாக்கிக்கொண்டு வருகிறது. இதற்கு மூலகாரணங்கள் பல உண்டு. அவற்றுள் முக்கியமாக முன்னணியில் நிற்பது " இந்திய ஆட்சி மதசார்பற்றஆட்சி " என்ற சொல் என்பதனை யாராலும் மறுக்க முடியாது.

ஜின்னா சாகிப் அவர்கள் மதத்தின் பெயரால் நாட்டை துண்டிக்காமல் இருந்திருந்தால் ஒரு சமயம் மதசார்பற்ற ஆட்சி என்னும் சொல் தேவையற்ற சொல்லாக இருந்தாலும் அதை சகித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் மதவெறியினரால் நாட்டைத் துண்டாடிவிட்டபிறகு இந்திய ஆட்சி மதசார்பற்ற ஆட்சி என்பது முற்றிலும் பயனற்றதாகிவிட்டது. மற்றும் இதனால் தீங்கும் உருவாகி வருகிறது. நாம் கொடுத்த பிச்சையில் வாழும் பாக்கிஸ்தான் மதசார்புள்ளதென்னும் பெயர் சூட்டிக் கொண்டுள்ளது. இன்னும் அண்டையிலுள்ள சிலோன், பர்மா முதலிய நாடுகளும் மதசார்புள்ளவையாகும். இந்த சிறு சிறு நாடுகளே மதசார்புடையனவாக இருக்கும்போது, இந்தியப் பெருநாடு மதசார்பற்றது என்னும் பெயரைப் புதைத்துக் கொண்டது பொருந்துமா ? அந்த சிறு நாடுகளுக்கு இருக்கின்ற திறமை நமக்கு இல்லையா ? நேற்று பிறந்த இஸ்லாம் கொள்கையும், முந்திய நாள் தோன்றிய கிறிஸ்துவக் கொள்கையும் ஒன்றுக்கொன்று போட்டிப் போட்டுக்கொண்டு வளர்கின்றன. இந்துமதம் இவ்விரு மதங்களைவிட எந்த வகையில் தாழ்ந்து விட்டது ? இந்து மதத்தை இந்திய ஆட்சியே எதற்காக ஒதுக்கி விட்டது ? இந்து மதம் அறிவியலுக்கு ஒத்துவரவில்லையா ?

மற்றைய மதங்கள் அறிவியல் துறைகளை அணைத்துக் கொண்டிருக்கின்றனவா ? அல்லது மத நம்பிக்கை உள்ளவர்கள் சமதருமக் கொள்கைக்குப் புறம்பானவர்களா? குறிப்பாக இந்து மதம் சமதருமக் கொள்கையைக் கூறவில்லையா ? மத நம்பிக்கையில் மிகுந்த பற்றுடையவர்களாக இருந்த காந்தியடிகள், விவேகானந்தர், பாரத ரத்னா டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களைப் போன்ற பெரியோர்கள் நம்மைவிட அறிவில் குறைந்தவர்களா ? எழுத்தறிவும் இறையுணர்வும் மனித சமூகத்துக்குக் கற்பித்த நமது முன்னோர்களைவிட நாம் பெரிய மேதாவிகளா ? அன்பு, அடக்கம், நேர்மை, தூய்மை, வாய்மை, கடமை, கண்ணியம் என்பவற்றை அகிலத்துக்குப் போதித்த மதப் பெரியோர்களைவிட நாம் எந்த வகையில் உயர்ந்தவர்கள் ? கீதையை விடவும், திருக்குறளைவிடவும் உயர்ந்த போதனை உலகத்தில் எங்கிருக்கிறது ? உபநிடதங்களுக்கு நிகரான நூல்கள் எவை ?

> "பன்னும் உபநிடதம் எங்கள் நூலே
> பார் மீதி லேதொரு நூல் இதுபோலே ?"

என்று பாரதியார் பாடியது தற்புகழ்ச்சியா ? உயர்ந்த மனிதப் பண்பாட்டை உலகத்துக்கே உபதேசித்த தாயாகியும், தாய் போன்றும் கருதக்கூடிய மதத்தில் தோன்றிய நாமே நம்முடைய மதத்தை நழுவவிடுவதா ? தன்னுயிரைப்போல மன்னுயிரையும் பாவிக்கவேண்டும் என்று கூறிய அருள்வாக்கு நமது முன்னோர்கள் வாக்கல்லவா ? தனக்கென வாழான் பிறர்க் குரியாளன் என்னும் தியாக மொழி யாருடையது ? "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்" என்னும் மறைமொழியைத் தோற்றுவித்த நாடு எது ? இம் மும்மொழிகளைவிட உயர்ந்த மொழிகளை எந்த நாட்டார் எந்தக் கொள்கையினர் எங்கே கூறியுள்ளனர் ? பன்னெடுங் காலங்களாக பாரத நாட்டு மக்கள் பல இன்னல்களுக்கும் இடையில் பாதுகாத்து வந்த பாரத தருமத்தை பாரத ஆட்சியே உதறித் தள்ளியது விந்தையிலும் விந்தையாகும்.

பொது உடைமை என்னும் போதை

நிறைந்த ஆயுளும், குறைவற்ற செல்வமும் உடையவர்களாக மக்கள் வாழவேண்டும் என்பதற்காகவே நமது நீதி நூல்கள் வகுக்கப்பெற்றன. மதமென்பது நீதி நூல்களை உருவாக்கிய கருவூலமாகும்.

உதாரணமாக,

"கல்லாது நிற்பலர் பிறரின்மையால் கல்வி முற்ற
வல்லாரு மில்லை அவைவல்லர் அல்லாரு மில்லை;
எல்லோரும் எல்லாப்பெரும் செல்வமும் வந்து எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ,"

என்று பாடியுள்ளார் கவிச்சக்ரவர்த்தி கம்பநாட்டாழ்வார். இதைவிட உயர்ந்த சமதருமக் கருத்தை உலகத்தில் எந்த மேதாவியாலும் உரைத்துவிட முடியாது. இந்தக் கம்பர் பெருமான் மத நம்பிக்கை அற்றவரல்லர். மதநம்பிக்கை உற்றவர். ஆகவே மதம் சமதருமத்தை நிராகரிக்கவில்லை. மதத்தோற்றமே மக்களின் நல்வாழ்வுக்காகத் தோன்றிற்று. சமதருமத்துக்கு அடிப்படை அறம் (ஈதல் அறம்) என்றால் இரக்கத்தினால் மனமுவந்து மற்றவர்களையும் தம்மைப்போன்ற வர்களே என்று கருதி வறியவர்களுக்கு உதவி திருவுடையோர் ஆக்கல், அறநெறி, சமதருமக் கொள்கை என்பதும் இதுவே யாகும்.

தானாக மனமுவந்து பிறருக்கு ஈவதற்குத் தருமம் என்று பெயர். அவனுடைய சொத்தை பலாத்காரமாகப் பிடுங்கு வதற்கு அதருமம் என்று கூறுவார்கள். ஆனால் ஒரு சில நூதனமான ஆட்சி உலகத்தில் தற்போது பரவிவருகிறது. குருடனைக் கமலக் கண்ணன் என்பதைப்போல தாமும், தமது முன்னோர்களும் சம்பாதித்த செல்வத்தைப் பலாத்காரமாகப் பிடுங்கிக்கொள்ளும் ஆட்சிகள் உருவாகியுள்ளன. இவற்றுக்குப் பெயர் பொது உடைமையாம்! உன் குடும்பத்துக்கு இவ்வளவு சொத்து போதுமானது; மற்றவற்றைக் கொடுத்துவிடு எனச் சட்டம் தீட்டுகிறது. பொருளுக்கு சொந்தக்காரன் அளிக்க விரும்பாதபோது அதைச் சட்டத்தால் பிடுங்க வழிவகுக்கு மானால் அது சமதரும ஆட்சியாகாது. அதற்கு தருமம் என்னும் பெயரைச் சூட்டக்கூடாது. கொடுப்பதுதான் தருமம். பிடுங்குவது தருமமல்ல. பலாத்காரம்.

மற்றொரு வகை

கூலிக்காரர்களுக்கு எஜமானனுடைய கஷ்ட நஷ்டங்களைப் பற்றிய கவலை இருப்பதில்லை. மக்கள் அனைவரும் கூலிக்காரர்களானால் நாட்டின் பொருளாதார முன்னேற் றத்தைப்பற்றிய சிந்தனை சீரழியும். இது ஒரு தனிமனித முயற்சிக்குத் தடைக்கல்லாகும். நாட்டுக்கு ஏற்படும் நஷ்டத் தையோ, கஷ்டத்தையோ கவனிக்காமல் ஆலைத் தொழிலாளி

நாளை எண்ணி சம்பளத்தைமட்டும் எதிர்ப்பார்ப்பதைப்போல பொது மக்களுக்கு சொந்த முயற்சி சோர்வெய்திவிடும். இந்த நஷ்டத்தை ஈடுசெய்ய அரசாங்கம் கடுமையான சட்டங்களைத் தீட்டி மக்களைக் கொடுமையாக நடத்தநேரும். அக் கொடுமையான செயற்பாடு சர்வாதிகாரமாக மாறிப் பொது உடைமை என்னும் சொல்லைப் பொசுக்கிவிடும்.

மக்களுடைய உள்ளக்கிடக்கையை இன்னதென்று சிந்தித்துப் பார்க்காமல் கண்மூடித்தனமாக அரசர்களும், பணக்காரர்களும் புரிந்த கொடுமைகளைக் கண்ட ஏழை மக்களின் உள்ளக் குமுறலினால் உருவானது பொதுவுடைமைக் கொள்கை என்னும் ஆட்சிமுறை. ஆனாலும் இக்கொள்கை நீடித்து நிற்கமுடியாது. இதற்கு இறைவனால் இயங்கக்கூடிய இயற்கையும் இடந்தரவில்லை. பொது உடைமைக் கொள்கை என்பது மணமில்லாத காகிதத்தால் செய்த மலருக்கொப்பாகும். இந்தக் கொள்கையைப் பின்பற்றுவதாகக் கூறுகின்ற ரஷ்யாவும், சீனாவும் தெய்வநம்பிக்கை என்னும் இரண்டையும் புறக்கணித்து விட்டது. காரணம், இதுவும் மொழிவெறி, மதவெறி, கட்சி வெறி, ஜாதிவெறியைப்போன்ற பொது உடைமையை நிலை பெறச் செய்யவேண்டுமென்னும் வெறியே ஆகும். நெறி வெறியாக மாறக்கூடாது. நெறி வெறியாக மாறினால் மதிமயங்கி விடும். அம் மயக்கத்தால் மேடுபள்ளம் தெரியாமல் போய்விடும். இதனால் பல கேடுகள் விளையும்.

மதுவை அருந்தியவர்களுக்கு மயக்கம் நீடிக்காது. அதைப் போலவே பொது உடைமை என்பதும் மயக்கந்தரும் மதுவுக்குச் சமமெனலாம். மதுவின் போதை ஒரு குறிப்பிட்ட நேரம்வரை தான் இருக்கும் பிறகு அந்த போதை படிப்படியாக மறைந்து விடும். ஏழை மக்களும் அறியாமை உடையவர்களும் உலகத்தில் இருக்கின்றவரையிலும் பொது உடைமையைப்பற்றிப் பேசினால் வாய் மணக்கும். கேட்கக் கேட்க ஏழை எளியவர்களின் செவிகளுக்கு இதமாக இருக்கும். மக்கள் கூட்டம் திரளும், கைதட்டல்களும் ஆரவாரங்களும் பிரமாதமாக இருக்கும். ஆனால் அவை எவ்வளவு நேரம் தெரியுமா? கூட்டம் கலையும் வரையில்தான். கூட்டம் கலைந்ததும் பொது உடைமையோ சமதருமமோ பறந்துவிடும். கூடியிருந்த கூட்டமும், தலைவரும் அவரவர்கள் குடியிருந்த வீட்டுக்குத்தான் போவார்கள். பொது உடைமை என்று கூறிக்கொண்டு கண்மூடித்தனமாகக் கண்ட வீட்டில் நுழையமாட்டார்கள். நுழையவும் முடியாது. இது உலகறிந்த உண்மை. ஏழைகள் உலகத்தில் இருக்கின்ற

வரையிலும் கம்யூனிசத்துக்கு மவுசு இருக்கலாம். ஆனால் பெற்றோர்களுக்குப் பிள்ளைகள்மீது உண்டாகும் அன்பைப் போல மற்றோர்மீது செல்லாது. இது மனித இனத்துக்கு மட்டு மல்ல ; நாய் நரிகளிடத்திலும் இந்தத் தாரதம்யங்கள் தோன்று கின்றன. ஆகவே சமதருமத்தைச் சட்டத்தின்மூலம் நிலை நாட்ட முடியுமென்பது பகற் கனவாகும். மனிதனுக்கு எண் ணற்ற கோரிக்கைகள் உண்டு. பால பருவம், வாலிப பருவம், வயோதிக பருவம் என்பவற்றுக்கு ஏற்ப குணமாறுபாடுகளும் அந்தந்தப் பருவங்களுக்கு ஏற்பக் கோரிக்கைகளும் விதவிதமாக இருக்கும். அவற்றை எல்லாம் நிறைவேற்ற எத்தகைய சட்டத் தாலும் முடியாது.

பொது உடைமை என்று கூறிக்கொள்ளும் கம்யூனிஸத்தைப் பரப்ப உழைத்தவர்களுள் அசகாயசூரர் ஸ்டாலின் என்பது உலகறிந்த உண்மை. அந்நிய நாடுகளுக்கும் தம் நாட்டில் நடக்கும் நடைமுறைகளை அறிய ஒட்டாமல் இரும்புத் திரை போட்டு மறைத்த எஃகுத்தலையர் ஸ்டாலின். அத்தகைய மாசூரர் இறந்தபிறகு அந்த நாடு அவருக்கு அளித்த கௌரவம் என்ன ? ஸ்டாலின் நடத்தியது பொது உடைமைக்கொள்கை அல்ல சர்வாதிகாரம் என்று இகழ்ந்து அவருடைய படங் களையும் தெருக்களில் போட்டு உடைத்தார்கள். சீன தேசத்து மாபெருந் தலைவர் என்றும் ஒப்புயர்வற்றவர் என்றும் மாசேதுங் உயிரோடு இருந்தவரையிலும் புகழ்ந்துகொண் டிருந்தனர். அவரைக் குற்றமற்ற குணசீலராகப் பாராட்டி பஞ்சசீலக் கொள்கையையும் பாரதம் ஒப்பந்தம் செய்து கொண்டது. நட்பை விரும்பிய நம் பேரிலேயே போரை உருவாக்கிய புல்லிய செயல்தான் பொதுவுடைமையின் இலக்கணமா ? யோசித்துப் பாருங்கள் ! பஞ்சசீலத்தைப் பொது உடைமை நாட்டினர் பஞ்சுபஞ்சாக்கிவிட்டனர் ! அந்தப் பொது உடைமைப்புலியான மாசேதுங்கும் மறைந்தபிறகு அவரைப்பற்றி சீன தேசத்தில் சிறப்பு விழாவா நடந்தது ? இல்லையே ! அந்தக் குடும்பத்தையே குறை கூறினார்கள்.

பொதுஉடைமைக் கொள்கையின் தலைவர்களின் தகுதியே தகிடு தத்தம் போட்டதென்றால் மக்களிடத்தில் மட்டும் பொது உடைமை என்பது ஓஹோ என்று உயர்ந்துவிடுமா? ஒருக்காலும் சட்டத்தின்மூலம் சமதருமத்தை சரிப்படுத்தமுடியாது. இந்த உண்மையைப் புரிந்துகொண்டு ரஷ்யநாடு இன்று படிப்படியாக இறங்கி ஜனநாயகத்தை நாடி வந்துகொண்டிருக்கிறது. சீன தேசத்திலும் பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிர்ப்புகள்

உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஜனநாயகக் கொள்கை இளைஞர்கள் உள்ளத்திலேயே எழுச்சி பெற்று வருவதாக வதந்திகள் உலாவுகின்றன. இத்தகைய உருப்படாத கொள்கையின்பேரில் வைத்த மோகத்தால் விளைந்த தீமைதான் ஜனநாயக சோஷலிசம் என்ற இரண்டுங்கெட்டான் பெயரும், மதசார்பற்ற ஆட்சி என்னும் சொல்லும் நமது சட்டத்துக்குள் இடம்பெற்று விட்டது.

நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்குள் ஒப்புயர்வற்றவர் நேருஜி என்பதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அத்தகைய தியாக சீலருடைய உள்ளம் "இந்திய ஆட்சி மதசார்பற்ற ஆட்சி" என்னும் சொல்லைச் சட்டத்தில் நுழைக்க ஏற்றுக்கொண்டதே அதுதான் இந்துக்களுக்கும் இந்துமதத்துக்கும் நேர்ந்த துர்அதிருஷ்டம் என்று கூறவேண்டும். மகாத்மா காந்தியடிகளினுடைய உள்ளத்தில் அசைக்கமுடியாத தெய்வபக்தி அமைந்திருந்தது. அப்படிப் பட்ட பெருமானை நெருங்கி இருந்த நேருஜி அவர்களுக்கு தெய்வ நம்பிக்கையும் மத நம்பிக்கையும் மறைந்தே போயிற்றே! இது வியப்புக்குரிய ஒன்றல்லவா! இதற்குக் காரணம் பொது உடைமை என்கின்ற போதைதான். அது இவருடைய சிந்தையைச் சிதைத்துவிட்டது. இல்லையானால் ஜனநாயகம் என்னும் சொல்லோடு சோஷலிசம் என்னும் சொல் ஒட்டிக் கொண்டிருக்கமுடியாது. இவருக்கு ஏற்றாற்போல திரு. கிருஷ்ணமேனன் அவர்களும் பக்கபலமாக இருந்தார்; அவரும் பொதுவுடைமை என்னும் மாயையில் மயங்கிய ஒருவர். இல்லையானால் மதச்சார்பற்ற ஆட்சி என்ற சொல்லும், சோஷலிச ஜனநாயக ஆட்சி என்னும் சொல்லும் வந்திருக்காது. ஆனைக்கும் அடிசறுக்கும் என்பது ஒரு பழமொழி. அதேபோல நேர்மையுள்ளம் படைத்த நேருஜி அவர்களும் நெருடிவிட்டார். மற்றும் நேருஜியவர்கள் தம் கருத்தில் எந்தக் கொள்கையைச் சிறந்த கொள்கை என்று கருதினாரோ அதைத்தவிர மற்றைய கொள்கைகளை அவருள்ளம் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. தாம் இதுதான் சிறந்த நெறி என்று எதையெதைத் தீர்மானித்தாரோ அவற்றை எல்லாம் தனது செல்வாக்கின் பலத்தால் சட்டத்துக்குள் திணித்துவிட்டார். சிலருக்கு இந்தப் போக்கு தவறு என்று தெரிந்திருந்தும் அதை எதிர்த்து அவருடன் மோதிப் பயனில்லை என்று உணர்ந்து ஒதுங்கிவிட்டனர்.

சிலருக்கு கட்சி என்னும் கட்டுப்பாட்டில் ஒத்தூதவும் நேர்ந்துவிட்டது. அவருக்குப் பிறகு வந்தவர்களும் அவர்

செய்த பிழைகளையே பின்பற்ற நேர்ந்துவிட்டது. அதை ஒரு கௌரவப் பிரச்சினையாகக் கருதிப் பொருந்தாத விளக்கங்களைக் கூறிக்கொண்டு அதே சட்டத்தை உடும்புப்பிடியாகப் பிடித்துக்கொண்டு நாடு முன்னேறமுடியாமல் ஆமை வேகத்தில் அசைகிறது. இதைச் சான்றாக வைத்துக்கொண்டு நேருஜி அவர்களை மட்டமாக நினைப்பதோ அவருக்கு முட்டாள் பட்டம் கட்டுவதோ பொருந்தாது. நாட்டு விடுதலைக்காக அவர் புரிந்துள்ள தியாகத்தையும் அஞ்சா தீரச்செயலையும் நாடோ, நாமோ என்றென்றும் மறக்க முடியாது.

நாடு முன்னேற்றமடைந்து மக்கள் நலம்பெறவேண்டுமானால் இந்திந்த விதமாக சட்டமியற்றினால்தான் முடியுமென்று கருதினார். அதற்கு ஏற்ப சட்டங்களைப்பல நிபுணர்களைக் கொண்டு, முந்திய முறைகளையும் பரிசீலித்து, அவற்றுள் சில புதிய கருத்துக்களையும் புகுத்தி உருவாக்கினார். ஆயினும் இதில் குறைபாடுகள் இல்லை என்று முடிவு கட்டமுடியாது. குறைபாடுகள் இன்னின்னவை என்று தெரிந்த பிறகும் அக்குறைகளைப் போக்காமல் அக்குறைகளை மூடி மறைக்க சப்பைக் கட்டுகளைக் கட்டி மழுப்பிக்கொண்டு வருவோமானால் நாடு நலிவடைந்து சின்னாபின்னமாகிவிடும். அந்த அபாயகட்டம் நெருங்குவதற்கு முன்னமே நம்மை நாமே திருத்திக் கொள்ளவேண்டும். மெத்தனப் போக்கு நமது மரணத்துக்கு நாமே மாட்டிக்கொள்ளும் தூக்குக் கயிறாகிவிடும். இதை இன்றைய ஆட்சியும் இந்திய மக்களும் முக்கியமாக சிந்திக்கவேண்டிய நிலையிலுள்ளோம்.

அபாயத்தின் அறிகுறி

இந்திய அரசு மக்கட்தொகையைக் குறைக்கவேண்டுமென்று விறுவிறுப்பாகச் செயலில் இறங்கியுள்ளது. மக்கள் பெருக்கம் அதிகரித்தால் நாட்டின் முன்னேற்றத்துக்கு இடையூறு விளையக்கூடுமென்று மத்திய அரசு அஞ்சி, குடும்பக் கட்டுப்பாட்டைப் பின்பற்றவேண்டுமென்பதை நாம் குறைகூற முடியாது. இதற்கு ஜாதி, மதம், இனம் என்னும் பாகுபாடின்றி இந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும். இது இந்நாட்டின் நலனைக்கோரும் ஒவ்வொருவரின் கடமையும் ஆகும். இத்தக் கடமை உணர்வைக் கருத்தில் கொள்ளாதவர்கள், இந்நாட்டின் நலன்பற்றி அக்கறை இல்லாதவர்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அரசாங்கத்தின் அலறலை அலட்சியப்படுத்தக் கூடியவர்கள் இருப்பார்களாயின் அவர்கள் அந்நிய நாட்டினரின் கைக்கூலிகளாக இருக்க

வேண்டும் அல்லது பகைவர்களின் பங்காளிகளாக இருக்கக் கூடும். மற்றவர்கள் இந்திய அரசின் வேண்டுகோளைச் சிந்திக்காமல் இருக்கமுடியாது. நாடு நலிவுற்றால் அந்நலிவு நம்மையும் சாரும் என்னும் எண்ணம் இல்லாதவர்கள்தாம் இந்த உண்மை நிலையை எதிர்க்கமுடியும். மற்றவர்கள் மறுக்க முடியாது. ஆனால் இந்திய அரசின் ஓலம் இஸ்லாமியர்களின் காதுகளுக்கும், கிறிஸ்தவர்களின் காதுகளுக்கும் ஏறவே இல்லை.

இவர்களுக்கு இந்திய நாட்டில் இந்துக்களோடு உடன்பிறந்தவர்களைப்போல ஒத்துவாழும் எண்ணமிருந்தால் நாட்டின் நன்மையைக் கருதி குடும்பக் கட்டுப்பாட்டுக்கு இணங்கி இருப்பார்கள். இவ்விரு மதங்களும் இந்திய நாட்டுக்கு வந்த மதங்கள். மற்றும் இவற்றின் வரலாற்றையும் இவை தத்தம் மதத்தை வளர்க்கும் நெறி முறைகளையும் முன்பும் சிறிது நினை ஊட்டியுள்ளேன். அந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது இந்நாட்டை மறுபடியும் ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்னும் பகற்கனவு காண்பதாகவே தோன்றுகிறது.

இவர்கள் மதத்தில் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றிக் கூறவில்லையாம்! ஆகவே குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்வது மகாபாவமாம். மற்றும் இவர்கள் மதத்தில் ஒருவன் பல பெண்களையும் மணக்க உரிமை இருக்கிறதாம். ஆகவே ஒருவன் நான்கு பெண்களையும் மணந்து கொள்ளலாம்; 40 பிள்ளைகளையும் பெற்றுக்கொள்ளலாம். நாடு நாசமானாலும் இவர்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. அப்படியானால் இஸ்லாமிய மதத்தினர் தங்கள் மதத்தில் கூறப்பட்ட கொள்கையிலிருந்து இம்மியும் பிசகாமல் நடப்பவர்கள் என ஆகிறது.

இது உண்மையாயின் சாந்தி மதமென்று கூறிக்கொள்ளும் இஸ்லாமியர்கள் ஆட்சி புரியும் நாடுகளுக்குள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வதேன்? சாந்தி என்ன ஆயிற்று? மற்றும் இவர்களின் உத்தமமான ஷரீயத்தில் அநியாயமாக அந்நிய நாட்டின்பேரில் படை எடுத்து அவற்றை ஆக்கிரமிக்கவேண்டு மென்று கூறியுள்ளதா? அந்நிய நாட்டு மக்களை அலக்கழிக்க வேண்டுமென்று கூறியுள்ளதா? அவ்வாறு கூறியிருப்பின் அது பலாத்காரச் செயல் அல்லவா? இஸ்லாம் மதம் பலாத்காரச் செய்கையை ஏற்றுக்கொள்ளுமானால், இந்துமதம் பலாத்காரத்தைத் தீய செயல்களாகக் கருதுகிறது. ஆகவே பலாத்காரம் தேவையற்றதாகும். அரேபியவளைகுடா நாடுகளில்

இஸ்லாமியர்கள் இந்துமதத்தைப் புறக்கணிக்கின்றனர். அப்படி இருந்தும் இந்துக்கள் இஸ்லாம் மதத்தைப் புறக்கணிக்கவில்லை. முஸ்லிம்களைப் போலவே இந்துக்களும் இஸ்லாம் மதத்தைப் புறக்கணிப்பதில் என்ன தவறு? தவறில்லை. ஆயினும் இந்திய ஆட்சி அவர்களுக்குச் சகிப்புத் தன்மையைக் காட்டியுள்ளது. இத்தகைய ஆட்சியின் வேண்டுகோளை அலட்சியப்படுத்தும் மதம் இந்நாட்டில் இருந்தாலென்ன; இல்லாவிட்டாலென்ன?

இந்து மதத்திலும் மக்கள் செல்வந்தான் மற்ற மதங்களைக் காட்டிலும் உயர்ந்ததாகக் கூறப்படுகிறது மக்களைப் பெற்றவள் மகராசி என்னும் முதுமொழியும் இங்கு உண்டு. திருமணமாகும் தம்பதிகளை வாழ்த்தும்போது "பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழுங்கள்" என்று ஆசீர்வதிக்கும் மரபை உடையது இந்து மதம். பதினாறு என்பவை பதினாறு செல்வங்கள் என்று சில தத்துவங்களைக் கூறுவர். ஆயினும் பிள்ளைகளைப் பெறாதவர்களுக்கு சொர்க்கத்தில் இடமில்லை என்று கூறுவது இந்து மதத்தின் சித்தாந்தமாகும். குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி இந்து மதத்திலும் கூறவில்லை என்பதும் உண்மையாகும். இவ்வாறிருந்தும் குடும்பக் கட்டுப்பாட்டை இந்துக்கள் ஏற்றுக் கொள்வதைப்போல இஸ்லாமியர்களும் கிறிஸ்துவர்களும் ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது? நாட்டின் நலனுக்குத் துரோகம் செய்யக்கூடியவர்கள் மோட்சத்துக்குப் போவார்கள். இந்துக்கள் மட்டும் நரகத்துக்குப் போவார்களா? இஸ்லாமியர்களும், கிறிஸ்துவர்களும் மறைமுகமாக மதப்படை திரட்டுகிறார்கள்.

இங்கு வாழும் கிறிஸ்துவர்களும் முஸ்லிம்களும் ஒரு காலத்தில் இந்துக்களின் மரபைச் சேர்ந்தவர்களே; இதையும் மறந்து இவர்கள் நாட்டுப்பற்று அற்றவர்களாக மாறியதற்கு என்ன காரணம்? மத மாற்றங்களே இதற்கு மூல காரணமாக இருக்கிறது. இதை இந்திய அரசும், அறிந்தும் அறியாததைப்போல நடந்து கொள்வது பேராபத்தாக முடியும்.

பலதாரத் திருமணம்

முஸ்லிம்களுக்கு அவர்களுடைய மதத்தில் நான்கு பெண்களை மணந்துகொள்ளவும் உரிமை அளித்துள்ளதாம். ஆகவே ஒரு முஸ்லிம் நான்கு பெண்களை மணந்துகொண்டால் குற்றமில்லை; அவர்களுக்குத் தண்டனைத் தரக்கூடாது. ஆனால் ஒரு இந்து ஒரு மனைவி இருக்கும்போது மற்றொரு பெண்ணை மணந்துகொண்டால் பெருங்குற்றம். அவன்

நம்பி எண்ணவேண்டும். இந்து மதத்தில்மட்டும் பலதாரமணம் இல்லையா ? இந்துக்கள் வழிபடும் கடவுளர்களுக்கே இரண்டு மனைவியர்கள் என்று கற்பிக்கப்பெற்றுள்ளது. சிவ பெருமானுக்கு கங்கை, பார்வதி ; முருகனுக்கு வள்ளி தெய்வ யானை, நாராயணனுக்கு ஸ்ரீதேவி – பூதேவி, பிரம்மாவுக்கு சரஸ்வதி–சாவித்திரி ; விநாயகருக்கு. சித்தி-புத்தி ; கண்ணபிரா னுக்கு எண்மர், மற்றும் இந்திய மன்னர்களுக்கு எண்ணற்ற வர்கள். இதுபோன்ற சான்றுகள் இந்து மதத்தில் பலவற்றைக் கூறமுடியும்.

உச்சநீதி மன்றம் மட்டுமல்ல; உலக நீதிமன்றமாய் இருந் தாலும் இந்துக்கள் நாட்டின் நலனைக் கருதாமல் எதிர்த் திருந்தால், பலதார மணம் செய்துகொள்ள உரிமை உண்டு என்னும் வழக்கில் வெற்றிபெற்றிருக்க முடியும். ஏன் எதிர்க்க வில்லை ? நாடு நமது; இதில் நல்லாட்சி மலரவேண்டும் என்று நாட்டின்பேரில் வைத்த நல்லெண்ணத்தால் இந்துக்கள் எதிர்ப்பைக் காட்டவில்லை. பிற மதத்தினர் குடும்பக் கட்டுப் பாட்டுக்கு இணங்காமல் மக்கட்தொகையைப் பெருக்கிக் கொண்டு வரும்போது, இந்துக்கள்மட்டும் இணங்கிவிட்டது ஒரு பெருந் தவறாகும். இது தற்போது ஒரு பேராபத்தை உருவாக்கிக் கொண்டு வருகிறது. சுதந்திர பாரதத்தில் இன்று வெகு வேகமாக முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும் மக்கட்தொகையைப் பெருக்கிக்கொண்டு வருகின்றனர். ஆனால் இந்திய நாட்டில் இந்துக்களுடைய தொகை நாளுக்குநாள் குறைந்து கொண்டு வருகிறது.

அறுவை சிகிச்சை

இந்நாட்டில் மக்கட்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும்பணி தீவிரமாக்கப்பட்டுள்ளது. நாட்டுப்புறங்களில் ஆசிரியர்கள், மருத்துவர்கள், மருத்துவமனையில் பணிபுரிவோர்கள், கிராமாதி காரிகள், வரி வசூலிப்பவர்கள், எழுத்தாளர்கள், அவர்களுக்கு மேலாளர்கள், ஆணையாளர்கள், கோட்டாட்சித் தலைவர்கள் முதற்கொண்டு நாட்டாட்சித் தலைவர்கள்வரையிலும் அவர்கள் தகுதிக்கு ஏற்றவாறு அறுவை சிகிச்சைக்கு ஆள் திரட்ட வேண்டும். இந்த நிபந்தனைகள் மூலைமுடுக்குகளிலெல்லாம் தொழில்படுகின்றன. இதில் ஈடுபடத் தவறியவர்களுக்கு இடமாற்றம். தொழில்மாற்றம், வேலை நீக்கம் முதலானவை களும் நேரும். இந்தப் பணியில் இன்று தமிழகம் முன்னணியில் நிற்கிறது. அறுவைசிகிச்சையில் பரிசுபெற்ற பெருமையைத்

தமிழ்நாடு பெற்றுள்ளது. இதுநாள் வரையிலும் "நாமிருவர்-நமக்கிருவர்" என்னும் மந்திரம் ஓதப்பெற்றது. இப்போது "நாமிருவர்-நமக்கொருவர்" என்றும், "ஒளிபெற்ற குடும்பத்துக்கு ஒரு பிள்ளை போதும்' என்னும் மந்திரமும் ஜெபிக்கப்படுகிறது.

இன்னும் சில நாட்கள் சென்றால் "பெருமை வாய்ந்த குடும்பத்துக்குப் பிள்ளைகள் தேவையில்லை." "பிள்ளைகளைப் பெற்றோர் பெருநரகெய்துவர்" என்பன போன்ற அமுத மொழிகளை ஆங்காங்கு எழுதுவார்கள் போலும்! இன்னும் ஒரு வதந்தி உலாவிக்கொண்டிருக்கிறது. அதாவது திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் "நாங்கள் பிள்ளை பெற்றுக்கொள்ளமாட்டோம்" என்று ஆரம்பத்திலேயே அறுவை சிகிச்சை செய்து கொண்டால் அவர்களின் வயோதிக காலத்துக்குப் பணப்பத்திரம் வழங்கப் போவதாகவும் கூறுகின்றனர்.

இந்துக்களுக்குமட்டும் இந்த அழிவு நிலை ஏற்பட்டால், இந்துமதம் இருக்குமா? இந்திய ஆட்சி நிலைக்குமா? என்பதை யோசிக்கவேண்டியதே. இதே போக்கில் ஆட்சி இனியும் போகுமானால் இந்தியா, தான் பெற்ற சுதந்திரத்தை வெகு சீக்கிரம் இழந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

உதாரணமாக

இந்திய நாடு மத வெறியினால் 1947-ல் துண்டாடப் பட்டது. நாட்டைத் துண்டிப்பதற்கு முன்பு மக்கட்தொகை 43,75,07,000 இருந்தது.

நாடு பிரிந்ததின் பயனால் 7,56,87,000 மக்கள் பாக்கிஸ்தான் பகுதியினர் ஆய்விட்டனர்.

பிரிந்தவர்களின் தொகை நீங்கலாக இந்தியாவின் மக்கட் தொகை 36,18,20,000 ஆகும். நாடு பிரிந்தபிறகு இந்தியப் பகுதியில் இருக்க நேர்ந்த முஸ்லிம்களின் தொகை சுமார் 3 கோடி 50 இலட்சமாகும். கிறிஸ்துவ மக்கட்தொகை சுமார் 82 இலட்சம் என்று கலைக் களஞ்சியம் கூறுகிறது.

பாக்கிஸ்தான் பகுதியில் இருக்க நேர்ந்த இந்துக்களின் தொகை சுமார் 1 கோடி 50 இலட்சமாகும்.

தற்போது இந்தியாவில் வாழும் கிறிஸ்துவர்களின் தொகை ஏறத்தாழ 3 கோடியை எட்டி உள்ளது என்று கூறுகின்றனர்.

பாரதத்தில் தற்போது முஸ்லிம் மக்களின்தொகை 12 கோடிக்கும் அதிகமாக விஞ்சி இருக்கிறதாம். (ஆதாரம்: தினந்தந்தி 8—11—1985, முஸ்லிம் தலைவர் இப்ராஹிம் சுலைமான் சேட்) ஒரு முஸ்லிம் மாதின் ஜீவனாம்ச விஷயத்தில் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை முஸ்லிம்கள் எதிர்த்துப் பூசலை மூட்டியபோது சேட் இந்திய அரசுக்கு விடுத்த எச்சரிக்கை:

நாடு பிரிந்தபோது பாரதத்தில் இருந்த மக்கட்தொகையில் முஸ்லிம்களையும் கிறிஸ்துவர்களையும் நீங்கலாக இந்துக்களின் தொகை 31 கோடி 86இலட்சத்து 20 ஆயிரமாகும். சற்றேறக் குறைய 32 கோடி எனலாம்.

முஸ்லிம்களினுடைய தொகையும், கிறிஸ்துவர்களின் தொகையும் பெருகியுள்ளதைப்போல சராசரி இந்துக்களின் தொகையும் பெருகியிருந்தால் இந்தியாவில் இன்று இந்துக்கள் மட்டும் சுமார் 110 கோடியே 41 லட்சத்து 70 ஆயிரமிருக்க வேண்டும். இத்துடன் 12 கோடி முஸ்லிம்களையும், 3 கோடி கிறிஸ்துவர்களையும் சேர்த்தால் 126 கோடி மக்கள் இந்தியாவில் வாழவேண்டும். ஆனால் தற்போது இந்திய நாட்டின் மொத்த ஜனத்தொகை ஏறத்தாழ 75 கோடி என்கின்றனர். கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள் என்னும் இருமதத்தாரின் தொகை 15 கோடியை நீக்கிவிட்டால் இந்துக்களின் தொகை 60 கோடியாகும். இந்துக்கள் இருக்கவேண்டிய 111 கோடியில் ஐம்பத்தைந்து போனால் மற்ற 56 கோடி இந்துக்களைமட்டும் இந்திய அரசு அறுவை சிகிச்சையின் மூலம் பிறக்கவொட்டாமல் அழித்துவிட்டது அல்லது தடை செய்துவிட்டது.

மற்றும் ஒரு விஷயம் என்னவென்றால், சுகாதாரத் துறை துணை மந்திரி திருமதி குமாரி சரோஜ் காப்ரடே அவர்கள் ஏப்ரல் 9, 1987-ல் புதுடில்லியில் வெளியிட்ட அறிக்கையில்,

"மக்கள் தொகை பெருக்கம் கணிசமான அளவு குறைந்து விட்டது. 1982 ஆண்டுமுதல் குடும்பநலத் திட்டம் நல்ல பலனளித்துள்ளது. குழந்தைகள் பெறும் தகுதியுள்ள தம்பதிகள் 35 சதம்பேர், குடும்பநல திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனால் 1986 மார்ச்சு மாதம் 31 ஆம் தேதிவரை கடந்த 5 ஆண்டில் 7 கோடியே 50 இலட்சம் குழந்தைகள் பிறக்கவொட்டாமல் தடுக்கப்பட்டுவிட்டது," என்று தெரிவித்து உள்ளார். ஆதாரம் தினச்சுடர் 9—4—1984.

இந்த அறிக்கையின்மூலம் நமக்குத் தோன்றுவது குடும்பநல திட்டமென்னும் பெயரால் இந்து சமூகத்தின் கருவழிப்புத் திருப்பணி வெகு தீவிரமாக முடுக்கிவிடப்பட்டுள்ளது என்பது வெளிப்படை. இது ஒரு வகையில் நம்மையே நாம் அழித்துக் கொள்ளும் நாச வேலையாகவே தோன்றுகிறது. சுமார் 5 ஆண்டுகளில் ஏழரை கோடி இந்து சமூகம் அழிக்கப்பட்ட தென்றால் இன்னும் 10 ஆண்டுகளில் 15 கோடி நாசமாகும். இன்று உயிரோடு இருப்பவர்களிலும் பலகோடி இந்துக்கள் பரமபதத்துக்கு ஏகுவார்கள். முஸ்லிம்களின் தொகை இன்னும் 10 ஆண்டுகளுக்குள் மிஞ்சிவிடும். பிறகு திரு சையத் ஷகாபு தின் அவர்கள் திருவாய் மலர்ந்துள்ளதுபோல் இந்துஸ்தானம் இஸ்லாம் ஸ்தானமாக மாறத் தடை இருக்காது. சில மலைப் பிரதேசங்களை கிறிஸ்தவ ஸ்தானங்கள் என்னும் பெயர்களால் அவர்களும் கிள்ளிக்கொள்வார்கள். அதன்பிறகு இந்துமதம் என்பதும் இந்துஸ்தான் என்பதும் இருக்கிற இடந்தெரியாமல் மறைந்துவிடும். கிரேக்க நாகரிகமும், எகிப்தின் நாகரிகமும் கிறிஸ்துவர்களாலும், முகலாயர்களாலும் எந்த நிலையை அடைந்துவிட்டதோ அந்த நிலையை இந்து மதமும் இதன் உயர்ந்த பண்பாடும் அடைய நேரும் என்பதை உறுதியாகக் கூறலாம். இந்த இரு மதத்தினரும் இந்து மதத்தின் இணையற்ற ஆன்மீகப் பண்பாட்டை அழிப்பதற்குச் சுமார் ஆயிரம் ஆண்டு களாக அரும்பாடு பட்டுக்கொண்டிருந்தனர். இன்னும் இந்த முயற்சிகளை அவர்கள் கைவிடவில்லை. எனினும் இந்து மதத் தையும் இந்திய சமூகத்தையும் அவர்களால் அழிக்க முடியாது. ஆனால் அவர்கள் கனவு நனவாக நம்மை நாமே நாசமாக்கிக் கொள்ளத் தலைப்பட்டால் காரியம் மிக இலேசாக முடிந்துவிடும். இந்த புனித கைங்கரியத்தைத்தான் இன்று இந்திய அரசு ஏற்று நடத்தி வருகிறது.

இப்படிப்பட்ட பரிதாபத்துக்குரிய எதிர்காலத்தை தாய் நாட்டின் பற்றுக்கொண்ட தேசபக்தன் நினைக்கும்போது அவன் உள்ளம் என்ன பாடுபடும் என்பதை விளக்கவல்ல திறமையும் இல்லை. விளக்கத்தக்க வார்த்தையும் இன்னும் உருவாக வில்லை.

மரத்தின் பக்க வேர்களை வெட்டிக்கொண்டே வந்தால் ஆணிவேரும் பக்கபலமற்று தானாகவே ஊனமடைந்து உளுத்துப்போகும். ஆணிவேர் அற்றமரம் அடியோடு நாச மாகும். அதைப் போலவே இந்திய அரசு இந்துக்கள் சமூகத்தைமட்டும் அறுவை சிகிச்சையின்மூலம் எதிர்காலச்

சந்ததிகளை சீவிக்கொண்டு வருகிறது. இதன்முடிவு எங்கு போய் முடியுமென்பதும் வெளிப்படையாகத் தோன்றுகிறது. உதாரணமாக நாற்பத்தியேழில் இந்தியாவில் மூன்றரை கோடியாக இருந்த முஸ்லிம் தொகை தற்போது 12 கோடியை எட்டிக் கொண்டிருக்கிறது என்றால், பாகிஸ்தானில் அன்று சுமார் ஒன்றரை கோடிக்கு இந்துக்களின் தொகையாயிற்றே—அவர்கள் தற்போது அங்கு எத்தனை கோடியாகப் பெருகியுள்ளனர் ? சாந்தி மதத்தினர் அந்த இந்துக்களுக்குச் சமர்ப்பித்திருக்கின்ற பதவிகள் யாவை ? பாரதத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் பெற்றுள்ள உரிமைகள் அனைத்தும் பாகிஸ்தானில் வாழும் இந்துக்களுக்குத் தரப்பட்டுள்ளதா என்னும் கேள்விகளுக்கு இங்கு சகலசம்பத்தையும் அனுபவிக்கும் முஸ்லிம்களும் பாக்கிஸ்தான் ஆட்சியாளர்களும் அளிக்கும் பதில் என்ன ?

பாரதத்தின் பரந்த நோக்கப் பரிவுணர்ச்சியாலும், மகாத்மா கருணையினாலும் பச்சைக்கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டிருக்கும் தொல்லைகள் இன்னும் தொலைந்தபாடில்லை. தற்போது, ' இந்தியநாடு நமது அண்டை நாடு. இதனோடு அவ்வப்போது சண்டையிடுவது சரியல்ல' என்னும் எண்ணமும் பாக்கிஸ்தானுக்கு வரவில்லை. சில சீக்கியர்களைத் தூண்டிவிட்டுக்கொண்டு, உள்ளுக்குள் உளவாளிகளை ஏவி சரியான சந்தர்ப்பந்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. பாக்கிஸ்தான் நம்மோடு அந்நியோன்யமான நட்பு நாடாக வாழும் என நினைப்பது பகற் கனவாகும். இதன் திட்டமே வேறு. அத் திட்டத்துக்கு உளவாளிகளும் இங்கு உண்டு. இஸ்லாமிய இயக்கம் ஒரு உலகு தழுவிய இயக்கமாகும். இவற்றுக்குள் ஆயிரம் சண்டை சச்சரவுகள் இருந்தாலும் மதம் என்னும் விஷயத்தில் விட்டுக்கொடுக்கமாட்டார்கள். கிறிஸ்தவ மதத்தினர்களும் அத்தகையவர்களே. சீனாவும் நம் விஷயத்தில் சிணுங்கிக்கொண்டிருக்கிறது. பாக்கிஸ்தான் இன்று படை எடுப்புக்கு வேண்டிய அணுகுண்டு முதற்கொண்டு பேராயுதங்களைச் சேகரித்துக்கொண்டுவருகிறது. இது இன்று நம்மீது போர் தொடுத்தால், சீனாவும் சேஷ்டை செய்யக்கூடும். இவற்றை எளலாம் இந்திய அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாம் மதத் துவேஷிகளல்லர். ஆனால் மதத் துவேஷிகளுக்கு இடமளிக்கக்கூடாது.

நாட்டுப்பற்று உடையவர்களுக்கு இந்திய அரசு வகுப்புவாதிகள் என்னும் பெயர் சூட்டுவது பகைவர்களுக்கு வழி வகுத்துக் கொடுக்கும் பாதகச் செயலாகும். சுமார் 1000

ஆண்டுகள் அந்நியர்களின் படை எடுப்புகளால் கொள்ளை, கொலை, பலாத்காரம், அவமதிப்பு என்பவற்றால் அல்லல் பட்டோம். இந்த அவதிகளைப் போக்கப் பல தியாக சீலர்கள் ஆங்கில ஆட்சியோடு சுமார் 60 ஆண்டுகள் இடையறாது அகிம்சா முறையில் போராடினர். இப்போராட்டத்தில் பட்டம், பதவி என்பவற்றை உதறித்தள்ளி, உடல், பொருள், ஆவி என்பவற்றின்மீதும் ஆசையை விட்டு மனைவி மக்களையும் பிரிந்து ஆயிரமாயிரமாகச் சிறைபுகுந்தவர்களின் தொகை கொஞ்சநஞ்சமல்ல. தடியடியுண்டு மண்டை உடைந்தவர்கள், குண்டடியுண்டு உயிர் நீத்தவர்கள், தூக்குமேடை ஏறி ஆவியை அர்ப்பணித்தவர்கள், செக்கிழுத்தவர்கள், நாடு கடத்தப்பட்ட வர்கள், அங்க ஈனமானவர்கள், வெளிநாட்டிற்குச் சென்று வீரப்போர் செய்யப் படைதிரட்டியவர்கள் போன்ற தியாகிகள் பலர், அறுபது ஆண்டுகள் அயராது உழைத்ததின் பயனால் பெற்றது இப்பெறலரிய சுதந்திரம். இதை அரை நூறு ஆண்டுகள் கழிவதற்கு முன்னமே மறுபடியும் அந்நியர் ஆட்சிக்கு உட்படுத்த நேர்ந்தால் அது இந்திய சமுதாயத்துக்கே இழிவாகும்; உலகம் உள்ளளவும் இந்த இழிசொல் மறையாது.

இந்திய நாட்டில் தற்போது உள்ளுக்குள் ஒரு சதித்திட்டமே உருவாகிக்கொண்டுவருகிறது. சில பெரும் புள்ளிகள் நாட்டுப் பற்றை உடையவர்களைப் போலவும் நேர்மையைக் கடை பிடிப்பவர்களைப் போலவும் வெளித் தோற்றத்தில் காணப்படு கின்றனர். பெரும்பாலும் இது வெறும் நடிப்பாகவே தோன்று கிறது.

இன்று நமது மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் உயர்ந்த பதவிகளில் பல முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும் இருக்கின்றனர். அமைச்சர்கள் ஆளுநர்கள் போன்ற பொறுப் பான பதவிகளில் பலர் உள்ளனர். பாக்கிஸ்தானில் இருந்த இந்துக்களை அவர்கள் விரட்டி அடித்ததைப்போல இந்திய மக்கள் முஸ்லிம் மக்களைப் பாகிஸ்தானுக்கு விரட்டியடிக்கவும் இல்லை. இவர்கள் அடிக்க நினைக்கவுமில்லை. காலணி வியாபாரத்திலிருந்து கப்பல் வியாபாரம் வரையிலும் இவர்கள் கையில் இருக்கிறது. இந்துக்களுக்கு உள்ள உரிமைகள் அனைத்தும் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் இருக் கின்றன. அப்படி இருந்தும் இவர்களுக்கு நாட்டின் முன்னேற் றத்தில் நாட்டம் இருப்பதாகத் தோன்றவில்லை.

கவிதை

மக்கட் பெருக்கம் குறைப்பதற்கு
மத்திய ஆட்சி அல்லுகையில்
தக்கது தானென பிறமதத்துத்
தலைவர்கள் இதுவரை சொன்னாரா ?

அரிய பெரிய பதவிகளில்
அமர்ந்து இருக்கும் பிறமதத்தார்
புரிவீர் உதவி நீருமெனப்
புகன்றாரா தம் மக்களுக்கு ?

நாட்டின் நலத்தில் இவர்களுக்கு
நல்ல கருத்துகள் இருக்குமெனில்
பூட்டுப் போட்டுக் கொண்டிடுமா
புனித வாய்கள் இதுவரையும் ?

குடும்பக் கட்டுப் பாடெங்கள்
கொள்கைக் கொவ்வா தென்றோதி
உடும்பைப் போன்ற மதப்பற்று
ஊக்கப் பெருகுது தொகையவர்க்கு.

இந்து மதத்தின் தொகைமட்டும்
இழிவை அடைந்திட அறுவைசெயின்
சந்ததி என்னாம் எதிர்காலம்
சிந்தனை செய்து பாருங்கள் !

தாயைக் கொல்லும் சேய்களென
தனையர் நாமே அன்னைக்கு
நோயைத் தருகிற தீமைகளை
நுழைப்பது சரியா சொல்லுங்கள் ?

வாழை மரத்தில் தோன்றியதோர்
வாழைத்தாரே அம் மரத்தை
பாழாக் கிடுமோர் தன்மையெனப்
பாரத ஆட்சி செய்கிறதே !

பாரத நாட்டைப் பிரித்திட்ட
பாதகக் கூட்டம் இப்பொழுதும்
போரினுக் காக மிகக்கொடிய
போரா யுதங்கள் குவிக்கிறது.

மதமெனக் கூறும் போர்வைக்குள்
மக்கள் தொகையைப் பெருக்குகிறார்
இதையறி யாமல் நம்முடைய
இந்திய ஆட்சித் தூங்குதடா!

மதசார்பற்ற ஆட்சி என்று கூறுகின்ற அரசு மக்கட் தொகையைக் கட்டுப்படுத்த என்ன செய்திருக்கவேண்டும்? "எந்த இனமாக இருந்தாலும், எந்த மதமாய் இருந்தாலும், எந்த ஜாதியாக இருந்தாலும் இந்திய நாட்டில் வாழக்கூடியவர்கள் இரண்டு குழந்தைகளுக்குமேல் பெறக்கூடாது. பிறக்குமாயின், அவர்கள் இந்நாட்டின் நன்மையைக் கருதாத துரோகிகளாவார்; அத்தகையோருக்கு இந் நாட்டில் வாக்குரிமை கிடையாது", என்று தயவு தாட்சண்யமின்றி பொதுச் சட்டத்தை இயற்றி இருக்கவேண்டும். இத்தகைய ஒரு பொது அறிக்கையை விட்டிருந்தால் ஒருவகையில் இதை மதசார்பற்ற ஆட்சி என்று சொல்ல இடமுண்டு. ஆனால் இந்திய ஆட்சி இந்துக்களை மட்டும் அறுவை சிகிச்சையின்மூலம் அழித்துக்கொண்டு வருகிறது! இதன் பயனால் இந்திய மரபின் எதிர்காலத்தின் கதி அதோ கதிதான்.

பாரத பூமியை தருமபூமி என்றும், பூலோக சொர்க்கமென்றும், ஞானபூமி என்றும் பல நாட்டினரும் பாராட்டிய காலம் ஒன்று இருந்தது. அந்த நாளில் ஒவ்வொரு வீடும் விருந்தாளிகளைக் கண்டால் புன்முறுவலோடு வரவேற்றது. நிறைவற்ற செல்வம் நிறைவுற்றிருந்த காலம் அது. அத்தகைய தருமபூமி இன்று தரித்திர பூமியாகக் காட்சியளிப்பது யாரால்? பூலோக சொர்க்கமென்று புகழப்பெற்ற நாடு புல்லிய நரகம்போலக் காட்சியளிப்பது யாரால்? பழுத்த ஞானியர் பலர் தோன்றிய பாரதத்தில் எழுத்தறிவே இல்லாத ஏழைகள் அதிகரித்தது யாரால்? இது இந் நாட்டின்பேரில் படை எடுத்தவர்களால் நேர்ந்த பாதகச் செயல்கள். அபரிமிதமான செல்வங்களைச் சூறையாடினர். கொள்ளையடித்த நிதிக் குவைகள் ஒட்டகங்களின்பேரில் ஊர்ந்து சென்றன. இந்திய நாட்டுச் செல்வம் இங்கிலாந்து நாட்டைக் குபேர நாடாக்கியது. ஒண்டவந்தவர்கள் ஒதுங்கினார்கள். உள்நாட்டு மக்கள் உண்ண உணவுக்கும் உடுத்த உடைக்கும் ஏங்கவேண்டியதாயிற்று. சொர்க்கம் நரகமாக மாறிற்று. எழுத்தறிவு மறைந்து மாயமாகி விட்டது. ஆலயங்களை அழித்ததோடல்லாமல் சில அறிவற்ற கயவர்கள் கலைக்கூடங்களுக்கும் கனலை மூட்டிச் சாம்பலாக்கினர். ஊருக்கு ஒருவர் இருவர்கூட எழுத்தறிவு பெற்றவர் இருப்பது

அருமையாகிவிட்டது. இதன் பயனால் ஞானபூமி ஈனபூமி என்னும் நிலை எய்த நேர்ந்தது. இந்திய மக்கள் வாழவழி யின்றி வறுமையின் கொடுமையால் வெளிநாடு களுக்கு விரைந்தனர். அங்கு கங்காணிகளால் ஆடு மாடு களைப்போல விற்கப்பட்டு கொத்தடிமைகளாயினர். அன்னை யின் மக்கள் அந்நிய நாடுகளுக்குச் சென்று அடைந்த தொல்லை களுக்கு எல்லையில்லை. வெளிநாடுகளில் குடியேறியவர்களின் நம்மவர்களின் கதை அப்படி.

உள்நாட்டிலேயே வாழ நேர்ந்த இந்துக்களுக்கு கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோன்ற நிலை உண்டாயிற்று. சில நிலச் சுவான்தார்கள், மற்றும் பக்குவமாக வாழத் தெரிந்த படித்தவர்கள் முடிந்தவரையிலும் பல அரிய நூல்களை மத வெறியர்களின் கண்களுக்குப் புலப்படாமல் மறைத்தும் வைத்தனர். சிலவற்றை வந்தவர்கள் சொந்தமாக்கிக்கொண் டனர். அன்றிருந்த சில மன்னர்கள் இந்த அகம்பாவிகளை எதிர்த்து உயிர்நீத்தனர். சிலர் ஒற்றுமை இன்மையினால் ஒதுங்கியும், பதுங்கியும் இவர்களுக்குக் கப்பங் கட்டிக்கொண்டும் காலம் கடத்தினர். இந்தச் சூழ்நிலையில் வெள்ளையர்களும் மெள்ள மெள்ள இந்தியாவில் காலூன்றினர். அந்தச் சமயத்தில் சில ஏழை மக்களுக்கு வெள்ளையர்களைக் கண்டால் விண்ண வர்களைக் காண்பதைப் போன்ற வியப்பு. முகலாயர்களைக் கண்டால் கிங்கரர்களின் காட்சி. இந்த அவலநிலை நாட்டு மக்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த அந்த நாளில் ஆன்றோர்கள் புரிந்த தவப்பயனாலும், ஆண்டவனுடைய திருவருள் துணையாலும் இந்தப் புண்ணிய பூமியில் சில உத்தமர்கள் உதித்தனர். தாய்நாட்டின் மக்கள் தத்தளிக்கும் அவலநிலைகள் அந்த உத்தமர்களின் உள்ளத்தை உறுத்தியது.

"சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்து துஞ்சிடோம்; இனி அஞ்சிடோம்," என்னும் விழிப்புணர்ச்சி வீறிட்டெழுந்தது. இந்த சுதந்திர உணர்ச்சியை அடக்க ஆங்கில ஆட்சி, லஞ்சம். சிறைச்சாலை, பிரித்தாலும் சூழ்ச்சி, நாடு கடத்தல், குண்டடி, குண்டாந்தடியடி தூக்குமேடை வரையிலும் தொடங்கித் தன்னால் முடிந்த வரையிலும் அலட்டிப் பார்த்தது. ஆயினும் நாளுக்கு நாள் விடுதலை அடையவேண்டும் என்னும் வேகம் அதிகரித்ததேயொழிய அதை அடக்க முடியவில்லை ஆயிர மாயிரந் தொண்டர்கள் அகிம்சாமூர்த்தி காந்தியடிகளின் ஆணைக்கு ஆருயிரையும் தியாகம் செய்ய ஆயத்தமாயினர். அண்ணல் காட்டிய அறவழியில் நின்று பெறலரும் விடுதலை

-யைப் பெற்றோம். அந்த விடுதலைப் போரைக் கெடுப்பதற்கு வெள்ளையர்கள் வீசிய எச்சிற் காசுக்கு இச்சைப்பட்டு விடுதலைக்கு இடையூறாகக் குழிபறித்துக் கொண்டிருந்த குள்ள நரிகளும் சில உருவாகி இருந்தன. அந்த ஊதாரிகளின் தகிடு தத்தங்களையும் பொடிப் பொடியாக்கிப் பெற்றது இந்த சுதந்திரம்.

கீழ்த்திசையிலிருந்த இந்தியா என்னும் பெரியகோட்டையே போனபிறகு பர்மா, சிலோன் மலேசியா போன்ற சிறுசிறு துண்டுகளால் இனிப் பயனில்லை என்று கருதி அவரவர்களுக்கு அந்தந்தப் பிரதேசங்களை ஒப்படைத்துவிட்டுப் பெருந் தன்மையோடு வெள்ளையர்களின் ஆட்சி வெளியேறியது. இந்திய சுதந்திரம் மற்றைய சிறுசிறு நாடுகளுக்கும் கிடைத்த வரப்பிரசாதமென்றே கூறவேண்டும். நாம் அவர்களின் சுதந்திரத்தைப்பற்றி இப்படி நினைக்கிறோம்; அவர்கள் எப்படி யானாலும் நினைத்துக்கொள்ளட்டும். அது அவரவர்களுடைய அபிப்பிராயத்தைப் பொருந்தியதாகும்.

இந்திய அரசு மக்கட்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டு மென்று கூறுவதை யாரும் குறைகூற முடியாது. ஆனால் இந்துக்களை மட்டும் அறுவை சிகிச்சையின்மூலம் அழித்துக் கொண்டு வருவது நாட்டுக்கே பேராபத்தாகும். கிறிஸ்துவர் களும், இஸ்லாம் மதத்தினரும் உயிரோடு இருக்கும் இந்துக்களை மட்டும் மதமாற்றம் செய்யப் பல துறைகளையும் கையாண்டு வருகின்றனர். முகலாயர்கள் கிறிஸ்தவர்களையோ, அல்லது கிறிஸ்தவர்கள் முகலாயர்களையோ மதமாற்றம் செய்ய முனை வதில்லை. இத்த இரு மதத்தினரும் இந்துக்களைத் தத்தம் மதத்தில் சேர்த்துக்கொள்ளப் பலவகையான தந்திரங்களில் பெருமுயற்சியை மேற்கொண்டுள்ளனர். இதற்காக அந்நிய நாடுகளிலிருந்து பணவுதவியும் வருகின்றது. மதமாற்றப் பணி களும் திட்டமிட்டு நடைபெற்று வருகின்றன. இந்திய அரசு இந்துக்களுக்குப் பிறக்கப்போகும் குழந்தைகளைப் பிறக்க விடாமல் அறுவை சிகிச்சையின்மூலம் தடைசெய்வது, உயி ரோடு இருப்பவர்களைக் கிறிஸ்துவர்களும், முஸ்லிம்களும் மதம் மாற்றுவது—இந்த இருவகைப் போக்கும் நீடிக்குமானால் வெகு விரைவில் இந்து மதமும் இந்தியா என்னும் பெயரும் மறைந்து விடும் என்பதற்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

இந்துமதம் இன்று கேட்பாரற்ற மதமாகிவிட்டது. வேலியில் லாப் பயிரை ஆடுமாடுகள் தம்மிஷ்டம்போல் மேய்வதைப்போல இந்து மதத்தை அசுத்தம் செய்ய அரசும் அந்நிய மதங்களும்

இறங்கியுள்ளன. அத்துடன் அரசு சூட்டிக்கொண்டுள்ள பெயர் "மதசார்பற்ற அரசு"! ஆகவே எரிகிற வீட்டில் பிடுங்கிய வரையிலும் இலாபமென்பதைப்போல, தத்தம் மதத்தை 'மெஜாரிட்டி' ஆக்கிக்கொள்ளப் படை திரட்டுகிறார்கள். காற்றுள்ளபோதுதான் தூற்றவேண்டும். காற்று நின்றுவிட்டால் தூற்றமுடியாதே. பாரசீகர்களுக்கு வந்தகதி பாரதீயர்களுக்கும் வரக்கூடாதென்னும் எண்ணம் இருக்குமானால் இன்று முதற் கொண்டு ஜாதி, மொழி, மாகாணம் என்னும் பூசல்களை நிறுத்தவேண்டும். நமது நாடு இந்தியா, நாம் அனைவரும் இந்துக்கள்.—இந்த ஒருமைப்பாட்டுணர்ச்சி முதலில் நமக்குத் தோன்றவேண்டும். இந்த ஒற்றுமையை எந்த வகையான சூழ்ச்சியாலும் பிரிக்க இடந்தரக் கூடாது.

ஆங்கில ஆட்சி இருந்தபோது இந்துக்களிடம் இருந்த ஒற்றுமைகூட நம்மிடம் இன்று இல்லை. காரணம் நாடு சுதந்திரம் அடைந்தபிறகு மொழிவாரி மாகாணங்கள் என்று பிரிக்கப்பட்டுவிட்டன. முன்னர் இருந்த ஒற்றுமை சீர்குலைந்து விட்டது. மொழிக்கு மொழி சிலர் வெறுப்புணர்ச்சிகளை உருவாக்கிக்கொண்டு வருகின்றனர். நாம் அனைவரும் இந்தியர் என்னும் எண்ணம் மறைந்து தெலுங்கர், கன்னடியர், தமிழர், மராட்டியர் என்னும் பிரிவினை உணர்ச்சிகள் உருவாகிக்கொண்டு வருகின்றன. சில அரசியல்வாதிகள் குறுகிய நோக்கத்தாலும், தமது அற்பத்தனமான சுயநலப் போக்காலும் இந்த அநர்த்தத்தைச் செய்ய முனைந்துள்ளனர். இதன் பயனால் கன்னட நாட்டில் தமிழ் பேசுவோரைக் கண்டால் அந்நிய நாட்டாரைப் பார்ப்பதைப்போலப் பார்க்கின்றனர். இந்தப் போக்கும் ஒற்றுமைக்கு ஊறுவிளைத்துவிடும். இத்தகைய தீய உணர்ச்சிகளால் சிங்களருக்கும் தமிழருக்கும் இடையில் விளைந்த விபரீதங்கள் இங்கு விளைந்தாலும் விளையக்கூடும். ஜாதி வெறியைவிட மொழிவெறி மிக மோசமானதாகும். மொழிவாரி பிரிந்த மாகாணங்களின் மையப் பகுதிகளில் வாழக்கூடியவர்கள் ஒருக்கால் அச்சமின்றி வாழலாம். ஆனால் எல்லை ஓரங்களில் வாழும் மக்களின் நிலை நரகமாகி விடுகின்றது. இந்த ஆபத்தான விளைவுகள் உருவாவதற்கு இன்றைய அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற போக்கும், அலட்சிய புத்தியும் காரணமாகும். மற்றும் மொழிகள் நமது நாட்டில் பல உள்ளன. ஒவ்வொரு மொழியிலும் கலை ஞானங்கள் உள்ளன. அவையனைத்தும் வாழவேண்டும். ஆகவே ஒவ்வொரு மொழியினரும் சகிப்புத் தன்மையோடு வேற்றுமையில் ஒற்றுமையைக் காணவேண்டும்.

மதம் அப்படிப்பட்டதல்ல. இந்திய நாட்டில் பல மொழிகள் இருந்தாலும் இந்திய நாடென்பது கன்னியாகுமரியிலிருந்து இமயம் வரையிலும் ஒன்றே. முகலாயர்களும் வெள்ளையர்களும் வரும் முன்பு மதமும் ஒன்றே. அமெரிக்கா மதத்தால் ஒன்று. ஐரோப்பா மதத்தால் ஒன்று. ஆஸ்திரேலியா மதத்தால் ஒன்று. அதேபோல வளைகுடா நாடுகள் மதத்தால் ஒன்று. இவற்றுள் மொழிகள் பலவாக இருந்தாலும் மதத்தின் அடிப்படையில் ஒன்றுபடுவதைப்போல நம் நாடு பல மொழிகளை உடையதாக இருந்தாலும் மக்கள் அனைவ நம் மதத்தால் ஒன்றானவர்கள் என்பதனை நாம் கனவிலும் மறக்கக்கூடாது. நம்நாடு இந்தியா. நம் மதம் இந்து மதம்.

முந்தியநாள் இந்துவாக இருந்து நேற்று மதம் மாறியவனை நீ யார் என்று கேட்டால் நான் கிறிஸ்துவன் என்று கூறுகிறான். அதற்கு முந்தியநாள் இந்துவாக இருந்த லப்பையை நீ யாரென்று கேட்டால் நான் முஸ்லிம் என்கிறான். ஏ இந்தியனே! நீ அவனைப் போல சமீப காலத்தில் மதம் மாறியவனல்ல; இந்து மதத்தில் பரம்பரை பரம்பரையாக ஊறியவன். நாமும் இந்து; நமது மூதாதையர்களும் இந்துக்கள்; நமது நாடு இந்தியா. இதன் பரப்பு வடக்கே இமயம்; மற்றைய மூன்று திசையிலும் கடல். இது உனது ஜென்ம பூமி.

“ எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—இதில்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதிலிருத்தி யென்
வாயுற வாழ்த்தேனோ ?”

வந்தே மாதரம் வந்தே மாதரம் என்று வணங்கேனோ. !

—இந்த மகாகவி பாரதியின் பாடலைச் சிறிது சிந்தித்தாலும் நமது பண்டைய பெருமையைப் படம் பிடித்துக்காட்டும். தளர்ச்சி அடைந்த இதயம் கிளர்ச்சி அடையும். இந்துமதப் பெரியோர்கள் மனிதாபிமானத்தால் மற்றைய மதங்களுக்கும் மதிப்பளித்து அவற்றுடன் ஒருமைப்பாட்டை விரும்புகின்றனர். ஆனால் பிற மதத்தினர் தத்தம் மதங்களையே மிக உயர்வாகக் கருதிக்கொண்டு பிரிவினைப் போக்கைப் பின்பற்றுகின்றனர்.

அந்த மதபோதகர்களிடம் பெரும்பாலும் மனிதாபிமானத்துக்குப் பதிலாக, மதாபிமானமே மேலோங்கிக் காணப்படுகின்றது. அதனால்தான் பிற மதங்களிடம் சமபாவனை காட்டமுடிவதில்லை. இவர்கள் மதத்தின் போர்வையில் நாட்டை வளைக்க நாட்டம் கொண்டுள்ளனர். இவர்களுக்கு நாடு முக்கியமல்லவாம் நாட்டைவிட மதம் முக்கியமாம் ! (இமாம் அப்துல்லா புகாரி, ஜனவரி, 7. விஜயபாரதம் 1–5–87 ;) காரணம் மதத்தை வளர்த்தால் ஜின்னா சாகேப்பைப்போல நாட்டைப் பிடித்துவிடலாம் என்பது இவர்களின் கனவு. இமாம் அப்துல் புகாரி, சையத் ஷகாபுதீன், இப்ராஹிம் சுலைமான் சேட். அமைச்சர் அன்சாரி என்கின்ற பொறுப்புள்ள தலைவர்கள் இந்திய அரசுக்கு இன்னலை உண்டாக்கத் தொடங்கியுள்ளதாகத் தோன்றுகிறது.

ஆகவே வெள்ளம் வருவதற்கு முன்னமே அணைபோட வேண்டும். இது மத்திய அரசின் கடமையாகும். மத்திய அரசில் வீற்றிருப்பவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இனிமேல் மக்களும் தக்கவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மறுபடியும் நாட்டுக்கும் நமக்கும் ஒரு சோதனை காலம் தொடங்கியுள்ளது. இது இந்திய நாடாகவே இருக்க வேண்டுமா ? அல்லது சையது சகாபுதீன் அவர்களும், டெல்லி இமாம் அப்துல்லா புகாரி அவர்களும் விரும்புவதைப்போல இஸ்லாம் நாடாக மாறவேண்டுமா என்னும் கேள்வி நமது முன்னால் நிற்கின்றது. இப்போது இந்தியர்களாகிய நமது கடமை எது ? தற்போது அவர்கள் மதத்தின் பெயரால் படை திரட்டுகின்றனர். அதனால்தான் குடும்பக் கட்டுப்பாட்டை நிராகரிக்கின்றனர். மூன்றரையாக இருந்தது பன்னிரண்டு கோடியை எட்டியுள்ளது. நம்முடைய 32 கோடி 64க்கும் கீழே நிற்கிறது. இது அபாயத்தின் அறிகுறி என்பதில் ஐயமில்லை.

பசுவை அடிப்பதுகூட மகாபாவம். ஆனால் அது தன்னுடைய கூரிய கொம்புகளால் குத்தவந்தால் அதனை ஓட்டாமலும் ஒதுங்காமலும் நிற்போமாயின் நமது குடலே வெளியில் வந்துவிடும். அதுபோல மதத்துவேஷம் நமக்குக் கூடவே கூடாது. நமது முன்னோர்களும் நமக்கு முன்னமே அறிவுறுத்தியுள்ளனர். இந்த நற்கருத்தை மற்றைய சகோதர மதங்களும் பின்பற்றினால்தான் நாட்டுக்கும் நற்பெயர் ; நமக்கும் நல்லது. இதைவிடுத்து மதத்தின் பெயரால் ஜனாப் ஜின்னா சாகேப் அவர்களைப்போல மறுபடியும் நாட்டைச் சிதைக்க திட்டம் தீட்டும்போது வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தால் பரதம் பறிபோய்விடும். இது நம்மை நாமே அழித்துக்கொள்வதற்

கொப்பாகும். எதிர்காலந்தில் உலகமே நம்மை கேலிசெய்யும். விடுதலைக்காக உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் அர்ப்பணித்த அரிய தியாகங்கள் அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகிவிடும். ஆகவே இந்தப் பேராபத்து விளைவதற்கு முன்னமே மக்களும், மாநில அரசுகளும், மத்திய அரசும் உடனடியாக சிந்தித்துப் பரிகாரம் காணவேண்டும். மதசார்பற்ற ஆட்சி என்னும் சொல்லையும் நீக்கவேண்டும். அடுத்தது இந்திய ஆட்சி இந்துக்களை மட்டும் அறுவை சிகிச்சையினால் அதம் செய்வதை நிறுத்திப் பொதுச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும், மதப் போர்வையில் மெஜாரிடியை உருவாக்கி அதன் வாயிலாக நாட்டைக் கவர நினைக்கும் நயவஞ்சகர்களின் சதித் திட்டத்தை உடைத்தெறியவேண்டும் இந்த மூன்றையும் மத்திய அரசு கைப்பற்றினால் பாரதத்தையும் பாரதப் பண்பாட்டையும் பாதுகாப்பது சிரமமல்ல.

மதத்தில் இந்திய அரசு

இந்திய ஆட்சி மதச்சார்பற்ற ஆட்சி என்று சொல்லிக் கொண்டு இந்து மதத்தில் மட்டும் புகுந்து குட்டையைக் குழப்புகிறது. இந்திய ஆலயங்களுக்குத் தம்மிஷ்டம்போல் அதிகாரிகளை நியமித்து விதிக்கு ஒவ்வாத கட்டளைகளும் அவர்கள் மூலம் அமுல்படுத்தும் செயல்களும் பெருகிவருகின்றன. மற்றைய மதத்தினரின் ஆலயங்கள், தொழுகைக் கூடங்களின் விஷயத்திலும் இந்து மதத்து ஆலயங்களில் இது தலையிடுவதைப்போல தலையிடுமாயின் பொதுவாக ஏற்றுக்கொள்ளவேண்டியதே. ஆனால் அவர்களுடைய ஆலயங்களினுள் இருப்பது கொலைக் கருவிகளா அல்லது விழாக் காலங்களுக்குப் பயன்படுத்தும் பொருள்களா என்பது பிற மதத்தினர் அறிந்துகொள்ளமுடியாத புதிராக உள்ளன. ஆனால் இந்திய ஆலயங்களின் நிருவாகத்தில் மத நம்பிக்கை அற்றவர்கள், மற்றும் மதசம்பந்தமான நியதிகள் இன்னதெனப் புரியாதவர்கள் போன்ற அதிகாரிகளும் நியமிக்கப்படுகின்றனர்.

அதனால் நிருவாகத்தில் பல சங்கடங்கள் அதிகரிக்கின்றன. அந்த தக்கார்கள் அவரவர்களுக்குத் தக்கவாறு நடந்துகொள்கின்றனர். ஆலய நிருவாக விதி முறைகளை உணராதவர்களையும் மத நம்பிக்கை அற்றவர்களையும் அதிகாரிகளாக அரசு நியமிப்பது பெருந்தவறாகும். இந்திய அரசு சமூகத்தை அழித்துக்கொண்டு வருவதுடன் ஆலயங்களிலும் நுழைந்து யதேச்சாதிகாரம் செய்கிறது. இது இன்று கேட்பாரற்ற மதமாகி விட்டது. அதனால்தான் மதமாற்றங்கள், சமூகநாசம்

ஆதாயங்களை உத்தேசித்து ஆலயங்களில் தலையிடல் என்பவை தங்குதடையின்றி நடைபெறுகின்றன. இந்திய அரசு பிறமதங்கள் விஷயத்தில் அவற்றுள் பிரவேசிக்காமல் எப்படி ஒதுங்கி நிற்கிறதோ அதேபோல இந்து மதத்துக்குள்ளும் நுழையாமல் ஒதுங்கி நின்றால்தான் இதனை மதசார்பற்ற ஆட்சி என்று கூறுவது பொருந்தும். மற்றும் ஜாதி மதம்இனம் என்னும் பாகுபாட்டைச் சிறிதும் காட்டாத அகண்ட இந்தியாவுக்கு பொதுச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். ஒரு இந்தியன் இந்தியாவுக்குள் எந்த இடத்தில் வாழ்ந்தாலும் அவனுக்கு சகல உரிமைகளும் இருக்கவேண்டும்.

இந்திய ஆட்சியே இந்து மதத்துக்கு இவ்வளவு தீங்கிழைப்ப தற்கு என்ன காரணம்? கிறிஸ்துவ மதத்துக்குத் தலைமையிடம் ரோமாபுரி, முஸ்லிம் மதத்துக்குத் தலைமையிடம் மக்கா. சீக்கியர்களுக்கு அமிர்த சரஸ் என்பதைப்போல இந்துமதத்துக்கு இந்தியாவில் குறிப்பிடத்தக்க ஒரு தலைமை நிலையத்தை இந்துக்கள் தேர்ந்தெடுக்கவில்லை. இந்தியா முழுவதும் இந்து மதத்துக்கு கர்ப்பகிரகமாகும். இடைக்காலத்தில் அந்நிய நாட்டினர் படை எடுப்புகளாலும், அவர்கள் பின்பற்றிய வன்முறைகளாலும், பிரித்தாளும்சூழ்ச்சியாளர்களாலும் மதத் துக்குள் சில இடையூறுகள் உருவாயின. அதனால் மடங்களும் ஆலயங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பற்று தனித்தனியாக இயங்க நேர்ந்தது. மற்றும் மதத்துக்கு சில சோதனைக் காலங்கள் நேர்ந்தபோதெல்லாம் அப்பர், ஞானசம்பந்தர், மணிவாசகர், சுந்தரர், சங்கரர், இராமாநுஜர், ஜெயதேவர், துளசிதாசர், இராமதாசர், பசவண்ணர், அல்லமர் போன்ற இன்னும் பல பெரியோர்கள் ஆங்காங்கு அவதரித்து இந்து தருமத்தைப் பாதுகாத்து வந்தனர். அத்தகைய பெரியோர் களின் பெயர்களால் உருவான மடங்களும் ஆங்காங்கு தனித் தனியாகவே இதுவரையிலும் ஒன்றுபடாமல் இயங்கி வருகின்றன. பிறமதங்களுக்கு ஏதேனும் இடையூறுகள் நேரும் அறிகுறிகள் தோன்றுமாயின் தலைமை இடங் களிலிருந்து குரல் எழுப்பும். கட்டளைகளும் நிபந்தனைகளும் வெளிப்படும். இந்து மதத்துக்கு இன்னல் என்றால் இந்தியா முழுவதும் குரல் எழுப்பவேண்டும். நாம் சுதந்திரத்தை அடைந்து 40 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இன்னும் நாம் ஒருமைப்பாட்டை உருவாக்கவில்லை. அதனால்தான் இந்திய அரசும் இதர மதங்களும் தத்தம் இஷ்டம்போல் விளையாடுகின்றன. வேதகாலம் முதற்கொண்டு இதுவரை யிலும் பாதுகாத்து வந்த இந்துமதத்தை இந்திய ஆட்சியே அழிக்க ஆரம்பித்துவிட்டது.

சுதந்திரத்தைப் பெற்றபிறகு சில செல்வாக்குப் பெற்ற அரசியல் மேதைகளுக்கு மத நம்பிக்கை மங்கி இருந்தது. காரணம் பொதுஉடைமை என்பதின்மேல் வைத்த போதை. அந்தபோதையில் மதக் கொள்கைகள் அவர்களுக்குச் சவக்குழி களைப்போலக் காட்சியளித்தன. அரசியல் மட்டும் இவர் களுக்கு மலர்வனங்களைப்போல மகிழ்வளித்தன. இதன் பயனால் இந்திய ஆட்சி மதசார்பற்ற ஆட்சி என்னும் புதுப் பெயரைப் புனைந்து கொண்டது.

அரசியலில் அடாதவை

வரலாற்றுக் கண்கொண்டு பார்த்தால் மதமும் அரசியலும் மக்களுடைய நன்மைக்கே உருவாயின. நன்மைக்காக நிலத்தை உழுது பண்புசெய்து விதைத்த நெற்பயிரின் இடையில் வேண்டப்படாத களைகளும் முளைப்பதைப்போல பெரியோர் களால் நன்மைக்காகத் தோற்றுவிக்கப்பட்ட ஒவ்வொரு துறையி லும் தீமைகள் விளைந்துள்ளன; விளைந்துகொண்டும் இருக் கின்றன. எதிர்காலத்திலும் விளையப் போகின்றன. மதங் களைத் தோற்றுவித்த பெரியோர்கள் கொடியவர்களல்லர். ஆனால் மதப்போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன. மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளைப் போக்கி நல்லவற்றைச் செய்ய அரசியல் துறையில் விளைந்த கோரமான கொடுமைகளைச் சொல்லி முடியாது. அரசுக்கு அரசு புரிந்த போராட்டங்களுக்கு அளவே கிடையாது. போரினில் மாண்ட வீரர்களின் உதிரம் மண்ணுலகில் ஆறாக ஓடியுள்ளது. மண்டை ஓடுகள் மலை மலையாகவும் குவிந்துள்ளன. குண்டுமாரிகளினால் நாடு நகரங்களெல்லாம் நாசமாகியுள்ளன. மனித குலத்தை மட்டு மல்ல மற்றைய உயிரின்ங்களையும் மாய்த்துள்ளன.

மக்களையும் மணாளனையும் போர்முனையில் இழந்த கணக்கற்ற தாய்மார்களின் கண்ணீரால் மண்ணுலகம் நனைக்கப் பெற்றிருக்கிறது. வீரகாவியங்கள் என்று கூறப்படும் கதைகளில் இந்த கோரத் தாண்டவங்கள்தான் எழுதப்பெற்றுள்ளன. உணர்ச்சிகளைத் தூண்டி உயிர்களைப் பணயம் வைத்து அரசாங்கங்கள் போர்முனை என்னும் அரங்கங்களில் கோடானு கோடி மனித இனத்தைத் கூற்றுவனுக்குக் கொடுத்துள்ளன இன்றும் கொடுத்துக் கொண்டு இருக்கின்றன. இனிமேலும் கொடுக்கப்போகின்றன. இவ்வளவேன்? நாம் விடுதலையைப் பெற்று 40 ஆண்டுகள் சென்றுள்ளது. இதை மக்களாட்சியாக மாற்றி இன்னும் நாற்பதைத் தாண்டவில்லை. அதற்குள்ளாக இதில் நுழைந்துள்ள அரசியல் மேதைகளின் மாயா ஜாலங்

களையும், வீராவேச வசைமாரிகளையும், தில்லுமுல்லுகளையும், வாக்குறுதிகளையும், விளம்பரத்தாள்களின் விநோதங்களையும் தேர்தல் காலங்களில் கண்கூடாகக் காண்கிறோம். கத்திக் குத்துக்கள், கன்மாரி பொழிதல், போக்குவரத்து வாகனங்களைப் பொசுக்கல், அச்சுறுத்தல், ஒவ்வொரு வாசற்படியாக ஏறி வணக்கம் புரிதல் போன்ற அதிசயங்கள் ஒன்றா இரண்டா? இந்தத் திருவிளையாடல்கள் நடைபெறுவதற்குக் காரணம் அரசியல்வாதிகளா? அல்லது மதவாதிகளா? யோசித்துப் பார்த்தால் மதவாதிகள் புரிந்துள்ள கொடுமைகளைவிடரம் அரசியலார் செய்த கொடுமைகள் ஆயிரம் பங்கினும் அதிக மாகும். உண்மை இவ்வாறிருந்தும் சில அரசியல் மேதை களுக்கு அரசியல் இனிக்கிறது; மதம் கசக்கிறது.

இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டால் இந்திய மக்கள் ஆனந்தத் தாண்டவம் ஆடுவார்கள் என்று மகாகவி கனவு கண்டார்.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று"

தற்போது இந்துக்கள் ஆனந்தத் தாண்டவமா ஆடு கிறார்கள்? இல்லை. நாட்டில் பெருகியுள்ள ஊழல்களை மூடமுடியாமல் திண்டாடுகிறார்கள். இந்த விபரீதங்கள் விளை வதற்கு யார் காரணம்? மக்களா? மாட்சிமை பொருந்திய ஆட்சியா? சட்டங்களைச் சரியாக வகுத்து அதை நடத்துபவர் களும் நேர்மையாக இருந்திருந்தால் மக்கள் புரியும் குற்றங்கள் குறைந்திருக்கும். காவல்காரனே கள்ளனாக மாறினால் திருட்டைக் கண்டுபிடிக்கமுடியுமா? இன்று நாட்டில் நடப்பது ஆனந்தத்தாண்டவமா, அகோரத் தாண்டவமா? கொலை, கொள்ளை, இலஞ்சம், கட்சிகளின் பூசல்கள், பதவிவேட்டை, இனவெறி, மதவெறி, மாகாண வெறி, ஜாதிவெறி, மொழிவெறி என்பவைகள் தாண்டவமாடுகின்றன. மேய்ப்பவன் இளப்ப மாக இருந்தால் எருதுகள் எக்காளமிட்டு முட்டுமாம். அதைப் போல மாநில சபைகளிலும், மத்திய சபையிலும் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் ஆடும் ஆட்டங்களை அளவிட்டுச் சொல்லமுடியாது.

காலில் அணியக்கூடிய பொருள்கள் தலைக்கு மேலும் சில சமயங்களில் காட்சி தர நேருகின்றன. குறுகிய நோக்கங்களைக் கொண்ட கட்சிகள் தோன்றியவண்ணம் இருக்கின்றன.

காந்தியடிகள், 'இனி கட்சிகளைக் கலைத்துவிடலாம். இவை நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைத்துவிடும்,' என்று கூறினார். அன்றே கலைக்காமையினால் அவைகள் புற்றீசல்போல முளைத்துக்கொண்டே இருக்கின்றன. இந்திய நாட்டின் ஒற்றுமையை இக்கட்சிகள் உருக்குலைத்துக்கொண்டு வருகின்றன. நமது மதசார்பற்ற ஆட்சி உருவாக்கியுள்ள உருப்படிகள் இவை என்று கூறலாம்.

இதுவா ஜனநாயகம்?

தற்போது நாட்டில் நடப்பது ஜனநாயகமாகத் தோன்றவில்லை. இதனைக் கட்சிகள் நாயகம் என்று கூறலாம். தேர்தல் காலங்களில் கட்சிகளை முன்வைத்துத்தான் வாக்குரிமை கேட்கின்றனர். மக்களும் கட்சிகளின் அபிமானத்தில்தான் வாக்களிக்கின்றனர். பல கட்சிகள் நாட்டுப்பற்றை நாசமாக்கியும் வருகின்றன. மக்களுக்குத் தற்போது கட்சிகளின்பேரில் ஊட்டப்பெற்றுள்ள மோகத்தை நீக்கினால்தான் நாட்டின் பேரிலும் அதன் பண்பாட்டின்பேரிலும் நாட்டம் திரும்பும். நாட்டில் நல்லோர்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு அப்போதுதான் உதயமாகும். உண்மையான ஜனநாயகத்துக்கு எந்தக் கட்சியும் தேவையில்லை.

கட்சிகள் என்பவை ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்து உடையனவாகும். கட்சிகள் தோன்றுவதற்கு மூலகாரணம் மாறுபட்ட கருத்துக்களேயாகும். ஒவ்வொரு கட்சியும் தத்தம் விருப்பத்துக்கு ஏற்ற குறிக்கோளைக் கொண்டுள்ளது. ஒன்றின் குறிக்கோளை மற்றொரு கட்சி மறுக்கிறது. ஒன்றுக்கொன்று ஒவ்வாத நிலைகளைப் பற்றிக்கொண்டு தனித்தனியாக இயங்குகின்றன. ஒவ்வொன்றும் சில மதவாதிகள் கூறிக்கொள்வதைப் போலத் தம்முடைய கொள்கைதாம் சிறந்த கொள்கை என்று உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டுள்ளன. அதனால் இவை ஒன்றுபடுவதில்லை. இவற்றுள் எந்தக் கட்சியின் கொள்கை சரியானதென்று மக்கள் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. இதற்குக் காரணம் கட்சித் தலைவர்களின் மழுப்பல்களாகும். இவைகளில் ஒன்று ஆட்சிப்பீடத்தைப் பிடித்தால் மற்றவை அதன் காலை வாறுகின்றது.

இதேபோல ஒன்றையொன்று செயல்படவொட்டாமல் பூசலிடுவதே இவற்றின் தொழில். கட்சிகள் அனைத்தும் தீயவைகள் என்று கூறமுடியாது. ஆயினும் சில மாறுபட்ட கருத்துக்கள் இவற்றிடம் இருப்பதனால் ஒன்றுக்கொன்று

மாறுபட்டு நிற்கின்றன. இவைகளுக்குள் வன்முறைகளைத் தூண்டுபவை; பிரிவினையைத் தூண்டுபவை, உள்ளுக்குள் பகை நாடுகளின் பக்கம் சார்ந்தவை, சுயநலச் சூதாட்டத்தில் இறங்கியுள்ளவை, நாட்டின் நன்மையில் உண்மையிலேயே நாட்டமுள்ளவை எனப் பலவகையான கட்சிகள் இருக்கின்றன. இக்கட்சித் தலைவர்கள் பிரசாரங்களின்மூலம் மக்களைக் குழப்புகின்றனர். ஆகவே இன்றுள்ள தேர்தல் முறையையே மாற்றி அமைக்கவேண்டும். தேர்தல் அப்பழுக்கின்றி நடக்க வேண்டும். தேர்தல்களில், கட்சிகள் என்னும் பெயரே வரக் கூடாது. காந்தியடிகள் சுதந்திரத்துக்குப்பின் இப்படித்தான் கருதினார்; ஒரு குறிக்கோளை அடைவதற்கு ஓர் இயக்கம் கட்சி தேவைதான். அந்தக் குறிக்கோள் கைகூடிய பிறகும் இயக்கம் பயனற்றதாகும். சுதந்திரம் பெறுவதற்காக காங்கிரஸ் இயக்கம் தேவைப்பட்டது. சுதந்திரத்தைப் பெற்றுவிட்டபிறகு நாடு நமதாகி விட்டது. இனி நமக்குள் கட்சிகள் தேவையில்லை.

பாட்டு

தேர்தல் முறைமாற வேண்டும்—இன்றேல்
தேசத்தைத் துண்டாடும் கட்சிகள் மீண்டும் (தேர்)

கட்சியென் றோதிடும் சொல்லே—தலை
காட்டக் கூடாதெந்தத் தேர்தல் களத்தும்
பட்சபாத ங்கள் செய்யும்—நல்ல
லட்சியங் கள்தனையும் கொலை செய்யும் (தேர்)

நாட்டைப் பிரிக்கின்ற கட்சி—பிற
நாட்டுக்குக் காட்டிக் கொடுக்கின்ற கட்சி
ஓட்டுக் கலைகின்ற கட்சி—அதற்(கு)
ஓயாது லஞ்சத்தில் உறவாடும் கட்சி (தேர்)

பதவிக்கு மோப்பம் பிடித்தே—சிலப்
பணக்கார பூதங்கள் உருவாக்கும் கட்சி
உதவாத கொள்கைகள் தம்மை—நம்பி
ஓயாமல் கூப்பாடு போட்டிடும் கட்சி (தேர்)

ஒருகட்சி பலகுட்டி போடும்—இவை
ஓயாமல் ஒன்றையொன் றெப்போதும் சாடும்
சரிபட்டு வர்ராத கொள்கை—என்றும்
சண்டைக்குச் சளையாத சண்டாளச் செய்கை (தேர்)

மொழிவெறி மதவெறி தூண்டி—மக்கள்
மூளையை நஞ்சாக்க அஞ்சாத கட்சி
பழிபாவ மறியாத மக்கள்—தம்மைப்
பாழாக்கும் பலகட்சி பாரதத் துள்ளே (தேர்)

நாடொன்று நமதென்னும் போது—இதில்
நலமல்ல பலகட்சி உருவாதல் தீது
கேடிந்த நாட்டினை நண்ணும்—இவர்
கிளர்ச்சிகள் பகைவர்க்குத் தான்துணை பண்ணும் (தேர்)

இந்திய நாடொன்று என்றால்—இதில்
எண்ணற்ற கட்சிகள் போட்டிகள் நன்றா?
சிந்தனை செய்திடோ மென்னில்—நம்மை
நிந்தனை செய்திடும் சந்ததி பின்னே (தேர்)

மழைக்கால புற்றீசல் போலே—தேர்தல்
வருகின்ற நாளில்நற் பண்பா டனைத்தும்
குழிதோண்டிப் புதைக்கின்ற பூச்சல்—பெரும்
கூச்சலும் ஏச்சலும் பேச்சினில் சீச்சீ (தேர்)

நாட்டினில் கட்சிகள் வேண்டாம்—இவை
நல்லாட்சிக் குதவாது என்றார் மகாத்மா
கேட்டார்களா தெய்வ வாக்கை—நாடே
ஆட்டங் கொடுத்திடச் செய்தாரிப் போக்கை (தேர்)

ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு
என்று மகாகவி சொன்னார்—இதை
ஏனோ அரசியல் மேதைகள் உன்னார் (தேர்)

நாடாளக் குழுவொன்று வேண்டும்—இதை
நாட்டுமக்கள் தேர்ந் தெடுத்திடல் வேண்டும்
கோடாத நல்லாட்சி வேண்டும்—அதற்
கொப்பான நெறியையும் கூறுவன் ஈண்டு.

வீட்டுக்கு இருவர்

தேர்தல் முறையைத் தூய்மைப்படுத்தவேண்டுமென்றால் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் வாக்குரிமை தருவதைவிட ஒரு குடும்பத்துக்கு இரண்டு பேருக்கு வாக்குரிமை அளித்தால் போதுமானது. குடும்பத் தலைவனுக்கு ஒன்று; குடும்பத் தலைவிக்கு ஒன்று. பெரும்பாலும் 25 வயது நிறைவு

பெறுகின்றவரையிலும் உலக விஷயங்களை கற்க வேண்டிய வயதென்று கருதலாம். அதற்குமேல்தான் குடும்ப பாரம் இவர்களை நெருங்குகிறது. குடும்பத்தில் விளையும் நன்மை தீமைகள், கஷ்ட நஷ்டங்கள் இவற்றை அறிந்து நடக்க வேண்டிய பொறுப்புணர்ச்சி உண்டாகின்றது. பொறுப்பறிந்தவர்கள் அளிக்கின்ற வாக்குகள்தான் சிறப்புடையதாக இருக்கும். யாருக்கு வாக்களித்தால் நாட்டுக்கும் நமக்கும் நல்லது என்பதைச் சிந்தித்து அளிப்பார்கள். இதை ஒரு சிக்கனமான தேர்தல் முறை என்னலாம். அனைவருக்கும் வாக்குரிமை இருப்பது நலமே என்றாலும் வாலிப வயதுடையவர்கள் இளமைத் துடிப்பாலும் உலக அனுபவக் குறைபாட்டாலும் ஆரவாரங்களைப் பெருக்கித் தேர்தல் முறையின் அமைதியைக் கெடுத்துவிடும் சூழ்நிலைகள் உருவாகின்றன.

கட்டாய வாக்குரிமை

தேர்தல் நடைபெறுவதற்கு முன்னே மக்கள் கணக்கை எடுப்பதற்கு பதிலாகக் குடும்பங்களைக் கணக்கெடுக்கவேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கட்டாயமாக வாக்களிக்கவேண்டும். எந்தக் குடும்பத்தினர் வாக்களிக்க வரவில்லையோ அதன் காரணத்தை விசாரணை மூலமாகப் பரிசீலிக்கவேண்டும். தேர்தல் காலத்தில் நோய் அல்லது தவிர்க்கமுடியாத வெளியூர்ப் பிரயாணம் இருப்பின் அவர்களுக்கு விதிவிலக்களித்து வாக்களிக்காத மற்றவர்களுக்கு ஏற்ற அபராதம் அல்லது தண்டனையும் அளிக்கலாம்.

தேர்தலுக்கு நிற்பவர்களின் தகுதி

மதம், ஜாதி, மொழி, இனம் என்னும் கண்ணோட்டம் இருக்கக்கூடாது. வசை ஒழிய வாழும் நல்லோர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை அந்தந்த வட்டார மக்களுக்கே அளிக்கவேண்டும். அன்பு, அறிவு, ஊக்கம், பரோபகார சிந்தை, நன்னடத்தை, நேர்மை என்பவை ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ளக்கூடியவர்களுக்கு இருக்கவேண்டிய முக்கியமான நற்பண்புகளாகும். யாரிடம் இந்தத் தலையாய குணங்கள் இருக்கின்றனவோ அவர்கள் அந்தந்த வட்டார மக்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். அவர்கள் தம்முடைய வாழ்நாளில் புரிந்துள்ள நற்பணிகளே மக்களுக்கு இன்னார் இன்னார் என்பதை அறிமுகப்படுத்தி இருப்பதால், அத்தகைய பேர்களை அணுகி வட்டார மக்களே இந்த பணியை நீங்கள் ஏற்றுக்கொள்ள இத்தொகுதிக்கு நில்லுங்கள் என்று தெரிவிக்கவேண்டும்.

ஒவ்வோர் இடத்துக்கும் ஒருவரையே அப்பணிக்கு நிறுத்த வேண்டுமென்ற கட்டாயமில்லை. சில குறிப்பிட்ட நபர்களின் பெயர்களை அந்தந்த வட்டார மக்கள் தேர்ந்தெடுத்து பெயர்களை அரசுக்குத் தெரிவிக்கவேண்டும். அரசும் அந்நபர்களின் தகுதிகளைப் பரிசீலித்து அரசாங்கமே அப்பெயர்களை விளம்பரம் செய்யவேண்டும்.

ஒரு சார்பான முறையில் அரசாங்கமோ, அல்லது வேறு குழுக்களோ பொதுக் கூட்டங்களோ போடக் கூடாது. தேர்தலுக்கு நிறுத்தப்பட்டவர்கள் தனியாக சுய விளம்பரங்களைச் செய்யக்கூடாது. கைக்கூலிகளைத் தூண்டிப் பொதுக் கூட்டங்கள் போட்டு காட்டுக்கூச்சல் போட இடந்தரக் கூடாது. பதவியைப் பிடிப்பதற்காக வீடுவீடாகச் சென்று கும்பிடு போட்டு ஓட்டுப் பிச்சைக் கேட்கும் ஊதாரிகளைக் கூண்டில் தள்ளவேண்டும். அரசாங்கத்தின்மூலம் பொதுவாக மக்களுக்குத் தெரிவிக்கும் விளம்பரத்தைத் தவிர வேறு எந்த வகையான விளம்பரமும் தலைகாட்டக்கூடாது, வாக்களிக்கக் கூடியவர்கள் யாருடைய தூண்டுதலும் இல்லாமல் தங்கள் தங்கள் மனதுக்கு ஏற்ற நபர்களுக்கு வாக்களிக்கத் தக்க நிலைமையை உருவாக்கவேண்டும்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், (1) முதலில் கட்சிகள் அனைத்தையும் தடை செய்யவேண்டும். 2. வட்டார மக்கள் விருப்பமில்லாமல் யாரும் தேர்தலுக்கு யதேச்சையாக நிற்கக்கூடாது. தேர்தலில் நிற்பவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் பணச் செலவு செய்வதோ, பொதுக் கூட்டங்களைப் போட்டு சுயவிளம்பரங்களைச் செய்வதோ, உள்ளுக்குள்ளாக கைக் கூலிகளைத் தூண்டுவதோ கூடவே கூடாது. அரசாங்கம் வெளிப்படுத்தும் விளம்பரங்களிலும் பாரபட்சம் தோன்றக் கூடாது. தேர்தலில் நிற்கக்கூடியவர்களோ, அல்லது அவர்களின் சார்பில் தவறான நெறிகளைப் பின்பற்றுவது புலனானால் தயவு தாட்சண்யமின்றி அரசு தண்டிக்கவேண்டும்.

அதிக வாக்குகள் பெற்றவர்களுக்குப் பதவிப் பொறுப்பும், அடுத்த நிலையில் வாக்கு பெற்றவர்களை, எதிர்க் கட்சிகள் இன்று இருப்பதற்குப் பதிலாக ஆய்வுக் குழுவினர் என்னும் பெயரில் அடுத்த பொறுப்புகளிலும் நியமிக்கலாம். மிகக்குறைவான வாக்குகள் பெற்றுள்ளவர்களை மட்டும் ஆய்வுக் குழுவில் சேர்க்கவேண்டியதில்லை. இவ்வாறு தேர்ந்தெடுத்தால் அந்த ஆட்சியை உண்மையான மக்களாட்சி என்று கூறலாம். இப்போது நடப்பது மக்களாட்சி என்று கூற முடியாது: இது கட்சிகளின் ஆட்சியாகும்.

இது மக்களாட்சியல்ல. இந்நாடு இனி பகைவர்களின் சதித் திட்டங்களுக்கு இடந்தராமல் பண்டைய பெருமைகளைப் பாது காக்கவேண்டுமானால் உண்மையான ஜனநாயகம் என்னும் மக்களாட்சி மலரவேண்டும். தற்போது நமது பாரதத்தில் நடப்பது ஊழல்கள் மலிந்துவிட்ட கட்சிகளின் ஆட்சியாகும்.

பாட்டு

மக்களாட்சியா ?—இதுதான்
மக்களாட்சியா ?

தக்கவாறு வாக்குரிமை
தரும் முறையை வகுத்திடாமல்
எக்கச் சக்கமாகப் பணம்
இறைத்துப் பதவி பிடிக்குமிது (மக்க)

நிலைமை தன்னை அறியாமல்
நேர்மை தன்னைப் புரியாமல்
பலவகையாம் கொள்கை களை
பாரதத்தி லேநுழைத்துக்
கலவரங்கள் தோற்றுவிக்கும்
கட்சிகளின் ஆட்சியிது
தலைவ ரெனச் சிலரிதனில்
தடவுகிறார் பதவிகளை (மக்க)

பண்டைய நம் பெருமை தனைப்
பாழாக்கும் எண்ணமது
கொண்டசில கட்சிகளும்
கூடியிருந்த நாட்டையின்னும்
துண்டு துண்டாய்ச் செய்வதற்கு
துணை புரியும் பேர்வழிகள்
உண்டிவரைக் கொண்டு இன்னும்
உழலுகின்ற ஆட்சி இது (மக்க)

தெருத் தெருவாய் கூட்டம் போட்டு
திட்டுகின்ற கட்சிகளும்
ஒருத்தர்மீது ஒருத்தர் பகை
உண்டாக்கும் கட்சிகளும்
கருத்தினிலே மாறுபட்டு
கலகம் செய்யும் கட்சிகளும்
பொருத்த மற்ற கொள்கை கட்கு
புகலிடமாய் உள்ளதிது (மக்க)

காட்டுக் கூச்சல் போடுகிற
கட்சிகள் உண்டாகுவதேன் ?
நாட்டை மீண்டும் துண்டுபோடும்
நாட்டமுள்ள கட்சிகளேன் ?
ஓட்டு வேட்டை யாடிபல
ஊழல் செய்யும் கட்சிகளேன் ?
வீட்டுக்கொரு கட்சியென்று
விளையவைக்கும் இன்னுமிது (மக்க)

கண்ட கண்ட கூட்டங்களில்
கல்லெறியும் கட்சிகளும்
வண்டிகளை உடைத்தவற்றில்
வன்னி வைக்கும் கட்சிகளும்
சண்டைகளை மூட்டுவதில்
சளைக்காத கட்சிகளும்
கொண்டு இந்த நாட்டினையே
கொலைக் களமாய் செய்யுமிது (மக்க)

மக்களது நல்லாட்சி
மலரவெனின் காந்திமகான்
தக்கதன்று கட்சிகளைத்
தான்கலைக்க வேண்டு மென்றார்
அக்கருத்தைத் தள்ளிவிட்டு
ஆராய்ந்து பாராமல்
வக்கரிக்கும் கட்சிகளை
வளரவிட்ட திவ்வாட்சி (மக்க)

நாட்டில் கட்சிகள் பெருகிவிட்டதனால், கலகங்கள் மலிந்து விட்டன. நல்லாட்சி குலைந்துவிட்டது. நேர்மை மறைந்து விட்டது, லஞ்சம் நிறைந்துவிட்டது. தேசபக்தியும் தெய்வ பக்தியும் குறைந்துவிட்டன. இக் கொடுமைகளை அகற்ற இந்துக்களும் இந்திய ஆட்சியும் பிணங்குதல் இல்லாமல் இணங்கிச் செயல் பட்டாலன்றி நாட்டை ஆபத்திலின்றி மீட்க முடியாது.

நமது நாடு இந்தியா. இதில் வாழும் நாம் அனைவரும் இந்தியர், நம்முடைய அரசு இந்திய அரசு. இதனுடைய கொள்கை இந்திய தர்மம். இதனை மறுப்பவர்கள் பகைவர் களின் ஐந்தாம் படை அல்லது அவர்களின் கைக்கூலிகள். இவ்விரண்டுமின்றேல் பிற மதத்தினரின் வஞ்சக வலையில் வீழ்ந்துவிட்ட பற்றற்ற அப்பாவி மக்களின் அறியாமை என் பதில் ஐயமில்லை.

ஜாதிகள்

இதுவரையிலும் இன்றுள்ள இந்திய அரசினாலும், இதர மதத்தினர்களின் படை எடுப்புகளாலும் இந்துக்களின் சமூகத்துக்கும் இந்து மதத்துக்கும் விளைந்த விளைவுகளையும், இதே போல இந்திய ஆட்சிக் காலம் கழித்தால் விளையப்போகும் விளைவுகளையும்பற்றி ஒருவாறு புரிந்து கொண்டோம். பிறர் செய்த பிழைகளை மட்டும் பிரமாதப்படுத்திவிட்டு, நம்மிடத்தில் உள்ள குற்றங்களைப் பரிசீலிக்காமல் மூடிமறைப்பது முறையல்ல; நேர்மையுமல்ல? நம்மில் இருக்கின்ற குறைபாடுகளையும் நாம் சிந்தித்து அத்தீமைகளையும் நாம் அகற்றவேண்டும்.

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு." —குறள்

என்று கூறுகிறார் திருவள்ளுவனார். பிறருடைய குற்றங்களைக் கண்டு அவர்களை நாம் நொந்துகொள்வதைப்போலவே நம்மால் விளைந்துள்ள குற்றங்களையும் கருதிப் பார்த்து அதற்காக வருந்துவதோடு இனி அத்தகைய தீமைகள் நிகழாத வண்ணம் நடந்துகொள்ளவேண்டும். இதுவே மனிதப் பண்பு. மகாத்மா காந்தியடிகள் தீண்டாமை என்பது இந்துமதத்தில் இடைக்காலத்தில் புகுத்த ஒரு களங்கம். தீண்டாமை என்பது இந்து மதத்தின் ஒரு பகுதியாக இருந்திருந்தால் நான் இந்து என்று சொல்லிக்கொள்ள நிச்சயமாக மறுத்திருப்பேன்." என்றார் (ஆதாரம் : இந்து முஸ்லிம் பிரச்சினை ; பக்கம் 115).

இந்து மதத்தில் தீண்டாமை என்னும் பெருநோயும், ஜாதிகளுக்குள் ஏற்றத்தாழ்வுகளும் இடைக்காலத்தில் நுழைந்தன என்பதில் ஐயமில்லை. ஆனால் இடைக் காலத்தில் நுழைந்ததனால் குற்றமில்லை என்று கூறமுடியாது. இடைக்காலத்தில் நுழைந்திருந்தாலும் குற்றம் குற்றந்தான். இக்குற்றத்தை அகற்ற வேண்டியது நம் கடமையாகும். நாய், பூனை, ஆடு, மாடு முதலானவைகளைத் தீண்டினால் தீட்டில்லை என்று ஒப்புக் கொள்ளும்போது மனிதனை மனிதன் தொட்டால் தீட்டென்று கூறுவது சகோதரத்துவத்தை மறுப்பதுடன் மனிதப் பண்பைப் புறக்கணிப்பதாகும் என்பதில் சந்தேகமில்லை. சிலர் இந்தியாவில் இந்துக்கள் இடத்தில் மட்டும் ஜாதி வித்தியாசம் இருப்பதாகக் கூறுகின்றனர். பண்டைய நாட்களில் பல நாடுகளில் இந்த இனப் பாகுபாடு இருந்திருக்கிறது. ஏழு ஆயிரம் ஆண்டுகளின் வரலாற்றை உடைய எகிப்து நாட்டில் ஆதியில் புரோகிதர், போர்வீரர், இடையர், பன்றி மேய்ப்போர், வணிகர்,

கணக்கர், மாலுமிகள் (மீனவர்) என்னும் இனங்கள் இருந்திருக்கின்றன. தெற்காசிய நாடுகளில் குறஷியர், எபிரேயர், ஹீப்ருக்கள் போன்ற ஜாதிகள் ஒன்றோடு ஒன்று கலப்பதில்லை.

இன்னும் யூதயினமென்றும், அரேபிய இனமென்றும் இருக்கின்றன. இவை ஒன்றோடொன்று கலப்பதில்லை. ரோமில் அரசர், பிரபுக்கள், குடிகள், அடிமைகள் என்னும் நான்கு பிரிவுகள் இருந்தன. தாய்லாந்தில் சீயர், சீனர் ஐரோப்பியர் என்னும் மூன்று ஜாதிகள். இவைகள் மொழி வேற்றுமையாலும், ஒரு நாட்டில் மற்றொரு நாட்டினர் குடியேறும்போது பழங்குடிகளுக்கும், புதிய குடிகளுக்கும் சில பழக்க வழக்கங்களிலும் மாற்றங்கள் காணப்படுவதால் வெவ்வேறு ஜாதிகளாகக் கருதப்படுகின்றனர். சீனாவில் வாழ்பவர் சீன ஜாதி, ரஷ்யாவில் வாழ்பவர் ரஷ்ய ஜாதி, மலேயாவில் வாழ்ந்தால் மலேயர்; பர்மாவில் வாழ்ந்தால் பர்மியர் என்பதுபோலவும் கருதப்படுகின்றன. இந்த ஜாதிகள் ஆதியில் தொழிலால், மொழியால், நாட்டால் உருவாகி இருக்கின்றன. முக்கியமாக இந்திய நாட்டில் கூறப்படும் ஜாதிகள் அனைத்தும் தொழிலின் அடிப்படையில் தோன்றியுள்ளன. உதாரணமாக குயவன் மண்பாண்டம் செய்பவன், தச்சன் மரவேலை செய்பவன், கருமான் உலோகங்களில் ஆயுதங்கள் மண்வெட்டி முதலானவை செய்பவன், வண்ணான் ஆடைகளை சுத்தம் செய்பவன் என்பதைப்போல தொழிலின் அடிப்படையில் ஜாதிகள் என்னும் பாகுபாடுகள் தொடங்கப்பெற்றன. எனினும் இந்து மதத்தில் ஆதியில் பிரிக்கப்பெற்ற குழுக்கள் நான்கு என்பதைச் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமிருந்த கண்ணபிரான்

" சாதுர் வண்ணம் மயா ஸ்ருஷ்டம்
குண கர்ம விபாகச : "

(பகவத்கீதை அ. 4. சு 13)

பொருள் : " நான்கு வருணங்களை நான்தான் படைத்தேன்—அவரவர் குணத்துக்கும் செயலுக்கும் ஏற்ப," என்று கூறியுள்ளார்.

நான்கு ஜாதிகள் :

1. பிராம்மண ஜாதி — விஞ்ஞானி
2. க்ஷத்ரிய ஜாதி — காவலன் (அரசன்)
3. வைசிய ஜாதி — வியாபாரி
4. சூத்திர ஜாதி — தொழிலாளி

இந்த ஜாதிகளின் பிறப்பிடங்கள்

மனுஸ்மிருதி அத்தியாயம் 1. சுலோகம் 87ல் கூறப்படுவது ;

1. பிராம்மணன் தோன்றிய இடம் — முகம்
2. க்ஷத்திரியன் ,, ,, — தோள்
3. வைஸ்யன் ,, ,, — வயிறு
4. சூத்திரன் ,, ,, — கால்கள்

என்று மனுஸ்மிருதியும் நான்கு ஜாதிகளைத்தான் கூறுகிறது. இந்த நான்கு ஜாதிகளும் பிரம்மாவின் தலை, தோள், வயிறு, கால்கள் என்னும் இடங்களில் பிறந்தன என்று பிறந்த இடங்களையும் தெரிவிக்கிறது.

4 வகைப் பிறப்பு

வித்தின் வழியில் தாவர உயிர்கள் ; அழுக்கின்மூலம் புழுப் பூச்சிக்கள், முட்டையின்மூலம் பறவையினங்கள், கருப்பையின் மூலம் விலங்கினங்களும் மக்களினமும் தோன்றுகின்றன. ஆதியில் உயிரினங்கள் எந்தெந்த வழியில் எந்தெந்த உறுப்பை ஆதாரமாகக் கொண்டு உயிர்கள் வெளியாயிற்றோ அதே வழியில் இன்றும் உயிர்களின் தோற்றம் முறையாகத் தோன்றிக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக, ஆதியில் முட்டையில் இருந்து பறவைகளும் பாம்பினங்களும் தோன்றின என்றால் இன்னும் அவைகள் முட்டையின்மூலமே வெளிப்படுகின்றன. கருப்பையில் இருந்து பிறக்கும் மனித உயிர் முட்டையின் வழியில் வருவதில்லை; கோழி குட்டிப் போடுவதில்லை. நாய் முட்டையிடுவதில்லை. எவை எந்தெந்த இடங்களில் எப்படி உதிக்கவேண்டுமோ அவைகள் முறைபிறழாமல் அப்படியே உதிக்கின்றன. இதுதான் நியதி, அல்லது விதிமுறை.

மனுஸ்மிருதியில், பிரம்மாவின் முகத்தில் பிராம்மணன் உதித்ததாகவும், தோளில் க்ஷத்திரியன் என்றும், வயிற்றில் வைசியன் என்றும், காலில் சூத்திரன் என்றும் கூறுவதனால் தற்போதும் பிராமணன் முகத்தின்மூலமே பிறக்கவேண்டும். க்ஷத்திரியன் தோளின்மூலமே உதிக்கவேண்டும், இதேபோல அவரவர்களுக்குக் கூறியுள்ள உறுப்புக்களின்மூலமே இந்த நான்கு ஜாதிகளும் இன்னும் பிறக்குமானால் நாம் அவற்றை மறுக்கமுடியாது. ஆனால் சூத்திரனுக்குக் குறித்துள்ள இடம் எதுவோ அதே வழியில்தான் வைசிய, க்ஷத்ரிய, பிராம்மணன் என்று கூறிக்கொள்ளும் ஜாதிகளும் பிறக்கின்றன. ஆகவே மனுஸ்மிருதியில் கூறுவது பொய்யா என்றால்? பொய்யில்லை, இவற்றைச் சிலர் தவறாகப் பொருள்படுத்திக்கொண்டுவிட்டனர்.

மனித உருவில் அமைந்துள்ள ஒவ்வொரு அங்கத்துக்கும் சில சிறப்பியல்புகள் இருக்கின்றன. அந்த சிறப்பியல்புகளை நினைவூட்டும் அறிகுறிகளே நான்கு அங்கங்களும், அவற்றின் வழீ வந்தவை நான்கு ஜாதிகளும் என்பது உதாரணமாகும்.

1. பிராம்மணன்—முகம். அறிவின் அறிகுறி தெளிந்த நல்லறிவை உடையவன் என்பதைக் குறிப்பது.

2. க்ஷத்திரியன்—தோள். வல்லமைக்கு அறிகுறி. புஜ பலமுடையவன். பராக்ரமத்தை விளக்கும் அறிகுறி.

3. வைசியன்—வயிறு. பரிமாறுதலின் அறிகுறி. உண்ட உணவை உடலிலுள்ள உறுப்புக்களுக்கு உணவின் சாரத்தை முறைப்படி பகிர்ந்தளிப்பதைப்போல பண்டங்களை மக்களுக்கு முறையோடு பரிமாறக்கூடியவன் என்னும் கருத்தை வயிறு விளக்குகின்றது.

4. சூத்திரன்—கால். ஒரு கயிறு பல மணிகளை சிதையாமல் தன்னில் கோத்துக்கொண்டு அவற்றைத் தாங்கிக்கொள்வதைப்போலத் தாங்குபவன். இவன் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலாளி.

சூத்திரம்—கயிறு. மணிகளைத் தாங்கும் நூலைப்போல பிராம்மண, க்ஷத்ரிய, வைசியரென்னும் இம்மூவினத்தினரையும் காப்பாற்றக்கூடியவன். வயிறு, தோள்கள், தலை என்னும் இம்மூன்றையும் கால்கள் தாங்கிக்கொண்டு நடக்கின்றன. அதேபோலப் பல பொருள்களை உற்பத்தி செய்து உலகத்தைப் பாதுகாக்கக் கூடியவன் தொழிலாளி. சூத்திரன் என்றால் கடவுளுக்கு ஒப்பானவன் என்பது கருத்தாகும். கடவுளுக்கும் சூத்திரதாரி என்னும் ஒரு பெயருண்டு. இவனுடைய பெருந்தொண்டு மற்றைய மூவர் செய்யும் தொண்டைவிட உயர்ந்தது. ஆதலினால் சூத்திரன் மற்றவர்களைப்போல ஜபதபாதிகளைச் செய்யவில்லையானாலும் இவனுக்கு நற்கதி உண்டு. இவனுடைய தொண்டு மக்களைக் காப்பாற்றும் ஒப்புயர்வற்ற நற்றொண்டு. சூத்திரன் என்றால் கடமை வீரன் என்பதாகும். கடமை வீரனைக் கடவுள் கைவிடமாட்டார் என்பது இதன் கருத்தாகும். இந்த தத்துவங்களை ஆக்கையில் அமைந்துள்ள அங்கங்களின் மூலம் மனுஸ்மிருதி நினைவூட்டுகிறது. இதை உணராமல் சில ஊதாரிகள் ஜாதியில் உயர்வு தாழ்வுகளைக் கற்பித்து இவை உடம்பால் தோன்றியதென்று மாற்றிவிட்டனர்.

இந்திய நாட்டில் ஜாதிகளின் தோற்றத்துக்கு மூல காரணம் தொழிலும் அறிவும்தான் ; உடம்பல்ல என்பதை பகவத்கீதையில் கண்ணபிரானும் தெளிவாக விளக்கியுள்ளார்.

பல ஜாதிகள்

தொழில்களில் பலவகை உட்பிரிவுகள் உள்ளன. பாண்டத் தொழில், உலோகத் தொழில், மரத்தொழில், நெய்தற்றொழில், உழவுத் தொழில் என்பன போன்ற இன்னும் பல உட்பிரிவுகள்.

வியாபாரத்திலும் காய்கறி வியாபாரத்திலிருந்து கப்பல் வியாபாரம் வரையிலும் பல பிரிவுகள் உள்ளன.

காவல் துறையிலும் பல உண்டு. கடற்படை, காலாட் படை, விமானப்படை குதிரைப் படை, யானைப் படை, வாட் படை, விற்படை, போன்ற போற் பயிற்சிகளிலும் பல. மற்றும், ஒற்று, அமைச்சு, சேனாதிபதி என்னும் பிரிவுகள் உண்டு.

அறிவியல் துறையில் ஜோதிடம், கணிதம், பௌதிக ஆராய்ச்சி, ஆன்மிகம் போன்ற பல துறைகள் உண்டு.

மேற்கூறிய நான்கு பிரிவுகளிலும் உட்பிரிவுகள் பல இருப் பதனால் ஒவ்வொரு பிரிவிலும் பற்பல ஜாதிகள் தோன்றின. இவைதான் பிற்காலத்தில் பல ஜாதிகள் என்னும் பிரிவுகளை உருவாக்கிவிட்டன.

ஒரு நாட்டுக்கு முதுகெலும்பாக உள்ளவை தொழிலுற்பத்தி, முறையான பங்கீடு, தீமைகளைப் போக்கும் திறமை, அறி வுடைமை என்பனவாகும். இந்த நான்கும் நேர்மையாக நடை பெறுமாயின் நாடு நலம் பெறும். இவற்றுள் ஒன்று பழுதுபட் டாலும் நாட்டிற்கு நலிவு ஏற்படும். நாடு நலிவடையாமல் இருக்கவேண்டுமாயின் அவரவர்களுக்கு விதித்துள்ள கடமை களை தவறாமல் பின்பற்றவேண்டும். இதைத்தான் பகவத் கீதை போதிக்கிறது.

அறிவாளிகளின் கடமை மக்களுக்கு நல்லறிவை போதித்து, நன்மை தீமைகளை விளக்குவது, பூசாத்திரம் முதற்கொண்டு வானசாத்திரம் வரையிலும் ஆராய்வது.

காவலனின் கடமை அதர்மத்தை அழித்து தருமத்தைக் காப்பாற்றுவது.

வியாபாரியின் கடமை தராசு முன்னைபோல வஞ்சனை யின்றிப் பொருள்களைத் தக்க முறையில் மக்களுக்கு விநியோகம் புரிவது.

தொழிலாளியின் கடமை சோம்பித் திரியாமல் பொருளுற்பத்தியைப் பெருக்குவது. இப்பணிகளில் வெறுப்பு — விருப்பு என்னும் இரண்டையும் விலக்கித் தத்தம் கடைமைகளைச் செய்வதனைக் கண்ணபிரான் நிஷ்காம கர்மம் என்று கூறினார்.

தீண்டாமை

தீண்டாமை என்னும் வியாதி எப்படி இதனுள் நுழைந்தது என்பது ஒரு கேள்விக் குறியே என்று கூறலாம்.

தீண்டாமை என்பது சுத்தம், அசுத்தம், தக்க செயல், தகாத செயல் என்பவற்றின் அடிப்படையில்தான் தோன்றி இருக்க வேண்டும். தூய்மையான ஆடையை அணிந்து கொண்டுள்ளவன் ஒரு கூட்டத்தின் இடையில் நுழையும்போது, மிகவும் அழுக்கான சேற்றைப் பூசிக்கொண்டுள்ளவன் தன்பேரில் உராயக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அவ்வழுக்கு தனது ஆடையில் ஒட்டாமல் இருக்க இயல்பாகவே ஒதுங்குகிறான். அல்லது அவனை ஒதுங்கச் சொல்கிறான். ஒரு கொடிய செயலைக் கண்டால் சிசு அத்தி, ஸ்த்ரீ அத்தி, குரு அத்தி, அநாதைகளைச் சித்திரவதை செய்கின்ற பாவிகளைக் கண்டாலும் பாவம் என்று நினைக்கத் தோன்றுகிறது. நமக்கு நெருங்கிய நண்பனாக இருந்தாலும், நமது சொந்த உறவினனாக இருந்தாலும், நமது விருப்பத்துக்குரிய மனைவியாகவே இருந்தாலும் ஒரு தகாத செயலைச் செய்துவிட்டு நம்மை நெருங்கும்போது நாம் அவர்களைப் பார்த்து என்ன சொல்வோம்? "தூர நில் நெருங்காதே, உன்னைத் தொட்டாலும் உன் பாவம் என்னைப் பற்றிக்கொள்ளும்," என்று நாமே கூறுவோம். இந்த வெறுப்புக்குக் காரணம் அவர்கள் புரிந்த தீய செயல் என்பதை நாம் மறுக்கமுடியாது.

இந்துமதம் பசுவை கோமாதா (பசுவென்னும் தாய்) என்று போற்றிப் புகழ்கிறது. நாம் பிறக்கும்போது தாயின் பாலும் நமது வாயில் புகட்டப்படுகிறது. ஆகவே தாய்வேறு பசுவேறு அல்ல என்பது இந்துமதக் கொள்கைகளும் ஒன்றாகும். இந்துமதத்தில் பாவச் செயல்கள் என்பவை பலவாகும். அவற்றுக்குள் பெரும்பாவங்கள் என்று குறிப்பிடத்தக்கவை 5. அவையாவன:

1. கொலை, 2. களவு, 3. கள், 4. காமம், 5. பொய் என்பனவாகும். இவற்றுள் கொலையைத் தலைப்பில் கூறுவதனால் இவ் வைந்துக்குள்ளும் கொலை மிகக் கொடியதெனப் புலனாகிறது. அக் கொலைகளுக்குள்ளும் பசுவதை தாயைக் கொன்றதற்குச் சமமெனலாம். அறியாமையாலும், வறுமையாலும் அப் பசுவையே அறுத்துத் தின்றுவிட்டு அதற்கு அடுத்த பாவச் செயலான மதுவையும் அருந்தி அருகில் ஒருவன் வருவானாயின் அந்தக் கொடும்பாவியைக் கண்டபோது இரக்கமுள்ள நெஞ்சம் என்ன நினைக்கும் ? அந்த உள்ளம் அவனைத் தொடவும் அஞ்சுமல்லவா ? இதற்குமேல் நான் விளக்க வேண்டியதில்லை. உடன் பிறந்த சகோதரர்களைவிட மேலாக அன்னைபோன்ற பசுவுக்குப் பிறந்த காளை மாடுகள் வண்டிகளை இழுப்பதுடன், உழவுத்தொழிலுக்குப் பேருதவிகளைப் புரிகின்றன. அவற்றை அறுத்துப் புசிப்பது அடாத செயலென அந்தணர்கள் கருதியதை நாம் குற்றமாகக்கொள்ளமுடியாது.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்,"

என்றார் திருவள்ளுவர். இவ்வாறு அன்புள்ளங் கொண்டவர்கள் வெறுக்கத்தக்க முறையில் மாட்டிறைச்சி முதலானவற்றைப் புசித்து மதுபானாதிகளை அருந்திச் சில மக்கள் அறியாமையினால் தூய்மையற்ற வாழ்க்கையைப் பின்பற்றியதனால்தான் தீண்டாமை என்னும் வியாதி தோன்றி இருக்கக்கூடும். பிறப்பால் மக்கள் தாழ்ந்தவர்கள் அல்லர். எல்லோரும் சமமே. ஆனால் அவரவர்கள் புரியும் செயல்களால் புண்ணியவான்களும், பாவிகளும், உருவாகின்றனர். இவற்றால் விருப்பு—வெறுப்பு என்றும் உயர்ந்தோர் — தாழ்ந்தோர் என்றும் ஏற்றத் தாழ்வுகள் தோன்றியுள்ளன. மக்களினத்துக்குள் தீண்டாமை என்னும் தீமை உண்டானதற்கு வேறு காரணம் யாதேனும் இருந்தால் அதையும் சிந்திக்கவேண்டியதே !

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்". (குறள்)

என்னும் குறளையும் வாசகர்கள் சிந்திக்கவேண்டும். உடம்பால் ஜாதி என்னும் நிலைமை உருவானபோது யாரோ செய்த தீமைகள் ஒரு சமூகத்தையே நசுக்கி நாசம் செய்துவிட்டது. பிறப்பாலேயே நாங்கள் அந்தணர்கள் என்று கூறிக்கொள்பவர்களை நான் இங்கே அந்தணர்கள் என்று குறிப்பிடவில்லை;

ஒருதாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் இடத்திலேயே அந்தணப் பண்புடையவர்களும் உண்டு அரசப் பண்புடையவர்களும் உண்டு. அசுர குணம் படைத்த பிள்ளைகளும் பிறப்பதுண்டு. உதாரணத்துக்கு இராவணனையும் விபீஷணனையுமே சான்றாகக் கொள்ளலாம்.

இந்தியா புராதனமான வரலாற்றை உடையதென்பதை தாயாகிய மதம் என்னும் தலைப்பில் பார்த்தோம். நமது நாட்டில் நல்லாட்சியை நிறுவுவதற்காக பலர் பாடுபட்டு அந்நிய ஆட்சியை அகற்றினோம். அது அகன்று 40 ஆண்டுகள்தாம் ஆயின. இதற்குள்ளாகவே நமது நாட்டில் பலவிதமான ஊழல்கள் மலிந்துவிட்டிருக்கின்றன. அதேபோலச் சில கொடுமைகள் நல்லவற்றிலும் புகுந்திருக்கின்றன. இதுபோன்ற கொடுமைகளைப் போக்குவதற்காக அவ்வப்போது பல பெரியோர்கள் தோன்றிக்கொண்டும் இருக்கின்றனர். அவர்களிடம் ஜாதிக் கொடுமை. தீண்டாமை என்னும் வியாதி அணுகவில்லை. அவர்கள் அறியாமைகளை அகற்றித் தீண்டாமையையும் தொலைக்க அரும்பாடுபட்டுக் கொண்டும் வந்திருக்கின்றனர். அவ்வப்போது நாம் அணிந்துக்கொள்ளும் ஆடையில் அழுக்கடைவதைப்போல திரும்பத்திரும்பத் தீமைகள் மக்களிடம் நுழைந்து கொண்டே இருக்கின்றன. சவுக்காரத்தைக் கொண்டு நீரால் ஆடையில் படியும் அழுக்குகளைத் தப்பி எடுப்பதைப்போல எடுக்க பிறந்தவர்கள்தான் மகான்கள்.

ஆழ்வார்கள், நாயன்மார்கள், அகத்தியர், புலஸ்தியர். வசிட்டர், வான்மீகி, வியாசர், விஸ்வாமித்திரர் போன்ற பெரியோர்கள் அனைவரும் பிராம்மணர்களல்லர். பிராம்மணர்கள் வணங்கி வழிபடும் இராமர், கண்ணபிரான், சிவபெருமான், பார்வதி, வள்ளி நாயகி போன்ற தெய்வங்களும் பிராம்மண இனமென்று கூறமுடியாது. ஆகவே ஜாதியில் ஏற்றத் தாழ்வுகளும் தீண்டாமையும் இடைக்காலத்தில் நுழைந்த இடைச் செருகலே என்பதில் ஐயமில்லை.

இனி நாம் பின்பற்றவேண்டியது தாழ்த்தப்பட்ட மக்கள் என்னும் சொல் இந்த நாட்டில் தலை காட்டக்கூடாது. அதற்கு நாம் தூய நெறிகளைக் கடைபிடித்தல் வேண்டும். அப்போது தாழ்த்தப்பட்டவர்கள் என்னும் சொல் தானாகவே மறைந்துவிடும். இதற்கு ஒரு போராட்டம் தேவையில்லை. அறிவாகிய விளக்கை ஏற்றினால் இருள் தானாக விலகிவிடும். இந்து மதத்திலேயே இதற்காகப் பல பெரியோர்கள் தோன்றி ஜாதி என்னும் விஷவேரைக் களைந்துவிட்டனர். ஜாதி என்னும்

ஆணிவேர் அற்றுச் சுமார் அரைநூறாண்டுகள் ஆயிற்றெனலாம்; சில ஜல்லி வேர்கள் அங்கொன்று இங்கொன்று காணக்கூடும். அதனால் இனி ஜாதிகளைக் காப்பாற்றமுடியாது. இன்றைய அரசு ஜாதிகளைப் போக்க முயன்றிருந்தால் முப்பது ஆண்டு களுக்கு முன்னமே ஜாதிகள் செத்துச் சாம்பலாய்விட்டிருக்கும். அதைவிடுத்துத் தற்போது இந்திய அரசு ஜாதிகளின் பெயரால் சலுகைகளை வழங்கிக்கொண்டு வருகிறது. ஜாதியின் பெயரால் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் சலுகை செய்கின்றவரையில் ஜாதிகள் மறையாது. அரசாங்கமே ஜாதிகளின் பெயரால் சலுகைகளைச் செய்வது அவற்றுக்குப் புத்துயிர் அளிப்பதற்கு ஒப்பாகும்.

"எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர்இனம்
எல்லோரும் இந்திய மக்கள்
எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்"

என்றார் மகாகவி. எல்லோருக்கும் கல்வி அறிவைப் பெருக்க இளம்பிள்ளைகளுக்குக் கட்டாயப் பாடமாக்கி இருக்கவேண்டும். சட்டத்தில் ஜாதி என்னும் பெயரை நீக்கி எல்லோரும் ஒரே இனம் என்னும் சட்டமியற்றி இருக்கலாம். எந்த ஜாதியினிடத்தும் பாராபட்சம் சிறிதுமில்லாமல் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் அனைவருக்கும் சலுகை செய்திருக்க வேண்டும். கல்வியறிவு ஏழை மக்களுக்குப் பெருகி இருந்தால் ஜாதிவெறி தானாகவே குறுகி இருக்கும். சட்டத்தில் ஜாதிகளின் பெயரே நீக்கப்பட்டுவிட்டிருந்தால் தம்மை மேல்ஜாதி என்று கருதிக்கொண்டிருந்த படித்த மேதாவிகளும் நிலைமையைப் புரிந்துகொண்டு தமது பிடிவாதத்திலிருந்து தளர்ந்திருப்பார்கள், இந்திய ஆட்சியில் ஜாதிவெறி பிடித்தவர்களை மட்டும் ஒதுக்கி சிறந்த அறிவாளிகளுக்குப் பொறுப்புள்ள பதவிகளை வழங்கி இருக்கலாம். இதை விடுத்து, சிறு பிள்ளைகள் படிக்கப் பள்ளிக்குச் செல்லும்போதே இந்திய அரசு இன்னமும் உன்ஜாதி என்ன என்று கேட்டுப் பதிவேட்டில் எழுதுகிறது. இதுவா ஜாதிகளைப் போக்கும் இலட்சணம்? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகைகளும், பதவிகளும் அளிக்கப் படுமாயின் ஜாதியில் ஏற்றத் தாழ்வுகள் அகன்று விடுமென்று இந்திய அரசு இவ்வாறு நடந்துகொள்கிறது. உண்மையில் இந்தப் போக்கு நன்மைக்குப் பதிலாகத் தீமைகளையே விளைவிக்கும் ஜாதியின்பேரில் உரிமைகோரும் தராசின் ஒரு தட்டு தாழும்போது மறுதட்டு மேலுக்குப் போகும். இந்த நிலையில் கீழும் மேலுமாகப் போகுமேயன்றிச் சமநிலைக்கு வரவே வராது.

மரணத்திருவாயிலுள்ள ஜாதிகளுக்கு இன்று இந்திய அரசு செய்துகொண்டு வருவது ஜாதிகளை உயிர்ப்பிக்கும் செய்ல்களைப்போலவே தோன்றுகிறது. ஆயினும் இனி இந்தியாவில் ஜாதிகள் நிலைத்திருக்கமுடியாது. தீண்டாமை என்னும் பேயும் மாண்டுவிட்டது.

எண்சீர் விருத்தம்

தீண்டாமை மாண்டுபோய் பலநாள் ஆச்சு
தீயவர்கள் தீண்டாமை உண்டுண் டென்று
வேண்டு மென்றே பூசல்களை விளைவிக் கின்றார்
விரும்பியதோர் பதவிகளைப் பிடிக்கவேண்டி
தூண்டுகிறார் சுயநலத்தின் புலிகள் மேலே
தோல்மட்டும் பசுத்தோலாம் வெளித்தோற்றத்தில்
காண்டுமெனின் கூறுகிறேன் சிந்தியுங்கள்
கைநெல்லிக் கனிபோலக் காணும் உண்மை.

தீண்டாமை புகைவண்டி நிலையத்தில்லை
செப்பில் இன்னும் பேருந்து களிலுமில்லை.
வேண்டுபொருள் மாறும்சந்தை களிலுமில்லை
விழாக்களில் சென்றாய்ந்தாலும் காணவில்லை;
காண்டரிய கலைக்கூடங் களிலுமில்லை
கவினுதிரைப் படம்பார்ப்போ ரிடத்துமில்லை;
மாண்புடைய பெரியோர்கள் வாயிலில்லை
மாண்டதனை வேண்டுமென்றே தூண்டுகின்றார்.

கடைவீதி களிலும்நாம் காணவில்லை
காமுகர்கள் தம்மிடத்தில் முதலே இல்லை
அடர்ந்தநகர் சிற்றுண்டி சாலைசென்று
அருந்துபவர் தங்களிடம் அணுகவில்லை;
குடியரிடம் கூடவிது குறுகவில்லை
குடிகேடர் வாக்குரிமை பெறுதற்காக
மடிந்துவிட்ட தீண்டாமை இருக்குதென்று
மயக்குகிறார் சிலரதற்கு மயங்குகின்றார்,

ஆலைகளில் பணிபுரிவோ ரிடத்துமில்லை
ஆர்வமுள்ள போர்ப்படைபால் அணுகவில்லை.
காலையிலும் மாலையிலும் காவல் காக்கும்
காவல்நிலை யங்களிலும் காணவில்லை

சாலப்பெருந் தலைவர்களின் வரவேற்புக்கு
சாரும்பல குழுக்களிலும் சாரவில்லை
மேலுமிது இருக்குமிடம் எங்கே என்னில்
மேடைகளில் பிதற்றுபவர் வாயில்தானே.

வள்ளுவனார் நாயன்மார் ஆழ்வாராயோர்
வடலூரார் காந்திமகான் தன்னை ஒப்பார்
கள்ளமுறும் அப்பாம்பைக் கொன்றே விட்டார்
கயவரந்த செத்ததனைப் பற்றிக்கொண்டு
துள்ளுதுபார் தீண்டாமை என்னும்பாம் பென்றுமீ
தொலைக்க உங்கள் வாக்குரிமை தாரீரென்றும்
குள்ளநரிக் கூட்டங்கள் ஊளையிட்டுக்
குழம்புதப்பா சுயநலத்தால் பதவிக்காக !

உண்மை இவ்வாறிருந்தும் இந்திய அரசு பள்ளிக்குச் செல்லும் சிறுவர்களுக்கு ஜாதிகளின் நினைவூட்டுவதும், ஜாதிகளின் பெயரால் சலுகைகள் செய்வதும் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஒரு சிலர் தாழ்த்தப்பட்டவர்கள் என்னும் பெயரால் செய்யும் சலுகைகளை நன்மை என்று கருதுகின்றனர். அதன் அடிப்படையில்தான் உதவிகளும் புரியப்படுகின்றன. இதற்காக இவ்வுதவிகளைப் பெறவேண்டும் என்னும் நோக்கத்தால் தங்களைத் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லிக் கொள்ளவும் சம்மதிக்கின்றனர். இவற்றைச் சிந்திக்கும்போது சில மதத்தினர் அற்பமான உதவிகளைப் புரிந்து மதத்தை மாற்றும் அடாத செயலுக்கு நிகராகும் சலுகைகளின் நிமித்தம் தம்மைத் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகின்றனர். ஆகவே ஜாதிகளின் அடிப்படையின் புரிகின்ற சலுகைகள் அறவே நிறுத்தப்பட்டு, ஏழ்மை நிலையில் உள்ள அனைவருக்கும் பொதுவாக அரசு உதவி புரிவதுடன் கல்வி அறிவைப் பெருக்கவேண்டும். சில அரசியல்வாதிகள் பதவி வேட்டைக்காகத் தீண்டாமை என்றும், ஜாதிகள் என்றும் பொதுமேடைகளில் நாடகமாடுகின்றனர். காரணம், எங்கு அத்தகைய மக்கள் நிறையக் குடியிருக்கின்றனரோ அங்கு அரசியல்வாதிகளின் மாயாஜாலங்களில் மக்கள் மயங்குகின்றனர்.

மடங்கள்

யான் எனது என்னும் அகந்தையற்று, தம்மை தெய்வீகத் தொண்டுக்காகவே அர்ப்பணித்துக்கொண்டவர்கள் துறவிகள். இந்த மகான்கள் இல்லறவாசிகளின் இல்லங்களில் இராக்காலங்களில் தங்க விரும்புவதில்லை. ஆகவே அத்தகைய பெரியோர்

தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி இடங்களே மடங்கள். ஆலயங்களின் பெருமையைவிட மடங்களின் பெருமை ஒரு வகையில் அதிகமாகும். அதனால்தான் இறைவனை வணங்க நிறுவியுள்ள இடங்களைத் தேவாலயங்கள் என்பதைப்போல துறவியர் தங்கும் இடங்கள் மடாலயங்கள் என்று கூறப் பெறுகின்றன. அரசன் வாழும் இடமாய் இருப்பினும் அதற்கு ஆலயம் என்னும் பெயர் கூறுவதில்லை. அரண்மனை என்று தான் கூறப் பெறுகின்றது. (அரண்மனை – காவல் வீடு) துறவியர் நடமாடும் தெய்வங்களுக்குச் சமமாகும்; துறவி களுடைய பெருமை அளப்பரிய பெருமையாகும்.

உலகம் தோன்றின நாளிலிருந்து இதுவரையிலும் பிறந்து இறந்தவர்களின் எண்ணிக்கையை எப்படிக் கணக்கெடுக்க முடியாதோ அப்படியே துறவிகளின் பெருமைகளைச் சொல்ல முடியாதென்று தெய்வப் புலவர்,

"துறந்தார் பெருமை துணைகூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"

என்று கூறுகிறார். ஆகவே துறவிகளின் பெருமை சொல்லுக் கடங்காதது. கருணை, தூய்மை, பேரறிவுடைமை, பந்தப் படாமை, தன்னலமின்மை என்னும் நற்குணங்கள் நிறைந்த வர்கள் துறவிகள் ; அரசர்களும் முடிதாழ்த்தி அடிபணியத்தக்க பெருமையுடையவர்கள் துறவிகள். இவர்கள் மனைவி மக்கள் என்னும் எண்ணமற்று, ஆன்மநெறிகளை அவனிக்குப் புகட்டு வதற்காகவே வெளிப்பட்டவர்கள். அப்பர், ஞானசம்பந்தர், மணிவாசகர், சுந்தரர், பட்டினத்தார், பத்திரகிரியார், அருணகிரிநாதர், தாயுமானார், சங்கரர், இராமாநுஜர், மத்துவர். நம்மாழ்வார் போன்ற ஆழ்வாராதியரின் பரந்த தெய்விகப் பணிகள் போற்றற்குரியனவாகும். அத்தகைய பெரியோர்களின் வழிவந்தவர்களே மடாதிபதிகள், இவர்கள் அல்லும் பகலும் அயராமல் ஆண்டவன் பணியையும் ஆருயிர்களின் பணியையும் செய்யத் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட மேலோர்கள். முனிவர்கள் என்னக்கூடியவர்கள் பெரும்பாலும் வனவனாந் தரங்களிலும் மலைப் பிரதேசங்களிலும் ஆஸ்ரமங்களை அமைத்துக்கொண்டிருக்கும் தவசீலர்களாகும். ஆஸ்ரம வாசிகளென்னும் முனிவர்களுக்கு மனைவி மக்களும் உண்டு. முனிகுமாரர்கள், முனி பத்தினிகள் என்று அவர்களை இதிகாசாதி நூல்கள் கூறுகின்றன. மடங்களில் தங்கியுள்ள துறவிகள் மக்கள் வாழும் இடங்களைத் தாமாக நாடிச்சென்று அம் மக்களுக்கு அறநெறிகளை போதிப்பவர்கள், அதனால்

மடாலயங்கள் நகர்ப் புறங்களில் இருக்கும் முனிவர்களின் அநுக்கிரகத்தைப் பெறவேண்டுமானால் மக்களே அவர்கள் உள்ள வனங்களுக்கு நாடிச் செல்லவேண்டும், ஆகவே மடங்களில் வாழும் துறவிகள் கருணையாளர்களாகும்.

பக்தி நெறியையும் அறநெறிகளையும் உலகத்திற்குப் பரப்புவதற்கு நாடு, நகரம், பட்டி தொட்டி முதலான இடங்களுக்கும் சென்று ஜாதி, இனம், குலகோத்திரமென்பதைப்பாராமல் தொண்டாற்றக்கூடிய இப்பெரியோர்களை தெய்வத் தொண்டர்கள் என்றும் கூறுவர். இப் பெரியோர்களால் பாடப் பெற்றுள்ள இலட்சோபலட்சம் அருட்பாடல்கள் நமது பரத கண்டத்தில் இன்றும் இருக்கின்றன. அந்தப் புனித மகாத்துமாக்களின் மரபில் வந்தவர்கள்தாம் இன்றுள்ள மடாதிபதிகளும்; சமீப காலத்திலும் பல பெரியோர்களால் பல மடங்கள் தோன்றியுள்ளன.

தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள், திருவண்ணாமலை, குன்றக்குடி, துறைமங்கலம், மதுரை, ஆழ்வார் திருநகரி, திருக்கோயிலூர், கும்பகோணம், விருத்தாசலம், மாயூரம், நாங்குநேரி, திருக்குறுங்குடி, காஞ்சி, அகோபில மடம், ஸ்ரீரங்கம் போன்ற மடங்கள் தவிர தமிழ்நாட்டில் இன்னும் பல மடங்கள் உண்டு. வட நாட்டில் காசி, ஹரித்துவார் போன்ற இடங்களில் புகழ்பெற்ற பல மடங்கள் இருக்கின்றன. மற்றும் பல மாகாணங்களில் மேல்கோட்டை, சித்தகங்கா, சிருங்கேரி, பெஜாவூர் மடம், பேஜிமடம், கைலாச மடம், இராமகிருஷ்ணா மடம், விவேகானந்தர் மடம், இராமனந்தர் மடம், அசதமடம் போன்ற மடங்கள் இந்தியாவில் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவற்றுள் இலட்சக்கணக்கில் துறவிகள் இன்றும் இருக்கின்றனர். சில மடங்களுக்கு அரசர்களாலும் அடியார்களாலும் வழங்கப்பெற்ற ஏராளமான சொத்துக்களும் இருக்கின்றன.

இன்று மடங்களை நடத்திவரும் பெரியோர்களும் சந்நிதானங்களும் படிக்காதவர்களோ பண்பற்றவர்களோ அல்லர். மக்களுக்கு அறிவுரைகளும் ஆசிகளும் வழங்கவல்ல அறிவாற்றல் படைத்தவர்கள்தாம் அப்படி இருந்தும் இன்று இந்து தருமத்துக்கு எய்தியுள்ள இன்னல்களையும், இந்திய அரசே இந்து தருமத்தைப் பாதுகாப்பதை மறந்து மயங்கி நிற்கும் தன்மையையும் நன்கு உணர்ந்துள்ளனர். இந்திய அரசு தன்னை "மதசார்பற்ற அரசு" என்று பட்டவர்த்தனமாகப் பட்டங் கட்டிக் கொண்டிருக்கிறது. இதுதான் நல்ல தருண

மென்று. வந்த மதங்கள் நம் சொந்த மதமான இந்து தருமத்தை அழிக்க ஆயத்தமாக இருக்கின்றன. பட்டி தொட்டிகளி லெல்லாம் பாதிரிமார்களின் படை தமது மதத்தைப் பெருக்க பலவிதமான நெறிகளைப் பயன்படுத்துகின்றன. இந்த நிலை யில் கிறிஸ்துவர்களும், முகலாயர்களும் மதத்தின்பேரில் மனித வேட்டை ஆடுகின்றனர். மதம் மாற்றியபோதே இந்துக் களுக்குத் தாய் தந்தையர் இட்டுள்ள பெயர்களையே மாற்றி சமயப் பற்றோடு நாட்டுப்பற்றையும் நாசமாக்கிக்கொண்டு வருகின்றனர். வந்தவனோ, வீட்டை இடிக்கிறான். அவனிடத் தில் கைக்கூலி வாங்கிக்கொண்டு இந்திய மண்ணில் பிறந்தவனே காட்டிக் கொடுக்கிறான். இவற்றை எல்லாம் இந்திய அரசு கண்டும் காணாததைப்போலத் தான் கட்டிக்கொண்டிருக்கும் பட்டத்துக்காக ஒதுங்கி நிற்கிறது. இந்த ஆபத்தான சமயத்தில் மடாதிபதிகளும் தம்மை மறந்து இருப்பார்களானால் காலத்தை வென்ற இந்து மதத்தை இனி காப்பாற்றமுடியாது. கோயில் களையே இடித்த குண்டர்களுக்கு இனி இடமளிக்க நேர்ந்தால் மடங்களும் இருக்கின்ற இடந்தெரியாமல் மட்டமாக்கி நிரவி விடுவார்கள்.

இன்று இந்திய நாட்டிலுள்ள இந்திய மடாதிபதிகள் அனை வரும் ஒன்றுபடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவர்கள் விழித்து எழவில்லையானால் இந்து மதத்தையோ நாட்டையோ இந்திய அரசாலும்கூடக் காப்பாற்றமுடியாது. இந்திய அரசு தான் செய்துக்கொண்டுள்ள தாறுமாறான சட்டங்களால் இன்று தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்திய அரசின் இன்றைய போக்கைத் திருத்தவேண்டுமானாலும் நமது துறவி களால்தான் முடியும். துறவிகள் நாட்டின் நலனையும் மதத்தின் மாண்பையும் கருதி துணிந்தெழுந்தால் அரசின தற்போதைய போக்கையும் அந்நியர்களின் சதிதிட்டங்களையும் நீக்குவதற்கு ஆண்டுகள் தேவைப்படாது. ஒரு சில மாதங்களே போது மானதாகும். ஆனால் இது பிற மதத்தினரின் தொகை இந்திய மண்ணில் பெருகுவதற்கு முன்னமே தொடங்கினால்தான்; காலம் கடத்தினால் மேலும் அபாயங்கள் அதிகமாகும் என்பதை நான் விளக்க வேண்டியதில்லை, இந்து தருமத்துக்கும் இந்திய நாட்டுக்கும் ஆபத்தை விளைவிக்கவே கிறிஸ்துவ மதத்தினரும் முகலாயர்களும் இந்தியாவில் மக்கள் கொள்கையைத் தீவிரமாகப் பெருக்கிக்கொண்டிருக்கின்றனர். இந்த உண்மைகளைச் சிந்திக்காமல் இந்திய அரசும் இந்து சமூகத்தைமட்டும் அறுவை சிகிச்சையினால் அதம் செய்துகொண்டு வருகிறது. இந்துக் களும் இந்து மதபோதகர்களும் கட்டுப்பாடற்ற கண்மூடிகள்

என்று பிறர் கேலி செய்யும் இடத்துக்கு இந்திய சமூகம் தள்ளப்பட்டிருக்கிறது. இந்து மதத்துக்குத் தற்போது பல்முனைத் தாக்குதல்கள் தொடங்கியுள்ளன. இந்த இடிபாடுகளிலிருந்து விடுபடவேண்டுமானால் மடாதிபதிகளும், பீடாதிபதிகளும் சன்னிதானங்களும் வெளிப்படவேண்டும். தத்துவ சாத்திரங்களின் அரும்பொருள்களை ஆராய்ந்துகொண்டு இருப்பதற்கு இது தருணமல்ல. அவற்றை அமைதி தோன்றியபிறகு பார்த்துக்கொள்ளலாம்.

ஆன்மாவின் உண்மை நிலையை இன்னதென்று உணர்ந்து மரண பயமற்ற துறவிகள் இலட்சக் கணக்கில் புற்றீசல்போல புறப்படப் போகிறார்கள் என்னும் விஷயம் தெரிந்த மறுநிமிடமே வஞ்சகர்களின் நெஞ்சங்களில் இடிவிழும். அரசாங்கமும் தனது தீமைகளை உணர்ந்து அவற்றைத் திருத்திக்கொள்ளும்! விவேகானந்தர் என்னும் ஓர் இளந்துறவி பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் அமெரிக்காவில் சென்று இந்து மதத்தின் பெருமையைப் பசுமரத்து ஆணியைப்போல் அந்நாட்டு மக்களுக்குப் பதியவைத்தார். இன்றும் அவருடைய அரும்பணியை அவனி மக்கள் குன்றின்பேரில் வைத்த குடவிளக்கைப்போலக் கொண்டாடுகின்றனர். அதே மரபில் தோன்றின இலட்சக் கணக்கான துறவிகள் பிரசாரம் செய்யப் புறப்பட்டால் இந்திய நாடுமட்டுமல்ல, மற்றை நாடுகளும் மயக்கம் தெளிந்து இந்து மதத்தின் ஆன்மிக நெறியை நாடும் என்பதை நான் விளக்க வேண்டியதில்லை. மதத்தின் போர்வையில் நாடு பிடிக்க முயலும் நாசக்காரர்கள் இருப்பின் அவர்கள் ஆசை மண்ணோடு மண்ணாவது திண்ணமாகும். சில அப்பாவி மக்கள் பிறமதத்தினர் வீசிய வஞ்சக வலைகளில் விழுந்திருந்தால் அவர்களும் எழுந்து “கண்மூடித்தனமாக அல்லவா நாம் விழுந்துவிட்டோம்!' என்று வருந்திப் பழைய நிலைக்குத் திருந்தி வருவது பெரிய காரியமல்ல. மற்றும் மதத்தின் பெயரால் நடக்கும் ஏமாற்று வித்தைகள் அனைத்தும் இருக்குமிடம் தெரியாமல் மறையும். பகைவர்களுக்கு ஒத்தூதும் சில கைக்கூலிகளுக்கும் நல்ல புத்தி வரும். வசையில் வளர்ந்த வாய்வீரர்களின் பசையற்ற பேச்சுக்கள் அசைவற்று ஸ்தம்பித்துவிடும். ஒரு சிலருக்கு இந்து தருமத்தின் பெருமை இத்தகையதென்று தெரியவில்லை. காரணம் அறிந்த பெரியோர்கள் இறந்து கொண்டே இருக்கின்றனர். அறியாத குழந்தைகள் பிறந்து கொண்டே இருக்கின்றன. இந்த இளஞ்சிறார்களின் உள்ளத்தைப் பள்ளிக் கூடங்களிலேயே திசைமாற்றப்படுகின்றன. ஆகவே நாட்டில் இளம் பிள்ளைகளுக்கு இந்து மதத்தின்

பெருமை இன்னதென்பதே புரியவில்லை. இந்த அறியாமையைப் போக்கி, சரியான நெறிமுறைகளை போதிக்க ஒவ்வொரு மடாதிபதியும் தம்து பரிவாரங்களுடன் வெளிப்படவேண்டுமென்பது மக்களுடைய வேண்டுகோளாகும்.

" அடே இந்தியனே! உன் மதம் ஒன்றுக்கும் உதவாதது. அதில் குப்பையும் கூளமும்தான் கிடக்கின்றன. அது சாக்கடையைப்போல நாற்றம் வீசுகிறது. அந்த நாற்றம் பிடிக்காமல்தான் சிலர் எங்களுடைய தூய்மையான நல்ல மதத்தில் வந்து சேருகின்றனர்.

" எங்கள் மதத்துக்குத் தலைமையிடம் உண்டு. எங்கள் மதத்தில் கட்டுப்பாடுகளும் திட்டவட்டமாக வகுத்துக்கொண்டிருக்கிறோம். நாங்கள் ஆலயங்களுக்குச் செல்லும்போதும் வழிபாடு நடத்தும்போதும் எவ்வளவு கட்டுப்பாட்டோடு நடத்துகிறோம் பார்! உங்கள் மதத்தில் இத்தகைய கட்டுப்பாடுகள் உண்டா? எங்கள் பாதிரிமார்களின் பணிகளையும் பெண் பிரசாரகர்களின் கட்டுப்பாடான பணிகளையும் பார். எப்படி நடைபெறுகின்றன? உங்களுடைய மடாதிபதிகள் கட்டுப்பாடின்றி தம் இஷ்டம்போல அவரவர்கள் மனம்போன போக்கில் போகின்றனர், எங்கள் மதம் மிகவும் உயர்ந்த மதமென்று உளறுகிறாயே! அது உண்மையாக இருந்தால் உயர்ந்தவர்களாகக் கூறிக்கொள்ளும் உங்கள் மடாதிபதிகளிடமும் பீடாதிபதிகளிடமும் ஏன் ஒற்றுமை காணப்பெறவில்லை?" என்று பிறமதத்தினர் கூறும் இழிசொற்களுக்கு நம்முடைய மடங்களிலுள்ள பெரியோர்கள் இடந்தரக்கூடாது என்பதுதான் நமது வேண்டுகோளாகும்.

இனி இந்தியாவின் ஞான முரசு திக்கு திசைகளிலெல்லாம் ஒலிக்கவேண்டும். இதுநாள் வரையிலும் இந்துமதப் பெரியார்கள் தனித்தனியாகப் புரிந்துவந்த பணிகளை ஒன்றுகூட்டவேண்டும். முஸ்லிம்கள் கிறித்தவர்களும் தத்தம் மதத்தை வளர்ப்பதற்கு ஒருங்கிணைந்து பணிசெய்வதைப்போல, இந்துக்களும் மக்களுக்கு வழிகாட்டிகளாகிய மடாதிபதிகளும், பாவலர்களும், நாவலர்களும், காவலர்களும் ஒருமுகமாகப் பணிசெய்தால் ஒழிய நாட்டையும் மதத்தையும் இனி காப்பாற்றமுடியாது. " துறவிக்கு வேந்தன் துரும்பு," என்னும் ஒரு முதுமொழியும் உண்டு. ஆகவே துறவிகள் துணிந்தால் எந்த அரசும் எதிர் நிற்க முடியாது. இவர்களின் ஈடு இணையற்ற ஆன்மிகப் பணியைத் தொடங்கினால் இந்திய மக்கள் அனைவரும் இவர்களின்

அரும்பணிகளுக்குப் பெருந் துணையாகத் திரண்டு வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

அருட் செல்வம், பொருட்செல்வம் என்னும் இரு செல்வங் களும் நிறைந்துள்ள பல மடங்கள் நமது நாட்டில் இன்னும் இருக் கின்றன. அருளும் பொருளும் ஒன்றுபட்டுப் பணிபுரிந்தால் இருளும் மருளும் நீங்கும்; தெருளும் உள்ளம் ஓங்கும். அப்பர், ஞானசம்பந்தர், மணிவாசகர், சுந்தரர், பட்டினத்தார், சங்கரர், இராமானுஜர் போன்ற பெரியோர்களின் வரலாறுகளைக் காணும்போது எவ்வாறு நகரங்களுக்கெல்லாம் சென்று சளைக் காமல் சன்மார்க்க போதனைகளைப் புரிந்து வந்தனர் என்பதை நினைவூட்டுகிறது.

பிற மதத்தினர் தத்தம் மதத்துக்கு ஒவ்வொரு தலைமை நிலயங்களை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர். அவற்றுக்கு ஏதேனும் குறைபாடுகள் நேரின் அவற்றின் தலைமை இடங்களி லிருந்து தக்கக்கட்டளைகள் வெளியாகிப் பரிகாரங்கள் ஆராயப் படுகின்றன. சீக்கிய மதத்துக்கு அமிர்தசரஸ் என்றும், முகலாயர் களுக்கு மக்கா என்றும், கிறிஸ்துவர்களுக்கு ரோமாபுரி என்றும் இருப்பதைப் போல, இந்து மதத்துக்கும் ஒரு தலைமை இடத் தைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மற்றும் இந்து மதம் ஆதியி லிருந்தே சமூக மதம் ஆனமையால் இந்துமதமும் சீக்கிய மதத் தைப்போல இந்து தரும பரிபாலனக் குழு என ஒன்றை நிறுவ வேண்டும். இதை மகான்களுடைய மரபில் வந்த மடாதி பதிகள்தாம் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்துமதம் ஒரு கூட்டாட்சிக் கொப்பானது.

முதலில் இந்து மதத்திற் சம்பந்தப்பட்ட மடாதிபதிகள் அனைவரையும் ஒன்றுகூட்டவேண்டும். பிறகு அந்த மகா சபையின்மூலம் நிருவாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அக் குழு 3 ஆண்டுக்கொருமுறை அல்லது 5 ஆண்டுக்கொரு முறை திருவுளச் சீட்டின் மூலமாகவோ அல்லது மகாசபையின் வாக்கெடுப்பின்மூலமாகவோ கட்டுப்பாடான பொறுப்புக்களை நிர்ணயித்தல் வேண்டும், இந்திய அரசு மதசார்பற்ற ஆட்சி என்று சொல்லிக்கொள்ளுகின்றவரையில் இந்து மதத்திலும் அரசு பிரவேசிக்கக் கூடாது. இஸ்லாம் மதத்தையும் கிறிஸ்தவ மதத்தையும் விட்டு ஒதுங்கி நிற்பதைப்போல இந்து மதத்தையும் விட்டு ஒதுங்கிவிடவேண்டும். நாடு நகரமெல்லாம் சமய பிரச்சாரத்தைத் தொடங்கவேண்டும். மதத்தை ஜாதிக்குள் வைத்து அடைக்கக்கூடாது. எல்லா இனத்தவருக்கும் மதம் பொதுவானது.

பெரியோர்களின் வழிவந்த மடாதிபதிகள் சிவிகைகளில் பவனி வருவதும், சிங்கார பீடங்களில் தம்மை அலங்கரித்துக் கொண்டு புகைப்படங்களில் நாட்டம் செலுத்துவதையும் ஆடம் பரமான அரச போகங்களில் திளைப்பதையும், பாதகாணிக்கை களை எதிர்பார்ப்பதை இன்னும் விடவில்லை என்று பிறர் கூறும் இழிசொற்கள் ஆன்றோர்களின் அடிச் சுவட்டில் வந்த பெரியோர்களை அணுகக் கூடாது. படாடோபத்தினால் மதத் தைக் காப்பாற்ற முடியாது. பணிவால்தான் மதத்தைப் பாது காக்க முடியும். உலக மக்களை உய்விக்கத் துறவுபூண்ட அருளாளர்களுக்கு இதைவிட அதிகமாக நினைவூட்ட வேண்டியதில்லை. மடாதிபதிகள் பலர் தம்மால் முடிந்தவரை யிலும் அரும்பணிகளைப் புரிந்துவருகின்றனர், ஆனால் ஆயிரக்கணக்கான மடங்கள் உள்ளன. இவற்றுள் இலட்சக் கணக்கான துறவிகளும் உள்ளனர். இவர்கள் அனைவரும் ஒன்றுபட்டால், பாரதத்துக்கு மட்டுமல்ல, பாருலகத்துக்கே அறிவுறுத்தமுடியும்.

ஆலயங்கள்

நமது முன்னோர்கள் கீறல்களான கோடுகளுக்கு ஒலிகளைக் கற்பித்து எழுத்துக்கள் என்னும் பெயரிட்டு அவற்றின்மூலம் கல்வியைப் புகட்டி அறிவை வளர்க்க வழிவகுத்தனர். அதைப் போலவே உருவங்களைச் செய்து அவற்றுக்குத் தெய்வத் திருப் பெயர்களைப் புனைந்து பக்தியை வளர்த்தனர். அப்பக்தியின் மூலம் பரம்பொருள் இன்னதென்பதை அறிவுறுத்தினர். அறிவின் களஞ்சியம் நூல் நிலையங்கள். பக்திக்குப் புகலிடம் ஆலயங்கள். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று கூறினார் ஔவைப் பிராட்டியார். ஆ—உயிர்கள். லயம்—அடையும் இடம், ஆலயம்—உயிர்க் கூட்டங்கள் இறுதியில் அடைக்கலம் புகுமிடம் என்பது இதன் கருத்தாகும். நூல் நிலையங்கள் அறிவு வளர்ச்சிக்கு எவ்வளவு இன்றியமை யாதனவோ, அதைப்போலவே ஆலயங்களும் முக்கியமானவை யாகும். கல்வி அறிவைவிட தெய்வ பக்தி ஒருவகையில் மேலானதாகும் ஆகவே

> "கற்றதனால் ஆயபய னென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழா ரெனின்?"

என்றார் திருவள்ளுவனார். நமது பாரதத்தில் கன்னியாகுமரி யிலிருந்து இமயம் வரையிலும் ஆயிரக்கணக்கான ஆலயங்கள் உள்ளன. இவற்றுள் பக்தி வளருவதற்கேற்ற பண்புமிக்க

அர்ச்சகர்களும் அறங்காவலர்களும் அமையவேண்டும். நம் நாட்டில் வரலாற்றுப் புகழ்வாய்ந்த ஆலயங்கள் பல உள்ளன. இவை பல சான்றோர்களால் நிறுவியவைகளாகும். சில மத வெறி பிடித்த முகலாயர்கள் இந்நாட்டின்பேரில் படை எடுத்த போது பல ஆலயங்களை இடித்து அங்கிருந்த விலை மதிப்பற்ற பொருள்களையும் சூறையாடினர். சிறந்த நூல் நிலையங் களையும் தீக்கிரையாக்கினர். அவர்கள் இடிப்பது; நம்மவர்கள் அவர்களோடு கடும்போர் புரிந்து துரத்தியபிறகு மறுபடியும் கோயில்களைக் கட்டுவது—இவ்வாறு பல ஆண்டுகள் இந்துக் களின் ஆலயங்கள் சோதனைக்குள்ளாக நேர்ந்தன. உதாரண மாக, கண்ணபிரான் அவதரித்த வடமதுரையில் இருந்த சோம நாதர் ஆலயம் முகலாய வெறியர்களால் பலமுறை இடிக்கப் பட்டது. இதனை இந்துக்கள் சளைக்காமல் புதுப்பித்து வைத்த விஷயத்தை வரலாறுகள் கூறுகின்றன.

ஆலயத் திருப்பணிகள்

ஓர் ஆலயம் கட்டும்போதே ஆலயத் திருப்பணிகள் இடை யூறு இன்றி நடைபெறுவதற்காக அந்த ஆலயத்துக்கு வேண்டிய மான்னியங்கள் சாசனம் செய்யப்பெற்றிருக்கின்றன. அவற்றுக்கு வரவேண்டிய வருமானங்கள் முறையாகவும் நேர்மையோடும் வசூலிக்கப்படுமானால் எந்த வகையான தட்டுப்பாடுமின்றி நித்திய பூசை முதற்கொண்டு சிறப்பாக நடத்தப்படவேண்டிய விழாக்கள்வரையிலும் நன்கு நடத்தமுடியும். மற்றும் இறை வனை வழிபட வரும் பக்தர்கள் உண்டியலில் வழங்கும் காணிக்கைகளும் ஆலயத் திருப்பணிகளுக்குப் பேருதவியாகவும் அமைகின்றன. இவ்வாறிருந்தும் சில ஆலயங்களின் நிருவாகம் பெரிதும் குறைபாடு உடையவனவாகவே தோன்றுகின்றன. ஆலய நிருவாகங்களைக் கவனிக்கக்கூடியவர்கள் உத்தமர் களாக இருக்கவேண்டும். இதற்கு மாறாக ஆலய நிருவாகங் களில் ஏமாற்றுக்காரர்களும், போலி பக்தர்களும் ஊடுருவி, ஆலய திருப்பணிகளுக்கு அமைந்துள்ள சொத்துக்களின் வருவாயை நேர்மையாகவும் முறையாகவும் வசூலிக்கும் வகையில்லாதவர் களும் ஆலய மானியங்களைத் தன்வயப்படுத்திக்கொண்டு அவற்றுக்குத் தரவேண்டிய குத்தகை முறையைக் காலத்துக்கு ஏற்றவாறு சீர்தூக்கிப் பார்த்துத் தராமல், பாட்டன் காலத்து வாடகைப் பாட்டையே பாடிக்கொண்டு கோயில் சொத்துக்கே குழிதோண்டிக்கொண்டுவரும் பாவிகளும், ஆலயத் திருப்பணி களை அலட்சியமாகக் கருதும் அதிகாரிகளும் நுழைவார் களாயின் கோயில்களின் பெருமை சீர்குலைந்துவிடும். நித்திய

நைமத்திய பூசைகளுக்கென அளிக்கப்பட்ட தொகையையும் சுரண்டுகின்ற தீயவர்கள் நுழைந்துவிட்டால் சொல்லவேண்டியதேயில்லை. ஆலயங்களைக் குட்டிச்சுவர் ஆக்கிவிடுவார்கள்! இப்படிப்பட்ட கொடியவர்களை அக்கோயிலிலுள்ள தெய்வம் ஏன் தண்டிப்பதில்லை? என்னும் கேள்வியும் எழத்தான் செய்கிறது. ஆனால் தெய்வத் துரோகிகள் கண்டிப்பாக தண்டனைகளைப் பெறப்போவது உண்மை.

ஒவ்வொருவனும் அவனவன் செய்யும் நன்மை தீமைகளை அடைந்தே தீருவான். அவனவன் செய்த புண்ணிய பாவங்களை எழுதிவைக்கின்ற கணக்குப் புத்தகம் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் வைக்கப்பட்டுள்ளது இப்புத்தகத்தை மனசாட்சி என்று கூறுவர். இந்த மனசாட்சிக்குத் தெரியாமல் எதையும் யாரும் செய்யமுடியாது. இந்தப் பதிவேட்டில் நாம் எண்ணும் எண்ணங்களும், செய்யும் செயல்களும் பதிவாய் விடுகின்றன. நாம் வரவு செலவுக் கணக்குகளை இறுதியில் சரிபார்ப்பதைப்போல நமது வாழ்நாளின் இறுதியில் நாம் செய்த நன்மை தீமைகளும் சரிபார்க்கப்படும். அதற்குத்தான் அவை நமது உள்ளத்திலேயே பதிவாய்கின்றன. இது வீண்போவதாய் இருந்தால் உள்ளத்தில் பதிவாகாது. நாம் செய்யும் பாவ புண்ணியங்களை சித்ரகுப்தன் என்பவன் ஒன்றுவிடாமல் கணக்கெடுக்கிறான் என்று புராணங்கள் கூறுகின்றன. சித்திரம் என்றால் ஓவியம் அல்லது படம் என்பது பொருள். குப்தன் என்றால் இரகசியமானவன். சித்திரகுப்தன்—இரகசியமாகப் படம்பிடிப்பவன் என்பதாகும் நாம் எண்ணிய எண்ணங்களையும், செய்த வினைகளையும்—நல்லதாய் இருப்பினும், தீயதேயாயினும் மனசாட்சி உள்ளத்தில் பதிவு செய்துவிடுகிறது. சித்திரகுப்தன் என்பவன் மனசாட்சியேயாகும். இதனைத் திருவள்ளுவப் பெருமான்,

> " தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
> தன்நெஞ்சே தன்னைச் சுடும்,"

என்று கூறியுள்ளார். " தன்வினை தன்னைச் சுடும் என்பதும், " தினையை விதைத்தவன் தினை அறுப்பான்; வினையை விதைத்தவன் வினையறுப்பான், " என்னும் முதுமொழிகளும் வெற்றுரைகளல்ல. ஆனால் விதைத்த உடனேயே பலன் கிட்டிவிடாது. அது முளைத்துப் பயிரான பிறகு பலன்தருவதைப் போல வினைகளும் செயல்படுகின்றன. இதனால்தான் "அரசன் அன்று கொன்றால் தெய்வம்நின்றுகொல்லும்," என்றும் கூறுகின்றனர். இதை விரிக்கில் பெருகும். ஆகவே இதை இத்துடன் நிறுத்திக்கொண்டு விஷயத்துக்குச்செல்லலாம்.

தூர தேசங்களிலிருந்தும் பல பக்தர்கள் அன்போடு ஆலய வழிபாட்டிற்கு வருகின்றனர். அவர்களிடம் பணம் பறிக்க, வரும் வழிகளில் நின்று வரவேற்பவர்களைப்போல் சில புரோகிதர்கள் பக்தர்களை வழியிலேயே பிய்த்துப் பிடுங்கி விடுகின்றனர். வரக்கூடிய பக்தர்களால் இவர்களைத் தள்ளவும் முடிவதில்லை, கொள்ளவும் முடிவதில்லை. வேறு விதியின்றி இவர்களோடு ஆலயத்துள் நுழைந்தால் இவர்களின் தொண தொணப்புகளும், ஆங்காங்குக் கட்டணங்களும், காணிக்கை விநியோகங்களும் நெடுகப் பரிமாற வேண்டியிருக்கின்றன. ஆலயத்தின் உள்ளே நுழைந்து வெளிவருவதற்கு உள்ளே வந்தவர்களை உதறிவிடுகின்றனர். ஆண்டவனை அன்போடு நினைத்து வணங்க வேண்டுமென்று வந்தவர்களுக்கு " இனிமேல் இப்படிப்பட்ட கோயில்களுக்கே போகக்கூடாது " என்னும் அளவுக்கு வெறுப்பை உண்டாக்கிவிடுகின்றனர். இங்கே கடவுளில்லை. கடவுளின் பெயரால் காசு பறிக்கும் பிச்சைக்காரர்கள் நிறைந்திருக்கின்றனர் என்னும் எண்ணம் இந்தப் புரோகிதக் கரையான்களால் உண்டாகின்றது. இவர்கள் தெய்வீகத்துக்கு வழிகாட்டிகளாம்!

இந்துக்களுடைய பெரும்பாலான ஆலயங்கள் பணம் பறிக்கும் சுங்கச் சாவடிகளைப்போலத் தோன்றுகின்றன. டிக்கட்டுக்களைப் போட்டு அர்ச்சனைக்கு இவ்வளவு! ஆராதனைக்கு இவ்வளவு என்பதைப்போன்ற கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. ஆலயங்கள் பக்தியைப் பெருக்கவும் அறநெறிகளை வளர்க்கவும் கட்டப்பட்டன. தற்போது அதனுடைய லட்சியம் அலட்சியமாகிவிட்டது. ஆண்டவனை நாம் எதற்காக வணங்குகிறோம் என்னும் எண்ணமும் மறந்து, டாம்பீகத்துக்கும், கௌரவத்துக்கும் ஆலய வழிபாடுகள் மாற்றமடைந்து வருகின்றன. பெரிய பெரிய பதவியில் இருப்பவர்கள் கோயிலுக்கு வந்தால் பூரணகும்பம் முதலிய ஆடம்பரங்களுக்கு அளவேயில்லை. உண்மையான அடியார்களையும், தம் வாழ்நாள் முழுவதும் தெய்வத் தொண்டில் திளைத்துள்ள மகான்களையும் நாம் போற்றிப் புகழ்ந்து கௌரவத்தோடு வரவேற்கலாம். ஆனால் தொண்டின் பெருமையும், பக்தியின் அருமையும் சிறிதும் அறியாத பதவி வேட்டைக்காரர்களுக்குச் செய்யும் ஆர்ப்பாட்டங்களைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டியுள்ளது.

சமீப காலமாகத் தமிழ்நாட்டில் சில நூதன விவேகிகளால் சில வேதனைக்குரிய காரியங்கள் பெருகிவருகின்றன. இதில்

புலவர்களே புகுந்து விளையாடுகின்றனர். இவ்விளையாட்டால் அறிவு விரிவடைகிறதாம், இலக்கியங்களிலுள்ள நுணுக்கங்கள் விளக்கமாகிறதாம். அதற்காகப் பட்டி மன்றங்களையும், வழக்காடு மன்றங்களையும் தோற்றுவித்துள்ளனர். இவை தற்போது தமிழ்நாட்டைத்தவிர வேறு எந்த மதத்தினரிடத்தும் எந்த மொழியினரிடத்தும் இந்த விபரீத கைங்கரியம் ஆரம்பமாக வில்லை. இந்துமதத்தை அழிக்கவேண்டுமென்று ஆர்பாட்டம் செய்த மேதாவிகள் இந்துக்களைக்கொண்டே இந்துமதத்தை இழிவுபடுத்தத் தோற்றுவித்த சூழ்ச்சியிது இது ஒருவகையான சதித்திட்டமாகும்.

ஒருவனுக்கு இராமன் என்னும் பெயரை அவன் தாய் தந்தையர் வைத்திருப்பார்கள் ; அதே ராமன் இராமபிரானைப் பழிப்பான். சிவலிங்கம் என்னும் பெயரை உடையவன் சிவபிரானைத் தூற்றுவான். அம்மாவும் அப்பனும் முருகன்பேரில் உள்ள அன்பினால் சுப்ரமண்யன் என்று பெயர்சூட்டி இருப்பார்கள் அந்த சுபன் சுப்ரமண்யனையே தூஷிப்பான். இந்தப் பேரறிவாளிகள் யார் ? என்னும் கேள்வி எழுமானால், அதற்கு என்ன பதில் ? தந்தையும் தாயும் இந்துக்கள். ஆனால் அதே சந்ததி வந்த இந்த மாமேதை நான் இந்து அல்ல ! என்று கூறுவான். இந்த நூதன விவேகிகளின் நுண்ணறிவால் நுழைந்ததுதான் பட்டி மன்றங்களும் வழக்காடு மன்றங்களும் ! இவர்கள் வேற்றாரல்ல நம்மவர்களே ! ஈடு இணையற்ற இலக்கியங்களைக் கொளுத்தவேண்டுமென்று கூறிய புண்ணியவான்கள். இவர்கள் புகுத்திய புனிதக் கைங்கரியமிவை. தற்போது இவை தமிழ்நாட்டில் மட்டுந்தான் தாண்டவமாடுகின்றன. இன்று நாடு முழுவதும் இலஞ்சம் எப்படிக் கொஞ்சிக் கூத்தாடுகிறதோ அதேபோல ஆலயங்களில் சிறப்பாக நடக்கும் விழாக்காலங்களிலும், கல்வி நிலையங்களிலும், இந்துசமயச் சார்பாக நடக்கும் பேரவைகளிலும் வெகு சிறப்பான தலைப்புகளைத் தந்து மறக்காமல் நடத்துகின்றனர். இப்போதெல்லாம் பட்டி மன்றமோ, வழக்காடு மன்றமோ நடைபெறாத விழாக்கள் சோபிப்பதில்லையாம் ! தமிழ்நாடு இந்த விஷயத்தில் பெரிய முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது.

பட்டிமன்றத்தின் தலைப்புகள்

1. கற்பில் சிறந்தவள் சீதையா ? பாஞ்சாலியா ? கண்ணகியா ?

2. சிறந்த தம்பி விபீஷணனா ? கும்பகருணனா ?

3. சிறந்த வீரன் விசயனா? கருணனா?

4. தன்னலமற்ற தம்பி பரதனா, இலக்குவனா?

என்பன போன்ற தலைப்புகளைத் தந்து வாதிடுவது நமது ஒப்பற்ற இலக்கியங்களில் அமைந்துள்ளது. கதாபாத்திரங்களின் குணநலன்களை ஆராய்வதைப்போல ஒவ்வொரு பாத்திரங்களுக்கும் குற்றங்களைக் கற்பித்து அவற்றைக் களங்கப் படுத்துவது இந்தப் பட்டி மன்றங்களின் கண்டுபிடிப்பாகும்.

ஒரு குழு கண்ணகிதான் சிறந்த கற்புடையவள் என்று கூறினால், மற்றொரு குழு கண்ணகியைவிட சீதைதான் சிறந்த கற்புடையவள் என்று கண்ணகியைத் தாழ்த்திக் கூறும். அடுத்த குழு சீதையின் கற்பையும் கண்ணகியின் கற்பையும் தாழ்த்திப் பாஞ்சாலியின் கற்புக்கு நிகரில்லை என்று வாதிடும். இந்த சொற்போரில் ஏதேனும் ஒரு குழுவிற்குக் கைதட்டல்கள் கிடைத்துவிட்டாலோ தர்க்கங்கள் சூடுபிடித்துவிடும். அப்போது பேச்சாளர்களின் மலர்வாய்களிலிருந்து வெளிப்படும் கொச்சைமொழிகளைத் தரம்பிரித்துக் கூறமுடியாது. அவை சரளமாகவும், அட்டகாசமாகவும் ஒவ்வொரு சொல்லும் கட்டியம் கூறிக்கொண்டு ஒன்றையொன்று குறை கூறிக் கூட்டத்தைக் குழப்புவதோடு இதுநாள் வரையிலும் பெருமதிப்பு வைத்திருந்த இலக்கியப் பாத்திரங்களிடத்தில் சில கீறல்களை உருவாக்கிவிடுவார்கள். இவைகள்தாம் புலவர்கள் பார்வையாளர்களுக்கு வழங்குகின்ற பரிசுகள். இவர்களின் சொற்போருக்கு நடுநிலைமை வகித்த பெரும்புலவர் இறுதியில் தீர்ப்புக் கூறுவார். அந்தத் தீர்ப்பு கம்பரை கதிகலங்கச் செய்து, வில்லியாரின் புலமையை வெளியேற்றி, இளங்கோவின் கருத்தையும் இடித்து மாவாக்கிவிட்டிருக்கும்.

இலக்கியங்களிலும் இதிகாசங்களிலும் விளக்கப்பட்டிருக்கும் கதாநாயகர்களையும், அவர்களைப் பாராட்டிப் பாடிய புலவர்களையும்விடப் பலபடி தரத்தில் உயர்ந்த மேதைகளால்தானே இவர்களுக்கு ஒரு தீர்ப்பு வழங்கமுடியும் ஆகவே இந்த இலக்கியச் செல்வர்களுடைய சிறப்பை என்போன்ற சிறியவர்களால் விளக்குவது அவ்வளவு எளிதல்ல. ஆகவே, பட்டிமன்றப் பெரியோர்களின் பெருமையைப்பற்றிப் பேசுவதை நிறுத்திக் கொண்டு வழக்காடு மன்றம் என்றால் என்ன என்பதைப்பற்றியும் சிறிது பார்த்துவிடலாம் :

வழக்காடு மன்றம்

கனம் நீதிபதி அவர்களே! இராமன் வாலியின்பேரில் மறைந்து நின்று அம்பை எய்தியது பெருங்குற்றமாகும். ஆகவே இராமனைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விசாரிக்கவேண்டும் என்று ஒரு வழக்கறிஞர் இந்த வழக்கைத் தொடருவார். இன்னொரு வழக்கறிஞர் இராமன் குற்றவாளியல்லன்; வாலியி னுடைய வரமும் அவன் தகாத செயல்களும் இவ்வாறு செய்ய நேர்ந்தது என்று இராமபிரானைக் காப்பாற்ற முயலுவார். இப்படி வாதப் பிரதிவாதங்கள் நீண்ட நேரம் நடந்தபிறகு கனம் நீதிபதியவர்கள் அவர் மனம்போன போக்கில் தீர்ப்பு வழங்கப் பெறும். இவ்வாறு கண்ணபிரானைப் பற்றியும், தருமனைப் பற்றியும், சிவபிரானைப்பற்றியும் நாம் வணங்கி வழிபடும் தெய்வ சொரூபங்களையே கோர்ட்டுக்குக் கொண்டுசெல்லும் கோமாளித்தனமான வழக்குகள் மூலம் தமிழறிஞர்கள் என்னும் நீதிபதிகள் சமயப்பற்றுக்குச் சமாதிகட்ட முயன்று வருகின்றனர். கவிச் சக்ரவர்த்தி கம்பராலும், ஆழ்வார்களாலும், அடியார் களாலும் அல்லும் பகலும் அன்போடு வணங்கத்தக்க சொருபங் களுக்கே வசைமாரி பொழிய வழிவகுத்து பக்தி நெறியைப் பாழாக்குவது மிக மிக புல்லிய செயல்களாகும்.

எப்படிப்பட்ட நிபுணர்களால் எழுதப்பெற்ற இலக்கியங் களாக இருப்பினும் கால மாறுபாட்டால் சிற்சில நிகழ்ச்சிகள் ஒவ்வாதன இருக்கக்கூடும். இன்றும் பல எழுத்தாளர்கள் வெளியிடும் நூல்களில் கருத்துக் கோளாறுகள் காண்கிறோம். மற்றும், நாங்கள்தாம் பேரறிஞர்கள் என்றும், மூதறிஞர்கள் என்றும், மாமேதைகள் என்றும் நடமாடிக்கொண்டிருக்கும் கட்சித் தலைவர்களே நமக்குப் போதுமான சான்றுகளாக விளங்குகின்றனர். ஒருவருக்கொருவர் மாறுபடுகின்றனர். நாம் இவர்களைத் திருத்தி ஒன்றுபடுத்த முயல்வது அறிவுடைமையா? அல்லது இவர்களைக் கூண்டோடு அழிக்க முயல்வது அறிவுடை மையா? அழிக்கின்ற போக்கு நீடித்தால் புத்திசாலிகள் மரபே பொசுங்கிவிடாதா? அறிவாளிகள் அழிந்தபிறகு மிச்சமிருப்பது எது? ஆகவே தற்போது ஆலயங்களிலும் அற நிலயங்களிலும், கல்விக் கூடங்களிலும், இந்திய இலக்கியங்களைப் பரிசீலனை செய்வதைப்போலப் பரிகாசத்துக்கு இடந்தரக்கூடாது. மத நம்பிக்கை அற்றவர்கள் இந்த அழிவுப்பாதையை ஆரம்பித்து வைத்தனர். இன்று மத நம்பிக்கையுள்ள சிறந்த புலவர்களே இப்போக்கை பின்பற்றுவது வியப்பாக இருக்கிறது.

பிற சகோதர மதங்கள் அவர்களுடைய நூல்களிலோ இலக்கியங்களிலோ இவ்வாறான கோணற் குறும்புகளைப்பேச இடந்தருவதில்லை. இந்துக்களில்கூடப் பிற சகோதர மொழியினர் இதுபோன்ற புல்லிய பரிசீலனைகளில் புகவில்லை. படித்த மேதைகள் மக்களுடைய பண்பை வளர்க்கப் பாடுபட வேண்டும். ஆலயங்கள் அறநிலயங்களைப்போலவும், பக்தியின் புகலிடங்களாகவும் பொலியவேண்டும். குற்றங்களைக் குதப்பிக் கொண்டிருக்கும் பட்டிமன்றங்களும் வழக்காடு மன்றங்களும் ஆலயங்களில் தேவையில்லை. இதை இன்றைய புலவர்பெருமக்களின் பொன்னார் திருவடிகளுக்குப் பன்முறை வணங்கிப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நாம் ஆலய கோபுரங்களைக் கண்ணுறும்போதே நமது உள்ளம் இறைவனிடம் செல்ல வேண்டுமென்னும் நற்பண்பினால். கோபுர வணக்கம் செய்ய வேண்டுமென்னும் நியதியும் கூறியுள்ளனர், ஆலய நிருவாகிகளும் முயற்சி எடுத்துக்கொண்டால் மேற்கூறிய தீமைகளை அகற்றுவது கடினமல்ல.

ஆலய நிதி

பண்டைய காலத்தில் நாடு செழிப்புற்றிருந்தது ; செல்வம் நிறைந்திருந்தது. குறைவற்ற செல்வம் இருந்ததனால் அக்கால மக்கள் இறைவனுக்கும் நிறையத் தங்க ஆபரணங்களும் வெள்ளி வாகனங்களும் பொற்றேர்களும் செய்து உற்சவ மூர்த்தியையும் பிரதிஷ்டா மூர்த்திகளையும் அலங்கரித்து ஆனந்தப்பட்டனர். இது அக்காலத்துக்கு அதி பொருத்தமாய் இருந்திருக்கலாம். ஆனால் அக்காலத்திலேயே இவற்றுக்கு ஆபத்துக்கள் சம்பவித்தன. கஜினி மாமூது, அலாவுதீன் கில்ஜித், மாலிக்கபூர் போன்றவர்கள் கோயில்களைக் கொள்ளை அடித்தனர். அன்று அந்நிய மதத்தினர் கொள்ளை அடித்தனர் என்றால் இன்று நம்மவர்களே ஆலயங்களைச் சூறையாடுவதுடன் விக்ரகங்களையும் களவாடுகின்றனர். ஆகவே இக்காலத்தில் தங்க ரதங்களும், வைரக்கிரீடங்களும், இரத்தின ஆபரணங்களும் கோயில்களில் குவிப்பது பேராபத்தாகும். மறுபடியும் கஜினியைப் போன்றவர்களை வரவேற்பளிப்பதற்கு ஒப்பாகும்.

கிறிஸ்துவர்களும், இஸ்லாமியர்களும் தொழுகை இடங்களை பொக்கிஷ சாலைகளாக மாற்றுவதில்லை. குறிப்பாகக் கிறிஸ்தவர்கள் மத சம்பந்தமாக வரும் வருவாயை, கொண்டு மத போதகர்களைத் தயார் செய்து மதத்தை வளர்க்கின்றனர். அவர்கள் ஆலயங்களுக்கு ஆஸ்தியைக் குவிப்பதில்லை.

ஆட்களைச் சேர்க்கின்றனர். ஆலயங்களைத் தூய்மையாகவும் கட்டுப்பாடான பாதுகாப்பிலும் வைத்துக்கொண்டிருப்பதை கண்கூடாகக் காண்கிறோம்.

நம்முடைய ஆலயங்களும் பக்தி நெறியையும், அறநெறிகளையும் போதிக்கும் சர்வகலா சாலைகளைப்போலக் காட்சியளிக்கவேண்டும். இன்றும் பக்தர்களின்மூலம் பல ஆலயங்களுக்குப் பணம் குவிகின்றது. அதைக் கொண்டு கிறிஸ்தவர்களைப்போல நாமும் சமயப் பிரசாரகர்களையும் சமயத் தொண்டர்களையும் தயார் செய்தால் எவ்வளவோ நன்மை பயக்கும். மற்றும் வருவாய் அற்ற ஆலயங்கள் இருப்பின் அவற்றின் குறைபாடுகளையும் போக்க வழிவகுக்கலாம். ஆண்டவனுக்கு விலை உயர்ந்த ஆபரணங்கள் அணிவித்தால் தான் அவர் கருணை புரிவார் என்பதில்லை ; அவருக்கு அன்பு தான் தேவை ; ஆபரணங்களல்ல.

அர்ச்சகர்கள் அன்னையைப்போல அன்புடையவர்களாகக் காட்சியளிக்க வேண்டும். அறங்காவலர்கள் அறத்தின் திருவுருவங்களாகவே விளங்கவேண்டும். இந்து தருமத்தின் பெருமை இத்தகையதென்று உணராத அரசாங்க அதிகாரிகள் ஆலய நிருவாகங்களில் தலையிடக்கூடாது. ஆலயங்களின் சார்பில் பட்டி மன்றங்களும் வழக்காடு மன்றங்களும் நடைபெறக்கூடாது. ஆலயங்களுக்கு வரவேண்டிய வருவாய்களை நியாயமான முறையில் வசூலிக்க வேண்டும். கோயில் சொத்துக்களைக் கொள்ளையடிக்கும் குண்டர்கள் இருப்பின் அவர்களைத்தயவு தாட்சண்யமின்றி வெளியேற்றவேண்டும். இந்து தரும பரிபாலன சபை என்று ஒன்றைக் கூட்டி அச் சபையின் கண்காணிப்பில் மடங்களும் ஆலயங்களும் செயல்பட வேண்டும். அப்போதுதான் ஆலயத் திருப்பணிகளும் முறையாகக் குறைபாடின்றி நடைபெறும். ஆலயங்களை ஆன்றோர்கள் எதற்காக நிறுவினார்களோ அதற்கு நாமும் உதவி புரிந்தவர்களாவோம் ; அவர்களுடைய ஆன்மாவும் சாந்தி அடையும்.

பொதுமொழி

பரத கண்டத்தில் 179 மொழிகளும் 544 கிளைமொழிகளும் (1951ல்) வழக்கில் உள்ளனவென்று கலைக்களஞ்சியம் (தொகுதி 1 ; பக்கம் 599) கூறுகின்றது.

மொழிகளின் தோற்றம்

நமது முன்னோர்கள் பஞ்சை நூலாக நூற்று ஆடைகளை உருவாக்கினர். ஒலிகளுக்குக் கருத்துக்களைக் கற்பித்து

மொழிகளை உருவாக்கினார். ஆசை, அச்சம், மகிழ்ச்சி, திடீர் அபாயங்கள், வியப்பு மக்களுக்குத் தோன்றிய காலத்தில் மனிதனுடைய வாயிலிருந்து வெளிப்பட்ட ஒலிகள் தம்முடைய கருத்தைப் பிறருக்கும் உணர்த்தப் பயன்பட்டன. இந்த உண்மையை பேசத்தெரியாத சிறு குழந்தைகளின் மழலை மொழிகள் நமக்கு நன்கு புலப்படுத்துகின்றன. நமது நாட்டில் பேசுகின்ற 544 மொழிகளும் திராவிடம், முண்டா (சமஸ்கிருதம்), திபேத், சீனம் என்னும் ஐந்தில் அடங்கிவிடும். இவற்றுள்ளும் நமது இந்திய நாட்டுக்கு இருமொழிகள் முக்கியமான பண்டைய மொழிகளாகும். ஒன்று தமிழ்; மற்றொன்று சமஸ்கிருதம். இவ்விரண்டின் கிளைகளே இந்திய மொழிகளனைத்தும்! 179 மொழிகளிலும் இவ்விரு மொழிகளின் கலப்புண்டு. இவ்விரண்டுக்குள்ளும் தமிழ் மொழியைப் பேசுகின்ற சமூகம் இருக்கிறது. இச்சமூகம் வாழுமிடத்தைத் தமிழ்நாடு என்று கூறுகிறோம். இதைப்போலவே சமஸ்கிருதத்தைப் பேசும் சமஸ்கிருத நாடு என ஒன்று கிடையாது.

மூவகையான மொழிகள்

வளர்ந்த மொழிகள், வளரும் மொழிகள், வளராத் மொழிகள் என மொழிகளை மூன்று தொகுப்பாகப் பிரிக்கலாம்.

வளர்ந்தவை

லிபிகளை (எழுத்துக்களை) உருவாக்கி அவற்றின்மூலம் அபரிமிதமான கலைஞானங்களைப் பெரியோர்களால் எழுதப் பெற்றிருப்பவை.

வளருபவை

எழுத்துக்கள் உருவாக்கப்பெற்று இருப்பினும் நிறைய கலைஞான நூல்கள் இல்லாமல் வளரும் நிலையில் முன்னேறிக் கொண்டு வருபவை. இம் மொழிகள் இடைகாலத்தில் லிபிகளைத் தயாரித்துக்கொண்டவை எனலாம்.

வளராதவை

எழுத்துக்களில்லாமல பேச்சளவில்மட்டும் நடைமுறைகளில் உள்ள மொழிகள். உதாரணமாக, குறவர்கள், குருவிக்காரர்கள், லம்பாடிகள் போன்றோர்கள் எழுத்துக்களைப் படைத்து இலக்கியங்களை இன்னும் உருவாக்கவில்லை. இவைகள் இன்னும் வளராதவை எனலாம். இம் மொழிகள் நூற்றுக்கணக்காக உள்ளன. வெண்மையான பஞ்சுக்குப் பல

வண்ணங்களை ஊட்டிப் பலநிற ஆடைகளைத் தயாரிப்பதைப் போல ஒலிக்குப் பலவகையான கருத்துக்களைக் கற்பித்துப்பல மொழிகள் என்னும் பெயர்பெற்றுள்ளன. நமது நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான மொழிகளுக்குள் எழுத்துக்களைப் படைத்து அவற்றின்மூலம் கல்வியைப் பெருக்குகின்ற மொழிகள் இருபது அல்லது இருபத்தைந்துக்கு மேலில்லை. இவற்றுள்ளும் தமிழ் மொழியும் சம்ஸ்கிருதமும் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. இவ்விரண்டுக்குள்ளும் சம்ஸ்கிருதம் என்னும் சிறந்த மொழி நாட்டின் பொது நிலையான ஒரு தனித் தலைமை தாங்குகிறது. எல்லா மொழிகளும் மக்கள் உலக வழக்கில் பேசுவதற்காக உருவாக்கப்பெற்றவை. சம்ஸ்கிருத மொழி இலக்கியத்துக்காகவே உருவானது. ஆகவே சம்ஸ்கிருத மொழிக்கு கிரந்த மொழி என்னும் பெயர் எய்திற்று. கிரந்தம் என்றால் நூல், புத்தகம் என்பது பொருள். ஆகவே கிரந்த மொழி நூல்களைப்படைக்க உருவான மொழி என்பதாகும்.

இந்த கிரந்தமொழிக்குப் பயன்படுத்தவேண்டிய சில அதிகப்படியான ஒலிகளையும், அவற்றுக்கு எழுத்துக்களையும் படைத்துத் திருத்தப்பட்டதனால் சம்ஸ்கிருதம் என்னும் பெயர் உண்டாயிற்று என்பர். இதனுடைய வாடை மேற்கே அயர்லாந்திலிருந்து கிழக்கே இந்திய எல்லைவரையிலும் வீசுகிறது. (ஆதாரம் கலைகளஞ்சியம்; தொகுதி 4; பக்கம் 459) ஆகவே இதனை இந்தோ ஐரோப்பிய மொழி என்று கூறுகின்றனர். இந்த சம்ஸ்கிருத மொழியைச் செம்மைப்படுத்த சுமார் 70 ரிஷிகள் இலக்கண ஆசிரியர்களைப்போலப் பணிபுரிந்தனராம் (கலைக் களஞ்சியம். பக்கம் 463). சம்ஸ்கிருதமும், தமிழும் பன்னெடுங்காலங்களாகத் தொடர்புடையனவாகவே காணப்படுகின்றன.

மனிதன் குரலில் பிறக்கும் ஒலிகளுக்குக் கணக்கில்லை. அவைகள் அனைத்தையும் மொழிகள் என்று கூறமுடியாது. ஒரு சில ஒலிகளையே மொழிகள் பயன்படுத்துகின்றன. ஒரு மொழி பயன்படுத்தும் ஒலியை மற்றொரு மொழி பயன் படுத்தாமலும் விடக்கூடும். ஒரு பொருளுக்கு ஒரு மொழியினர் பயன்படுத்தும் ஒலியை வேறு மொழியினர் வேறொரு பொருளுக்குப் பயன்படுத்தி இருக்கலாம். உதாரணமாக: "மை" என்றால் தமிழில் அஞ்சனம், கருப்பு என்று பொருள் கொள்கிறோம். இதேஒலியை ஆங்கிலத்தில் "மை நேம்" என்னும் போது என்னுடைய என்னும் பொருளைத் தருகிறது. இந்திக்கு மை என்னும் ஒலிநான் என்னும் பொருளில் "மை போலியா" என்று வருகிறது. மற்றும் நாம் அரிசி என்று கூறும் பொருளைத்

தெலுங்கில் பியம் என்றும், கன்னடத்தில் அக்கி என்றும், உருதுவில் சாவல் என்றும், ஆங்கிலத்தில் ரைஸ் என்றும் கூறுகின்றனர். இவற்றுள் எந்த மொழியினர் சொல்லுவது சரி ? எது தவறு என்று வாதிடமுடியாது. யாரும் மனிதன் ஒலிகளின் மூலம் கற்பித்துக்கொண்ட இடுகுறிப் பெயர்களேயாகும். இவற்றுள் ஏற்றத் தாழ்வுகளை அமைத்துக்கொண்டு கருத்துக்களை நாம் கூறமுடியாது. ஒலிகளை அறிகுறிகளாக அமைத்துக் கொண்டு கருத்துக்களை உணர்த்துவது மொழிகளாகும். இவ்வாறு பல மொழிகளைப் பேசும் மக்களுக்கு இந்தியா தாய் நாடாகும். சிறப்பாகக் கூறவேண்டில் 544 மொழிகளைப் பேசுகின்ற நாடு இந்தியா. இதில் வாழும் மக்கள் அனைவரும் இந்தியர்கள். சீன நாட்டில் வாழக்கூடியவர்கள் சீனர்கள். பர்மாவில் வாழக்கூடியவர்கள் பர்மியர். அரேபியாவில் வாழக் அராபியர் என்பதைப்போல இந்திய வம்சா வழியினர் அனைவரும் இந்தியரே என்னும் எண்ணம் ஒவ்வோர் இந்தியனுக்கும் வரவேண்டும். மதத்தின்மூலமாகவும், மொழியின்மூலமாகவும் சிலர் பிரிவினைப் போக்கை நமது நாட்டில் உருவாக்கிக் கொண்டுவருகின்றனர்.

இது ஒரு அபாயகர்மான போக்காகும். நாட்டுப்பற்றை நாசமாக்கும் சதித்திட்டங்கள். இந்திய நாட்டில் பிறந்து, இந்திய நாட்டில் வளர்ந்து, இந்திய நாட்டிலேயே புதைபடக்கூடிய ஒருவன் தமது மூதாதையர் மக்காவில் தோன்றியதாக நினைக்கிறான் ; இன்னொருவன் ஜெருஸலேமை நினைக்கிறான். ஆயினும் இந்த இருவரும் சமீப காலத்தில் பலாத்காரத்தினாலும், சதித் திட்டங்களினாலும் மதம் மாற்றப்பட்டவர்கள்தாம். தற்போது இவர்களுடைய நாட்டுப்பற்றும் நாசமாக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் நான் இந்தியன் அல்லன். என்னும் எண்ணம் இவன் உள்ளத்தில் உதிக்க இடம் தந்துள்ளது. நான் கிறிஸ்தவன். நான் இஸ்லாமியன் என்று கூறும் நிலையும் உருவாகியுள்ளது. இந்திய முஸ்லிம்கள் என்பதும் இந்தியக் கிறிஸ்தவர்கள் என்பதும் இங்கு வாழ்க்கையின் வசதிகளைப் பெறுவதற்காகப் பயன்படுத்தும், சந்தர்ப்பவாதமேயாகும் அந்தரங்கத்தில் நாம் இந்தியர் என்னும் எண்ணம் மதம் மாற்றப் பட்ட பலருக்குக் கிடையாது இருந்திருந்தால் நாடு 1947–ல் துண்டிக்கப்பட்டிருக்காது ; இவர்களிடம் நாட்டுப்பற்று இருப்பது உண்மையானால், இந்தியநாட்டின் பொது சட்டத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். மற்றும் மத்திய அரசின் வேண்டுகோளுக்கு இணங்கக் குடும்பக்கட்டுப்பாட்டை இவர்களும் ஏற்றுக்கொண்டு இருக்கவேண்டும் அல்லவா ?

இந்தியர்களுக்குள்ளே சிறுபான்மையினர் – பெரும்பான்மையினர் என்னும் சொல் வரவேண்டிய அவசியமில்லை. இவ்வாறு கூறுவதும், கோருவதும் பிரிவினைவாதிகளின் பசையற்ற வாக்கியங்களாகும். "எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம்," என்னும் எண்ணம் இவர்களின் உள்ளத்தில் இருக்குமாயின் – இவர்கள் பின்பற்றும் மதங்கள் அறிவுறுத்தும் சாந்தியையும் சமரசத்தையும் கடைபிடிப்பது உண்மையாயின் சிறுபான்மையினர் யார்? பெரும்பான்மையினர் யார்? நாட்டில் வாழும் மக்கள் அனைவரையும் சமநோக்கோடு பார்ப்பதுதான் நல்லாட்சியாகும். சிறுபான்மை பெரும்பான்மை என்னும் சொல்லைச் சட்டத்தில் நுழைத்ததே தவறாகும். இதன் இடையில நுழைந்து சிலர் மதத்தின் போர்வையில் படை திரட்டுகின்றனர். இன்று இவை மதங்களைப்போலத் தோற்றமளிக்கிறது. பெரும்பான்மை பலத்தைப் பெற்ற உடனேயே அரும்பாடுபட்டு பெற்ற சுதந்திரத்தை இப் போக்கு சூறையாடிவிடும். இந்த உண்மையை இந்தியப் பண்பாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஒவ்வொருவனும் நன்கு சிந்திக்கவேண்டும்.

மொழியின்மூலம் பிரிவினைவாதமும் தீங்கேயாகும்

இந்திய மக்கள் பேசுகின்ற நூற்றுக்கணக்கான மொழிகளில் ஒன்றுக்கொன்று தொடர்புண்டு. மக்களினம் அனைத்தும் ஒரு மூல மனிதனின் இனம் என்று கூறும்போது, மொழிகளனைத்தும் ஒரு மூல ஒலியின் இனமென்று கூறுவது பிழையல்ல. ஒரு வனத்தில் பல மரங்கள் இருக்கின்றன. அவற்றுள் பெரியவைகளும் சிறியவைகளும் இருப்பது இயல்பாகும். பொதுவாக அவற்றை யெல்லாம் சேர்த்துத் தோப்பு என்று கூறுகிறோம். தென்னை, மா, பலா, அரசு, ஆல் என்னும் மரங்கள் இருப்பதைப்போல நமது நாட்டில் பல மொழிகள் இருக்கின்றன. மொழிகளில் – வளர்ந்த மொழிகளாக இருப்பினும் வளராதவைகளாக இருப்பினும் – அவையனைத்தும் நமது நாட்டின் சகல உரிமைகளையும் பெற்ற மொழிகளென்றே பாவிக்க வேண்டும். மொழிகளுக்குள் ஒன்றுக்கொன்று தொடர்பும் உண்டு.

இந்நாட்டில் மிகப்பழைய மொழிகளாகக் கருதக்கூடியவை இரண்டு; மற்றவை அனைத்தும் இவ்விரண்டின் கிளைகளே ஆகும் என்பதை முன்னரே கூறியிருக்கிறேன். இவ்விரு மொழிகளும் உள்ள நெருங்கிய தொடர்புகளை இனி சிறிது ஆராயலாம். இன்று சம்ஸ்கிருதத்தைப் பெரும்பாலும் தேவநாகரி என்னும் மொழியில் எழுதுகின்றனர். இதை முன்பு கிரந்தம் என்னும்

எழுத்தில் எழுதப்பெற்றன. அவ்வெழுத்துக்களுக்கும் தமிழ் எழுத்துக்களுக்கும் நிறைய ஒற்றுமையைக் காணலாம்.

கிரந்தம் : உ, ஊ, க, ண, த, ந, ய, வ– ஆகிய எழுத்துக்கள் தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் பொது. இவற்றில் மாற்றமே கிடையாது. அ, ஆ, ஈ, ஒ, ஔ, ட, ர, ல, ள என்னும் எழுத்துக்களுள் காணும் வேறுபாடுகள் மிகவும் குறைவு. இவற்றைக் கருத்திற் கொண்டு பார்த்தால் வரிவடிவங்களில்கூட தமிழும் சம்ஸ்கிருதமும் ஒன்றையொன்று தழுவியுள்ளன.

ஒலியைப் பயன்படுத்தும் முறைகள்

தமிழில் உயிரெழுத்துக்களை ஓதும்போது அ, ஆ, இ, ஈ, உ, ஊ என்று தொடங்குகிறோம். சமஸ்கிருதமும் தமிழில் ஆரம்பமாவதைப்போலவே அ, ஆ, இ, உ, ஊ, எனவே ஆரம்பமாகின்றது. அடுத்து உயிர்மெய்யைத் தமிழில் க, ங, ச, ஞ ட, ண, த, ந, ப என்று சொல்வதைப்போலவே க என்பதை முதலில் ஓதி அந்த ககரத்தில் மூன்று ஒலிகளை அதிகப்படுத்திக்கொண்டு ங கரத்தைத்தான் தொடங்குகிறது. அடுத்து ச கரமும், அதிலும் மூன்று ஒலிகளை அதிகப்படுத்த ஞ என்னும் எழுத்தை முறையாக ஒலிக்கிறது. இதேபோல க ங ச ஞ ட ண என வகார ஒலி வரையிலும் பிறழுவதில்லை.

க. ச, ட, த, ப என்னும் ஐந்து எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று ஒலிகளை அதிகப்படுத்திக்கொண்டுள்ளன. அவை ஒலிகளைத் தாழ்த்தியும், உயர்த்தியும், அழுத்தியும் ஒலிக்கின்ற மாறுபாடுகளாகும். அந்த அதிகப்படியான மும்மூன்று ஒலிகளையும் விலக்கிப் படித்தால் தமிழைப்போலவே க, ங, ச என முறையாக வருகின்றன.

அக் காலப் பெரியோர்கள் எழுத்துக்களை மொழிகளுக்குப் படைக்கின்றபோதே பகைமைக் குணமற்று படைத்துள்ளனர். பிறகு தத்தம் மொழியில் பழகிவரும் சில அதிகப்படியான ஒலிகளுக்கு வரிவடிவத்திலும் சில எழுத்துக்களை உருவாக்கிக் கொண்டுள்ளனர். இந்து மதத்தைப்பற்றி எழுதியுள்ள இந்திய மொழிகள் பல. இவற்றுள்ளும் இலக்கியத்திற்காகவே முனிவர்களால் உருவாக்கிய கிரந்த மொழியில் இந்திய வேதங்களும், உபநிடத புராண இதிகாசங்களும் அபரிமிதமாக எழுதப் பெற்றுள்ளன. இந்த சம்ஸ்கிருத மொழியில் வல்லவர்கள் தென்நாட்டில் பல பெரியோர்களுண்டு.

குறிப்பாக சங்கரர், இராமாநுஜர், மத்துவர், வேதாந்த தேசிகர், நீலகண்டர், அப்பைய தீட்சிதர் போன்ற பல பெரியோர்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இதனை உருவாக்கியவர்கள் இருஷிகள். இச்சமஸ்கிருதமொழி மிகவும் அரிய மொழியாகக் கருதப்பட்டது. காரணம் இதில் ஆன்மாவைப்பற்றியும், ஆண்டவனைப் பற்றியும் அறநெறிகளைப் பற்றியும் விரிவாக விளக்கப்படுவதனால் சம்ஸ்கிருதமொழியை அரிய மொழி என்று கருதப்பட்டது. இந்த அரியமொழி என்னும் சொல் பிற்காலத்தில் முதல் நீண்டு ஆரியமொழி என ஆகியிருக்கிறது இந்த அரியமொழி இந்திய நாட்டில் வாழும் இந்து மக்கள் அனைவருக்கும் பொதுமொழியாகும். இதனை ஒரு சிலர் பார்ப்பனர்களின் மொழி என்று கூறுகின்றனர். இதை உண்மை என நம்புவதற்கில்லை. காரணம் இந்த மொழியில் வேதாகம புராண இதிகாசங்களை எழுதிய லேமோர்கள் பார்ப்பனர்களல்லர்; வியாசர் ஒரு மீனவர் குலத்து மச்சகந்திக்குத் தோன்றினவர். வால்மீகி முனிவர் வேடரினத்தைச்சேர்ந்தவர். இதேபோலப் பதஞ்சலியிலிருந்து பாணினி முதலானவர்களும் பார்ப்பன இனத்தவர்கள் அல்லர். பதஞ்சலி முனிவரும் புலிப்புணி முதலான முனிவர்களும் தமிழ்நாட்டின் தொடர்பை உடையவர்கள் என்பதை சிதம்பரமென்னும் புண்ணியத்தலத்தில் நடராஜப் பெருமானின் தாண்டவத்தைப் பார்த்துக்கொண்டு இருப்பதாகத் தலபுராணம் கூறுகிறது;

மற்றும் தமிழும் சமஸ்கிருதமும் வரிவடிவிலும் ஒலிகளைப் பயன்படுத்தும் முறைகளிலும் ஒன்றை ஒன்று தழுவி இருக்கின்றன. ஆகவே இவை இரண்டும் பன்னெடுங்காலங்களாக ஒன்றோடொன்று தொடர்புடையனவாகவே தோன்றுகின்றன. இவற்றின் வரிவடிவங்களும் ஒலி முறைகளுமே போதிய சான்றுகளாகும். 3000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய தொல்காப்பியத்திலும் சம்ஸ்கிருதத்தின் தொடர்புண்டு. திருவள்ளுவருடைய திருக்குறளில் முதல் குறளே "ஆதிபகவன்" என்னும் சமஸ்கிருதச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளது; மற்றும் பலநூறு ஆண்டுகளாக நமது பெரியோர்கள் ஜ, ஸ், ஷ, க்ஷ, ஹ என்னும் எழுத்துக்களையும் தமிழோடு சேர்த்து எழுதியும் வந்துள்ளமை இன்றும் கண்கூடாகும். பெரும்பாலும் ஆசிய ஐரோப்பா கண்டங்களில் பேசப்படும் மொழிகளில் சமஸ்கிருதவாடை வீசாத மொழியே கிடையாது. உதாரணமாக, சமஸ்கிருதத்தில் மாதா என்னும் சொல் ஆங்கிலத்தில் மதர் என்றும், பிதா என்னும் சொல் பாதர் என்றும், பிராதா என்னும் சொல் பிரதர்

என்றும் மருவி வந்துள்ளன, அதனால் இதனை இந்தோ ஐரோப்பியமொழி என்று கூறுகின்றனர்.

இப்படிப்பட்ட ஒரு இலக்கியப் பெருமொழியில் நமது இந்து தருமம் மிக விரிவாக எழுதப்பெற்றுள்ளது. மற்றும் இம் மொழி இந்திய நாட்டின் பொதுமொழி. அத்துடன் இச் சமஸ்கிருத மொழியை இந்திய மக்களாகிய நம்மைத்தவிர மற்ற மதத்தினரோ, நாட்டினரோ எங்களுடைய மொழி இது என்று உரிமை கொண்டாட முடியாது. ஆயினும் மக்களினமனைத்தும் ஒரு மூல மனிதனின் சந்ததி என்னும்போது மொழிகளும் ஒரு ஆதி மொழியின் பிரிவுகளே என்பதையும் நாம் மறுக்கமுடியாது. மதங்களும் அத்தகையனவே ! பண்டைய கொள்கையில் ஒரு சிலமாற்றங்களைச் செய்தவர் ஒரு நூதன மதத்தைத் தோற்றுவித்ததாக்க கூறிக் கொள்கின்றனர். உண்மையில் "கள் பழையது ; மொந்தை புதியது." என்பதைப்போல வரலாற்றுக்கு உட்பட்ட மதங்கள் எனலாம்,

வெள்ளையர்களிடம் இந்நாடு அடிமைப் பட்டிருந்தபோது பிரித்தாளும் சூழ்ச்சியினால் அவர்கள் எழுதிவைத்த சில வரலாறுகளைக் கொண்டு ஆரியர்—திராவிடர் என்ற கலகங்களை மூட்டி அதன்மூலம் தம் சொந்த நலன்களை அடிப்படையாகக் கருதிப் பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கும் சில பிதநர்களும் உண்டு. இந்தப் பைத்தியக்காரர்களில் சிலர் பள்ளிச் சிறுவர்களின் உள்ளத்தையும் பாழாக்கிவிடுகின்றனர். நாம் மொழிப் பூசல்களையோ, மதப் பூசல்களையோ தூண்டக்கூடாது.

மொழிக்கொரு மதம் இல்லை

பல மொழிகளைப் பேசும் கிறிஸ்துவர்களும் உண்டு. அரபு பேசும் முஸ்லிமும் உண்டு ; உருது பேசும் முஸ்லிமும் உண்டு. லத்தீன் பேசுபவன் மட்டும்தான் கிறிஸ்துவன். பாலி மொழி பேசக்கூடியவன் மட்டுந்தான் புத்தன். அரபு பேசுவோன் மட்டும் முஸ்லிம் என்று கிடையாது. தெலுங்குமதம், தமிழ்மதம், கன்னட மதம், மராட்டி மதம், வங்காள மதம் என்று மொழிக்கொரு மதமும் கிடையாது. இந்திய மக்கள் அனைவருக்கும் மதம் ஒன்றே. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு பண்பாடுண்டு. அந்தப் பண்பாட்டின் தொகுப்புதான் மதம் என்னும் பெயரைப் பெற்றுள்ளது. 2500 ஆண்டுகளுக்கு முன்னம் பரத கண்டத்தில் தேசங்கள் 56 என்றும் மொழிகள் பலவாகவுமிருந்தன. அவ்வாறு இருந்தபோதும், குமரியிலிருந்து இமயம் வரையிலும் மதம் ஒன்றே. அதுதான் இந்துமதம். தமிழுக்கு அகத்தியரும்

தொல்காப்பியரும் எப்படியோ அப்படியே சமஸ்கிருதத்துக்கு பாணினி முனிவரும் பதஞ்சலியும் என்று கூறலாம்.

பிற மொழிகளைத் தாழ்த்தியும் நம்முடைய மொழியைமட்டும் உயர்த்திக் கூறுவதனால் நமக்குப் பெருமை வந்துவிடாது. மற்றவர்கள் நமது மொழியைப்பற்றிக் கூறும்போதுதான் பெருமை உண்டாகும். நாம் பிற மொழிகளுக்கும் மதிப்பைத் தந்து, நம்முடைய மொழியிலுள்ள நுண்பொருள்களைப் பிறர் உள்ளங்களிலும் பதியும்வண்ணம் விளக்கவேண்டும். அப்போது தான் ஒவ்வொரு மொழியின் வளமை எத்தகையதென்பது மக்களுக்கு நன்கு விளங்கும். ஒவ்வொரு மொழியிலும் பல பெரியோர்கள் தோன்றி அவரவர்களின் அறிவாற்றலுக்கு ஏற்ப பற்பல கலைஞானங்களை அளித்துள்ளனர். ஆகவே நாம் மொழிக்கு மொழி இணக்கத்தை வளர்க்க முயற்சிக்கவேண்டும் பிணக்கத்தைப் பெருக்குவது தீங்கையே விளைவிக்கும்.

மொழிவாரி மாகாணங்கள்

இந்திய அரசு மொழிவாரி மாகாணங்களைப் பிரித்தபிறகு மக்களிடத்தில் மொழிவெறி சில இடங்களில் தலைவிரித்தாடுகின்றன. பல ஆண்டுகளாக கன்னட நாட்டில் வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் கன்னடம் பேசும் மக்களோடு பேதமற்று வாழ்ந்து வந்தனர். தற்போது மொழி வெறியினால் தமிழ் பேசும் மக்களுக்குக் கண்கலங்கும் நிலைமை உருவாகி வருகின்றது. இந்த வேதனைக்கு வித்திட்டது மாகாணங்களை மொழிவாரி பிரித்ததேயாகும். இந்தியனை இந்தியனே அந்நிய நாட்டானைப் பார்ப்பதைப்போலப் பாக்கின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. மாகாணத்துக்கு மாகாணம் பிரிகின்ற எல்லை ஓரங்களில் வாழ்கின்ற மக்களின் நிலைமைகளையும், பிற மொழிகளைப் பேசும் இடங்களில் குடியேறி வாழும் மக்களின் இன்னல்களையும் சிறிதும் சிந்திக்காத இன்றைய அரசியல் வாதிகளின் பாராமுகம் வேதனைதருவதாகும் காசை சம்பாதிக்கக் கலகம் மூட்டுவது சிலர் ; கலகங்களினால் கண்ணீர் விடுவது பலர். இதுதான் இன்றைய அரசியல்வாதிகளின் பிழைப்பாக இருக்கிறது, பதவிகளைப் பிடிப்பதற்காக இவர்கள் போடுகின்ற வேஷங்களுக்கு அளவே இல்லை. நமக்குள் நாமே மொழிப் பூசல்களைத் தொடங்கி பிரிவினைகளை வளர்க்க முயலக்கூடாது. இவை மனிதப் பண்பல்ல. வனங்களில் வாழும் மிருகப் பண்பைப் போன்றதாகும். பண்டையில் வாழ்ந்த பெரியோர்களிடம் பகைமை எண்ணம் கிடையாது.

நமது முன்னோர்கள் மிருகப் பண்பைப் போக்கவே எழுத்துக் களை உருவாக்கி மக்களுக்கு அறிவை வளர்க்க அரும்பாடு பட்டுள்ளனர்.

தமிழ் எழுத்துக்களில் அமைந்துள்ள ஒலிகளைவிட சமஸ்கிருத எழுத்துக்களில் ஒலிகள் அதிகமாக உள்ளமையால், திராவிட இனமென்று கருதக்கூடிய கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலியவற்றைப்பேசும் மக்கள் சமஸ்கிருத எழுத் துக்களின் முறைகளைப் பின்பற்றியுள்ளனர். அதைப் பின் பற்றியதனால் இம்மொழிகளுக்குக் குறைபாடு வந்துவிடவில்லை. இவை மங்கவுமில்லை; மறையவுமில்லை. நிறைவு பெறுவதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட நன்நோக்கங்களாகும். தமிழ் திராவிட மொழிகளில் மிகப் பழமை வாய்ந்ததென்று கூறி யுள்ளேன். இதில் இன்னும் சில ஒலிகளைக் குறிக்கும் எழுத்துக் களை உருவாக்கிக்கொண்டால் ''செல்வர்க்கே செல்வம் தகைத்து'' எனும் சிறப்பு எய்தும் என்று கருதுகிறேன். முன்னமே சமஸ்கிருத எழுத்துக்களில் ஜ, ஸ, ஷ, க்ஷ, ஹ என்பவற்றை நமது முன்னோர்கள் எடுத்துக்கொண்டுள்ளனர் இன்னும் சில ஒலிகள் பாக்கி இருக்கின்றன. அவற்றுக்கும் நாம் எழுதுக் களின்மூலம் உருவாக்கிவிட்டால் தமிழுக்குக் குறைவு நேராது; நிறைவு கூடும். க, ச, ட, த, ப என்னும் ஒலிகளுக்கு சமஸ் கிருதத்தில் உள்ள மும்மூன்று அதிகப்படியான ஒலிகளைத் தமிழ் எழுதுக்களிலும் உருவாக்கவேண்டும்.

இவற்றுடன் ஆங்கிலத்தில் F என்ற ஒரு ஒலிக்கு வழிவகுத்து விட்டால் எந்த மொழியினர் பேசும் வாக்கியங்களையும் ஒலி குன்றாமல் தமிழிலும் எழுதமுடியும் என்னும் நிறைவு ஏற்படும். தமிழில் சிறப்பெழுத்துக்களாக ழ, ற என்பவை முன்னமே உள்ளன. எழுத்துக்களைப் பற்றிய குறைபாடு இத்தோடு முடிந்துவிடும். இந்தப் புதிய ஒலிகளுக்கு பிறமொழி எழுத்துக் களின் வடிவத்தையே கொள்ளவேண்டும் என்னும் கட்டாய மில்லை. புதிய வடிவங்களை அல்லது உள்ள எழுத்திலேயே சில புதிய குறிகளையும் அமைத்துக்கொள்ளலாம். இவை புலவர்கள்கூடி முடிவெடுக்கக்கூடிய ஒன்றாகும். எழுத்துக்கள் பற்பல காலங்களில் சிற்சில மாற்றங்களைப் பெற்றுத் தற்போது தமிழ் எழுத்துக்கள் இந்த வடிவங்களை அமைத்துக்கொண் டுள்ளன. சமீப காலத்தில்கூடத் தமிழ் எழுத்துக்கள் சில மாற்றங்கள் பெற்றன. ணா, னா, லை, ளை, று, ணு என்பவற்றை மாற்றி எழுதுகின்றோம். இதைப்போல புதிய ஒலிகளுக்கும் குறிகளையோ உருவங்களையோ கொடுக்கலாம். ஆங்கில

எழுத்தில் பிற மொழிகளின் ஒலிகளை எழுதுவதற்குச் சங்கடப் படுவதைப் போன்று தமிழ் எழுத்துக்களில் எழுதுவதிலும் சில குறைபாடுகள் உள்ளன. அவற்றைப் போக்குவது தவறல்ல.

பிற மொழிகளின் உதவி ஒரு சிறிதுமின்றித் தூய தமிழில் எல்லா விஷயங்களையும் நம்மால் எழுதமுடியும் என்று மார்தட்டிக் கொள்ளும் மேதாவிகளும் உண்டு. அவர்களை எதிர்க்கவேண்டுமென்பதோ, வாதிடவேண்டுமென்பதோ என் கருத்தல்ல. என் கருத்துக்கு நலமெனத் தோன்றியவற்றையே விளக்கியுள்ளேன். இந்திய நாட்டில் பிற மொழிகளில் எழுதப் படும் எல்லா எழுத்துக்களுக்கும் முதலில் வரும் எழுத்து அகரம். ஆகவே இந்தியர்கள் அனைவரும் அகர ஒலியின் மரபினர் களாவர். நாம் மொழிப்பூசல்களின்மூலம் பிரிவினைகளை வளர்க்கக்கூடாது.

மகாகவி பாரதியார் இதை நினைவூட்டு முகத்தான், "இவள் செப்பு மொழி பதினெட்டுடையாளெனில் சிந்தனை ஒன்றுடையாள்," என்று பாடினார். நாமும் நாடும் நலம்பெற வேண்டுமானால் ஆன்ம நேய ஒருமைப்பாட்டை அவசியம் உருவாக்கவேண்டும். ஜாதிப் பூசலும் மொழிப்பூசலும் நாட்டை நாசமாக்கிவிடும்; மதத்தின் மாண்பைக் கெடுத்துவிடும்.

நம் நாட்டில் லிபிகள் இல்லாமல் பேச்சு வழக்கில் பேசக் கூடிய மொழிகள் நூற்றுக்கணக்கில் உள்ளன; இவற்றைப் பேசக்கூடிய மக்களை இந்தியர்கள் அல்லர் என்றோ, மனிதர்கள் அல்லர் என்றோ மட்டமாகக் கருதக்கூடாது, அவர்களும் நம்மவர்களே. இந்திய மொழிகள் அனைத்துக்கும் இந்தியாவில் சம உரிமை உண்டென்னும் உறுதிப்பாடு ஒவ்வொருவர் உள்ளத் திலும் உதிக்கவேண்டும். இந்திய நாட்டில் பேச்சு வழக்கில் எங்களுடையது என உரிமை கொண்டாடும் மொழி எதுவாய் இருப்பினும் அம்மொழியை யார்மீதும் எந்த மாகாணமும் பலாத்காரமாகத் திணிக்கக்கூடாது. அப்படித் திணித்தால் மற்றைய மொழிகளின் வளர்ச்சி பாதிக்கப்படுவதன்றிப் பகைமை முளைக்க இடந் தந்துவிடும்.

எந்த மொழியை யார் கற்க விரும்பினாலும் அதனை அவர்கள் கற்கலாம். இந்த மொழியைக் கற்றால்தான் உங்க ளுக்கு இடம், மற்றும் தொழில் என்னும் கட்டாயம் எங்கும் இருக்கக்கூடாது. யாருக்கு எந்த மொழியைக் கற்க

விருப்பமோ அவர்கள் அந்த மொழியைக் கற்கலாம் என்னும் பூரண சுதந்திரமும் வசதியும் இருக்கவேண்டும். எந்த மொழியைக் கற்றால் நாம் முன்னேற முடியுமென்பது மக்களுக்கே நன்கு தெரியும். இதைத்தான் நீங்கள் கற்கவேண்டுமென்று அவற்றை நாம் வற்புறுத்தவேண்டியதில்லை. உதாரணமாக, தமிழ் நாட்டில் இலட்சக் கணக்கில் தெலுங்கு பேசும் மக்கள் வாழ்கின்றனர். அவர்களைத் தமிழகஅரசு தமிழைப் படித்துத்தான் ஆகவேண்டும் என்று கட்டாயப்படுத்துவதில்லை. தாங்களாகவே எதைக் கற்றவேண்டுமோ அதைக் கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் வீட்டில் உரையாடுவது தெலுங்கே என்றாலும் நடைமுறை வாழ்க்கைக்குத் தமிழையே பயன்படுத்துகின்றனர்.

ஆங்கில ஆட்சி நாட்டைவிட்டு வெளியேறி நாற்பது ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆயினும் அம்மொழியை இன்னும் இந்திய மக்கள் விரும்பிக் கற்கின்றனர். ஆங்கிலத்தைக் கற்கவேண்டுமென்று ஆங்கிலேயர்களா இப்போது திணிக்கிறார்கள்? அவர்கள் ஆட்சி நாட்டை விட்டுச் சென்று பல ஆண்டுகளாயிற்று. அப்படி இருந்தும் ஆங்கிலத்தை நம் குழந்தைகளுக்கு நாமே கற்பிக்க ஏன் முயலுகிறோம்? ஆங்கிலம் உலக மொழி என்னும் நிலையில் இடம் பெற்றிருக்கிறது. சட்ட நுணுக்கங்களும், விஞ்ஞானமும், மற்றைய மொழியினர்கள் எழுதியுள்ள கலைஞானங்களின் சாரங்களும் ஆங்கிலத்தில் வைத்துக்கொண்டுள்ளனர். ஆகவே எந்த மொழி முன்னேற்றத்துக்கும் கலைகளுக்கும் உதவிபுரிகின்றதோ அம்மொழியை மக்கள் தாமாகவே கற்கத் தயங்கமாட்டார்கள். இவற்றை நாம் திணிக்கவேண்டியதில்லை. இன்று பல மாநிலங்களில் நடப்பது—'இவன் எந்த மொழியைப் பேசக்கூடியவன்' என்னும் குறுகிய கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். நாட்டை மொழிவாரியாகப் பிரித்ததின்பிறகு இந்த விஷக் காற்று வீசுகிறது. சிங்களத்தில் மொழியால் விளைந்துள்ள தீங்குகளைத் தற்போது கண்கூடாகக் காணமுடிகிறது. இத்தகைய விபரீதங்கள் விளையக் கூடாதென்றால் ஒரு மொழியைப் பேசக்கூடிய இனம் மற்றொரு மொழியைப் பேசக்கூடியவர்கள் மீது திணிப்பது ஆபத்தாக முடியும்.

இந்திய நாடு பல மொழிகளுக்குத் தாயகமாகும். பல மொழிகளில் பல ஒப்புயர்வற்ற பெரியோர்கள் அவதரித்துள்ளனர். அவர்கள் மனித குலத்துக்குச் சிறந்த கலைப்பொக்கிஷங்களை வழங்கியுள்ளனர். அந்த அமர நூல்கள் மனித குலத்துக்கு மிகமிகத் தேவையானவை, இவை மறைந்தால் நீதி

இறந்துபோகும். இந்து மதத்தில் தொழிலின் அவசியத்தின் மூலம் தோன்றிய சில பிரிவுகள் ஜாதிகளாக மாறி, ஏற்றத் தாழ்வுகளைக் கற்பித்து, சில சுயநலமிகள் மதத்தையே களங்கப்படுத்தியதைப்போல மொழிவாரி பிரிந்துள்ள மாநிலங்கள் நாட்டையே நாசப்படுத்திவிடக்கூடாது. மொழிவெறி ஜாதிவெறியைவிட மிகக் கொடியதாகும். மொழியின் விஷயத்திலும் மதத்தின் விஷயத்திலும் அன்பு அவசியமாகும். ஆனால் இவை வெறியாக மாறக்கூடாது. வெறியாக மாறினால் மற்றைய மொழிகளையும், மற்றைய மதங்களையும் பாதிப்பதோடு பகைமையை அது விளைவிக்கும்.

பொது மொழி

பல மாநிலங்களும் பல மொழிகளும் உள்ள இப் பெருநாட்டை ஆளுவதற்கு ஒரு பொதுமொழி தேவை என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் அம்மொழி இந்திய மக்கள் அனைவருக்கும் நாடு எப்படிப் பொதுவானதோ அதைப் போலவே மொழியும் பொதுமொழியாகவே இருப்பது நலமாகும். இந்தியாவிலுள்ள எந்த மாநிலமும் அப் பொது மொழியை எங்களுடைய மொழி என்று சொந்தம் கொண்டாட இடந்தரக்கூடாது. தந்தால் மாநில மக்கள் பிறமொழிகளின் வளர்ச்சி விஷயத்தில் அக்கறை வைக்கமுடியாது அத்துடன் அந்த அரசியல் மொழியைப் பேசவும் பெருந் தொகையினராக இருந்தால் நாடே அந்த ஒரு மொழியினருக்கே சொந்தமானதைப் போலக் கருத நேரும். அதனால் மற்றைய மொழிகளைப் பேசுவோர் இரண்டாந்தர மக்களைப்போன்று கருதும் நிலைமை உருவாகும். அதனால் பிறமொழிகளின் வளர்ச்சியும் இயல்பாகவே குன்றிவிடும். ஒரு சிறுபான்மையினர் பேசும் மொழியை அரசியல் பொதுமொழியாகத் தேர்ந்தெடுத்தாலும் பெரும்பான்மையுள்ள மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆகவே இந்திய மாநிலங்கள் நடைமுறையில் பேசுகின்ற மொழி எதுவாய் இருப்பினும் அம்மொழியை இந்நாட்டின் பொது மொழியாக ஆக்கக்கூடாது. ஆக்கினால் எதிர்காலத்தில் தவிர்க்க முடியாத சிக்கல்கள் ஏற்பட்டு நாடு சின்னாபின்னமாய் விடும். இதைத்தான் பகைவர்களும் எதிர்பார்க்கின்றனர்.

ஆங்கிலம்

இந்திய மாநிலங்கள் எதுவாய் இருப்பினும் ஆங்கிலம் எங்களுடைய சொந்த மொழி என்று உரிமை கொண்டாட முடியாது. ஆங்கிலம் இந்திய நாட்டுக்கு வந்தமொழி. சொந்த மொழி

அல்ல. மற்றும் இம்மொழி சுமார் 100 ஆண்டுகளுக்குமேல் இந்நாட்டின் அரசியல் பொதுமொழியாகவும் இருந்திருக்கிறது. அதன்காரணமாக நாடு முழுவதும் பரவி இருக்கிறது. விஞ்ஞானமும், சட்ட நுணுக்கங்களும் கொண்டதாக இருக்கிறது. இன்றைக்கும் நீதிமன்றங்களில் இதன் நெறிமுறைகளைப் பின்பற்றித்தான் வழக்குகள் சிந்திக்கப்படுகின்றன. ஆங்கிலம் அறியாத நீதிபதியோ, வழக்கறிஞரோ தற்போது இந்தியாவில் கிடையாது, சட்ட நிபுணர்கள் என்று கூறக்கூடிய அனைவரும் ஆங்கிலம் அறிந்த மேதைகளே. ஆங்கில ஆட்சி அகன்று பல ஆண்டுகள் உருண்டோடின. ஆனால் ஆங்கில மொழி நாட்டைவிட்டு நகரவில்லை. பட்டி தொட்டிகளில் வாழும் பிள்ளைகளுக்குக்கூட ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. ஏன்? ஆங்கில மொழியை நீங்கள் கற்றுத்தான் ஆகவேண்டும் என்று ஆங்கிலேயர்களா நமக்கு வலியவந்து திணிக்கின்றனர்? இல்லவே இல்லை. ஆங்கிலம் கற்பதால் பல நன்மைகள் உண்டு என்பதை அறிந்து – நாம் மட்டுமல்ல – பல நாட்டினரும் விரும்பிப் படிக்கின்றனர். இனி மொழியின் அடிப்படையில் ஆங்கிலேயர்கள் இந்நாட்டை சொந்தம் கொண்டாட வரமாட்டார்கள். ஆயினும் நாம் ஆங்கிலத்தை அரசியல் பொதுமொழியாக ஏற்றுக்கொண்டால் நாம் அடிமைகளாக இருந்தோம் என்னும் சின்னத்தை முத்திரைகுத்திக்கொள்வதற்கு நிகராகும் என சிலர் நினைக்கலாம். இது தவறல்ல. எனினும் இன்று ஐக்கிய நாட்டில் பேசுவதற்கு இடம் பிடித்துள்ள உலக மொழி என்னும் நிலையை எட்டிப் பிடித்திருக்கிறது; என்றாலும் இந்த மொழி அந்நிய மொழியே என்பதில் ஐயமில்லை, ஆனால் நமது கலாசாரத்தை விவேகானந்தரைப்போல் உலகத்துக்கே ஆங்கிலத்தின்மூலம் பரப்ப முடியும் என ஏன் நினைக்கக்கூடாது? இந்திய மாநிலங்கள் பேசுகின்றவற்றுள் ஏதேனும் ஒரு மொழியை அரசியல் பொதுமொழி ஆக்கினால் மற்றைய மாநிலத்தில் வாழும் மக்களுக்கு அதுவும் அந்நிய மொழியே ஆகும். உதாரணமாக, இந்திய மொழிகள் அனைத்தும் ஒரே இனம் என்னும் உறுதிப்பாடு இருந்திருந்தால் மொழிவாரி மாநிலங்களைப் பிரித்ததேன்? மாநிலத்துக்கு மாநிலம் எல்லைத் தகராறுகள் தோன்றுவது ஏன்?

நாங்கள் வெவ்வேறு மொழியினர்கள் என்னும் எண்ணங்களுக்கு ஊக்கமளித்தவர்கள் யார்? நாமே மொழிவாரி மாகாணங்களைப் பிரித்துவிட்டோம். இம்மொழிகள் ஒவ்வொன்றுக்கும் சம உரிமை தரவேண்டும். அந்த உரிமை அந்தந்த மாநிலத்துக்கு மட்டும் பொருந்தும். மற்றைய மாநிலங்களுக்கு

இவற்றுள் எதையும் பொது மொழியாகக் கொள்ளுங்கள் என்று திணிக்கக் கூடாது; திணிப்பது பலாத்காரமாகும். பலாத்காரத்தால் கலகம் மூளும்; கலகம் மூண்டால் மொழியின் பெயரால் நாடு சின்னாபின்னமாகச் சிதைந்துவிடும். பகைவர்கள் இதைத்தான் எதிர்ப்பார்க்கின்றனர்.

பெருவாரியான மக்கள் எந்த மொழியைப் பேசுகிறார்களோ அதனை இந்நாட்டின் அரசியலுக்குப் பொது மொழியாகச் செய்வது நலம் எனச் சிலர் கூறக்கூடும். இவ்வாறு செய்தால் இப்பெருவாரியான மொழியினர் மட்டும் இந் நாட்டிற்குச் சொந்தக்காரர்கள்போலவும், மற்ற மொழியினர் மாற்றாந்தாய் மக்களைப் போலவும் கருதுகின்ற அபாயம் எதிர்காலத்தில் நேரிடும். சிறுபான்மையினர் பேசும் ஏதேனும் ஒரு சிறந்த மொழியைத் தேர்ந்தெடுத்தால் பெரும்பான்மையான மக்கள் ஒப்புக்கொள்ளமுடியாது. ஆகவே, இந்திய மாநில மக்கள் பேசும் மொழி எதுவாக இருப்பினும் அதை மத்திய அரசாங்கத்தின் பொதுமொழியாக்கினால் விபரீதங்கள் விளையக்கூடும். பொது மொழி என்பது இந்நாட்டில் வாழும் மக்கள் அனைவருக்கும் பொதுவாகவே அமையவேண்டும். அவ்வாறு அமைந்திருப்பது ஆங்கிலம்; மற்றொன்று சம்ஸ்கிருதம்.

இந்த இரு மொழியைத்தவிர வேறு எந்த மாநில மொழியும் மத்திய அரசின் பொதுமொழியாக வந்தால் குழப்பங்கள் கண்டிப்பாக உருவாகக்கூடும். இந்திய மாநிலங்களில் எதுவும் 'இது என்னுடைய மொழி' என்று உரிமை கொண்டாடமுடியாத மொழி; ஆங்கிலமும் சம்ஸ்கிருதமும் அந்நிய மொழிகளல்ல. இது நமது வேதாகம புராணங்களைக் கொண்டுள்ள வித்தக மொழி. இதில் சொல்லாத நீதியோ இல்லாத ஆன்மிக விஷயமோ உலகத்தில் எங்குமே இல்லை. ஆனால் ஆங்கில மொழி நாடு பூராவிலும் பரவி இருப்பதைப்போல சம்ஸ்கிருதம் பரவலாக இல்லை. சம்ஸ்கிருதம் மெய்ஞ்ஞானத்தை விரிவாக விளக்குகிறது. ஆங்கிலம் விஞ்ஞானத்தைத் தெளிவாகக் கூறுகிறது. மனித குலத்துக்கு விஞ்ஞான மெய்ஞ்ஞானங்கள் இரண்டும் தேவையன்றோ!

ஒரு சில ஆங்கில மொழிதான் இந்திய கலாசாரத்தை நசுக்கி நாசமாக்கி விட்டது என்று கூறுகின்றனர். ஆங்கிலமென்பது 26 எழுத்துக்களை உடைய ஒரு சாதாரண மொழி. ஒலிகளில பல குறைபாடுகளை உடையது. அப்படி இருந்தும் இம் மொழியைப் பேசுவோர் பெரு முயற்சியாலும், அரசியல்

செல்வாக்கினாலும் இன்று இது உலகின் திக்குதிசை எல்லாம் பரவியிருக்கிறது. ஆங்கில மொழி நம் கலாச்சாரத்தைக் கெடுக்கவில்லை; ஆங்கிலேயர், தமது அரசியல் செல்வாக்கினால் தமது பரம்பரைக் கலாசாரத்தைப் புகுத்தியுள்ளனர். ஆகவே மொழி தவறு செய்யவில்லை; அதைப் பேசுவோர் செய்த தவறு. அம்பு தவறு ஏதும் செய்யவில்லை. அம்பைச் செய்தவனும் எய்தவனுமே தவறு செய்வதைப்போலாகும். சில தமிழர் தவறு செய்தால் அது தமிழ் செய்த தவறல்ல. அதைப் பேசுவோர்கள் செய்த தவறு. ஆகவே ஆங்கிலம் இந்திய கலாச்சாரத்தை நசுக்கவில்லை; அதனைப் பேசுகின்ற ஆங்கிலேயர்கள் செய்தனர் என்பதுதான் பொருந்தும்.

இன்று ஆங்கிலத்தை இந்திய நாட்டின் அரசியல் பொது மொழியாக இந்திய கலாசாரத்தையும், ஆன்மிகத்தையும் பரப்ப முற்பட்டால் ஆங்கிலத்தின்மூலம் சுவாமி விவேகானந்தரைப் போல் இந்த உலகத்துக்கே இந்துமதத் தத்துவங்களைப் பரப்ப முடியும். இந்துமதம் சாதாரணமானதோர் மதமல்ல. இதன் தத்துவங்கள் ஒரு புத்தகத்தில் அடங்காது. இது கலைகளின் களஞ்சியம். இந்துமதம் என்பது பல மகான்கள் உருவாக்கிய பெரிய நூல் நிலையம். இந்திய கலாசாரம் மட்டமானதல்ல. அவ்வாறு இருந்திருந்தால், அந்நிய மதங்களின் மிகப் பயங்கரமான தாக்குதல்களைச் சுமார் 1000 ஆண்டுகள் தாக்குப்பிடித்திருக்கமுடியாது. என்றோ இருக்கிற இடந்தெரியாமல் மறைந்துபோய் இருக்கும். உதாரணமாக, பல கண்டங்களில் இருந்த பழங்குடி மக்களின் பண்பாட்டினைப் பண பலத்தாலும், அதிகார தோரணையாலும், பிரசாரத் தந்திரத்தாலும், பெண்ணை, பொன்னை, மண்ணைக் காட்டி மழுப்பியதாலும் ஆஸ்திரேலியா, அமெரிக்கா என்னும் கண்டங்களையே கிறிஸ்துவ கண்டங்களாக மாற்றிவிட்டது. ஆப்பிரிக்கா கண்டத்தின் முக்கால் பாகத்தையும் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் விழுங்கிவிட்டனர். ஆப்பிரிக்காவில் மதம் மாற்றப்படாதவர் உண்டா? இல்லையா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

பலாத்காரத்திலேயே மதத்தை மாற்றுவதில் பேர்பெற்ற முகலாயர்களின் மூர்க்கத்தனமான தாக்குதல்களைப்பற்றி முன்னமே விளக்கியுள்ளேன். வரலாற்றுப் புகழ்பெற்ற ஆலயங்களை இடிப்பது, அதே இடத்தில் ஆலயப் பொருள்களைக் கொண்டே மசூதிகளைக் கட்டுவது, கொலை, கொள்ளை, கற்பழித்தல், பயமுறுத்தல் போன்ற இழிசெயல்களாலும் சில முகலாய அரசர்கள் பலரை மதம் மாற்றினார்கள். ஆயினும் அவர்களால் இந்துமதத்தை அடியோடு அழிக்க முடியவில்லை.

காரணம் இந்துமதத்தின் உயர்ந்த பண்பாட்டை மக்களும் முகலாய ஆட்சியை எதிர்த்து நின்ற சில இந்திய அரசர்களும் பக்கபலமாக இருந்ததனால் இந்த இரு மதங்களினாலும் ஆயிரம் ஆண்டுகளாக அழிக்கமுடியாமல் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது.

வரலாற்றுக்கு எட்டாத காலந்தொட்டு இதுநாள்வரையிலும் வாழையடிவாழையாக வந்த மதத்துக்கு இன்று ஆபத்து எதனால் என்றால் வாழைமரத்தை வாழையில் பிறந்த வாழைத் தாரே சாகடிப்பதைப்போல இந்திய அரசே இந்திய வர்க்கத்தை வளரவொட்டாமல், இந்து தருமத்துக்கே அப்பால்போய் நின்று மதசார்பற்ற ஆட்சி என்னும் முடிசூட்டிக்கொண்டுள்ளது. இல்லை என்றால் இந்துமதத்தை யாராலும் வெல்லமுடியாது.

பிரித்தாளும் சூட்சியில் வல்லவர்களான சில வெள்ளை யர்கள் மொழி ஆராய்ச்சியிலும் மத ஆராய்ச்சியிலும் இறங்கினர். பாதிரிமார்களும், பிஷப்புகளும்கூட ஈடுபட்டனர். வீரமாமுனிவர் என்று கூறும் பெஸ்கி பாதிரியார், பெப்ரீஷியஸ் பாதிரியார், ப்ரையுட் ஹெப்ட் என்னும் பாதிரியார், பிஷப் கால்டுவெல் போன்ற கிறிஸ்துவ மேதைகள் தமிழ்நூல் ஆராய்ச்சி—மொழி ஆராய்ச்சிகளில் நுழைந்தனர். சம்ஸ்கிருதத்தின் வழியை ஆராய முயன்ற மாக்ஸ் முல்லர், ஷோப்னஹர், அங்க்வேஷில் டுபெரான் போன்ற பலர் பிரமித்து விட்டனர். இந்துமதம் ஈடு இணையற்ற மதமென்று வாயாரச் சிலர் வாழ்த்தினர். பிஷப்கால்டுவெல் போன்றவர்கள் ஆரியம் வேறு, திராவிடம் வேறு என்று வேற்று மைக்கு வித்திட்டனர். இவருடைய இத்தகைய ஆராய்ச்சி சம்ஸ்கிருதத்தின்பேரில் ஒரு வெறுப்புணர்ச்சியை உண்டாக்க தூண்டுகோலாயிற்று. இதனுடைய அடிப்படையில் சில தமிழ்ப் புலவர்களும் கால்டுவெல் எழுதிய ஒப்பிலக்கணத்தை வெகுவாகப் பாராட்டலாயினர். ஆயினும் இவர் பண்டைய மொழியினை ஆராய்ச்சி செய்தார். இவர் கொண்டுவந்த மதத்தையும் பரப்பினார். பல்லாயிரக்கணக்கான இந்துக்களை மதம் மாற்றினார். பணத்துக்கும், பதவிக்கும் ஆசைப்பட்ட சில கைக்கூலிகள் கோடரிக் காம்பாகவும் மாறின. எனினும் மதத் தேர்ச்சியற்ற ஏழை மக்கள், உயிரின்பேரில் ஆசைவைத்த பயங்காளிகள், தீண்டாமை என்னும் கொடுமையினால் ஊருக்குப் புறம்பாக ஒதுக்கப்பட்டிருந்த அப்பாவி மக்கள் போன்ற ஒரு சிலரைமட்டும் இவர்களால் மதமாற்றம் செய்யமுடிந்தது. இவற்றை எல்லாம் இந்திய அரசும், இந்திய மக்களும் நன்கு சிந்தித்து நாட்டையும் நாட்டின் பெருமையையும் பாதுகாக்க வேண்டும்.

மொழிப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டுமானால் சம்ஸ்கிருதம் அல்லது ஆங்கிலம் இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றை ஆட்சிமொழியாகக் கொள்ளலாம். மாநில மொழிகள் எதுவாக இருந்தாலும் அதனை ஆட்சிமொழியாக ஆக்க முயன்றால், மற்றைய மாநில மொழிகளின் வளர்ச்சி கண்டிப்பாகக் குன்றிப் போகும். ஆட்சிமொழியைப் பேசுகின்ற மக்கள் மட்டும் இந்நாட்டிற்குச் சொந்தக்காரர்களைப்போலவும் மற்ற மொழியினரை அந்நிய நாட்டினர்போலவும் கருதுகின்ற நிலை உருவாகிவிடும். இப்போதே நாட்டை மொழிவாரி பிரித்ததின் பயனால் பல மாநிலங்களில் ஒற்றுமை தேய்கிறது. உதாரணமாக கன்னட நாட்டில் வாழும் தமிழர்களைப் பார்த்தால் சில கன்னட மக்கள் வேற்றுநாட்டினரைப் பார்ப்பதைப்போலப் பார்க்கின்றனர். அத்துடன் வேலை வாய்ப்புக்களும் முடக்கப்பட்டு வருகிறது. சிலருடைய வாயில் 'எங்கோ இருந்து பிழைக்கவந்த பரதேசிகள்' என்னும் கடும் சொற்களும் வெளிப்படுகின்றன. நம்முடைய நாடு இந்தியா. நாம் அனைவரும் இந்துக்கள் என்னும் எண்ணம் மாறி கன்னடியன், தெலுங்கன், மலையாளி என்று மொழியின் பெயரால் நாட்டைப் பிரித்துக்கொண்டிருக்கின்றனர். மாநிலம் என்னும் சிறு வட்டத்துக்குள் இருக்கும் மொழியினருக்கே இந்த இறுமாப்புத் தலையெடுக்கும்போது, மத்திய அரசைக் கைப்பற்றிய மொழியினர்கள் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதைப்பற்றி இங்கு விளக்க வேண்டியதில்லை.

ஒரு கூட்டம் இந்நாட்டில் நாங்கள்தான் பெரும்பாலான மக்கள். மற்ற மொழியினர் சிறுபான்மையராவர். ஆகவே எங்கள் மொழிதான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று கூறும் முரட்டுப் பிடிவாதத்துக்கு மத்திய அரசு வளைந்து கொடுக்குமானால் அது மற்றைய மாநில மொழிகளைக் குறைத்து மதிப்பிட்டதாகக் கருதப்படும். இந்நாட்டின் தோன்றிய 179 மொழிகளைப் பேசும் மக்கள் அனைவருக்கும் இந்திய நாடு பொது என்னும் மனோபாவத்தை மத்திய அரசு உருவாக்கவேண்டும்.

இந்திய மக்கள் இந்தியாவில் எந்த மாநிலத்தில் வாழ நேர்ந்தாலும் எந்த மொழியைப் பேசினாலும் இந்திய மொழிகளுக்குள் எதைக் கற்க விரும்பினாலும் இவையும் தமது நாட்டு மொழிதான் என்னும் நல்லெண்ணம் தோன்றச் செய்வதுதான் மத்திய ஆட்சியின் பொறுப்பு. இதற்கு மாறுபட்டால் நாடுகூறு கூறாகி விடும். மத்திய ஆட்சி என்னும் ஒன்று இருக்காது.

ஜாதிகளாலும் மொழிகளாலும் பிரிக்கப்பட்டுள்ள நாம் ஒன்றுபடவேண்டுமானால் ஒரே வழிதான் இருக்கிறது. அது தான் மதம். குமரிமுதல் இமயம்வரையிலும் இருந்தமதம் ஒன்றே. அதுதான் இந்துமதம், ஆரியர் மதம், திராவிடர் மதம் என்று தனித்தனியாக அன்றுமில்லை; இன்றுமில்லை. பல்லாயிர மாண்டுகளுக்கு முற்பட்ட பாரத, இராமாயணங்கள் என்னும் இதிகாசங்களிலும் காசி இராமேஸ்வரம் க்ஷேத்திரப் பெருமை களைப் பற்றிப் பேசப்படுகின்றன. மற்றும் தென்மதுரை–வட மதுரை, தென்காசி–வடகாசி என்னும் பெயர்ப் பொருத்தங்களும் நீண்ட காலங்களாக இருந்துவருகின்றன. இந்திய யாத்ரிகர் களுக்குச் சென்ற இடமெல்லாம் மதத்தின்பேரில் கொண்ட ஆன்மநேய ஒருமைப்பாட்டால் சிறந்த வரவேற்புகள் இருந்தன. மதம் ஜாதிகளுக்கும் மொழிகளுக்கும் அப்பாற்பட்டது. இந்து மதமென்பது ஒரு ஜாதிக்கோ, ஒரு மொழிக்கோ, ஒரு தலைவனுக்குமட்டுமோ சொந்தமானதல்ல. இந்துமதம் என்பது இந்திய நாட்டுக்கே சொந்தமாகும். ஒவ்வொரு மொழியிலும் பல பெரியோர்கள் இயற்றிய நூல்கள் ஏராளமாக உள்ளன. இவர்களுக்குள் யாரும் தாழ்ந்தவர்களல்லர்.

இந்திய மொழிகள் அனைத்திலும் சித்தர்கள், யோகிகள், முனிவர்கள், ஆசாரியர்கள், பக்தர்கள், ஞானிகள், முக்தர்கள் எனப் பலர் தோன்றியுள்ளனர். தட்சிணாமூர்த்தியிலிருந்து அரவிந்தர்வரையிலும் இந்தியர்களே. சில சூழ்ச்சிக்காரர்கள் மத நம்பிக்கை அற்றவர்களின்மூலம் ஒருமைப் பாட்டுக்கு ஊறு விளைவிக்கின்றனர். உட்பூசல்களுக்கு இந்திய மக்களும் அரசும் இடந்தரக்கூடாது. ஆகவே கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், வாயிருந்தும் ஊமையராய் நமக்குள் நாமே கண்டும் காணாதவர்கள்போலக் காலத்தை விரய மாக்கினால் பெற்ற சுதந்திரம் பறிபோய்விடும்.

குழப்பம் தீரவேண்டும்

சாதிபேதங்கள் ஒழிக்கப்படவேண்டியவை; மொழிகள் செழிக்கவேண்டியவை; சாதிகளை ஒன்றாக்கமுடியும். மொழி களை ஒன்றாக்கமுடியாது, மற்றும் மத்திய அரசால் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டுவிட்டன. இந்தியா என்னும் பெயரும் இந்திய ஆட்சி என்னும் பெயரும் நிலைக்கவேண்டுமாயின் கீழ்க்காணும் விஷயங்களை அரசியலார் சிந்திக்கவேண்டும்:

நாட்டில் பெருந்தொகை மக்கள் பேசுவதாய் இருப்பினும் சிறுதொகையினர் பேசுவதாய் இருப்பினும், இந்நாடு மாநில மொழிகள் எதுவாய் இருப்பினும் அது நாட்டின் பொதுமொழி

யாகக்கூடாது. அதனால், மற்றைய மொழிகளின் வளர்ச்சி தளர்ச்சி அடையும். இந்திய மாநிலங்களில் எதுவும் உரிமை கொண்டாடமுடியாத பொதுமொழி ஆங்கிலமும், சமஸ் கிருதத்தைத் தவிர வேறு எந்த மொழியும் பொது மொழியல்ல. இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றை மக்கள் சம்மதத்தின்பேரில் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் இருமொழி கட்டாயப் பாடமாக்கவேண்டும். ஒன்று ஆட்சி மொழி, மற்றொன்று மாநில மொழி. மற்றையவை அவரவர்கள் இஷ்டபாடம். எந்த மாநிலமும் எந்த மொழிவளர்ச்சிக்கும் இடையூறாக இருக்கக்கூடாது. இருந்தால் ஒற்றுமை குலையும் அதனால் பெற்ற சுதந்திரம் பறிபோகும். இவற்றைக் கற்றறிந்த நல்லோர்களும் அரசியல் மேதைகளும் சிந்திப்பார்களாக.

தாயின் மதம்

இதுவரையும் மதத் தோற்றத்தைப்பற்றிய கருத்துக்களும் மதத்தால் தோன்றிய மாண்பும், பல மதங்களின் வரலாற்றுச் சுருக்கங்களையும் விளக்கியபின்பு இந்நூலுக்குத் தாய்மதம் என்னும் பெயரிட்டதற்குக் காரணம் சுவாமி விவேகாநந்தர் என்பதையும் விளக்கினோம். தாய்மதம் என்னும் சொல்லைத் தாயாகிய மதம்-தாய்போன்ற மதம் நம் இந்துமதம் என்பதற்குப் பல சான்றுகளையும் பார்த்தோம். பிறகு மதங்களின் பெயரால் நடந்த கொடுமைகள், இந்துமதத்துக்கு இதர மதங்களாலும், இந்திய அரசாலும் இன்னல்களையும் ஒருவாறு உணர்ந்தோம். எதிர்காலத்தில் இந்து மதத்துக்கும் இந்துக்களுக்கும் உருவாகிக் கொண்டிருக்கும் அபாயங்களையும் அவற்றை நீக்குவதற்கு ஏற்ற வழிமுறைகளையும் சிறிது ஆராய்ந்தோம்.

இனி தாயின் மதம் என்னும் தலைப்பில் இந்து மதத்தில் உள்ள சிறந்த கருத்துக்கள் எவை என்பதையும் சிறிது ஆராயலாம்: இம்மதம் பிற நாட்டிலிருந்து இங்கு வந்த மதமல்ல. இந்திய நாட்டிலேயே தோன்றிய மதம். இந்தியநாடு நம் தாய்நாடு என்றால் இதில் தோன்றியமதம் நம் தாய்மதம் என்பது பொருத்தமாகும். கிறிஸ்தவ மதம் இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் பரவியுள்ளது. ஆயினும் கிறிஸ்தவமதம் தோன்றின இடம் பாலஸ்தீனத்தின் தென்பகுதி. பெத்லகேம் என்னும் இடத்தில் இயேசுநாதர் பிறந்தார். இது ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்ததாகும், ஆசியாவில் தோன்றின மதம் ஐரோப்பா முதலான இடங்களில் குடியேறியது. இந்து மதம் இந்தியாவிற்குள் குடியேறியதல்ல. பாரம்பரியமாக வந்த

சமுதாய மதம். அவைகள் அனைத்தும் ஒவ்வொரு தனிப்பட்ட பெரியோர்களால் உருவாயின. இந்துமதம் அத்தகைய தனி மனித மதமல்ல; இது சமுதாய மதம்!

வியாச முனிவர்

சுமார் 5000 ஆண்டுகளுக்குமுன்னம் பராசர முனிவரின் புதல்வர் வாராணர் என்னும் முனிவர் ஒருவர் இருந்தார். இது பாண்டவர்களும், கண்ணபிரானும் வாழ்ந்த காலமாகும். அவர் தோன்றுவதற்கு முன்னமே இறைவன் திருவருளால் தோன்றிய முனிவர்களால் அருளிச்செய்த அரிய மறைபொருள்களின் தொகுப்பு ஏகமாகப் பல பெரியோர்களால் திரட்டிவைக்கப் பட்டிருந்தன. அவற்றை எல்லாம் வாதராயண முனிவர் விரிவாக ஆராய்ந்து நான்கு பகுதிகளாக வகுத்தார். ரிக், யஜுர், சாம, அதர்வணமெனும் நான்கு பெயர்கள் உடையனவாகும். வேதங்களை வகுத்ததனால் இவருக்கு வேதவியாசர் என்னும் பெயர் உண்டாயிற்று. இவை உயர்ந்த தத்துவங்களை மறை முகமாக விளக்குவதனால் இவற்றுக்குத் தமிழில் மறை எனப் பெயர் எய்திற்று. எழுத்துக்கள் தோன்றாத ஆதி காலத்தில் காதாலேயே உபதேச முறையில் கேட்கப்பட்டு வந்ததனால் பண்டையில் இவற்றைச் சுருதிகள் என்று கூறினர். (சுரோதிரம்–காது) காதுகளின்மூலம் கேட்டது சுருதி என்பதாயிற்று. எழுதாக் கற்பு, எழுதாக் கிளவி என்றும் கூறிவந்தனர். இவ் வேதங்கள் மந்திரம், பிரமாணம் என இருவகையாக உண்டு.

ரிக்வேதம்

இது 10 மண்டலங்களாகவும் 1028 சூக்தங்களாகவும், 10,552 ருக்குகளைக் கொண்டது என்பர். உலக இலக்கியங்களுள் ரிக்வேதம் உயர்ந்த காவியம் என்பர். இது பக்திக்கு உறைவிடமானது. ரிக்வேதம் கடவுள் ஒருவர் என்றே கூறுகிறது. "ஏகம்ஸத் விப்ரா பஹுதா வதந்தி" (1—164) என்பதால் இது நமக்கு நன்கு விளங்குகிறது.

யஜுர் வேதம்

இது கிருஷ்ண யஜுர், சுக்கில யஜுர் என இரு பிரிவுகள் கிருஷ்ணயஜுரில் 86 கிளைகளும் 44 பிரச்னங்கள்; 7 காண்டங்களில் அடக்கப் பெற்றிருக்கின்றன என்பர். இதற்கு உத்பாதர். மஹீதரர், சாயனர் முதலியோர் உரை எழுதி உள்ளனர் என்பர். இதில் பஞ்சாட்சர மந்திரம், ருத்திர மந்திரம், சிவபிரானின் பெருமையும் பல வேள்வி முறைகளும் உண்டு.

சாம வேதம்

இறைவனை இசையுடன் பாடிப் பரவசப்படுகின்ற வேதமென்பர். சாம வேதத்தை மிகவும் உருக்கமாகப் பாடி இராவணன் பகவானிடம் பல வரங்களைப் பெற்றான் என இராமாயணம் போன்ற இதிகாசங்கள் கூறுகின்றன.

அதர்வண வேதம்

இதில் மந்திரங்கள் அதிகமாக அடங்கியுள்ளன. பிரமச்சரியம், விருந்தோம்பல், காலக்கணக்குகள், இராஜ்ஜிய நலன் முதலானவற்றை விவரிக்கின்றன என்று கூறுவர்.

வேதம் உண்டானதன் நோக்கம் உலக நலமாகும். வேதம் ஒழுக்கத்தைப்பற்றியும் பக்தியைப்பற்றியும் தத்துவ இரகசியங்களையும் விளக்குவதாகும். சைவ, வைணவ சமயாச் சாரியர்களும் இந்நான்கு வேதங்களையும் ஆதாரமாகக் கொண்டுள்ளனர். பக்தி மார்க்கத்தில் மேம்பட்டவர்களான ஆழ்வார்களும் நாயன்மார்களும் வேதநெறியையே பின்பற்றிப் போற்றுகின்றனர். வேதாந்த தத்துவங்களை ஆராய்வதற்கு வேதங்கள் ஒப்பற்ற பொக்கிஷங்களாகும். சுருக்கமாகக் கூறின் ரிக் வேதத்தில் தோத்திரங்கள்; அதிகம் யஜுர் வேதமானது வேள்விகளும் அவற்றைச் செய்யும் விதிமுறைகளும், சாமவேதம் இன்னிசைகள் நிறைந்த இனியவேதம்; அதர்வணம் மந்திரங்கள் மிக்கதாகும்.

வேதங்களைப்பற்றி சுவாமி விவேகானந்தர், “வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு மக்களால் காணப்பெற்ற ஆத்மீக முடிவுகளை ஒன்றுசேர்த்து வைக்கப்பட்ட களஞ்சியமே வேதம்” என்று விளக்கியுள்ளார்.

வேதம்

வேதம் என்னும் சொல் ‘வித்’ என்னும் தாதுவிலிருந்து பிறந்ததாகும். வித் + அம்—விந் அம் என்பது வேதம் என மருவிற்று. வித் என்றால் மூலம், அறிவு; அம் என்றால் அழகிய மேலான. ஆகவே வேதம் என்றால் மேலான அறிவு என்பது பொருளாகும். “வேத யதீதி வேத:” அறிப்பதனால் அறிவு எனப்பட்டது என்பர்.

(ஆதாரம் : கலைக்களஞ்சியம்)

வேதாங்கம் 6

வேதாங்கம் என்றால் வேதங்களின் உறுப்புக்கள் என்பதாகும்.

1. சிட்சை—வேதங்களை ஓதும் முறை
2. சந்தஸ் — வேதச்செய்யுள்களின் இலக்கணம் (பாட்டியல்)
3. வியாகரணம்—மொழி இலக்கணம்
4. நிருத்தம்—வேதப்பொருள்களை அறிதல்
5. கல்பம்—வேள்வி முறைகளும் சடங்குகளும்
6. ஜோதிடம் — வேதங்களையும், மந்திரங்களையும், வேள்விகளையும் தொடங்கவேண்டிய காலங்களைப்பற்றி விளக்குவது

இவற்றை மக்களுக்குத் தெளிவாக வெளிப்படுத்தியவர்கள் முனிவர்கள், யான் எனது என்னும் செருக்கற்றவர்கள். ஆனமையால் வேதாகமங்களை நாங்கள் எங்களுடைய புத்தி சக்தியால் கண்டுபிடிக்கவில்லை; இறைவனுடைய கருணையினால் அவை தோன்றின. ஆகவே வேதம் "அபௌரஷ்ப"—புருஷனால் உண்டானதல்ல; இறைவன் திருவருளால் தோன்றிற்று என்று கூறினர்.

வேதாந்தம்

வேதங்களின் அந்தம் வேதாந்தம். இதை மறைகளின் முடிவென்றும், சுருதி முடிவென்றும் கூறுவர்.

வேதங்களை ரிஷிகளின்வாயிலாக மாணவர்கள் பாடங் கேட்கும்போது, அம் முனிவர்கள் வேதங்களின் உட்பொருள் களைத் திரட்டித் தந்துள்ள தொகுப்புகளே வேதாந்தம் என்று கூறப்படுகின்றன. உபநிடதங்கள் என்பதும் இவைகளே!

உப—அருகில்; நி—இருந்து. ஷத்—கேட்டது. உபநிஷத்—அருகிலிருந்து கேட்டவை. இவை சிறுசிறு நூல்களாக அமைந்துள்ளன. இவற்றுள்,

1.	கரும காண்டத்தைப்பற்றி	840;
2.	உபாசனா காண்டத்தைப்பற்றி	238;
3.	ஞான காண்டத்தைப் பற்றி	108
	ஆக மொத்த உபநிடதங்கள்	1180

என்பர். இந்த உபநிடதங்கள் வேதசாரமாகும்.

இவற்றுள் ஞானகாண்டத்தைப்பற்றிய 108 உபநிடதங்கள் சிறப்புடையனவாகக் கருதுகின்றனர். இந்த நூற்றெட்டுக் குள்ளும் தஸோபநிஷத் என்னும் 10 உபநிடதங்களை மிகமிக முக்கியமானதாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

1. ஈஸாவாசியம்
2. ஐதரேயம்
3. கடம்
4. சாந்தோக்கியம்
5. கேனம்
6. தைத்ரீயம்
7. பிரசனம்
8. பிருகதாரிண்யம்
9. முண்டகம்
10. மாண்டுக்யம்

என்பனவாகும். இவற்றின் பெருமையை

"பன்னும் உபநிடதநூல் எங்கள் நூலே
பார்மீது ஏதொருநூல் இதுபோலே"

என்று மகாகவி பாரதியார் சவால் விட்டிருக்கிறார். இந்த உபநிடதங்களுக்கு நிகரான நூல் இந்த உலகத்தில் வேறு எந்த மதமும் உண்டாக்கவில்லை என்பதை இப் பாடல் உறுதிப் படுத்துகிறது. இது பொய்யுரையல்ல; மெய்யுரை.

வேதங்களின் கருத்தைத் திரட்டி வேதவியாச முனிவரும் "பிரம்ம சூத்திரம்" என்னும் ஒரு அரிய ஆராய்ச்சி நூலையும் அருளியுள்ளார்.

ஆகமங்கள்

வேதங்களுக்கு உறுதுணையாக ஆகமங்கள் என்னும் ஒரு பிரிவும் இருக்கின்றது. இவற்றுள் சைவாகமம், வைணவாகமம், சாக்தேய ஆகமங்கள் எனப் பல உண்டு. ஆ—ஞானம், க—மோட்ச சாதனம்; ம—மல நாசம் என்னும் பொருளை ஆகமம் என்னும் சொல்லுக்கு சைவ நூல்கள் பொருள் கூறுகின்றன. மற்றும் ஆகமம் என்றால் தொன்றுதொட்டு வந்தது என்னும் பொருளைக் கலைக் களஞ்சியம் கூறுகிறது. வீடுபேற்றின் நெறி முறைகளை விளக்குவதனை ஆகமங்கள் என்று கூறலாம்.

மனம், வாக்கு, காயங்களுக்கு எட்டாத பொருளாய்க் கடவுள் இருப்பதால் அப் பரம்பொருளை ஒரு சிலரே மறைகளில் கூறும் வண்ணம் வழிபட முடியும்.

பெரியோர்கள் தம் உடலையே ஆலயமாக்கொண்டு ஆன்மாவையே இறைவனாக வழிபடுவார்கள்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தோர்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே"

என்று பாடியுள்ளார் திருமூல நாயனார். இந்த நிலையைச் சாதாரண மக்களுக்கும் உணர்த்துவதற்காக உண்டாக்கப் பட்டதே ஆலய வழிபாடுகள். இந்த ஆலய விதிமுறைகளை ஆகமங்கள் விபரமாக விளக்குகின்றன. எப்படி எழுத்துக்கள் நாம் பேசும் மொழிகளின் ஒலிகளுக்குப் பேருதவியாக இருக்கின்றனவோ, அதைப்போலவே ஆலயங்களும் அவற்றுள் அமைத்து உள்ள விக்ரகங்களும் பக்திக்கும் இறைவனை உணருவதற்கும் பேருதவி புரிகின்றன.

ஆகமங்களில் ஆலய அமைப்புகளைப்பற்றியும், மந்திரங்கள், பூசாவிதிகள் முதலானவையும் விரிவாகக் கூறப்படுகின்றன.

ஆகமங்களில் பல படித்தரங்கள் இருக்கின்றன. இவற்றை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று கூறுவர்.

விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனிபோல் ஆகும் பராபரமே"

என்றார் தாயுமான சுவாமிகள். எழுத்துக்களைக் கற்றபிறகு, அவற்றைக் கூட்டக் கற்று, கூட்டியபிறகு அச்சொல்லை ஒலி குன்றாமல் சொல்லக் கற்று, அதன்பிறகு அச்சொல்லின் பொருளை உணர்த்துவதைப்போல ஆகமங்கள் ஆலய வழிபாட்டைத் தொடங்கி, ஆன்ம நிலையை அடைகின்ற வரையிலும் கொண்டுசெல்கின்றது. இவற்றை விளக்கும் ஆகமங்கள் பல உள்ளன. அவற்றுள் 207 ஆகமங்கள் குறிப்பிடத்தக்கவை; அவற்றுள்ளும் 28 ஆகமங்களை மிக முக்கியமானதென சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

1. அஜிதம், 2. ஆக்நேயம், 3. அஞ்சுமான், 4. கரணம், 5. கிரணம், 6. சந்தானம், 7. சர்வோத்ரம், 8. சந்ரஞானம், 9. சித்தம், 10. சிந்தியம், 11. சுவாயம்புவம், 12. சூக்ஷமம், 13. சுப்ரதீபம், 14. ஸஹஸ்ரம், 15. தீப்தம், 16. நிஸ்வாசம், 17. பரமேஸ்வரம், 18. மகுடம், 19. முகம்பிமம், 20. புரோற்கிதம், 21. ரௌரம், 22. வீரம், 23. விஜயம், 24. வமலம், 25. வாதுளம், 26. யோகம், 27. யோகஜம், 28. இலளிதம் என்பனவாகும்.

புராணங்கள்

புராணங்கள் என்றால், பழைய கதைகள் என்பதாகும். இந்து மதத்துக்குள் நமது புராணங்கள் பெரும்பகுதியாகும். எது பன்னெடுங்காலங்களாக மக்களிடையில் கதைகளாகவும் நாடகங்கள்மூலமாகவும் பரவி வந்துகொண்டிருக்கிறதோ அதுவே புராணம் என வாயு புராணம் கூறுகிறது. இப் புராணங்களில் அரச மரபு, முனிமரபு, மனுவந்தரம் முதலானவற்றை விளக்குவதுடன் அறநெறிகளுக்குப் புறம்பாகச் செல்வோர்களைப்பற்றியும் நீதியோடு நடப்பவர்களைப்பற்றியும் விளக்குகின்றனர்.

புராணங்களில் மகாபுராணம், உபபுராணம், தலபுராணம் என மூன்று வகைகள் உண்டு.

மகா புராணங்கள் 18 உள்ளன; உப புராணங்கள் 18.

தல புராணங்கள் தேவாலயங்கள் கட்டப்பெற்றுள்ள தலங்களின் பெருமைகளைக் கூறுவன. காசி, இராமேஸ்வரம், சிதம்பரம், காஞ்சி, திருவண்ணாமலை போன்ற தலப்பெருமைகளையும் அத் தல மூர்த்திகளின் வரலாறுகளையும் விளக்குவன இவை.

மகாபுராணங்கள் 18; அவையாவன :

1. பிரம்மம் : வசுக்கள், ஏகாதச ருத்திரர், ஆதித்தர், மனுக்கள், சூரியனுடைய அஷ்டோத்திர (108) நாமங்கள்; சிவபிரானின் சஹஸ்ர (1008) நாமம் முதலியவற்றைக் கூறுவதாகும்.

2. பதுமம் : 5000 சுலோகங்களைக் கொண்டது. மாதங்களின் மகிமை, பகவத் கீதையிலுள்ள 18 அத்தியாயங்களுக்கும் தனித்தனிக் கதைகள். வேதாந்தம், கிருஷ்ண அஷ்டோத்தரம், சிவசகஸ்ர நாமங்கள்.

3. வைணவம் : கிருஷ்ணாவதாரத்தை வருணிப்பது; யமகீதை, பிதுர்கீதை முதலியன உண்டு.

4. பாகவதம் : கிருஷ்ணாவதாரத்தின் பெருமை, கோபிகைகளின் கிருஷ்ணபக்தி; வேதாந்தம்.

5. சிவபுராணம் : சிவ நாம மகிமை. பஞ்சாட்சரத்தின் பெருமை. சிவயோகம், பரகாயப் பிரவேசம், காசியின் பெருமை.

6. பௌஷிய புராணம் : கலியில் என்னென்ன நேரும் என்பதையும், இஸ்லாம், கிறிஸ்துவமதம் இவை உண்டான வகை, இவர்கள் பாரத தேசத்தை ஆள்வர் என்னும் விஷயமும் மனிதர் இயல்பும் கூறுவது.

7. நாரதீயம் : இது, பதினெண்புராணங்களின் சுருக்கம். விரதங்கள், சங்கீத சாஸ்திரம், இல்லற துறவற தருமங்களை விளக்குவது.

8. மார்க்கண்டேயம் : தேவி மான்மியம், சதாசாரம், இல்லற-துறவற தருமங்கள், யோகம், சகுனம் முதலியவற்றின் நன்மை தீமைகளை விளக்குவது.

9. ஆக்நேயம் : மருந்து, தனுர்வேதம், செடி – கொடி, வசீகரணம், மந்திரம், விக்ரக அமைப்பு, நம் உடலிலுள்ள நாடிகளின் கணக்கு முதலியவற்றைக் கூறுவது.

10. பிரம்மவர்த்தம் : இராதையின் பிறப்பு வளர்ப்பு; க்ஷேத்ரமான்மியம், கனவுகளின் பலன் என்பவற்றைக் கூறுவது.

11. இலிங்கம் : சிவன் இலிங்கமாக இருக்கக் காரணம். எந்தெந்த அபிஷேகத்தில் எந்தெந்த பலன் உண்டு; பசு–பதி–பாச விளக்கம்.

12. வராகம் : தசாவதாரம், அகத்திய கீதை, பிதுர்கீதை ருத்ரகீதை, மரங்களை வளர்க்கவேண்டிய அவசியங்கள்—முதலியன விளக்குவது.

13. காந்தம் : கந்தக் கடவுளின் திருவிளையாடல். இது 7 காண்டங்களை உடையபெரு நூல்.

14 வாமனம் : சிவகதைகள் நிறைந்த நூல். சிறிது வேதாந்தமும் உண்டு.

15. கூர்மம் : வியாசகீதை, ஈஸ்வர கீதை, தேவி சகஸ்ர நாமம் முதலியன உண்டு.

6. மச்சம் : பிதுர்லோகம், சிராத்தம், அதற்குரிய மந்த்ரங்கள் முதலியன உண்டு.

17. கருடபுராணம் : இறந்த உயிர் எப்படி எமலோகம் செல்கிறது ; மற்றும் நீதி என்பவற்றை விளக்குவது.

18. பிரம்மாண்டம் : இலலிதா தேவியின் சரிதம் விரிவாக உள்ளது.

உபபுராணங்கள் 18. 1. நந்தி, 2. நாரதீயம், 3. மானவம், 4. காளி, 5. பராசரம், 6. மரீசி, 7. துருவாசம், 8. சிவ தருமம், 9. சனத்குமாரம், 10. ஔனசம், 11. வருணம், 12. மகேஸ்வரம், 13. சௌரம், 14. சாம்பவம், 15. பார்க்கவம், 16. கர்க்கம், 17. வாசிட்டம், 18. பிருகத்தருமம் போன்ற புராணங்களை உபபுராணங்கள் என்பர். இவையன்றிப் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம்.

மகாபுராணங்கள் பதினெட்டையும் எழுதியவர் வியாசர். மற்றும் ஒரு இலட்சம் சுலோகத்தில் மகாபாரதத்தையும் எழுதியுள்ளார். இன்றும் அவற்றுள் சிதலமடைந்ததுபோக 84 ஆயிரம் சுலோகங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். இதனைத் தமிழில் சதாவதானம், ஸ்ரீ உபயவேதி. ஈ. ஸ்ரீநிவாசாசாரியார் மொழி பெயர்த்துள்ளார் ; இது பல தொகுதிகளாக இருக்கின்றது.

இதிகாசங்கள்

ஹிதி — இவ்வாறு, ஹாசம் — நடந்தது. இதிகாசங்கள் என்றால் இவ்வாறு நடந்தது என்னும் பொருளாகும். இராமாயணத்தையும் பாரதத்தையும் இதிகாசங்கள் என்பர். இவற்றைப் பற்றித் தெரியாத இந்து இந்திய நாட்டில் கிடையாது. இவ்விரு நூல்களும் மனித உள்ளங்களை ஈர்க்கவல்ல ஆற்றல் படைத்தவை என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஸ்மிருதிகள்

ஸ்மிருதி என்றால் நினைப்பது என்னும் பொருள் தரும். பண்டைய பெரியோர்கள் மனித வாழ்க்கைக்கு ஏற்ற புனித நெறிகளை நினைத்து மக்களுக்குக் கூறினர். அந்த அற நூல்களுக்கு ஸ்மிருதிகள் என்பது பெயர். தரும சாத்திரங்கள் என்பதும் இதுவே. தமிழில் இவற்றை நீதி நூல்கள் என்கிறோம். இவைகளுக்குள் மனுஸ்மிருதி முதநூல் என்று கூறலாம். இவற்றை எழுதியவர்கள் பலராவர். இவர்கள் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர். இந் நீதிநூல்களில் சில அவரவர்கள் வாழ்ந்த காலத்துக்கு அமைந்துள்ளன.

மனு, அத்திரி, அங்கீரசர், ஹாரீதர், யாக்ஞ வல்கி, உசனர், நாரதர், ஆபஸ்தம்பர், சம்வர்த்தனர், காத்தியாயனர், பிருகஸ்பதி, பாரசரர், வியாசர், விகிதர், தக்கர், கௌதமர், வசிட்டர் போன்ற பல முனிவர்கள் எழுதியுள்ளனர். இவையன்றிப் பல மொழிகளில் பல நீதி நூல்கள் பல பெரியோர்களாலும், பண்டிதர்களாலும் ஏராளமாக இருக்கின்றன. நீதி நூல்கள் தமிழில் பல

உண்டு. தமிழில் எழுதப்பட்டுள்ள நூல்களுக்குள் தலையாயவை திருக்குறளும் நாலடியாரும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஔவைபிராட்டி, அதிவீரராம பாண்டியன், உலகநாதன் என்பவர்களைத் தமிழ் மக்கள் மறக்கமுடியாது. மற்றும் முதுமொழிக் காஞ்சி, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம் போன்றவையும் சதகங்களும் பல உள்ளன.

இந்த தரும நூல்கள் மூன்று வகையாகப் பிரிக்கப் படுகின்றன :

1. மனிதன் நடந்துக்கொள்ளவேண்டிய ஒழுக்கம்.
2. நெறிதவறியவர்களைத் தண்டிக்கவேண்டிய முறைகள் ;
3. தான் செய்த குற்றத்துக்குத் தானே கழுவாயாகப் பிராயச்சித்தம் செய்து கொள்ளல் என்பனவும் ஸ்மிருதியுள் அடங்கும்.

உபவேதங்கள் 4

1. **ஆயுர்வேதம்** : மருத்துவ முறைகள்.
2. **காந்தர்வ வேதம்** . இசைஞானத்தை விளக்குவது சங்கீதக் கலை
3, **தனுர்வேதம்** : யுத்த தருமங்களையும் போர் முறைகளையும் கூறுவது ;
4. **அர்த்தவேதம்** : அறவழியில் தொழில் புரிந்து வாழ்க்கைக்குத் தேவையான பொருளீட்டும் நெறிமுறைகள்.

இவையன்றி இந்துமதத்தில் 64 கலைஞானங்களைப் பற்றியும் பேசப்படுகிறது. இவற்றில் பல அரிய நூல்கள் தீக்கிரையாயின. சில முகலாய மூர்க்கர்கள் இந்நாட்டின்பேரில் படையெடுத்த போது ஆலயங்களை இடித்ததல்லாமல் பல நூல் நிலையங்களையும் பொசுக்கிவிட்டனர். இவர்கள் இந்துக்களுக்கும் இந்து மதத்துக்கும் இழைத்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. நடந்துவிட்டதைப் பேசிப் பயனில்லை. இனி எதிர்காலத்தில் அக்கொடுமைகள் நடைபெற வொட்டாமல் பார்த்துக்கொண்டால் போதுமானது.

இந்து மதத்தில் தோன்றிய நமது முந்தையோர்கள் அருளியுள்ள நூல்கள் அனைத்தையும் ஆராய்வதற்கு நமக்கு ஆயுள் போதாது. இந்து மதம் ஒரு பெருங் கடல் ; கடலுக்கு ஆற்று

நீர், ஊற்று நீர், மழை நீர் என்னும் மூன்றும் எய்தும், அதைப் போலவே இந்துமதம் வேத வியாசருக்கு முற்பட்ட முனிவர்களின் அருளுரைகளையும், பிற்பட்ட பெரியோர்களின் தெருளுரைகளையும், இனி வரப்போகும் நல்லோர்களின் மெல்லுரைகளையும் புறக்கணிக்காது. சாதாரணமான மக்கள் இவ்வளவு பெரிய கலைக் கடலை நீந்திக்கரையேறுவது மிகவும் சிரமம்; இதை உணர்ந்த நம் முன்னோர்கள் முக்கியமாக பிரஸ்தானத்திரயம் என்று சில நூல்களைமட்டும் புரிந்துகொண்டால்போதும் என்று திரட்டித் தந்துள்ளனர்.

பிரஸ்தானத்திரயம்

இந்து மதத்தின் கருத்துக்களைத் தெள்ளத் தெளிய விளக்க வல்ல தலையாய மூன்று தொகுப்புகள் என்பதை பிரஸ்தானத்திரயம் என்று கூறுகின்றனர்.

1. உபநிடதங்கள் : வேதசாரத் தொகுப்பு.
2. பிரம்ம சூத்திரம் : அத்தொகுப்பில் கூறும் திரண்ட பொருள்.
3. பகவத்கீதை : அப்பொருளை உணர்ந்து பின் பற்றவேண்டிய தெளிநிலை.

மற்றைய நூல்களில் கூறுகின்ற பொருள்கள் அனைத்தும் இம்மூன்றினுள் அடக்கமாகும். இவற்றுள் கூறுகின்ற திரண்ட பொருள் யாது என்பதை நாமும் சிறிது ஆராயலாம் :

அறியவேண்டிய அரும்பொருள்கள்

மக்கட் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் எதை ஒளிவுமறைவின்றி உணரவேண்டுமோ, அதை நமது தாயின் மதம் கூறுவதைப்போல வேறு எந்த மதமும் கூறுவதாகத் தெரியவில்லை. கூறியிருப்பின் அம்மதமும் போற்றத்தக்க மதமே என்பதில் ஐயமில்லை.

மனிதன் அறியவேண்டியது

சான்றவர் ஆய்ந்திடத் தக்கதாம், பொரு
மூன்றுள் மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர் தொகை
வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே.

(கந்த புராணம்)

பொருள் : ஒழுக்கத்தில் சிறந்த அறிவாளிகள் ஆராய்ந்து உணர்ந்துகொள்ளத்தக்க பொருள்கள் மூன்று உள்ளன. இம் முப்பொருளையும் மக்கள் உணரவேண்டுமென்றுதான் மறைகள் அனைத்தும் வியந்து விளம்புகின்றன. அம்மூன்றனுள் ஒன்று அனைத்துக்கும் முதற் பொருள் என்னும் இறைவன். இரண்டாவது உயிர்கள். இவ்வுலகத்தில் சரம்—இடம் பெயரும் உயிர்கள். அசரம்—இடம் பெயராமல் வாழ்கின்ற புல்பூண்டு போன்ற உயிர்கள். இந்த இருவகை உயிர்களின் நிலை என்ன ? இவற்றுக்கு இறப்புப் பிறப்பு உண்டாவதேன் ? மூன்றாவது இவ் வுயிர்க் கூட்டங்களைப்பற்றிக் கொண்டுள்ள தளை (பந்தம்) எது ? என்னும் இம்மூன்றின் உண்மை நிலைகளையும் உணர்ந்து தளையை நீக்கித் தலைவனை அடைந்தவனே ஞானி என்று இப்பாடல் கூறுகிறது.

கருத்து : இறைவன் யார் ? நாம் யார் ? நம்மைப்பற்றியுள்ள பந்தம் எது ? இம் முப்பொருளையும் அநுபவபூர்வமாக விளக்கவல்ல மதம் எம்மதமாயினும் அம்மதம் மனித குலத்துக்குச் சம்மதமே. அத்தகைய மதம் நம் தாயின் மதம். உலகிலுள்ள எல்லா மதங்களும் நன்னெறிகளைக் கூறுகின்றன. ஆயினும் மதங்கள் அனைத்தும் மேலே குறிப்பிட்ட முப்பொருளின் தத்துவங்களை நன்கு உணர்ந்து கரையேறிவிட்டதாகக் கருதமுடியாது. சில மதங்கள் பிரயாணத்தைத் தொடங்கியுள்ளன. இன்னும் சில நடுவழியில் சென்று நிற்கின்றன. மற்றும் சில அந்த உண்மையுள்ள திசை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. மதங்களின் தோற்றகாலங்கள் முன்னும் பின்னுமாக இருப்பதைப்போலவே கொள்கையிலும் நிறைவு குறைவு உடையனவாக உள்ளன என்றே கூற வேண்டும்.

சில மதங்கள் சுதந்திரமான சிந்தனைக்கு இடந்தருவதில்லை. தங்கள் மதத் தலைவன் கூறியது மட்டுந்தான் சரியான பாதை : மற்றைய மதங்கள் கூறுபவை ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல என்று புறக்கணிக்கின்றன. தம் மதத் தலைவன் கூறியுள்ள விஷயம் தனக்கு விளங்கவில்லையானாலும் அதையே உடும்புப் பிடியாகப் பிடிக்கவேண்டும் என்னும் அடவாதிகளும் உண்டு. அவர்கள் தலைவன் போட்ட வேலியைத் தாண்டக்கூடாது என்னும் கட்டுப்பாடு கொண்டவர்கள் எனலாம். இந்து மதம் சிந்தனைக்கு வேலிபோடவில்லை. நேர்மையான ஆராய்ச்சிகளுக்கு உரிமை பூரணமாகத் தந்துள்ளது. ஆராய்ந்தால்தான் நாம் யார் ? நம்

தலைவன் யார்? இவ்வுலகம் எது? இதற்கு நாம் ஏன் வந்தோம்? வந்ததின் நோக்கத்தை நாம் தெரிந்துகொண்டுள்ளோமா? என்பனபோன்ற கேள்விகளுக்கு விடைகாணமுடியும். எந்த மதமாய் இருந்தாலும் சிந்தனைக்கு இடந்தரவில்லையானால் மோருக்கு வந்து மொந்தையை உடைத்துவிட்ட கதையாகும். காந்தியடிகள் இந்துமத சித்தாந்தத்தைப்பற்றிக் கூறும்போது, "ஓய்வு ஒழிச்சலன்றி உண்மையைத் தேடும் முயற்சியே இந்து மதம்," என்று தெளிவாகக் கூறினார். (இந்து முஸ்லிம் பிரச்சனை ; பக்கம் 115. தமிழாக்கம்)

நம் தாயின் மதம் பெருமைமிக்கது மட்டுமல்ல; பொறுமையும் உள்ளது. இந்தப் பொறுமையைப் பயன்படுத்திக்கொண்டு தமிழகத்தில் ஒரு குழு நம்மவர்களாகவே இருந்துகொண்டும் நாக்கில் நரம்பில்லாமல், பேச்சுக்கு வரம்பில்லாமல், வசைபாடுவதிலேயே வளரப்பார்க்கிறது. இந்து மதத்தை இவர்கள் தாக்கிப் பேசுவதைப்போல் இஸ்லாம் மதத்தையோ, கிறிஸ்துவ மதத்தையோ கிண்டல் செய்ய முனைந்தால் இவர்கள் கதை முடிந்துவிடும். இந்துமதத்தில் மட்டும் குறைபாடுகள் இருப்பதாகப் பிதற்றும் இவர்களுக்கு மற்றைய மதங்கள் நிறைவுடையதாகத் தோன்றுகிறதுபோலும்! அவ்வாறு இருக்குமாயின், எது நிறைவுடைய மதமோ அந்த நிறைவுள்ள மதத்துக்கு இவர்கள் கண்ணியத்தோடு எழுந்தருளலாம். பிணங்களைக் கொண்டுசெல்லும்போது அப்பிணம் வீட்டிலும் இல்லாமல், இடுகாட்டிலும் இல்லாமல் நடுக்கட்டான் என்னும் இடத்தைக் குறிப்பிடுவதைப்போல இக்குழு இடைநடுவில் தடுமாறுகின்றது. உடலால்இ க்குழு நம்முடையதுதான். ஆனால் மனத்தை சூழ்ச்சியாளர்களுக்கு அடகுவைத்துவிட்டிருக்கிறது. இதன் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியதாகும். பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டென்பதை இது புரிந்துகொள்ளவுமில்லை. இனிமேலேனும் உண்மையைப் புரிந்து நாட்டுக்கும் பண்பாட்டுக்கும் நன்மையைச் செய்யந் திருந்தக்கூடும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். தாம் சொல்லுவதும், செல்லுவதும் தவறான பாதை என்பதை அவர்களின் உள்ளம் உறுத்தியபோதிலும் அவர்களால் வெளியேற முடியவில்லை. அடாது செய்தவர்கள் திடீரென மாறினால் அவர்களைப் பார்த்து உலகம் சிரிக்கும். ஆகவே அவர்கள் தற்போது ஒரு இக்கட்டான நிலையில்தான் இருக்கின்றனர். இவர்களுள் ஒரு சிலர் வந்தும்விட்டனர். அப்படி வந்தவர்களின் படைத்தலைவர் மறைந்த கவிஞர் கண்ணதாசன் அவர்களைக் கூறலாம். அர்த்தமுள்ள இந்துமதம் என்னும் நூல் அவர் திருந்தியதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இனிமேல் இந்திய நாட்டைத் துண்டாடவோ இந்துமதத்தை அழிக்க நினைப்பவர்களுக்கு வால் பிடிக்கும் வேலையோ செல்லுபடியாகாது. இன்றில்லை நாளையானாலும் இந்திய மக்கள் அனைவரும் ஒன்றே குலம் ஒருவனே தேவனும் என்று திருமூல நாயனார் கூறிய திருமந்திரத்தைப் பின்பற்றியே தீரவேண்டும். வேறு வழியில்லை. இதைத் தி. க. தி. மு. க. வினர் மட்டுமல்ல இந்த உலகத்தில் தோன்றியுள்ள பிறமதம் அனைத்தும் உணர்ந்தே தீரவேண்டும், நமது தாயின் மதம் குண்டர்கள் கூடிக் கும்மாளமடிக்கும் மதமல்ல. அண்டர் களுக்கும் அறிவுறுத்தவல்ல மதமாகும். முப்பொருள் உண்மை யைப்பற்றி உலக மக்களுக்கு திருமூலப் பெருமானார் எவ்வாறு விளக்குகிறார் என்பதைச் சிறிது சிந்தியுங்கள்.

“ பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அநாதி
பதியினைச் சென்று அணுகா பசுபாசம்
பதி அணுகில் பசுபாசம் நில்லாவே.

இதன் பொருள்: “ பதி பசு பாசம் என்று கூறுகின்ற மூன்றினுள், பதிப்பொருளைப் போலவே பசுவும் பாசமும் எக் காலத்தியது என்று யாராலும் காலத்தைக் கணக்கெடுத்துச் சொல்லமுடியாது. இவை மூன்றும் அநாதிப் பொருளென்றே கருதவேண்டும். பசுக்களும் (ஜீவர்களும்) பாசமும் (பற்றும்) தாமாகவே சென்று பதிப்பொருள் என்னும் பரம்பொருளை அடையும் ஆற்றல் அற்றன. இறைபொருளென்னும் பதி யானது பசுவென்னும் ஜீவனை அணுகினால் பசுவைப்பற்றி இருந்த பாசம் கழன்றுவிடும்,” என்று விளக்கியுள்ளார்.

எள்ளின் உள்ளே எண்ணெய்யும், எண்ணெயினுள்ளே நெருப்பும் இருப்பதைப்போல இறைபொருளும், உயிர்களும் உயிர்களைப் பற்றிக்கொண்டுள்ள தளையும் அநாதி காலந் தொட்டு இருக்கின்றன. எண்ணெயின் உள்ளே இருக்கின்ற நெருப்பு வெளிப்பட்டால் எள் சாம்பலாகிப்போம். எண்ணெய் நெருப்பில் ஐக்கியமாகிவிடும். (பதி—பரம்பொருள்; பசு— ஜீவர்கள்; பாசம்—உயிர்களைப் பிணித்துக் கொண்டுள்ள அறியாமை) இம்மூன்றின் தத்துவங்களை இவ்வளவு ரத்தினச் சுருக்கமாகக் கூறியுள்ள மதம் உலகில் எது என்றால் அது நம் தாயின் மதமாகிய இந்துமதம்.

தாயின் மதமும் பிற மதங்களும்

உலகத்தில் பல மதங்கள் உள்ளன. அவற்றுள் சில முக்கிய மான மதங்களைப் பற்றி முன்னமே பார்த்தோம். இனி நாம்

அவற்றின் திரண்ட கருத்துக்களையும் புரிந்துகொள்வது நலமாகும். உலகில் தோன்றியுள்ள எந்த மதமும் தீமையைச் செய்யத் தோன்றவில்லை. நன்மையை நாடியே தோன்றி யுள்ளன. ஆனால் இவைகள் எந்தெந்த நிலையில் எவ்வளவு முன்னேறியுள்ளன என்பதையும் நாம் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். இதனைப் புரிந்துகொள்ளப் பெரிய ஆய்வுக் குழு தேவையில்லை ; இது சாதாரணப் படிப்பாளிகளும் அறிந்த உண்மையாகும்.

உலகத்தில் உள்ள மதங்களுக்குள் சில மதங்கள் கடவுள் உண்டு என நம்பி வணங்குகின்றன. சில மதங்கள் கடவுள் நம்பிக்கை அற்றவைகளாகவும் இருக்கின்றன,

புத்தமதம், ஜைனமதம், கன்பூஷியஸ் மதம் என்னும் இந்த மும்மதங்களும் நன்னடத்தையையும் ஜீவகாருண்யத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன, இவற்றுக்குக் கடவுள் பக்தி என்னும் ஒரு பகுதி கிடையாது. ஆனால் குருபக்தி உண்டு. குருவே வழிகாட்டி. இவர்கள் குருவை தெய்வத்துக்குச் சமமாக மதித்து வணங்கி வழிபடுகின்றனர்.

இம்மதங்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதிருப்பினும் இவை தீய நெறிகளை போதிக்கவில்லை. ஒழுக்கம், தொண்டு, அன்பு, அடக்கம், பரோபகாரம், தியாகம், ஜீவகாருண்யம் என்னும் நன்னெறிகளை போதிக்கின்றன.

அவரவர்கள் செய்த பாவ புண்ணியங்கள் அவரவர்களைப் பற்றிக்கொள்ளுகின்றன. ஆகவே, மோட்ச, நரகங்களை அவரவர்களின் நல்வினை தீவினைகளே உருவாக்குகின்றன. பல பிறவிகளுக்கும் மூலகாரணம் வினைகளே. வினைகள் அற்றால் வீடுபேறு கிட்டும் ; வீடு பேற்றுக்குக் கடவுள் ஒருவர் தேவையில்லை. இறப்புக்கும் பிறப்புக்கும் மூலகாரணம் வினைகள்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தந்தம்
கருமமே கட்டளைக் கல்."

என்று திருவள்ளுவர் கூறும் குறளின் கருத்துக்கு ஏற்ப சில மதங்கள் இருக்கின்றன. இவற்றை நாத்திக மதங்களென்று கூறினாலும் இவற்றின் போதனைகளை நாம் புறக்கணிக்க முடியாது. கடவுள் உண்டு என்னும் நம்பிக்கை உடையவன் ஒருவன் மூர்க்கனாகவும், பாபியாகவும், கோபியாகவும் இருப்

பானானால் அவனைக் கருணையுள்ள கடவுளும் ஏற்றுக் கொள்ளமாட்டார். நித்தநித்தம் தீமைகளைப் புரிந்து விட்டு, அவற்றை ஆண்டவனிடம் கூறிவிட்டால் ஆண்டவன் மன்னித்து விடுவார் என்று மனப்பால் குடிப்பது மடமையாகும். அறியாமையால் செய்துவிட்ட தீமைகளுக்குக் கழுவாயும், இனி அத்தகைய தீமைகளைப் புரியமாட்டேன் என்னும் உறுதிப்பாடு டன் இறைவனிடத்தில் விண்ணப்பித்துக்கொள்ளக் கூடியவர் களுக்குத்தான் மன்னிப்புக்கிட்டும். தினம் தினம் தீமைகளையே புரியும் கொடியவர்களைக் கடவுள் மன்னித்துவிடுவார் என்பது பகற்கனவு. அப்படி மன்னிப்பது உண்மை என்றால் அவர் கடவுளல்ல. கொடுமை புரியும் குண்டர்களுக்குத் தலைவர் எனலாம். பாவ மன்னிப்பு என்பது பாமர மக்களை ஏமாற்று கின்ற பசப்பு வார்த்தை. எத்தகைய பாபமாய் இருந்தாலும் "கடவுளே, இதை மன்னித்துவிடு," என்று கூறினவுடன் அக் கடவுள் தீமைகளைத் தூண்டுகிறார் என்னும் அபவாதம் நேரும். ஆகவே இத்தகைய மூட பக்தர்களைவிட நேர்மை யாகவும் ஒழுக்கத்தோடும் ஜீவகாருண்யத்தைப் பின்பற்றக் கூடியவர்கள் உத்தமர்களாவர்.

முதற்படி—சரியை

தூய்மையான ஒழுக்க சீலர்களைக் கடவுள் கைவிடவே மாட்டார். பிறருக்குத் தீங்கு புரியாமல் நன்மைகளைப் புரியும் நல்ல பிள்ளைகளின்பேரில் பெற்றோர்களுக்கு இயல்பாக அன்புண்டு. அந்தப் பிள்ளைகள் காலையிலிருந்து மாலைவரை யிலும் இறைவனுடைய தாளை வணங்காமற்போனாலும் லோகோபகாரமென்னும் வேலையைச் செய்யும் கடமை வீரர் களுக்குக் கடவுள் தானாகவே நற்கதியை வழங்குவார். அதனால் தான் நமது தாயின் மதமாகிய இந்துமதம் இதை ஆரம்பப்படியாக வைத்துள்ளது. "முத்திக்கு முதற்படி ஜீவ காருண்யம்" என்பது இதுவே.

உலக மதங்கள் அனைத்தும் ஒழுக்க நெறிகளைப் புறக்கணிக்கவில்லை. ஒழுக்க நெறியானது உயிரைவிட மிக உயர்ந்தது என்னும் கருத்தில்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்,"

என்றார் திருவள்ளுவரும். ஆகவே சில மதங்கள் இந்த முதற் படியிலேயே நின்றுவிட்டன. நற்கதிக்கு நல்லொழுக்கமே

போதுமானது என்பது சில மதங்களின் கருத்து. நன்னெறியை போதிக்கத்தோன்றிய எம் மதமும் சம்மதமாக ஏற்றுக் கொள்ளுவது ஒழுக்கம். இதை நம் தாயின் மதமென்னும் இந்து மதம் முதற்படியாகக் கொள்கிறது. இந்து மதத்தில் நான்கு படிகள் கூறப்படுகின்றன. அவை, "கருமம், பக்தி, யோகம், ஞானம்," என்பனவாகும். நல்லொழுக்கம் என்னும் செயல்கள் அனைத்தும் கருமம் என்பதில் அடங்கும். இந்த நற்கருமத்தை சரியை யென்றும், பக்தி முறைகளைக் கிரியை என்றும். அடுத்ததையோக மென்றும், கடைநிலையை ஞானம் என்றும் முறையாகக் கூறுவது இந்துமதம். அந்த சரியா பாதத்தை நமது முன்னோர்கள் சுருக்கமாகச் சில வரிகளில் விளக்கியுள்ளனர். அவ்வரிகளை அடியிற் காண்க :

"பிறர்நலம் கருதித் தன்னலம் தவிர்த்தல்
நல்லோ ராகி நற்செயல் புரிதல்
கடப்பாடு அறிந்து கருமம் புரிதல்
பயன் கருதாப் பான்மைய ராகி
உண்மை அன்புடன் உறுதொழில் புரிதல்
ஆண்டவன் பணியும் அடியார் பணியும்
சித்த சுத்தியோடு நித்தமும் செய்வோர்
உத்தம சரியைக்கு உரியநல் லோராம்."

—இந்த அகவற்பாவில் ஆண்டவன் பணியும், அடியார் பணியும் என்னும் வரி நீங்கலாக மற்றையவற்றை நன்நெறிகளை நாத்திக மதங்கள் பின்பற்றுகின்றன. இதற்கு தர்சமார்க்கம் என்றும் ஒரு பெயருண்டு.

ஒரு சிறந்த, உயர்ந்த மாளிகையைக் கட்டவேண்டுமாயின் அதற்கு ஆழமானதாகவும் பலமானதாகவும் அடித்தளம் ஒன்று அமையவேண்டும். அடித்தளம் பலமாக இல்லாத மாளிகை நெடுநாள் நிலைக்காது ; இடிந்துவிடும். ஆகவே மோட்சமென்ற வீட்டுக்கு அன்பும் ஒழுக்கமும் அடித்தளமாகும்.

உலகங்கள் அனைத்தும் பணிசெய்தவண்ணமிருக்கின்றன. மண்ணுலகம் தனக்குத்தானே அயராது சுற்றிக்கொண்டிருக்கிறது. உயிரினங்களைப் போஷித்துக் கொண்டிருக்கிறது நீர். நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது. காற்று நீக்கமற திரிந்து கொண்டிருக்கிறது. சூரிய சந்திர நட்சத்திரங்கள் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன. மரம் செடி புல் பூண்டுகள் அனைத்தும்

தமக்கு வேண்டிய உணவாதிகளை உறிஞ்சிக்கொண்டும் அரும்பு, மலர், காய், கனியாதிகளை வழங்கிக்கொண்டுமிருக்கின்றன. நம்முடைய மூச்சு நமக்குத் தெரிந்த நாளிலிருந்து ஓயாமல் ஆடிக்கொண்டிருந்திறது. சராசரங்கள் அனைத்தும் தத்தம் கருமத்தில் ஈடுபட்டிருப்பதனால், மக்களும் தத்தம் கடமைகளைச் செய்தாகவேண்டும். இந்த உண்மையைக் கண்ணபிரான் பகவத்கீதையில் மிக விரிவாக விளக்கியுள்ளார்.

மக்கள் தத்தம் கடமைகளைத் தட்டாமல் செய்து வருவார்களாயின் கடவுள் அவர்களைக் கட்டாயம் கைவிட மாட்டார். அவனவன் செய்யும் நன்மை தீமைகளை அவர்களுக்கே அளிக்கின்ற சக்தி எதுவோ அதுதான் பரம்பொருள். அதற்கு வேண்டுவதுமில்லை ; வேண்டாததுமில்லை. அப் பரம் பொருளைத் திருவள்ளுவனார் “ வேண்டுதல் வேண்டாமை இலான் ” என்றார். “ என்னைத் தொழுபவன் பாவியாய் இருந்தாலும் அவனுக்கு மோட்சம், என்னைத் தொழாதவன் நல்லவனாய் இருந்தாலும் அவனுக்கு நரகம்,” என்று எந்த தெய்வமும் சொல்லாது. அப்படிக் கருதுவது தெய்வமும் அல்ல. புகழை மட்டும் விரும்பும் புல்லிய தன்மையுடையதல்ல தெய்வம் இகழையும் ஏற்று அவரவர்கள் செய்ததை அவரவர்களுக்கே அளிக்கவல்ல தியாகமூர்த்தி. அதனால்தான் இறைவனுக்கு நமது முன்னோர்கள் தியாகராஜா என்னும் அழகான பெயர் சூட்டியுள்ளனர்.

புத்த, ஜைன மதங்கள் இறைவனை வணங்கவில்லையாயினும், உயிரினங்களிடம் இரக்கமுள்ளவை. இவற்றுக்கு ஜீவகாருண்ய ஒழுக்கம் தலையாயது. தற்போது தாங்கள் புத்தர்கள் என்று கூறிக்கொண்டு அப்பாவி மக்களை அழிக்கின்ற தொழிலை ஆரம்பித்துள்ள சிங்கள கிங்கரர்களை நாம் புத்த மதத்தினர் என்று ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. புத்தபிரானும் மகாவீரரும் அரச குடும்பத்தில் பிறந்தும் ஆசை எல்லாம் துறந்து வெளிப்பட்ட அருளாளர்கள். அவர்கள் கூறிய போதனைகள் ஒப்புயர்வற்ற உயிரிரக்க மொழிகளாகும். ஆகவே புத்த ஜைன மதங்கள் நாத்திக மதங்களென்று கூறப்படினும் அவை மோட்ச சாதனைகளுக்கு முதற்படியாக அமைந்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

இரண்டாம்படி-கிரியை

ஒழுக்கத்தோடு தெய்வ பக்தியையும் உடன்கொண்டிருப்பது கிரியை எனப்படும். சிந்தனையின் முதிர்ச்சியினால் உதய

மானது தெய்வ நம்பிக்கை. இதனை 'பக்தி நெறி'யென்று கூறுவர். அறநெறிகளைப் புறக்கணிக்காமல் ஆண்டவன் ஒருவன் உண்டு என்று நம்பி அப் பகவானை வழிபடுவது கிரியா மார்க்கம் என்பர். இந்த இரண்டாம் படியில் நிற்கின்ற மதங்கள் உலகில் பல. அவை இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், ஜொராஷ்டிரம், சீக்கியம், யூதம் என்னும் மதங்கள் ஆத்திக மதங்கள் எனலாம்.

மதத்துக்கு மதம் தாம் வகுத்துக்கொண்டுள்ள நெறிமுறை களிலும் சடங்குகளிலும் சிற்சில மாற்றங்கள் இருப்பதைப்போல ஆண்டவனை வழிபடும் முறைகளிலும் சிற்சில மாற்றங்களை வகுத்துக்கொண்டிருக்கின்றன. அதனால்தான் ஒன்றாய் இருக்க வேண்டிய மதம் பலவாய் மதங்கள் என்னும் பெயர் பெறலாயின. இவற்றுள் நம் தாயின் மதமான இந்துமதம் இறைவன் ஒருவன் உண்டு என்பதனை எந்த ஆதாரத்தில் கூறுகின்றது என்பது யாவரும் சிந்திக்கவேண்டிய ஒன்றாகும். இதைப்பற்றி 'இயற்கையும் இறைவனும்' என்னும் தலைப்பிலும், 'ஐம்புலனுக்கு எட்டாப் பொருள்' என்னும் தலைப்பிலும் முன்னமே மேல் போக்காகப் பார்த்தோம். தற்போது அதை இன்னும் சிறிது தர்க்கரீதியாகவும் ஆழமாகவும் ஊன்றிப் பார்ப்பது உத்தம மாகும்.

"ஒருவனோடு ஒருத்தி ஒன்றுயென்று
உரைத்திடும் உலகம் எல்லாம்
வருமுறை வந்து நின்று
போவதும் ஆத லாலே
தருபவன் ஒருவன் வேண்டும்
தான்முதல் ஈறும் ஆகி
மருவிடும் அநாதி சுத்த
சித்துரு மன்னி நின்றே."

(சிவஞான சித்தி, பிரமாண இயல்)

பொருள்: ஒருவன் என்றும் ஒருத்தி என்றும், ஒன்று என்றும் கூறும் உயர்திணை, அஃறிணையோடுகூடி உலகம் அனைத்தும் எவ்வாறு தோன்றவேண்டுமோ அவ்வாறு தோன்றி இருக்க வேண்டிய கால அளவும் இருந்து, ஒடுங்கவேண்டிய முறையில் ஒடுங்குகின்றன. இந்த முத்தொழிலும் யுகயுகங்களாகத் தொடர்ந்தும், முறையோடும் நடைபெற்றுவருவதனால், இவற்றைப் பிறழாமல் நடத்துகின்ற ஒரு தலைவன் இருத்தல்

வேண்டும். தலைவன் இல்லையானால் இந்தக் காரியங்கள் முறையாக நடைபெறமாட்டா! அத் தலைவன் அழிவற்றவனாகவும் முத்தனாகவும் (பந்தப்படாதவன்) சுத்தனாகவும், அனைத்தும் அறிந்த ஞான வடிவினனாகவும் பொருந்திய முறையில் இருத்தல் வேண்டும்,'' இச்செய்யுளின் திரண்ட கருத்து இதுவாகும்.

காரணம் இல்லையானால் காரியம் நடக்காது. ஓட்டுவோன் இல்லையானால் வண்டி ஓடாது. இயக்குவோன் இல்லையானால் யந்திரம் இயங்காது; ஆன்மா இல்லையானால் ஆக்கை அசையாது. காரணம் ஓட்டுவோன்; காரியம் வண்டி. காரணம் இயக்குவோன்; காரியம் யந்திரம். காரணம் ஆன்மா; காரியம் ஆக்கை. காரணம் இறைவன்; காரியம் உலகம். இறைவன் என்னும் காரணப் பொருள் ஒன்று இல்லாமல் காரியப் பொருள் தோன்றாது என்பதனை ஒழிவில் ஒடுக்கம் என்னும் நூலும் நமக்கு:

பெண்ணாய் அலியாய்ப் பிறந்துவளர்ந்தே அழியும்
எண்ணாத பேதம் இயல்பின்றி—பண்ணுங்கால்
காரண கர்த்தாஒருவன் வேண்டும் அவனைக் காட்டும்நூல்
ஆரணமும் ஆகமும் ஆம்.''

என விளக்குகிறது. இறைவனை இன்னான் என்று உணர்த்தத் தோன்றியவைதாம் ஆரணம் (ஆரண்யத்தில் வாழ்ந்த முனிவர்களால் தோன்றியதனால் வேதங்களுக்கு ஆரணங்கள் என்றும் ஒரு பெயர் எய்திற்று) மற்றும் ஆகமம் என்னும் நூல்கள். இவற்றை நன்கு ஆராய்ந்தவர்களுக்கு இறைநிலை புரியும் என்று கூறுகிறது.

கடவுளை ஏன் வணங்கவேண்டும் ?

"பூமிநம் இல்லம் மற்றைப்
பூதங்கள் பணிசெய் வோர்கள்
சோமன் மீன் கதிர் விளக்காம்
சூழ்மரம் பயிர் ஆகாரச்
சேமவைப் பாய் நமக்குத்
திரவியம் யாவும் நல்கும்
சாமியை உவமித் தேத்தா
சீர்மியம் என்ன் நெஞ்சே ?''

என்று பாடியுள்ளார் மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள். ஆண்டவன் அருளில்லையானால் காற்று அசையாது. தீ எரியாது. நீர் குளிராது. மண்ணில் நாம் உண்ணும் உணவுகள் உற்பத்தியாகாது. சூரிய சந்திர நட்சத்திரங்கள் காலத்தின் விதி கடவாமல் இயங்காது. மழை பொழியாது. நமது மூச்சு உள்ளும் புறமுமாக ஆடாது. இத்தனையும் இறைவனுடைய கருணையினால் இயங்குகின்றன. இவற்றை அப் பரம்பொருள் தனக்காக இயக்கிக்கொள்ளவில்லை ; யாவும் நமக்காக இயக்கப் படுகின்றன. உயிர்கள் ஆதியில் இருந்த நிலை...

"காரிட்ட ஆணவக் கருவரையில் அறிவற்ற
கண்ணில்லாக் குழவியைப் போல்
கட்டுண் டிருந்தஎமை வெளியில் விட்டு அல்லாம்
காப்பிட்டு அதற்கிசைந்த

பேரிட்டு மெய்யென்று பேசும்பார் பொய்யுடல்
பெலக்கவிளை அமுதமூட்டி
பெரிய, புவனத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்டு

ஏரிட்ட தன்சுருதி மொழி தப்பில் நமனைவிட்டு
இடருறஉருக்கி இடர்தீர்த்து
இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்துதுயில் கொண்மின்என்று

சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே !
சின்மயானந்த குருவே.

பொருள் : கருமையாகிய ஆணவமலத்தால் உண்டான கரு வென்னும் சிறுவீட்டில், உணர்ச்சி இல்லாது கண்களும் அற்ற குருட்டுக் குழவியைப்போலக் கட்டுப்பட்டிருந்த எங்களை வெளி யில் வரச்செய்தீர். பிறகு துன்பமென்னும் காவலையமைத்தீர். அதற்குப் பொருத்தமான பெயரிட்டு, உண்மை என்று பேசப் படுகின்ற பாழாகும் நிலையற்ற ஆக்கை வலிமை பெறும்படி உணவாதிகளை உண்பித்து, இப்பேருலகத்தில் இறப்பு-பிறப்பு என்னும் விளையாட்டையும் விளையாடவைத்து, அழகு பொருந்திய தனது வேத மொழிகளின்படி நடக்காமல் தவறிய

வர்களை, நமனை அனுப்பித் துன்பப்படும்படி தண்டித்து, பிறகு அத் துன்பத்தையும் நீக்கி, இராப்பகல் அற்ற பேரின்ப வீட்டில் பொருந்தித் தூங்குங்கள் என்று எங்களுக்கு எல்லாச் சிறப்புகளையும் அமைத்து வைத்துள்ள அன்னையின் நிலையிலும் அமைந்துள்ள எமது அப்பாவே! முடிவு செய்யப்பட்ட முத்திக்கு முதல்வனே. சிரகிரியின்கண் விளக்கம் தரவரும் தக்ஷிணாமூர்த்தியே! ஞானானந்தங்களைக் கொடுக்கின்ற குருநாதா! உன் திருவடிகளுக்கு வணக்கம்'' என்னும் இச் செய்யுள் ஜீவாத்மாக்களின் வளர்ச்சி நிலையை விளக்குகின்றது. இவ்வியக்கங்கங்கள் பரம்பொருளால் இயங்குகின்ற இயக்கங் களேயாகும். நம்மிடத்திலிருந்து யாதொரு பயனையும் எதிர் பாராமல் உயிர்க் கூட்டங்களுக்கு உதவிவரும் பரம்பொருளை வாயாற வாழ்த்துவதும் நெஞ்சாற நினைப்பதும் நமது கடமை என்று கூறினர் நம் ஆன்றோர். ஒருவர் நமக்குச் சிறு நன்மையைச் செய்தாலும் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ள மனித குலத்துக்குப் பெரு நன்மைகளைப் பெற்றுள்ள நாம் இறைவனை வணங்குவது நன்றியறிதலைத் தெரிவிப்பதற்கு ஒப்பாகும் எனலாம். ஆகவே கருமகாண்டத்துக்கு அடுத்தது பக்தி காண்டம் என்று நமது தாயின் மதம் கூறுகின்றது.

பக்தர்கள் பலர்

இந்து மதத்தில் தோன்றிய பக்தர்கள் பலர். அவர்கள் உளங்கனிந்துப் பாடியருளிய பாடல்கள் இலட்சக்கணக்கில் இருக்கின்றன. தமிழில் தேவாரம், திருப்புகழ், திருவாசகம், திவ்யப்பிரபந்தம், அஷ்டபிரபந்தம், இவைகளுடன் தாயுமானார், குமரகுருபரர், பாம்பன் குமரகுரு சுவாமிகள், வடலூர் இராமலிங்க வள்ளலார், பட்டினத்தார்போன்ற பல பெரியோர்கள் பாடியவைகள் பலவும் உண்டு. மற்றும் பிற மொழிகளில் ஜெயதேவர், துளசிதாசர், இராமதாசர், பிரம்மேந்திரர், புரந்தரதாசர், கனகதாசர், பம்பமகாகவி, பசவண்ணர், காளிதாசர் போன்ற மகா கவிகள் பக்தி நெறிகளைப்பற்றி விரிவாக எழுதியுள்ளனர். ஒவ்வொரு மொழியிலும் பக்திப்பாடல்கள் பக்தர்களால் பலரால் பாடப்பட்டுள்ளன. அப் பெரியோர்களின் பெருமைகளை எல்லாம் விரிவாக விளக்கும் திறமை என்போன்ற எளியவர்களால் இயலாத காரியமாகும்.

பக்தியின் இருவகை

1. **அந்நிய பக்தி:** கடவுளைத் தன்னினும் வேறாக நினைத்துத் தன் குறைபாடுகளை முறையிட்டு அவற்றை நிறைவேற்றிக்கொள்ள நினைப்பவர்கள். இவர்களில் பலர் துன்பம்

நேர்ந்தால்மட்டும், கடவுளைத் தொழுது அத் துன்பங்களைத் துடைத்தருளுமாறு வேண்டுவார்கள். மற்ற சமயங்களில் இவர்களுக்குக் கடவுள் நினைப்பே வராது. இவர்களுக்கு ஆலயங்கள், இடுகாடு என்பவற்றை காணநேர்ந்தால் சில சமயங்களில் கடவுள் நினைப்பு வருவதுண்டு. மற்ற நேரங்களில் வராது. இவர்கள் தமது குறைபாடுகளைப் போக்கிக் கொள்ளக் கடவுளைக் கும்பிடக்கூடியவர்கள்.

2. அநந்ய பக்தி: கடவுள் தனக்குச் செய்துள்ள பெரு நன்மைகளைச் சிந்தித்து அப் பெருமானோடுதான் கலந்து கொள்ளவேண்டும் என்று வணங்கும் இடையறாத பக்தியை அநந்ய பக்கி பக்தி என்று கூறுவர். அந்நியம்—வேறு; அநந்யம்—அயலல்லாதது. என்றால் இறையன்பைத் தன்னிலிருந்து பிரிக்கமுடியாமல் ஒன்றியிருக்கும் உயர்ந்த பக்திக்கு அநந்ய பக்தி என்று கூறுவர். இதனை நாயக நாயகி பாவம் என்பர். இதன் அடிப்படையில் தோன்றியவைதாம் தலைவன் கூற்றும், தலைவியின் கூற்றும் ஆன அகப்பொருள் விளக்க நூல்கள். பிரிக்கமுடியாத அன்பின் முதிர்ச்சியை விளக்குவனவாகும். திருக்கோவையார் போன்ற நூல்கள் அநந்ய பக்தியின் பெருமையை நன்கு விளக்குகின்றன. திருநாவுக்கரசர் பெருமான் தேவாரத்தில்,

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அப்பனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தா ராசா ரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன தாளே."

(அப்பரடிகள் தேவாரம்)

"மண்ணை இருந்து துழாவி
வாமனன் மண்ணிது என்னும்
விண்ணைத் தொழுதவன் மேவும்
வைகுந்தம் என்றுகை நீட்டும்
கண்ணைக் கண்ணீர்மல்க நின்று
கடல்வண்ணன் எனுமென் அன்னே
பெண்ணை பெருமயல் தெய்தார்க்கு
என்செய்கேன் பெய்வளை யீரே?"

(திருவாய் மொழி; நம்மாழ்வார்)

—இப் பாக்கள் அகப்பொருள் துறையில் அநந்ய பக்தியின் தன்மையை விளக்கியுள்ளன. இவற்றுக்கும் ஒருபடி மேலாக சுவாமி இராமலிங்க அடிகளார் நமக்கு நினைவூட்டும் இப் பாடலைச் சிறிது சிந்தியுங்கள் :

" இரவகத்தே கணவரொடு கலக்கின்றார் உலகர்
இயலறியார் உயலறியார் மயலொன்றே அறிவார்
கரவகத்தே கள்ளுண்டு மயங்கிநிற்கும் தருணம்
கனிகொடுத்தால் உண்டுசுவை கண்டுகளிப் பாரோ;
துரவகத்தே விழுந்தவர்போல் இவர்கூடும் கலப்பில்
சுகமொன்றும் இல்லையடி துக்கமொன்றே கண்டார்
உரவகத்தே என்கணவர் காலையில் என்னுடனே
உருகலப்பார் உருசுகந்தான் உரைப்பரிதாம் தோழி.

—இப்பாடல் படிப்பதற்கு மிகவும் எளிமையாகத் தோன்றினாலும், மிகவும் கருத்தாழம் கொண்ட பாடலாகும்.

உலகத்தில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. ஒவ்வோர் இனத்திலும் ஆண் பெண் என்னும் இருவகை உண்டு. இவற்றுக்குள் ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணும் ஒன்றை ஒன்று விரும்புகின்றன. எறும்புமுதல் யானையீறாக உள்ள எல்லா உயிர்களிடத்தும் இக்குணங்கள் உண்டு. ஒன்றை ஒன்றுவிரும்புதல் கற்பித்து வந்ததல்ல. பிறவியிலேயே ஊறிவந்துள்ள குணங்களாகத் தோன்றுகின்றன. நாய்நரிகளுக்குக்கூட ஒன்றோடொன்று புணர்த்து இன்புறக்கூடிய விஷயம் புரிந்திருக்கிறது. ஆகவே ஆணாகவும் பெண்ணாகவும் இருவகையாகப் பிறப்பது ஏன் ? மற்றும் ஆணை ஆண் விரும்பாமல் – பெண்ணை பெண் கலந்துவாழ விரும்பாமல் பெண்ணை ஆணும், ஆணைப் பெண்ணும் கலக்க விரும்புவது ஏன் ? என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு என்ன பதில் ? தோற்றமனைத்தும் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ ஏன் தோன்றுவதிலலை ? என்னும் கேள்விகளுக்கும் இந்த அருட்ப விடையளிக்கின்றது.

உண்மையான பிறவியின் நோக்கம் இன்னதெனத உலக மக்கள் உணரவில்லை. இரவுக் காலத்தில் கணவன்மாருடன் கலக்கின்றனர். இயலறியார்—இவர்களுக்கு இதன் உண்மையான இயல்பும் விளங்கவில்லை. உயலறியார்—வாழவும் தெரியவில்லை, மயல் ஒன்றே அறிவார்—காம இச்சை ஒன்று மட்டுந்தான் தெரிந்துகொண்டிருக்கின்றனர். ஆணும் பெண்ணும் ஒன்றுபடவேண்டும் என்னும் இச்சை ஏன் தோன்றியது என்னும் உண்மை விளங்காமல் அஞ்ஞானம் என்னும் இருட்டில் (இரவ

கத்தில்) காம வெறியால் கூடுகின்றனர். மறைவாகச் சென்று மதுவை அளவில்லாமல் அருந்தி மயக்கத்தில் இருப்பவனிடம் இனிமையான ஒரு கனியைத் தந்தால் எவ்வாறு அதனைத்தின்று அதனுடைய இனிய சுவையைச் சுவைத்து இன்புறமுடியாதோ அதைப்போலவே பிறவியின் உண்மை நோக்கத்தையும் மக்கள் புரிந்துகொள்ளவில்லை. கரையேறமுடியாத நீர்த்துறையில் விழுந்து தவிப்பவர்களைப்போல உலகியலார் கூடும் கலவியின்பத்தில் நிலைத்த சுகத்தைக் காணவில்லை. இவர்கள் கலவிக்குப்பின் கண்டதுவெறும் துக்கந்தான். ஆனால் உரவகத்தே (அன்பின் பெருக்கால்) என் கணவர் காலையில் (ஞானோதயத்தில்) என்னுடைய தலைவர் என்னோடு உருகலப்பார் – சீவாத்மா என்னும் என்னை பரமாத்மா என்னும் அவர் தன்னோடு சேர்த்துக்கொள்வார். அப்போது ஏற்படும் இன்பப் பெருக்கை உரைக்கமுடியாது ” என்று இப்பாடல் உணர்த்துகிறது.

உயிர் உயிரோடு கலத்தல் பேரின்பம் ; உடம்பு உடம்போடு கலத்தல் சிற்றின்பம். கலப்பதனால்தான் இன்பமென்னும் உண்மையை உணர்த்துவதற்காகவே ஆண்–பெண் என்னும் இருவகை உயிர்கள் படைக்கப்பெற்றிருக்கின்றன.

பரமாத்மாவோடு சீவாத்மா ஒன்றுபடுகின்ற வரையிலும் உயிர்கள் பேரின்பத்தைப் பெறமுடியாது. பேரின்பத்தை உயிர்கள் பெறுகின்ற வகையிலும் ஆன்மாக்களின் ஆசையும் அறாது. ஆசை என்பதும் பாசம் என்பதும் ஒன்றே. பாசம் உடைய உயிர்களுக்குப் பசுக்கள் என்பது பெயர். ஆசை என்னும் பாசம் அற்ற பரம்பொருளுக்குப் பதி என்று பெயர். பசுக்கள் பதி நிலையைச் சேரவேண்டும். இறைவனுக்கு பசுபதி என்னும் ஒரு பெயருண்டு. பசுக்கள் சக்தியின் சொரூபம். பதி என்பது இன்பமயமான செம்பொருள். செம்மையான பொருள் செம்பொருள். சிவம் என்று கூறுவதும் அதுவே. இதைத்தான் நம் தாய்மதம் நாயகா–நாயகி பாவம் என்று கூறுகிறது. ஒன்றுபட்டால்தான் இன்பம் என்பதை உணர்த்தவே ஆண், பெண் என்னும் இரு பிரிவுகள் எல்லா உயிர்களிடத்தும் உருவாக்கப் பெற்றுள்ளன. பதியோடு பசு கலந்தால் பாசம் அகலும். (ஆசை அகலும்) “ அற்றது பற்றெனில் உற்றது வீடு. ”

“ புன்னையிலே கனிவாயில் பூங்குழல்வைத் தூத
புங்கவரும் மங்கையராய் புத்தமிர்தம் உண்டார்
அன்னையினுந் தயவுடையாய் ஆணுருவில் நானும்
அணங்குமனம் பெற்று வந்தேன் அரிமாலை புனைந்தால்

மன்னருளில் திளைத்திருப்பேன் மயக்கநெறி வீழேன்
மதங்கள்தொறும் வீற்றிருக்கும் மாதவனே என்றும்
கன்னித்தமிழ் மொழிக்கவியில் கருத்துடைய அரசே
கருணையல்லிக் கேணிவளர் கரியபெருமாளே !''

மூதறிஞர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் இவ்வாறு (திருமால்வேட்டல்) பாடியுள்ளார். இப்பாவில் முனிவர்களும் இறைவனோடு கலத்தல் வேண்டி தமது தவமகிமையால் பெண்களாக மாறினர் என்றும், அத்தகைய தவப்பேற்றால் யான் பெண்ணுருவைத் தாங்கமுடியவில்லையாயினும் பெண்மைக் குணமென்னும் இளகிய மனத்தோடிருக்கிறேன் என்று தன் கருத்தைக் கனிவோடு விளக்கியுள்ளார். இந்த உண்மையை உணர்த்துவதற்காகவே ஆண், பெண் என்னும் இருவகைத் தோற்றங்கள் இறைவனுடைய படைப்பில் காணப்படுகின்றன. இந்த அன்பு அதிதீவிர அன்பாகும். இதை

நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து
நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீரானால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே ! நன்நிதியே ! ஞான
நடத்தரசே ! என்னுரிமை நாயகனே ! என்று
வனைந்து வனைந்து ஏத்துதும் நாம் வம்பினுலகியலீர் ;
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர் !
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம் சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருண மிதுவே

திருவருட்பா 6ஆம் திருமுறை

அன்பு என்பது ஒரு வசிய மந்திரமாகும். இது யாரையும் வயப்படுத்தவல்லது. அன்புக்கு ஆண்டவனும் வசமாகி விடுகிறான் என்றால் அன்பின் பெருமையைச் சொல்லி முடியாது.

'' அன்பென்னும் பிடியுள் அகப்படும் மணியே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருள்
அன்பெனும் கரத்தமர் அமுதே

அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புருவாம் பர சிவமே " —திருவருட்பா

" உருகி உருகி நெக்கு நெக்கு
உள்ளுடைந்து கசிந்திட்டு அசும்பூறும்
உழுவல் அன்பின் பழவடியர்
உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்து
பெரும் பரமானந்த வெள்ளப் பெருக்கே !"
—(மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்)

என்னும் குமரகுருபரருடைய பக்தி கனிந்த பாடலும் அன்பினுடைய ஆழத்தை அளக்கும் அளவுகோலாக அமைந்திருக்கிறது. இதுவே இரண்டாம்படி என்னும் பக்தி காண்டத்தின் நிலையாகும். சித்தாந்த சாத்திரம் இதனைக் கிரியை நிலை எனக் கூறுகின்றது.

கடவுளிடத்தில் கண்டகண்ட கோரிக்கைகளைப் போட்டு அவற்றை யெல்லாம்செய்து முடிப்பாயாக என்று இறைவனுக்குக் கட்டளையிடுவது பக்தியல்ல. அவர் நமது வேலைக்காரனல்லர்; நம்மிடம் கைக்கூலிவாங்கும் தரகனுமல்லர் ; அன்பின் தகுதிக்கு ஏற்ப இரக்கங்காட்டும் அருளாளர். ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்திக் கடலில் திளைத்த பண்பாளர்கள். இப் பெரியோர்கள் பக்திக் கடலில் மூழ்கி அதன் ஆழத்தின் கண்டெடுத்த மணிமொழிகள் ஒப்பற்றவை, அவைகள் இன்னிசை என்னும் நூல்களினால் கோக்கப்பெற்று மணிமாலைகளாக மங்காமல் ஒளி வீசுகின்றன. தன்னையும் மறந்து தலைவனுடைய கருணையில் கலந்து பாடிப்பாடி பரவசப்பட்ட பல்லாயிரக்கணக்கான பக்தர்களைப் பெற்றெடுத்தவள் பாரதத்தாய் ; உடல், பொருள், ஆவி என்னும் மூன்றும் இறைவனுடையதே என்னும் நுண்ணறிவாளர்கள் எண்ணற்றவர்களை நம் தாயின்மதம் பெற்றுள்ளது.

சரியை தாசமார்க்கமென்றும், கிரியை சத்புத்திரமார்க்கமென்றும் கூறுவர். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கின்ற உறவைப் போன்றது சத்புத்திர மார்க்கம். இறைவனுடைய திருநாமங்களை ஜெபித்தல், மந்திரஜெபம், ஆலய வழிபாடு, பூசாவிதிகள், சக்கஸ்தாபனம், உருவவழிபாடு, ஆலயங்களை அமைக்கவேண்டிய முறைகள் யாவும் கிரியை என்னும் பக்தி மார்க்கத்தைச் சார்ந்தவைகளாகும். ஆகமங்களில் இவற்றை விரிவாக அறியலாம்.

மூன்றாம்படி—யோகம்

ஒழுக்கம், பக்தி என்னும் இரண்டோடு பரத கண்டத்துக்கு அப்பால் தோன்றிய மதங்கள் அனைத்தும் நின்றுவிட்டன. மற்றும் இந்தியாவில் தோன்றின புத்த ஜைன மதங்கள் யோக நெறிகளையும் பின்பற்றியுள்ளன. ஆயினும் மகாவீரரும் புத்த பிரானும் இந்துக்கள். இவர்கள் தோன்றுவதற்கு முன்னமே இந்தியநாட்டில் யோகிகள் இருந்தனர். அவர்களை மகாவீரரும் புத்தரும் அணுகியுள்ளனர். இந்த உண்மைகளை அவர் களுடைய வரலாறுகளிலும் காணலாம். இவர்களுக்கும் யோக நெறியைப் பயிற்றுவித்தது இந்துமதம். யோக நெறிகளை கண்டுபிடித்த நாடு பரதகண்டம். உலகத்தில் வேறு எந்த நாடும் எந்த மதமும் யோக நெறிகளைப் பற்றி விளக்கவில்லை.

"யோகம் என்பது மனிதனுடைய உடலையும் உள்ளத்தை யும் முடிவில் இயற்கையையும் தன்வயப்படுத்துவதற்கான வழியை வகுக்கும் விஞ்ஞானபூர்வமான முறையாகும்," என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது. (தொகுதி 8 ; பக்கம் 624)

பக்தியினுடைய உச்சகட்டம் மனம் அசைவற்ற நிலை யாகும். பக்தியினாலும் சில மகான்கள் யோக நிலையை எட்டியுள்ளனர். இந்த வாய்ப்பு பக்தர்களில் ஒரு சிலருக்கு மட்டும் கிட்டியுள்ளது. அது அதிர்ஷ்ட வசமென்றே தோன்று கிறது. உண்மையை உணர ஆன்றோர்களால் உருவாக்கப் பெற்றது யோகம்.

யாருக்கேனும் எதிர்பாராமல் திடீரென செல்வமோ, அல்லது வாழ்க்கைக்கு ஏற்ற வசதிகளோ கூடிவிட்டால் அதைப் பார்த்த சிலர் அவனுக்குத் தற்போது நல்லயோகம் கூடிவிட்டது என்று உலக வழக்கில் பேசிக் கொள்வதை நாம் சாதாரணமாகக் கேட்டிருக்கிறோம். ஆக யோகம் என்பது கூடுதல், பொருந் துதல் என்னும் பொருளைத் தருகிறது. மனதைப் பரம்பொருளி னிடத்தில் இரண்டறக் கலக்க வழிவகுத்திருப்பது யோகமாகும். இதுநாள் வரையிலும் கடவுளைத் தனக்கு அந்நியமாகக் கருதி சுருதி வாக்கியங்களையும் பெரியோர்கள் வாக்கியங்களையும் நம்பி ஆண்டவனிடம் அன்பைச் செலுத்தினான். யோகி அப்பெரியோர்கள் கூறிய கடவுள் யார் என்று அறிய ஆய்வு நடத்துபவர். இந்த ஆய்வுநிலை விஞ்ஞான பூர்வமானதாகும்.

"சரியையிலே ஈசன் சடவடிவாய் நின்றான்
கிரியையிலே மந்திரத்தில் கிட்டி—அருகிருந்தான்
ஊனமிலா யோகத்தில் உள்ளொளியாய் நின்றான்
ஞானமதில் நானாயி னான்."

(சிவஞான வள்ளல் செ. 67)

மேற்காணும் வெண்பாவில் நம் தாய்மதத்தின் தத்துவங்கள் இன்னதென விளக்குகிறது. இறைவனை எங்கெங்கோ தேடி அலையாமல் ஆக்கைக்குள்ளேயே ஆராய முயற்சிப்பதுயோகம். யோக நெறிகளைத் தெளிவாக விளக்கிய பெரியோர்களுள் கபில முனிவரும், பதஞ்சலி முனிவரும் குறிப்பிடத்தக்கவர்களாவர். பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்திற்கு சுவாமி விவேகானந்தர் சில அரிய கருத்துக்களைத் தெளிவாக விளக்கியுள்ளார். 'ஊனமில்லா யோகத்தில் உள் ஒளியாய் நின்றான்' என்னும் சொற்றொடர் யோசிக்கத்தக்கதாகும். ஊனமில்லாயோகம்—குற்றமற்ற யோகிகளுக்கு இறைவன் உள்ளத்தின் உள்ளே ஒளிமயமாய்ப் பிரகாசிக்கின்றான் என்பதனால் யோகிகள் ஆண்டவனை ஆக்கைக்குள் காண்கின்றனர் என்பது புலனாகிறது. யோக முறைகளை நூலறிவையே ஆதாரமாகக் கொண்டு தொடங்கக்கூடாது. குருவின்வாயிலாக, சாதனை புரியவேண்டிய நெறிமுறைகளை அறிந்து பயிற்சி செய்வது மிகவும் நலமாகும். எழுத்தறிவைப்பெற ஆசிரியர் எவ்வளவு அவசியமோ அதேபோல யோகப் பயிற்சிக்கும் குரு அவசியமாகும்.

குருவிலான் பெற்றவித்தை குமரியைக் குமரிகூடி
மருவிய இன்பமொக்கும் மண்ணிடை நம்போல்வந்த
குழுவினால் பெற்றஞானம் குமரியைக் குமரன்கூடி
மருவிய இன்ப மொக்கும் என்பர்நன் மதியுள்ளோரே.

(பதிபசு பாசவிளக்கம்)

எழுத்துக்களைப் பிழையின்றிக் கற்பதைப்போல யோகப் பயிற்சியை எச்சரிக்கையோடு பயிலவேண்டும். அப்படிப் பயின்றால்தான் யோகத்தின் பயனைப் பெற முடியும். யோகத்திலும் இருவகை உண்டு. ஒன்று அடயோகம்; மற்றொன்று இராஜயோகம்.

அடயோகம்

உணவு, உறக்கம், பசி, தாகம், குளிர், வெப்பம் என்பவற்றைக் கருதாமல் கடினமான ஆசனங்களையிட்டுத் தீவிரமாகப்

பழகுவது. இதில் சித்தி பெற்றவர்களைச் சித்தர்கள் என்று கூறுவர். இவர்கள் இயற்கையின் இயக்கங்களையும் வென்ற மேலோர்களாவர். இச் சித்தர்களுக்கு அரிய காரியமென்பதே கிடையாது. ஆயினும் இச் சாதனையைச் சாதிப்பதும் எளிய காரியமன்று. இச் சாதனையைச் சாதிப்பதற்கு இளமை, வலிமை, வைராக்கியம், திறமை, தெளிவுடைமை, செயன்முறைமை என்பவை பொருந்தினவர்களுக்கு அடயோகம் பொருந்தும். மற்றவர்கள் இதில் வெற்றி காணமுடியாது. வெற்றிகண்ட சித்தர்கள் பாரதகண்டத்தில் பலர் உண்டு. அந்த சித்த புருஷர்களின் பெருமையைப்பற்றி தாயுமான அடிகளார் அடியிற் கண்டவாறு கூறுவதைப் பாருங்கள் :

"பாரொடுநன் நீராதி ஒன்றோடொன் றாகவே
பற்றிலய மாகும் போது
பரவெளியில் மருவுவீர் கற்பாந்த வெள்ளம்
பரந்திடில் அதற்கு மீதே

நீரிலுறை வண்டாய் துவண்டுசிவ யோகநிலை
நிற்பீர் விகற்ப மாகி
நெடியமுகில் ஏழும் பரந்துவரு ஷிக்கிலோ
நிலவுமதி மண்டல மதே

ஊரென உலாவுவீர் பிரமாதி முடிவில்
விடையூர்தி அருளால் உலவுவீர்
உலகங்கள் கீழ்மேலதாகப் பெருங் காற்று
உலாவிடில் தாரணையி னால்

மேருவென அசையாது நிற்கவல்லீர் உமது
மேதகச் சித்தி எளிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் நிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே!"

(தாயுமானார்—சித்தர்கணம்)

—என்னும் பாடல் அன்னையின் மணிவயிற்றில் உதித்த ஆன்றோர்களின் பெருமை எத்தகையதென்பதை சித்திரித்துக் காட்டுகிறது. இத்தகைய சித்த புருஷர்களுக்கு நிகராக எந்த நாட்டில், எந்த மதத்தில், எந்த மகான் தோன்றினார் என்பதை வாசகர்களே! சிறிது சிந்துத்துப் பாருங்கள். அகத்தியர், அஷ்டகோணர், அத்திரி, போகர், புசுண்டர், புலத்தியர், புலிப்பாணி, சரபங்கர், சுதீட்சணர், பரத்துவாசர், வசிட்டர், விசுவாமித்திரர், இடைக்காடர், திருமூலர், கோரக்கர், மச்சேந்

திரர் போன்ற பெரியோர் சித்தர்களின் பரம்பரையினர். அடயோகத்தில் தேர்ச்சி அடைந்த சித்தர்களுக்கு அட்டமாதி சித்திகளும் பணிபுரிந்ததாம்.

அட்டமாதி சித்திகள்

1. அணிமா—தன் ஆக்கையை அணுவைப்போலச் சுருக்கிக் கொள்ளுதல்.
2. மகிமா—பேருருவாகக் காட்டல்.
3 கரிமா—கனத்திருத்தல்
4. லகிமா—இலேசாக இருத்தல்
5. பிராப்தி—விரும்பியதை அடைதல்
6. ஈசத்துவம்—சர்வவல்லமை பெறல்
7. பிராகாமியம்—கோரியதை அனுபவித்தல்
8. வசித்துவம்—யாவற்றையும் வசப்படுத்தல்.

—இவற்றை அட்டமாதி சித்திகள் என்று கூறுவார்கள். அடயோகத்தைப் புரிந்து வெற்றிபெற்றவர்கள் சிலர் ; தோல்வியுற்றவர்கள் பலர். காரணம் திடமான வைராக்கியம் இருந்தால் ஒழிய அடமான யோகத்தில் வெற்றிபெறுவது அரிதாகும். அடயோகம் என்னும் பெயரே நமக்கு இதை நன்கு உணர்த்துகிறது.

இராஜயோகம்

அடயோகத்தைவிட ராஜயோகம் எளிமையானது. மற்றும் மேலானது. இராஜயோகமென்னும் பெயரே இதற்குச் சான்றாகும். இதனை ஆணும், பெண்ணும், இல்லறவாசிகளும் துறவிகளும் பயிற்சி செய்யலாம். வயோதிகர்களும் வாலிபர்களும் இராஜயோகத்தைப் பழகலாம்.

மக்களுக்கு உண்டாகும் நோய்களைப் போக்க உலகத்தில் பலவகையான மருத்துவத்துறைகள் இருக்கின்றன. அவை அல்லோபதி, ஓமியோபதி, ஆயுர்வேதம், சித்தவைத்தியம், யூனானி என்னும் பலதுறைகள் உண்டு. ஒருவன் வயிற்றுவலி என்று மருத்துவரிடம் சென்றால் அல்லோபதி மருத்துவர் தரும் மருந்தையே சித்த வைத்தியர் தரமாட்டார். அந்தந்தத் துறையில் அதற்காகக் கூறும் மருந்தைத்தான் தருவார். சில மருந்துகள் உடனடியாக நோயை நீக்குவன. இன்னும் சில மருந்துகள் தற்காலிகமாகமட்டும் நோயைத் தணியச்செய்யும். அதைப்போலவே சில மதங்கள் நீங்கள் இந்த உடலை விட்ட பின்பு மோட்சத்துக்குப் போவீர்கள் என்று கூறும். சில மதங்கள் இறுதி நாளில் கடவுளும் மதத் தலைவரும் புதை

குழியில் இருப்பவர்களை எல்லாம் எழுப்பி, தங்களுடைய மதத்தில் சேர்ந்தவர்களுக்குமட்டும் மோட்சமும், மற்றவர்களுக்கெல்லாம் நரகமும் அளிக்கப்படும் என்று கூறக்கூடும்.

இவற்றுள் இறந்தபிறகு இறைவனை அடைவோம் என்று கூறிக்கொள்ளும் மதங்களைவிட இருக்கும்போதே இறைவனை இன்னான் என்று அறிமுகப்படுத்தும் மதம் நோயை உடனடியாகப் போக்கும் மருத்துவனுக்கு ஒப்பானது—இராஜயோகம். இது கட்டுரையோ கதையோ அல்ல. இதில் ஏமாற்று வித்தை இம்மியும் கிடையாது. அறுப்புக்காலத்தில் தன் குமாரனோடு ஆண்டவன் வரப்போகிறார். அப்போது புதைக்கப்பட்டவரை எல்லாம் புத்துயிர் தந்து எழுப்புவார். தன்னை நம்பாமல் இருந்தவர்களையெல்லாம் நரகத்துக்கு அனுப்பப் போகிறார்; நம்பினவர்கள் அனைவரின் பாவங்களை எல்லாம் மன்னித்து சொர்கத்துக்கு அனுப்பப்போகிறார் என்னும் எதிர்கால நிகழ்ச்சிகளை நமது தாய்மதம் எதிர்பார்ப்பதில்லை. இந்த விஷயம் பகற்கனவு. ஆகவே நம் தாய்மதம் உயிருள்ளபோதே உண்மையை உணர இராஜயோகம் வழிவகுத்துள்ளது. அநுபூதிமானாகிய தாயுமான அடிகளார் உதாரணத்தோடு மனிதகுலத்துக்குப் பரிவோடு கூறும் பாடலைச் சிறிது சிந்தியுங்கள்;

“ காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர் அகண்டா காரசிவ
போகம்என்னும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகஉருவாய் கிடக்கு தையோ
இன்புற்றிடநாம் இனி எடுத்த
தேகம் விழும்முன் புசிப்பதற்குச்
சேரவாரும் செகத் தீரே !

—இப்பாடல் “ இறப்பதற்குமுன் பேரின்பப் பெருநிலையை அடையுங்கள். தாழ்ந்த இனமென்று கூறும் காகங்கள்கூடத் தமக்குக் கிடைத்த உணவைப் பல காகங்களோடு கலந்துண்டு களிக்கின்றன. உயர்ந்த பிறவி என்று கருதும் மக்கட் பிறவியைப் பெற்ற நாம் பேரின்பப் பெருக்கைக் கலந்து அருந்தலாம் வாருங்கள், ” என்று உலகமக்களாகிய உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறேன். உடம்பைவிட்டு உயிர் நீங்குவதற்கு முன்னமே வாருங்கள் என்று விளிக்கின்ற சொல்லானது சாதி, மதம், இனம் என்பவற்றுக்கு அப்பால் நின்று அனைவரையும் அழைக்கும் வரவேற்புரையாகும். இறந்தபிறகு இறைவனை அடைவோமா, வேறு பிறப்பை எடுப்போமா—இவற்றை

இங்கிருந்துக்கொண்டு எப்படி நிச்சயிக்கமுடியும்? பணபலத்தால் மதமாற்றம் செய்யும் வஞ்சகர்களுக்கும், படைபலத்தால் மதமாற்றம் செய்யும் பாவிகளுக்கும் இறைவன் துணைபுரிவான் என்று எப்படி நம்புவது? ஆகவே ஆக்கையைவிட்டு ஆவி நீங்குவதற்குமுன்னமே ஆண்டவனை அறிந்துகொள்ளுங்கள் என்று இந்துமதம் அறிவுறுத்துகிறது.

சமீப காலத்தில் வாழ்ந்த சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ண பரமாம்சரைச் சந்தித்தார் அவரைப் பார்த்து "நீங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டார். அதற்குப் பரமாம்சர் "நான் கண்டிருக்கிறேன்; உனக்கும் காட்டுகிறேன்," என்று கூறினார். அவர் கூறியவண்ணமே விவேகானந்தருக்கு அநுக்கிரகமும் செய்தார் என்பது பிரசித்தமான ஒன்றாகும். ஆகவே இந்துமதம் இறந்தபிறகு அடையப் போகும் சொர்க்கத்தைப்பற்றிமட்டும் பேசவில்லை. இருக்கும் போது அடையவேண்டிய மோட்சத்தைப்பற்றியும் கூறுகிறது. அதற்கு ஏற்ற அரிய வழிதான் இராஜயோகம்.

வேதத்துக்கு ஆறு அங்கங்கள் இருப்பதைப்போல இராஜயோகத்துக்கு 8 அங்கங்கள் உண்டு. (இராஜயோகத்தின் உறுப்புக்கள் 8) அவை யாவன:

1. இயமம், 2. நியமம், 3. ஆசனம், 4. பிராணாயாமம், 5. பிரத்யாகாரம், 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி என்னும் இவ்வெட்டும் இராஜயோகத்தின் அங்கங்களாகும்.

"அட்டாங்க யோகமும் ஆதாரம் ஆறும்
அவஸ்தை ஐந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே வியப்பு
ஒன்று கண்டேன்
வட்டாகி செம்மதிப் பாலூரல் உண்டு
மகழ்ந் திருக்க
எட்டாத பேரின்பம் என்னை விழுங்கி
இருக் கின்றதே!"

(பட்டினத்தார்)

யோகத்துக்குக் கூறியுள்ள 8 அங்கங்களையும் முறையாகப் பின்பற்றினால் பரம்பொருளைக் கட்டாயமாகக் காணமுடியும் என்றும், கண்டவர்கள் பெறும் பேரின்பத்தையும் இப்பாடல் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. இந்த யோகமுறையைக் குரு மூலமாக உணர்ந்து சாதிக்கக்கூடிய பாக்கியவான்கள் பிறவிப்

பயனைப் பெற்றவர்களாவர். மற்றவர்கள் கொற்றவர்களே யானாலும் பிறந்தும் பயனற்றவர்களேயாவர். ஆகவே நாமும் பிறவிப் பயனை அடையவேண்டுமாயின் யோகத்தின் 8 உருப் புக்களையும் ஒவ்வொன்றாக முதலில் தெரிந்துகொள்ளலாம்.

1. இமயம்: கொல்லாமை, கள்ளாமை, பொய் சொல் லாமை, பிறர் பொருள் நயவாமை. இந்திரியங்களை விஷயங் களில் விடாமை என்னும் ஐந்தையும் கடைபிடிக்கவேண்டும். யோகம் செய்ய விரும்புவோருக்கு இது முதல் உருப்பு.

2. நியமம்: குருபக்தி, தவம், தூய்மை, தத்துவ ஆராய்ச்சி, உள்ளதைக் கொண்டு மகிழ்தல், [தெய்வபக்தி—இவை இரண் டாவது உருப்பு.

3. ஆசனம்: தவத்துக்குத்தக்க இடத்தைத் தேர்ந்தெடுத் தல். புலித்தோல், மான்தோல், தருப்பாசனம், வெள்ளாடை உட்காருவதற்கு இவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்துக் கொள்ளல்.

யோகம் செய்ய அமரவேண்டிய ஆசனங்கள் 84 வகை களைப் பேசப்படுகின்றன. அவற்றின் விபரங்களை யோக நூல்களில் விரிவாக எழுதப்பெற்றுள்ளன. அவற்றுள்ளும் முக்கிய மானவை 15 ஆசனங்கள் என்பர்.

1. ஸ்வஸ்திகம்
2. கோமுகம்
3. கூர்மம்
4. குக்குடம்
5. உத்தானம்
6. தனுஷம்
7. மத்ஸம்
8. பச்சிமம்
9. வீரம்
10. மயூரம்
11. சவம்
13. சிம்மம்
13. பத்ரம்
14. சித்தம்
15. பத்மம்

என்பனவாகும். இந்த ஆசனங்களில் பல ஆசனங்கள் நோய் களைப் போக்கக்கூடியனவாகவும் இருக்கின்றன. அவற்றைக் காண விரும்புவோர் யோகாசன நூல்களில் கண்டு தெளிக. இங்கே எளிமையாகச் சாதனை செய்வதற்கு முக்கியமாக மூன்று ஆசனங்களைப்பற்றிமட்டும் கூறினால்போதும் என நினைக் கிறேன்.

1. சுகாசனம் : சாதாரணமாக இடது தொடையின்பேரில் வலது காலை வைத்து உட்காரல். இது நமக்குப் புழக்கத்தில் உள்ள ஆசனமாகும்.

2. குப்தாசனம் : இடது குதிகாலை ஆண்குறியின்கீழ்க் குதத்தினிடத்தும் வலது குதிகாலை இடது குதிகாலின்பேரிலும் வைத்து இரண்டு தொடைகளும் சமமாகப் படியவைத்து நிமிர்ந்து உட்காரல். இதனை குப்தாசனமென்றும் வஜ்ராசனமென்றும் கூறுவர்.

3. பத்மாசனம் : இடது குதிக்காலை வலது தொடையின் பேரிலும், வலது குதிக்காலை இடது தொடையின்பேரிலும் வைத்து சமமாக நிமிர்ந்து உட்காரவேண்டும். சாதனை செய்யும்போது முதுகு, கழுத்து, தலை இம்மூன்றும் நேராக நிமிர்ந்து கட்டையைப்போல அசையாமல், முற்கூறிய புலித்தோல் அல்லது மான்தோல் முதலிய ஏதேனும் ஒன்றின்பேரில் அமைதியாக உட்காரவேண்டும்.

4. பிராணயாமம்: பிராணன்—மூச்சு, யாமம்—அடக்குதல்; பிராணாயாமம்—மூச்சை அடக்கல்.

1. மூச்சை உள்ளுக்குள் இழுத்தல்—பூரகம்
2. மூச்சை உள்ளேயே நிறுத்தல்—கும்பகம்
3. வெளியில் மூச்சை விடல்—ரேசகம்.

நமது ஆக்கைக்குள் ஆடும் மூச்சு சாதாரணமாக ஒருமணி நேரம் வலது நாசியிலும் ஒரு மணி நேரம் இடது நாசியிலும் மாறி மாறி ஆடிக்கொண்டிருக்கின்றது. இதுபோல் ஒரு நாளைக்கு 21600 தரம் பிராணவாயு ஆக்கையின் உள்ளே சென்று வருகிறதென்று கணக்கெடுத்துள்ளனர். இதன் வேகத்தைக் குறைத்து மனத்தை நிறுத்துவது பிராணயாமம் என்று கூறுவர்.

மனதுக்கும் மூச்சுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மனதை அலையவிடாமல் கட்டுப்படுத்தினால் சுவாசத்தின் வேகமும் குறையும். சுவாசத்தை நிதானப்படுத்தினால் மனம் நிதானப்படும். இதனை வாசியோகம் என்றும் கூறுவர். இந்த வாசியோகத்தை ஆசானின்மூலமாகப் பயிலவேண்டிய முறையறிந்து பயிலுதல் நலமாகும்.

இப் பிராணாயாம சாதனையை வாயால் கூறுதல் மிகவும் எளிதாகும். செயல்முறைக்குக் கொண்டுவருவது எளிய காரிய

மல்ல. பிராணன் நம்வசமாகிவிட்டால் எமனையும் நம்மை நெருங்கவொட்டாமல் உதைக்கலாம் என்கிறார் திருமூலப் பெருமான்.

ஏற்று இறக்கி இருகாலும் பூரித்து
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்கு
கூற்றை உதைக்கும் குறியது வாமே

ஆரியன் நல்லன் குதிரைகள் இரண்டுள
வீரிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூறிய நாதன் குருவின் அருள் பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படும் தானே.

(திருமூலர் திருமந்திரம்)

இந்த வாசியை வசப்படுத்தவேண்டுமாயின் குருவினுடைய அநுக்கிரகம் அவசியம் தேவை என்பதை திருமூலர் பெருமானும் தெளிவாக்குகிறார்; மற்றும்

"கட்டுப் படாதந்த அஸ்வம் மட்டும்—அதன்
காலோ பன்னிரண் டாகையினால்
ஏட்டுக் கயிற்றாலே கட்டிக்கொண்டால்—அது
மட்டுப் படுமடி வாலைப் பெண்ணே!''

(வாலைக்கும்மி)

என்கிறது ஞானக்கோவை. எட்டுக் கயிறு என்பது யோக அங்கங்கள் என்னும் 8 உருப்புக்கள்; அஸ்வம் என்றால் குதிரை. இந்த வாசி என்னும் குதிரைக்குப் பன்னிரண்டு கால்கள் என்பது அகரம் முதலான உயிரெழுத்துக்கள் 12. இந்தப் பிராணன் ஆடும்போது இடது நாசித்துவாரத்தில் பன்னிரெண்டு அங்குலமும், வலது நாசித்துவாரத்தில் ஆடும்போது 16 அங்குலமும் ஆடுவதாகக் கூறுவர். இந்தக் கணக்கின்படி தமிழுக்கு உயிரெழுத்துக்கள் 12. சமஸ்கிருதத்துக்கு உயிரெழுத்துக்கள் 16 என அக்காலப் பெரியோர்கள் வகுத்ததாகக் கூறுவர் காற்றுக்குக் கால் என்னும் பெயரும் உண்டு.

யோக அங்கங்களைப்பற்றி இதுவரை கூறிய நான்கு அங்கங்களும் புறச்சாதனைகளாகும். அடுத்துவரும் நான்கும் அகச் சாதனைகள்.

5. பிரத்யாகாரம் : இந்திரியங்களை வெளியில் செல்லவொட்டாமல் அடக்கல். இதனை திருவள்ளுவப் பெருமான்

"உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து".

என்று கூறியுள்ளார். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின்வாயிலாக மனம் புலன்களின் வழி வெளியில் செல்லவிடாமல் தடுப்பதை பிரத்யாகாரம் என்று கூறுவர்.

6. தாரணை : தடுத்த மனதைப் புருவ மையத்தில் நிறுத்துதல். மனம் இந்திரியங்களின்மூலம் வெளியில் செல்லா விட்டாலும் பல எண்ணங்களை எண்ணிக்கொண்டிருக்கும். அவ்வாறு சலனமுறாமல் இருக்க அம்மனம் தங்குவதற்குப் புருவ மையத்தை இடமாக்கித் தருதல்; இதனை தாரணை என்பர்.

7. தியானம் : குரு அருளிச் செய்தவண்ணம் இறைவனை வாயால் கூறாமல் மனத்தால் தியானித்தல். பிற எண்ணங் களை நினையாதொழித்தல்.

8. சமாதி : காண்பான், காட்சி, காணப்படுபொருள் என்னும் இம்மூன்றும் நழுவிய நிலையில், ஜீவாத்மா, பரமாத்மா என்னும் பேதம் தோன்றாமல் பரம்பொருளோடு ஒன்றிநிற்றல்.

இச்சமாதி நிலையிலும் இருவகையுண்டு. ஒன்று சவிகல்ப சமாதி. மற்றொன்று நிர்விகல்ப சமாதி. அனைத்தையும் மறந்து முன்னிலையும் தானுமாக இருப்பது சவிகல்ப சமாதி. முன்னிலையும் தன்னிலையும் தோன்றாமல் இரண்டற்ற நிலை நிர்வி கல்ப சமாதியாகும். போக்குவரவற்ற பரம்பொருளோடு ஜீவாத்மா சமமாக நிற்றல். சம + ஆதி—சமாதி. ஆதிபரம் பொருள். நம்முடைய ஆன்ம இயக்கம் ஆக்கை முழுவதும் பரவி இருக்கிறது. உதாரணமாக, ஒரு சிறு எறும்பு உடம்பின் மேல் ஏறினாலும் உடனே உணர்ந்து கொள்கிறோம். ஆயினும் நமது ஆக்கைக்குள் ஆன்மாவுக்கு இயக்க மையம் ஒன்றுஉண்டு. இதயம் இரத்த நாளங்களுக்கும், நுரையீரல் சுவாசத்திற்கும் மையமாக அமைவதைப்போல உயிருக்கும் இயக்க மையம் உண்டு. அதைத்தான் 'மூலாதாரம்' என்று யோகிகள் கூறுகின்றனர். ஆன்மாவின் அனைத்து இயக்கங்களுக்கும் ஆதாரமான இடம் மூலாதாரம்.

ஆதாரம் 6

1. மூலாதாரம், 2. சுவாதிட்டானம், 3. மணிபூரகம். 4. அனாகதம் 5. விசுத்தி. 6. ஆக்நேயம் என்பர். மூலாதாரத்

தில் கணபதி, சுவாதிட்டானத்தில் பிரம்மா, மணிபூரகத்தில் விஷ்ணு, அனாகதத்தில் ருத்திரர், விசுத்தியில் மகேஸ்வரர், ஆக்நேயத்தில் சதாசிவரும் உள்ளர் என்று இவற்றுக்கும் மேல் சகஸ்ராரம் என்று யோக நூல்கள் விளக்குகின்றன.

அவஸ்தை 5

1. விழிப்பு நிலை, 2. கனவு நிலை, 3. உறக்க நிலை, 4. உணர்வு நிலை, 5. உணர்வு ஒன்றிய நிலை என்பனவாகும். ஜாக்ரதை, சொற்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பர். "அட்டாங்க யோகமும், ஆதாரம் ஆறும் அவஸ்தை ஐந்தும் விட்டேறிப்போன வெளி," என்று பட்டினத்து அடிகளார் இதைத்தான் விளக்கினார். இந்த வெளியை சிதாகாசம் என்றும் ஞானாகாசமென்றும், இதயாகாசமென்றும் கூறுவர். சித்—அறிவு, ஆகாசம்—வெளி, சிதாகாசம்—அறிவாகாசம். யோகப் பயிற்சியால் உள்ளுக்குள் உணர்ந்த யோகிகள் திரண்ட மதிப்பால் நிலவொளியை ஒத்த குளிர்ந்த அமுதம் உண்டு, கவலையற்று இருக்க "எட்டாத பேரின்பம் என்னை விழுங்கி இருக்கின்றதே," என்னும் பாடல் யோகானுபவப் பாடலாகும். இந்த நிலைமையின் பெருமையைத் தாயுமான சுவாமிகள் வாயளவில் சொல்லக்கூடியதல்ல; யோகத்தை சாதித்தவர்கள் உணரக்கூடிய அரிய விஷயமாகும் என்கிறார்.

"தானான தன்மயமே அல்லால் ஒன்றைத்
தலையெடுக்க ஒட்டாது தலைப்பட் டாங்கே
போனாலும் கற்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலன்வே றின்றாம்
ஞானாகர்த்தினொடு ஞேயம் அற்ற
ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்
ஆனாலும் அதன்பெருமை எவர்க்கார் சொல்வார்
அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்.

—இந்த உண்மைநிலை மூன்றாம்படி என்னும் யோகநிலையில் வெற்றிகண்ட பெரியோர்களுக்குத்தான் விளங்கும். மற்றவர்கள் பல நூல்களைக் கற்றவர்களேயானும் ஆன்ம விளக்கத்தை அறிய முடியாது. இந்து மதம் கற்பனையினாலேயே எல்லை கட்டிக் கொண்ட மதமல்ல. இந்தப் பிரம்ம வித்தையை வேறு எந்த நாட்டினரும், வேறு எந்த மதத்தினரும் விளக்கவில்லை. "எங்கள் மதத் தலைவர் மணலைக் கயிறாய்த் திரித்தார். வானத்தை வில்லாய் வளைத்தார், பட்டால் பறந்தன பாவங்கள்; தொட்டால் ஓடின நோய்கள்," என்று மகத்துவங்

களைக்கூறி, மக்களைத் தம் மதத்துக்கு இழுக்க ஜாலவித்தை காட்டும் மதமல்ல இந்துமதம்; இந்த ஜால வித்தைகள் சித்தர்களுக்குச் சிறு பிள்ளை விளையாட்டுக்கொப்பாகும்.

உலக சமுதாயத்துக்கு உண்மைப்பொருளை இன்னதென தெளிவுற உணர்த்தக்கூடிய ஒப்புயர்வற்ற நமது அன்னையின் மதத்தை அலட்சியப்படுத்தி அப்பால் நிற்கின்றது. இந்த யோகநெறி மறையுமானால் உலகத்தில் ஆன்மீகம் என்னும் ஆய்வுநெறி அஸ்தமித்துவிடும்.

எனது குருநாதர்

எழுத்தறிவு பெறவேண்டுமென்றால், ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு எழுத்தறிவு எழுத்தறிவு என்று பல ஆண்டுகள் பிதற்றிக்கொண்டிருந்தாலும், எழுத்தறிவைப் பெறமுடியாது. எழுத்தறிவை அறிந்த ஆசிரியரை அணுகி, அவர் கூறுகின்ற முறைப்படி பயின்றால்தான் எழுத்தறிவைப் பெறமுடியும். நாம் கற்கப் பிறந்தவர்கள் என்பதை முன்னரே கூறியுள்ளேன் எத்தொழிலும் எம்மொழியும் கற்றால்தான் வரும். ஒரு சிலர் பல மொழிகளைப் பேசவும் எழுதவும் கற்றுள்ளனர். சிலர் தாம் பேசுகின்ற மொழியையே எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர். அதற்குக் காரணம் கல்லாமையாகும்.

படிப்பிலும் பல தரங்களுள்ளன. ஆரம்பப் பள்ளியிலிருந்து சர்வகலாசாலைவரையிலும் பல படித்தரங்கள் உள்ளமை தெரிந்த விஷயம். இவற்றுள்ளும் சரித்திரம், கணிதம், விஞ்ஞானம், மருத்துவம் போன்ற துறைகளும் உண்டு. அதைப் போலவே யோகப்பயிற்சியிலும் பல நிலைகள் இருக்கின்றன. அவற்றை ஆசான் மாணவனுடைய தகுதியை அறிந்து அவனுக்கு ஏற்ற யோகப்பயிற்சியை முறையாக உபதேசிப்பார்.

குருவின் கட்டளையின்படி சாதனை செய்தால் யோகப் பயிற்சியின்மூலம் பல அரிய விஷயங்களை அநுபவபூர்வமாக உணரமுடியும். யோகம் என்பது கதையோ கட்டுரையோ அல்ல. சாதனையின்மூலம் உலகநாதனை உணருகின்ற பிரத்யட்யப் பிரமாணமாகும். யோகியருக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கட்டாயம் கிடைக்கின்றது. உண்மையை உணர வேண்டுமாயின் முக்கியமாக நான்கு குணங்கள் இருக்க வேண்டும் என்பர். 1. விவேகம், 2. வைராக்கியம், 3. யோக சாதனைக்கு ஏற்ற ஆறு குணங்கள், 4. வீடுபேற்றைப் பெற

வேண்டுமென்னும் இச்சை. இவற்றை வேதாந்த சாத்திரங்கள் "சாதன சதுஷ்டயம்" என்று கூறும். இந்த நாற்குணமும் அற்றவர்களுக்கு யோக சாதனை பலிப்பது அரிதாகும்.

"சாதனம் இன்றி யொன்றை
சாதிப்பார் உலகில் இல்லை
ஆதலால் இந்த நான்கும்
அடைந்தவர்க் கறிவுண் டாகும்
நூதன விவேகி யுள்ளம்
நுழையாது நுழையு மாயின்
பூதசன் மங்கள் கோடி
புனிதனாம் புருடனாமே

(கைவல்யம்)

1. விவேகம் : மெய்யெது ? பொய்யெது ? என்பதைச் சிந்தித்தல்

2. வைராக்கியம் : பொய் என்று புரிந்துகொண்டதை வெறுத்து, மெய்யை உணரவேண்டுமென்னும் திட சங்கல்பம்.

3. சமாதி சட்சம்பத்து : சமம், தமம், சிரத்தை, சமாதானம், உபரதி (சாதனைக்குப் புறம்பான செயல்களை விடுதல்), திதீட்சை (துன்பங்களைச் சகித்தல்)

4. வீடுபேற்றைப் பெறவேண்டும் என்னும் விருப்பம். —இந்த நான்கும் பொருந்தியவர்களுக்குப் பூரண ஞானம் உண்டாகும். தன்னை சிறந்த மேதாவியாகக் கருதிக் கொள்ளும் நூதன விவேகிகளுக்குப் பெரியோர்களின் அறிவுரைகளின் பொருள் விளங்காது. ஒருக்கால் நல்லறிவு தோன்றிவிட்டால், அவன் பாக்கியசாலியாவான்.

சுமார் 30 ஆண்டுகளுக்குமுன்னம் தண்டு பகுதியில் கும்பார கூளை என்னும் இடத்தில் சுவாமி இராமானந்தர் என்னும் ஒரு யோக புருஷன் இருந்தார். அவருடைய அநுக்கிரகத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு எனக்குச் சிறு வயதிலேயே கிட்டிற்று. இதனை அடியேன் ஆண்டவன் திருவருள் என்றே கருதுகிறேன். அவருக்கு ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் உண்டு. அவர்களுள் அடியேனும் ஒருவன். அவர் எனக்குக் கற்பித்தருளிய சில்வற்றை வாசகர்களின் சிந்தனைக்கும் தரவிரும்புகிறேன்.

சுவாமி இராமானந்தர் 'அசல மார்க்கம்' என்னும் யோக நெறிகளைக் கண்டு உணர்ந்து சாதித்தவருமாவார். அ— இல்லை. சலம்—சலனம். அதாவது சலனமற்ற நெறி என்பது இதன் பொருள். அசைவற்ற பரிபூரண நிலையை உணர்த்துவது அசல மார்க்கமாகும். இந்த மார்க்கத்தில் சாதனை முறைகள் 5 பிரிவுகளாகக் கூறப்படுகின்றன. அவை,

1. சாங்கியம். 2. தாரகம். 3. அமனஸ்கம் (குண்டலி). 4. தர்ப்பணம் (சச்சிதானந்தம்), 5. பரிபூரணம் என்பவைகளாகும்.

நாம் முக்கியமாகப் புரிந்துகொள்ளவேண்டியவை. 1. நமது ஆக்கையைப்பற்றியவை. 2. உயிர்ப்பைப் பற்றிய இரகசியம். 3. மனத்தைப்பற்றிய நிலை. 4. ஆன்ம நிலை. 5. ஆண்டவன் நிலை. இந்த ஐந்தையும் விளக்குவதற்கு ஐந்து வகையான யோகமுறைகளைப் பெரியோர்கள் வகுத்துள்ளனர்.

" சேத்திர மாகிய ஆக்கையின் தத்துவம்
தெளிய விளக்குதல் சாங்கிய மாம் ;
சூத்திரம் போன்று நடத்திடும் வாசியை
சுட்டி உணர்த்துதல் தாரக மாம்
மாத்திரைப் போதும் நில்லாத மனத்தை
மடக்கிப் பிடிப்பது குண்டலியாம்
நேத்திரத் தூடுபோய் ஆத்துமத் தத்துவ
நிலையை உணர்த்துதல் தர்ப்பணமாம்.

எங்கும் நிறைந்த பெருவெளி யொப்ப
இறைபொரு ளுண்டெனும் தன்மை தனை
சங்கை யில்லாமல் உபநிட தத்துள்ள
சாரமதான மும் மந்திரச் சொல்
துங்கமுறச் சொல்லி தூய பெருவெளி
சுட்டாமல் சுட்டி உணர்த்த குரு
அங்கதுணர்ந்து அப் பூரணத் தொன்நிலை
அறிய விளக்குதல் அசல நெறி.

இவ்விரு செய்யுள்களும் அசல மார்க்கம் என்னும் யோக முறைகளை விளக்குகின்றன.

நாம் ஐம்புல அறிவால் காணுபவை அனைத்தும் புறக் காட்சி. காதுகளால் வெளியில் உண்டாகும் ஒலிகளைக் கேட்கிறோம். கண்களால் வெளியில் ஒளிவிடும் தீபத்தைப் பார்க்

கிறோம். நாசியால் வெளியில் வீசுகிற மணத்தை முகர்கிறோம். நாவில் சுவைக்கும் தேன், கற்கண்டு முதலானவைகளும் வெளிப் பொருள்கள்தாம். தட்ப வெப்பங்களும் வெளிப் பொருள்களே. இவற்றை மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் நமது ஐம்பொறிகளின்மூலம் உணர்கிறோம். நமது ஆன்மா புறத்தில் இருக்கும் பொருள்களைப் பார்ப்பது புறக்காட்சி. ஐயறி வென்பது சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் என்பனவாகும். இவ்வைந்தைத் தவிர ஐம்பொறிகளால் வேறு எதையும் அறிய முடியாது. மற்றும் ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு விஷயத் தைத்தான் அறியமுடியும். உதாரணமாக, காது ஒலியை மட்டுந்தான் கேழ்க்கமுடியும், கற்கண்டின் சுவையைக் காது களால் அறிய முடியாது. கண் உருவத்தைத்தான் பார்க்க முடியும். மணத்தை முகரமுடியாது. இதுநாள் வரையிலும் நாம் புறத்தில் உள்ள பொருள்களை ஐம்பொறிகளின் வாயிலாகக் கண்டு களித்திருக்கிறோம். இக் காட்சிகளை உணருகின்ற நாம் யார் என்பதை உணருவது அகக் காட்சி. ஆக்கைக்கு உள்ளே நிகழும் நிகழ்ச்சிகளை அறியத் தொடங்குவது யோகம். இந்த யோகத்துக்குப் பேருதவியாக அமைந்திருப்பது வாசி (மூச்சு). நாம் தாய்வயிற்றிலிருந்து வெளிவந்த நாள்முதல் இம்மூச்சானது நமது ஆக்கையில் உள்ளும் புறமுமாக ஆடிக்கொண்டிருக்கிறது. இப் பிராணனை இவ்வாறு இயக்கக்கூடிய பொருள் எது ?. இப் பிராணன் நமக்கு ஏன் கட்டுப்படுவதில்லை ? இதைக் கட்டுப் படுத்தினால் என்ன ஆகும் ? கட்டுப்படுத்தமுடியுமா முடியாதா என்பதைக் காணும் முயற்சியே வாசியோகம்.

நமக்கு அமைந்துள்ள பஞ்சேந்திரியங்களில் கண்ணும் காதும் மிக்க சிறப்புடையனவாகும். கோடிக்கணக்கான மைல் களுக்கு அப்பால் இருக்கும் உடுக்களையும் காணும் ஆற்றல் படைத்தது கண்; நெடுந் தூரத்தில் உண்டாகும் ஒலியையும் கேழ்க்கும் ஆற்றல் படைத்தது காது. ஆகவே இவ்விரு இந்திரியங்களையும் அக முகத்தில் திருப்புவது சாங்கிய யோகம்.

யோகிகளுக்குள் கபில முனிவரும், பதஞ்சலி முனிவரும் லோகோபகாரமாகச் சில அரிய விஷயங்களை வெளிப்படையா யருளிச் செய்துள்ளனர். சாங்கிய யோகத்தை நன்கு விளக்கி யுள்ளவர் கபில முனிவர் என்று கூறுகின்றனர். சங்கிய என்றால் கணக்கு என்பது பொருள். ஈஸ்வர சாங்கியம் மந்திர பூர்வமாகப் பயிற்சி செய்வது; நிரீஸ்வர சாங்கியம் மந்திரமில்லாமல் பயிற்சி செய்வது.

சாங்கிய யோகப் பயிற்சி

அசல மார்க்கத்தில் மந்திரபூர்வமான சாங்கிய யோகம் போதிக்கப்படுகிறது. இந்த மந்திரத்தை அம்ச பஞ்சாட்சரி என்று கூறுவர். அம்ச என்றால் வாசி. வாசியைப் பற்றிய ஐந்து எழுத்துக்களோடு கூடிய மந்திரம். 1. பரமாத்ம பீசம், 2. சக்தி பீசம். 3. இலட்மி பீசம். 4. ஆத்ம பீசம். 5, சாந்தி பீசம் என ஐந்து பீஜாட்சரங்களோடு கூடியது சாங்கிய யோக மந்திரம்.

நமது உடம்பில் 9 துவாரங்கள் உண்டு. இவற்றுள் தலையில்மட்டும் 7 துவாரங்கள் இருக்கின்றன. இந்த ஏழில் 6 துவாரங்களை மூடிக்கொண்டு செய்கின்ற யோகத்துக்கு சண்முகி முத்திரை என்று பெயர்.

நமது நாசியில் சுவாசம் வலது பக்கம் ஓடினால் சூரிய னிலும், இடது பக்கம் ஓடினால் சந்திரனில் ஓடுவதாகவும் கொள்ளவேண்டும். இரு நாசித் துவாரத்திலும் சரமாக ஓடி னால் சுழி முனையில் ஓடுவதாகும். முதலில் சுவாசம் எந்த நாடியில் ஓடவேண்டுமானாலும் அந்த நாடிக்குத் தடையின்றி சுவாசத்தை மாற்றப்பழகவேண்டும். அப் பழக்கத்துக்கு நாடி சுத்தம் செய்தல் என்று கூறுவர்.

இரண்டு பெருவிரல்களால் இரண்டு காதுகளையும், இரண்டு சுட்டு விரல்களால் இரண்டு கண்களையும் இரண்டு அணி விரல் களால் இரு நாசித் துவாரங்களையும் முதலில் மூடிக்கொள்ள வேண்டும். கிழக்கு, ஈசானம் அல்லது வடக்கு இம்மூன்று திசை களில் ஏதேனும் ஒரு திசையை நோக்கிக் கீழே ஆசனமிட்டு உட்கார்ந்தபிறகு மேற்கூறியவண்ணம் ஆறு துவாரங்களையும் மூடவேண்டும். பிறகு அணி விரல்களினால் நாசித் துவாரங் களின்மூலம் வாசியை மாற்றிமாற்றி வேகமாகவும் விரைவாகவும் உள்ளும்புறமுமாக ஆடச்செய்யவேண்டும். அப்போது குரு கூறியுள்ள அம்ச பஞ்சாட்சரி மந்திரத்தை (ஓம், ஹிரீம், சிரீம், அம், சம்) வாயால் சொல்லாமல் சுவாசத்தை வெளியில்விடும் போதும், உள்ளுக்கு இழுக்கும்போதும் மனத்தால் சொல்ல வேண்டும். நாட்டத்தைப் புருவமையத்தில் வைக்கவேண்டும். இவ்வாறு ஐந்து நிமிடம் விரைவாகச் செய்து இரண்டு நிமிடம் அசையாமல் காதுகளை மூடியவண்ணமே ஆக்கைக்குள் கேழ்க்கும் ஒலிகளை மூடிய காதுக்குள் உற்றுக்கேட்டால் உள்ளுக்குள் சில ஒலிகள் இரையும். ஆயினும் அவ்வொலிகள் தெளிவாக முதலில் கேட்காது. "பழகப் பழக பழுக்கும் அருட்

கனி'' என்பார்கள். அதைப்போலக் குறைந்தது ஒரு மணி நேரம் காலை நேரத்தில் பழகுவது நலம். விடியற்காலம் மூன்று மணியிலிருந்து ஆறு மணி வரையிலும் பிரம்ம முகூர்த்தம் என்பார்கள். இந்த நேரத்தில் எதைப் பயிற்சிசெய்தாலும் எளிமையாகக் கைகூடும். காலை நாலரை மணி முதல் ஐந்தரை மணிவரை நித்தமும் பழகினால் போதுமானது: நம்முடைய தேக நிலையையும் கருத்திற் கொண்டு சிரத்தையோடு பழகவேண்டும். இதுவே சாங்கிய யோக சாதனையாகும். சிலர் சாங்கிய யோகத்துக்கு முதலில் அஷ்டாட்சர மந்திரத்தையும், பிறகு பஞ்சாட்சரத்தையும் தருவார்கள். இது அவர்களுடைய தகுதியைப் பொறுத்ததாகும்.

யோகப் பயிற்சி செய்யும்போது அஷ்டாங்க யோகத்தைப் பற்றிக் கூறியுள்ள இயம, நியமாதிகளையும் கடைபிடிக்க வேண்டும். உணவாதிகளில் கட்டுப்பாடு வேண்டும். மது அருந்தல், புலால் உண்ணல் முதலாயின ரசோகுணத்தையும், தாமசி குணத்தையும் உண்டாக்குபவை. அவற்றை அறவே விலக்கவேண்டும்.

சாதனை செய்யும் இடம் தனியிடமாகவும் தூய்மையாகவும் இருக்கவேண்டும். சாதனை செய்யும் அறையில் குருவின் படம் அல்லது நமது இஷ்ட தெய்வத்தின் படம் இருக்கலாம். விகாரமான காம இச்சையைத் தூண்டும் படங்கள் இருக்கக்கூடாது. கெட்டகுணமுடையவர்கள் அவ்வறையில் நுழையக்கூடாது. நறுமணம் கமழும் புகை மற்றும் மலர்கள் இருக்கலாம். யோகம் செய்யும் அறையில் நுழையும்போதே சினம் முதலான தீய குணங்கள் தாமாக வெளியேறவேண்டும். இந்த வசதி இல்லாதவர்கள் எங்கேனும் அமைதியான மடம் அல்லது ஆலயம் முதலான இடத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

யோக சாதனையை வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டு செய்யக்கூடாது. வயிறு காலியாக இருக்கவேண்டும். இவ்வாறு குறைந்தது ஒரு மண்டலமேனும் சாதித்தால் பல அநுபவங்கள் நமக்கு உண்டாகும்.

'' நித்தநித்தம் தவம்செய்யப் பழகும்போது
 நீகாண நேரிடும்பல் விந்தை உன்னுள்
இரத்தசுழல் காற்றுசுழல் உணவி னின்றும்
 ரசம்பிரிதல் சீரணித்தல் இவற்றால் உள்ளே

எத்தனையோ விதமான நாதம் கேட்கும்
ஈதன்றி உடலில்கூ டதிக மானால்
சத்தமுடன் பலவண்ண ஒலிகள் தோன்றும்
சரீர்அமைப் பொக்க இவை குறையும் கூடும்.

பிறந்ததுமுதல் வெளியுலகத்தில் உலாவி மூழ்கி இருந்த நமக்கு உள்ளுலகத்தையும் உணர யோகம் நமக்குதவிபுரிகிறது. வெளி யுலகத்தில் பல வண்ண விளக்குகளையும், பல இன்னிசைகளையும் கண்டு களித்த நமக்கு ஆக்கைக்குள் அமைந்துள்ள ஒலிகளையும், ஒளிகளையும் காணும் வாய்ப்பு சாங்கிய யோகத்திலேயே கிட்டுகின்றது.

ஆக்கைக்குள்ளே ஒலிக்கும் ஒலிகளை நிஷ்டானுபூதி என்னும் நூலும் திருமந்திரமும் தசவித நாதங்கள் (பத்து வகையான ஒலி) என்கின்றன.

மணிகடல் யானை வளர்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளை பேரிகை யாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்வொண் ணாதே.

(திருமூலர் திருமந்திரம்)

இத்திறமான யோகசா தனையில்
இருந்து சாதிப்பவர் தமக்கு
சுத்தமாய் நாதத்துவனிகளும் பலவாயத்
தோன்றிடும் அவைகடல் மேகம்
மத்தளம் பேரி யாமொலி சிலம்பு
வளை அளி தாளம் என்றுமைக்கு.
அத்தனும் மொழிந்தான் அன்றியும்உறவோர்
ஆய்ந்தெடுத் தறைந்தனர் அன்றே.

(நிஷ்டானுபூதி)

ஞானங்கொள் பொறிகள் கூடி
வான் இந்து கதிரிலாத
நாடண்டி நமசி வாய வரையேறி
நாவின்ப ரசம தாக
ஆனந்த அருவி பாய
நாதங்க ளொடு குலாவி விளையாடி

(அருணகிரிநாதர் திருப்புகழ்)

—இப்பாடல்கள் ஆக்கைக்குள்ளே ஒலிக்கின்ற ஒலிகளைப் பற்றிக் கூறுகின்றன. திருமூலதேவர் கூறும்போது, " தணிந்தெழு நாதங்கள் தாமிவைபத்தும் பணிந்தவர்க்கல்லது பார்க்க வெண்ணாதே," என்று இருவரிகளில் ஓர் உண்மையை விளக்கி யுள்ளார். ஆக்கைக்குள்ளே அமைதியோடு வெளிப்படுகின்ற பத்து இன்னிசைகளையும் வணங்கிக் கேளாதவர்கள் தன்னை யும் அறியார்கள் தலைவனையும் புரியார்கள் என்று கூறியுள்ளார்.

இது அறிவாளிகள் அனைவரும் ஏற்றுகொள்ளத்தக்க உண்மையாகும். யுக்திக்கும் பொருத்தமாக இருக்கிறது. மற்றும் புருவ மையத்தில் நாட்டத்தை வைத்து சாதகன் பார்க்கும் போது பற்பல வண்ணங்கள் தோன்றுவதும் உண்மை. காரணம் எங்கு சூடு இருக்கிறதோ அங்கு நெருப்பும் உண்டு. வாசி யோகத்தின்மூலம் உடம்பில் சூடேறினால் அங்கு ஒளிகள் தோன்றுவதும் இயல்பாகும்; யோகத்தின் மூலம் உண்டாகும் சூட்டை யோகாக்னி என்று நூல்கள் கூறுகின்றன. கோடிக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருக்கும் ஒளிகளையும் காணவல்ல கண்கள் ஆக்கைக்குள்ளேயே இருக்கும் ஒளிகளைக் காணுவது கடினமல்ல. இவ்வரிய உண்மைகளை யாராலும் மறுக்கமுடியாது. இந்த அரிய நுட்பங்களை உலகத்தில் வேறு எந்த மதமாயினும் வெளிப்படுத்தி இருக்கிறதா என்பதனைச் சிறந்த படிப்பாளிகளைக் கேட்டுப் பாருங்கள். நம் பரத கண்டத்தைத் தவிர மற்றைய கண்டங்கள் அனைத்தும் முண்டங்கள்தாம். அப்படி இருந்தும் அக்கொள்கைகள் வளர் கின்றன. இந்தச் சிறந்த கொள்கை தளர்கின்றதுர். ஏன் ?

இதனால் இந்த நாட்டுக்கு மட்டும் நஷ்டமல்ல. இந்த ஞாலத்துக்கே பெருநஷ்டம். அடுத்த விஷயத்துக்கு வருவோம்: சாங்கிய காரிகை என்னும் யோக நூல் 24 ஆன்ம தத்துவங் களைப்பற்றி விளக்குகின்றது. அவை பூதம் 5, பொறி 5, புலன் 5, கன்மேந்திரியம் 5, அந்தகரணம் 4. இந்த இருபத்துநான்கோடு கூடி இருக்கும் ஜீவன் ஒன்று ஆக இருபத்தைந்து தத்துவங் களாகும். இவற்றின் விரிவை நானா வாதசீவக் கட்டளை போன்ற நூல்களில் காண்க. இவையே ஜீவாத்மாவுக்கு முக்கிய மாகத் தொழில்படுகின்ற உறுப்புக்கள். இதன் விரிவு 96 தத்து வங்களில் சென்று முடியும். சித்தாந்தக் கட்டளை, தத்துவக் கட்டளை முதலிய நூல்களில் காண்க.

தாரக சாதனை

சாங்கிய யோகமென்னும் சாதனையைப் புரிந்ததின் பயனால் நாடிகள் சுத்தியாகின்றன. ஆக்கை சம்பந்தமான

சில விஷயங்கள் யோகிக்கு விளங்குகின்றன. சாங்கிய யோகத்தில் கண்ட ஒளிகளும் கேட்ட ஒலிகளும் எதனுடைய ஆதாரத்தில் தோன்றினவோ அந்த ஆதாரத்தை அறிவதுதான் தாரக சாதனை. தாரகம் என்றால் ஆதாரம் என்பது பொருள்.

அகில உலகங்களையும் அவ்வவ்வுலகங்களில் வாழும் உயிர்களையும் ஆட்டிப் படைக்கின்ற பேரியக்க சக்தி எதுவோ அதை உணர்த்துவதுதான் தாரகயோகம்.

"சூத்திரம் போன்று நடத்திடும் வாசியை
சுட்டி உணர்த்துதல் தாரகமாம்."

இந்துமதம் பல தெய்வங்களைக் கூறுகிறது. இவற்றுள் எது உண்மையான தெய்வம்? தெய்வம் ஒன்றா பலவா? என்று பிற மதத்தினர்கள் நம்மைக் கேலிசெய்வதோடு இந்துக்களிலேயே சிலர் இதன் உண்மையை உணராமல் குழப்பமடைந்துள்ளனர். ஒவ்வொரு மதத்தினரும் இறைவனுக்குத் தத்தம் கருத்துக்கு ஏற்ற பெயர்களைச் சூட்டியுள்ளனர். இவர்களில் எந்த மதத்தார் சூட்டியுள்ள பெயர் உண்மையானது? என்னும் கேள்வி எழுமாயின் ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் மதம் கூறும் பெயர்தான் சரியானதென்று வாதிடலாம். அது தவறல்ல. உண்மைதான். ஆனால் ஒரு பரம்பொருளுக்குப் பல மதங்கள் பல பெயர்களைச் சூட்டியுள்ளனர். இவர்கள் சூட்டியுள்ள பெயர்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் பரம்பொருள் இந்துக்கள் இறைவனுக்குச் சூட்டியுள்ள பல பெயர்களை ஏன் ஏற்றுக்கொள்ளாது? "ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றுமில்லாப் புண்ணியற்கு" ஆயிரம் திருநாமங்களைச் சொன்னாலும் ஏற்றுக் கொள்வார். இறைவன் ஒருவன்தான் என்பது இந்துக்களுக்கும் நன்கு தெரியும். ஆயினும் ஏன் அந்த ஒருவனுக்கே ஆயிரக் கணக்கான பெயர்களைச் சூட்டி மகிழ்கின்றனர்? இதனை சகஸ்ரத் திருமார்ச்சனை என்று கூறுவர். சுப்ரபாதம் என்னும் திருவடிப் புகழ்ச்சி நூலில் இறைவனுடைய பெயர்கள் அணியணியாகவே வருவதனைக் காணலாம்.

நமக்கு நம்முடைய தாய்தந்தையர் இட்டுள்ள பெயர்களும் உண்மையாக நம்முடையதல்ல; இப்பெயர்களைப் பூண்டவர் பலருண்டு. நம்முள் எத்தனையோ ராமன் எத்தனையோ கிருஷ்ணன், எத்தனையோ ஆறுமுகன். இவற்றை நாமே ஏற்றுக்கொண்டபோது இறைவன்மட்டும் ஏற்றுக் கொள்ளாமல் ஒதுக்கிவிடமாட்டார்; இனிமேல் பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கு நாம் இடக்கூடிய பெயர்களும் அக்குழந்தைகளின் சொந்தப் பெயர்களா? இல்லையே அவைகளும் கற்பனைப்

பெயர்கள்தாமே? இதைப்போலவே இறைவனுக்கு நாம் புனைகின்ற பெயர்களும் உருவங்களும் ஆயிரமாயிரமாக இருந்தாலும் இறைவன் ஏற்றுக்கொள்ளுவார். இந்துமதம் இறைவனுக்குப் பல்லாயிரக்கணக்கான பெயர்களையும், உருவங்களையும் புனைந்து புகழ்ந்தாலும் அப் பரம்பொருளுக்கு மூலத் திருநாமம் ஒன்றைச் சேர்த்தே சொல்லுகிறது. அந்த மூலத் திருநாமந்தான் ஓம். இந்த ஓங்காரத்தை நீக்கிவிட்டு இந்துக்கள் எந்தக் கோயிலிலும் அர்ச்சனை செய்வதில்லை.

சக்தி கோயிலாய் இருப்பினும் சிவன் கோயிலாய் இருந்தாலும் அல்லது முருகன், விநாயகன், நாராயணன், இந்திரன், சந்திரன் என்கின்ற எதுவாய் இருந்தாலும் கன்னியாகுமரியிலிருந்து இமாலயம் வரையிலுள்ள இந்துக்களின் கோயில் எதுவாய் இருப்பினும், அக் கோயில்களைக் கட்டியவர்களும் வணங்குபவர்கள் எந்த மொழியினராய் இருப்பினும் ஓங்காரத்தை விட்டு அர்சனையே கிடையாது. உதாரணமாக, வைணவர்கள் ஓம் நாராயணாய நம என்றால், சைவர்கள் ஓம் சிவாய நம என்பார்கள்; கௌமாரர்கள் ஓம் சுப்ரமண்யாய நம என்றும் காணா பத்யர்கள் ஓம் விநாயகாய நம என்றும் கூறுவதை ஆலயங்களுக்குச் சென்ற ஒவ்வொருவரும் உணர்ந்த உண்மையாகும். இறைவன் என்னும் பரம்பொருளினுடைய உண்மையான திருநாமம் ஓம் என்னும் ஒலிதான். இந்த ஒலி அவனுடைய சொந்த ஒலி. அவன் நமக்குத் தந்த ஒலி. இந்த ஒலியின் மகத்துவத்தை உணராத மதம் எதுவாய் இருப்பினும் அம் மதம் இறைவனுடைய பெருமையை உணராத மதமே என்பதில் இம்மியும் சந்தேகமில்லை. மற்றைய மதங்கள் இறைவனை நினைத்து பக்தி செய்யலாம்; இறைவனும் அவர்களுடைய அன்பை ஏற்றுக்கொள்ளலாம். அதை நாம் குறை கூறவில்லை. ஆனால் ஓங்காரத்தின் பெருமையை உணராதவர்கள் கடவுளைக் காணவில்லை; அவர்கள் அனைவரும் ஏதோ ஒரு நம்பிக்கையினால் செய்கின்ற பக்தியே என்பதில் ஐயமில்லை.

பல தெய்வ வழிபாட்டை உடையவர்கள் இந்துக்கள் என்று பிதற்றக்கூடிய பிற மதத்தினர்கள் எந்தத் தெய்வத்தையும் வணங்கும்போது ஓங்காரத்தை முகலில் கூறுவது ஏன் என்பதை உணர்ந்திருந்தால் உளற முடியாது. அவர்கள் மட்டுமல்ல வேத மந்திரங்களை மனப்பாடம் செய்துகொண்டு பெரிய பெரிய வேள்விகளை நடத்துகின்ற பல புரோகிதப் புலிகளுக்கே பெரும்பாலும் புரியாத இரகசியம் ஓங்காரம். பெரும்பாலான

இந்துக்களுக்கே இந்த ஓங்காரத்தின் பெருமை புரியாமல் இருக்கும்போது மற்றவர்களைப்பற்றிப் பேசவேண்டியதில்லை. ஓங்காரமென்பது அடிமரம். பல்லாயிரக்கணக்கான தெய்வத் திருப்பெயர்கள் இதன் கிளைகள். அடிமரத்தை விட்டுக் கிளைகள் வேறல்ல. அடிமரம் இல்லாமல் கிளைகள் தோன்றாது. அடிமரந்தான் ஆணிவேருடையது; இந்த ஆணிவேரான ஓங்காரத்தின் தத்துவத்தை விளக்குவது தாரகயோகம். இதுவே உலகத்தோற்றம் அனைத்துக்கும் மூல ஒலி. இதுவே பரமாத்ம பீஜம். (பீஜம்—வித்து); சத்தத்தின் உள்ளே சதாசிவம் என்று கூறினாள் ஔவைப் பிராட்டி. சக்தியும் சிவமுமாக யாண்டும் நிலைத்துள்ள பொருள் சதாசிவம் என்று கூறப்படுகிறது.

பகவத்கீதையில் "குந்தி நந்தனா! நான் எல்லா வேதங்களிலும் ஓங்காரமாகவும், வானில் ஒளியாகவும் இருக்கிறேன்", என்கிறார் கண்ணபிரான்.

"ஒன்றவே உணர்ந்தீரரகில்
ஓங்காரத்து ஒருவனாகும்."
(அப்பர் தேவாரம்)

"ஆங்காரமும் அடங்கார் ஒடுங்கார் பரமானந் தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்புமறார் தினைப் போதளவும்
ஓங்காரத்து உள்ளொளிக்கு உள்ளே முருகன் உருவுகண்டு
தூங்கார் தொழும்பு செய்யார் என்செய்வார்
எமதூதருக்கே?"
(அருணகிரிநாதர் கந்தரலங்காரம்)

ஓங்காரத் துள்ளே உதித்த ஐம்பூதங்கள்
ஓங்காரத் துள்ளே உதித்த சராசரம்
ஓங்காரா தீதத்து உயிர்மூன்றும் உற்றன
ஓங்காரம் ஜீவ பரசிவ ரூபமே.

ஓம்என்னும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓம்என்னும் ஓங்காரத் துள்ளே உருஅரு
ஓம்என்னும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓம்என்னும் ஓங்காரம் ஒண்முத்தி யாமே.

ஓங்காரி என்பாள் அவள் ஒரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்
ஆங்காரி யாகி ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே இனிதிருந்தாளே

(மேற்காணும் மூன்றுபாக்களும் திருமூலர் திருமந்திரம் தருவது.)

" உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா ! விமலா விடையாக !"

(திருவாசகம்)

இதுபோன்ற சான்றுகள் பெரியோர்களின் நூல்களில் பல உண்டு. விரிவஞ்சி இத்துடன் நிறுத்த நினைக்கிறேன். ஓங்காரத்தைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லப்புகின், பிரம்ம தேவனுக்கே ஓங்காரத்தின் இரகசியம் தெரியாமையினால் முருகப்பெருமானிடம் குட்டுப்பட்டான் என்று கந்தபுராணம் கூறுகிறது. ஆகவே, சப்தகோடி மகா மந்திரங்களுக்கும் தலையாயது ஓங்காரம் என்று கூறப்படுகின்றது. இதனைக் குருமூலமாக உணர்ந்தவர்கள் பாக்கியவான்கள் எனலாம்.

ஓங்காரத்துக்கு நாதப் பிரம்மம், சத்தப் பிரம்மம், ஓரெழுத்து ஒரு மந்திரம், பிரணவம் எனப் பல பெயர்கள் உண்டு. இதற்கு 5 அலகுகள் உள்ளன. அவை, நாதம், பிந்து, அகரம், உகரம், மகரம் என்பனவாகும்.

பிள்ளையார் சுழி

பெரும்பாலும் தமிழ்நூல்களின் தலைப்பில் "உ"—இவ்வாறு இவ்வாறு ஓர் எழுத்திருக்கும். இதைப் பிள்ளையார் சுழி என்று கூறுவர். இது பேசா எழுத்து. மற்றைய எழுத்துக்கள் அனைத்தும் பேசுபவை ; ஒலிகள் நான்கு வகை. 1. சூக்குமை 2. பைசந்தி, 3. மத்திமை, 4. வைகரி என்பனவாகும். சூக்குமை ஒலி தோன்றுவதற்கு ஆதாரஸ்தானம் பிள்ளையார் சுழி என்னும் பேசா எழுத்து. இதைப்பற்றிச் சைவ சித்தாந்த நூல்கள் மிக விரிவாக விளக்குகின்றன. சூக்குமை—நாதம் மாத்திரமாக உள்ளது. பைசந்தி—மயிலின் முட்டையுள் பஞ்சவர்ணங்கள் அடங்கி இருந்தும் வெளிக்குத் தோன்றாமல் உருவாகி இருப்பது. மத்திமை—தனக்குமட்டும் கேட்கக்கூடிய மெல்லொலியாய் இருப்பது, வைகரி—பிறருக்கும் கேட்கக்கூடியவகையில் வாயின்மூலம் வெளிப்படுவது. இந்த வாக்கிற்கும் ஆதாரமாக இருப்பது பிள்ளையார் சுழி. ⌒ இந்த வட்டம் விந்து என்றும்

அதிலிருந்து உ புறப்படும் கோடு நாதமென்றும் கூறுவர். இந்தப் பிள்ளையார்சுழியை அமாத்திரை என்றும் கூறுவர். உந்து சத்தி அமாத்திரை. உந்தியபின் வெளிப்படுவது அகரம். அகரம் குவிந்தால் உகரம். உகரம் அடங்கும் நிலை ம் என்னும் மகரமெய்; அ,உ,ம் என்னும் மூ எழுத்தொலி ஓங்காரமாகும்.

ஒலி முதலில் வெளிப்படும்போது செவிப் புலன்களுக்கு எட்டக்கூடியது அகர ஒலி. அது அடங்குவதற்குக் குவித்து ஒலித்தால் உகரமாகும். அடங்கும்போது மகர மெய்யாக ம் என்று அடங்கும்; இம்மூன்று எழுத்துகளின் கூட்டொலிதான் ஓங்காரம். இந்த ஓங்கார ஒலியை உலகிலுள்ள உயிர்க்கூட்டங்கள் அனைத்தும் இடைவிடாமல் அல்லும் பகலும் செபித்துக் கொண்டிருக்கின்றன. இந்த செபம் நின்றால் உடலை விட்டு உயிர் நீங்கிவிடும்.

" ஓங்காரம் நிலையினிலே மௌனம் என்போம்
உச்சரிப்பில் அதனையே சப்தம் என்போம்
ஆங்காரமாய் விரித்து அணுக்கள் கூடி
அடையும் பக்குவ இயக்கங்கள் ஒக்க
ரீங்காரம் பலவிதமாய் விரியக் கண்டோம்
இரகசியமாய் புல்பூண்டு மரம் மண் கல்லும்
ஊங்கார செபம் அல்லும் பகலும் செய்வது
உணர்ந் திட்டோம் ஓம் என்னும் பழக்கம் விட்டோம்

(வேதாத்ரி மகரிஷிகள்)

இந்த ஓங்கார செபம் நாம் செபிக்காவிட்டாலும் எல்லா உயிர்களிடத்திலும் தனக்குத்தானே செபித்துக்கொண்டிருப்பதனால், இதனை அஜபா மந்திரம் என்பர். அஜபா காயத்ரி என்பதும் இதுவே.

நம்முடைய சுவாசம் நாசியின்வழியாக உள்ளுக்குச் செல்லும்போது ஓ என்னும் ஒலியோடும், வெளிப்படும்போதும் என்னும் ஒலியுடனும் வருகிறது. இவ்விரண்டும் கூட்டினால் ஓம் என்று ஆகிறது' மூச்சு விடுகின்ற உயிர்கள் அனைத்தும் இதை செபித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த உலகம் ஒரு நாடக மேடை. இம்மேடையில் உயிர்களின் இதியாகாசத்தில் சிவபெருமான் சதா நடம் புரிந்து கொண்டிருக்கிறான். உலக உயிர்கள் அனைத்திலும் இத் தாண்டவம் நடந்துகொண்டிருக்கிறது; இதைத்தான் பொது

நடம் என்று இராமலிங்க வள்ளலார் தமது அறிவுக் கண்ணால் அறிந்து ஆனந்தப்படுகிறார்.

" மாதேகேள்! திருப்பொதுவில் நடம்புரியும் பெருமான்
மலரணிந்த பாதுகையில் புறத்தெழுந்த அணுக்கள்
மாதேவர் உருத்திரர்கள் ஒருகோடி கோடி
வாளைப்பிடித்த நாரணர்கள் ஒருகோடி கோடி
போதேயும் நான்முகர்கள் ஒருகோடி கோடி
புரந்தரர்கள் பலகோடி யாகஉருப் புனைந்தே
ஆதேயராகி இங்கே தொழில்புரிவா ரென்றால்
ஐயன் திருவடிப்பெருமை ஆருரைப்பார் தோழி !

(திருவருட்பா)

இந்த ஆண்டவனின் தாண்டவத்தில் இருந்து எழுகின்ற ஒலிதான் ஓங்காரம். இந்த ஆனந்தத்தாண்டவம் எங்கே நடக்கிறது ? சிதம்பரத்தில் ! சிதம்பரம் என்றால் என்ன ? சிச் + அம்பரம்—சிதம்பரம். சித் என்றால் ஞானம் ; அம்பரம் என்றால் ஆகாசம். சிதம்பரமென்பது ஞானாகாசம் என்பது பொருள். இந்த இரகசியத்தை இன்னும் வெட்டவெளிச்சமாக்குவார், இராமலிங்கவள்ளல். வாசி என்றால் சுவாசம், மூச்சி என்பது பொருள். வாசியோகம் என்றால் பிராணாயாம சாதனை என்பதை முன்னமே அட்டாங்க யோகத்தைப்பற்றி விளக்கும் போதும் கூறியுள்ளேன். மறுபடியும் வாசி என்றால் அதன் உட்பொருள் என்ன என்பதை இராமலிங்கவள்ளல் வெளிப் படுத்துகிறார். தன்னை அறிந்தின்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே என்னும் தலைப்பை உடைய பாடலில்,

" வாசி வாசி என்றுரைப்பார் வெண்ணிலாவே !—அந்த
வாசி என்ன பேச்சு கண்டாய் வெண்ணிலாவே !"

வாசி வாசி என்னும் சொல்லைப் பலமுறை சொன்னால் சிவா சிவா என வருகிறது. வாசி என்னும் சொல்லை வலமிருந்து இடமாகப் படித்தாலும் சிவா என வருகிறது. இதைத்தான் வள்ளலார் நமக்கு நினைவூட்டுகிறார். வாசி வாசி என்று சொல்வார் வெண்ணிலாவே ! அந்த வாசி என்னும் சொல்லின் பொருள் என்ன தெரியுமா ? அது சிவா சிவா என்னும் பொருளைத் தருவதுடன் அந்த வாசியின் தாண்டவம் ஓங்காரத் தைப் பேசுகின்றது. சுவாசம் எதைப் பேசுகிறது ? ஓங்காரத் தைப் பேசுகிறது. ஓங்காரம் என்னும் ஒலிக்குள் உலகங்களும்

இவற்றுள் வசிக்கும் உயிர்க் கூட்டங்களும் ஒடுங்கியுள்ளன. வேமன்ன யோகி என்னும் ஒரு ஞானியார் இருந்தார். அவரும் இதை இன்னும் தெளிவாக்கிவிட்டார்.

(இது தெலுங்குப் பாடல்)

" வாயுவந்தே புட்டி வாயுவந்தே பெருகி
வாயுவந்தே தானி வருச தெலசி
வாயுவனக, பிராண வாயுவே சிவுடையா !
விஸ்வ தாபி ராம ! வினுர வேமா !

பொருள் : காற்றினுள்ளே பிறந்து, காற்றினால் வளர்ந்து காற்றின் உதவியினாலேயே அது சஞ்சரிக்கும் சஞ்சாரத்தைக் கவனிப்பாயானால், காற்றென்றால் என்னவென்று நினைக்கிறாய் ? அதுதான் பிராணன். அந்தப் பிராணனே சிவபிரான்—என்று விளக்கியுள்ளார். எல்லா உயிர்களிடத்தும் பேதமின்றிப் பொதுவாக ஆடுகின்ற ஆட்டத்தைப் பொதுநடம் என்று வள்ளல் பெருமான் கூறியுள்ளார்.

சாங்கிய யோகத்தை நன்கு பயின்ற யோக சாதகர்களுக்குக் கேட்கின்ற தசவித நாதங்கள் சிவ தாண்டவத்துக்கு ஏற்றவாறு ஒலிக்கின்ற இன்னிசைகளாகும். ஆக்கைக்குள் தோன்றும் ஒளி வெள்ளங்கள் யோகாக்கினியில் ஏற்றுகின்ற விளக்குகளாகும்.

ஓங்கார பீடத்தில் ஒளிர்கின்ற பாதம்
ஒன்றாய் இரண்டாகி ஓங்கிய பாதம்
தூங்காத தூக்கத்தில் தூக்கிய பாதம்
துரியத்தில் ஊன்றித் துலங்கிய பாதம்—
(அருட்பா)

(தூங்காத தூக்கமென்பது யோக நித்திரை)

சிவம் வேறு வாசி வேறு என்று வாசகர்கள் குழம்ப வேண்டியதில்லை. காற்றுக்குக் கால் என்னும் பெயருண்டு. வாசி என்னும் சிவனுடைய காலைப்பற்றிக்கொண்டால் அவன் நம்மை ஞான மயமான பரவெளியில் கொண்டுபோய்ச் சேர்த்து விடுவான். பிறவிப் பிணி அற்றுப்போகும். மனிதகுலத்துக்கு இந்த உண்மையை உணர்த்திய மதம் இந்துமதம், இந்து மதத்தை அழிக்க நினைப்பவனை மனித சமுதாயம் உணர வேண்டிய உண்மையான நன்னெறிக்கு ஊறு செய்பவன் என்றே கூறவேண்டும். இந்துமதத்தைப் பழித்துத் திரிபவன் விழுப் பொருள் உணராத இழுக்கனென்றே நினைக்கத் தோன்றுகிறது

"ஆதி பரம் பொருளின் ஊக்கம்—அதை
அன்னை எனப் பணிதல் ஆக்கம்
தீதில்லை காணும் இந்த உலகீர் !—மற்றை
தொல்லை மதங்கள் செய்யும் தூக்கம்,"

என்றார் மகாகவி பாரதியார். மற்றும் காலாதீதமாக இருக்கின்ற அசையாத ஞானவெளியில் உண்டான அசைவே ஓங்கார மென்னும் மூலசக்தி என்பதை "ஆதிபரம்பொருளின் ஊக்கம், அதை அன்னை எனப்பணிதல் ஆக்கம்" என்னும் சொற்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. மற்றும் அவர் பேரியக்க சக்தியின்—பெருமையை தன்னை மறந்து பாடும் பாட்டை—கவனியுங்கள்.

"காலமாம் வனத்திலண்ட கோலமா மரத்தின்மீது
காளிசக்தி என்றபெயர் கொண்டு—ரீங்
காரமிட்டு உலவுதொரு வண்டு;—தழல்
காலும்விழி நீலவன்னமூல அத்து வர்க்களெனும்
கால்கள் ஆறுஉடையதெனக் கண்டு—மறை
காணும் முனிவோருரைத்தார் பண்டு
மேலுமாகிக் கீழுமாகி வேறுள திசையுமாகி
விண்ணும் மண்ணுமான சக்திவெள்ளம்......

கால்கள் ஆறு: மந்திராத்துவா, பதாத்துவா, வன்னாத்துவா, கலாத்துவா, தத்துவாத்துவா, புவானாத்துவா என்பன.

"விந்தையெல்லாம் ஆங்கவள்செய் கள்ளம்—பழ
வேதமாய் அதன்முன் உள்ள நாதமாய் விளங்குமிந்த
வீரசக்திவெள்ளம் விழும் பள்ளம்—ஆக
வேண்டும் நித்தம் என்றன் ஏழை உள்ளம்"

என்னும் பாடல் நம் மெய்சிலிர்க்கச் செய்கிறது. மேலுமாகி, கீழுமாகி, வேறுள்ள திசையுமாகி விண்ணும் மண்ணும் ஆன சக்தி வெள்ளமானது ஓங்கார ஒலி. இது வீசும் காற்றிலும், எரியும் நெருப்பிலும், மோதும் அலையிலும், ஒலிக்கும் கடலிலும், ஆடும் உயிரிலும், அடிக்கும் மணியிலும், வெடிக்கும் வெடியிலும், இடிக்கும் மேகத்திலும், உற்றுக் கவனித்தால் ஓம் என்னும் ஒலியை உணரமுடியும். இந்த ஓங்காரமானது உயிர்களனைத்தையும் தாங்கித் தாண்டவமாடுகிறது. அத் தாண்டவ ஒலியைத் தன்னுள் கேட்கச் செய்வதுதான் தாரகயோக சாதனை.

இதை ஸோ ஹம் பாவனை என்பர். ஸோ—பரம்பொருள்; ஹம்—நாம்; ஸோஹம் ஆண்டவனும் நாமும். ஓம் என்னும் ஒலி ஸோஹம் என்னும் பொருளமைந்த ஒலியாகக் கேட்கிறது. "ஒன்றாய் இரண்டாகி ஓங்கிய பாதம்" என்றார் வள்ளலார். இதைக் 'குக மந்திரம்' என்றும், 'ராமதாரக' மென்றும், சிவோகம், பாவனை என்றும் கூறுவர். உடம்பென்னும் குகைக் குள்ளே ஒலிப்பதனால் இதனைக் குக மந்திரம் என்றனர். தன்னுடைய ரகம் இத்தகையதென்று தெரிவிப்பதனால் (தன் ரகம் என்பது) தாரகம் எனப்பெயர் பெற்றது. வாசியோக மென்பதும் இதுவே. தாரக மந்திரம் என்பது இரண்டெழுத்து மந்திரமாகும். இதில் இன்னும் சில மறைப்பொருள்கள் உள்ளன. அவற்றை ஞானாசிரியர்மூலமாகப் புரிந்துக்கொள்ள வேண்டும். ஒரு நூலானது பல மணிகளைச் சிதையவிடாமல் தன்னில் கோத்துக்கொண்டு மணிமாலையாகத் திகழ்வதைப் போல வாசி என்னும் நூல் உயிரினங்கள் அனைத்தையும் தன்னில் கோத்துக்கொண்டிருக்கிறது. இந்த சூத்திரக் கயிறைக் குரு நமக்குச் சுட்டிக்காட்டுவது அசலமார்க்கத்தின் இரண்டாம் நிலை.

முற்கூறிய ஆசன விதிகளில், தாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட முறைப்படி அமரவேண்டும். சாங்கிய யோகத்தில் கூறிய ஷண்முகி முத்திரை தாரக சாதனையில் கிடையாது. கண்களையோ காதுகளையே விரல்களால் மூடவேண்டிய தில்லை. சாதாரணமாகக் கண்களை மூடிக்கொண்டு நாட்டத் தைப் புருவ மையத்தில் வைக்கவேண்டும்.

சாங்கிய சாதனையில் நாடிகள் சுத்தம் ஆகிவிட்டபடியால் நம் சுவாசத்தை விரல்களால் மாற்றவேண்டியதில்லை. சுவாசத்தை விரைவாக உள்ளுக்கிழுப்பதோ வெளியே விடுவதே கூடாது. ரேசக பூரகங்களை எவ்வளவு நிதானமாக நடத்தமுடியுமோ அவ்வளவு நிதானமாக நடத்தவேண்டும். ஆத்திரமோ அவசரமோ இம்மியுமிருக்கக்கூடாது. கும்பகமும் செய்யக்கூடாது (சுவாசத்தை நிறுத்தக்கூடாது); ஆடிக் கொண்டே இருக்கவேண்டும். ஆனால் இந்த மூச்சைக் குரல் வளையத்தின் வழியாக ஆடச்செய்யவேண்டும். அப்படி ஆடச் செய்தால்தான் ஓங்கார ஒலியை நாம் நன்கு கேட்க முடியும். அந்த ஒலியைக் கேட்கவேண்டுமானால் நமது உள்நாவான சிறு நாக்கிற்கு உள்ளே சுவாசத்தை ஆடச் செய்வதுதான் குருநாதர் நமக்குச் சுட்டிக்காட்டும் இரகசியம்.

" தன்நாவில் ஒருவிரலைத் தாண்ட அறியாமல்
சாகரமும் நதிபலவும் தாண்டியலை கின்றார் !
என்னேயிம் மனிதர்மதி என நகைத்து முனிவன்
இனியகந்த முதலனந்த இனம்வகுத்தங் கிருந்தான்."
(மனோன்மணீயம்)

என்கின்றது மனோன்மணீயம். சாதாரணமாக, தற்போது நமக்கு ஆடுகின்ற மூச்சை ஓர் அங்குலம் (ஒருவிரல் என்றது இது) உள்ளுக்குத் தள்ளி ஆடவைத்தால் ஓங்காரமென்னும் அஜபா மந்திரம் தானாகக் கேட்கும். மூச்சை நிறுத்தாமல் நிதானமாக ஆட வைத்தால் ஸோஹம் என்னும் ஒலி நமக்குத் தெளிவாகக் கேட்கும். நாம் அதைச் சொல்லவேண்டியதில்லை ; கேட்டுக் கொண்டிருக்கவேண்டும். அதனால்தான் இதற்கு சொல்லாமல் சொல்லும் மந்திரம் என்னும் பொருளில் " அஜபை " என்று கூறினர்.

கல்லாலின் புடையமர்ந்து
நான்மறை ஆ(று) அங்கம் முதல் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக் கும்
வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லவுமாய்
இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை
நினையாமல் நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்
(திருவிளையாடற் புராணம்)

என்றார் பரஞ்ஜோதியார். ஈற்றடியில் தெரிவிக்கும் " சொல்லாமல் சொல்லுவதும் நினையாமல் நினைப்பதுந்தான்" தாரக மந்திரத்தின் இரகசியம். இந்தச் சாதனை சுழிமுனை என்னும் துவாரத்தைத் திறக்கச்செய்கிறது. நமது சுவாசம் இடது நாசியில் ஓடும்போது சந்திரனில் ஓடுவதாகவும். வலது நாசியில் ஓடும்போது சூரியனில் ஓடுவதாகவும் கூறுவர் தியானத்துக்கும் யோகத்துக்கும் அக்கினி நாடி என்னும் சுழிமுனையில் ஆடினால் மனம் எளிதாக வசப்படும். சுவாசம் சுழிமுனையில் ஆடத் தொடங்கும்போது வலமோ இடமோ அதிகப்படாமல் சம நிலையில் ஆடும். சுவாசத்தை உள்நாவிற்குள்ளே வைத்தால் தான் சுவாசம் சமநிலையில் ஆடும் ; சமநிலையில் ஆடும்போது தான் பிரமாந்திரமென்னும் சுழிமுனையைத் திறக்கமுடியும் ; அதைத் திறந்தால்தான் சமாதிநிலை கைகூடும். இவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்கின்றது.

நாம் மண்ணுலகில் பிறந்ததுமுதல் நமது சுவாசம் நாசியின் மூலம் இடமும் வலமுமாக மாறிமாறி ஆடுகின்றது. நாம் தாயின் கருப்பையில் குழவியாக இருக்கும்போது இச் சுவாசம் நாசித் துவாரங்களில் ஆடுவதில்லை. இது ஆடுமானால் நாசித் துவாரங்களில் நீர் புகுந்து சிசுவைக் கொன்றுவிடும். அப்போது நமது சுவாசம் மூலாதாரத்திலிருந்து சுழிமுனை (இடைநாடி) வழியாக ஸஹஸ்ராரம் என்னும் உச்சிவரையிலும் உள்ளுக்குள் ஆடிக்கொண்டிருந்தது. சிறு குழந்தைகளின் உச்சந்தலையைக் கவனித்தால் இந்த உண்மை நமக்குப் புலப்படும். குழந்தை கருப்பையைவிட்டு வெளிப்பட்டவுடனே அழும். குழந்தை அழுத நிமிடமே பிரம்ம ரந்திரமென்னும் துவாரம் மூடிக் கொள்ளும்; அந்த நேரம் முதல் மூச்சு நாசி வழியாகவும் உள்ளும் புறமுமாக ஆடத் தொடங்குகிறது. நாம் கருப்பையில் இருக்கும் போது நமது மூச்சு எந்த துவாரத்தில் ஆடிக்கொண்டிருந்ததோ அந்தக் கபாடத்தை யோகி திறக்கிறான். அந்தத் துவாரத்தைத் திறப்பதற்காகத்தான் கும்பக சாதனையையும் யோகி பின்பற்றி னான். இட கலை இடது நாசியில் ஆடும் சுவாசம். பிங்கலை வலது நாசியில் ஆடும் சுவாசம்; இந்த இரண்டிலும் சுவாசத்தை ஆடவிடாமல் கும்பித்தால் சுழிமுனை என்னும் இடைநாடியில் சுவாசம் நுழையும். அதற்காகவே பிராணாயாமம் என்னும் கும்பகத்தையும் யோகிகள் கையாண்டனர்.

தாரக சாதனைக்குக் கும்பகம் அவசியமில்லை. காரணம், நமது சுவாசம் ஒரு மணி நேரத்துக்குச் சுமார் 900 முறை ஆக்கைக்கு உள்ளும் புறமுமாக உலாவுகிறது. இந்த ஒன்பது நூற்றை 24ஆல் பெருக்கினால் 21600 என்று வருகிறது. ஒரு நாளைக்கு நமக்குள் ஆடும் சுவாசத்தின் கணக்கு இது என்றால், நமது மூச்சு ஒரு நாளைக்கு 21600 தரம் ஓங்காரத்தைத் தனக்குத் தானாகவே ஜெபித்துக்கொண்டிருக்கிறது. தாரக சாதனையைச் செய்யும்போது சுவாசம் நிதானமாக ஆடுவதால் கும்பகம் அதிலேயே அமைந்துவிடுகிறது. உதாரணமாக, சுவாசம் உள்ளுக்குச் செல்லும்போது 5 விநாடிகள் என்று வைத்துக்கொள்வோம்; அதேபோல வெளிப்படும்போதும் 5 விநாடிகள் ஆக மொத்தம், 10 விநாடிகளுக்கு ஒரு மூச்சு செலவாகிறது. இந்தக் கணக்கின்படி ஒரு நிமிடத்துக்கு 6 மூச்சுகள் செலவழிக்கிறோம். 60 நிமிடங்கள் கொண்டது ஒரு மணி என்பதனால், 60 × 6ஐப்பெருக்கினால் 360 சுவாசங்கள் மட்டும் கழிகின்றன. மிச்சம் 900—ல் 540 சுவாசங்களின் காலம் கும்ப கத்தின் காலமாகும். தாரக சாதனையில் மூச்சு உள்நாவிற் குள்ளே குரல்வளையத்துள் ஆடுவதனால் அது நேரடியாக நடு

நாடியைத் தாக்குகிறது. உலகத்தில் நாம் பிறந்தவுடன் மூடப் பட்ட கபாடத்தை முட்டித்திறக்கின்ற யோகம் தாரக யோகம். இந்த யோகம் சொல்லளவில் புரியாது; சாதகர்களுக்குப் புரியும்.

நடுநாடியில் சுவாசம் ஆடும்போது உலகங்கள் அனைத் தையும் இயங்கிக்கொண்டிருக்கும் ஓங்கார ஒலியைக் கேட்டுக் கொண்டே அதில் லயமாவதுதான் தாரக யோக சாதனையாகும். ஆக, உடல் தத்துவத்தை, சாங்கிய யோக சாதனையும், உயிர்ப்பின் தத்துவத்தைத் தாரகயோகமும் விளக்குகின்றன. இனி அடுத்த சாதனை என்னும் குண்டலியோகத்தைப் பற்றியும் சிறிது கூறுகிறேன் :

குண்டலி

அசலமார்க்கத்தில் சாங்கிய தாரகமென்னும் இரண்டு சாதனைகளையும் போதித்தபிறகு, குண்டலி என்னும் சாதனை போதிக்கப்படுகிறது. இந்தக் குண்டலியை அமனஸ்கம் என்று கூறுவர். அ + மனஸ்—அமனஸ். மனம் அற்ற நிலை.

"மாத்திரைப் போதும் நில்லாத மனத்தை
மடக்கிப் பிடிப்பது குண்டலியாம்."

குண்டலியோகம் மிகக் கடினமான யோகமாகும். இது அட யோகத்திற்குச் சம்பந்தப்பட்டது. இந்த யோக சாதகர்களுக்கு முக்கியமாக ஒரு தனி அறை இருக்கவேண்டும் என்பதை முன்னமே கூறியுள்ளேன். குண்டலியோக சாதகர்களுக்கு நிலவறை இருந்தால் மிகவும் நலமாகும். வெளியுலக ஒலிகளும் கேட்காத இடமாக இருக்கவேண்டும். பண்டைய நாட்களில் குண்டலியோகத்தை சாதிப்பதற்காக ஊருக்குப் புறம்பான மலை களிலும், வனங்களிலும், குகைகளிலும் அமைதியான மடங் களிலும் இருந்து இந்த யோகத்தைப் பழகினார்கள். அருகா மையில் மக்கள் குடியிருக்கின்ற இடத்தில் இதைப் பழகுதல் முடியாது. அப்படிப் பழகவும் கூடாது. இந்த யோகத்தைப் புத்தகத்தளவில் குருவில்லாமல் தொடங்கக்கூடாது ! தொடங்கி விட்டால் சில சமயம் தொல்லைகள் நேரக்கூடும்.

குண்டலி யோகத்துக்குப் பல விதிமுறைகள் உள்ளன. அவ் விதிகளின்படி நடந்துகொள்ளவேண்டும். ஆசிரியன் அனுமதி இல்லாமல் ஆரம்பித்துவிட்டால் ஆபத்திலும் முடியநேரும். இதை சாதிக்க விரும்புவோருக்கு இளமை, வலிமை, ஆர்வம், கட்டுப்பாடு இவை நான்கும் அவசியமாகும். இவ்வளவு கடின மான யோக சாதனை நமக்குத் தேவைதானா என்று ஒரு சிலர்

கருதக்கூடும். உழைக்காமல் ஊதியம் கிடைக்காது. எளிதாகக் கிடைத்துவிடும் என்று கூறுவதும், நினைப்பதும் ஏமாற்று வித்தை, அதுபோல் யோக சாதனை என்பது ஏமாற்று வித்தையல்ல. உழைத்தால்தான் உண்மை விளங்கும். உண்மையை உணரவேண்டும் என்னும் ஆர்வம் உள்ளவர்களுக்கு உழைப்பு கடினமாகத் தோன்றாது. உற்சாகமாகவே இருக்கும். சோம்பேறி, சொல்லும்போதே பயந்துவிடுவான். குண்டலி யோகம் சோம்பேறிகள் செய்வதல்ல; ஆற்றல் உடைய அறவாளிகள் சாதிப்பது.

ஆக்கைக்கும், மூச்சுக்கும், மனதுக்கும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புண்டு. உதாரணமாக, உடம்புக்கு ஏதேனும் நோய் வந்தால் மனமும் சோர்வடைகிறது. உடம்பு நலமாக இருந்தால் மனமும் உற்சாகமாக இருக்கும். உயிர்ப்பு அளவுக்கு மீறி வெளிப்பட்டாலும் அல்லது அடைபட்டாலும் மனம் தத்தளிக்கின்றது. ஆகவே மனம் உடலோடும், உயிர்ப்போடும் நெருக்கமாக உறவை வைத்துக்கொண்டிருக்கிறது. இந்த நெருக்கங்களுக்குள் இடைவெளிகளைக் காணமுயலுவதே குண்டலி யோகம். உடலின் தடிப்பை வாட்டி, உயிர்ப்பின் வேகத்தைக் குறைத்து, மனத்தின் துடிப்பை அடக்கி ஆன்ம நிலை என்ன என்பதை அறியமுயலுவது குண்டலி யோகம்.

பயிற்சி முறைகள்

இடது குதிக்காலை குதத்தில் அழுத்தி, வலது காலை இடது தொடையின்பேரில் வைத்து உட்காரவேண்டும். சாங்கிய யோகத்தில் குறித்தவண்ணம் ஷண்முகி முத்திரையோடு நாவை மடித்து, நுனி நாவை அண்ணத்தில் செருகவேண்டும். நாம் உட்காரும் இடத்துக்கும் எதிரில் உள்ள சுவருக்கும் சுமார் 9 அங்குலமேனும் இடைவெளி இருக்கவேண்டும். தலையை சுவரில் முட்டுவதற்கேற்ற நிலையில் உட்காரவேண்டும். சுவரில் தலையை முட்டுக்கொடுக்க ஒரு சிறு சும்மாடு இருப்பதும் நல்லது. தலையைச் சுவரில் முட்டியபின் சாங்கிய யோகத்தில் செய்ததைப்போலவே சுவாசத்தை விரைவாக இடம் வலமாகவும், வலம் இடமாகவும் மாற்றிமாற்றி வாசியை வாசிக்கவேண்டும். மனம் குரு கூறியுள்ள மூன்றெழுத்து மந்திரத்தையும், புருவ மையத்தில் பார்வையையும், ஆக்கைக்குள் கேட்கும் ஒலிகளையும் மறவாமல் இம்மூன்றிலேயே வட்டமிட்டுக்கொண்டிருக்கவேண்டும். இந்தச் சாதனையைக் காலை மூன்று மணிக்குமேல் ஆறுமணிக்கு உள்ளாகக் குறைந்து இரண்டு மணி நேரமாகிலும் செய்யவேண்டும். இரண்டு மணி நேரமும் தொடர்ச்சியாகச் செய்யக்கூடாது. அவ்வப்போது

சிறிது ஓய்வெடுத்துக்கொண்டு பழகவேண்டும். அவ்வோய்வு நேரத்திலும் ஷண்முகி முத்திரையை விலக்காமல் ஒலிகளையும், ஒளிகளையும் அமைதியாக நோக்கவேண்டும். ஓய்வு பெறும் போதுமட்டும் நிமிர்ந்து உட்காரலாம்.

உணவு

பயிற்சி செய்யும் நாட்களில் பாலும் பழமும் தவிர வேறு எதையும் உட்கொள்ளக்கூடாது. அதுவும் மிதமாக இருத்தல் வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு வேளைமட்டுமே உட்கொள்ள வேண்டும். இந்தக் கருத்தில்தான் பெரியோர்கள் யோகிக்கு ஒரு வேளை; போகிக்கு இருவேளை யென்றும் கூறினார்கள் போலும்.

பயிற்சி தீவிரமாகச் செய்யும்போது குண்டலிசக்தி என்னும் அடித்தளம் சீறி எழும். ஒரு பாம்பாட்டி கூடையில் அடைத்து வைத்திருக்கின்ற பாம்பைத் தொட்டால் அது எப்படிச் சீறி எழுந்து படமெடுக்குமோ, அதைப்போலக் குண்டலி என்னும் உந்து சக்தியும் சீறி எழும். அந்தச் சமயத்தில் உடல் அதிர்ச்சியினால் கீழே சாயாமல் இருக்கத்தான் தலையைச் சுவரில் முட்டிவைப்பது. சில சமயங்களில் மயக்கமும் உண்டாகும். உணவு குறைக்கப்பட்டதனால் உடல் இளைப்பு, வாசியை முடுக்கிவிட்டதனால் உழைப்பின் அலுப்பு, என்பவை சேர்ந்து மனத்தையும் ஒரு நிலைக்குக் கொண்டுவரும் இந்தச் சாதனைதான் குண்டலி யோக சாதனை. இதனைக் குறைந்தது ஒரு மண்டலமாயினும் சாதிக்கவேண்டும். இவ்வாறு சிரத்தையோடு சாதித்த சாதகர்களுக்கு ஏற்படும் அனுபவங்களைக் கூறுவது சொல்லளவல்ல. அது செயலளவைப் பொருந்தியதாகும். குண்டலி யோக சாதகனுக்கு யோகாக்னி எனபது அதிகப்படுவதனால் அதைத் தணிப்பதற்கு யோகப் பயிற்சி முடித்த பிறகு குளிர்ந்த நீரில் நீராடவேண்டும். இந்த நியதிகளில் தவறிழைத்தால் சாதகன் நோய்வாய்ப்படநேரும். ஆகவே இந்த யோகப் பயிற்சியை ஞானாசிரியரும் சிந்தித்துக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்றவகையில் சிரத்தையோடும் நடந்துகொள்வானா என்பதையும் அறிந்தபிறகுதான் குண்டலியோக சாதனையைத் தருவார். வயோதிகர்களோ நோயாளிகளோ சோம்பேறிகளோ இச்சாதனையைச் சாதிக்கமுடியாது. முயன்றாலும் பயன் கிட்டாது. அசல மார்க்கத்தில் நடுநாயகமாகக் கருதப்படும் குண்டலி யோக சாதனை கடினமானதென்பதில் ஐயமில்லை. ஆனால் இதில் தோன்றும் அனுபவங்களுக்கும் ஈடு இணையில்லை.

ஒரு சிலர் குண்டலி சக்தியை எழுப்புவதற்கு எளிய முறை இருப்பதாகக் கூறுகின்றனர். அவ்வாறு இருப்பின் அம் முறையை மறுத்தலின்றி வரவேற்கவேண்டியதே. அது ஒரு வரப்பிரசாதமென்றே கருதவேண்டும். நமது வாசியை வசப் படுத்துவது இலேசான காரியமல்ல. மிகப் பக்குவமாகப் பழகக் கூடியவர்களால்தான் முடியும். இதனிடத்தில் முரட்டுத்தனத் தைக் காட்டினால் நம்மை உதைத்து உடலையே உருட்டிவிடும். ஆகவே இந்தக் குண்டலி யோகசாதனையில் வெற்றி பெற்ற வர்கள் சிலர்; தோல்வியுற்றவர்கள் பலர் எனலாம். அடுத்தது தர்ப்பண பாவமென்னும் சச்சிதானந்த சாதனையாகும். அதைப்பற்றியும் சிறிது கூறிவிடுகிறேன் :

4. சச்சிதானந்த யோக சாதனை.

சத்து—அழிவற்றது ; சித்து—ஞானமயமான ஒளியுள்ளது ; ஆனந்தம்—இன்பமயம். சச்சிதானந்தம் — நிலையான அறி வின்பமயம் என்பது இதன் பொருள். இந்தச் சாதனையை தர்ப்பண பாவம் என்றும் கூறுவர். தர்ப்பணம் — கண்ணாடி. பாவம் — அறிதல் (பாவித்தல்) ; இது ஒரு சிறந்த எளிய முறை. யோக முறைகளிலேயே இது மேலானது. இந்த எளிய முறையை இராமலிங்க சுவாமி இளமையிலேயே அறிந்திருக் கிறார்.

அடிகளார் பள்ளிப்படிப்பை நிறுத்திப் பிறகு ஒரு தனி அறையில் சுத்தமான நிலைக்கண்ணாடியின் முன்னர் ஒரு விளக் கேற்றி வைத்துவிட்டு, அதன் எதிரில் உட்கார்ந்துகொண்டு அக் கண்ணாடியைப் பார்த்தவண்ணம் தியானத்தில் இருப் பாராம். அத்தருணம், ஆறுமுகங்களோடு கூடிய சுப்ரமண்யக் கடவுள் காட்சி தந்து உண்மை ஞானத்தை உணர்த்துவாராம். இவ்வாறு அவருடைய வரலாறு கூறுகிறது. எனது குருநாதர் உணர்த்தியபிறகுதான் எனக்கு இதன் முக்கியத்துவம் புரிந்தது. சுப்ரம் — பரிசுத்தம், தூய்மை ; மண்யம் — ஒளிமயம். சுப்ரமண்யம் — பரிசுத்தமான ஒளிப்பிழம்பு. ஆறுமுகம், அறுவித சமயத்தோர்க்கும் அறுமுகச்சாமியாகி செறிபரப்பிரம்மம் தானேயான ஒருவன் யாரோ அவனே உண்மைப் பரம்பொருள். ஆகவே, 1. மூலாதாரம், 2. சுவாதிட்டானம். 3. மணிபூரகம் 4. அநாகதம். 5. விசுத்தி. 6. ஆக்னேயம் என்னும் ஆறு ஸ்தானங்களிலும் தானேயாக அமர்ந்துள்ள ஒருவனே ஆறுமுக னாகும், இதனை அருணகிரிநாதர் "ஆதியொடு அந்தம் ஆகிய நலங்கள் ஆறுமுகமென்பதறியேன்," என்று பாடினார். இந்த ஆறுமுகக் கடவுளைக் கண்ணாடியின்மூலம் கண்டவர் வள்ளலார் பெருமான்.

சாங்கிய யோக சாதனையும் குண்டலியோகமும் கிட்டத் தட்ட ஒரே இனம். அதேபோல தாரகயோகமும் சச்சிதானந்த யோகச் சாதனையும் ஒரு இனம். இரண்டுக்கும் அதிகமான மாற்றங்கள் இல்லை.

தாரக யோகத்து மந்திரமே தர்ப்பண யோகத்துக்கும் கூறப் படுகிறது, தாரகத்தில் கண்களை மூடிப் புருவ மையத்தில் பார்வை வைத்தல்வேண்டும். தர்ப்பண யோகத்தில் கண் களைத் திறந்துகொண்டு கண்ணாடியில் பார்வையை வைத்தல் வேண்டும். வாசியைமட்டும் தாரகத்தில் கூறியதைப்போல அமைதியாக நடத்தவேண்டும்.

வள்ளல் பெருமான் கண்ணாடியை உற்றுநோக்கவில்லை. கண்ணாடியில் தோன்றும் தன் கண்ணின் கருமணிக்குள் விளக் கொளியின்மூலம் ஊடுருவிச் சென்றார். எந்தக் கண்ணொளி யானது வெளி உலகங்களைப் பார்க்கின்றதோ அந்தக் கண் ணொளியைக் கொண்டே கண்ணின் உள்ளே நுழைந்து "காண்பானைக் காண்பது," தர்ப்பண பாவமென்னும் சச்சி தானந்த சாதனை. பிறவிப் புண்ணியமுடையவனுக்குத்தான் இந்தச் சாதனை வாய்க்கும்.

"நேத்திரத் துட்சென்று ஆத்துமத் தன்மையின்
நிலையை உணர்த்துதல் தர்ப்பண மாம்"

—இந்தச் சாதனையின் பெருமையைச் சொல்லிமுடியாது. "தன்னை யறிந்தின்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்லவேண்டும்," என்று பாடினாரே அந்தத் தந்திரம் எது? என்றால், தர்ப்பண பாவந்தான் அத் தந்திரம். யோக முறை களைக் கண்டுபிடித்த மகான்களின் பெருமையை வாயார வாழ்த்த வார்த்தைகள் கிடைக்கவில்லை. இது மனித சமூகத் துக்குப் பாரத மாதா தந்த ஒப்புயர்வற்ற பரிசாகும். வள்ளலார் ஒளிவுமறைவென்பதில்லாமல் தான் பெற்ற பேற்றை அருட் பாவில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். இந்த உண்மையை அவருடைய சிஷ்யர்களே அறியவில்லை. அதனால்தான் அவருடைய வரலாற்றில் இதைத் தெளிவாக விளக்கவில்லை. எனது குருநாதர் திருவருட் துணையால் இந்த யோக முறையை உணரப் பெற்றேன். இது உபதேச முறையாகும்.

"என் கண் மணியுள் இருக்கின்றாய் உன்
தன்னைக் காணவே
என்னதவம் செய்தேன் முன் அயனும்
அரியும் நாணவே"

என்று "எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ," என்ற பாடலில் கூறியுள்ளார்.

திருவாசகத்தில் மணிவாசகப் பெருமானார்

"அண்ணா மலையெம் அண்ணா ! போற்றி
கண்ணார் அமுதக் கடலே ! போற்றி"

என்று பாடியுள்ளார்.

குமரகுருபர சுவாமிகள்

"கண்ணிரண்டின் உள்ளே
கருணைத் திருவடிவாய்ப்
புண்ணியமாய் நின்ற பூவையே,"

என்று பாடியுள்ளார்.

ஒரு ஆந்திரயோகி தெலுங்கில்

"நேத்ரத் துவாரமு நந்து வெலிகடி
சூத்ர தாரிணி கான லேகனு
மூத்ர கொம்பலோ முனுகிசெடுதுரு
க்ஷேத்ர முலகுபோதுரே மன்னா"

பொருள் : கண்ணின் கருமணியின் துவாரத்துக்குள்ளே ஒளிவீசிக்கொண்டிருக்கும் சூத்திரதாரியான இறைவனைக் காணத் தெரிந்துகொள்ளாமல் மூத்திரக் குழியில் மூழ்கிக் கொண்டிருக்கிறீர்கள். மற்றும் இறைவனைக் காணப் பலப்பல தலயாத்திரைகளைச் சென்று அலைகிறீர்கள். உங்களுடைய அறியாமையை என்ன சொல்வது என்று வருந்திப் பாடியுள்ளார்.

ஞானேந்தியங்களுக்குள் ஆன்மாவுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளது. நேத்ரேந்திரியம். மற்றும் இது ஒளிமயமானது. ஆன்மா விழிகளின்மூலம் கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள நட்சத்திரங்களையும் காணும் பெருமை பெற்றிருக்கிறது. இந்த விழியின் ஒளியின்மூலமே ஆன்மா எங்கிருந்து கொண்டு எப்படிப் பார்க்கிறதென்பதனை அதைக்கொண்டே அதைப் பார்ப்பது சச்சிதானந்த யோகம். இதுவே உள் வெளியைப் பார்க்கும் உபாயமாகும். இந்த உள்வெளிதான் ஞானாகாசம். சிதாகாசம் என்பதும் இதுவே. தாம் இதுநாள்வரையிலும் கற்றதை எல்லாம் எந்த இடத்தில் சேர்த்து வைத்திருக்கிறோமோ அந்தக் களஞ்சியம் இருக்குமிடம் ஞானவெளி என்னும் சிதாகாசம். இதனை இராமலிங்க சுவாமிகள் உள் வெளி என்று கூறுகிறார்.

வெண்பா

இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது மற்று
என்றுவருமோ அறியேம் எம்கோவே—துன்று மல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம்.

—திருவருட்பா

சிதம்பர இரகசியம் என்பதும் இந்த இடமே. இந்த இரகசியத்தை ஸ்தூலநிலையில் தில்லையில் ஆலயமாக நமது பெரியோர்கள் அமைத்துக் காட்டியுள்ளனர்; இது ஆக்கையின் உள்ளமைந்த இரகசியமாகும்.

5. பரிபூரணம்

சாங்கிய, தாரக, அமனஸ்க, சச்சிதானந்தம் என்னும் நான்கு சாதனைகளையும் செய்ததின் முடிவை விளக்குவது பரிபூரணம் என்னும் போதம். எள்ளில் எண்ணெயைப்போல், எண்ணெயில் நெருப்பைப்போல், உடம்பில் உயிரைப்போல் உலகமனைத்தும் தன்னில் அடக்கிக்கொண்டு இடைவெளி என்பதின்றி நிறைந்துள்ள அசைவற்ற பொருளை சுட்டாமல் சுட்டி உணர்த்துவது பரிபூரணம் என்னும் நிலையாகும்.

நாம் காணும் பெருவெளியில் எண்ணற்ற அண்டங்கள் இயங்குகின்றன. இவற்றை யெல்லாம் இயக்குகின்ற சக்திக்குப் பராசக்தி என்றும் பேரியக்க சக்தி என்றும் ஆதிசக்தி என்றும் கூறுவர். இந்த ஒப்பற்ற சக்தி இப் பெருவெளியில் தோன்றி, தோன்றின வெளியிலேயே அடங்கும். இப் பெருவெளி பரவெளியிலடங்கும். இதனைத் தாயுமானார்

"பெரு வெளியாய் ஐம்பூதம் பிறப்பிடமாய்
பேசாத பெரிய மோனம்
வருமிடமாய் மனமாதிக் கெட்டாத
பேரின்ப மயமாய் ஞானக்
குருவருளால் காட்டிடவும் அன்பரைக்
கோத்றவிழுங்கிக் கொண்டப்பாலும்
தெரிவரிதாய்க் கலந்த தெந்தப் பொருள்
அந்தப்பொருளினை நாம்சிந்தை செய்வாம்"

—(பொருள் வணக்கம்-3.)

—இவ்வாறு கூறியுள்ளார். இதனைத் திருமூலர்,

"வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே."
—(திருமந்திரம்)

வெளியில் வெளிபோய் விரவல், ஞான வெளியும் பரவெளியும் ஒன்றாதல்; அளியில் அளிபோய் அடங்குதல்—பேரருளும் உயிரிரக்கமும் ஒன்றாதல்; ஒளியில் ஒளிபோய் ஒடுங்கல் பேரொளியம் ஆன்மப் பிரகாசமும் ஒன்றாதல். இந்த உண்மையை உணர்ந்தவர்களே சிவஞானிகள் என்று கூறியுள்ளார்.

உள்வெளியும் பரவெளியும் பேதமற்று ஒன்றென்று உணர்ந்த இடம் பரிபூரணம். இதுவே தெளிநிலை. இறைவனைப்பற்றி ஆராய்வதற்கு 6 துறைகள் இந்து மதத்தில் கூறப்பெற்றுள்ளன. 1. வேதம். 2. ஆகமம். 3, கலை ஞானங்கள். 4. நாத ஆராய்ச்சி (ஓம்). 5. யோக நெறி. 6. உபதேச முறை என்பவைகளாகும். இவற்றின் அந்தத்தில் விளங்குவது தெளிவென்று கூறினர். இவற்றை முறையாக வேதாந்த, சித்தாந்த, கலாந்த, நாதாந்த, யோகாந்த, போதாந்தம் என்று ஆறு நெறிகளில் ஆராய்ந்த ஆன்றோர்களின் பெருமையை நம்மால் அளந்தறிய முடியாது. இந்த ஆறு அந்தங்களின் முடிவில் உள்ளது அமைதி என்னும் தெளிவு (சந்தேகமற்ற நிலை); ஞானம் என்பதும் இதுவே. தெளிந்தவன் ஞானி; தெளிவற்றவன் அஞ்ஞானி.

அசல மார்க்கத்தில் பரிபூரணம் என்பது தெளிநிலையாகும். இந்த உண்மையை உணர்த்த ஞானாசிரியர்கள் உபநிடதத்தில் மூன்று சொற்றொடர்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இவற்றை மந்திரங்கள் என்பர். மூன்று 16 எழுத்துக்களை உடைய சொற்றொடர் (ஸோடஸாட்க்ஷரி மந்திரம்). மற்றொன்று 15 எழுத்துக்கள் அமைந்தது. பஞ்சதசாட்சரி மந்திரம்; இன்னொன்று 12 எழுத்துக்களின் சொற்றொடர். இதைத் துவதசாட்சரி மந்திரம் என்பர். மேற்கூறிய மூன்று சொற்றொடர்களின் கருத்துக்கள்.

1. ஸோடஸாட்சரி : ஆக்கைகள் முதற்கொண்டு அகிலங்கள் அனைத்தும் மூலம் இல்லாத இடத்தில் தோன்றியவை;

2. பஞ்சதசாட்சரி : கனவில் தோன்றும் தோற்றங்களைப் போல.

3. துவாதசாட்சரி : நிலைத்திருப்பது பரவெளி ஒன்றே, மற்றவை அனைத்தும் மறைந்து போகும்.

உதாரண வெண்பா

உதியாது உளதாகி ஓங்கிப் பேராமல்
அதிசூக்குமம் குறைந்த தாகாமல்—பதையாத
ஆகாயமும் காலும் போல அசைவற்ற
தேகாண் பரி பூரணம் ''

—(ஒழிவிலொடுக்கம் 25)

பொருள் : உற்பத்தியாகாமல் எக்காலமும் உள்ளதாய், கருவிகரணங்களுக்குக் காணமுடியாததாய், போக்குவரவற்றதாய், நுண்ணிய பொருள்களுக்கெல்லாம் நுண்ணியதாய், குறைவதும் வளர்வதும் இல்லாததாய், முடிவு காலத்தில் காற்றானது ஆகாயத்தில் அசைவற்று நின்றால் எப்படியோ அப்படியே அகிலங்கள் அனைத்தும் பரிபூரணமாகிய பரவெளியில் மறைத்து போகும்.

காற்று அசையாதபோது ஆகாயம்; அசைந்தால் காற்று ஆகாயத்துக்கு முதலும் முடிவும் கிடையாது. இது தோன்றவுமில்லை; மறைவதுமில்லை. இது அசைவற்ற பெருவெளி. இந்தப் பெருவெளியில் மண், நீர், நெருப்பு, காற்று என்பவை தோன்றி முடிவில் ஒன்றில் ஒன்று இலயமாகி மறைந்துவிடும். உதாரணமாக, மண் யுகாந்த காலத்தில் உப்பு நீரில் கரைவதைப் போல கரைந்துவிடும். நீர் நெருப்பில் சுண்டிவிடும். நெருப்பு காற்றில் அணைந்துவிடும். காற்று ஆகாயத்தில் அலைந்து அலைந்து ஓய்ந்துவிடும். அப்போது ஆகாயம் அசைவற்று பரிபூரணமாக இருக்கும். இந்த ஆகாயம் மனத்தில் மறையும். மனம் ஆன்மாவில் மறையும் (ஜீவாத்துமா). ஆன்மா பரமாத்மாவில் ஐக்கியமாகும். இதுவே இறை நிலையாகும்.

இந்த உண்மைகளை உணருவதற்குத்தான் யோக சாதனை என்று பெயர். நமது தாயின் மதம் இவற்றை விஞ்ஞான பூர்வமாக விளக்குகின்றது. இந்த யோக முறைகளைப் பரத கண்டத்தைத்தவிர பிற இடங்களில் தோன்றிய மதங்கள் விளக்கவில்லை. இந்து மதம் வெறும் கதைகளும் கட்டளைகளும் கொண்டது அல்ல. தன்னிகரற்ற தத்துவங்களை ஆராய்ந்து தரணிக்கு வழங்கியுள்ளது.

இதுவரையிலும் யோகத்தைப்பற்றி யான் விளக்கியுள்ளது மட்டும் முடிவானதல்ல. யான் விளக்கியது அசல மார்க்கத்தினர் பயிற்சி செய்கின்ற துறை. யோகத்தைப்பற்றி இன்னும் பல துறைகள் இருக்கின்றன. அவற்றில் பயிற்சி முறைகளில் சிற்சில மாற்றங்கள் உண்டு. அவற்றை அவ்வழி வந்தவர்களின் மூலம் அணுகி அறிதல் நலம். உதாரணமாக,

ஏற்றி இறக்கி இருகாலும் பூரித்து
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை ;
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்கு
கூற்றை உதைக்கும் குறியது வாமே.

என்னும் திருமூலர் கூறுவதில் சிறு மாற்றம் இருக்கிறது. இதுவும் மிக உத்தமமான உயர்ந்த முறையாகும் ; இவற்றைக் கற்றாரை அணுகிக் கற்பது நலமாகும்.

4. ஞானம்

இதுவரையில் தாய் மதத்தினுடைய கருமம், பக்தி, யோகம் என்னும் மூன்று நிலைகளைப்பற்றிக் கூறியதுடன் எனது குருநாதர் எனக்கு போதித்திருந்த யோகசம்பந்தத்தைப் பற்றியும் அவற்றால் தோன்றிய அனுபவங்களையும் என் சிற்றறிவுக்கு எட்டியவாறு விளக்கினேன். இனி நான்காவது நிலையான ஞானம் என்றால் என்ன ? அந்த ஞானிகள் நமக்குத் தெரிவித்துள்ளவை யாவை ? அவற்றையும் இனி சிறிது ஆராயலாம் :

உயிருள்ளபோதே உண்மையை உணர்ந்தவர்கள் ஞானிகள். அவர்கள் மக்களிடத்தில் வைத்த இரக்கத்தினால் தாம் உணர்ந்த உண்மைகளை உலக மக்களுக்கும் உரைத்துச் சென்றனர். நாம் யார் ? இறைவன் யார் ? நமக்கு ஏன் இறைவன் தோன்றவில்லை? இறைவனைத் தோன்றவொட்டாமல் மறைப்பது எது? அம்மறைப்பை எப்படி நீக்குவது ? என்பவற்றை அறிவுக்குப் பொருந்துகின்றவகையில் விளக்கிச் சென்றுள்ளனர். இவர்களே ஞானிகள்.

இந்த உத்தமர்களின் அறிவுரைகளை சிலவற்றையும் பார்க்கலாம். சரியை, கிரியையோகம் என்பவற்றை விளக்கியவர்களும் ஞானிகளே. ஆனால் இவை ஞானமார்க்கத்தின் படிகள். ஞானம் என்பதை நாலாம் பாதம் (பதம்) என்பர். இவற்றைத் தாயுமானார் சரியையை அரும்பாகவும், கிரியையை மலராகவும், யோகத்தைக் காயாகவும், ஞானத்தைக் கனியாகவும் உருவகித்து,

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனிபோல் ஆம்பராபரமே"

என்பார்; இவ்விஷயத்தை முன்பும் நினைவூட்டியுள்ளேன். ஆகவே ஞானிகள் நமக்கு முடிவாகத் திரட்டிக்கூறும் கருத்து என்ன என்பதைமட்டும் தற்போது சிறிது ஆராயப் போகிறோம் :

பதிபசு பாசம் மூன்றும்
பகுத் தறிந்தவரே முத்தர் ;
பதி ஒன்றும் பற்றா தாகும் ;
பசு ஒன்றை பற்றி நிற்கும்
பதிமுகம் தோன்றா வண்ணம்
மறைப்பது பாச மாகும்
பதிகுரு வான ஞான்று
நீங்மப் பாசந் தானே.

— (சிவஞான வள்ளல், பக்கம். 21)

பொருள் : பரம்பொருள் என்பது எது? உயிரினங்கள் என்பவை யாவை ? உயிர்களைப் பற்றிக்கொண்டுள்ள பாசம் எது ? என்பவற்றையும் நன்கு அறிந்த மகான்கள் யாரோ அவர்கள்தாம் மோட்சம் இன்னது என்பதனை உயிருள்ள போதே அறிந்துகொண்ட முத்தர்கள்.

பதி என்னும் பரம்பொருள் பற்றற்றது. பசு என்னும் உயிரினங்கள் யாதேனும் ஒன்றைப் பற்றிக்கொண்டிருக்கும். இவ்வுயிரினங்களுக்குப் பரம்பொருள் இதுதான் என்று தோன்றாத வண்ணம் மறைத்திருப்பது எதுவோ அதுவே பாசம். இவற்றை இறைவனே குருவாக வந்து அருள்புரியும்போது பாசம் நீங்கி விடும். பாசத்தை நீக்கிப் பரமனைப் பார்த்தவன் முக்தன் ; மற்றவன் பெத்தன், பித்தன் என்று கூறலாம்.

இவரே இன்னும் ஒருவகையாகவும் விளக்குகிறார் :

அவன் அவள் அதுஎனும் அகில பாசமே
அவன் அவள் அதுஎன் அறைபவன் பசு
அவன் அவள் அதுவினை ஆக்குவோன் பதி
அவன் அவள் அதுஅறின் அறிவைக் காணலாம்.

பொருள் : அவன் என்றும், அவள் என்றும், அது என்றும் சுட்டுப்பொருளாக (காணும் பொருள்கள்) உள்ள பொருள்கள் அனைத்தும் நம்மைப் பற்றிக்கொண்டுள்ள பாசமாகும். இவற்றை இன்னின்னவென்று காணுகின்ற நாம் ஜீவர்கள்.

நம்மையும், நாம் காணும் பொருள்களையும் இயக்கிக்கொண்டிருப்பவன் இறைவன். அவன் அவள் அது என்னும் பேதம் தோன்றாதபோது உண்மையான பேரறிவு தோன்றும் என்று விளக்கியுள்ளார்.

பாசத்தை அகற்றுவதற்கு வழியையும் விளக்குகிறார்:

தத்துவம் முப்பத்தாறும் தனித்தனி களைந்து நீக்கின்
மொய்த்(து) இருள்மூடும் அத்தை முன்னவன் அருளால் [வீட்டின்
மெய்த்ததன் உருவம் நன்றாய் விளங்குறும் அதற்கப்பாலே
சுத்த மெய்ஞ்ஞான மேனிச் சோதிதா னாய் இருப்பான்.

பொருள்: தத்துவம் முப்பத்தாறையும் தனித்தனி களைந்து நீக்கல். பூதம் 5—மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்; கன்மேந்திரியம்—5 வாக்கு, பாதம், பாணி; கருவாய், எருவாய்; பொறி—5, மெய், வாய், கண், மூக்கு, செவி; புலன் 5—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்; கரணம்—4 மனம், புத்தி, சித்தம், அகங்காரம். வித்தியா தத்துவம்—7 காலம், நியதி, வித்தை, கலை, அராகம், அணு, மாயை. சிவதத்துவம் 5—சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்யம் சத்தி, சிவம்,

—ஆக 36 தத்துவங்களையும் தனித்தனியாக இன்னின்னதென்று பிரித்து விடுவது. (இதற்குத்தான் யோக சாதனை) பிரித்த போது மிச்சம் இருப்பது இன்னதென்று தோன்றாத நிலை எய்தும். "மொய்த்து இருள் மூடும்" அந்த இருள் இறைவன் திருவருளால் (ஞானாசிரியன் திருவருளால்) நீங்கினால், மெய்த்தன் உருவம் நன்றாய் விளங்குறும்—தனது உண்மையான உருவம் இன்னதென்பது நன்றாக விளங்கும். அந்த விளக்கத்தால், தூய்மையான ஞானவடிவன் தானாகவே இருப்பான். இதுதான் ஜீவன் முக்தர்களின் நிலையாகும்.

இந்தப் பாசம் ஜீவர்களை எப்போது பற்றியது என்பதனை நம்தாய் மதம் உதாரணத்தோடு விளக்குகிறது:

நெல்லினுக்கு உமியும் செம்பின்
நீடுகா ளிதமும் போல
தொல்லை தொட்டு இன்றுகாறும்
உயிரிடை தொக்கி நிற்கும்:

வல்லியோர் பாகன் ஆசான்
வடிவெடுத்து அருளும் காலம்
புல்லுறு பனிபோல் பொன்றும்
போத ஆதவன் எழுந்தால்
பொருள் வெளிப்படை

[காளிதம்—களிம்பு; வல்லி—உமாபிராட்டி ; போத ஆதவன் —ஞான சூரியன்.]

ஜீவாத்மாவினுடைய இலக்கணம்

சூக்கும தேக மாகி
தூலரு பத்தில் மன்னி
சாக்கிரம் முதலாய் உள்ள
அவஸ்தை யுள்தங்கி எங்கும்
போக்கொடு வரவும் எல்லாம்
புரிந்து புண்ணிய பாவங்கள்
ஆக்கியும் பலன்கள் எல்லாம்
அருந்தியும் நிற்கும் ஆன்மா.

பொருள் : ஜீவாத்மா என்பது உடம்பல்ல. இந்த ஜடமாகிய உடம்புக்குள்ளே சூக்கும சரீரமாக இருக்கிறது. (கனவில் தோன்றும் ஆக்கை) ; விழிப்பு, கனவு, உறக்கம், உணர்வு, தூயநிலை என்னும் நிலைகளிலும் தங்கி, இறப்பு, பிறப்பு, போதல், வருதல் என்னும் வகையில் பல இடங்களிலும் திரிந்து, நன்மை, தீமைகளையும் புரிந்து அதற்கேற்ற பலன் களை அனுபவித்துக்கொண்டிருக்கக்கூடியது ஜீவாத்மா.

என்னை அறிவென்றான் ; என் அறிவில் ஆனந்தம்
தன்னை சிவமென்றான் ; சந்ததமும்—என்னையுன்னி
பாரா மறைப்பதுவே பாசமென்றான்—இம்மூன்றும்
ஆராய்ந்தவர் முக்தராம்

என்கிறது சிவபோக சாரம்.

தெளிந்த நிலை

போக்கும் வரவும் இரவும் பகலும்
புறம்டம் உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும் இல்லதொன்று
வந்து வந்து
தாக்கும் மனோலயம் தானே தரும்என்னைத்
தன்வசத்தே
ஆக்கும் ஆறுமுகவா சொல்லொ ணாதந்த
ஆனந்தமே ! —அருணகிரிநாதர்; கந்தரலங்காரம்

வான்கெட்டு மாருதம் மாய்ந்து
அழல் நீர் மண் கெடினும்
தான்கெட்டல் இன்றி
சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு
என் உள்ளமும்போய்
நான் கெட்டவா பாடி!
தெள்ளேணம் கொட்டாமோ

(மணிவாசகப் பெருமான் ; திருவாசகம்)

எட்டுத் திசையும் பதினாறு கோணமும்
எங்கும் ஒன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கும் சோதியை
மூடர் எல்லாம்
கட்டிச் சுருட்டிக் கக்கத்தில் வைப்பார்
கருத்தில் வையார்
பட்டப் பகலை இரவென்று கொண்டிடும்
பாதகரே !

—பட்டினத்துச் சுவாமிகள்

மரத்தை மறைத்தது மாமத யானை ;
மரத்துள் மறைந்தது மாமத யானை ;
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம் ;
பரத்துள் மறைந்தது பார்முதல் பூதம்,

(திருமூலர்—திருமந்திரம்)

இதுபோன்ற அனுபூதி மகான் பலரின் அனுபவமான சான்றுகள் எண்ணற்றவை இன்னும் உண்டு. ஐம்புலன்களின் மூலம் நாம் அறியக்கூடிய அனைத்துக்கும் அப்பாற்பட்ட பரம்பொருளைக் காண அரும்பாடுபட்ட பெரியோர்கள் தோன்றிய புண்ணிய பூமி நம் பாரத பூமி. உலகம், உயிர், இறைவன் என்னும் முப்பொருளையும் அறிவுக்குப் பொருந்து மாறு ஆராய்ந்த பெரியோர்களின் பிறப்பிடம் இந்தியா! "இந்துக்களைவிட ஆத்தும ஞானத்தில் நாங்கள் உயர்ந்தவர் என யாரும் சொல்லிக் கொள்ள முடியாது" என்று பன்னூலாராய்ச்சிப் புலவரான மேக்ஸ்முல்லர் வேடிக்கையாகக் கூறவில்லை. இது இந்து மதத்தின் ஈடு இணையற்ற பெரியோர்களால் உருவான வேதாகமங்களை நன்கு ஆராய்ந்து அறிவித்த உண்மை மொழியாகும்.

நம் தாய் மதத்தில் கூறியுள்ள கருமம், பக்தி, யோகம் ஞானம் என்பவை வெறும் கதைகள் அல்ல. பல்லாயிரம் ஆண்டுகளாக பரதகண்டத்து ஞானிகள் ஆராய்ச்சியினால் அறிந்து அருளிச் செய்த மெய்ம்மொழிகள். தற்போது விஞ்ஞானமானது கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப முயற்சிக்கின்ற முயற்சிக்குத் தக்கவாறு முன்னேறி வருவதைப்போல ஒரு காலத்தில் நம் தாய் நாடு மெய்ஞ்ஞானத்தில் மனித சமுதாயத்துக்கே நன்னெறி புகட்டியிருக்கிறது. இத்தகைய ஞானநெறி அழிக்கப்படுமானால் அது இந்து மதத்துக்கும் இந்தியாவுக்குமட்டும் நஷ்டமல்ல. உலகில் வாழும் மனித சமுதாயத்துக்கே பேரிழப்பாகும். ஆகவே இந்த ஈடு இணையற்ற இந்துமதத்தை இந்திய ஆட்சி காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறது. ஆயினும் இது தற்போது தன்னுடைய கடமையைக் கைவிட்டிருக்கிறது. இதுதான் விந்தையிலும் விந்தை.

நமது கடமை

நம் தாயின் மதம் உலக மதங்கள் அனைத்திற்கும் முந்தியது. பிற மதங்களுக்கும் பெருமையைத் தருவது. சகிப்புத் தன்மையும் உடையது. ஒப்புயர்வற்ற நிலையில் முப்பொருள் உண்மைகளை விளக்கியது. சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் அரும்பொருள்களைத் தெளிவாக அவனிக்கு அறிவித்தது. 'யாரோ ஒருவர் தெய்வம் இருக்கிறது என்று சொன்னார். அதை நம்பி நான் போய்க்கொண்டிருக்கிறேன். நீயும் என்னைத் தொடர்ந்து வா,' என்று கண்மூடித்தனமாகக் கடவுளை இந்து மதம் ஏற்றுக்கொள்ளவில்லை. நம் உயிருள்ளபோதே இறைவனை இன்னான் என்று அறிந்துகொள்ளுங்கள் என்று கூறிய ஆன்றோர்களைத் தந்தது இந்துமதம். இது ஒரு கலைக்கூடம் இது ஒரு தனி மனிதனுடையதல்ல. இது இந்திய சமுதாய மதம்; இந்நாட்டின் கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு என்னும் நான்கு திசைகளிலும் தோன்றியநல்லோர்களின் வழி வந்தது. இத்தகைய சிறந்த மதம் இன்று மும்முனைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

இதுநாள் வரையிலும் எந்த மதத்தின்பேரிலும் படை எடுக்காத நம் தாய் மதத்தின்பேரில் படையெடுப்பு ஆயத்தமாகியுள்ளது. ஒருபுறம் ஆசை வார்த்தைகளை அள்ளிவீசி அற்ப உதவிகளையும் காட்டி, கல்வி அறிவற்ற ஏழைமக்களை மதம் மாற்றுகிறார்கள். இன்னொருபுறம் சந்தர்ப்பம் நேர்ந்த போதெல்லாம் திடீர் மதமாற்றங்கள் நிகழ்கின்றன. இன்னொரு

புறம் தமது அரசு மதத்தைப் புறக்கணித்ததோடு நில்லாமல் இந்து சமூகத்தையே 'குடும்பக் கட்டுப்பாடு' என்ற பெயரால் அழித்துக் கொண்டு வருகிறது.

இந்த அபாயகரமான விளைவுகளால் மதம் மட்டுமல்ல; நாடே நம் கைவிட்டு நழுவக்கூடும். அதற்கு ஏற்ற அறிகுறிகள் சில தோன்றியுள்ளன. முதலில் நாம் நாட்டைக் காப்பாற்றினால் தான் இந்துமதம் நிலைக்கும். இந்துமதத்தில் இல்லாத ஒரு உயர்ந்த கருத்தை இதுவரையிலும் எந்த மதமும் கூறியதில்லை; கூறவும் முடியாது. இது பிற மதத்தினருக்கும் தெரியும். ஆனால் நம்முடைய மக்கள் இன்னும் விழிப்படையவில்லை. "தூங்குகின்றவன் தொடையில் கயிறு திரிப்பது," என்கிறார்களே அதுபோலத் திரிக்கப்படுகிறது. நாம் விழிப்படைகிற வரையிலும் இது நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கும். இந்திய அரசு மத நம்பிக்கை அற்றவர்களின் செல்வாக்கில் சிக்கிக்கொண்டதின்காரணத்தால் 'மதசார்பற்ற ஆட்சி' என்னும் விளம்பரப் பலகையை மாட்டிக்கொண்டது.

மதவெறியர்களால் நாடு துண்டாடப்பட்டது நன்றாகத் தெரிந்திருந்தும், இந்திய ஆட்சி இந்த விளம்பரப் பலகையை மாட்டியது துரதிருஷ்டமாகும். 'இதைப்பற்றி இந்துமதமும் இந்திய அரசும்' என்னும் தலைப்பில் விளக்கியுள்ளேன். கிறிஸ்தவ மதமும், இஸ்லாம் மதமும் அரசியலோடு இணைந்து வேலை செய்கிறது. இந்துமதத்தை இந்திய அரசே உதறி விட்டது. ஆகவே தற்போது இந்துமதம் கேட்பாரற்ற மதமாகி விட்டது. மற்றும் அழிக்கப்பட்டும் வருகிறது. உதாரணமாக, கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களை மதம் மாற்றுவதில்லை. இந்த இருமதத்தினரும் இந்துக்களைமட்டும் மதம் மாற்றுகின்றனர். இந்திய அரசும் குடும்பக்கட்டுப்பாடு என்னும் பெயரால் அறுவை சிகிச்சையின்மூலம் இந்துக்களைமட்டும் அழித்துக்கொண்டு வருகிறது.

இத் தருணத்தில், பழைமையான பண்பாடு உடைய இந்தியாவில் தோன்றிய இந்தியர்களாகிய நாம் நமதுபண்பாட்டைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளோம். கிறிஸ்துவ மதத்துக்குப் பாதுகாப்பாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா என்னும் மூன்று கண்டங்களும் உள்ளது. அதேபோல ஆப்பிரிக்காவில் பெரும்பகுதி கிறிஸ்துவ மதத்தின் கையில் இருக்கிறது. இதற்குப் போட்டியாக இஸ்லாம் மதம் ஆசியாவையேனும் நாம் கைப்பற்றவேண்டுமென்னும் போட்டி மனப்பான்மையில்

மூர்க்கத்தனமான நெறிகளில் இறங்கிச் சில சமயங்களில் பலாத்காரத்தைக் கையாள்கிறது. இந்த அடிப்படையில்தான் பாகிஸ்தான் உருவாயிற்று.

பாகிஸ்தான் உருவாவதற்கு உடந்தையாக இருந்தவர்கள் இந்தியாவில் இன்னும் இருக்கின்றனர். உதாரணமாக, எங்கெங்கு மசூதியும் அதைச் சுற்றி முஸ்லிம்களும் அதிகமாகக் குடியிருக்கிறார்களோ அந்தப் பகுதிகளைக் குட்டிப் பாகிஸ்தான்களைப்போல உருவாக்க முயற்சிக்கின்றனர். எப்போதுமே இந்துக்கள் முஸ்லிம் மதத்தின்பேரில் பாய்ந்ததில்லை. இது உலகறிந்த உண்மை ; ஆனால் முஸ்லிம் மதத்தினர் இந்துக்களுக்கும் இந்து மதத்துக்கும் இழைத்த தீமைகள் இவ்வளவு அவ்வளவல்ல. அதற்குச் சான்றுகள் இன்னும் பல ஆலயங்களில் சிதைந்த பல சிற்பங்கள் எடுத்துக்காட்டுகளாகக் காட்சியளிக்கின்றன.

இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் நாடுகள் பெரும்பாலும் பிற மதப் பிரசாரங்களுக்கு இடந்தருவதில்லை. உதாரணமாக,

2—2—1986-ல் ராம்குமார் பரத்வாஜ் என்பவர் கே. கே. எம். ஸி. என்ற தாஹ்ரான் நிறுவனமூலம் சவூதி அரேபியாவில் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சத்தியார்த்த பிரகாஷ் என்னும் புத்தகத்தை உடன்கொண்டுபோயிருந்தார். இந்நூல் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்த சுவாமி தயானந்தர் எழுதியது. ஒருநாள் ஓய்வு நேரத்தில் இந்தப் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். இவருடன் வேலை செய்யும் ஒருவன் இதைப் பார்த்துவிட்டு தலைமை அதிகாரிகளிடம் புகார் செய்தானாம். அதிகாரிகள் இவரைப் பிடித்துக்கொண்டு போய்ச் சிறையில் அடைத்தனர். வாரக் கணக்கில் சவுக்கால் அடித்தனராம். அரேபிய நாடுகளில் முகலாயர்கள் இந்து மதத்துக்குக் கொடுக்கும் கௌரவம் இது !

இது விஷயமாக பாரதத்து வெளியுறவு அமைச்சகத்துக்குக் கடிதம் எழுதியபோது, இக் கடிதத்துக்கு சவுதி அரேபியாவின் பதில் "சட்டப்படி இஸ்லாம் மதம் அல்லாத பிற மத நூல்களை, அந்நாட்டுக்குள் கொண்டுசெல்வதும், அங்கு அவற்றைப் படிப்பதும் குற்றம்," என்று பதில் கிடைத்திருக்கிறது.

(ஆதாரம். விஜயபாரதம் 30—1—1987)

மனிதாபிமானமற்ற சட்டங்களைச் செய்துகொண்டு, பிறர் சுதந்திர சிந்தனைக்குத் தடைவிதிக்கும் இந்த மதத்தினரை நாம் எப்படி நம்புவது. இங்கு பலவித உரிமைகளும் வேண்டுமென்று வாய்கிழியப் பேசும் இஸ்லாம் மேதாவிகளில் தலை சிறந்த பொறுப்பில் இருககும் தலைவர் 'இந்தக் கொடுமைகளுக்குப் பதில் என்ன கூறுவாரோ நாம் அவரைத் தான் கேட்கவேண்டும். காரணம், அவர் மற்ற மதங்களுக்கு மதிப்புத் தரக்கூடிய மதத்தின் பிரதிநிதி என்று தன்னைக் கூறிக் கொள்கிறார்! நாம் தற்போது வரட்டு ஜம்பமாக மதசார்பற்ற சிறந்த ஆட்சி என்று நம்மை நாமே புகழ்ந்துகொண்டிருந்தால் எதிர்காலத்தில் நமது சந்ததியின் கதி என்ன ஆகும்? ஒருபுறம் முஸ்லிம் குடும்பக்கட்டுப்பாட்டுக்கு எங்கள் மதம் இடமளிக்கவில்லை என்று மக்கட் தொகையைப் பெருக்கிக்கொண்டு வருகிறது. மறுபுறம் இந்திய அரசு இந்துக்களைமட்டும் அறுவை சிகிச்சையின்மூலம் கருத்தடையை செய்துக்கொண்டு வருகிறது. இந்தப் போக்கு நீடிக்குமானால் இந்து சமூகம் நிலைக்குமா? என்னும் கேள்வி எழத்தான் செய்கிறது. முன்பு பாரதத்தின் ஒரு பாகமாக இருந்த பாகிஸ்தான் நம்மைப் பதம் பார்த்துக்கொண்டிருக்கிறது. தனக்கு வேண்டிய இடங்களைச் சரிப்படுத்திக்கொள்ளச் சீனாவும் பாகிஸ்தானைச் சீண்டிக் கொண்டிருக்கிறது.

திருமிகு சையத் சகாபுதீன், அறிவில் மிகுந்த இமாம் அப்துல்புகாரி, மாண்புமிகு அமைச்சர் அன்சாரி இவர்களைப் போன்ற பொறுப்புள்ளவர்களின் வாயில் வருகின்ற சொற்கள் மறுபடியும் இந்திய நாட்டில் ஜின்னாசாயிபுவின் வாரிசுகளை உருவாக்குவதாகத் தெரிகிறது. இன்னும் பத்து ஆண்டுகளில் இந்தியாவை இஸ்லாம் நாடாக மாற்ற ஹைதராபாத்தில் நடந்த ‘‘ஜமாஹத் ஏ இஸ்லாம்’’ மாநாட்டில் தீர்மானம் கொண்டு வரப்பட்டதாம்!

இது ஒருவகையான அரசியல் தந்திரம். இதனை மதப் போர்வையில் நாடுபிடிக்கும் நயவஞ்சகர் செயல் என்று கூறலாம். இந்த நாட்டில் நாங்கள் சிறந்த அரசியல் தலைவர்கள் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் மேதாவிகளுக்கு இந்த உண்மை விளங்கவில்லையா? அல்லது விளங்கி இருந்தும் கண்டும் காணாதவர்களைப்போல ஒதுங்கி நிற்கிறார்களா? என்னும் ஐயப்பாடு தோன்றுகிறது.

எந்த மதத்துக்கும் இந்துமதம் இளைத்ததல்ல. ஆனால், பிறமதத்தினரின் படை எடுப்புகளென்னும் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டு களைத்திருக்கிறது. இன்று நாம் சுதந்திரர்கள்

இதை இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு இந்திய மகனும் சிந்திக்கவேண்டும். இந்திய அரசு இன்று போகின்ற போக்கிலேயே செல்லுமானால் மதம் மாத்திரம் அழியாது; இந்தியாவின் மானமும் போய்விடும். மதசார்பற்றக் கொள்கை என்பதனால் பாதிக்கப்பட்டவர்கள் இந்துக்கள்தாம். இதற்குத்தான் நாம் சுதந்திரத்தைப் பெற்றோமா? பாரத நாட்டின் ஜீவாதாரப் பண்பாடுகளைக் குழிதோண்டிப் புதைப்பதற்காகவா நாம் சுதந்திரத்தைப் பெற்றோம்? இந்தப் புண்ணிய பூமிக்கு சுதந்திரம் பெற்றதனால் வந்த நன்மைதான் என்ன? சொந்த மதத்தை உதறிவிட்ட இந்திய ஆட்சி வந்த மதத்துக்குமட்டும் கட்டுப்படலாமா? இந்தச் சட்டத்தினால் அண்டைய நாடுகளேனும் நமக்கு ஆதரவாக இருக்கிறதா? இல்லையே! இதனால் ஆபத்துக்கள்தானே உருவாகியுள்ளன. நாம் கொடுத்த பிச்சையில் பச்சைக் கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் நம்மை மதிக்கிறதா? இல்லையே! அண்டையில் இருந்துகொண்டே மறுபடியும் சண்டைக்கல்லவா சங்கு பிடிக்கிறது!

முகலாயர்களின் படை எடுப்புக்கு முன்னம் பிறநாட்டு மக்களுடைய வாயில் இந்தியாவும், இந்துமதமும் புகழப்பட்டது.

“ அன்னையே! அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணிமுத்துப் போன்றமணி மொழிக ளாலே
பன்னிநீ வேதங்கள் உபநிட தங்கள்
பரவுபுகழ் புராணங்கள் இதிகா சங்கள்
இன்னும்பன் னூல்களிலே இசைத்த ஞானம்
என்றென்றும் புகழ்ந்துரைப்போம் அதனை இந்நாள்
மின்னுகின்ற பேரொளிகான் காலம் கொன்ற
விருந்துகாண் கடவுளுக்கோர் வெற்றி காணே!

— (பாரத மாதா நவரத்தின மாலை)

என்று பாடினார் நம் மகாகவி பாரதியார். இந்தியத் தாயின் பெருமையை அவர் உன்னி உன்னிப் பூரிப்படைகிறார். அதேமண்ணில் பிறந்த நாம் இன்று என்ன செய்து கொண்டிருக்கிறோம்? கணக்கற்ற கட்சிகளுக்கு இடமளித்து விட்டுப் பதவி பேரங்களைப் பேசிக்கொண்டிருக்கிறோம். மாகாண வெறி, மொழி வெறி முதலானவற்றை இன்று தூண்டிக் கொண்டே இருப்பது சுயநலமிகளின் அன்றாடத் தொழிலாகி விட்டது. இந்த இழிசெயல்கள் நீடிக்குமானால் நாடும் நம்மை விட்டு நழுவ நேரும்.

இன்றைய சூழ்நிலை

இன்று உலகத்தில் ஒரு நாட்டை மற்றொரு நாடு அடக்கி ஆள ஆசைப்படுகிறது, ஒரு கட்சி மற்றொரு கட்சியை மிதித்து ஏற வழிதேடுகிறது. ஒரு மதம் மற்றொரு மதத்தை முடித்துக் கட்ட துடிப்போடு செயல்படுகிறது. நாட்டை நாடு நேசிப்பதில்லை. இதனால் போர் மூள்கின்றன. கட்சியைக் கட்சி நம்பவில்லை. இதனால் குழப்பங்கள் விளைகின்றன. மதத்தை மதம் நம்பவில்லை. இவை வேற்றுமைகளை உருவாக்கு கின்றன. இப்படிப்பட்ட உலகத்தில் நாம் எப்படி வாழ்வது ? எல்லாவற்றிலும் நம்பிக்கையின்மை ஊடுருவிவிட்டது. ஒன்றை ஒன்று நாடி பிடித்துப்பார்ப்பதும், எங்கேனும் பலவீனம் காணப் பட்டால் உடனே அதை நசுக்கி நாசப்படுத்துவதும் தற்கால நடைமுறையாகிவிட்டது. நாம் பலவீனமுடையவர்களாக இருக்கிறோம் என்னும் விஷயம் புரிந்தவுடனே ஒரு சிறிய நாடும் நம் பேரில் சீறிவிழத் தயங்காது.

நாம் உண்மையில் இன்று பக்கபலமற்றவர்களாக உள்ளோம். நாம் நடுநிலைமைவாதிகள் என்னும் பட்டத்தை வேறு கட்டிக்கொண்டுள்ளோம். வல்லரசுகள் என்னும் வழக்கறிஞர்களின் உறுமல்களுக்கு இடையில் நீதிபதி அமரும் பீடத்தில் ஏறிக்கொண்டோம். வழக்கறிஞர்கள் செல்வத்திலும் விஞ்ஞானத்திலும் முன்னேறி உள்ளவர்கள். நீதிபதியின் பீடத்தில் அமர்ந்துள்ள நாமோ 40 ஆண்டுகளாகக் கையில் கப்பரை ஏந்தியுள்ளோம். பிச்சைக்காரர்களைப்போலப் பிறருடைய உதவிகளையே எதிர்பார்க்கும் நமக்கு, நடு நிலைமைவாதிகளென்னும் கௌரவபீடம் அருகதை தானா நாம் உணரவில்லை. நம்முடைய தீர்மானங்களும், தீர்ப்புகளும் வளர்ந்த நாட்டினருக்கு எப்படி இருக்கும் ? தின்று தெருவில் வீசும் எச்சில் இலைகளைப்போலத்தானே தோன்றும் ? நாமும் ஒரு வல்லரசாக இருந்திருந்தால் அணிசேராக் கொள்கை ஒருக்கால் நமக்குப் பொருந்தியிருக்கும். இந்த வீண் ஜம்பமும் நமது முன்னேற்றத்துக்கு ஒரு வகையில் முட்டுக்கட்டை ஆகிவிட்டது.

நாடு சுதந்திரம் அடைந்த தருணத்தில் நமக்குப் பேருதவி புரிந்தவர்கள் யார் என்பதையும் மறந்தோம். உண்ண உணவுக்கே மக்கள் திண்டாடிக்கொண்டிருந்தபோது, கோதுமை முதற்கொண்டு பலபொருள்களை நமக்கு அன்று பரிவுடன் அளித்த நாடு அமெரிக்கா. பொது உடைமை என்னும் போதை யினால் நம் அரசியல் தலைவர்கள் அதை மறந்துவிட்டனர்.

அதனால் இந்நாட்டுக்குச் சட்டம் வகுத்தபோது இதை ஜன நாயகம் என்றோ பொது உடைமை நாடு எனவோ சொல்ல முடியாமல் இரண்டுங்கெட்டான் பெயரான "ஜனநாயக சோஷலிசம்" என்னும் புதுப் பெயர்ப் புனைந்துகொண்டோம். இதனால் இன்று நாடு திக்குமுக்காடுகிறது. இது யாரால் வந்த வினை? சிறிது சிந்தித்துப்பாருங்கள்!

நமக்கு அன்று பேருதவி செய்த அமெரிக்கா இன்று பாகிஸ் தானுக்குப் பக்கமேளம் வாசிக்கிறது! நாம் தும்பைவிட்டு வாலைப் பிடிக்காமல் இருந்திருந்தால் அமெரிக்கா பாகிஸ் தானையும் சிலோனையும் சீண்டிவிட்டுக்கொண்டா இருக்கும்?

"காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது,"

என்றார் திருவள்ளுவப் பெருமானார். இதை நம் அரசியல் தலைவர்கள் சிந்தித்தார்களா? ஸ்டாலினுன் மூடுமந்திரமாக இருந்த பொது உடைமைக் கொள்கையை அல்லவா நம்ம ஊர் போற்றிப் புகழ்ந்துகொண்டிருந்தது! இன்று நம் நாடு 40 ஆண்டுகளாகப் பின்னடைந்திருப்பதற்கு என்ன காரணம்? சோஷலிஸம் என்னும் பெயரால் போடுகின்ற அபரிமிதமான வரிகளும், அவற்றை வசூலிக்க அதிகாரிகளின் பெருங்கூட்டங் களும் வரியேய்ப்புகளும் தலைவிரித்தாடுகின்றன. இவைகள் யாரால் என விளக்கமுடியுமா? 'இடிப்பவனுக்கும் புடைப் பவனுக்கும் ஒன்று; எட்டி எட்டிப் பார்ப்பவனுக்குப் பத்து' என்னும் நிலைமையல்லவா இன்று நாட்டில் பரவி இருக்கிறது? கஷ்டப்படுபவனுக்குக் கால் ரூபா; கதை அளப்பவனுக்கு நாலு ரூபா-இது இன்றைய கொடுமை! இன்று நம் நாடு பேருக்கு ஜனநாயகம். பிடுங்குவதில் சோஷலிசம். இது இன்று நமது நாட்டின் நிலைமையாக இருக்கிறது.

நாம் பொது உடைமைக் கொள்கைக்கு விரோதிகளலலர். ஆனால் பொது உடைமைக் கொள்கையை சட்டத்தின்மூலம் நிலைநாட்ட முடியாது. இதை அன்பினால்தான் நிறுவ வேண்டும். தனிமனிதனின் பெரு முயற்சிகளுக்குத் தடையாக இருப்பது பொதுஉடைமைக் கொள்கை. இதை ரஷ்ய நாடும் சீனாவும் புரிந்துகொண்டு படிப்படியாக ஜனநாயகத்துக்கு மாறிக்கொண்டு வருகின்றன. இன்னும் நமது நாடு இரண்டும் கெட்டான் தத்துவத்தை உடும்பைப்போலப் பற்றிக்கொண்டு தொங்கிக்கொண்டிருக்கிறது. நம் நாடு முன்னேறாததே இதற்குப் போதிய சான்றாகும். இனி பழைய பல்லவிகள் பயன்படா.

இன்று நம்நாடு அடிமை நாடல்ல; சுதந்திர நாடு. நாம் அடிமைகளாக இருந்தபோது இருந்த ஒற்றுமைகூட நம் மக்களிடம் வரவரத் தேய்ந்து வருகிறது. தெய்வ பக்தி, தேசபக்தி, பரோபகாரம் என்பவைகள் மறைந்துகொண்டிருக்கின்றன. லஞ்ச ஊழல், கட்சிகளின் தோற்றம், பகை உணர்ச்சி, பதவி வேட்டை போன்றவைகள் அதிகரித்துவிட்டன. இந்தச் சூழ்நிலைகள் உருவாவதற்குக் காரணம் யார்? ஆட்சியாளர்களா? அல்லது மக்களா? பிள்ளைகள் தீயவர்களாக மாறுவதற்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் காரணம்! இவர்கள் பிள்ளைகளுக்குத் தீய பழக்கங்களை அணுக வொட்டாமல் நன்னெறிகளைக் கற்பித்திருந்தால் அவர்கள் தீய பிள்ளைகளாக மாறியிருக்கமாட்டார்கள். ஒழுக்கத்தைப் போதிக்கத்தான் கல்வி நிலையங்கள் ஏற்பட்டன. அதேபோல ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தக்கூடியவர்கள் அன்பு, அறிவு, ஊக்கம், நேர்மை என்பனவற்றைக் கடைப்பிடித்திருந்தால் ஊழல்கள் உருவாகி இருக்காது. அறிவை வளர்க்கவேண்டிய கல்வி நிலையங்களில்கூட இன்று இலஞ்சம் தாண்டவமாடுகிறது. ஆட்சி நடத்தக்கூடியவர்கள் கொள்ளைக்காரர்கள் ஆனால், மக்கள் கொலைகாரர்களாக மாறுவார்கள் என்பர் மக்களைத் தீய வழிகளில் செல்ல ஒட்டாமல் பாதுகாக்க வேண்டிய புரவலர்கள் அடாத செயலில் இறங்கினால் மக்கள் பலவழியிலும் கெடாமல் என்ன செய்யமுடியும்? ஆகவே நாடு நலிந்து, ஒற்றுமை உடைந்து, நாளுக்கு நாள் பூசல்கள் மலிவதற்குக் காரணம் அந்நிய நாட்டினர் செய்யும் சூழ்ச்சிகள் மட்டுமல்ல, நம்முடைய ஆட்சி முறையிலும் தவறுகள் இருக்கின்றன. இந்தத் தவறுகளை நாமே திருத்திக்கொள்ளாமல் அதை மறைக்கப் பயனற்ற விளக்கங்களைப் பேசிக்கொண்டே காலத்தைக் கழிப்பது பகைவர்கள் படைபலத்தைப் பெருக்கிக் கொள்ள நாம் வாய்ப்புத் தருகிற பேருதவியாக முடிந்துவிடும்.

பண்டைய மக்களின் பரந்த நோக்கம்

பாண்டவர்கள் வாழ்ந்த காலத்திலேயே பாரத கண்டம் 56 தேசங்களாக இருந்ததாம். பாண்டவர்கள் வாழ்ந்த காலம் 5000 ஆண்டுகளுக்கும் முற்பட்ட காலமாகும். அந்நாடுகளின் பெயரை அங்கம், வங்கம், கலிங்கம், காஷ்மீரம், கருநாடகம், காம்போஜம், மச்சம், மகதம், மராட்டம், மலையாளம், நிடதம், நேபாளம், பல்லவம், பாண்டி, கொல்லம், கோசலம், சோழம் என்னும் இதுபோன்ற பெயரில் வழங்கினர் இவைகள் சிறு சிறு ராஜ்யங்களாகப் பிரிந்திருந்தாலும், மொழிகள் பலவாக இருந்தாலும் மதம் என்னும் விஷயத்தில் ஒன்றுபட்டே

இருந்தன. அரசாங்கங்களுக்கு இருந்த செல்வாக்கைவிட இந்து மதத்தின் செல்வாக்கு அன்று மகத்தானதாகும். காசியில் இருக்கும் துறவி கால்நடையாக இராமேஸ்வரம் வருவான். இராமேஸ்வரத்தில் இருக்கும் துறவி பாதயாத்திரையாகக் காசிக்குச் செல்லுவான். இந்த யாத்திரைகள் சென்றுவர ஆண்டுக்கணக்கில் ஆகும். வழி நெடுகப் பல தேசங்களும், பல மொழியினர்கள் இருப்பினும் மதத்தின்பேரில் வைத்த அதீத அன்பால் யாத்ரீகர்களுக்கு அன்பான வரவேற்பும் வேண்டிய உதவிகளையும் மகிழ்ச்சியோடு மக்கள் புரிந்துவந்த நாடு இது. இந்து மதம் காசியிலிருந்து இராமேஸ்வரம்வரையிலும், குறிப்பாகக் கன்னியாகுமரியிலிருந்து இமயம்வரையிலும் ஒருமைப்பாட்டை வளர்த்த உத்தமமான மதமாகும். இது தன்னுடைய கொள்கைகளை எந்த நாட்டின்பேரிலும் பலாத்காரமாகத் திணித்ததில்லை. மண்ணை, பெண்ணை, பதவியைக் காட்டி இவற்றின்மூலம் மதமாற்றம் செய்ததில்லை. இந்திய அரசர்கள் பிறருடைய மசூதிகளையோ, சர்ச்சுகளையோ, அழித்து அதே இடத்தில் தமது தேவாலயங்களைக் கட்டும் அடாத செயல்களில் ஈடுபட்டதில்லை.

இறைவன் ஒருவனே. அவனை யார் எப்படி வணங்கினாலும் பகவான் ஏற்றுக்கொள்வான் என்பது இந்துக்களுக்கு ஏற்கனவே தெரிந்த உண்மை. இந்தப் பரந்த நோக்கம் பிற மதங்களைப் பின்பற்றும் மக்களுக்கும் இருக்குமானால் மதங்களுக்குள் பகை மேகங்கள் சூழாது. பிற மதத்தினரிடம் பிடிவாத குணம் குடிகொண்டிருக்கிறது. மதப்போராட்டங்கள் தோன்றுவதற்கும், புதிய மதங்கள் உதிப்பதற்கும் பிடிவாத குணங்களே அடிப்படையாக உள்ளன.

பிரான்சு நாட்டு வரலாற்று ஆசிரியரான ரெனி என்பவர் கீழ்வருமாறு கூறுகிறார் :

"உலகம் முழுவதிலும் எங்கெங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்கள் சகிப்புத்தன்மை அற்றவர்களாகவே இருக்கிறார்கள். எங்கெல்லாம் சிறுபான்மையினராக இருக்கின்றார்களோ அங்கெல்லாம் கிளர்ச்சியில் இறங்குபவர்களாகவே இருக்கின்றனர்."

ஆதாரம் : தேவர்ஸ் அவர்களின் சொற்பொழிவின் தொகுப்பு. தமிழக ஆர். எஸ். எஸ்.

நம்மை நாமே பகைத்துக்கொள்வதா ?

இந்திய நாட்டைப் பிரித்தாளும் சூழ்ச்சியினால் சிலர் எழுதியுள்ள ஆராய்ச்சி நூல்களை நம்மில் பலர் பெரிதுபடுத்திப் பேசி வருகின்றனர். ஆரியர்கள் கைபர் கணவாய் வழியாக வந்தவர்கள். இவர்கள் திராவிட இனத்தின் பகைவர்கள். இந்துமதமென்பது ஆரியர்களின் மதம். ஆகவே நாங்கள் இந்துக்களுமல்ல; எங்கள் மதம் இந்துமதமுமல்ல; என்று கூறுகின்றனர்.

நேற்று கந்தனாக இருந்து மதம் மாறி மரிசாமி என்று பெயர் மாற்றிக்கொண்டவனை நீ யார் ? என்று கேட்டால் நான் கிறிஸ்துவன் என்று தயங்காமல் கூறுகிறான். முந்திய நாள் முகுந்தனாக இருந்து முஸ்லிமாக மாற்றப்பட்டிருப்பவனை நீ எந்த மதம் என்று கேட்டால் நான் இஸ்லாமியன் என்று கூறிப் பெருமைப்படுகிறான். பரம்பரையாக இந்துக்கள் என்று கூறிக் கொண்டுவந்த குடும்பத்தில் பிறந்த பார்த்தசாரதியை நீ யார் என்று கேட்டால் நான் இந்து அல்ல என்னும் சந்தம் பாடு கிறான் ! இதுதான் நமக்குள் நடக்கின்ற விந்தை ; மற்றும் இந்தப் பேரறிவாளிகளுக்கு இந்துமதத்தைத் தாக்கிப் பேசுவதில் அலாதி இன்பம். மற்றைய மதங்களிடத்தில் இவ்வாறு முட்டுவார் களானால் இவர்களுடைய பகுத்தறிவுக்குப் புள்ளிவைத்து விடுவார்கள் என்பது இவர்களுக்கே தெரியும். என்றோ ஒன்றாக நெய்யப்பட்டுவிட்ட ஆடையில் உள்ள நூல்களைப் பிரிக்க முயல்பவனைப்போல பிரிவினையை ஆரம்பித்துள்ளனர். இவர்களின் நாடகத்தை நன்கு உணர்ந்த நாமக்கல் கவிஞர், ஓர் அறிவுரை கூறுகிறார் :

" வந்தவர் போனவர் வாயுரை நம்பி
வாடின காலங்கள் ஓடின தம்பி !
இந்த தினம்முதல் இந்தியநாடு
என்னுடை நாடென்ற எண்ணத்தைக் கூடு.

என்று உருக்கமாகப் பாடிச் சென்றார். அவருடைய அமுத மொழியை நன்கு சிந்தித்து அனைவரும் ஒன்றுபட்டு ஆன்மீக நெறியை வளர்க்கவேண்டுமென்பது நமது பேரவா. திராவிட மென்பது இனம். மதமென்பது கொள்கை. இந்நாட்டில் பல இனங்கள் இருக்கலாம் ; ஆனால் மதம் ஒன்றே,

இந்துக்களென்னும் நாமும், நமது இந்திய அரசும் மானத் தோடும் மதிப்போடும் வாழவேண்டுமானால், நாட்டுக்கும் நமக்கும் ஆபத்து ஏது ? என்பதனை முதலில் சிந்திக்க

வேண்டும். அந்த ஆபத்து நம்மை அணுகவொட்டாமல் இருக்கும் வழிவகைகளை உடனடியாக வகுக்கவேண்டும்.

நாம் தற்போது வகுத்துக்கொண்டிருக்கின்ற சட்டத்தில் குளறுபடிகள் இருந்தாலும் அவற்றை யதேச்சையாகவோ உடனடியாகவோ திருத்தமுடியாது. காரணம் இது மக்களாட்சி என்ற பெயரையும் ஒட்டவைத்துக்கொண்டிருக்கிறது. இருக்கிற சட்டத்திலேயே முதலில் வழிகாணவேண்டும். பிறகு மற்றவை. மதசார்பற்ற ஆட்சி என்னும் அடிப்படையிலேயே முடிவில் ஒரு பொது சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவும் முடியும்.

இந்திய ஆட்சி மதச்சார்பற்றது. ஆகவே இங்கு வெளி நாட்டிலிருந்து வந்த மதமானாலும், இந்திய நாட்டில் தோன்றிய சொந்த மதமானாலும் எந்த மதமாக இருப்பினும் அனைத்துக்கும் சட்டம் ஒன்றே. இந்த இந்திய பொதுச் சட்டத்துக்கு யாவரும் கட்டுப்படவேண்டும். இச் சட்டத்துக்குக் கட்டுப் படாதவர்கள் எந்த மதந்தினராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். மற்றும் மதச்சலுகை சாதிச் சலுகை என்னும் இரண்டையும் நீக்கவேண்டும். பெரும்பான்மையினர்–சிறுபான்மையினர் என்னும் பெயருக்கு இங்கு பொருளில்லை. எல்லோரும் மனிதாபிமானம் என்னும் அடிப்படையில் சமமே.

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் யாராக இருப்பினும் சாதி, மதம், இனம், மொழி என்னும் பாகுபாடின்றி முடிந்தவரையிலும் அரசு அனைவருக்கும் உதவிபுரியவேண்டும். அதுதான் மதச்சார்பற்ற ஆட்சி என்று கூறுவதற்கும் பொருத்தமாகும். இதற்குப் புறம்பாக நடப்பது எதுவாய் இருப்பினும் அது பொருந்தாது. தற்போது நாட்டில் மக்கள் தொகையைக் குறைக்கக் கையாளும் போக்கு தற்கொலைக்கு ஒப்பானதாகும். இந்தப் போக்கை மாற்றவேண்டும். இல்லையானால் இந்திய நாட்டுக்கும் இந்து தருமத்துக்கும் விளையப்போகும் தீமைகளைத் தவிர்க்கமுடியாது. ஒருமதத்தான் நான்கு மனைவியரை மணந்து 40 பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டாலும் அவனை ஏன் என்று கேட்காமல் கண்களை இறுக மூடிக்கொள்வதும், இன்னொரு மதத்தான் மறுமணம் செய்துகொண்டால் அவனைக் கம்பி எண்ணவைப்பதும் மதச்சார்பற் ஆட்சிக்கு அடாத செயலாகும். அத்துடன் ஒரு மதத்தின் சமூகத்தை மட்டும் அறுவை சிகிச்சையின்மூலம் கருவறுத்துக் கொண்டு வருவது கொடுமையிலும் கொடுமையாகும்.

இனி திருமணம் ஆகக்கூடியவர்கள் எந்த மதத்தினராக இருந்தாலும் அவர் குறிப்பிட்ட அளவுக்குமேல் குழந்தை பெறக் கூடாது என்னும் பொதுச் சட்டம் கொண்டுவருவதுதான் மத சார்பற்ற ஆட்சிக்குப் பொருந்தும். ஒருமதத்தினரைமட்டும் கட்டுப் படுத்தும் இந்தத் திட்டத்தைக் கட்டாயம் மாற்றவேண்டும். கிறிஸ்துவர்ம்ள் ஆசைகாட்டி மதமாற்றத்தைச் செய்வதைப் போல, இத்திய ஆட்சி ஏழை மக்களுக்குக் காசை நீட்டி இந்து சமூகத்தை மட்டும் மட்டுப்படுத்துவது பேராபத்தாகும்.

முஸ்லிம்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் குடும்பக்கட்டுப்பாடு பாவச் செயல்கள் என்றால் இந்துக்களுக்கு மட்டும் புண்ணியம் வந்து புகுந்துகொள்ளுமா ? இதுதான் அரசியல் மேதைகளின் நடுநிலைத்தனமா ? நம்மை நாமே அழித்துக்கொண்டு மறுபடியும் நாட்டை வந்தவர்கள் வாயில் போடவேண்டுமா ? இதுவா அரசியல் விவேகம் ? அரேபியன் நம்முடைய அடுப்பை இடிக்கும்போது, நாம் மட்டும் அவனை எடுத்து இடுப்பில் வைத்துக்கொள்ளவேண்டுமா ? அமெரிக்கா கிறிஸ்துவர்களின் கோட்டையாக இருப்பினும் அங்கு இந்துமத பிரச்சாரத்துக்கும் இடங்கொடுக்கின்றனர். அரேபியர்கள் இந்த உரிமையைத் தந்துள்ளனரா ? ஏன் தருவதில்லை ? இவர்களை எப்படி நம்புவது ? காசளவும் மதிக்காதவர்களின் நட்பு நமக்குத் தேவை தானா ? பாரத அன்னையின் ஒருமைப்பாட்டைக் கண் ணெதிரில் துண்டாடியவர்கள் யார் ? இவர்களுடைய நட்பு இன்னும் நமக்கு இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன ? எனக்கு மட்டும் இங்கு எல்லா உரிமைகளும் தந்தாகவேண்டும். உனக்கு கட்டும் நான் ஒன்றையும் தரமுடியாது என்னும் அரக்க நியாயத்தைக் கூறும் இரக்கமற்றவர்களின் உறவு இருப்பதை விட இல்லாமல் இருப்பதே நலமாகும்.

சுமார் நாற்பது ஆண்டுகள் பல்வேறு மதங்களையும் நன்கு ஆராய்ந்த அன்னி பெசண்ட் அம்மையார் இந்து மதத்தைப் பற்றிக் கூறும்போது...

“ ... இந்து சமயம் வழங்கிவரும் சிறந்த தர்மத்தைப்போல நிறைவுடையதும், அறிவு சார்ந்ததும், உயிர்களுக்கு உய் வளிக்கக்கூடியதும், அனுபவங்கள் ஆராய்ச்சிமிக்கதுமான சிறந்த தருமம் வேறு எதுவுமில்லை என உணர்கிறேன். இதனை எவ்வளவுக்கு எவ்வளவு உணர்கிறோமோ அவ்வள வுக்கு அவ்வளவு நேசிப்போம். எத்துணை அளவுக்கு அதனைப் புரிந்துகொள்கிறோமோ அத்துணை அளவுக்கு அதனை நாம் மதித்துப் போற்றி மகிழ்வோம்,”
என்று கூறியுள்ளார்,

இத்தகைய உத்தமமான மதத்துக்கு இழிவு ஏற்படுகிறதென்றால் அது மனித சமுதாயத்தின் நன்னெறிக்கு அழிவு அளிப்பது என்றுதான் கூறவேண்டும். ஆகவே நாம் இந்த உத்தமமான மதத்தை உலகத்துக்கு அறிமுகப்படுத்தக் கடமைப் பட்டுள்ளோம், ஆயினும் : நமக்கு எந்த மதத்தின் பேரிலும் பகையில்லை. மற்றும் அம்மதங்களில் நம் மதத்தில் இல்லாத புதுமைகளுமில்லை. நம்முடைய நிறைகுணத்தினால் காட்டும் சகிப்புத் தன்மையைச் சில மகத்தினர் அறியாமையினால் கோழைத்தனமென நினைக்கின்றார்கள். அவர்களுடைய அறியாமையை நாம் போக்காவிட்டால் இந்துக்களுக்கு கோழைகள் என்னும் பட்டத்தைக் கட்டாயம் கட்டத் தயங்கமாட்டார்கள். இந்துமதம் ஒரே புத்தகம் என்னும் குண்டுசட்டிக்குள் குதிரையை ஓட்டவுல்லை ; எண்ணற்ற பெரியோர்களையும் கணக்கற்றநூல்களையும் கொண்டது நமதுதாயின் மதம். இந்த விஷயத்தைப் பலமுறை மிகத்தெளிவாக முன்னமே விளக்கியுள்ளேன். ஞான சூரியனாகிய விவேகானந்தரால் உலகமே அறிந்த உண்மையும் இதுவே ! இத்தகைய கலைக்கடலின் பெருமையைக் கருதிப் பாராமல் நமது இந்திய ஆட்சி விலகி நிற்பது வேதனைக்குரிய ஒன்றாகும். இந்த வேதனையை வெளியேற்ற நம்மால் முடியும். அந்த ஆயுதம் வாக்குரிமைதான், இனித் தேர்தல் களத்தில் நாட்டுப்பற்றும் மத நம்பிக்கையும் அற்றவர்களுக்கு எக்காரணத்தைக்கொண்டும் வாக்களிக்கக்கூடாது. உண்மையான தேச பக்தியும், தெய்வ பக்தியும் தீமைக்கு இடமளிக்காது. இந்த இரண்டுமற்றவர்கள் சுயநலமிகளாக இருக்கலாம் ; அல்லது அந்நியர்களின் கைக்கூலிகளாக இருக்கக்கூடும் ! இந்த விஷயத்தில் ஒவ்வொரு இந்துவும் நாட்டையும் பண்பாட்டையும் காப்பாற்ற சிந்தித்துச் செயல்பட்டால் சதித்திட்டங்களை மட்டந் தட்டிவிடுவது பெரிய காரியமல்ல.

தேசீய நீரோட்டம்

இந்துக்களிடம் நாட்டுப்பற்றும் தெய்வ நம்பிக்கை என்னும் நீரோட்டமும் அறவே நின்றுவிடவில்லை. அந்த ஊற்று இன்னும் பலர் உள்ளத்தில் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. ஆயினும் இந்த நீரோட்டம் விழலில் பாய்ந்து வீணாகக்கூடாது. வயலில் பாய்வதற்கு வாய்க்கால்கள் அமைக்கவேண்டும். தற்போது நமக்கு இதுதான் முக்கியப் பணி. ஜாதி, மொழி, மாகாணப்பூசல், பதவிவேட்கை, கட்சிப் பூசல்கள் என்பவற்றைத் தற்போதைக்கு ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டையும் நாட்டின் பண்பாட்டையும் பாதுகாக்கவேண்டும். கிறிஸ்தவ மதத்துக்கும்

இஸ்லாம் மதத்துக்கும் பண பலம், படை பலம், பக்க பலம், அதிகார பலம், அரசாங்க பலம் போன்றவை பல வழிகளிலும் மேலோங்கி நிற்கிறது.

ஆனால் இந்து மதத்துக்கு இந்த உதவிகள் கிடையாது. இந்திய அரசே இந்து மதத்தைக் கைகழுவிவிட்டது. இந்து மதத்தைப் பின்பற்றக்கூடிய நேபாளம் ஒரு சின்னஞ்சிறுநாடு தான். கிறிஸ்தவ மதத்தையும், இஸ்லாம் மதத்தையும் வளர்க்க உலகத்தில் பல நாடுகள் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றன. பக்கத்தில் உள்ள பாகிஸ்தானுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களும் இங்கு இல்லை என்று சொல்வதற்கில்லை, இவர்கள் நம்மைப் பதம் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இந்த நடுஜாமத் துரோகிகளின் முகமூடியை முதலில் நாம் கிழித்தெறியவேண்டும். இதற்குக் கத்திகளோ கடப்பாரைகளோ தேவையில்லை. இந்து மதத்தையும் இந்திய நாட்டையும் பாதுகாக்க நாம் அராபியர்களைப்போலப் படுமோசமான கொடுமைகளைக் கையாளவேண்டியதில்லை. இது அஹிம்சா மூர்த்திகளான மகாவீரரும் புத்தபிரானும் காந்திமகானும் தோன்றிய நாடு. அறிவில் சிறந்த சங்கரரும் விவேகானந்தரும் பிறந்த புண்ணிய பூமி. இது புலமையில் சிறந்த கம்பனும் காளிதாசனும் பிறந்த நாடு. நீதியை உருவாக்கிய மனுநீதிச் சோழன் தோன்றிய நன்னாடு. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பாலின் பெருமையை நவிலுகின்ற நல்லோர்கள் தோன்றின நாவலன் தீவு இது. நமக்கு வன்முறை தேவையில்லை.

அஹிம்சை என்னும் போரின் பெருமையை அவனிக்கு அறிமுகம் செய்த உத்தம பூமியிது. நன்முறையிலேயே நய வஞ்சகர்களின் கயமைத்தனத்தை நம்மால் அகற்றமுடியும். தற்போது கடம்புரண்டு தவிக்கின்றவேண்டாத விபரீதப் போக்கையும் கூட நாம் அஹிம்சா நெறியிலேயே அகற்றமுடியும். குழப்பங்களைத் தூண்டி நாட்டைக் கொலைக்களமாக்க வேண்டியதில்லை. மனிதனை மனிதனே அழிப்பது மடத்தனம்! ஒரு மதத்தை மற்றொரு மதம் இழிவாகக் கருதும் இறுமாப்பும் நமக்கில்லை. வார்த்தைகளால் மக்களை மயக்கி மதம்மாற்றும் மாய்மாலங்கள் நமக்குத் தேவையுமில்லை. கட்டுப்பாடான அறநெறிப் பிரச்சாரத்தினாலேயே நாம் வெற்றிகாணமுடியும்.

இந்துமதம் வன்முறையில் வளர்ந்ததும் அல்ல. பலவீனமானதுமல்ல! பல காரணங்களால் நம்மிடத்தில் இருந்த ஒற்றுமை நாசமாக்கப்பட்டுவிட்டது, பிரித்தாளும் சூழ்ச்சியில் பெயர்

போன ஆங்கில ஆட்சியின் சதியும் வன்முறையின் வழிவந்த முகலாயர்களின் மூர்க்கத்தனமும் நமது ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவித்துவிட்டன. ஆகவே தற்போது காணப்படும் சில்லறைத்தனமான பிரிவினை எண்ணங்களை அகற்றி நாம் ஒன்றுபடவேண்டும்; நாம் என்று ஒன்றுபடுகிறோமோ அன்றே நாட்டைத் துண்டுபோட எண்ணும் குண்டர்களின் மனக் கோட்டை இடிந்துவிடும். அதற்கு ஏற்ற காலமும் தற்போது நெருங்கிவிட்டது. இனி காலதாமதம் கூடாது. தாமதம் ஆபத்துக்கு இடம் தந்துவிடும். தாமதம் நம்மைத் தரைமட்ட மாக்கிவிடும். முகலாயர்களின் வரலாறு ஒரு தனித் தன்மை வாய்ந்ததாகவே இருந்துவருகிறது. இம்மதத்தினர் பெரும் பாலும் மற்ற மதங்களுக்கு மதிப்பளிப்பதில்லை. இதற்குப் பாகிஸ்தான் முதற்கொண்டு வளைகுடா அரபுநாடுகள்வரை சான்றாகும்.

முகலாயர்கள் இந்தியாவில் காலடி வைத்ததுமுதல் இந்துக் களுக்கு ஏற்பட்ட அல்லலைச் சொல்லிமுடியாது. வெள்ளையர் களைப்போல நாமும் இந்தியாவில் நுழைந்தவர்கள்தானே என்னும் எண்ணம் இவர்களின் சிந்தையில் நுழைவதேயில்லை. வந்த இடத்தைச் சொந்தமாக்கிக்கொள்ளத் துடிக்கக்கூடிய வர்கள். அப்படியே இவர்களுக்கு நம் நாட்டில் ஒரு பகுதியைக் கொடுத்தும் அத்துடன் இவர்கள் அமைதி அடையவில்லை. இன்னும் சில பகுதிகளில் மறைமுகமாகக் கிளர்ச்சிகளைத் தூண்டி, இந்திய நாட்டை இஸ்லாமிய நாடாக்க ஏக்கங்கொண் டுள்ளனர். இதனுடைய அறிகுறிகள்தான் மீரட் முதலான இடங்களில் தொடங்கிய குழப்பங்கள். இந்த உண்மையை இன்றைய அரசியல்வாதிகள் மறுக்கவோ மறைக்கவோ முடியாமல் கண்டும் காணாதவர்களைப்போல நழுவுகின்றனர். இத்துடன் நிற்காமல் உண்மையான தேச பக்தர்களுக்கு வகுப்பு வா திகள் என்னும் பட்டம் வழங்குகின்றனர்.

இவர்களுடைய நோக்கமெல்லாம் பணத்தை இறைப்பது; பதவிகளைப் பிடிப்பது. பதவியைப் பிடித்தபிறகு இறைத்த பணத்திற்குப் பத்து மடங்கு பணத்தைப் பலவழிகளில் திரட்டு வது, பெரும்பாலான அரசியல்வாதிகளிடம் இத்தகைய குணம் பரவி வருகிறது. இந்த ஓட்டுப் பிச்சைக்கார ஓட்டாண்டிகளுக்கு நாட்டின்பேரில் நாட்டமே கிடையாது. இவர்களின் நாட்டம் முழுக்க முழுக்கப் பதவி வேட்டை ஒன்றே. அவ்வேட்டையின் வாயிலாகத் திரட்டவேண்டியது பணம். அந்தப் பணம் எந்தத் திசையிலிருந்து எப்படி வருவதாக இருந்தாலும் அதைப் பெறு

வதற்குப் பின்னடையமாட்டார்கள். பொறுப்பு வாய்ந்த பதவி களில் ஒரு சில நல்லவர்கள் இருக்கின்றனர் என்றாலும் அவர் களுடைய முயற்சிகளை இத்தீயவர்கள் ஓங்கவிடுவதில்லை. அதனால்தான் தற்போது நமது நாடு முழுவதும் ஊழல்மயமாக மாறிக்கொண்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் நம் தாய் நாட்டையும் தாய் மதத்தையும் பாதுகாக்க அப்பர், சுந்தரர், ஞான சம்பந்தர், மணிவாசகர், சங்கரர், இராமாநுஜர், இராமலிங்கர், விவேகானந்தர், அரவிந்தர் போன்ற மகான்களும் யோகிகளும், பக்தர்களும், துறவிகளும் புற்றீசல்போல வெளியில் புறப்படவேண்டும். அப்படிப் புறப்பட்டால் மக்கட் பெரு வெள்ளம் இவர்களைப் பின்தொடரும் என்பதில் சந்தேகமில்லை! ஈடு இணையற்ற மகான்களின் மரபில் வந்த மடாதிபதிகள் இலட்சக்கணக்கில் பரிவாரங்களுடன் வெளிப்பட்டால் எந்த அரசியல்வாதியாலும் நிற்கமுடியாது. இவர்களும் தத்தம் தவறு உணர்ந்து திருந்திக் கொள்வார்கள். இது முற்றிலும் உண்மை.

" இந்துமதம் உலகிலுள்ள மதங்கட்கெல்லாம்
ஏற்றதொரு சிறந்தமதம் எனுங் கருத்தை
தந்தவிவே கானந்தர் தன்னைப் போலும்
தக்கதொரு இராமலிங்க வள்ளல் போலும்
எந்தைபிரான் இராமகிருஷ்ண தேவர் போலும்
ஏற்றதொரு அரவிந்த யோகி போலும்
சிந்தைதனில் தெளிவுடைய பெரியோ ரெல்லாம்
திரண்டுவெளிப் படவேண்டும் அறத்தைக்காக்க.

மடங்களிலே உறங்கியநாள் போதும்போதும்;
மடத்தலைவர் படைத்தலைவர் ஆதல்வேண்டும்!
கடந்த பல யுகங்களென்னும் கால வெள்ளங்
களைக்கடந்த இந்துமத மென்னுங்கப்பல்
மிடைந்தசில சுயநலர்சூழ் சுழலில் சிக்கி
மேலும்பிற மதங்களெனும் பாறை தாக்கி
உடைந்திடுமுன் காப்பதுநம் கடமை என்று
உணர்ந்துவெளிப் படவேண்டும்உயர்ந்த நல்லோர்

—அரசாங்கத்தையும் திருத்தும் ஆற்றல் அடியார்களுக்கு உண்டு. முடிசார்ந்த மன்னரும் துறவிகளின் அடிதாழ்ந்து வணங்கிய கதைகள் நமது நாட்டில் அனேகம்! அத்தகைய மேன்மைவாய்ந்த மரபில் வந்த இன்றுள்ள மடாதிபதிகளுக்கும் அந்தப் பெருமை எய்தவேண்டும். இப் பெரியோர்கள் அகிம்சா முறையில் ஆன்மிகப் பிரச்சாரமென்னும் களத்தில் இறங்கி விட்டால் இந்துக்களை மதமாற்றம் செய்யமுடியும் என்னும் பிற

மதத்தினரின் கனவு கலைந்துவிடும். கூட்டில் இருந்து வெளிப் பட்ட பறவை மறுபடியும் அந்தக் கூட்டிலேயே வந்து அடைவதைப்போல மலைந்து சென்றவர்களும் மயக்கம் தெளிந்து மறுபடியும் 'பிறந்த மண்ணின் பிள்ளைகள் நாம்' என்ற பேற்றினை அடைவது பெரிய காரியமல்ல. பள்ளத்தை நாடிநீர் வருவதைப் போலப் பண்பமைந்த உள்ளத்தை நாடி மக்கள் வருவார்கள். விவேகானந்தர் என்னும் ஒரு சந்நியாசியின் சொற்பொழிவு அமெரிக்காக் கண்டத்தையே உலுக்கிவிட்டது. இலட்சக்கணக்கான துறவிகள் பிரச்சாரத்தில் இறங்கினால், "எங்கள் மதம் ஒன்று மட்டும் கடவுளுக்கு நேரடித் தொடர்புடையது. மற்றைய மதங்கள் அனைத்தும் பொய்யானவை," என்று வக்கரித்த வாய்கள் பதில் பேசமுடியாமல் திக்குமுக்காடும். மற்றும் எங்கள் மதத்துக்கு நிகர் உலகத்திலேயே கிடையாது; இது நிகரற்றது.

"ஓ பாவிகளே! உங்களுடைய பாவங்களெல்லாம் இயேசுபிரானுடைய பரிசுத்த இரத்தத்தினால் வந்து கழுவிக்கொள்ளுங்கள்," என்று கொக்கரிக்கயாட்டார்கள். இயேசுபிரானுடைய உடம்பிலிருந்து வழிந்த இரத்தம் பரிசுத்தமானதென்று சில பாதிரிமார்கள் புலம்புகிறார்கள். அது யூதர்கள் புரிந்த கொடுமையிலிருந்து வழிந்த துக்கமயமான இரத்தம். அப்படி இருந்தும் நம்மைப் பாவிகளே! என்று கூப்பிடுகின்றதும், நம்முடைய பாவங்களை அந்த இரத்தத்தில் கழுவுகிறோமென்பதும் விந்தையினும் விந்தையாகும்! இந்துக்கள் சோம்பலை முறித்துக்கொண்டு விழித்து எழுகின்றவரையிலும் இவர்களுடைய ஓலம் நிற்காது. எப்பாடு பட்டேனும் உலகம் முழுவதையும் கிறிஸ்தவ மயமாக்கவேண்டும் என்பது இவர்களுடைய முயற்சி. அதற்காகப் பட்டித்தொட்டிகள், நாடு நகரங்கள், மலைப் பிரதேசங்கள் முதலான இடங்களிலும் பண பலத்தால் பாதிரிமார்கள் திட்டமிட்டுப் பணிசெய்து வருகின்றனர். முஸ்லிம்கள் ஆசியாவேனும் நம்முடைய பிடியில் இருக்கவேண்டுமென்று அதிக துடிப்புடன் ஆயத்தம் செய்கின்றனர். நம்முடைய அரசியல்வாதிகள் பதவிக்கும் பணத்துக்கும் அலைகிறார்கள். இவர்களுடைய திட்டங்களை மட்டந் தட்ட வேண்டுமானால், மடாதிபதிகள் வெளிப்படவேண்டும்; இவர்களுக்குப் பின்னால் இந்துக்கள் ஒன்றுபட்டு அணி திரள வேண்டும்.

தலைமை நிலையம்

நாம் இதுவரையிலும் நம்தாய் மதற்துக்கென ஒரு தலைமை நிலயத்தை உருவாக்கவில்லை, இதற்குக் காரணங்கள் பல.

இம்மதம் ஒரு தனி மனிதன் உருவாக்கியதல்ல என்பதை முன்பே பார்த்தோம். இது பல ஆன்றோர்களால் உருவானது, அவ் வான்றோர்களும் காலத்தால் முன்னும் பின்னுமாகத் தோன்றின வர்கள். அவர்களின் நினைவுச்சின்னங்களாக நிறுவப்பெற் றவைகளே மடங்கள். இன்று இவையனைத்தும் ஒருமுகமாகப் பணிபுரியவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதில் நாம் மெத்தனமாக இருப்போமானால் ஆலயங்களின் சொத்துக்களும் மடங்களின் சொத்துக்களும் மதச்சார்பற்ற அரசாங்கத்தால் நியமிக்கப்படும் அதிகாரிகளின் யதேச்சாதிகாரத்தால் சிதைய நேரும். மசூதிகளின் சொத்து முஸ்லிம்களிடம்; சர்ச்சுக்களின் களின் சொத்து கிறிஸ்துவர்களிடம்! நம்முடைய சொத்து மத நம்பிக்கையற்ற அரசாங்கத்திடம்.

நமது ஆலயங்களுக்கு முன்னோர்கள் அளித்துள்ள மானிய நிலங்கள், வியாபாரத் தலங்கள், வாடகைக்கு விடப்பட்ட வீடுகள் முதலானவை அரசாங்க அதிகாரிகளின் யதேச்சாதி காரத்துக்குள் சிக்கிச் சிதைந்துகொண்டு வருகின்றன. மடங் களுக்கும் இந்த அவலநிலை தொடங்கிவிட்டது. மற்ற மதங் களில் தலையிடாமல் இந்துமதத்தில்மட்டும் அரசு தலையிடு வதற்குக் காரணம் நாம் ஒன்றுபடாமையே ஆகும். முஸ்லி முக்கோ அல்லது ஒரு கிறிஸ்துவனுக்கோ ஏதேனும் ஒரு பிரச் சினை நேர்ந்தால் அவர்களின் தலைமை நிலயங்களிலிருந்து குரல் எழுப்புகின்றனர். அக் குரலுக்கு மத்திய அரசும் மாநில அரசுகளும் வளைந்து கொடுக்கின்றன. நம் தாய் மதத்துக்கும் இந்நாட்டில் ஒரு தலமைய நிலயம் உருவானால் இதில் அரசாங்க அதிகாரிகள் தலையிடமுடியாது. நமக்கு நேர்ந்துள்ள குறை பாடுகளும் நீங்கும்; ஒற்றுமையும் ஓங்கும். அந்நிய நாட்டினர் படை யெடுப்புகளில் அலைக்கழிப்புகள் நிகழ்ந்த காலத்தில் இந்துக்கள் ஒன்றுபடமுடியாத சூழ்நிலைகளும் உண்டாயின. அதன் பயனால மடங்களும் ஆலயங்களும் தனித்தனியாக இயங்கித் தம்மாலியன்ற தொண்டுகளையும் புரிந்துகொண்டு வந்துள்ளன.

ஆங்கில ஆட்சி இருந்தபோதுகூட அது தன் அதிகா ரத்தை நம் மதத்தின்பேரில் திணிக்கவில்லை. ஆனால், இன் றுள்ள இந்திய ஆட்சியே இந்துமதத்தில்மட்டும் ஊடுருவி குட்டையைக் குழப்புகிறது. அந்நியன் கிளைகளைமட்டும் வெட் டினான் என்றால் சொந்தக்காரன் வேரையே வெட்டுகிறான். இன்று நமது அன்னை மதத்தின் அவல நிலை இது.ஒருவன் பசப்பிப் பணங்கொடுத்துப் படைதிரட்டுகிறான்; மற்றவன்

மிரட்டி இடம் பிடிக்கிறான். நம்மவன் உள்ளதையும் ஒழித்துக் கட்டுகிறான். இந்தச் சூழ்நிலையில் மடாதிபதிகளும், ஆலய நிருவாகங்களும் ஒன்றுகூடித் தக்க வழி வகுக்கவில்லையானால் மடங்களுடைய அரும்பணிகளும் முடங்கிப் போகும். இனி மடங்களும் ஆலயங்களும் தனித்தனியாக இயங்கித் தலையெடுக்கமுடியாது. நாட்டுப் பற்றும், மதநம்பிக்கையும் அற்ற ஓட்டுப் பிச்சைக்காரர் இன்று நாட்டில் உருவாகிக் கொண்டு வருகின்றனர்.

இந்தச் சுயநலமிகளுக்கு நாட்டின் பண்பாட்டைப் பாது காக்க வேண்டுமென்ற எண்ணம் இருப்பதாகத் தோன்ற வில்லை! இருந்திருந்தால் நாட்டில் இலஞ்சமும் வஞ்சமும் விஞ்சி விளையாடாது. கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கைக்கூலிகள் பெருகி வருகின்றனர். இவர்களுக்குத் தேவை கூலி. காலாகாலமாக நமது முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த அறநெறிகளைப்பற்றி இவர்களுக்கு அணுவளவும் அக்கறை கிடையாது. அந்நிய நாட்டு உளவாளிகளுக்கு இத்தகைய அடி வருடிகள் தேவைப்படுகிறார்கள். இவர்களைக் கொண்டு நம்மிடம் உட்பகை கொண்ட உளவாளிகள் நம்மைத் தரைமட்ட மாக்கத் தயங்கமாட்டார்கள். ஆகவே, நாம் பிரிந்திருந்தால் பகைவர்களுக்கு இடங்கொடுத்துவிடுகிறோம். முஸ்லிம்களுக்குத் தலைமை நிலையம் மக்கா இருக்கிறது. கிறிஸ்துவர்களுக்கு ரோமாபுரி தலைமை நிலையம் என்பதைப்போல இந்து மதத் துக்கும் தலைமை நிலயம் இந்தியா முழுவதும் என்று கூறலாம். ஆனாலும் இந்து மதந்துக்கென ஒரு குழுவை நியமித்தல் தற்போதைக்கு அவசியமாகிறது. இந்துமத மடாதிபதிகளும் பீடாதிபதிகளும் தனித்தனியாகப் புரியும் அறப்பணிகளிலும் ஒரு கூட்டுறவு உண்டாக்கவேண்டும். ஆலய நிருவாகங்களையும் நிலங்களையும் செப்பனிடவேண்டும்! ஆலயங்களுக்கும், மடங் களுக்கும் பக்தர்கள் மனமுவந்து அளிக்கும் காணிக்கைகளைக் கொண்டு சமயப் பிரச்சாரம் செய்வதற்கு ஏற்ற கல்வி நிலயங் களை ஆங்காங்கு ஆரம்பித்தல் வேண்டும்.

கிறிஸ்துவர்கள், பாதிரிமார்களையம், பெண் பிரச்சாரகர் களைத் தயாரிப்பதைப்போல இந்து மதத் தத்துவங்களை மக்க ளுக்குப் போதிக்க சமயக் கல்வியைத் தொடங்கவேண்டும்.

ஒரு நூலில் பல மணிகளைத் தொடுத்து மணிமாலை ஆக்கு வதைப்போல இமயம்முதல் குமரிவரையிலுள்ள மடங்கள் அனைத்துக்கும் தொடர்புண்டாக்கவேண்டும். ஆதிசங்கரர்

சைவ, வைணவ, காணாபத்ய, கௌமார–, சௌர, சாக்தேய மென்னும் ஷண்மதங்களின் உட்பிரிவுகளை ஒன்றுபடுத்தி யதைப்போல இன்று இந்து சமயத்தைச் சார்ந்த எல்லாப் பிரிவினரும் ஒன்றாகி, இந்த தெய்விகத் தொண்டில் ஈடுபட வேண்டும். இது இப்போதைக்கு இன்றியமையாதத் திருப்பணி யாகும். தொண்டு செய்யவே தம்மைத் தியாகம் செய்து கொண்ட பெரியோர்களுக்கு என்போன்றவர்கள் சொல்ல வேண்டியதில்லை என்றாலும் என் உள்ளம் சொல்லத் தூண்டிய தனால் சொல்ல முற்பட்டேன்.

இன்று நாட்டில் உள்ள பிரபலமான மடாதிபதிகள் முதலில் ஒன்றுகூடவேண்டும். பிறகு பிற்காலத்தில் தோன்றின மடாதி பதிகளுக்கும் அழைப்புகளை விடுத்து அவர்களையும் இக் குழுவில் சேர்த்து ஒரு பேரவையை ஏற்பாடு செய்து, இந்து மதத்தின் முன்னேற்றத்துக்கு ஏற்ற வழிவகைகளைத் தீர்மானிக்க வேண்டும், அத்தீர்மானத்தின்மூலம் இந்து மத பரிபாலனக் குழு ஒன்றையும் நிறுவவேண்டும். மூன்றாண்டுக்கொருமுறை அல்லது ஐந்தாண்டுக்கொருமுறை வாக்குப் பதிவின்மூலமோ அல்லது திருவுளச்சீட்டின்மூலமோ நிருவாகஸ்தர்களைத் தேர்வு செய்யலாம். இந்த விஷயங்கள் அந்த மாநாட்டில் தீர்மானிக்கவேண்டியவைகளாகும்,

நமது நாட்டில் ஆயிரக்கணக்கான மடங்கள் உள்ளன. இவற்றுள் இலட்சக்கணக்கான துறவிகளிருக்கின்றனர் ; இவர் களன்றி இல்லறவாசிகளிலும் பரந்த நோக்கமுள்ள சிறந்த பேச் சாளர்களும் பலருண்டு. மடாதிபதிகளும், பண்டிதர்களும் தனித்தனியாகச் சிதைந்திருப்பதனால் மற்றவர்கள் கண்களுக்கு நாம் மங்கலாகத் தெரிகிறோம். அந்தப் படலத்தைப் போக்கு வதற்கு ஞானகேசரிகளைப் போன்று துறவிகள் மடங்களை விட்டு வெளிப்பட்டு சரியை, கிரியை, ஞானம், யோகம் என்னும் ஆன்மிக நெறிகளைக் குணக்குன்றுகளின்மீதிருந்து கர்ஜிப் பதைக் கேட்கவேண்டும். இந்த ஞான கேசரிகளின் கர்ஜனை களைக் கேட்டவுடன் ஊளையிடும் குள்ள நரிகள் தத்தம் வாலை முடக்கிக்கொள்ளும். இந்த அறப்பணியில் தம்மை அர்ப்பணித் துக்கொள்ளவேண்டியது ஒப்பற்ற மகான்களின் மரபில் வந்த மடாதிபதிகளின் கடமையாகும். இந்தியத் துறவிகள் ஒருமுக மாக அறநெறிப் பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டனர் என்னும் விஷயம் வெளிப்பட்ட அடுத்த நாளே விஷமத்தனத்தால் மறு படியும் நாட்டைத் துண்டுபோட நினைக்கும் நயவஞ்சகர்களின் நாடி தளர்ந்துவிடும். ஏழை மக்களைப் பசப்பி மதம்மாற்றும்

பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் பாச்சாவும் பலிக்காது. இந்திய அரசும் நன்கு சிந்தித்து தம்முடைய சொந்த நலன் அழிக்கும் கொள்கைகளை ஒழித்துக் கட்டி நாட்டுக்கு ஏற்ற பொருத்தமான சட்டங்களை நிறைவேற்றப் புகும் என்பதில் சந்தேகமில்லை.

ஆலய நிதியில் அறப்பணி

தற்போதும் புகழ்பெற்ற ஆலயங்களில் பக்தர்கள் அளிக்கும் உண்டியல் நிதியும், பிரார்த்தனைமூலம் வரும் காணிக்கைகளும் பலவிடங்களில் குவிந்துகொண்டுதான் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு ஆபரணங்களைச் செய்து ஆலயங்களைப் பொக்கிஷ சாலைகளாக ஆக்கி ஆபத்துக்களை வரவழைத்துக் கொள்ளாமல், அறநெறிகளைப் பரப்ப ஆசிரியர்களைத் தயாரிப்பது நன்மையைப் பயக்கும். மடாலயங்களும் தேவாலயங்களும் ஆன்மிகப் பணியைச் செய்ய ஆரம்பித்துவிட்டால் அது கல்வியும், செல்வமும் கலந்து பணி செய்வதற்கொப்பாகும்

இந்திய மக்கள் ஒன்றுபடவேண்டுமானால் 'நாம் இந்தியர்கள்' என்னும் நினைப்பு சிந்தையைவிட்டு நீங்கக்கூடாது. இந்தியன் என்பது சிந்தையில் நிலைக்கவேண்டுமானால் இந்தியப் பண்பாடு அவனிடத்தில் இருந்தால்தான் இது சாத்தியமாகும். இந்தியப் பண்பாடென்பது இந்நாட்டில் அநாதி காலந்தொட்டு இருந்து வருகின்ற சநாதன தருமமாகும். அந்த சநாதன தருமம் பாரத தருமம். தருமம் என்பதும் மதம் என்பதும் ஒன்றே. ஆகவே நமது தாய் இந்திய அன்னை; நமது தருமம் இந்து தருமம். இந்த தருமத்துச்கு இடையூறு நேரவொட்டாமல் காப்பாற்றவேண்டியது இந்துக்களாகிய நம் அனைவரின் கடமையாகும். இந்த தருமத்தை சுவாமி விவேகானந்தர் சர்வமத சமரச மகாசபையில் உலக சமயங்களுக்கெல்லாம் தாய்ச் சமயம் என்று விளக்கினார். அத்தகைய தாய்ச் சமயத்தைச் சிதையவிடாமல் பாதுகாக்கவேண்டியது சேய்களாகிய நம் கடமையாகும். எல்லாம் வல்ல இறைவன் நம்முடைய நல்லெண்ணத்தை ஈடேற்றுவானாக!

வளர்க தாய்மதம்! வாழ்க நல்லறம்!

★★★